
மகாவம்சம்
பாகம் -1
உதயணன்

# மகா வம்சம்

(சரித்திர நாவல்)

## பாகம் - 1

உதயணன்

# முன்னுரை

மகா வம்சம் பற்றிய கதையை எழுதவேண்டும் என்ற அவா எனக்குள் கனலாக நீண்ட காலமாகவே இருந்து வந்தது. இலங்கையைப் பற்றிய தகவல்கள் முதன்முதலாக நமக்குக் கிடைத்தது ராமாயண இதிகாசத்தில்தான். இலங்கையை ராவணன் ஆண்ட காலத்தில் எத்தனைச் சிறப்பாக இருந்தது என்பதை ராமாயணத்தில் பார்க்க முடிகிறது. ராவணனுக்குப் பின்னால் இலங்கையின் நிலை என்ன என்பதற்கு எந்த நூலும் இல்லை. மகான் புத்தர் நிர்வாணம் எய்திய கொஞ்ச காலத்திற்குப் பிறகுதான் இலங்கையின் மீதான ஒளி விழுகிறது. வங்கநாட்டிலிருந்து விஜயன் என்னும் அரசகுமாரன் நாகதீபம் என்னும் இலங்கையை அடைந்து ராஜவம்சத்தை உருவாக்கினான் என்ற தகவல்தான் நமக்கு இலங்கையின் வரலாற்றை துவக்கமாக அறிவிக்கிறது. இது கி.மு. ஐந்தாவது நூற்றாண்டாக இருக்கலாம்.

மகாவம்சத்தை இலங்கையில் விஜயன் துவக்கி, அவனுக்குப் பிறகு அவனது வாரிசுகள் அந்த நாட்டை அதற்குப் பிறகு நீண்ட காலத்திற்கு ஆண்டு வந்திருக்கிறார்கள். வட பாரதத்தினனான விஜயன் தமிழ் மன்னனான பாண்டியன் மகளை மணந்து வம்சத்தைத் துவக்குகிறான். இவ்வாறு வட இந்திய மன்னனுக்கும் தென்னிந்திய மன்னனுக்கும் மணவினை ஏற்பட்டு அதில் உருவாகிய வாரிசுகளே சிங்களவர் என்ற பெயரில் இலங்கையை ஆண்டதாக வரலாறு கூறுகிறது. பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு சிங்களமும் தமிழகமும் எதிரி நாடுகளாயின. தமிழர்கள் அடிக்கடி இலங்கைக்குப் படையெடுத்துச் சென்று வென்றார்கள்.

இக்கதையின் நாயகனான விஜயனின் பிறப்பு வளர்ப்பு பற்றித் தெரிவிக்கும் நூல்கள் பெரும்பாலும் ஒரு புராணக் கதையைப் போலவே சொல்லுகின்றன. எனவே அவற்றிலிருந்து மாறுபட்டு நம்பத் தகுந்த வரலாற்றுக் கதையாக நான் மாற்றி அமைத்திருக்கிறேன். இதற்கான ஆராய்ச்சி

ஆறுமாத காலம் நடந்தது. ஆராய்ச்சி முடிந்தபின் எழுதி முடிப்பதற்கு ஆறுமாத காலம் ஆயிற்று. ஆரம்பத்தில் இக்கதை இந்த அளவிற்கு நீளும் என்று நான் நினைக்கவில்லை. ஆனால் கதையோட்டம் தானாக என்னை இழுத்துக்கொண்டு போய்விட்டது என்று சொன்னால் அது மிகையில்லை. அதேசமயம் கதையில் தொய்வு நேராத வண்ணம் விறுவிறுப்பாகவே கொண்டு சென்றிருக்கிறேன்.

இந்த நூலை எழுதுவதற்கு பெரும் துணையாக நின்ற பேராசிரியர் திரு. கேசவன் அவர்களைப்பற்றி நான் இங்கே குறிப்பிட வேண்டியது அவசியம். அவர் அளித்த பல்வேறு தகவல்கள் இந்த நாவலுக்குச் சுவையைச் சேர்த்திருக்கின்றன. கதை முழுவதையும் படித்து அவர் சுட்டிக்காட்டிய பிழைகளை நீக்கியிருக்கிறேன். திருத்தங்களைச் செய்திருக்கிறேன். அதன் காரணமாக 'மகா வம்சம்' மகா நாவலாகச் சிறப்பாக வெளிவந்திருக்கிறது. தனது அரிய நேரத்தை எனது நாவலுக்காக ஒதுக்கி இதைச் சிறப்பிக்கச் செய்த பேராசிரியர் பெருந்தகை அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நூலை அவருக்குக் காணிக்கையாகச் சமர்ப்பித்துக் கொள்வதில் நான் பெருமையடைகிறேன்.

இந்நாவலை மிகச்சிறந்த முறையில் வெளியிட்ட பதிப்பகத்தார் அவர்களுக்கும் மற்றும் நாவல் உருவாக்கத்திற்கு துணைபுரிந்த அனைத்து நண்பர்களுக்கும் என் இதயம் கனிந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வழக்கம் போல் இந்த நாவலும் பகவான் ரமணரது அவதார நாளிலேயே வெளிவருகிறது. அவரது அருளாலேயே மலர்கிறது.

இதனைப் படித்து இன்புறவிருக்கும் வாசக இதயங்களுக்கு அநேக கோடி வணக்கங்கள்.

**உதயணன்**

# அத்தியாயம் ஒன்று

# பயணிகள்

வங்கதேசத்தின் எல்லைப்புறமாக இரண்டு நாட்களுக்கு மேலாகச் சென்று கொண்டிருந்த அந்தப் பயணிகளின் நட்ட நடுவில் வாலிபன் ஒருவன் இருந்தான். அவன் பெயர் விஜயன். அவன் பக்கத்தில் புத்த பிட்சு ஒருவர் இருந்தார். அவர் பெயர் ஆனந்தர். இருவரும் நடந்து போய்க் கொண்டிருந்தார்கள். தேவைப்படும்போது அவர்கள் பயணப்படுவதற்காகப் புரவிகளும் பார வண்டிகளும் அவர்களுக்குப் பின்னால் சென்றன. அவற்றுக்கு முன்பும் பின்புமாக ஐம்பது புரவி வீரர்கள் அணிவகுத்துச் சென்றார்கள். அவர்களுக்குப் பின்னால் உணவுப் பொருட்கள், பாத்திரங்கள், ஆடைகள் போன்றவை வண்டிகளில் சென்றன. அதையடுத்து காட்டுவாசிகள் இருபது பேர் முன்பும் பின்புமாகச் சென்று கொண்டிருந்தார்கள். ஆபத்து நேரும்போது ஒலிகளை எழுப்பி எச்சரிக்கை செய்ய அவர்கள் தங்கள் கழுத்தில் சிறுபறைகளையும் சங்குகளையும் கட்டித் தொங்க விட்டிருந்தார்கள். கைகளில் கழிகளையும் பிடித்திருந்தார்கள். இரண்டு நாட்களிலும் அவர்களது பயணம் அடர்ந்த காட்டுப் பகுதியிலும், மலைப்பகுதியிலும், ஆற்றங்கரையோரங்களிலும் நடந்ததே தவிர ஊர்ப்பக்கமாக தவறியும் நடக்கவில்லை.

அக்கூட்டத்தின் நடுவே இருந்த வாலிபனான விஜயன் எளிமையான ஆடைகளை அணிந்திருந்தாலும் கட்டுமஸ்தான உடலும், களை பொருந்திய முகமும், அகன்ற கண்களும் அவனுக்கு கம்பீரத்தைத் தந்திருந்தன. கடந்த இரண்டு நாட்களாகவே அந்தக் கூட்டத்தோடு அவன் எதுவும் பேசாமலும் முரண்டு பிடிக்காமலும் அமைதியாகவே சென்றான். தனது அந்த அமைதியான போக்கு அவனுக்கே வியப்பாக இருந்தது. தன் இயல்புக்கு நேர்மாறாக எப்படித் தன்னால் நடந்து கொள்ள

முடிகிறதென்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டான் அவன். ஆனால் அவனது அந்த அமைதி மூன்றாம் நாள் கலைந்தது. என்னதான் தன்னை அக்கூட்டத்தில் இருந்தவர்கள் மரியாதையோடு நடத்தினாலும் பலியாடுபோல தலையை ஆட்டிக் கொண்டு தொடர்ந்து பயணப்படுவதற்கு அவன் விரும்பவில்லை. அவர்களை நாடி பிடித்துப் பார்க்க விரும்பிய அவன் ''எல்லோரும் நில்லுங்கள்'' என்றான் உரத்த குரலில்.

நிராயுதபாணியாக இருந்த அவன் எதையும் செய்ய முடியாது என்றாலும், அவனது குரலில் இருந்த தோரணை எல்லோரையும் சற்று அசர வைத்ததால் அவன் குரல் கொடுத்ததுமே நின்றார்கள்.

தனக்குப் பக்கத்தில் இருந்த புத்த பிட்சுவைப் பார்த்த விஜயன். ''நான் யார் தெரியுமா உங்களுக்கெல்லாம்?'' என்று அதே தோரணையுடன் கேட்டான்.

''தெரியும். தாங்கள்தான் வங்கதேசத்து இளவரசர்'' என்றார் பிட்சு பணிவான குரலில்.

''அப்படியானால் என் பிராபல்யம் பற்றியும் உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும்''

''தெரியும் இளவரசே''

''தெரிந்தும் என்னைக் கடத்துகிறீர்கள்''

''கடத்தவில்லை. அழைத்துச் செல்கிறோம்.''

''அது உண்மையென்றால் நான் தூங்கும்போது என் கை கால்களை ஏன் கட்ட வேண்டும்?''

''சிங்கத்தைப் பிடிக்க வேண்டுமானால் அதனுடன் போராட முடியாது. வலைவீசி பிடித்தால்தான் உண்டு''

''அப்படி என்னைப் பிடிக்க வேண்டிய காரணம்?''

''அழைத்தால் நீங்கள் வரமாட்டீர்கள். ஆகவேதான் தூங்கும்போது மயக்கத் துளிகளை நுகரச் செய்து உங்களைத் தூக்கி வந்தோம். உங்கள் இருப்பிடத்தை விட்டுக் கணிசமான தூரத்திற்கு வந்த பிறகு - இனி உங்களால் தப்பவோ முரண்டு பிடிக்கவோ முடியாது என்பதை உணர்ந்த பின்பு உங்கள் மயக்கத்தை நீக்கினோம்.''

பிட்சுவின் பேச்சைக் கேட்டுச் சற்றே சிந்தனைவயப்பட்ட விஜயன் சிறிது நேரம் கழித்து ''என்னை எங்கே அழைத்துப் போகப் போகிறீர்கள்?'' என்று கேட்டான்.

''அது இன்னும் உறுதியாகத் தெரியவில்லை'' என்றார் பிட்சு.

''எங்கே போவது என்று தெரியாமலேயே பயணமா? இது என்ன பைத்தியக்காரத்தனம்?''

''அப்படியல்ல இளவரசே. தங்களை அழைத்துக் கொண்டு வரச்சொன்னவர் எங்கே வரச்சொல்கிறார் என்பதை தெரிவிக்கவில்லை. விரைவிலேயே செய்தி வந்துவிடும்''

''என்னை அழைப்பவர் யார்?''

''சரியாகத் தெரியவில்லை. அனேகமாக அவர் பெரிய மனிதராகத்தான் இருக்கவேண்டும்''

''எதற்காக அழைக்கிறார் என்பதாவது தெரியுமா?''

''நிச்சயமாக நல்ல விஷயத்திற்காகத் தான் இருக்கும். அதில் சந்தேகம் வேண்டாம்''

''நாம் தற்போது இருக்கும் இடம் எது?''

''அநேகமாக வங்கதேசத்தின் வடக்கு எல்லைக்கு வந்து விட்டோம் என்று நினைக்கிறேன்''

''அடிகளே, என்னை யாரென்று தெரிந்தும் என்னைப் பற்றிய விவரங்களை அறிந்தும் ஒருவிதத் தெளிவும் இல்லாத இந்தப் பயணத்தில் என்னை ஈடுபடுத்தியிருக்கிறீர்கள். இதில் எனக்கு எள்ளளவு விருப்பமும் இல்லை. ஏதோ இப்போது அமைதியாக இருக்கிறேன். இப்படியே எப்போதும் இருப்பேன் என்று முடிவு கட்டிவிட வேண்டாம். நீங்கள் இருக்கும் இடம் விஜயனின் அருகில் அல்ல. எரிமலையின் வாயில்'' என்றான் விஜயன் திடமான குரலில்.

''தங்களுக்கு எந்த வசதிக்குறைவும் வராது. கோபப் படாதீர்கள். பகிரங்கமாக நாம் செல்ல முடியாது என்பதால்தான் எல்லையோரக் காட்டுப் பகுதிகள் வழியாகச் செல்கிறோம்'' என்றார் பிட்சு.

விஜயன் எதுவும் பேசவில்லை. பயணம் தொடர்ந்தது.

அவ்வாறு அவன் அமைதியாகி விட்டதில் பிட்சு திருப்தியடைந்தாலும் தன்னை அவன் எரிமலை என்று குறிப்பிட்டதைக் கேட்டு சற்று அச்சப்படவே செய்தார். பயணிகள் ஆங்காங்கே ஓய்வெடுத்துக் கொண்டும் முறை மாற்றம் மூலம் உறங்கியும் பயணத்தைத் தொடர்ந்தார்கள். அடுத்த இரண்டு நாட்களுக்கு விஜயன் பாரவண்டியிலேயே அமர்ந்தும் படுத்துமாக பயணம் செய்தான். ஏறக்குறைய வங்க நாட்டைக் கடந்து மகத நாட்டின் கிழக்கெல்லைக்கு வந்தபோது பாரவண்டியில் படுத்திருந்த விஜயன் சிறுபறைகள் ஒலித்ததைக் கேட்டு எழுந்து ''என்ன விஷயம்?'' என்று கேட்டதும் ''ஏதோ ஆபத்து வரவிருக்கிறது. அதை உணர்த்தத்தான் நம்முடன் வரும் காட்டுவாசிகள் ஒலியெழுப்பி எச்சரிக்கை செய்கிறார்கள்'' என்றார் அதே வண்டியில் பயணம் செய்த பிட்சு.

''யாருக்கு எச்சரிக்கை செய்கிறார்கள்?''- என்று கேட்டான் விஜயன்.

''நமக்கும் நம் வீரர்களுக்கும்தான்''

''நம்மை எச்சரித்துவிட்டால் ஆபத்து நீங்கிவிடுமா?''

''அதற்கில்லை. ஆபத்தைச் சந்திக்கவும் எதிர்க்கவும் நாம் தயாராக வேண்டும் என்பதற்குத்தான் இந்தப் பறையொலி எழுப்பப்படுகிறது'' என்றார் பிட்சு.

அவர் இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும்போதே காட்டுவாசி ஒருவன் பிட்சுவிடம் ஏதோ கூறவே அவர் விஜயனைப் பார்த்து ''இளவரசே! சற்று இறங்கிக் கொள்ளுங்கள். நாம் ஒதுக்குப்புறமாகப் போய் விடுவோம்'' என்றார். அவரது குரலில் பதட்டம் இருந்தது.

விஜயனோ பதட்டப்படாமல் ''ஒதுக்குப்புறமாக எதற்காகப் போக வேண்டும்?'' என்று கேட்டான்.

''பதுங்கிக் கொள்ளத்தான்'' என்றார் பிட்சு.

''எதற்காகப் பதுங்க வேண்டும்?''

''இளவரசே! காட்டுக் கொள்ளையர்கள் நம்மை வளைத்துக் கொள்ளப் போவதாகக் காட்டுவாசி கூறுகிறான். நாம் இங்கிருந்தால் நம்மை அழித்து விடுவார்கள். என்னைப் பற்றிக் கூடக் கவலையில்லை. தங்களைப் பற்றிதான் கவலை. தங்களுக்கு எதுவும் நேரக்கூடாது. தங்களை நல்லபடியாகக் கொண்டு போய் சேர்க்க வேண்டியது என் பொறுப்பு. நமது வீரர்கள் கொள்ளைக்காரர்களை முறியடித்தபிறகு நாம் வெளியே வரலாம். அதுவரை ஒளிந்திருப்போம் வாருங்கள்'' என்று கெஞ்சும் குரலில் கூறினார் பிட்சு.

''நம் வீரர்களால் கொள்ளையர்களை முறியடிக்க முடியுமா?''

''நம் வீரர்கள் திறமைசாலிகள். நிச்சயம் முறியடித்து விடுவார்கள். அதோ கொள்ளையரின் குரல்கள் எழுகின்றன. புரவிகளின் குளம்பு சத்தங்களும் கேட்கின்றன. தாமதிக்காமல் தயவு செய்து என்னோடு வந்துவிடுங்கள்'' என்றார் பிட்சு.

விஜயன் அதற்குச் சம்மதிக்கவில்லை. ''உங்களிடம் ஆயுதம் ஏதாவது இருக்கிறதா?'' என்று கேட்டான்.

''இதோ இதுதான் இருக்கிறது'' என்று தன் இடுப்பில் இருந்த குறுவாள் ஒன்றைக் காட்டினார் பிட்சு.

''இதுபோதும். இதன் சக்தி பெரும் சக்தி'' என்று கூறி குறுவாளை வாங்கிக்கொண்ட விஜயன் பிட்சுவிடம் ''நீங்கள் வண்டியை விட்டு இறங்குங்கள். கொள்ளையர்கள் வந்தால் பதட்டமடையாதீர்கள். தலைவன் என்று எவனாவது இருந்தால் என்னிடம் அனுப்புங்கள்'' என்று கூறிவிட்டு மீண்டும் வண்டியில் படுத்துக் கொண்டான்.

பிட்சுவுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. பதட்டத்துடன் வண்டியை விட்டு இறங்கினார். அடுத்த சில கணங்களில் கொள்ளையர்கள் பெரும் ஆரவாரத்துடன் அப்பகுதிக்கு வந்து சேர்ந்தார்கள். அவர்களுக்கும் வீரர்களுக்கும் போரும் துவங்கியது. காட்டுவாசிகள் தங்கள் வசம் இருந்த பல்வேறு ஆயுதங்களைக் கொண்டு மூர்க்கமாகத் தாக்கியதால் கொள்ளையரில் இருவர் காயம்பட்டு புரவிகளிலிருந்து விழுந்தார்கள்.

மாலைநேரம் முடிவடைந்து இருள் சூழவிருந்த மங்கலான வேளையில் இப்படி இரண்டு கொள்ளையர்கள் உரத்த குரலிட்டபடி வீழ்ந்ததை உணர்ந்ததுமே கொள்ளையர் தலைவன் அவர்கள் விழுந்த பகுதிக்கு விரைந்தபோது அவனை எதிர்கொண்ட பிட்சு ஏதோ கூற முற்பட்டார். ஆனால் கொள்ளையர் தலைவன் அவரைக் காலால் உதைத்துவிட்டு முன்னேறியபோது பாரவண்டியிலிருந்து ஒரு விசித்திரமான குரல் எழவே அவன் சற்றே நின்றான். ஏதோ யோசித்தவனாய் புரவியைவிட்டு இறங்கி பாரவண்டியை நோக்கி வந்தான். பாரவண்டியில் யாரோ படுத்துக்கிடப்பது போல் தெரியவே தலையை நீட்டினான். அவனது கழுத்தில் பதிந்தது உள்ளே படுத்திருந்த விஜயனின் குறுவாள்.

''தாமதம் செய்யாமல் வண்டியில் ஏறு. இல்லையென்றால் குறுவாள் நெஞ்சில் இறங்கிவிடும்'' என்று விஜயனின் குரல் உறுதியாக எழுந்தது. திடீரென நேர்ந்துவிட்ட இச்செயலால் அதிர்ந்துபோன கொள்ளையர் தலைவன் தன்னால் குரல் கொடுக்கவும் முடியாது என்பதை உணர்ந்தவனாய் வேறு வழியில்லாமல் வண்டியில் ஏறினான். விஜயனும் படுத்த நிலையிலிருந்து எழுந்துகொண்டு கொள்ளையனை அசைய விடாமல் உள்ளே அமரச்செய்தான். கொள்ளையர் தலைவனுக்கு விஜயனை அடையாளம் தெரியவில்லை என்றாலும் அவனது துணிச்சல் அவன் சாமானியமானவன் அல்ல என்பதை உணர வைத்தது.

விஜயனோ பதட்டமடையாதவனாய் ''என்ன யோசிக்கிறாய்? உங்கள் தாக்குதலை நிறுத்துவதற்கு என்ன செய்ய வேண்டுமோ அதைச்செய் சீக்கிரம்'' என்றான்.

கொள்ளையர் தலைவன் ஏதோ யோசிக்கவே ''உனக்கு வங்கதேசத்து இளவரசனைப் பற்றித் தெரியுமா?'' என்று கேட்டான் விஜயன்.

''அவனைப் பற்றிய பேச்சு இங்கெதற்கு?'' என்று கேட்டான் கொள்ளையர் தலைவன்.

விஜயன் குறுவாள் முனையைச் சற்று அழுத்தி ''கேட்டதற்கு பதில் சொல்'' என்றான் உறுதியான குரலில்.

''அவனா? மகா அயோக்கியன். எங்களைவிடக் கொடுமைக்காரன். வங்கதேசத்து மன்னனே அஞ்சும் கொடியவன். அவனுக்கென்ன இப்போது''

''அந்தக் கொடியவன் தனது ஆட்களை அழியவிட்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பான் என்பதுதான் உன் எண்ணமா?''

''யார் அவனது ஆட்கள்? இவர்களா?''

''ஆமாம்''

''இங்கே நடப்பதை அந்த இளவரசன் எப்படி அறியமுடியும்? அதோடு இது வங்கதேசமுமல்ல''

''அவன் இருக்கும் இடம் அவனது தேசம். அவனை மீற உன்னால் முடியுமென்றால் முயன்று பார்''

''என்னை மிரட்டும் நீ யார்?''

''வங்கதேசத்து இளவரசன் விஜயன்''

இதைக் கேட்டதும் சற்றே அசந்துபோன கொள்ளையர் தலைவன் ''இது உண்மையா?'' என்று கேட்டான்.

''உன்னைப் போன்றவர்களை மடக்கும் தைரியம் விஜயனை விட்டால் வேறு யாருக்கு இருக்க முடியும்? விவரங்களைப் பிறகு பேசலாம். தாக்குதலை உடனே நிறுத்து. உனது ஆட்களை ஆயுதங்களை கீழே எறிந்துவிடச் சொல். புரவிகளை விட்டுவிட்டு எல்லோரையும் ஒன்றாக நிற்க வை. தாமதித்தாலோ அல்லது எனது ஆட்களுக்கு ஏதாவது தீங்கு நேர்ந்தாலோ உன்னை மட்டுமல்ல உன் ஆட்கள் அனைவரது தோலையும் உரித்து உடல்களை இந்த மருத மரங்களில் கட்டி வைத்து உதைப்பேன். ம். சீக்கிரம்'' என்றான்.

விஜயனின் பிராபல்யங்களைப் பற்றி கொள்ளையர் தலைவன் நன்றாகவே அறிந்திருந்ததால் வேறு எதுவும் பேசாமல் அவன் கூறிய அனைத்தையும் செய்தான்.

கொள்ளையர்களின் கைகளைக் கயிற்றால் கட்டி ஓரிடத்தில் அமர வைத்த விஜயன் கொள்ளையர் தலைவனுடன் வெளியில் இருந்த வெட்டவெளியில் அமர்ந்துகொண்டு சுற்றிலும்

பந்தங்களை ஏற்றச் சொன்னான். வீரர்களும் காட்டுவாசிகளும் இந்தத் திருப்பத்தைக் கண்டு வியந்தவர்களாய் நடக்கப் போவது என்ன என்பதைக் காணக் காத்திருந்தார்கள். விஜயன் அவர்களை தூரவே நிற்க வைத்துவிட்டு பிட்சுவை மட்டும் பக்கத்தில் வைத்துக் கொண்டான்.

கொள்ளையர் தலைவனைப் பார்த்து ''உன் பெயர் என்ன?'' என்று கேட்டான் விஜயன்.

''இலியாஸ்'' என்றான் கொள்ளையர் தலைவன்.

''நீ என்ன முட்டாளா?''

விஜயன் இப்படிக் கேட்டதும் அவனை கோபத்துடன் பார்த்தான் இலியாஸ்.

விஜயனோ அதைப்பற்றிக் கவலைப்படாமல் ''எங்களிடம் என்ன இருக்கிறது என்று எங்களை வளைத்துக் கொண்டாய்? அதோ இருக்கும் பாரவண்டியில் இருப்பது தங்க வைடூரியங்கள் என்று நினைத்துக் கொண்டாயா? அவற்றில் இருப்பது உணவுப் பொருட்கள், சமையல் பாத்திரங்கள் மற்றும் உடைகள்தான். எங்களில் யாரும் ஆபரணங்கள் எதுவும் அணியவில்லை. இப்படிப்பட்ட வெற்றுக் கூட்டத்தை மடக்கிய உன்னை முட்டாள் என்று சொல்லாமல் என்னவென்று சொல்வது? செல்கிறவர்கள் யார்? அவர்களிடம் எவ்வளவு செல்வம் இருக்கிறது? எப்படி அவர்கள் பயணம் செய்கிறார்கள்? எப்போது தாக்கினால் எளிதாக இருக்கும் என்றெல்லாம் நோட்டம் பார்த்துவிட்டு தாக்குவது தானே கொள்ளையர்களின் சாமர்த்தியம்? அதை விட்டுவிட்டு எதையும் அறிந்து கொள்ளாமல் இவர்களைத் தாக்க முற்பட்டாயே - உனக்கு இவ்வளவுதான் இதில் அனுபவமா?'' என்று சரமாரியாகக் கேட்டுவிட்டு ''நீங்கள் மொத்தம் எத்தனைபேர்?'' என்று கேட்டான்.

''எண்பது பேர்''

''இலியாஸ்! உன்னைப் போன்ற முட்டாளல்ல நான். உங்களைப் போன்ற கொள்ளையர்களையே கொள்ளை யடிப்பவன். உங்களையெல்லாம் வெட்டி போட்டுவிட்டுப்

போக என்னால் முடியும். இருப்பினும் எங்களை நம்பி ஏமாந்து போன உங்களுக்கு லாபத்தைத் தரும் தித்திக்கும் திட்டம் ஒன்றைச் சொல்கிறேன். அதை ஏற்க உங்களுக்கெல்லாம் சம்மதமா?''

''திட்டத்தைச் சொல்லுங்கள்''

சொன்னான் விஜயன்.

திட்டம் கொள்ளையர் தலைவனுக்கு இனிக்கவே செய்தது.

ஆனால் பிட்சு ஆனந்தருக்கோ மிகவும் கசந்தது.

◈◈◈

## அத்தியாயம் இரண்டு

## வாழ்க்கைப் பாதை

கொள்ளையர் தலைவனின் முட்டாள்தனமான போக்கை எடுத்துக் காட்டிய விஜயன் அதேசமயம் அவன் மீது இரக்கம் கொண்டவனாய் ''இலியாஸ், நாங்கள் எல்லோரும் எங்கே எதற்காகச் செல்கிறோம் தெரியுமா? கொள்ளையடிப்பதற்காக' என்று கூறியபோது கொள்ளையர் தலைவன் மட்டுமின்றி புத்த பிட்சுவான ஆனந்தரும் வியப்பும் திகைப்பும் அடைந்தார்.

கொள்ளையர் தலைவன் லேசாகச் சிரித்துவிட்டு ''வங்கதேசத்தில் இல்லாத செல்வமா வேறு இடத்தில் இருக்கிறது?'' என்று கேட்டான் அவநம்பிக்கையுடன்.

''நீ சொல்வது பாதி உண்மை. அதேசமயம் இளவரசனாக இருந்துகொண்டு சொந்த நாட்டில் எவ்வளவு காலத்திற்குக் கொள்ளையடிப்பது? நீ அப்படித்தான் செய்வாய் போலிருக்கிறது'' என்று கூறிய விஜயன் ''நான் தேடிச் செல்லும் இடத்தில் ஏராளமான செல்வங்கள் இருப்பதால்தான் இந்த வேலையில் இறங்கியிருக்கிறேன். உன்னைப்போல துப்பறியாமல் வெட்டித்தனமாக நான் முயலுவதில்லை'' என்றான் ஆணித்தரமாக.

''நீங்கள் உத்தேசித்துள்ள கொள்ளைக்கு இவர்கள் போதுமா? அதோடு இந்த பிட்சு எதற்கு?'' என்று கேட்டான் கொள்ளையர் தலைவன்.

''உன்னைப் போலவே என்னையும் எண்ணாதே இலியாஸ். என் குழுவில் யார் இருக்க வேண்டும் எத்தனை பேர் இருக்க வேண்டும் எப்படி இயங்க வேண்டும் என்பதையெல்லாம் முடிவு செய்வது நான். உன் வழி வேறு. என் வழி வேறு. நாங்கள் தீர்மானித்திருக்கிற கொள்ளையில் நீயும் பங்கு கொண்டால் உனக்குரிய பங்கை நான் தருகிறேன். அது நீ பலமுறை கொள்ளையிட்ட அளவைவிட அதிகமாக இருக்கும்''

''உங்கள் கொள்ளை எங்கே நடக்கப் போகிறது?''

''அதைப்பற்றி இப்போது சொல்லமுடியாது. இலக்கை நெருங்கும்போது சொல்கிறேன். இதில் பங்குபெற உனக்குச் சம்மதமானால் உனக்கு நல்ல லாபம். சம்மதம் இல்லை யென்றால் உங்கள் எல்லோரையும் இங்கேயே வெட்டிவிட்டு பயணத்தை நாங்கள் தொடருவோம்'' என்றான்.

விஜயனின் வார்த்தைக்கு சம்மதிப்பதைத் தவிர வேறு வழியில்லை என்பதை உணர்ந்து கொண்ட கொள்ளையர் தலைவன் ஒப்புக் கொண்டாலும் அவனுக்குள் இருந்தச் சந்தேகம் தீரவில்லை. விஜயனின் அனுதாபமும் தாராள மனதும் நம்ப முடியாதவைகளாக இருந்தாலும் விஜயனிடம் இரக்கம் என்பது அணுஅளவும் கிடையாது என்பது பிரபலமாயிருந்ததாலும் விஜயனின் திட்டத்தில் ஏதோ சூது இருக்க வேண்டும் என்று நினைத்தான்.

ஆனால் விஜயன் அடுத்தடுத்து நடந்து கொண்ட முறை அவனது சந்தேகத்தை அறவே நீக்கியது. தாக்குதல் சம்பவத்தை யடுத்து மேற்கொள்ளப்பட்ட பயணத்தில் கொள்ளையர்களிடம் நெருங்கிப் பழகினான் விஜயன். உணவருந்தும் நேரங்களில் அவர்களோடு சேர்ந்தே உணவருந்தினான். அவர்களுக்கு எந்தக் கட்டுப்பாட்டையும் விதிக்காமல் தன்னோடு சுதந்திரமாக உலவவிட்டான். சில நேரங்களில் அவர்களோடு அமர்ந்து சொக்கட்டான் ஆடினான். இரவு நேரங்களில் அவர்களோடு சேர்ந்தே உறங்கினான். அவனது இந்த நடத்தை விஜயன் மீதான

அவநம்பிக்கை மற்றும் சந்தேகத்தை நீக்கியதோடு மட்டுமில்லாமல் கொள்ளைக்காரர்களை அவனோடு நெருங்கிப் பேசவும் பழகவும் வைத்தது. இப்படியாக அவனது பயணம் மகத நாட்டு மேற்கெல்லை ஓரமாக பத்து நாட்களுக்கு நடந்து அந்நாட்டின் வடமேற்கு எல்லையை அடைந்தது.

கொள்ளையரோடு பழகத் தொடங்கிய விஜயன் புத்த பிட்சுவைப் புறக்கணித்து அவரோடு பேசுவதைக் குறைத்துக் கொண்டான். அவனது போக்கு பிட்சுவை பெரிதும் திகிலடைய வைத்தது. ஒரு கட்டத்தில் ''கொள்ளையடிப்பதிலும் கொலை செய்வதிலும் இருக்கும் ஆனந்தம் வேறெதிலும் இல்லை'' என்று இலியாஸிடம் விஜயன் கூறியதைக் கேட்ட ஆனந்தர் நொந்துபோய் விட்டார். மிகவும் சிரமப்பட்டு அவனை அழைத்து வந்திருந்த நிலையில் அவன் தன் வழக்கமான தொழிலில் ஈடுபாடு காட்டத் தொடங்கிவிட்டதால் வெறுத்துப் போன பிட்சு தனது காரியம் வெற்றிபெறாமல் போய்விடுமோ என்று சந்தேகிக்கத் தொடங்கினார்.

பயணம் தொடர்ந்து கொண்டிருந்த நிலையில் ஒருநாள் பிட்சுவைத் தனியாக அழைத்த விஜயன் ''அடிகளே, நாம் செல்ல வேண்டிய இடம் பற்றிச் செய்தி வரும் என்று சொன்னீர்களே, வந்து விட்டதா? எனக்குத் தெரிந்து யாரும் வந்தது போலத் தெரியவில்லையே!'' என்று கேட்டான்.

விஜயன் தன்னைப் பரிகாசம் செய்வதாகக் கருதிய ஆனந்தர், ''இனி செய்தி வந்தாலென்ன? வராவிட்டால் என்ன? நீங்கள் தான் உங்கள் வழியைத் தேர்ந்தெடுத்து விட்டீர்களே?'' என்றார் கவலையுடன்.

இதைக்கேட்டதும் விஜயனின் கண்கள் சிவந்தன. பிட்சுவின் கழுத்தை அழுத்திப் பிடித்த அவன் ''கேட்டதற்கு மட்டும் பதில் சொன்னால் போதும். தேவையில்லாத விஷயங்களைப் பேச வேண்டாம்'' என்று எச்சரித்துவிட்டு கழுத்திலிருந்து கையை எடுத்தான்.

ஏறக்குறைய மரண விளிம்பிற்குப் போய் தப்பியமாதிரி இருந்தது பிட்சுவிற்கு. தன் கழுத்தைத் தடவி விட்டுக்கொண்ட அவர் ''என்னை மன்னித்துவிடுங்கள் இளவரசே. போக

வேண்டிய இடத்தை ஆரம்பத்திலேயே சொன்னால் எங்கே வர மறுத்து விடுவீர்களோ என்றுதான் தெரியாத மாதிரி நடித்தேன். நாம் போக வேண்டிய இடம் பார்வத தேசம்'' என்றார்.

''பார்வத தேசமா? அது இமயமலையின் உச்சியில் அல்லவா இருக்கிறது?''

''உச்சிவரை செல்லவேண்டாம். கங்கை நதி உற்பத்தியாகும் இடத்திற்குப் போனால் போதும்''

''தற்போது நாம் ஹிமாசல காட்டுப்பகுதிக்கு வந்திருக்கிறோம் என்று நினைக்கிறேன்''

''ஆம் இளவரசே. இமயத்தின் அடிவாரத்தில் இருக்கிறோம். மேற்கே சென்று ஏறுமுகத்தில் பயணம் செய்ய வேண்டும். நான்கு நாட்கள் பயணம் செய்தால் பனிமலைகள் தென்படும்''

விஜயன் அவரிடம் எதுவும் பேசிக்கொள்ளாமல் கொள்ளையர்களோடு சென்று பயணத்தைத் தொடர்ந்தான்.

பயணவழி மிகவும் அடர்ந்த காட்டுப் பகுதியாக இருந்தது. பகல் நேரத்திலேயே காட்டுவாசிகள் பந்தங்களைக் கொளுத்தி வழிகாட்டி வந்தார்கள். அக்கம்பக்கங்களில் துஷ்ட மிருகங்களின் உறுமல் ஒலி கேட்டபடியே இருந்தது. அதேசமயம் அவை நெருங்கி வராதபடி காட்டுவாசிகள் பறைகளை முழக்கியபடி சென்றார்கள்.

ஓரிடத்தில் கங்கையாற்றின் கால்வாய் ஒன்று தென்பட்டது. அங்கே சற்று வெளிச்சமும் வெட்ட வெளியுமாக இருந்ததால் அங்கே சிறிது நேரத்திற்குத் தங்கலாம் என்று விஜயன் கூறியதால் அனைவரும் அங்கே கூடாரமடித்துத் தங்கினார்கள். வெட வெடவென குளிரடித்ததால் கூடுதலான ஆடைகளை அணிந்து கொண்டு நெருப்பை மூட்டி குளிர் காய்ந்தார்கள். பகல் நேரமாக இருந்தாலும் வெய்யிலின் தாக்கம் ஏதுமின்றி வெளிச்சம் மட்டுமே சிறிது இருந்தது.

அப்போது திடீரென யானையொன்றின் பிளிறல் ஒலி கேட்கவே அனைவரும் விழிப்படைந்து கூடாரத்தைவிட்டு வெளியே வந்தார்கள். அவர்களுக்கு முன்னால் கூப்பிடு

தூரத்தில் யானையொன்று அலறியபடியே நின்றிருந்தது. அதன் காலில் மிகப்பெரிய மலைப்பாம்பு ஒன்று சுற்றியிருந்தது. மலைப்பாம்பு தனது வாலால் யானையின் வயிற்றுப் பகுதியில் அடிக்கவே யானை வலிபொறுக்க முடியாமல் அலறியது. பாம்பின் பிடியிலிருந்து மீளவும் முடியவில்லை. எனவே யானை அப்பாம்பைக் கொல்ல நினைத்து அதன்மீது விழுந்தது. ஆனால் மலைப்பாம்பு சடாரென தனது தலையை இழுத்துக் கொண்டாலும் அதன் உடற்பகுதி யானையின் கீழே சிக்கி நசுங்கியது. தனது நிலையை உணர்ந்த மலைப்பாம்பு தன் தலைப் பகுதியை இழுத்து யானையின் கழுத்தில் மாலை போல் போட்டு இறுக்கியது. அதன் பலமான இறுக்கத்திற்கு ஈடுகொடுக்க முடியாத யானை மரண ஓலமிட்டு துடித்தது. சற்றே புரண்டபோது மலைப்பாம்பு முழுவதுமாக யானையின் கீழே சிக்கிக் கொண்டதால் நசுங்கிப் போய் மாண்டது. இப்படி மலைப்பாம்பும் யானையும் மோதிக்கொண்டு ஒரே நேரத்தில் உயிரைவிட்ட அதிசயமான காட்சியைக் கண்ட பயணிகள் சற்றே அசந்து போனார்கள்.

''இப்பகுதிகளில் யானைகளும் மலைப்பாம்புகளும் மிகுதி. இதுபோன்ற காட்சிகளை பல இடங்களில் காணலாம். இங்கிருக்கும் மலைப்பாம்புகள் விஷமுள்ளவை'' என்றான் காட்டுவாசி ஒருவன்.

காட்டுவாசி விவரித்த பயங்கரம் ஒருபுறம் இருந்தாலும் அப்பகுதியின் அழகு பயணிகள் அனைவரையும் கவர்ந்தது. காணுமிடமெல்லாம் குங்குலிய மரங்களும், பூர்ஜ மரங்களும் மதியக மரங்களும், மருத மரங்களுமாய் காட்சியளித்து நாசியை மயக்கும் சுகந்தத்தை குளிர்ந்த காற்றில் கலந்து வீசியபோது பூவுலகம் இத்தனை இன்பமயமானதா என்று விஜயனை எண்ண வைத்தது. ஏறக்குறைய எல்லோருமே தங்களையும் தங்கள் செயல்களையும் மறந்து அளப்பறிய இயற்கையின் அழகை ரசித்தார்கள். ஓரிரு இடங்களில் ஒஷதிக் கொடிகள் மின்னலைப்போல பளபளத்து இருண்ட கானகத்தில் வழிகாட்டியபோது எல்லோருக்குமே இந்திர லோகத்துக்கு வந்து விட்டமாதிரி இருந்தது.

இரண்டு நாட்களுக்கு இன்ப மிதப்பில் கடந்த பயணம் மூன்றாவது நாள் இக்கட்டு ஒன்றைச் சந்திக்க நேர்ந்தது. பார்வத தேசத்தைச் சேர்ந்த மக்கள் சிலர் வேட்டை நாய்களுடன் அவர்களை வளைத்துக் கொண்டனர். பார்வத தேசத்தில் உத்ஸவ ஸங்கேத ஜனங்கள் என்று அழைக்கப்பட்டு வந்த அப்பிரிவினர் எதற்கும் அஞ்சாத முரட்டு ஜாதிக்காரர்களாக அக்காலத்தில் இருந்தார்கள். மனித உடலைக்கூட சிலசமயங்களில் அவர்கள் உண்டதாக அக்காலத்தில் வதந்தி உலவி வந்தது. அதுபற்றி காட்டுவாசிகள் ஓரளவிற்கு உணர்ந்திருந்தாலும் அவர்களை எதிர்கொள்ள நேரும் என்று எதிர்பார்க்கவில்லை. எனவே அவர்களை எதிர்கொண்டபோது உக்கிரமான தாக்குதலைக் கையாண்டார்கள். கொள்ளையர்களும் கணிசமான எண்ணிக் கையில் இருந்ததாலும், பெருங் கொள்ளையில் ஈடுபடப் போகும் வேட்கையில் இருந்ததாலும், சாதாரணமாகவே முரட்டுத்தனங்களுக்குப் பேர் போனவர்களாக இருந்ததாலும் பார்வதேச முரடர்களை பலமாகத் தாக்கியதால் அவர்கள் ஈடுகொடுக்க முடியாமல் கலைந்து ஓடினார்கள். அவர்களில் இருவரைப் பிடித்து கொள்ளையர் தலைவன் தன் ஆத்திரம் தீரும் மட்டும் குத்திக் குத்தி களிப்படைந்தான்.

அதற்கடுத்த இரண்டு நாட்கள் நிம்மதியாக பயணம் செய்த அவர்கள் காட்டுப்பகுதியில் இரவில் கூடாரமடித்துத் தங்கினார்கள். கொள்ளையர்களோடு நீண்டநேரம் கும்மாள மடித்தான் விஜயன். எல்லோரும் ஆழ்ந்து உறங்கியபோது விஜயன் கண்விழித்து பிட்சுவை எழுப்பினான். அவரிடம் காதோடு காதாக ஒரு விஷயத்தைக் கூறியபோது பிரமை தட்டிய நிலையில் ''இது மிகவும் பயங்கரம் இளவரசே. இப்படி நீங்கள் செய்யலாமா? இதை ஆரம்பத்திலேயே செய்திருக்கலாமே? இப்போதா செய்வது?'' என்று கேட்டார் அவர்.

''முதலில் சொன்னதைச் செய்யுங்கள். தர்ம நியாயங்களைப் பற்றி பிறகு பேசலாம்'' என்றான் விஜயன் தாட்சண்யமற்ற குரலில்.

பிட்சு மேற்கொண்டு எதுவும் பேசாமல் தன் வீரர்களையும், காட்டுவாசிகளையும் எழுப்பி விஜயன் கூறிய விஷயத்தைக்

கூறியதும் அவர்களும் சற்றே தயங்கினார்கள். விஜயனே வாளை எடுத்துக்கொண்டு காரியத்தில் இறங்கியதும் வீரர்களும் செயல்பட்டார்கள். சில நிமிடங்களிலேயே தூங்கிக் கொண்டிருந்த எல்லாக் கொள்ளையர்களும் கண்ட துண்டமாக வெட்டப்பட்டுக் கொல்லப்பட்டார்கள்.

''நாம் உடனே புறப்பட்டாக வேண்டும். இல்லையென்றால் இந்த ரத்தவாடையை முகர்ந்து இங்கு வந்து சேரும் விலங்குகளுக்கு நாமும் இரையாகிவிடுவோம்'' என்று விஜயன் கூறியதும் அனைவரும் புரவிகளில் ஏறி புறப்பட்டார்கள்.

விரைவிலேயே காட்டுப் பகுதியைவிட்டு பனிமலைகள் சூழ்ந்த உயர்ந்த பகுதிக்கு வந்தார்கள். அங்கிருந்து கங்கை நதி உற்பத்தியாகும் இடம் ஒருநாள் பயணத்தில் இருப்பதாக பிட்சு கூறியதும் அங்கே தங்கிவிட்டுப் போகலாம் என்று விஜயன் கூறியதும் கூடாரங்கள் அடிக்கப்பட்டன. சுற்றிலும் பனிமலைகள் இருந்ததாலும், அவ்வப்போது வீசிய குளிர்ந்த காற்றில் பனிக்கட்டிகளே பறந்து வீசியதாலும் பெருங் குளிருக்கிடையில் உடல் நடுங்க அவர்கள் இளைப் பாறினார்கள்.

பிட்சுவின் மனம் ஒரு நிலையில் இல்லை. அவரால் விஜயனைப் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆரம்பத்திலிருந்து அவனது போக்கு ஒரே சீராக இல்லாமல் தாறுமாறாக மாறிக் கொண்டிருந்ததைக் கண்ட அவர் ''இவன் மனிதனா? மிருகமா அல்லது அரக்கனா? எந்த இனம் என்று இவனுக்கு முத்திரை குத்த முடியவில்லையே?'' என்று புலம்பியவராய் விஜயனிடம் சென்று ''இளவரசே, நீங்கள் செய்த காரியத்தை என்னால் ஜீரணிக்க முடியவில்லை'' என்றார்.

''எதைச் சொல்கிறீர்கள்?''

''தூங்கிக் கொண்டிருந்த கொள்ளையர்களைக் கொன்றதைத்தான் சொல்கிறேன். அது தர்மமல்ல''

''அடிகளே, வங்கதேச எல்லையைக் கடந்த நிலையில் இக்கொள்ளையர்கள் நம்மைச் சூழ்ந்து கொண்டு தாக்கினார்களே, அது தர்மமா?''

''அது கொள்ளையர்கள் தர்மம்''

''அப்படியென்றால் இதுதான் என் தர்மம்''

''இளவரசே, இவர்களைக் கொல்ல நினைத்திருந்தால் அவர்களைப் பிடித்தோமே அச்சமயத்திலேயே அவர்களைக் கொன்றிருக்கலாமே! கூடவே வரச்செய்து தூங்கும்போது கொல்ல வேண்டுமா?''

''இவர்களை ஆரம்பத்திலேயே நான் கொல்லாமல் விட்டது ஏனென்று உங்களுக்குத் தெரியுமா?''

''ஏன்?''

''நாம் எங்கே போகவேண்டும் என்று உங்களைக் கேட்டபோது நீங்கள் பதில் சொல்லவில்லை. ஒருவேளை நீண்டதூரம் பயணம் செய்ய வேண்டியிருக்குமோ என்று நினைத்தேன். அப்படிச் செல்வதென்றால் நம்முடன் இருக்கும் ஆட்கள் போதாது. இந்தச் சப்பையான பாதுகாப்புடன் சென்றால் நமக்கு ஆபத்து என்பதை உணர்ந்தேன். கொள்ளையர்கள் எண்பது பேர் இருந்தார்கள். அவர்களையும் நம்முடன் சேர்த்துக் கொண்டால் நமக்கு பலம் கூடும் என்று நினைத்தேன். நம்மோடு அவர்கள் வருவதற்காக கொள்ளை யடிக்கப் போவதாகச் சொல்லி ஆசை காட்டினேன். நம்மை நம்பி ஒழுங்காக ஒத்துழைக்க வேண்டும் என்பதற்காக அவர்களிடம் நெருங்கிப் பழகினேன். அவர்கள் நம்மோடு இருந்ததால் தான் பார்வத தேசத்து முரட்டு மனிதர்களை விரட்ட முடிந்தது.''

''அனைத்தும் சரிதான் இளவரசே. நம்முடன் பழகி இணைந்து நம்மைக் காப்பாற்றிய இவர்களை எதற்காகக் கொல்ல வேண்டும் அதுவும் உறங்கும் போது?''

''அவர்களை கடைசிவரையில் அழைத்துக் கொண்டு போக முடியாது. அதோடு நாம் கொள்ளையடிக்கப் போவதில்லை என்பது தெரிந்துவிட்டால் அவர்கள் நம்மை அழிக்க முற்படுவார்கள். ஆகவே அவர்களை அழித்துவிடத் தீர்மானித் தேன். எந்த இடம் வரை அவர்களது துணை தேவையோ அந்த இடம் வரை பேசாமல் இருந்தேன். இனிமேல் அவர்களது

துணை தேவையில்லை என்ற நிலைமைக்கு வந்ததும் அவர்களைக் கொல்லச் செய்தேன். தூங்கும்போது கொல்வது எளிது. அதோடு கொன்றவர்கள் யார் என்பது யாருக்குமே தெரியாமல் போய்விடும். அடிகளே, கொள்ளைக்காரர்கள் எந்த தேசத்தில் இருந்தாலும் அவர்கள் அழிக்கப்பட வேண்டியவர்கள். தங்கள் நடத்தையில் ஈவிரக்கம் இல்லாத கொள்ளையர்களை அழிக்கும்போது இரக்கமோ தர்மமோ தேவையில்லை. எதை எதை எப்படிச் செய்ய வேண்டுமோ அப்படிச் செய்கிறவன் நான். வீணாக இந்த விஷயத்தில் உங்கள் விவாதங்களைத் தொடராதீர்கள். கொள்ளையர்களும் உங்கள் தர்மாலோசனைகளும்தான் முக்கியம் என்றால் இந்த இடத்திலேயே நான் பிரிகிறேன். உங்களோடு தொடர வேண்டிய அவசியம் எனக்கில்லை. இவ்வளவு நாட்களாக உங்களோடு வந்து கொண்டிருப்பதையே என்னால் நம்ப முடியவில்லை. என்னையும் மீறி ஏதோ ஒரு சக்தி என்னை ஈர்ப்பதாலேயே நான் வந்து கொண்டிருக்கிறேன். இதை நீங்கள் உணர்ந்து கொண்டால் நல்லது'' என்றான்.

இதற்குப் பின் ஆனந்தர் வாயைத் திறக்கவில்லை. விஜயனை கொண்டுபோக வேண்டிய இடத்திற்குக் கொண்டு போய்ச் சேர்த்துவிட்டு பெருமூச்சு விட்டார்.

விஜயனைக் கண்ட மனிதர் அவனுக்கு ஓர் கட்டளையை இட்டார்.

அதை அவன் முற்றிலும் எதிர்பார்க்கவில்லை. அதோடு அவரது கட்டளையையடுத்து நடந்த பல்வேறு நிகழ்ச்சிகள் தன் வாழ்க்கைப் பாதையை மாற்றுவதைச் சந்தேகமற உணர்ந்து கொண்டான் விஜயன்.

◈◈◈

## அத்தியாயம் மூன்று

# தேவபுத்தர்

தான் அடைய வேண்டிய இடத்திற்கு வந்து சேர்ந்த விஜயன் சுற்றிலும் பனிப் பிரதேசமாகவே இருந்ததையும் அருகில் ஏதோ ஆறு ஒன்று பனிக்கட்டிகளுடன் உருண்டு ஓடுவதையும் கண்டதும் ''இதுதான் புனித கங்கை உற்பத்தியாகும் இடமாக இருக்க வேண்டும்'' என்று நினைத்தான். அவனது நினைப்பை உறுதி செய்த ஆனந்தர் அருகே இருந்த ஏரி ஒன்றைக் காட்டினார். பளிங்கு போன்றத் தூய்மையான நீரைக் கொண்டிருந்த அந்த ஏரியில் ஹம்ச பட்சிகள் அலாதியான ஆனந்தத்துடன் நீந்தியும் புரண்டும் நீராடிக் கொண்டிருந்த காட்சியைக் கண்டு பரவசமடைந்தான் விஜயன்.

''இந்த ஹம்சப் பறவைகள் மிகவும் தூய்மையான நீரையே பயன்படுத்தும். அப்படிப்பட்டத் தூய்மையான நீரைக் கொண்ட இடங்கள் இரண்டு. ஒன்று இந்த ஏரி. மற்றொன்று இமயத்தின் உச்சியில் இருக்கும் மானசசரஸ் ஏரி. தற்போது கோடைக் காலமாதலால் மழைநீர் கூட இந்த ஏரியில் கலப்பதில்லை. இதுபோன்ற காலங்களில் மட்டும் இந்தத் தூய்மையான நீரைத் தேடி இப்பட்சிகள் வந்து ஆனந்தமாகக் காலத்தைக் கழித்துவிட்டு மழைக்காலம் துவங்கும்போது சென்று விடுகின்றன'' என்றார் ஆனந்தர்.

இதைப்போன்ற மனத்தைப் பரவசமூட்டக்கூடிய தூய்மையான இடங்களையும் சூழ்நிலையையும் அவன் வாழ்நாளில் கண்டிராத காரணத்தால் அந்த அபூர்வமான ஹம்சப் பறவைகளின் ஆனந்தத்தில் சிறிதுநேரம் மனதைப் பறிகொடுத்து நின்றான். அந்த இடத்தின் அருகாமையில் மனிதர்களின் பேச்சுக் குரல்கள் கேட்கவே அங்கே குடியிருப்புகள் இருக்கவேண்டும் என்று நினைத்தான் விஜயன். பிட்சு அவனை விரைவிலேயே

அங்கு அழைத்துச் சென்றார். அங்கு அவன் எதிர்பார்த்த மாதிரியே நிறைய கூடாரங்கள் இருந்தன. அவற்றில் பிட்சுக்களும், பிட்சுக்கள் அல்லாதவர்களும் இருந்தார்கள். ஆனந்தர் விஜயனை ஒரு கூடாரத்திற்குள் அழைத்துச் சென்று உணவளித்தார். அவனோடு வந்தவர்களும் உணவருந்தினார்கள்.

சிறிதுநேரத்தில் அழைப்பு வரவே விஜயனை அழைத்துச் சென்றார் ஆனந்தர். கூப்பிடு தூரத்திலேயே பனிமலையானது நன்றாகக் குடையப்பட்டு குகையொன்று உருவாக்கப் பட்டிருந்தது. அகலமாயும் நீளமாயும் இருந்த அந்த குகை மரத்தண்டுகளாலும் பலகைகளாலும் வடிவமைக்கப் பட்டிருந்தது. குகைக்கு வெளியே உடலை உறைய வைக்கும் பனிக்காற்று வீசினாலும் குகைக்குள்ளே சென்ற பிறகு குளிர் நீங்கி கணகணவென இருந்தது. சில இடங்களில் கணப்புகள் கட்டப்பட்டு அவற்றில் நெருப்பு எரிந்து கொண்டிருந்தது. தனது கூடுதலான மேலாடைகளையும் தலைப்பாகைகளையும் கழற்றி ஓரிடத்தில் வைத்தான் விஜயன். குகையின் ஒரு மூலையில் பந்தங்கள் நிரம்ப ஏற்றப்பட்டிருந்தன. அவற்றின் நடுவில் இருந்த மரமேடையில் புத்தத் துறவியொருவர் அமர்ந்திருந்தார். பந்தங்கள் தந்த பிரகாசத்தில் அவரது முகம் தேஜஸோடு தெய்வீகமாய் காட்சியளித்ததைக் கண்ட விஜயன் ''ஆனந்தரே, நாம் காண்பது பகவான் புத்தரையா?'' என்று கேட்டான் வியப்புடன்.

''இல்லை இளவரசே. புத்த மகான் நிர்வாணமடைந்து இரண்டு மாதங்களாகி விட்டன. இவர் புத்தரோடு இருந்து பழகிய மகாதேரர். தேவ புத்தர் என்றே இவர் அழைக்கப் படுகிறார். உன்னை அழைத்து வரச்சொன்னதும் இந்த மகா புருஷர்தான்'' என்றார் ஆனந்தர்.

இதற்குள் இருவரும் பீடத்திற்கு அருகில் வந்து விட்டதால் அங்கே இருந்த துறவியான தேவ புத்தர் மூடியிருந்த கண்களைத் திறந்து ''வா. விஜயா வா. உன் வரவு நல்வரவாகட்டும். உன்னால் எதிர்காலம் சிறக்கட்டும்'' என்றார் அமுதமான குரலில்.

விஜயன் இப்படியொரு தெய்வீகத்துறவியைச் சந்திப்போம் என்று கனவிலும் கருவில்லை. அதோடு தன்னால் எதிர்காலம் சிறக்கட்டும் என்று அத்துறவி வாழ்த்தியதை அவனால் நம்பவே முடியவில்லை. பரவசப்பட்ட நிலையில் எதுவும் பேசாமல் அவரை வணங்கினான்.

தேவ புத்தர் அவனையும் ஆனந்தரையும் அமரச் சொன்னார்.

''என்ன விஜயா, இதுபோன்றச் சூழ்நிலையை எதிர்பார்க்கவில்லை இல்லையா? நீ இருந்து வந்த சூழ்நிலைகளுக்கு நேர்மாறான சூழ்நிலை இது. இனி உனக்குப் பழைய சூழ்நிலைகள் வராது'' என்றார்.

''சுவாமி, தாங்கள் கூறுவது எனக்குப் புரியவில்லை'' என்றான் விஜயன்.

''எல்லாம் போகப் போகப் புரியும். உன்னை நான் இங்கு அழைத்தது பெரும் பொறுப்பொன்றை உன்னிடம் ஒப்படைக்கத்தான். செய்வாயா?''

''சொல்லுங்கள் சுவாமி''

''நாக நாட்டிற்குச் செல்லவேண்டும். அதன் மன்னனாக வேண்டும். புத்த மதத்தை அங்கே பரப்ப வேண்டும்''

விஜயனுக்கு தலைச்சுற்றியது.

''நாக நாட்டிற்கா?''* என்று பெருவியப்புடன் கேட்டான் அவன்.

''ஆமாம்'' என்றார் துறவி அமைதியாக.

''நான் வங்கதேசத்தின் இளவரசன் சுவாமி. நான் எப்படி என் நாட்டை விட்டுவிட்டு நாகநாட்டிற்குப் போகமுடியும்? அதோடு புத்த மதத்தை என்னால் எப்படி அங்கே பரப்ப முடியும்?'' என்று சற்று பதட்டத்துடனே கேட்டான் விஜயன்.

துறவி லேசாகச் சிரித்துவிட்டு ''விஜயா, பகவான் புத்தர் தன் வாழ்நாளிலேயே புத்த சங்கம் ஒன்றைத் துவக்கினார். அதில்

* இக்கதை நடந்த காலத்தில் தற்போதைய இலங்கை நாக நாடு, நாக தீபம், என்று பல பெயர்களால் அழைக்கப்பட்டது.

பல்வேறு நாட்டு மன்னர்கள் சேர்ந்து புத்த மதத்தைத் தழுவியதோடு தங்கள் நாட்டில் அம்மதத்தைப் பரப்பவும் ஒப்புக் கொண்டார்கள். இந்த நாகநாட்டு விஷயத்தில் பகவான் புத்தரே நேரில் அங்கு சென்றார். அதுவும் ஞான ஒளி பெற்றபிறகு நாகநாட்டிற்குச் சென்று பல அமானுஷ்ய காரியங்களைச் செய்து புத்த மதத்தை உபதேசம் செய்தார். ஆனால் அவர் மகாநிர்வாணம் அடைந்த பிறகு நாக நாடு மட்டுமின்றி நம் நாட்டிலேயேகூட புத்தமதப் பிரச்சாரம் தேக்க நிலை அடைந்தது. பகவானின் ஆணைப்படி பிரமாணம் எடுத்துக் கொண்ட என்போன்ற துறவிகள் எண்பது பேர் இந்த பரத கண்டத்தில் உள்ள ஐம்பத்தாறு தேசங்களுக்கும் புத்தர் உபதேசங்களைப் பரப்புவதற்காக அனுப்பப்பட்டோம். அதன்படி இமயமலையை அடுத்துள்ள காஷ்மீரம், காந்தாரம், சீனம் ஆகிய நாடுகளுக்குப்போய் பிரச்சாரம் செய்யும் பொறுப்பை நான் ஏற்றுக்கொண்டேன். அதோடு நாக நாடு பொறுப்பும் என்மீது வைக்கப்பட்டது'' என்று கூறி சற்று நிறுத்திய தேவபுத்தர் தண்ணீரை அருந்திவிட்டுத் தொடர்ந்தார்.

''விஜயா, மதத்தைப் பல்வேறு தேசங்களுக்குக் கொண்டு போய் உபதேசிப்பது என்பது என் போன்ற துறவிகளால் முடியக் கூடிய காரியம். ஆனால் உபதேசிக்கப்பட்ட மதக் கொள்கையை விரிவாக மக்களிடையே பரவச் செய்து நிலை நிறுத்துவதென்பது துறவிகளால் முடியக்கூடிய காரியமல்ல. அதற்கு நாட்டை ஆளும் மன்னன் வேண்டும். அவன் இருந்தால்தான் தன் நிர்வாகத்தின் மூலம் இந்த காரியத்தைச் செய்ய முடியும். நாகநாட்டில் தற்போது நாகர்களும் இயக்கர்களும் பல்வேறு குழுக்களாகப் பிரிந்து கூறுபோட்டு ஆட்சிசெய்து வருகிறார்களே தவிர அத்தீவு முழுவதையும் ஓர் ஆதிக்கத்தின் கீழ்கொண்டு ஆளக்குடிய உருப்படியான மன்னன் அங்கில்லை. அப்படியொரு மன்னன் அந்நாட்டிற்கு மிகவும் அவசியம். அதற்காகத்தான் உன்னை அழைத்தேன். நாகநாட்டில் புத்தமதத்தை வளர்த்து அதையொரு புத்தநாடாக மாற்றும் சக்தி உன் கைகளில் இருக்கிறது.''

''சுவாமி, எனக்கும் நாகநாட்டிற்கும் என்ன சம்மந்தம்? நான் எப்படி அந்த நாட்டை ஆளமுடியும்?'' என்று கேட்டான் விஜயன்.

''ஆள்வதற்கு முறையான ஆள் இல்லாதபோது நீ ஏன் ஆளக்கூடாது? இதற்கு உரிமையும் சம்மந்தமும் எதற்கு? அந்நாட்டை நீ கைப்பற்றினால் உரிமையும் சம்மந்தமும் தானாக வருகிறது? இதுதானே எங்கேயும வழக்கமான நடைமுறையாக இருக்கிறது?''

''வங்கதேசத்தை ஆளவேண்டிய நான் அதைத் துறந்துவிட்டு நாக நாட்டிற்கு எப்படிப் போகமுடியும்?''

''விஜயா, நான் உண்மையைச் சொல்கிறேன். ஆனால் நீ நம்பமாட்டாய்.''

''என்ன உண்மை சுவாமி?''

''உன்னால் வங்கதேசத்தை ஆள முடியாது.''

''ஏன்?''

''அதற்கான வாய்ப்பு உனக்குக் கிட்டாது''

''காரணம்''

''அது உனக்கே தெரியும். உனக்குத் தெரியாத விஷயமும் ஒன்றிருக்கிறது''

''என்ன விஷயம் சுவாமி?''

''உன் தந்தை உன்னை வங்கதேசத்தின் மன்னனாக்கச் சம்மதிக்கப் போவதில்லை.''

''ஆரூடம் சொல்கிறீர்களா சுவாமி?''

''உண்மையைச் சொல்கிறேன். உன்னையும் உன்னைச் சேர்ந்த எழுநூறு நண்பர்களையும் தேடிக் கொண்டிருக்கிறான் உன் தந்தை''

''எதற்கு?''

''தண்டிப்பதற்கு''

இதைக்கேட்டதும்சற்று மௌனமானான் விஜயன். துறவி கூறுவதுபோல் நடப்பதற்குச் சாத்தியம் இருப்பது அவனுக்குத் தெரிந்திருந்ததால் சிறிதுநேரம் கழித்து ''சுவாமி, என்னைப் பற்றி எல்லா விவரமும் தங்களுக்குத் தெரியுமா?'' என்று கேட்டான்.

''உன்னைப் பற்றியும் தெரியும். உன் தந்தையைப் பற்றியும் தெரியும்''

''என்ன தெரியும் சுவாமி?''

''உன் தந்தை வனவிலங்குகள் நிறைந்த காட்டில் காட்டுவாசி ஒருவனுக்குப் பிறந்தவன். குழந்தைப் பருவத்திலிருந்தே அவன் பழகியது வனவிலங்குகளோடு தான். அதுவும் சிங்கங்களோடு பழகுவதில் அவனுக்கு அலாதி பிரியம். அதன் காரணமாகவே உன் தந்தைக்குச் சிகபாகு என்று பெயர் வைக்கப்பட்டது. உன் தந்தை பெரியவனானதும் பெற்றோர்கள் அவனை நகரத்திற்கு அழைத்து வந்துவிட்டார்கள். அவன் சிங்கங்களை விட்டுப் பிரிய மறுத்தான். அதுவும் அவன் சவாரி செய்து வந்து சிங்கம் ஒன்று அவனைவிட்டுப் பிரிய மனமில்லாமல் தவித்தது. அவனது பெற்றோர்களோ வலுக்கட்டாயமாக நகரத்திற்கு அழைத்து வந்து விட்டார்கள். சில நாட்களிலேயே அவனைப் பிரிந்த சிங்கம் துக்கம் தாளாமல் மாண்டு போனது.

''இது நடந்த சிலமாதங்கள் கழித்து இறந்த சிங்கத்தின் துணையான ஆண்சிங்கம் ஒன்று உன் தந்தையைத் தேடி வங்க நகரத்திற்குள் வந்தது. அதைக்கண்ட மக்கள் அஞ்சி ஓடினார்கள். பலர் கற்களை எறிந்தார்கள். தாக்கவும் முயன்றார்கள். எனவே அந்த விலங்கு பலபேரை தாக்கிக் கொன்றது. வங்கதேசத்து மன்னன் அச்சிங்கத்தைப் பிடித்துக் கொல்லும்படி ஆணையிட்டான். ஆனால் அது பிடிபடாமல் மாயச் சிங்கமாக உலவியது. எனவே மன்னன் சிங்கத்தைக் கொல்வோர்க்கு பரிசை அறிவித்தான். யானையின் மீது ஆயிரம் பொன்னை வைத்து நகரில் உலவவிட்டான். யாரும் முன்வரவில்லை. யானையின் மீதிருந்த பரிசுத்தொகையை இரண்டாயிரம் பொன்னாக உயர்த்தினான் மன்னன். அப்போதும் யாரும் முன்வராததால் பரிசுத்தொகை மூவாயிரம் பொன்னாக உயர்த்தப்பட்டபோது உன் தந்தை சிகபாகு அச்சிங்கத்தைக் கொல்ல முன்வந்தான். பெற்றோர்கள் அவனைத் தடுத்தும் அவன் கேட்கவில்லை. பொன்மீதிருந்த ஆசையால் பெற்றோர்களைப் புறக்கணித்துவிட்டு நகர வீதியில் யானையுடன் வலம் வந்தான். அவனை அடையாளம் கண்டு கொண்ட அச்சிங்கம் அவனை நோக்கி வந்தது. யானையின்

மீதிருந்த தங்கத்தின் மீது ஆசைப்பட்டு விட்ட அவனது கண்கள் சிங்கத்தின் அன்பு நிறைந்த கண்களைக் கவனிக்கவில்லை. அன்போடு தன்னிடம் வந்தச் சிங்கத்தை வாளால் ஈவிரக்கமின்றிக் கொன்றான். சிங்கம் துடிதுடித்து செத்தபோது மன்னனும் மக்களும் உன் தந்தையை மாவீரனாகக் கருதி பாராட்டினார்கள். பிள்ளைப் பேறற்ற அந்த மன்னன் மாண்டதும் மக்கள் உன் தந்தையை வங்கதேசத்து அரியணையில் அமர்த்தினார்கள். அவனும் வங்கத்தின் மன்னனான். குழந்தைகளே இல்லாத மன்னனின் அரியணையில் ஏறிய உன் தந்தையோ ஒவ்வொரு பிரசவத்திற்கும் இரண்டு குழந்தைகள் வீதம் முப்பத்தாறு குழந்தைகளுக்குத் தந்தையானான். மூத்த மகன் நீ. உனக்கு அடுத்தவன் சுமிதா. நீ தற்போது இளவரசன். உன் சகோதரன் சுமிதா துறைமுகத் தலைவன். என்ன, சரியா?''

''நான் கேள்விப்பட்டபடி இந்த விவரங்கள் உண்மைதான் சுவாமி. ஆனால் நான் என் தந்தையைவிட மோசமானவன். கொடுமையானவன். இரக்கமற்றவன். கொள்ளைக்காரன். கொலைகாரன்'' என்றான் விஜயன்.

''தெரியும் விஜயா. நீ மோசமானவன் என்பதும் தெரியும். ஏன் அப்படி ஆனாய் என்பதும் தெரியும். விஜயா, உன் தந்தையின் பதவி மோகம் தன் நாட்டு மக்களின் மீதான கடமையை மறைத்தது. நாட்டு மக்களுக்கு நல்லது செய்ய வேண்டிய அவன் தன் மக்களுக்கு தீமை செய்வதிலும் சொத்துக்களை குவிப்பதிலும் ஈடுபட்டான். இளவரசனாகவும் மூத்த மகனாகவும் நீ அவனுக்கு எச்சரிக்கை விடுத்தாய். அறிவுரைகளைச் சொன்னாய். அவன் கேட்கவில்லை. அன்றிலிருந்து நீ மாறினாய். அரண்மனைக் களஞ்சியத்தைக் கொள்ளையடித்தாய். செல்வந்தர்களின் செல்வங்களைச் சூறையாடினாய். உன் தந்தைக்கு வேண்டியவர்களை வளைத்துப் பிடித்துக் கொன்றாய். சகலவிதத்திலும் கெட்ட பெயர்களை எடுத்தாலும் மக்களுக்கு மறைமுகமாக பலவிதங்களில் உதவினாய். உன் தந்தையோ உன்னை அழிக்க திட்டமிட்டு மக்களுக்கும் உனக்கும் மித்ரபேதம் செய்து வருகிறான். உன்னைக் கொல்ல வாய்ப்பை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறான். இதுதான் உங்களது தற்போதைய நிலை''

''சுவாமி, இங்கே வருவதற்கான பயணத்தில் என்னுடன் அழைத்து வந்தவர்களை உறங்கும்போது வெட்டிக் கொன்றவன் நான். ஆனந்தர்கூட அச்செயலை நினைத்து என்னிடம் வெறுப்பும் வேதனையும் அடைந்தார். என்னையா தங்கள் காரியத்திற்குத் தேர்ந்தெடுக்கிறீர்கள்? வேறு யாரும் கிடைக்கவில்லையா?'' என்று குற்ற உணர்வுடன் கேட்டான் விஜயன்.

''உன் குணங்களையும், நீ செய்த துராக்கிருத செயல்களையும், மக்களுக்கு நீ செய்த நன்மைகளையும் ஏற்கனவே நான் நன்றாக அலசிவிட்டேன். எனவே அது குறித்து நீ எதுவும் பேச வேண்டியதில்லை. வஞ்சிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக நீ எதையும் செய்ய முன்வந்தது அதர்மம் அல்ல. தர்மம் தான். உன் தந்தையை எந்த முறையில் எதிர்கொள்ள வேண்டுமோ அதைத்தான் நீயும் செய்திருக்கிறாய். அதே மாதிரி தூங்கும்போது கொலை செய்த விஷயத்திலும் உன் செய்கையை விட யாரை நீ கொன்றாய் என்பதுதான் முக்கியம். உன்னிடம் லட்சிய வேட்கை இருக்கிறது. அதை நீ உணர்ந்துகொள். மற்ற விஷயங்களைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். தாமரையின் வேர்கள் சேற்றில் இருந்தாலும் அது அழகான மலர்களைத்தான் மலரச் செய்கிறது. நீயும் அப்படித்தான்''

''சுவாமி, நாகநாட்டைப் பிடிப்பதும் ஆள்வதும்கூட பரவாயில்லை. ஆனால் தூய்மையான புத்த மதத்தை என்னால் பரப்ப முடியுமா என்று எனக்குத் தயக்கமாக இருக்கிறது''

''விஜயா, தயக்கம் என்பது நம் கண்களை நாமே மூடிக்கொண்டு ஒன்றும் தெரியவில்லையே என்று புலம்பவதைப் போன்றது. ஆகவே உனக்கு தயக்கம் எதுவும் வேண்டியதில்லை'' என்று கூறிய துறவி ''நான் சொன்ன இந்த லட்சியப் பணியிலிருந்து எக்காரணம் கொண்டும் விலகமாட்டேன் என்று இதோ இந்த புத்த பகவான் முன் சத்தியம் செய்'' என்று கூறி அருகே இருந்த புத்தரது பளிங்குச் சிலையைக் காட்டினார்.

விஜயனும் அவ்வாறே சத்தியம் செய்துவிட்டு ''சுவாமி, என் மனைவி மாயாவின் கதி?'' என்று கேட்டான்.

''மாயையை விலக்குவதுதான் நல்லது'' என்று தத்துவம் சொன்ன தேவபுத்தர் ''விஜயா, மேற்கொண்டு தாமதம் செய்யாமல் மகத நாட்டிற்கு புறப்படு. இந்தமுறை காட்டுவழிப் பயணத்தை மேற்கொள்ளாமல் நகரங்கள் வழியாகவே பயணம் செய். உனக்கு ஒரு தடையும் வராத அளவிற்கு அடையாள முத்திரையைத் தருகிறேன். மகதநாட்டு தெற்கெல்லையில் உள்ள ஆசிரமத்தில் சதுரவேதி என்னும் மனிதனைப் போய் பார். அவன் மேற்கொண்டு நடக்கவேண்டிய விஷயங்களைக் கூறுவான். வெற்றி உனக்கே. போய் வா'' என்று கூறி விடை கொடுத்தார்.

விஜயனும் பயணப்பட்டு சதுர்வேதியைச் சந்தித்தான்.

சதுர்வேதி கூறிய உபாயங்கள் விஜயனை அதிரவைத்தன.

◈◈◈

## அத்தியாயம் நான்கு

# சதுர்வேதியின் திட்டம்

தேவபுத்தர் அளித்த முத்திரை மோதிரம் மாயா ஜாலத்தைப் போல உதவி செய்த காரணத்தால் தடையின்றிப் பயணம் செய்த விஜயன் ஒருமாதக் காலத்திற்குப் பின் மகத நாட்டின் தெற்கு எல்லையை அடைந்து அங்கிருந்த அடர்ந்த கானகத்திற்குள் இருந்த ஆசிரமத்தைக் கண்டுபிடித்து சதுர்வேதியைக் கண்டு வணங்கி துறவி கூறிய விஷயங்களை எடுத்துக் கூறினான்.

''ரொம்ப மகிழ்ச்சி. போய் வா'' என்றார் சதுர்வேதி.

ஏறக்குறைய அரக்கனைப் போல பெரிய உருவத்தைக் கொண்டிருந்த சதுர்வேதி இப்படிச் சுருக்கமாக பதில் கூறியதைக் கேட்டு திகைத்தான் விஜயன்.

அவனது திகைப்பைக் கண்ட சதுர்வேதி ''என்ன நிற்கிறாய்? ஏதாவது கேட்க நினைக்கிறாயா?'' என்று சாதாரணமாகக் கேட்டார்.

விஜயனுக்கு என்ன கேட்பதென்று தெரியவில்லை. அவனது மௌனத்தைக் கண்டு கடகடவென்று சிரித்த சதுர்வேதி ''இப்படி உட்கார். உனக்கு நிதானமும் பொறுமையும் சரியான நேரத்தில் வந்திருப்பது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. அதேசமயம் உன்னுடைய தயக்கம் எனக்குத் திருப்தியை அளிக்கவில்லை. கேட்கவேண்டிய கேள்விகளைக் கேட்பதற்கு உனக்குத் தயக்கம் வரக்கூடாது'' என்று சொல்லிவிட்டு ''நாகநாட்டிற்கு எப்படிப் போகிறாய்? புரவியிலா அல்லது வண்டியிலா?'' என்று கிண்டல் தொனிக்கக் கேட்டார்.

விஜயனோ உணர்ச்சி வசப்படாமல் ''கப்பலில் தான் செல்ல வேண்டும்'' என்றான் பணிவான குரலில்.

''உன்னிடம் எத்தனைக் கப்பல்கள் இருக்கின்றன?'' என்று கேட்டார் சதுர்வேதி.

''எதுவுமில்லை''

''பிறகு எப்படிச் செல்வாய்?''

''நீங்கள் தான் சொல்லவேண்டும்''

''சரி. நானே ஒரு கப்பலைத் தருகிறேன். அது போதுமா?''

''கப்பலை இயக்க மாலுமிகள் வேண்டும்''

''கப்பல் என்றால் வெற்றுக் கப்பல் அல்ல. மாலுமிகள், பணியாட்கள் எல்லாவற்றையும் சேர்த்துத்தான்''

''போர் வீரர்களும் ஆயுதங்களும் வேண்டும்''

''சரி. அதையும் தருகிறேன். போதிய உணவுக்கும் தண்ணீருக்கும் வழி செய்கிறேன். போதுமா?''

''போதும்''

''நீ இதுவரை கடல்பயணம் செய்திருக்கிறாயா?''

''இல்லை''

''நாக நாட்டைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறாயா?''

''இல்லை''

''விஜயா, நிலம் வேறு. கடல் வேறு. கடல் ஒரு தனி சாம்ராஜ்யம். அதில் போய் விட்டால் கடல் தான் நம் நண்பன்.

சமயத்தில் அதுவே விரோதியாகிவிடும். நிலத்திலே மனிதர்களை மட்டும் நீ எதிர்கொள்கிறாய். கடலிலோ நீ கடலையும் எதிர்கொள்ள வேண்டும். கடல் இயற்கை சம்பந்தப்பட்டது. அதில் எந்தநேரத்தில் என்ன நேரும் என்று சொல்லமுடியாது. ஆகவே கடலை எதிர்கொள்வதென்பது தனிப் பெருங்கலை. அதை நீ கற்றுக்கொள்ள வேண்டும். ஒரு வழியாக அதைச் சமாளித்து நாகநாட்டில் தரை இறங்குவதாக வைத்துக்கொள். அதற்குப் பிறகு அங்கே உள்ள நிலைமைகளை ஆராயவேண்டும். அங்கே இருப்பவர்களை வெல்லவேண்டும். வென்ற பிறகு நீ மன்னனாவதற்கும் நாட்டை சீர்படுத்துவதற்கும் வெறும் கைகள் மட்டும் இருந்தால் போதாது. நிரம்ப செல்வங்கள் வேண்டும். அது உன்னிடம் இருக்கிறதா?''

''இல்லை''

''வெறுங்கையுடன் நாகநாட்டில் உன்னால் எதையும் சாதிக்க முடியாது. ஆகவே உன் லட்சியத்திற்கு மிகவும் தேவையான செல்வங்களை எப்படித் திரட்டுவது என்று யோசி. நாளைக்கு வந்து பதிலைச் சொல்'' என்று கூறி விஜயனை அவனுக்கென்று ஒதுக்கப்பட்ட குடிலுக்கு அனுப்பி வைத்தார் சதுர்வேதி.

தனது குடிலுக்கு வந்த விஜயன் தரையிலேயே கால்களை நீட்டிப் படுத்து நீண்டநேரம் வரை சதுர்வேதி கூறியது பற்றி யோசித்தான். ஒரு கட்டத்திற்குப் பிறகு தேவ புத்தரின் கருணை மிகுந்த முகம் அவனது எண்ணத் திரையை ஆக்கிரமித்துக் கொண்டது. உத்வேகத்தை உண்டாக்கும் அவரது பேச்சு அவனது காதுகளில் எதிரொலித்தன. அவரைச் சந்தித்த பின் தன்னிடமிருந்து ஏதோ ஒன்று விலகி ஓடியது போலவும் தனக்குள் ஒருவித மாற்றம் உண்டானது. போலவும் அவனுக்குத் தோன்றியது. அது உண்மையா அல்லது வெறும் பிரமையா என்று உறுதிபடுத்திக் கொள்ள அவனால் இயலவில்லை.

துறவியை நினைத்தால் புத்துணர்வு பெறுவது போல் உணர்ந்த விஜயன் அதேசமயம் சதுர்வேதியை நினைத்தால் குழம்புவதுபோல் உணர்ந்தான். இந்த மனிதர் விஷயங்களை நேரடியாகச் சொல்லாமல் ஏன் சுற்றிவளைத்து பீடிகைகளைப் போடுகிறார் என்று தனக்குத் தானே கேட்டுக்கொண்டான். அவர்

கூறிய விஷயங்கள் உண்மையானவை என்றாலும் செல்வங்களைப் பெற என்ன வழி என்பதைத் தெரிந்து கொண்டு வேண்டுமென்றே தன்னை ஆழம் பார்ப்பது அவனுக்குப் பிடிக்கவில்லை.

மறுநாள் அவரைச் சந்தித்து தனக்கு வழியேதும் தெரியவில்லை என்று கூறியபோது ''விஜயா, நீ பெரும் லட்சியத்தை எதிர்கொண்டு செல்கிறவன். உன்னைப் போன்றவர்கள் பிரச்சினைகள் வரும்போது யோசித்தால் மட்டும் போதாது. தீர்வுகளை கண்டுபிடிக்க வேண்டும். இல்லையென்றால் உன்னால் தலைவனாக முடியாது'' என்று உறுதியான குரலில் அறிவுறுத்திய சதுர்வேதி ''நீ பெரும் கொள்ளைக்காரன் என்றும் கொலைகாரன் என்றும் கேள்விப்பட்டேன். உண்மையா?'' என்று கேட்டார்.

''அதெல்லாம் பழைய கதைகள்''-என்றான் விஜயன்.

''பழையதாக இருந்தால் என்ன? அவைகளென்ன மறந்தா போய்விட்டன? கற்றவித்தைகள் எப்போதும் மறப்பதில்லை'' என்று சொன்ன சதுர்வேதி ''நீ இப்போது பழைய தொழிலைச் செய்வதைத் தவிர வேறுவழியில்லை'' என்றார்.

''கொள்ளையடிக்கச் சொல்கிறீர்களா? கொலைசெய்யச் சொல்கிறீர்களா?''

''கொள்ளையடிக்கும்போது அவசியம் ஏற்பட்டால் கொலைசெய்யலாம்''

''நான் இரண்டையும் செய்ய விரும்பவில்லை.''

''ஏன்?''

''நான் மனம் மாறிவிட்டேன்''

''எப்போது உன் மனம்மாறியது?''

''இமாலயத்தில் தேவபுத்தரைச் சந்தித்த பின்''

''உன் மனம் மாறியதை அவரிடம் சொன்னாயா?''

''இல்லை''

''மனம் மாறிவிட்ட நிலையில் அவர் சொன்ன காரியத்தை எப்படி நீ ஒப்புக்கொண்டாய்?''

''அவர் முன்பு மறுக்க என்னால் முடியவில்லை''

''என்னிடம் மட்டும் ஏன் மறுக்கிறாய்?''

''நான் மறுப்பது கொள்ளையைத்தான். லட்சியத்தையல்ல.''

''லட்சியம் நிறைவேற கொள்ளையடித்தால்தான் உண்டு''

''வேறு வழி இல்லையா?''

''உன்னை யோசிக்கும்படிச் சொன்னேன். வழி இருந்தால் நீ சொல்லியிருக்க வேண்டும். ஆனால் சொல்லவில்லை. இப்போது கேட்கிறேன். வங்கநாட்டில் கொள்ளையடிக்காமல் உன் தந்தையிடமோ வேறு யாரிடமோ போதுமான செல்வங்களைப் பெற உன்னால் முடியுமா?''

''முடியாது.''

''ஒரு மாத அவகாசம் தருகிறேன். நேர்வழியில் போதுமான செல்வத்தை சம்பாதிக்கவாவது முடியுமா உன்னால்?''

''யோசிக்க வேண்டும்''

''இன்று முழுவதும் யோசி. ஆனால் ஒரு முடிவோடு வா'' என்று சொன்ன சதுர்வேதி ''விஜயா, துறவி உன்னிடம் ஒப்படைத்துள்ள விஷயம் விளையாட்டுத்தனமானதல்ல. நினைத்தால் ஒப்புக்கொள்வதற்கும் விட்டு விடுவதற்கும் இது சிறிய காரியமும் அல்ல. இமயத்தில் இருக்கும் துறவி எங்கோ இருக்கும் உன்னை அழைத்து வலுவில் இந்தக் காரியத்தை ஒப்படைக்கிறார் என்றால் அதற்கு நீ கொடுத்து வைத்திருக்க வேண்டும். காரணமில்லாமல் அவர் உன்னை இதில் ஈடுபடுத்தியிருக்கமாட்டார். இதைக் கவனத்தில் வைத்துக்கொண்டு யோசி'' என்றார் அழுத்தம் திருத்தமான குரலில்.

விஜயனுக்கு அன்றெல்லாம் மனப்போராட்டமாக இருந்தது. துறவியைச் சந்தித்த வேளை தனது கெட்ட

வினைகளையெல்லாம் விட்டுவிடலாம் என்று முடிவு கட்டியிருந்த வேளையில் அவற்றை மீண்டும் தொடர சதுர்வேதி விரும்பியது அவனுக்குக் கசந்தது.

''தேவபுத்தரே, இது என்ன சோதனை? கெட்டவனுக்குத் திருந்தும் வாய்ப்பு வருவது கஷ்டம். ஏதோ உங்களைக் கண்ட மாத்திரத்தில் எனக்கு மனம் மாறியது. நீங்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லையா? நான் தொடர்ந்து கெட்டவனாகத் தான் இருக்க வேண்டுமா? இதை உங்கள் மதம் ஏற்றுக்கொள்கிறதா?'' என்று அவரிடம் மனதால் பேசினான் விஜயன். அப்படியே உறங்கிப் போனான். கனவில் துறவி அவனுக்கு ஏதோ கூறியிருக்கவேண்டும். மறுநாள் காலை அவன் தெளிவாகக் காணப்பட்டான். நேரே சதுர்வேதியிடம் போய் ''நான் கொள்ளைக்குத் தயாராகிவிட்டேன். எங்கே எதைக் கொள்ளையடிக்க வேண்டும்?'' என்று கேட்டான்.

''உன் மாற்றத்திற்கு எது காரணம்?'' என்று கேட்டான் சதுர்வேதி.

''மனத்தெளிவு தான்''

''என்ன தெளிவு அது?''

''பெரிய லட்சியங்கள் நிறைவேறுவதற்கு நமது எண்ணங்களும் தயக்கங்களுமே காரணமாகிவிடக் கூடாது என்பதை உணர்ந்தேன்.

''மிக்க மகிழ்ச்சி'' என்று சொன்ன சதுர்வேதி வரைபடம் ஒன்றை அவனுக்குக் காட்டினார்.

''இந்த வரைபடத்தைப் பார். இதுதான் மகதநாடு. நாம் இப்போது மகதநாட்டின் தெற்கு எல்லையும் வங்க நாட்டு எல்லையும் சந்திக்கும் இடத்தில் இருக்கிறோம். இதோ பார் சுவர்ண நதி. இதன் வடகரையில் நான்கு யோசனை தூரத்தில் இருக்கிறது சுவர்ண கிராமம். இங்குதான் இருக்கிறது மகத நாட்டின் பிரம்மாண்ட தங்க சுரங்கம். இங்கே வெட்டி யெடுக்கப்படும் தங்கம் இதோ இக்கோட்டைப் பகுதியில் சுத்தம் செய்யப்படுகிறது. தங்கம் தனியே பிரிக்கப்படுகிறது. அப்படிப் பிரிக்கப்படும் தங்கக் கட்டிகள் பலத்த பாதுகாப்புடன் மகத

நாட்டுத் தலைநகர் ராஜகிரஹத்திற்கு கொண்டு செல்லப்படுகின்றன. இரண்டிற்கும் இடையே உள்ள தூரம் அதிகம். வழிகளும் கரடுமுரடானவை. இதோ இந்தப் புள்ளி உள்ள இடத்தில் வெட்டவெளி இருக்கிறது. அதைச் சுற்றிலும் பலயோஜனை தூரத்திற்கு மனிதவாசனையே கிடையாது. கொள்ளையடிப்பதற்கு இது ஏதுவான இடம். நீ உனது ஆட்களுடன் சென்று திடீர் தாக்குதலை நடத்தினால் உபயோகமாக இருக்கும். இங்கு இரண்டு பெட்டிகளைக் கவர்ந்தால்கூட நமக்குப்போதுமான தங்கம் கிடைக்கும். என்ன சொல்கிறாய்?'' என்று கேட்டார்.

''மகதநாட்டில் போய் எதற்காக கொள்ளையடிக்க வேண்டும்?'' என்று கேட்டான் விஜயன்.

''நாடு எதுவானால் என்ன? நமக்குத் தேவையான பொன் எங்கிருக்கிறதோ அங்கு கொள்ளையடிப்பது தான் நல்லது. அதோடு மகத நாட்டில் நீ கொள்ளையடிப்பதை யாரும் எதிர்பார்க்க மாட்டார்கள்'' என்றார் சதுர்வேதி.

''எனக்கு இத்திட்டம் சரியாகப்படவில்லை. சுரங்கத்திலிருந்து வெட்டப்படும் தங்கம் சாதாரணமான பாதுகாப்போடு போகாது. ஒரு பெரும் படையே போகும். அதோடு கொள்ளையர்களை ஏமாற்றுவதற்காக எல்லா பெட்டிகளிலும் தங்கத்தை வைக்காமல் சிலவற்றில் தங்கமும் சிலவற்றில் தகரமும் சரளைக் கற்களுமாக வைப்பார்கள். அதையெல்லாம் சரியாகத் தெரிந்துகொண்டு செயல்பட்டால் தான் வெற்றி கிடைக்கும். அதோடு நீங்கள் கூறிய இடத்தில் கொள்ளையடித்து பொன்னை வங்கதேசத்திற்கு கொண்டு வருவது மிகவும் சிரமம். ஆகவே வங்க தேசத்திலேயே கொள்ளையிடுவதுதான் நல்லது''

''அங்கு கொள்ளையடிக்க இன்னும் ஏதாவது இருக்கிறதா?''

''இருக்கிறது. விலைமதிப்பற்ற ஒன்று அரண்மனையில் இருக்கிறது. நானே அதைப் பலமுறை பார்த்திருக்கிறேன்.''

''என்ன அது?''

''கர்ண பத்ர பங்கம்''

''நீ சொல்வது?''

''ஓர் அணிகலன்தான். ஆனால் யாரும் அணிய முடியாது. பார்க்கத்தான் முடியும். அத்தனைப் பெரிதாக இருக்கும். இதில் மாணிக்கம், முத்து, பவழம், நீல ரத்னம், வைரம், பத்மராகம், கோமேதகம், புஷ்பராகம், வைடூரியம், தங்கம், வெள்ளி, யானைத்தந்தம் ஆகியவை சேர்ந்திருக்கும். அபூர்வமான நகை அது.* வங்கதேசத்தின் கௌரவச் சின்னம் அது. அதைக் கொள்ளையடிக்கப் பலர் பலமுறை முயன்று தோற்றதோடு இதுவரை உயிரோடு தப்பிச் சென்றதில்லை. இந்த ஆபரணத்தைக் கொண்டு நாக நாட்டையே வாங்கலாம். நான் என் தந்தைக்கு எதிராக மாறிய பின் அந்த ஆபரணத்திற்கான பாதுகாப்பை பத்து மடங்கு அதிகரித்து விட்டார் வங்கதேசத்து மன்னர். நான் இதுவரை அதைக் கொள்ளையிட முயலாததால் அவர் சற்று நிம்மதியாகவும் அசட்டையாகவும் இருக்கிறார். ஆகவே அந்த நகையைக் கொள்ளையடிக்கலாம் என்பது என் எண்ணம்''

''இந்த விஷயத்தில் என்னைவிட உனக்கு அறிவும் அனுபவமும் அதிகம் என்பதை மறுக்க முடியாது. ஆகவே இது விஷயமாகத் திட்டமிட வேண்டியது உன் பொறுப்பு. அதேசமயம் இக்காரியம் ஒரு மாதத்திற்குள் நிறைவேற வேண்டும். இல்லையென்றால் நீ நாகநாடு செல்ல முடியாது'' என்றார் சதுர்வேதி.

''ஏன்?''

''விஜயா, நாக நாட்டைப் பிடிக்கும் ஆசை பரத கண்டத்தில் உள்ள பலருக்கும் இருக்கிறது. குறிப்பாக தட்சிண பாதத்தில் (தென்னிந்தியா) உள்ள நாடுகள் இதில் மும்முரம் காட்டுகின்றன. இதில் தேவபுத்தர் மட்டும்தான் புத்த பகவானின் ஆணைப்படி அங்கே புத்த மதத்தை வளர்த்து போஷிக்க அரச வம்சத்தை ஸ்தாபிக்க முயல்கிறார். பிற நாடுகள் ஆதிக்க ஆசையால் நாகநாட்டைப் பிடிக்க விரும்புகின்றன.

* புராதன இந்தியா என்னும் 56 பழைய தேசங்கள். பாகம் 2. by.பி.வி. ஜகதீச ஐயர்

எனவே எவ்வளவுக்கெவ்வளவு துரிதமாக செயல்படுகிறாயோ அவ்வளவுக்கவ்வளவு எல்லோருக்குமே நல்லது'' என்று கூறிய சதுர்வேதி, ''உனக்கு சிலரை அறிமுகப்படுத்துகிறேன். அவர்கள் ஒவ்வொருவரும் வித்தியாசமானவர்கள். ஒவ்வொருவரும் தனித்தனி திறமை பெற்றவர்கள். உன் கட்டளைப்படி நடப்பார்கள்'' என்று கூறி ஆசிரமத்தின் பின்புறமாக அழைத்துச் சென்றார். அங்கே வரிசையாகப் பல குடில்கள் இருந்தன. ஒவ்வொரு குடிலுக்கும் விஜயனை அழைத்துச் சென்றார் சதுர்வேதி.

''முதலில் ஒருவனைச் சுட்டிக்காட்டி ''இவர் பெயர் அசுவ நாவிகர். அதாவது நாவாய்கள் மூலம் புரவி வியாபாரம் செய்பவர். கிழைக்கடலில் பல நாடுகளில் வணிகம் செய்பவர். வணிகர் போர்வையில் ஒற்றறியும் வேலையையும் திறம்படச் செய்பவர்'' என்று சொன்னதும் அந்த மனிதர் விஜயனை வணங்கினார்.

''விஜயா, இவன் டெமிட்ரியஸ். கிரேக்க நாட்டைச் சேர்ந்த சிறந்த கடலோடி. பல கடல்களில் பயணம் செய்தவன். கடல்களின் இயல்புகளை அறிந்தவன்''

விஜயன் அவனை வணங்கினான்.

''அடுத்ததாக இதோ அசுவத்தாமர். இவருக்கு வயது அறுபத்தைந்து. கண்பார்வை தெரியாது. ஆனால் அற்புதமான நினைவாற்றல் மிக்கவர். மானஸுக்ரியா என்ற கலையைப் பயின்றவர்''

விஜயன் அவரது கைகளைப் பற்றி வணக்கம் கூறினான்.

அடுத்ததாக அறிமுகப்படுத்திய மனிதனுக்கு ஒரே ஒரு கால் மட்டுமே இருந்தது. அதுவும் உடலின் நடுவே இருந்தது. அப்படியொரு மனிதனை விஜயன் பார்த்ததில்லையாதலால் தற்போது வியப்போடு பார்த்தபோது 'இவன் ஒரு விசித்திரப் பிறவி. பெயர் மோனாகாலன். இவனுக்கு ஒரே ஒரு கால் இருந்தாலும் திறமைகள் அபாரம்'' என்று சொன்ன சதுர்வேதி அடுத்த மனிதனை அறிமுகம் செய்தபோது விஜயன் ஒரு கணம் ஸ்தம்பித்துப் போனான். அந்த மனிதனுக்கு ஒரு கண் மட்டுமே

இருந்தது. அந்தக் கண்ணும் நெற்றியின் நடுவே இருந்தது. தலைமயிர்கள் விறைப்பாகக் குத்திட்டு நின்றது. பேயைப் போலக் காட்சியளித்த அவனைப் பார்த்ததும் ஏதோ கேட்க முற்பட்ட விஜயனைத் தடுத்த சதுர்வேதி ''இவன் பெயர் சிமேரி. இமாலயக் காடுகளில் வாழ்ந்தவன். காடுகளும் விலங்குகளும் இவனுக்கு அத்துப்படி. இறைச்சியை பச்சையாகவே உண்ணக் கூடியவன். பார்ப்பதற்கு பயங்கரமாய் இருந்தாலும் பழகுவதற்கு இனியவன்'' என்று கூறிவிட்டு ''இவர்கள் எல்லாம் உன்னோடு இருந்தால் உனக்குக் கூடுதல் பலம். நீ உடனடியாக வங்க நாட்டிற்குச் செல். அங்கே இருக்கும் உன் தோழர்கள் எழுநூறு பேரைச் சந்தி. இவர்களையும் கூட வைத்துக்கொள். கொள்ளைக்கான திட்டத்தை முறையாகத் தீட்டி வெற்றிகரமாக காரியத்தை முடித்ததும் இந்த ஒற்றைக் கண்ணனின் மூலம் செய்தியை அனுப்பு. அதற்குப் பிறகு நடக்க வேண்டிய காரியங்களை நான் கவனித்துக்கொள்கிறேன்'' என்று கூறி விஜயனையும் அவனுக்கு அறிமுகம் செய்துவைத்த ஐந்து நபர்களையும் அனுப்பிவைத்தார்.

விஜயன் மாறுவேடம் அணிந்துகொண்டு வங்கநாட்டை அடைந்ததும் தன்னுடன் வந்த ஐந்து நபர்களையும் ஐந்து இடங்களுக்கு அனுப்பி வைத்துவிட்டு தலைநகரில் இருந்தச் சந்தைக்குச் சென்று தனது நம்பிக்கைக்குரிய வணிகனைச் சந்தித்துப் பேசியபோது சிறிதும் எதிர்பார்க்காத செய்தி கிடைத்தது அவனுக்கு.

''இளவரசே, உங்கள் தோழர்கள் எழுநூறு பேரையும் மன்னர் பிடித்து அரைமொட்டை அடித்து அலங்கோலமாக்கி வைத்திருக்கிறார். உங்களைப் பிடிக்க வலைவீசப் பட்டிருக்கிறது. நீங்கள் கிடைத்த பின் அனைவரையும் நாடு கடத்த ஏற்பாடு ஆகியிருக்கிறது. வங்கதேசமே வலையாக விரிந்திருக்கிறது. மிகவும் ஜாக்கிரதையாக இருங்கள். என்னைத்தேடி நீங்கள் மீண்டும் வரவேண்டாம். சிறிது சந்தேகம் வந்தாலும் என்னைப் பிடித்துப்போய் விடுவார்கள்'' என்றான் வணிகன்.

விஜயன் தீவிர சிந்தனையில் ஆழ்ந்தான்.

## அத்தியாயம் ஐந்து

# குரங்கு

**வி**ஜயனின் தந்தையும் வங்கதேசத்து மன்னனுமான சிகபாகு சில நாட்களாகவே ரத்த வெறிபிடித்த மிருகம் போல் காணப்பட்டதால் அவனது அரண்மனை கிடுகிடுத்தது. தலைநகரம் ஆட்டம் கண்டது. மக்களோ பீதியில் உறைந்து கிடந்தார்கள். தனது வாழ்க்கையில் ஏதேதோ நடந்த போதெல்லாம் அவன் கவலைப்பட்டதில்லை. வயதான தன் பெற்றோர் உடல்நலம் குன்றி அவதிப்பட்டபோது அவர்களைக் கொன்றுவிடும்படி உத்தரவிட்டபோதும் மனம் கலங்கவில்லை. அரண்மனைச் செல்வங்களையெல்லாம் நாட்டு மக்களுக்குப் பயன்படுத்தாமல் தனது கணக்கற்ற பிள்ளைகளுக்கும் ஆசை நாயகிகளுக்கும் பயன்படுத்தியபோது எதிர்க்க முற்பட்ட மக்களை முளையிலேயே கிள்ளி எறியும் விதமாக அவர்களைக் குடும்பத்தோடு அழித்தபோதும் சலனப்படவில்லை. கங்கையாற்றுக்கு ஈடாக ரத்த ஆறு ஓடினாலும் பரவாயில்லை என்று மக்களை ஈவு இரக்கமின்றி அவன் கொன்றபோது மக்கள் அடங்கிப் போனார்கள். அவனது அடக்குமுறைகளுக்கும் அரக்கத்தனத்திற்கும் அடிபணிந்தார்கள். எதிர்ப்புக் குரல் எழுப்புபவர்களின் குரல்வளைகளை மன்னன் நெறிக்க முற்படவே மக்கள் தங்களுக்குக் குரல் என்ற ஒன்று இருப்பதையே மறந்து போனார்கள். இப்படித் தன் சர்வாதிகாரத்தையும் கொடுங்கோலையும் சிறப்பாக காட்டிய காரணத்தால் மிகவும் சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்தான் சிகபாகு.

இந்த நிலையில் தனக்கு எதிரான குரல் மக்களிடையே செத்துவிட்ட நிலையில் தனது மூத்த மகன் விஜயனிடம் எழுந்தபோது முதலில் வியந்தான் மன்னன். மகனுக்கு பிரம்மாண்டமான அளவில் திருமணம் செய்துவைத்தால் அவனிடம் எதிர்ப்பு உணர்வுகள் அடங்கிவிடும் என்று அவனது

சகாக்கள் கூறியதால் தனது ஆசைநாயகிகளில் ஒருத்தியின் தங்கையான மாயா என்னும் மயக்கும் அழகியை விஜயனுக்கு மணமுடித்து வங்கதேசமே பொங்கும்விதத்தில் மிகப்பிரம் மாண்டமான திருவிழாவாக நடத்தினான். ஆனால் அவனது கணக்குகள் பொய்த்துப்போய் விஜயன் திருமணத்திற்குப் பின்பும் எதிர்ப்புக் குரலைத் தொடர்ந்தது மட்டுமின்றி மக்களுக்கு உதவ முற்பட்டு அரசாங்கப் பண்டகங்களிலும் களஞ்சியங்களிலும் இருந்து பொருட்களை எடுத்து வாரி வழங்கினான். அக்காரியங்களுக்கு மன்னன் தடைவிதித்தபோது விஜயன் பின் தங்கிவிடாமல் அதே காரியங்களைக் கொள்ளைகளாக மாற்றிக் கொண்டான். அரண்மனையில் ஆரம்பித்து அரசாங்கத்திற்குச் சொந்தமான இடங்களிலும் கிடங்குகளிலும் கொள்ளை யடித்தான். குறுக்கே வந்தவர்களை கொலை செய்தான். கொள்ளையடித்தவற்றை மக்களுக்கு வழங்கினான். எதற்குமே கலங்காத சிகபாகுவின் மனம் தன் மகனின் இந்த நடவடிக்கைகளைக் கண்ட மிகவும் கலங்கியது.

சிகபாகு வாரிசு முறைப்படி வங்கதேசத்து மன்னனாக ஆனவனல்ல. அவனுக்கும் நாட்டின் அரியணைக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. நாட்டை ஆண்டு வந்த மன்னன் வாரிசு எதுவுமின்றி மாண்டு போனதாலும் சிங்கத்தைக் கொன்று மக்களைக் காத்த மாவீரன் என்று சிகபாகு போற்றப்பட்டதாலும் அமைச்சர்களும் மக்களுமாகச் சேர்ந்து அவனுக்கு வங்க நாட்டு அரியணையை அளித்தார்கள். வங்கதேசம் பிறதேசங்களைப் போல காடுகளும் மலைகளும் நிறைந்த பூமியல்ல. பெரும் சமவெளிகளும் பயிர் நிலங்களும் கொண்ட செழிப்பான நாடாக அது இருந்தது. கங்கைநதி அந்நாட்டில் வளைந்து வளைந்து ஓடி தென்பகுதியில் பலகிளைகளாகப் பிரிந்து கடலில் கலந்ததால் நல்ல விவசாயத்திற்கான முழுமையான நீர்வளம் கிடைத்து வந்தது. மிகவும் அரிதாக உண்டாகியிருந்த ஹரகிரி, ஹரிகிரி என்ற இரண்டு மலைகளை மிகவும் புனிதமாகக் கருதிய ஆதிகாலத்து வங்கதேசத்து ராஜாக்கள் இருமலைகளையும் சிவவடிவமாகவும் திருமால் வடிவமாகவும் கருதி அதற்கேற்ப ஹரகிரியில் சிவாலயத்தையும் ஹரிகிரியில் விஷ்ணு ஆலயத்தையும் அமைத்து வழிபட்டார்கள். இருமலைகளும்

இயற்கை அரணாக அமைந்துவிட்டதால் அவற்றுக்கு இடைப் பட்ட பகுதியைத் தலைநகராக்கி கோட்டையைக் கட்டி பிரம்மாண்டமான தோற்றத்தை அளித்தார்கள். எழில் கொஞ்சம் அரண்மனைகளையும் பொழில்களையும் உருவாக்கினார்கள்.

இப்படிப்பட்ட மயனே மயங்கும் கோட்டையில் அதிஷ்டவசமாக அரசனாக அமர்ந்த சிகபாகு தொடக்கத்திலிருந்தே ஆட்டம் போட்டபடி இருந்தான். பராரிக்குப் புதையல் கிடைத்த மாதிரி பெரும் பதவி கிடைக்கவே அர்த்தராத்திரியில் குடைபிடித்துச் சென்ற அற்பனைப் போல படாடோபமான வாழ்க்கையை அமைத்துக் கொண்டு இஷ்டப்படி வாழ்ந்தான். திருமணம் செய்து கொண்டு சளைக்காமல் முப்பத்தாறு குழந்தைகளைப் பெற்றான். கணக்கற்ற குழந்தைகளைச் சுமந்த அவனது மனைவி நோய்வாய்ப்பட்டு இறந்தாலும் அதைப் பற்றிக் கவலைப்படாமல் சத்துணவு, பழச்சாறு, காயகல்பம், தாதுபுஷ்டி வஸ்துக்கள் என்று பற்பல வகையறாக்களை உண்டு தன் உடலைக் கட்டுக் குலையாமலும் வீரியத்துடனும் வைத்துக் கொண்டு பல ஆசைநாயகிகளையும் வைத்துக்கொண்டு உல்லாசத்தில் மிதந்தான். அவனது உல்லாசம் மூத்த இரண்டு பிள்ளைகளைத் தவிர இதர பிள்ளைகளுக்கு தொற்றிக் கொண்டதால் அவர்களும் சிற்றின்ப வாழ்க்கையில் உருண்டு புரண்டார்கள். இதற்கு பெருமளவில் பொன்னும் பொருளும் தேவைப்பட்டதால் அரசாங்கப் பணத்தை அதற்கு முழுமையாகச் செலவு செய்து மக்களுக்கு செய்ய வேண்டிய கடமைகளைப் புறக்கணித்தான். அவர்களை அடக்கி ஒடுக்கியும் அவர்களிடம் அடுக்கடுக்கான வரிகளையும் போட்டு தன்னையும் தன் வாரிசுகளையும் சுகபோகங்களில் திளைக்க வைத்தான். அதிகாரிகளையும் அமைச்சர்களையும் அடிமைகளாக்கி வைத்தான்.

இந்த நிலையில் தனது மூத்த மகன் தனக்கு எதிராகக் கிளம்பி தன் அரசாங்கக் களஞ்சியங்களிலேயே கொள்ளையடித்து மக்களுக்கு உதவ முற்பட்டபோது வாழ்க்கையில் முதன் முதலாக கவலைப்பட்டான் சிகபாகு. இப்படியொரு

திருப்பத்தை அவன் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. இரண்டொரு முறை விஜயனை நேரில் அழைத்து அவனது அணுகு முறைகளைக் கண்டித்தான். அவனது செயல்களை நிறுத்தும்படி வற்புறுத்தினான்.

''நீங்கள் மக்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளை முறையாகச் செய்தால் நான் என் துராக்கிருதங்களை விட்டு விடுகிறேன்'' என்றான் விஜயன்.

''விஜயா, இது என்ன பைத்தியக்காரத்தனமான பேச்சு? சொர்க்க வாழ்வு நம்மைத்தேடி வந்திருக்கும்போது அதை முழுவதுமாக அனுபவிப்பதை விட்டு மக்களுக்கு உதவச் சொல்கிறாயே, இந்த மாதிரி சந்தர்ப்பமும் வாழ்வும் எப்பொழுதாவதுதான் கிடைக்கும். இதையா விட்டு விடுவது?''

''தந்தையே, இந்த நாட்டு அரியணைக்கும் நமக்கும் சம்பந்தமும் இல்லை. உரிமையும் இல்லை. ஆனால் அதிஷ்டவசமாக மக்கள் எல்லோரும் உங்களுக்கு அரியணையைத் தந்து சம்பந்தத்தையும் உரிமையையும் உண்டாக்கியிருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு நாம் கடமைப்பட்டவர்கள். நம்மிடம் இருப்பது மக்களின் பணம். அதை அவர்களது வாழ்விற்குத்தான் பயன்படுத்த வேண்டுமே தவிர நமது சுக போகங்களுக்காக அல்ல''

''நீ சொல்வது போல செய்தால் நாம் பிச்சைக்காரர்களாகத் திரிய வேண்டியதுதான்''

''இது வீண் கற்பனை. அண்டை நாடுகளைப் பாருங்கள். அங்கே உள்ள மன்னர்கள் மக்களுக்கு வேண்டியதையெல்லாம் செய்து அவர்களும் நன்றாக இருக்கிறார்கள். தெருக்களில் பிச்சை எடுத்துக் கொண்டிருக்கவில்லை''

''சரி. நீ சொன்னபடியே செய்யலாம். முதலில் நீ உன் கொள்ளைகளை நிறுத்து''

விஜயன் தன் தந்தையை நம்பவில்லையென்றாலும் ஒரு வாய்ப்பு கொடுத்துப் பார்க்கலாம் என்று தனது செயல்களை சற்றே நிறுத்தினான். ஆனால் சிகபாகு தான் சொன்னபடி நடந்து கொள்ளவில்லை. அவனது இதர பிள்ளைகளும் ஆசை

நாயகிகளும் விஜயனின் எண்ணத்தை அங்கீகரிக்க முன் வரவில்லை. சிகபாகுவிற்கேகூட அதே மனநிலைதான் இருந்தது. தனது சுகபோகங்களை விட்டுக் கொடுக்க அவனது மனம் இடம் தரவில்லை. அதோடு தன்னை எதிர்த்த மக்களுக்கு நன்மை செய்ய அவன் தயாராக இல்லை. பழைய நிலையையே தொடர்ந்ததால் விஜயனும் தன் கொள்ளையைத் தொடர்ந்தான். இந்தமுறை விஜயன் சிகபாகுவிற்கு வேண்டப் பட்டவர்களைத் தீர்த்துக்கட்டுவதில் மும்முரமாக இறங்கினான். மக்கள் அவனுக்கு மறைமுகமாக உதவியும் செய்தார்கள். விஜயன் அரியணையைக் கைப்பற்ற முயல்கிறான் என்ற வதந்தியும் எழுந்தது. மக்கள் அவனை வெளிப்படையாக ஆதரிக்கவும் முற்பட்டார்கள். இந்த நிலையில் இனியும் விஜயனை விட்டு வைப்பது ஆபத்தானது என்று கருதிய சிகபாகு அவனைக் கைது செய்யும்படி ரகசிய உத்தரவுகளைப் பிறப்பித்தான். இந்த நிலையில் விஜயனை புத்த பிட்சு ஆனந்தர் கடத்தியிருந்ததால் அவன் பிடிபடவில்லை.

விஜயன் வங்கதேசத்திலேயே இல்லை என்பதை அறிந்தபோது சிகபாகுவிற்கு ஏதேதோ எண்ணங்கள் தோன்றி மருட்டின. தூக்கம் அறவே பறிபோயிற்று. விஜயனின் தோழர்கள் எழுநூறு பேரையும் பிடித்து சித்திரவதை செய்து விசாரித்தான். விஜயன் எங்கிருக்கிறான் என்பதை அவனால் அறிய முடியவில்லை. ஆத்திரமடைந்த மன்னன் விஜயனின் தோழர்களுக்கு அரைமொட்டையடித்து சிறையில் அடைத்தான். பிறகு விஜயன் மனைவி மாயாவை வரச்சொல்லி அவளிடம் விசாரித்தான்.

''தெரியவில்லை மகாராஜா. அவர் என்னிடமும் கூறவில்லை'' என்றாள் மாயா.

''அவன் இல்லை என்று தெரிந்து இத்தனை நாட்களாகியும் எப்படி நீ பேசாமல் இருந்தாய்?''

''வந்துவிடுவார் என்ற நம்பிக்கையில் இருந்தேன் மகாராஜா'' என்றாள்.

''நம்பிக்கொண்டிருப்பதற்கும் ஓர் எல்லை உண்டில்லையா?''

''மகாராஜா, தாங்கள் கோபப்படக் கூடாது.''

''என்ன விஷயம்? எதற்கிந்தப் பீடிகை?''

''அவரைத் தாங்கள் கொன்றிருக்கலாம் என்கிறார்கள்''

''யார் சொல்வது?''

''வதந்தி உலவுகிறது மகாராஜா''

''அப்படியே இருக்கட்டும். உன் கணவனை நான் கொன்றிருப்பேன் என்று கேள்விப்பட்ட நீ என்னிடம் ஏன் விசாரிக்கவில்லை? கணவன் செத்ததே மேல் என்று எண்ணிக் கொண்டாயா?''

''இல்லை மகாராஜா''

''உத்தமப் பெண்கள் இப்படியொரு செய்தியைக் கேள்விப்பட்டிருந்தால் பதறிப்போய் கதறியிருப்பார்கள். என்னிடம் முறையிட்டிருப்பார்கள்.''

''பயத்தால் செய்வதறியாமல் இருந்து விட்டேன் மகாராஜா. மன்னித்து விடுங்கள்.''

''கண் முன்னே நிற்காதே. போய்த் தொலை. விஜயன் உன் கண்ணில்பட்டால் உடனே எனக்குத் தெரிவிக்க வேண்டும். போ'' என்று சீறிவிழுந்தான் சிகபாகு.

அமைச்சர்களையும் அதிகாரிகளையும் உடனடியாக வரவழைத்தான் மன்னன். அவர்களிடம் ''விஜயனைக் கண்டு பிடித்து விட்டீர்களா?'' என்று கேட்டான் கோபத்துடன்.

''தேடிக் கொண்டிருக்கிறோம் மகாராஜா'' என்றார்கள் அனைவரும்.

''எத்தனை நாட்களுக்குத் தேடிக்கொண்டிருப்பீர்கள்? நாட்கள் கணக்கு ஆகுமா? மாதங்கள் வருடங்கள் என்று ஆகுமா? நன்றாக உண்டுவிட்டு உறங்கும் உங்களுக்கு அறிவு வேலை செய்யாதா? மன்னன் நான் ஆணையிட்டு இத்தனை நாட்கள் ஆகியும் இன்னும் தேடிக்கொண்டிருப்பதாகச் சொன்னால் இதற்கு என்ன அர்த்தம்? என் மீதான மரியாதை போய்விட்டதா அல்லது உங்களிடம் இருந்து அறிவு போய்விட்டதா?'' என்று கண்களைப் பயங்கரமாக உருட்டியபடி கேட்டான் சிகபாகு.

அதிகாரிகளுக்கு அவனிடம் பேசவும் பயமாக இருந்தது. பேசாமல் இருக்கவும் பயமாக இருந்தது. திணறினார்கள்.

அதைக்கண்ட மன்னன் ''விஜயனை நான் கொன்று விட்டதாக ஊரில் வதந்தி உலவுகிறதாமே தெரியுமா உங்களுக்கு?'' என்று கம்மிய குரலில் கேட்டான்.

''அப்படியெல்லாம் எந்த வதந்தியும் இல்லை மகாராஜா. அப்பட்டமான பொய்'' என்றார் ஒரு அதிகாரி.

''வதந்தி உலவுகிறது என்று விஜயனின் மனைவி சொல்கிறாள். நீங்கள் இல்லை என்கிறீர்கள். இதில் யார் கூறுவது உண்மை?''

''நாங்கள் கூறுவதுதான் உண்மை.''

''விஜயனின் மனைவி எதற்காகப் பொய்சொல்ல வேண்டும்?''

''கணவனைக் காணாத துயரத்தில் பேசியிருப்பாள்''

''கணவனைப் பற்றிய கவலையே இல்லை அவளுக்கு. கணவன் காணாமல்போய் பல நாட்கள் ஆகியும் புகார் கூட அவள் கொடுக்கவில்லை. நானாக அழைத்துக் கேட்டபோது தான் அவள் இப்படிச் சொன்னாள். அந்தச் செய்தி பொய்யாக இருக்க முடியாது. உண்மையைவிட வதந்தி பயங்கரமானது. வேகமாகப் பரவக்கூடியது. எதிர்பாராத விளைவுகளைத் தரக்கூடியது. எனவே இந்த வதந்தியை முதலில் அழிக்க வேண்டும். விஜயன் என்னைக் கொல்ல முயன்றதாகவும் நான் அவனோடு போரிட்டபோது படுகாயமடைந்து தப்பிவிட்ட தாகவும் மக்களிடம் வதந்தியைப் பரப்புங்கள். மக்களுக்கு உதவமுடியாமல் என்னைத் தடுத்தவன் விஜயன்தான் என்று சொல்லுங்கள் அவனை நம்பிமோசம் போக வேண்டாம் என்று செய்தியைப் பரப்புங்கள். இது அந்த வதந்தியை வீழ்த்திவிடும்.''

''விஜயனைத் தேடுவதை விட்டுவிடலாமா?'' என்று ஒரு அதிகாரி கேட்டதும் கையில் கிடைத்த ஏதோ ஒரு பொருளை எடுத்து மன்னன் அவர்மீது வீசிவிடவே அது அந்த அதிகாரியின் நெற்றியில்பட்டு கிழித்துவிடவே ரத்தம் சொட்டியது.

''முட்டாளே! என்ன கேள்வி கேட்டாய் நீ? அந்தப் பாதகனைத்தேடி என் முன் நிறுத்தியாக வேண்டும். இப்போது அவனைத் தேடும் விஷயத்தை ரகசியமாகச் செய்யுங்கள்'' என்று கூறிய மன்னன் ''போங்கள் எல்லோரும்'' என்று எரிந்து விழுந்தான்.

இதேபோல இரண்டு நாட்கள் கழித்து வேறொரு அதிகாரி எதையோ பேசப்போய் அவரது கையை வெட்டிவிட்டான் சிகபாகு. அவனது ரத்தவெறி அதிகரித்தது.

இரைதேடி கிடைக்காத சிங்கத்தைப்போல் சீறிக் கொண்டிருந்த மன்னனை அவன் மிகவும் விரும்பும் அமைச்சர்களில் ஒருவர் அவனை அணுகி ''காமினியை அனுப்பட்டுமா?'' என்று கேட்டார்.

''பழைய பெருங்காயங்கள் வேண்டாம். புதுத்தேனை அனுப்புங்கள்'' என்றான் மன்னன்.

தன் விதியை நொந்து கொண்ட அமைச்சர் விரைவிலேயே மன்னன் விரும்பிய புதுத்தேனை அவனிடம் அனுப்பி வைத்தார்.

அறையில் நுழைந்த அழகியை பார்வையால் அலசிய சிகபாகு. ''பரவாயில்லை, அமைச்சருக்கு என் ருசி தெரிந்திருக்கிறது. அழகாகவும் இருக்கிறாள். புஷ்டியாகவும் இருக்கிறாள்'' என்று சொல்லிக்கொண்டான்.

வந்து நின்ற பெண்ணிடம் ''பெண்ணே, உன் பெயரென்ன?'' என்று கேட்டான்.

''குரங்கு'' என்றாள் அந்தப்பெண்.

''குரங்கா? இதுவா உன்பெயர்? பேரழகியான உனக்கு யார் இந்தப் பெயரை வைத்தவன்?''

''நான் தான்''

''நீயா? உனக்கேன் இந்த முட்டாள்தனம்?''

''மகாராஜா, என் பெயரில் என்ன இருக்கிறது? என்ன பெயராக இருந்தால் என்ன? இங்கே பயன்தரப் போவது உடல்தானே?''

''வேதாந்தம் பேசுகிறாயா? இதோ பார் பெண்ணே. என்னிடம் வரும் பெண்களின் பெயர்களை அறிய நான் விரும்புகிறேன். யார் என்னை அசத்துகிறார்கள் என்று நான் அசைபோடும் போது பெயர் தெரிந்தால் தானே அதைச் சொல்லி திருப்தியடைய முடியும்? இப்போதைக்கு குரங்கு என்பதே உன் பெயராக இருக்கட்டும். நீயே வைத்துக்கொண்ட வித்தியாசமான பெயர். எப்போதும் ஞாபகத்தில் இருக்கும்'' என்று சொன்ன சிகபாகு ''அழகியே, இன்று நான் உன்னைப் போன்ற புதியமலரை எதற்காக வரச்சொன்னேன் தெரியுமா? உன்னிடம் என் வேதனையைச் சொல்லத்தான். இந்தப் பழைய பெருச்சாளிகளிடம் சொன்னால் காதில் வாங்கிக்கொள்வதே இல்லை'' என்றான்.

''உங்கள் வேதனை என்ன மகாராஜா?''

''ஆகா! நீ இப்படிக் கேட்பதே எனக்கு எத்தனை ஆறுதலாக இருக்கிறது தெரியுமா? அழகியே, என் மகன் விஜயன் என்னை எதிர்க்கிறான். ஏராளமான தொல்லையைக் கொடுக்கிறான். அவனை பிடிக்க முற்பட்டேன். ஆளையே காணவில்லை. எனக்கு உறக்கம் வரவில்லை''

''அவரை எதற்காகத் தேடுகிறீர்கள் மகாராஜா?''

''அவனை அழித்து விடுவதற்காகத்தான்''

''எதற்காக அழிக்க வேண்டும்?''

''அவன் என்னைக் கொல்ல முயல்கிறான். அரியணையைக் கைப்பற்ற முயல்கிறான்''

''அதற்கெல்லாம் இதுவரை அவருக்கு வாய்ப்பே வரவில்லை என்று நீங்கள் நினைக்கிறீர்களா?''

''என்ன சொல்கிறாய் நீ?''

''எனக்குத் தெரிந்தவரை அவரால் உங்களை என்றைக்கோ கொன்றிருக்க முடியும். மக்களின் ஆதரவோடு அரியணையில் அமர்ந்திருக்கவும் முடியும். ஆனால் செய்யவில்லை.''

''உண்மைதான்.''

''ஏன் செய்யவில்லை மகாராஜா?''

''ஏன்?''

''அவரது நோக்கம் அவற்றில் இல்லை என்பது தான். ஆகவே அந்த காரணங்களுக்காக அவரை ஏன் தேடவேண்டும்? அதோடு அவர் காணவில்லை என்றால் நிம்மதியாக இருக்க வேண்டியதுதானே! உறக்கத்தைத் கெடுத்துக்கொண்டு ஏன் வேதனைப்பட வேண்டும்? அவரது நோக்கம் மக்களுக்கு உதவுவது. அதைச் செய்ய அவர் இங்கு வந்துதான் ஆகவேண்டும். வரவில்லை என்றால் அவர் இந்த நாட்டிலேயே இல்லை என்று தான் அர்த்தம்? எங்கே போயிருந்தாலும் வராமல் போகமாட்டார். வரவே முடியாமல் போனாலும் கவலைப்பட வேண்டியதில்லை.

அவளது பதில் உண்மையிலேயே நியாயமானதாகப்பட்டது மன்னனுக்கு. சோற்றுப் பிண்டங்களான அமைச்சர்களும் அதிகாரிகளும் தராத ஒரு பதிலை இந்தப் பெண் தந்து விட்டதாகக் கருதிய அவன் ''உன்னைப் பாராட்டுகிறேன் அழகி. உன் உடலால் என் உடலுக்குத் தரும் சுகத்தைவிட உன் அறிவால் என் மனதிற்குத் தந்த சுகம் இணையற்றது. உனக்கென்ன பரிசு வேண்டும்?'' என்று கேட்டான்.

''ஒன்றும் வேண்டாம்'' என்றாள் அழகி.

''உனக்கு என்ன வேண்டும் என்று எப்போது தோன்றுகிறதோ அப்போது சொல். தட்டாமல் தருகிறேன். அறிவார்ந்த அழகியான உன் உடலைப் பாழாக்க நான் விரும்பவில்லை. போய் வா'' என்று கூறி அவளை அனுப்பிய சிகபாகு பணிப்பெண்களை அழைத்து ''காமினியை வரச்சொல்லுங்கள்'' என்றான்.

காமினி வந்து மஞ்சத்தில் உட்கார்ந்ததுமே காமமலையே வந்து உட்கார்ந்தது போலிருந்தது சிகபாகுவிற்கு. அதோடு காமினி எப்போது வந்தாலும் காரியமே குறியாக இருப்பாளாதலால் அவனுக்கு அதிக வேலை வைக்காத அளவிற்கு குறைவான ஆடைகளையே அணிந்து வருவாள். அரைகுறையான ஆடைகளுடன் அவள் அசையும்போது அகிலமே ஆட்டம் கண்டுவிடுமாதலால் அவள் தற்போதும் மஞ்சத்தில் அமர்ந்து குனிந்தபோது அவளது பருத்த மார்பகங்கள்

புடைத்துக்கொண்டு முன்னே வந்து உருண்டதால் சிகபாகு அவளை வெறியோடு அணைத்துக்கொண்டான். குரங்குப்பெண் சற்று முன்பு அறிவால் ஆனந்தத்தையும் திருப்தியையும் கொடுத்துவிட்டுப் போயிருந்ததால் அதைக் கொண்டாடும் விதத்தில் கூடுதல் வெறியுடன் அவளுடன் இழைந்தான். அவளுக்கும் அவனது வேகம் தேவையாயிருந்ததால் முரடாக மாறினாள். காம உணர்வு கொண்ட பெண் முரடாக மாறினால் காமக்கடல் எப்படிக் கொதிக்கும் என்பதை உணர்ந்திருந்த சிகபாகு அவளுக்கு ஈடுகொடுத்து உழன்றான். காமப் புயல்கள் சுழன்று சுழன்று இணைந்து இரவெல்லாம் அதாஹதம் செய்தன.

ஏறக்குறைய நள்ளிரவு கடந்த நிலையில் காமினியை விடுவித்த சிகபாகு அவளிடம் தங்க முடிப்பொன்றைக் கொடுத்து முதுகில் தட்டி அனுப்பினான். முடிப்பின் கனம் அதிகமாக இருந்ததால் பெரும் மகிழ்ச்சியை அடைந்த காமினி அவனைக் கட்டியணைத்து அழுத்தமான முத்தத்தை அளித்துவிட்டு அறையைவிட்டு வெளியேறியபோது 'வீல்' லென அலறினாள்.

காமினியின் அலறலைக் கேட்டு வெளியே வந்தான் சிகபாகு. அங்கே காமினி மயங்கிக் கிடந்தாள். யாரையும் காணவில்லை.

◈◈◈

## அத்தியாயம் ஆறு

# படபடத்த நெஞ்சம்

மயங்கிக் கிடந்த காமினியின் அருகில் சிகபாகு அளித்த தங்கம் கிடந்தது. சிறிது யோசித்த அவன் பிறகு பணிப்பெண்களை அழைத்து காமினியை அவள் இல்லத்திற்கு அனுப்பிவிட்டு வைத்தியரையும் அனுப்பி வைத்தான்.

மறுநாள் வைத்தியரை அழைத்த சிகபாகு ''இப்போது எப்படியிருக்கிறாள்?'' என வினவினான்.

''பாகதமில்லை மகாராஜா. தேறியிருக்கிறாள். முகத்தில் மட்டும் கொஞ்சம் பயமிருக்கிறது'' என்றார் வைத்தியர்.

''அவள் மயங்கி விழுந்ததற்குக் காரணம்?''

''எதையோ பார்த்து பயந்திருக்கிறாள்.''

''உங்களிடம் ஏதாவது சொன்னாளா?''

''முழுமையாக எதுவும் சொல்லவில்லை. ஏதோ 'ஒற்றை' என்றாள். 'ஐயோ' என்றாள். 'கால்' என்றாள். அலறினாள். வேறெதுவும் சொல்லவில்லை. மறுபடியும் இரண்டாவது முறை கேட்டபோதுகூட இந்த மூன்று சொற்களை மட்டுமே தொடர்பில்லாமல் கூறுகிறாள்''

அருகில் இருந்த அமைச்சரைப் பார்த்து ''பயப்படும் அளவிற்கு அரண்மனையில் என்ன இருக்கிறது?'' என்று கேட்டான்.

''மகாராஜா, அரண்மனையில் சில சமயங்களில் பேய்கள் உலவுவதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். அவற்றில் ஒன்றைக் கண்டு ராணி பயந்திருக்கலாம்'' என்றார் அமைச்சர்.

''இத்தனை நாட்களாக இல்லாத பேய் நேற்று வந்து விட்டதா? நல்ல மண்டையும். போய் குரங்கைக் கூப்பிடுங்கள்'' என்றான் சிகபாகு.

அமைச்சரும் உடனடியாகச் சென்று காவலாளி ஒருவனிடம் சொல்லி ஒரு குரங்கை கயிற்றில் கட்டி அழைத்து வந்து ''மகாராஜா, குரங்கைக் கொண்டு வந்துவிட்டேன்'' என்றார்.

மகாராஜாவைப் பார்த்து குரங்கு உர்ரென்றது. அதைக் கண்ட சிகபாகு ''இதை யார் கேட்டது?'' என்றான் சீற்றத்துடன்.

''தாங்கள் தானே கேட்டீர்கள்?''

''குரங்கிற்கு உள்ள மூளைதான் உமக்கும் இருக்கும் போலிருக்கிறது. நான் கூப்பிட்டது இந்தக் குரங்கை அல்ல. குரங்கு என்னும் பெண்ணை''

அமைச்சருக்கு எதுவும் புரியாததால் குரங்கு போலவே விழித்தார்.

''மகாராஜா, தாங்கள் குறிப்பிடும் பெண் குரங்கு போல் இருப்பாளா?'' என்று கேட்டார்.

''உம்மிடம் பேசிக்கொண்டிருந்தால் எனக்குப் பைத்தியமே பிடித்துவிடும். நீர்போய் நம் அமைச்சர் விஸ்வக்ஷேனனை அனுப்புங்கள்'' என்றான் மன்னன்.

விஸ்வக்ஷேனன் வந்ததும் முதல்நாள் அவர் அழைத்து வந்த பெண்ணைப்பற்றிச் சொல்லி அவளை வரச்சொன்னான். அவள் வந்ததும் காமினியைப் பற்றிச் சொல்லி ''உனக்கு ஏதாவது புரிகிறதா?'' என்று கேட்டான்.

காமினி கூறிய மூன்று வார்த்தைகளை ஒன்று சேர்த்துப் பார்த்த அவள் ''ஒற்றைக் கால் ஐயோ'' என்ற வாக்கியம் வந்தது.

''மஹாராஜா, உங்கள் காமினி ஒற்றைக்காலுடன் இருக்கும் மனிதனையோ விலங்கையோ பார்த்திருக்க வேண்டும். விலங்குக[illegible]னக்குள் வரமுடியாது. வந்தாலும் அவை ஒற்றைக்காலுடன் இருக்க முடியாது. அனேகமாக இது ஒற்றைக்கால் மனிதனாகத்தான் இருக்கவேண்டும். அதைப் பார்த்துத்தான் அவள் பயந்திருக்க வேண்டும்'' என்றாள் குரங்கு.

''ஒற்றைக் கால் மனிதனைப் பார்த்து பயப்பட என்ன இருக்கிறது? ஒரு காலை இழந்த நொண்டிகள் நிறையபேர் இருக்கிறார்களே! நானே பலபேர் காலை வெட்டியிருக்கிறேன்'' என்றான் மன்னன்.

''எதற்கும் காமினியை நான் விசாரித்துப் பார்க்கிறேன் மகாராஜா''

''அவள் வீட்டிற்கு நீ போக வேண்டாம். அவளை இங்கே வரவழைக்கிறேன்'' என்று சொன்ன மன்னன் காமினியை வரவழைக்கச் சொல்லிவிட்டு அரண்மனைக் கூடத்தில் போய் அமர்ந்து கொண்டான்.

காமினி வந்ததும் ''காமினி, நேற்றிரவு நீ பார்த்தது ஒற்றைக் கால் மனிதனா?'' என்று கேட்டான்.

''ஆமாம்'' என்றாள் காமினி.

''ஒரு நொண்டியைப் பார்த்தா பயந்தாய்?''

''அவன் நொண்டியல்ல. அவனுக்கு ஒரே கால்தான் இருந்தது. அதுவும் உடலுக்கு நடுவில் இருந்தது. அதுபோல ஒருவனை நான் பார்த்ததில்லை. என்னைப் பார்த்து பற்களை யெல்லாம் காட்டி பயமுறுத்தினான். ஆகவேதான் நான் பயந்துபோய் அலறினேன்''

''சரி நீ போ''

காமினி போனபின் அங்கிருந்த வைத்தியர் அமைச்சர்கள், குரங்கு ஆகியோரை ஒருமுறைப் பார்த்த சிகபாகு இப்படியொரு ''மனிதன் இருக்க முடியுமா?'' என்று கேட்டான்.

''வெறும் பிரமை மகாராஜா. இது பேய் விவகாரம்தான்'' என்றார் அமைச்சர்.

அமைச்சர்களைப் பொறுத்தவரை நன்றாக உண்டு உறங்கத்தான் தீர்மானித்திருந்தார்களே தவிர அறிவுரை கூறி மன்னனை வழி நடத்த முன்வரவில்லை. அதற்குக் காரணம் மன்னன்தான். அவன் செங்கோல் பிடிக்காமல் சுகமும் சுயநலமும் கலந்த கொடுங்கோலைப் பிடித்திருந்ததாலும், நாட்டு மக்களைப் பற்றிக் கவலைப்படாததாலும் தங்களை அறவே புறக்கணித்துச் சோற்றுப் பிண்டங்களாக கருதியிருந்ததாலும் அமைச்சர்கள், அதிகாரிகள் என ஒருவரும் ஒழுங்காக உழைக்காமல் உழைப்பதுபோல் நடித்து வந்தார்கள். அதோடு அவனிடம் பேசினாலும் சரி பேசாமல் ஒதுங்கினாலும் சரி திட்டுக்களும் தண்டனைகளுமே கிடைத்து வந்தபடியால் நேரம் கிடைக்கும் போதெல்லாம் தாறுமாறான பதில்களைச் சொல்லி குழப்பிவந்தார்கள்.

வைத்தியரிடம் வினவினான் மன்னன்.

''மகாராஜா, விசித்திரமான பிறவிகள் அங்குமிங்குமாய் இருப்பதுண்டு. புராணங்களில் கூட இப்படிப்பட்ட வித்தியாச மான உருவங்கள் இருந்ததாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது'' என்றார் வைத்தியர்.

சிகபாகு குரங்கைத் தவிர எல்லோரையும் அனுப்பிவிட்டு அவளிடம் அபிப்ராயத்தைக் கேட்டான்.

''மகாராஜா, ஒற்றைக் கால் மனிதன் வந்தது உண்மை என்றே வைத்துக் கொள்ளுங்கள். தாங்கள் கவனிக்க வேண்டியது அவன் எப்படி கட்டுக்காவல் மிகுந்த அரண்மனைக்குள் நேரங்கெட்ட நேரத்தில் வந்தான் என்பதும் எதற்காக தங்கள் சயன அறைப் பக்கம் வந்தான் என்பதும் தான். காமினி உங்களுடன் இருப்பது அவனுக்குத் தெரிய நியாயமில்லை. ஆகவே அவளை பயமுறுத்த அவன் வரவில்லை. அவன் நோக்கம் வேறு எதுவாகவோ தான் இருக்கவேண்டும்''

''பெண்ணே, அரண்மனையின் கட்டுக்காவல் என்பது நள்ளிரவு நேரத்தில் கட்டுக்கோப்புடன் இருக்கும் என்று சொல்ல முடியாது. பொதுவாகவே இங்கே இருக்கும் காவல் சப்பையானதுதான். அமைச்சர்கள் யாரும் சரிவர இவர்களை கவனிப்பதில்லை. ஆகவே ஒற்றைக் கால் மனிதன் இங்கே வந்ததில் வியப்படைய வேண்டாம். ஏன் வந்தான் என்பதைப் பற்றித்தான் யோசிக்க வேண்டும்?''

அந்தப் பெண் மௌனமாய் இருந்தாள்.

''என்ன பேசாமல் இருக்கிறாய்?''

''மகாராஜா. என் ஊகங்களைத்தான் என்னால் சொல்ல முடியும். மற்றபடி அவன் வந்ததற்கான காரணத்தை நீங்கள் தான் சொல்ல வேண்டும். ஏனென்றால் இங்குள்ள நிலைமை உங்களுக்குத்தான் தெரியும்''

''ஒரு வேளை என்னைக் கொல்ல வந்திருப்பானோ?''

''இருக்கலாம்''

''அப்படியானால் இவன் விஜயனின் ஆளாக இருப்பானோ?''

''விஜயன் நாட்டில் இல்லாதபோது இவன் எப்படி வருவான்?''

''அப்படியென்றால்''

''மகாராஜா, உங்களை விஜயன் கொல்லமாட்டான் என்று நேற்று சொன்னேன். அதை நீங்கள் நம்பவில்லை என்று வைத்துக் கொண்டாலும் ஒரு விஷயத்தை நீங்கள் மறந்து விடக்கூடாது''

''என்ன அது?''

''உங்களைக் கொல்ல விஜயனைத்தவிர வேறு ஆளே கிடையாது என்று நினைக்கிறீர்களா? உங்களுக்கு எதிரி விஜயன் மட்டுமல்ல. பலரும் இருக்கிறார்கள். மக்களில் பெரும் பாலானவர்கள் உங்களுக்கு விரோதிகள்தான். அமைச்சர்கள் அதிகாரிகள் ஆகியோர்களில் உங்களைப் பிடிக்காதவர்கள் இருக்கலாம். இவர்களில் யாராவது உங்களைக் கொல்ல விரும்பலாம் இல்லையா?''

''அந்தத் துணிச்சல் விஜயனைத்தவிர வேறு யாருக்கும் கிடையாது''

''துணிச்சல் இல்லாமல் இருக்கலாம். அதேசமயம் கொலை செய்வதற்கு துணிச்சல் தேவையில்லை. வஞ்சகம் இருந்தால் போதும். சமையல்காரன்கூட உணவில் விஷம் வைத்துக் கொல்ல முடியும்''

''உன்பெயரென்ன பெண்ணே?''

''பத்மினி''

'பத்மினி, இப்போது எனக்குக் குழப்பமாக இருக்கிறது. பிறகு உன்னை அழைக்கிறேன். வருவாயல்லவா?''

''மன்னிக்க வேண்டும் மகாராஜா. நாங்கள் குடும்பத்துடன் கோசல நாட்டிற்குச் செல்லப் போகிறோம். இன்று இரவு புறப்படுகிறோம்''

''எதற்காக கோசலம் போகிறீர்கள்?'

''என் பெற்றோர் அந்நாட்டில் குடியேற விரும்புகிறார்கள்.''

''எதற்கு?''

''ஏதோ குடும்ப உறவுதான்''

''பத்மினி, நீ கோசலத்திற்குப் போகக்கூடாது.''

''எனக்கு என் பெற்றோர்களைத் தவிர உயர்ந்தவர்கள் யாரும் கிடையாது மகாராஜா''

''இருக்கட்டுமே. அதனால் என்ன? அவர்களை யார் தடுக்கிறார்கள்? அவர்கள் போகட்டும். நீ இங்கேயே இரு.''

''பெற்றோர்களை விட்டுவிட்டு நானெப்படி இங்கே தனியாக இருக்கமுடியும்?''

''உனக்குத் தேவையான வசதிகளை நான் செய்து கொடுக்கிறேன். நீ நிம்மதியாக இருக்கலாம்''

''மன்னிக்க வேண்டும் மகாராஜா. பெற்றோர்களை விட்டு என்னால் இருக்க முடியாது.''

''உன் பெற்றோர்களிடம் நானே பேசி அவர்களை இங்கேயே இருக்கச் செய்துவிடுகிறேன்''

பத்மினி சற்றே யோசித்துவிட்டு ''நானே பேசிப் பார்க்கிறேன் மகாராஜா. ஆனால் ஒரே ஒரு வேண்டுகோள்'' என்றாள்.

''சொல்''

''எனக்குத் தெரிந்தவற்றை உங்களுக்குக் கூற எப்போது வேண்டுமானாலும் வருகிறேன். ஆனால் தங்கள் கை என்மீது தவறியும் படக்கூடாது''

''உன் உடலைப் பார்ப்பதாக இருந்தால் நேற்றே உன்னைக் கசக்கி எறிந்திருப்பேன். ஆனால் நேற்று உன்னைத் திருப்பி அனுப்பி விட்டேனே அதிலிருந்து நீ என்ன புரிந்து கொண்டாய்? என் அறைக்குள் வந்த எந்த பெண்ணையும் நான் இச்சிக்காமல் விட்டதில்லை. நீ மட்டுமே விதிவிலக்கு. நீ அந்தக் கவலையை விடு. சத்தியம் வேண்டுமானாலும் செய்கிறேன்''

''மகிழ்ச்சி மகாராஜா. போய் வருகிறேன்''

★★★

பத்மினி அரண்மனைக்கு வந்துபோனதும் மன்னன் அவளிடம் ஆலோசனை கேட்டதும் அமைச்சர்களுக்கும் அதிகாரிகளுக்கும் பொறாமையை உண்டாக்கியது. தங்கள் அளவில் யாரும் மன்னனுக்கு உருப்படியான யோசனை எதுவும் கூறுவதில்லை என்பதை அவர்கள் உணர்ந்திருந்தாலும் அதற்காக பத்மினியை மன்னனின் ஆலோசகராக அங்கீகரிக்கத் தயாராக இல்லை. பெண்பித்தனான மன்னன் பத்மினியுடன்

ஆலோசனை என்று துவங்கினாலும் அந்த உறவு போகப் போக எப்படி வேண்டுமானாலும் மாறக் கூடும் என்பதாலும் அந்தப் பெண் தன் உடலைக் காட்டி மன்னனைத் தன் இஷ்டம் போல் வளைக்க நேர்ந்தால் தங்கள் பதவிக்கு ஆபத்து வரக்கூடும் என்று கருதியதாலும் அமைச்சர்கள் எல்லோரும் கூடி பத்மினியை மன்னனிடமிருந்து விலக்க வேண்டும் என்றுத் தீர்மானித் தார்கள். இது விஷயமாக மன்னனிடம் பிரஸ்தாபித்தால் ஒரு பயனும் இருக்காது என்று கருதிய அவர்கள் பத்மினியை வரவழைத்து பயமுறுத்தி அனுப்புவதுதான் சரி என்று தீர்மானித்து அவளுக்கு ஆள் அனுப்பினார்கள். அவளோ மன்னர் அழைத்தால் மட்டுமே தன்னால் வரமுடியும் என்று கறாராகக் கூறிவிட்டதால் அவளது தைரியத்தையும் ஆணவத்தையும் கண்டு வியப்பும் கோபமும் கொண்டார்கள். பிறகு அவள் இல்லத்திற்கே சென்று மிரட்டுவது என்று முடிவு செய்து சுமார் ஐம்பது பேர் புறப்பட்டுச் சென்றார்கள்.

அவளோ அவர்களது மிரட்டலுக்கு மசியவில்லை. ''மன்னருக்கு ஆலோசனை கூறும் ஆசை எனக்குக் கிடையாது. நானாகப்போய் அவருக்கு எந்த ஆலோசனையும் கூறவில்லை. அவராக அழைத்தார். அப்போதுகூட தற்செயலாக நான் சில கருத்துக்களைச் சொன்னேன். அதையொட்டி அவர் மீண்டும் என்னை அழைத்தார். அவ்வளவுதான். நீங்கள் எதுவானாலும் மன்னரிடம் போய்ச் சொல்லுங்கள். அவர் வேண்டாம் என்று சொல்லிவிட்டால் நான் ஏன் போகப் போகிறேன்?'' என்று சொன்னாள்.

''இதோ பார் பெண்ணே, மகாராஜாவைப் பற்றி உனக்கு முழுமையாகத் தெரியாது. அவன் பெண்பித்தன். சுயநலவாதி. தனக்கு வேண்டும்போது உபசரிப்பான். வேண்டாதபோது வெட்டிப்போடவும் தயங்கமாட்டான். நன்றிகெட்ட அவனை நம்பி மோசம் போய்விடாதே'' என்றார்கள் அமைச்சர்கள்.

''மன்னரைப்பற்றி இவ்வளவு மோசமாகச் சொல்கிறீர்களே - நீங்களெல்லாம் மட்டும் எதற்காக அவரிடம் இருக்கிறீர்கள்? உங்களுக்கு அவர் மோசம் செய்யமாட்டாரா?'' என்று கேட்டாள் பத்மினி.

''மகாராஜாவிடம் ஏதோ சில அற்ப ஆலோசனைகளைக் கூறிவிட்டதால் எங்களையே கேள்வி கேட்கும் தகுதி வந்து விட்டதாக நினைக்கிறாயா நீ? இதோ பார். நாங்கள் சொல்வதைக்கேட்டு நீயாக மன்னனை விட்டு விலகிவிடு. இல்லையென்றால் பயங்கர விளைவுகள் ஏற்படும்'' என்று ஒட்டுமொத்தமாக மிரட்டினார்கள் அமைச்சர்கள்.

''உண்மைதான். பயங்கர விளைவுகள்தான் ஏற்படும்'' - என்று திடீரென ஒரு குரல் கேட்கவே அமைச்சர்கள் திரும்பினார்கள்.

அங்கே சிகபாகு நின்றிருந்தான். அவன் பின்புறம் நூற்றுக்கும் மேற்பட்ட வீரர்கள் நின்றிருந்தார்கள்.

அமைச்சர்களுக்கு முகங்கள் வெளுத்தன. என்ன இப்படி ஆகிவிட்டது என்பது போல ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

''மகாராஜா, நாங்கள் இங்கே வந்தது...'' என்று ஏதோ பேச ஆரம்பித்தார் ஓர் அமைச்சர்.

''எல்லாம் எனக்குத் தெரியும். நானே கேட்டுக்கொண்டு தான் இருந்தேன். இனி பயங்கர விளைவுகள் ஏற்பட வேண்டியதுதான் பாக்கி'' என்று கூறிய மன்னன் தன் பின்னால் இருந்த வீரர்களைப் பார்த்து ''இந்தப் பெருச்சாளிகளை யெல்லாம் கைது செய்து கொண்டு போய் சிறையில் தள்ளி உங்கள் கைகள் நோகும்படி அடித்து நொறுக்குங்கள்'' என்றான்.

வீரர்களோ அந்த நிமிடத்திலிருந்தே அமைச்சர்களை அடித்தபடியே சிறைச்சாலைக்குக் கொண்டு போனார்கள். அமைச்சர்கள் போட்ட கூச்சல் ஒரே ரசாபாசமாய் இருந்தது.

பத்மினியை அரண்மனைக்கு அழைத்துச் சென்ற வங்கதேசத்து மன்னன் தனது செயல் குறித்துச் சிறிதும் கவலைப்படவில்லை. அரண்மனைக்குச் சென்றதும் ''பத்மினி, இந்த நாய்களுக்கு உருப்படியாக எதைச் செய்யவும் தெரியாது. உருப்படியாக யாராவது செய்தால் அதை ஒப்புக் கொள்ளவும் தெரியாது. மரமண்டைகள். சிறையிலேயே அவர்களுக்குச்

சமாதி கட்டுகிறேன். அப்போதுான் இந்தப் படித்த முட்டாள்களுக்கு நான் யார் என்பது புரியும்'' என்று கர்ஜித்தான்.

பத்மினி எதுவும் பேசவில்லை.

அதைக்கண்ட மன்னன் ''பத்மினி, நான் செய்தது நியாயம் தானே?'' என்று கேட்டான்.

''மகாராஜா, நீங்கள் கட்டளையிட்டு நடந்துவிட்ட காரியத்திற்கு நான் நியாயம் சொல்வது சரியில்லை'' என்றாள்.

''அநியாயமாக இருந்தாலும் பரவாயில்லை என்றைக்கோ செய்ய வேண்டிய காரியத்தை இன்றாவது செய்தேனே! அதற்கு வாய்ப்பளித்த உனக்கு நன்றி'' என்று சொன்ன சிகபாகு ''பத்மினி, நீ எனக்குள்ள அபாயம் பற்றிக் குறிப்பிட்டாய். விஜயன் மட்டுமின்றி யார்மூலமும் அபாயம் வரலாம் என்று கூறினாய். நேற்று வந்த ஒற்றைக்கால் மனிதன் என்னைக் கொல்லவந்த கொலைகாரனாகவும் இருக்கலாம் என்றாய். இதிலிருந்து இந்த அரண்மனையின் காவலை அதிகரிக்க வேண்டும் என்று நினைக்கிறேன். ஒரு படைப் பிரிவையே கொண்டு வந்து அரண்மனையைச் சுற்றி நிற்க வைத்துவிடலாம்'' என்றான்.

''அந்த அளவிற்குப் போக வேண்டாம் மகாராஜா. அரண்மனைக் காவலை அதிகப்படுத்துங்கள். அது வெளியில் தெரியவேண்டாம். பார்ப்பதற்கு காவலற்ற அரண்மனையைப் போலவே இருக்கட்டும். இன்றைக்கும் வழக்கம்போல உங்கள் அறையில் காமினியோடு இருங்கள். நேற்று வந்தவன் கொலைகாரனாக இருந்தால் மீண்டும் வருவான். அவனைப் பிடிக்க இந்த வலைதான் ஏற்றது. எல்லாருமே ஒன்றும் நடக்காததுபோல் பதட்டமில்லாமல் இருங்கள்'' என்றாள் பத்மினி.

சிகபாகுவும் அவள் கூறியபடியே நடந்து கொண்டான். அரண்மனைக் காவலர்கள் மறைவிடங்களில் இருந்து கொண்டு அரண்மனையை அணுஅணுவாகக் கண்காணித்தார்கள். கொலைகாரன் வந்தால் அவன் நிச்சயமாக உயிரோடு போக முடியாது என்பதால் பெரும் நிம்மதிக்கு ஆளான சிகபாகு காமினியைக் கசக்கிப்பிழிந்தான். அறைக்கு வரும்போது சற்றே

பயந்துகிடந்த காமினி மன்னனின் காமக்கடை பலமாகத் திறந்ததும் அச்சத்தை மறந்து காமத்தில் முழுகினாள்.

நடுநிசி நேரம் நெருங்கியது. அரண்மனை வட்டாரமே அமைதியாக இருந்த நிலையில் இரண்டு கோட்டான்கள். திடீரென சத்தமிட்டு பறந்தோடின. அதையடுத்து 'டக் டக்' கென்ற ஒலி எழுந்தது. நிசப்தமான இரவில் எழுந்த அந்த ஒலி துல்லியமாகக் கேட்டது. அரண்மனைப் பகுதியிலேயே அந்த ஒலி கேட்டதால் காவலர்கள் சுறுசுறுப்பானார்கள்.

''காமினி, உனக்கு கேட்கிறதா சத்தம்?''- என்று காமத்தை உதறியபடி கேட்டான் சிகபாகு.

''ஆமாம். என்றாள் காமினி நடுங்கும் குரலில்.

சிகபாகுவின் நெஞ்சமும் படபடத்தது.

◈◈◈

## அத்தியாயம் ஏழு

# அதிசய முதியவர்

தான் செய்திருந்த பலத்த அரண்மனைக் காவலையும் மீறி நள்ளிரவு நேரத்தில் கொலைகாரன் வருவதை 'தட்தட்' என்ற துல்லியமான ஒலியின் மூலம் உணர்ந்தபோது மகா கொலைகாரனும் கொடூரமானவனுமான சிகபாகு சற்று அச்சப்படவே செய்தான். சாவு தானாக வருவதுண்டு. அது இயற்கை. சாவைத்தேடி சிலர் செல்வதுண்டு. அது செயற்கை. ஆனால் இரண்டுமில்லாமல் தன்னைத்தேடி இதுபோன்ற மர்ம கொலைகாரனின் மூலம் சாவு வருவதை உணரும்போது எப்பேர் பட்டவனுக்கும் சற்று திகில் வரத்தான் செய்கிறது. கொலைகாரன் தன்னை நெருங்க முடியாது என்றும் தன்னை நெருங்குவதற்கு முன் காவலர்கள் வளைத்து விடுவார்கள் என்றும் அவனது மனம் ஆறுதலைச் சொன்னாலும் அந்த ஆறுதலை மீறிய ஏதோ ஒரு அச்சம் அவனை வாட்டவே செய்தது. எனவே தனது உடைவாளை எதற்கும் தயாராக எடுத்து வைத்துக்கொண்டான்.

ஆனால் அந்த 'தட்தட்' என்ற ஒலி அரண்மனையை நோக்கி வருவதுபோல் ஆரம்பத்தில் தோன்றினாலும் திடீரென அவ்வொலி நின்றுவிட்டதால் சிகபாகு மட்டுமின்றி அரண்மனைக் காவலர்களும் குழம்பினார்கள். உடைவாளுடன் அறையைவிட்டு வெளியே வந்த சிகபாகு ''யாரங்கே! சத்தம் எங்கே போயிற்று? கொலைகாரன் எங்கே போனான்? தேடுங்கள்'' என்று உரக்கச் சத்தமிட்டதும் காவலர்கள் மறைவிடங்களை விட்டு வெளியேறி அரண்மனைப் பகுதியை சல்லடைபோட்டுத் தேடலானார்கள். நீண்ட நேரம் தேடியும் யாரும் கிடைக்கவில்லை. அதேசமயம் சிகபாகுவின் மகன்களில் ஒருவனான குணாளன் எதையோ கண்டு மயங்கி விழுந்து விட்டதாகச் செய்தி வரவே மன்னன் குணாளனின் வீட்டிற்குக் காவலர்களுடன் ஓடினான்.

தன் இல்லத்தில் தனித்து வாழ்ந்து வந்த குணாளன் மயங்கிக் கிடந்ததைக் கண்ட சிகபாகு மயக்கத்தைத் தெளியவைத்து வைத்தியரின் மூலம் நாடியைப் பரிசோதிக்கச் செய்தான். அவரும் விரிவாகப் பரிசோதனை செய்துவிட்டு உடல்நிலை நன்றாக இருப்பதாகக் கூறினார்.

சிகபாகு தன் மகனிடம் என்ன நடந்தது என்று வினவியபோது பீதி நிறைந்த குரலில் சொன்னான் குணாளன்.

''தந்தையே, நேற்று நள்ளிரவு நான் தூங்கிக் கொண்டிருந்தபோது கதவு தட்டப்படும் சத்தம் கேட்கவே போய்த் திறந்தேன். வெளியே ஒரு பயங்கர உருவம் நின்று கொண்டிருந்தது. பேய் தானோ என்று பயந்து நடுங்கினேன். ஆனால் பேயைவிட பயங்கரமான மனிதன் அவன். தலைமயிர்கள் எல்லாம் கம்பிகளைப் போல் நீட்டிக் கொண்டிருந்தன. அவனுக்கு ஒரு கண் தான் இருந்தது. அதுவும் நெற்றியின் நடுவில் இருந்தது. ''யார் நீ? என்ன வேண்டும்'' என்று கேட்டேன். அவனோ பதில் சொல்லவில்லை. தன் கையை முன்னே நீட்டி என் முகத்தில் வைத்து அழுத்தினான். நான் அலறிக்கொண்டே விழுந்தேன். மயக்கமடைந்து விட்டேன். பிறகு நடந்தது எதுவும் தெரியாது''

சிகபாகு வைத்தியரைப் பார்த்தான். அவர் ஏதோ கூற முற்பட்டபோது அதைக் கேட்க விரும்பாமல் குணாளனின் இல்லத்திற்கு வீரர்களைப் பாதுகாப்பிற்கு நிறுத்திவிட்டு அரண்மனைக்குத் திரும்பினான். அங்கு போனபின் தனது அனைத்து மகன்கள், மகள்கள், ஆசை நாயகிகள் ஆகியோரது இல்லங்களுக்கு போதுமான காவல் வீரர்களை அனுப்பிவிட்டு பத்மினியை அழைத்தான்.

''இப்போது என்ன சொல்கிறாய் பத்மினி?'' என்று கேட்டான்.

''எதுவும் சொல்வதாக இல்லை மகாராஜா''

''நான் சொல்கிறேன். இந்த ஒற்றைக் காலன், ஒற்றைக் கண்ணன் ஆகியோருக்குப் பின்னால் யாரோ இருந்துகொண்டு இயக்குகிறான். அவன் விஜயனாக இருக்கலாம் என்று சந்தேகிக்கிறேன்''

''அப்படியே இருந்தாலும் அவனது நோக்கம் என்ன என்பது தெளிவாகப் புரியவில்லை மகாராஜா. உங்களைக் கொல்லும் முயற்சியாக இருக்கும் என்று தான் நான் நினைத்தேன். அது உண்மையாக இருந்தால் அடுத்தடுத்த முயற்சிகள் தங்களைச் சுற்றியே இருக்கவேண்டும். ஆனால் ஒற்றைக் கண்ணன் சம்பந்தமே இல்லாமல் உங்கள் மகன் குணாளன் இல்லத்துக்குப் போயிருக்கிறான். குணாளனைக் கொல்லவுமில்லை. வெறும் பயமுறுத்தலைச் செய்துவிட்டுப் போயிருக்கிறான். தாங்கள் சொல்வதுபோல் இது விஜயனின் வேலையாக இருந்தால் அர்த்தமற்றதாக இருக்கிறது. பயமுறுத்துவதற்காக விஜயன் இப்படிப்பட்ட ஆட்களை அனுப்புவான் என்று என்னால் நம்ப முடியவில்லை. பயமுறுத்துவதுதான் நோக்கம் என்றாலும் யாராவது ஒருவரைக் குறி வைத்துத்தான் செய்வார்களே தவிர இப்படிச் சம்பந்தமில்லாமல் யார் யாரையோ பயமுறுத்த மாட்டார்கள். இதனால் ஒரு லாபமும் இல்லை''

''சரியாகத்தான் சொல்கிறாய் பத்மினி. என் மகன்கள் மகள்கள் என்று எல்லோரது இருப்பிடங்களிலும் காவலைப் பலப்படுத்தி விட்டேன். இனி எவனும் வந்து பயமுறுத்தி விட்டுத் தப்பமுடியாது.

''மகாராஜா, மர்மனிதனின் நோக்கம் என்னவென்று தெளிவாகத் தெரியாத வரை இந்த ஏற்பாடுகளால் எந்த பயனும் இருக்காது. இதுபோன்ற மனிதர்கள் எங்கே தோன்றி என்ன செய்வார்கள் என்பதை அனுமானிக்க முடியாதபோது தங்களுக்கோ தங்களுக்கு வேண்டியவர்களுக்கோ ஆபத்து நீங்கி விட்டதாக எண்ணிவிட முடியாது. இந்த விஷயத்தில் மக்களின் ஒத்துழைப்பு இருந்தால் மர்ம மனிதர்களையும் அவர்களது நோக்கங்களையும் காணவும் அறியவும் முடியும். ஆனால் துரதிஷ்டவசமாக மக்கள் உங்கள் விரோதிகளாக இருக்கிறார்கள். பயம் காரணமாக உங்களுக்கு அடங்கி வாழ்கிறார்களே தவிர உங்கள் மீது அவர்களுக்கு அன்பு என்பது அறவே இல்லை. மரியாதையும் உள்ளத்தில் இல்லை. தலைநகரிலேயே பலர் பிச்சைக்காரர்களாகத் திரிகிறார்கள். நாளெல்லாம் பிச்சையெடுத்து அதை பங்கிட்டுப் பாதுகாத்தும் அதற்காக ஒருவரையொருவர் அடித்துக்கொண்டும் அலைகிற காட்சிகளை நான் கண்டேன். நீங்களும் பார்த்திருப்பீர்கள். இதெல்லாம் நல்லதற்கில்லை மகாராஜா.''

''அதனால்? பிச்சைக்காரர்களை யெல்லாம் வரச்சொல்லி சோறிடச் சொல்கிறாயா?''

''அதுவல்ல அர்த்தம். பிச்சைக்காரர்கள் நாட்டின் தரித்திரத்தின் அடையாளம். ஆகவே பிச்சையெடுப்பது அடியோடு மறையும் வகையில் நீங்கள் உங்கள் அரசாங்கத்தின் மூலம் உதவவேண்டும். அவர்களை உங்கள் மக்களாக மாற்றிக் கொண்டால் அவர்கள் உங்களைக் காப்பாற்றுவார்கள்''

''பத்மினி, ஒரு வேளை நீ விஜயனின் கையாளோ?''

''ஏன் இப்படிக் கேட்கிறீர்கள்?''

''நீ சொன்னதைத்தான் விஜயனும் சொன்னான்''

''உண்மையை யாராக இருந்தாலும் ஒரே மாதிரித்தான் கூறமுடியும் மகாராஜா, என்னை விஜயனின் கையாளாக நீங்கள் எண்ணினால் எனக்கு விடை கொடுங்கள். நான் கோசலத்திற்குப் போகிறேன். என் பெற்றோர்கள் இன்னமும் என்னை வற்புறுத்திக்கொண்டு தான் இருக்கிறார்கள்''

''உன்னை நம்புகிறேன் பத்மினி, கோபப்பட்டுவிடாதே, நீ சொன்ன வழிகள் உடனடியாக ஒரு பயனையும் தராது. பல நாட்களாகும்''

''மக்கள் உங்களை நம்பவேண்டும். நம்பிவிட்டால் போதும். ஒரே நாளில் உங்கள் அன்பு வளையத்திற்குள் வந்து விடுவார்கள். அவர்கள் உங்கள் பக்கத்திற்கு வந்து விட்டால் அமைச்சர்களும் அதிகாரிகளும்கூட வழிக்கு வந்து விடுவார்கள். மக்கள் சக்தி மகத்தானது. அதிலும் அன்பின் சக்தி பிரம்மாண்டமானது''

''நல்லது பத்மினி. ஓரிரு நாட்களில் யோசித்துவிட்டு உன்னை அழைக்கிறேன். இப்போதைக்கு நன்றி. போய் வா''

வங்கதேச மன்னனுக்கு ஆதியிலிருந்தே மக்களுக்கு உதவுவதென்பது பிடிக்காத காரியமாகவே இருந்தது. அதனால் தான் ஆரம்பத்தில் அமைச்சர்கள் வற்புறுத்திச் சொன்ன போதும் சரி இளவரசன் விஜயன் அறிவுறுத்திய போதும் சரி. அதை ஏற்காமல் மக்களை எதிர்த்துக் கொண்டு ஆட்சி நடத்தினான். தற்போது பத்மினியும் அதே ரீதியில் ஆலோசனை கூறியபோது உள்ளுக்குள் அவனுக்கு எரிச்சலாக இருந்தது. இவர்களுக் கெல்லாம் வேறு வேலை இல்லையா என்று நினைத்தான் அவன். தலைநகரில் மக்கள் பிச்சைக் காரர்களாகத் திரிவதுபற்றி அவனுக்கு கவலையோ வேதனையோ வரவில்லை. மாறாக அவர்களது பிச்சையை அழிக்க வழிசொன்ன பத்மினி மீதுதான் சந்தேகம் உண்டாயிற்று. அவளை ரகசியமாக கண்காணிக்க இரண்டு பேரை நியமித்தான். அவர்கள் இரவு பகலாக கண்காணித்துவிட்டு பத்மினி தன் வீட்டைவிட்டு எங்கும் போவதில்லை என்றும் அவளைச் சந்திக்க யாரும் வருவதில்லை என்றும் அவளிடம் சந்தேகப்படுகிற மாதிரி எதுவும் இல்லை என்றும் அவளது வீட்டில் பெற்றோர்களைத் தவிர வேறு யாரும் இல்லை என்றும் கூறினார்கள். அதேசமயம் ஒற்றைக் கண்ணன் வந்துவிட்டுப் போய் நாட்கள் நான்கு ஆகியும் மர்ம மனிதர்கள் யாரும் வரவில்லையாதலால் ஓரளவிற்கு நிம்மதியடைந்தான். சிகபாகு.

ஒருநாள் மாலை அரண்மனைக்கு அருகில் பிச்சைக்காரர்கள் தங்கும் போதிமரத்தின் கீழ் கூட்டமாக இருந்ததைக் கண்டதும் விவரம் என்ன என்பதை அறிந்து வரும்படி காவலன் ஒருவனிடம் கூறினான். சிகபாகு. போதிமரத்தின் கீழே ஒரு முதியவர் அமர்ந்திருந்தார். அவருக்கு கண்பார்வை இல்லை என்பது அவன் விழித்த விழிப்பிலிருந்தே தெரிந்தது. அவரைச் சுற்றிப் பலர் நின்றிருந்தார்கள். ஒருவர் பாடல் வரி ஒன்றை அவர் காதுபடப் பாடினார். ஒருவர் நீண்ட வாக்கியம் ஒன்றைக் கூறினார். மூன்றாவது நபர் கணக்கு ஒன்றைச் சொன்னார். நாலாவது நபர் அவர் முதுகில் மலர் ஒன்றினால் தடவினார். ஐந்தாமவர் நதியின் பெயர் ஒன்றைச் சொன்னார். ஆறாவது நபர் குயில் போலக் கூவினார். ஏழாவது மனிதர் சுலோகம் ஒன்றைச் சொன்னார். எட்டாவது ஆள் எண் ஒன்றைக் குறிப்பிட்டார். ஒன்பதாவது நபர் கால் வலிப்பதாகச் சொன்னார். பத்தாவது ஆள் தான் கண்ட படக்காட்சி பற்றி தெரிவித்தார். இதே பத்து பேர் மீண்டும் மீண்டும் இவ்வாறே பத்துமுறை செய்தார்கள். வெறும் சிலையைப் போல இருந்து எல்லாவற்றையும் கேட்ட அந்தப் பார்வையற்ற முதியவர் பத்துபேர்களின் விவரங்களையும் ஒரே சமயத்தில் சிறிதும் பிசகின்றி சொன்னார்.

பாடல்களைப் பாடியவரின் பாடல் வரிகள்-

வாக்கியங்களைச் சொன்னவரது வாக்கியங்கள்-

மூன்றாவது நபர் அடுத்தடுத்து கூறிய கணக்குகள்-

தனது முதுகில் எத்தனை முறை மலர்களால் தடவப்பட்டன என்ற கணக்கு-

எத்தனை நதிகளின் பெயர்கள் கூறப்பட்டன-

குயில் போலவும் மயில் போலவும் எப்படியெல்லாம் கூவப்பட்டன-

என்னென்ன சுலோகங்கள் சொல்லப்பட்டன-

என்னென்ன எண்கள் அடுத்தடுத்து கூறப்பட்டன-

உடலில் எங்கெங்கே வலியிருப்பதாகச் சொல்லப்பட்டன-

எந்தெந்த படக்காட்சிகளைக் கண்டதாக பத்தாவது நபர் குறிப்பிட்டார்-

ஆகிய நூறு விஷயங்களை பலர் கூற பார்வையற்ற அந்த முதியவர் அவற்றை உள்வாங்கிக் கொண்டு சிறிதும் பிசகாமல் எடுத்துக் கூறியதும் கேள்வி கேட்டவர்களும் வேடிக்கை பார்த்தவர்களும் வியந்ததோடு மட்டுமின்றி அவருக்கு முன்னால் வெள்ளிக் காசுகளையும் உணவுப் பொருட்களையும் வைத்து வணங்கினார்கள். பிச்சைக்காரர்கள் கூட அவர்மீது அனுதாபமும் மரியாதையும் காட்டி தங்களிடம் இருந்த ஓரிரு வெள்ளிக்காசுகளை அவரது கையில் கொடுத்தார்கள். எல்லோருமே இத்தனை திறமைகளைக் கொடுத்த கடவுள் இவருக்குப் பார்வையைத் தரவில்லையே என்று வருத்தப்பட்டார்கள்.

இதையெல்லாம் நேரில் பார்த்த காவலாளி சிகபாகுவிடம் கூறினான். அதைக் கேட்டதும் வியந்த மன்னன் அந்த முதியவரை தன் இருப்பிடத்திற்கு அழைத்து வரும்படிச் சொன்னான்.

முதியவர் வந்ததும் ''ஐயா முதியவரே, உங்களிடம் விந்தையான திறமை இருப்பதாகக் கேள்விப்பட்டேன். இப்படிப்பட்ட நீங்கள் பிச்சையெடுக்க வேண்டிய அவசியமென்ன?'' என்று கேட்டார்.

''ஒருவருக்கு எத்தனைத் திறமைகள் இருந்தாலும் அவை தாமாக வயிற்றுப் பசியைப் போக்குவதில்லை மகாராஜா. அதற்கு பிச்சையெடுப்பதைத் தவிர இங்கே வேறு வழிஇல்லையே?'' என்றார் பெரியவர்.

''உங்களுக்கு எப்படி இத்தனைத் திறமை வந்தது?''

''மனிதனும் ஒரு யந்திரம்தான் மகாராஜா, அதை முறையாகப் பழக்கினால் எத்தனை விஷயங்களை வேண்டுமானாலும் மூளையில் பதித்து வைத்துக் கொள்ளலாம். எப்போது வேண்டுமானாலும் வெளிப்படுத்தலாம். இது ஒரு நுண்ணிய கலை. மானஸூக்ரியா என்று இதற்குப் பெயர்''

''எவ்வளவு விஷயங்களை உங்களால் பதியச் செய்ய முடியும்?''

''அதற்கு கணக்கில்லை மகாராஜா''

''அந்த விஷயங்கள் எவ்வளவு காலத்திற்கு உங்கள் நினைவில் இருக்கும்?''

''நான் இறக்கும்வரை இருக்கும்.

''தேவைப்படும்போது தேவைப்பட்ட விஷயங்களை வெளியிடச் சொன்னால் சொல்ல முடியுமா?''

''மூளையில் பதிவு செய்திருந்தால் முடியும்''

''பெரியவரே, நீங்கள் ஒரு பெரும் பொக்கிஷம்''

''நன்றி மகாராஜா''

''இனி நீங்கள் பிச்சையெடுக்க வேண்டாம். உங்கள் திறமை இனி எனக்குப் பயன்படட்டும். உங்களுக்குப் போதுமான ஊதியமும் உணவும் தருகிறேன். அரண்மனையிலேயே தங்கிவிடுங்கள் சம்மதமா?''

''மிகவும் மகிழ்ச்சி மகாராஜா''

அரண்மனையிலேயே அந்த முதியவரை குடியமர்த்திய சிகபாகு பெரும் சந்தேகக்காரனாக இருந்தபடியால் இரவு முழுவதும் அவரைக் கண்காணிக்க ஏற்பாடு செய்தான். ஆனால் அவரோ அறையைவிட்டு வெளியே வரவில்லை. உணவுண்ட பின் நிம்மதியான உறக்கத்தில் ஆழ்ந்தார்.

மறுநாள் காவலாளிகள் அவரது நீராடலுக்கு ஏற்பாடு செய்தார்கள். நீராடியபின் தன்னை சூரிய வெளிச்சம் படும்படியான இடத்திற்குக் கொண்டு போய்விடும் படிக்கேட்டுக் கொள்ளவே காவலாளிகள் அவரை மேலே உப்பரிகைக்கு அழைத்துச் சென்றார்கள். காவலாளிகளை போகும்படிச் சொன்னார் முதியவர்.

இதற்கிடையில் அரண்மனைக்கு வந்த சிகபாகு முதியவரை அவரது அறையில் காணாததால் சந்தேகப்பட்டு மேலே உப்பரிகைக்கு வந்தபோது அங்கே அவர் முழந்தாளிட்டு அமர்ந்து கைகளைக் கூப்பி வணங்கிய நிலையில் இருந்தார். அவரிடம் சென்ற சிகபாகு ''என்ன செய்கிறீர்கள் முதியவரே?'' என்று கேட்டான்.

''வணக்கம் மகாராஜா. வாருங்கள். நான் சூரிய நமஸ்காரம் செய்து கொண்டிருக்கிறேன்'' என்றார் முதியவர்.

''பார்வையில்லாத உங்களால் சூரியனைப் பார்க்க முடிகிறதா?''

''பார்வையிருக்கும் தங்களால் சூரியனை நேருக்கு நேர் பார்க்க முடியுமா மகாராஜா?''

''அதெப்படி முடியும்?''

''ஆகவே சூரிய நமஸ்காரத்திற்கும் கண்களுக்கும் சம்பந்தமில்லை மகாராஜா. உண்மையில் வழிபாடு என்பதே கண்கள் சம்பந்தப்பட்டதல்ல. மனது சம்பந்தப்பட்டது. கண்ணில் தெரிந்த காட்சிகள் கலைந்து போகலாம். மனதில் பதிந்த காட்சிகளை எளிதில் அழிக்க முடியாது. ஆகவே தான் சூரிய பகவானை மனதில் வைத்து வழிபடுகிறேன். இதோ அவரது கிரணங்கள் என்மீது விழும்போது அவரது இருப்பை உணர்கிறேன். இப்படி உணர்ந்து வழிபடுவது எல்லா வழிபாட்டிலும் சிறந்தது''

முதியவரின் பதிலைக் கேட்ட மன்னன் ''இவன் நல்ல அறிவாளி. இவனிடம் ஏடாகூடமாகப் பேசக்கூடாது'' என்று தனக்குள் சொல்லிக்கொண்டான்.

முதியவர் மன்னனிடம் கேட்டார்.

''மகாராஜா, உங்களோடு இரண்டு பேர்களை அழைத்து வந்திருக்கிறீர்களே உங்கள் காவலுக்காகவா?''

''நான் இருவரோடு வந்திருப்பது உங்களுக்கு எப்படித் தெரிந்தது?''- வியப்புடன் கேட்டான் சிகபாகு.

'''கண்களால் பார்க்க முடியாதபோது மற்ற புலன்கள் இரட்டை சக்தியைப் பெறுகின்றன. ஒலி மாற்றம் ஒளி மாற்றம் ஆகியவற்றைக்கூட உணரமுடியும். அப்படிப்பட்ட உணர்வு மூலம் உங்களுடன் யாராவது வந்தால் என்னால் உணரமுடியும்''

அசந்து போனான் சிகபாகு.

''மகாராஜா, உங்களுடன் இருப்பவர்களை அனுப்பி விடுங்கள். உங்களோடு முக்கியமான விஷயமொன்றைப் பேசவேண்டும்'' என்றார் முதியவர்.

மன்னன் வீரர்களை இரண்டடி பின்னால் நகரும்படி சைகை செய்தான்.

பிறகு மன்னன் முதியவரிடம் ''சொல்லுங்கள் ஐயா. என்ன விஷயம்?'' என்றான்.

''மகாராஜா, உங்களுடன் வந்தவர்கள் போகவில்லையா?''

''போய் விட்டார்களே?''

''போகவில்லை மகாராஜா. அவர்களது நிழல் சூரிய ஒளியை சற்று தடை செய்தது. ஆனால் நீங்கவில்லை. எனவே அவர்கள் சற்று நகர்ந்திருக்க வேண்டும். ஆனால் போகவில்லை''

''முதியவரே, உங்களை ஏமாற்றமுடியாது''

''மகாராஜா, என்னை ஏமாற்றுவதால் என்ன லாபம்? திறமையிருந்தும் பிச்சையெடுத்துக் கொண்டிருந்தவன் நான். அதே நிலைக்குத் திரும்பி என்னால் வாழமுடியும். உங்களோடு இருப்பவர்களை போகச் சொல்லியதற்குக் காரணம் விஷயம் அந்தரங்கமானது என்பதால்தான். அதை இவர்கள் முன்னிலையில் சொல்லலாம் என்றால் எனக்கு ஆட்சேபணையில்லை''

மன்னன் இதைக் கேட்டதும் தனது ஆட்களை உடனடியாக அகற்றினான்.

''மகிழ்ச்சி மகாராஜா. ஆனால் நான் சொல்லப்போகும் விஷயம் மகிழ்ச்சியானதல்ல'' என்றார் முதியவர்.

''என்ன விஷயம்?''

''அமாவாசைக்கு இன்னும் மூன்று நாட்கள் இருக்கின்றன''

''ஆமாம்''

''அன்று உங்கள் மூன்றாவது மகன் ஜராசந்தனைக் கொல்ல ஏற்பாடாகியிருக்கிறது.

''உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''இது என் புலன்கள் எனக்கு அறிவிக்கும் செய்தி. நம்புவதும் நம்பாததும் தங்கள் விருப்பம்''

பெரியவர் கூறியவற்றைக் கேட்டு அதிர்ந்தான் சிகபாகு.

◈◈◈

## அத்தியாயம் எட்டு

# அமாவாசை

வங்கதேசத் தலைநகரின் இருபுறங்களில் இயற்கை அரண்களைப் போல மேற்கிலும் கிழக்கிலும் அமைந்திருந்த ஹரிகிரி ஹரகிரி ஆகிய இரண்டு மலைகளில் ஹரிகிரி மலையின் மத்திம பாகத்தில் இருந்த அடர்ந்த வனப் பகுதியில் தங்கியிருந்த விஜயனும் அவனது சகாக்களும் ஓரளவு திருப்தியோடு காணப்பட்டார்கள். பகல் நேரமாக இருந்த போதிலும் கதிரவனின் கிரணங்கள் நேரடியாக விழாமல் மரக்கிளைகள் தந்திருந்த ஓரிரு இடைவெளியின் மூலமே ஊடுறுவியதாலும் குளிர்ந்த காற்று வீசிக்கொண்டிருந்ததாலும் அவர்கள் இருந்த பகுதி உடலுக்கும் மனதிற்கும் இதம் தரக்கூடியதாக இருந்தது. காட்டு விலங்குகளின் உறுமல் சத்தங்கள் அவ்வப்போது எழுந்து தங்கள் நடமாட்டங்களை உறுதி செய்தாலும் விஜயனும் அவனது ஆட்களும் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. மலையின் பல்வேறு பகுதிகளில் அவனது ஆட்கள் திரிந்தபடி கண்காணித்துக் கொண்டிருந்ததால் அவர்களது இருப்பிடம் மிகவும் ரகசியமாகவும் பாதுகாப்பாகவும் இருந்தது.

விஜயன் சதுர்வேதியிடமிருந்து விடைபெற்று வங்கநாட்டிற்கு வந்ததுமே தனது வரவையும் இருப்பையும் ரகசியமாக வைத்துக் கொள்ளக் கருதி தலைநகரின் மேற்குப் புறத்தில் இருந்த ஹரிகிரி மலையைத் தேர்ந்தெடுத்து அங்கே தன் சகாக்களை வரச் செய்தான். கர்ணபத்ர பங்கத்தைக் கொள்ளையடிக்க வெறும் ஐந்து பேர் போதாது என்பது

அவனுக்குப் புரிந்தது. அதேசமயம் அவனது தோழர்களான எழுநூறு பேரை சிகபாகு மானபங்கப்படுத்திச் சிறையில் அடைத்து விட்டதால் அவர்களின் உதவியைப் பெறாத நிலையில் தனக்கு ஆதரவு தெரிவித்த மக்களின் உதவியைப் பெறத் தீர்மானித்தான். அவனுக்கு வேண்டியவர்கள் பலர் தலை நகரிலேயே இருந்தபடியால் முதலில் ஒரு சிலரை அவனாகவே மாறுவேடத்தில் போய் சந்தித்து பிறகு அவர்கள் மூலமாகவே மற்றவர்களையும் மலைக்காட்டுப் பகுதியில் வரச்செய்தான். அந்தவகையில் சுமார் முன்னூறு பேர் அங்கு திரண்டார்கள்.

அவர்களிடம் தனது திட்டத்தைக்கூறி ஆதரவைக் கோரியபோது மக்கள் ஆதரவு தரமுன் வந்தாலும் அவனது திட்டத்தைக் கேட்டு திருப்தியடையவில்லை.

''இளவரசே, இந்தத் திட்டத்தைவிட எளிய திட்டம் இருக்கும்போது அதை ஏன் செய்யக் கூடாது?'' என்று கேட்டார்கள்.

''சொல்லுங்கள்''

''பேசாமல் மன்னரைக் கொன்றுவிட்டு வங்க மன்னராக முடிசூடுங்கள். உங்களை ஒருவரும் எதிர்க்கமாட்டார்கள்''

''இதுபோல நான் கூட ஒரு சமயத்தில் எண்ணியது உண்மைதான். ஆனால் பிறகு அதைக் கைவிட்டு விட்டேன். அதற்கு முக்கியமான காரணம் இந்த அரியணை என் தந்தைக்கே உரியது அல்ல. அதிஷ்டத்தால் கிடைத்த அரியணை இது. ஆகவே இதற்குச் சொந்தம் கொண்டாட நான் விரும்பவில்லை. அதோடு எனக்குத் தரப்பட்டிருக்கும் லட்சியமானது அஹிம்சையை உபதேசிக்கும் மஹான் ஒப்படைத்ததாகும். அவரிடம் நான் இந்த லட்சியத்தை நிறைவேற்றுவதாக வாக்களித்திருக்கிறேன். இந்த நிலையில் மன்னரைக் கொல்வது அரியணையைப் பிடிப்பது என்பதெல்லாம் முடியாத விஷயங்கள். என் லட்சியம் நிறைவேறினால் உங்களை யெல்லாம் கூட நாக நாட்டிற்கு வரவழைத்துக் கொள்வேன்- உங்களுக்கு விருப்பமிருந்தால் உதவுங்கள். யாரையும் நான் கட்டாயப்படுத்தவில்லை''

இவ்வாறு விஜயன் கூறிவிட்டதால் மக்கள் அவனுக்கு உதவ சம்மதித்தார்கள்.

தனது திட்டத்தை இரண்டாகப் பிரித்துக் கொணடான் விஜயன்.

அரண்மனையிலிருக்கும் ஆபரணத்தைக் கவர்வதை முதற் பகுதியாகவும் சிறையில் இருக்கும் தன் தோழர்கள் எழுநூறு பேரை விடுவிப்பதை இரண்டாவது பகுதியாகவும் வைத்துக் கொண்டு மக்கள் படையில் ஐம்பது பேரை சிறைப் பகுதிக்கு அனுப்பி தன் தோழர்களைச் சந்தித்து தனது திட்டத்தைக் கூறும்படியும் சிறைப்பகுதிகளை ஆராயும்படியும் கூறி அனுப்பி வைத்தான்.

பிறகு ஒற்றைக் காலனையும் ஒற்றைக் கண்ணனையும் அனுப்பி மன்னனிடம் திகிலையும் குழப்பத்தையும் உண்டாக்கி வைத்தான். மக்கள் படையில் நூறு பேரை அரண்மனைப் பகுதியில் பிச்சைக்காரர்களாகத் திரிந்து உளவறியும்படி அனுப்பினான். புரவி வணிகரை மாறுவேடம் அணிந்து தலைநகரிலும் அரண்மனைப் பகுதியிலும் ஒற்றறியும்படி கட்டளையிட்டான். கண்ணில்லாத முதியவர் அசுவத்தாமரை எப்படியாவது மன்னனின் கவனத்தைக் கவர்ந்து அரண்மனையில் தங்கும்படியும் அமாவாசையன்று மன்னரின் மூன்றாவது மகனைக் கொல்ல ஏற்பாடு நடப்பதாகச் சொல்லி மன்னனின் கவனத்தைத் திருப்பும்படியும் சொன்னான்.

திட்டமிட்டபடி அனைத்து காரியங்களுமே நல்லபடியாக நடந்து கொண்டிருந்தன. அதைப்பற்றி திருப்தியை வெளியிட்டுப் பேசிய மோனோ காலன், ''ஐயா, நமது திட்டங்கள் தடையில்லாமல் நிறைவேறிவந்தாலும் பத்மினி என்ற பெண்ணின் குறுக்கீடு எதிர்பாராததாக இருக்கிறது. அவள் சாதாரணமானவள் போல் தோன்றினாலும் அறிவாளியாக இருக்கிறாள். உருப்படியான ஆலோசனைகளை அவள் கூறிவருவதால் மன்னன் தனது அமைச்சர்களையெல்லாம் சிறையில் அடைத்து விட்டான்'' என்றான்.

''அதனால் என்ன? அந்தப் பெண் மன்னனுக்கு ஆலோசனைகளை கூறினாலும் நமது திட்டத்தை அறியவோ

ஊகிக்கவோ முடியவில்லை. அதோடு அவள் நமக்குப் பாதகமான திட்டங்கள் எதையும் மன்னனுக்குக் கூறவில்லை. அதுவரை நமக்குப் பிரச்சினையில்லை. இனிமேல் என்ன செய்யப் போகிறாள் என்று பார்ப்போம்'' என்றான் விஜயன்.

''எனக்கு எந்த வேலையும் இல்லையா?''- என்று கேட்டான் கிரேக்க நாட்டுக் கடலோடியான டெமிட்ரியஸ்.

''நம் இருவருக்கும்தான் இனி முக்கியமான வேலை இருக்கிறது'' என்று சொன்ன விஜயன் மறுநாள் அமாவாசையன்று யார் யார் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று கட்டளையிட்டு விட்டு கொள்ளைக்குத் தேவையான பொருட்களைச் சேமித்து டெமிட்ரியஸுக்கு காட்டினான்.

''இவைகளெல்லாம் எதற்கு?'' என்று கேட்டான் டெமிட்ரியஸ்.

''நாளை நீயே புரிந்து கொள்வாய்''- என்றான் விஜயன்.

★★★

அமாவாசை தினத்தன்று காலையிலிருந்தே நிதானமில்லாமல் பதட்டத்துடன் இருந்தான் சிகபாகு. முதியவரான அசுவத்தாமரின் திறமைகளை பலவிதங்களில் உறுதிப்படுத்திக் கொண்டிருந்த காரணத்தால் அமாவாசையன்று தனது மூன்றாவது மகன் ஜராசந்தனைக் கொல்ல ஏற்பாடுகள் நடப்பதாகக் கூறிய விஷயத்தை முழுதுமாக நம்பினான். இதை ஜராசந்தனிடம் சொல்வதா வேண்டாமா என்று பலமுறை யோசித்து வீணாக அவனும் பயப்படுவதற்கு வழி செய்துவிட வேண்டாம் என்ற எண்ணத்தில் கூறாமலேயே இருந்தான். இது சம்பந்தமாக பத்மினியை வினவியபோது ''உங்கள் மகன் அமாவாசையன்று கொல்லப்படுவான் என்று முதியவர் சொல்லவில்லையே! கொல்வதற்கு அன்று முயற்சி நடக்கும் என்றுதானே சொன்னார்! இதற்கு ஏன் பதட்டப்படுகிறீர்கள்?'' என்று கேட்டாள் அவள்.

''இதென்ன பெண்ணே நீயும் விவரமறியாமல் பேசுகிறாய்? இரண்டிற்கும் என்ன வித்தியாசம்? ஜராசந்தன் கொல்லப்பட

வேண்டுமென்றால் முயற்சி செய்தால் தானே முடியும்?'' என்று கேட்டான் சிகபாகு.

''முயற்சி தோற்றுப் போகலாம் அல்லவா?'' என்று கேட்டாள் பத்மினி.

''அது உண்மைதான். ஆனாலும் என்னால் பதட்டப்படாமல் இருக்க முடியவில்லை''

''மகாராஜா, உங்கள் மகனை அரண்மனைக்கே கொண்டு வந்து பலத்த காவலில் வைத்துவிடுங்கள். எப்படி கொலைகாரர்கள் அணுகுவார்கள் என்று பார்ப்போம்''

''மகனிடம் இந்தச் செய்தியை நான் கூறவில்லை. இப்போது அவனை இங்கு அழைத்தால் விஷயத்தை அவனுக்குச் சொல்ல வேண்டிவரும்''

''அதனால் என்ன? காவல்களைப் பலப்படுத்தும்போது அவருக்கு விஷயம் தெரியத்தானே போகிறது?''

சிகபாகு அதைக் காதில் வாங்கிக்கொள்ளாமல் ''ஏன் பத்மினி, என் மகனை நாட்டைவிட்டே வெளியே அனுப்பிவிட்டால் பாதுகாப்பாக இருக்கும் இல்லையா?'' என்று கேட்டான்.

''இதை நீங்கள் விஷயத்தைக் கேள்விப்பட்ட அன்றே செய்திருக்க வேண்டும் மகாராஜா, விடிந்தால் அமாவாசை. இப்போது அப்படிச் செய்ய முயன்றால் கொலைகாரர்களுக்கு எளிதாகப் போய்விடும். அதோடு இந்த வழிமுறை சரியே அல்ல. இதுபோல கொலை மிரட்டல் மற்றவர்களுக்கும் ஒருவேளை வந்தால் அவர்களையும் ஒவ்வொருவராக நாட்டைவிட்டு வெளியேற்றி விடுவீர்களா? எனக்கென்னவோ இந்த கொலைச் செய்தி வதந்தியாக இருக்கும் என்று தோன்றுகிறது'' என்று சொன்ன பத்மினி ''மகாராஜா, நீங்கள் வியக்கும் முதியவரை நான் போய் பார்க்கலாமா?'' என்று கேட்டாள்.

''அதற்கென்ன? போய் பார். ஜாக்கிரதையாக நடந்துகொள். அவருக்குப் பார்வையில்லையே தவிர மூளை அதிகம்'' என்றான் மன்னன்.

பத்மினி தனது கூந்தலில் இருந்த மல்லிகைச் சரங்களைத் தொட்டுப் பார்த்துவிட்டு லேசாகச் சிரித்துக் கொண்டாள். பிறகு முதியவர் அசுவத்தாமர் இருந்த அறையை அடைந்து பூனைபோல் அடிமேல் அடிவைத்து உள்ளே சென்றாள். உள்ளே பத்மாசனத்தில் அமர்ந்திருந்த முதியவர் ''பெண்ணே நில்'' என்றார்.

பத்மினி வியப்படைந்தாலும் காட்டிக் கொள்ளாமல் குரலை மாற்றிக் கொண்டு ''பெண்ணா? யார் பெண்? எங்கே இருக்கிறாள்?'' என்றாள்.

அசுவத்தாமரோ ''குரலை மாற்ற வேண்டிய அவசியம் இல்லை பெண்ணே. உனக்கு என்ன வேண்டும்?'' என்று கேட்டார்.

பத்மினி தனது இயற்கையான குரலில் கேட்டாள்.

''நான் மல்லிகைப் பூவுடன் இருப்பதால்தானே என்னைப் பெண் என்று அறிந்து கொண்டீர்கள்?''

''என்னை ஏமாற்றுவதற்காக ஆண்கள் சில சமயங்களில் மல்லிகைப் பூவுடன் வருவார்கள்''

''பின் எப்படி என்னை அறிந்தீர்கள்?''

''பெண்ணே, பெண்ணின் கூந்தலுக்கு இயற்கையிலேயே மணமிருக்கிறது''

''அதெப்படி? வாசனாதி திரவியங்களைப் பூசிக் கொள்வதினாலும் மணமுள்ள மலர்களைச் சூடிக் கொள்வதினாலும் தானே பெண்ணின் கூந்தலுக்கு மணம் வரமுடியும்?''

''அவசியமில்லை. எப்போதாவது மலர்களையும் வாசனைத் திரவியங்களையும் பயன்படுத்தியிருந்தாலே போதும். கூந்தல் மணக்கும்''

''நான் இந்த இரண்டையுமே பயன்படுத்தியதில்லை''

''அப்படியென்றால் மல்லிகைப் பூ?''

''அதைக் கையில் வைத்திருக்கிறேன்''

''ஏன்?''

''என் விருப்பம்''

அசுவத்தாமர் சற்றே சிரித்துவிட்டு ''மல்லிகைப் பூ எங்கே வேண்டுமானாலும் இருக்கட்டும். நான்தான் அதை வைத்துக் கொண்டு உன்னைத் தெரிந்து கொள்ளவில்லை என்று சொன்னேனே! பெண்ணின் கூந்தல் செறிவாக இருப்பதால் எண்ணை சேரும்போது ஒருவித மணத்தைப் பெற்று விடுகிறது. கூந்தல் மட்டுமல்ல அவளது மேனிக்கும் ஒரு வாசனை உண்டு. அதைக் கண்களை மூடிக்கொண்டு ஒருவன் உன்னிப்பாக கவனித்தால் உணரமுடியும். நான் பார்வையற்றவனாதலால் கண்களை திறந்தே இருக்கிறேன். பார்வையில்லாத காரணத்தால் கண்களின் சக்தியை மற்ற புலன்கள் கூடுதலாகப் பெறுகின்றன. அதில் காதும் நாசியும் முக்கியமானவை. என் நாசி பெண்ணின் பிரத்தியேக வாசனையை நுகர்ந்ததால் உள்ளே நுழைந்தது பெண் என்பதை அறிந்தேன். நீ உள்ளே நுழைந்து சாதாரணமாக வரவில்லை. பூனைபோல வேண்டுமென்றே அடிமேல் அடியெடுத்து வைத்திருக்கிறாய். என் காதுகள் நீ உள்ளே நுழைந்தபோது அதிர்ச்சியை உணர்ந்தன. மறுகணமே அதிர்வு நீங்கிவிட்டது. உன் நடை மாறிவிட்டதை உணர்ந்தேன்''

முதியவரின் விவரணங்களைக் கேட்ட பத்மினி ஸ்தம்பித்துப் போனாள்.

''என்னை மன்னித்துவிடுங்கள் ஐயா. உங்கள் திறமையை சோதிக்கவே அவ்வாறு நடந்து கொண்டேன்''

''தங்கள் மீது நம்பிக்கையுள்ளவர்கள் பிறரைச் சோதிக்க முற்படமாட்டார்கள்''

''ஐயா, நான் எனக்காக இங்கே வரவில்லை. மன்னர் கூறிய செய்தியையொட்டி வந்திருக்கிறேன். அவரது புதல்வரை நாளை கொலை செய்ய முயற்சி நடக்கும் என்று நீங்கள் சொன்னீர்களாம். அவர் மிகுந்த பதட்டத்தில் இருக்கிறார்''

''எதற்குப் பதட்டப்பட வேண்டும்? மகாராஜாவிடம் இல்லாத காவல் படைகள் வேறெங்கு இருக்க முடியும்?''

''எல்லாம் இருக்கிறது. இருந்தாலும் அவர் பயப்படுகிறார்'' என்ற பத்மினி, ''ஐயா, நாளை மன்னரின் புதல்வர் கொல்லப்படுவாரா?'' என்று கேட்டாள்.

''எனக்கு ஆருடம் தெரியாது பெண்ணே. அவரைக் கொல்ல முயற்சிப்பதாக இருவர் பேசியதை என் காதால் கேட்டதாலேயே மகாராஜாவிடம் கூறினேன். வேறு எதுவும் எனக்கு தெரியாது''

''அவ்வாறு பேசியவர்களை உங்களால் அடையாளம் காட்ட முடியுமா?''

''குரலை வைத்துச் சொல்ல முடியும்''

''நன்றி ஐயா. வருகிறேன்''

பெரியவர் கூறியதை மன்னனிடம் தெரிவித்த பத்மினி ''அரண்மனைக் காவலர்களை அழைத்துப் பேச வைத்தால் பெரியவரால் அடையாளம் காட்ட முடியும். பிறகு அவனை விசாரித்தால் கொலையாளியைப் பற்றி அறியலாம். அவனைப் பிடிக்கவும் முயற்சிக்கலாம்'' என்றாள்.

''தற்போது அரண்மனைக் காவலில் நூறுபேருக்கு மேலே இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் அழைத்து பேச வைப்பது வீண்வேலை. பேசியவர்களைக் கண்டு பிடிப்பதற்குள் கொலையாளி தன் வேலையை முடித்து விடுவான்'' என்று சொல்லி அவளது யோசனையை நிராகரித்தான் சிகபாகு.

மாறாக தன் மகன் ஜராசந்தன் இருந்த ஆற்றங்கரை மாளிகையைச் சுற்றி ஆயிரம் வீரர்களை நிறுத்தி தானும் போய் மகனுடனேயே உட்கார்ந்து கொண்டான் சிகபாகு. மகனுக்கு விஷயம் என்ன என்பது புரிந்ததும் தந்தையைவிட அதிகமாக பயந்த அவன் ''ஆயிரம் பேர் போதுமா தந்தையே? இன்னும் ஆயிரம் பேரை வரவழையுங்கள். எனக்குப் பயமாக இருக்கிறது'' என்றான். சிகபாகுவும் உடனடியாக மேலும் ஓராயிரம் வீரர்களை அங்கே பாதுகாப்பிற்குக் கொண்டு வந்து நிறுத்தினான். தந்தைக்கும் மகனுக்கும் இருப்பும் கொள்ளவில்லை. உணவும் பிடிக்கவில்லை. ஏறக்குறைய

அமாவாசை நாளின் மாலைநேரமும் வந்துவிட்டது. ஆனால் கொலையாளியின் முயற்சி பற்றி எதுவும் தெரியவில்லை.

நள்ளிரவு நேரம் நெருங்கிய சமயத்தில் காவல் வீரர்கள் அணிவகுத்திருந்த ஒரு மூலையில் ஏதோ இரைச்சல் எழுந்தது. ''கொலைகாரன் ஓடுகிறான். பிடியுங்கள். பிடியுங்கள்'' என்று யாரோ சிலர் குரல் கொடுக்கவும் காவல் வீரர்கள் ஐம்பதுபேர் அந்தப் பக்கமாக ஓடினார்கள்.

சத்தத்தைக் கேட்டு வீட்டின் உள்ளேயிருந்து வெளியே வந்த சிகபாகு ''அங்கே என்ன சத்தம்?'' என்று இரைந்தான்.

''கொலைகாரன் ஓடுவதாக கூச்சல் வந்ததையடுத்து காவல் வீரர்கள் அவனைப் பிடிக்க ஓடுகிறார்கள் மகாராஜா'' என்றான் ஒரு வீரன்.

''விடாதீர்கள். நீங்கள் கொஞ்சபேர் இந்தப் பக்கமாக ஓடுங்கள். கொலைகாரன் தப்பிவிடக் கூடாது. ஜாக்கிரதை'' என்று கட்டளையிட்டான் சிகபாகு.

அதையடுத்து கொஞ்ச வீரர்கள் பந்தங்களைத் தூக்கிக் கொண்டு ஓடினார்கள். ஓடியவர்கள் போக மிச்சமிருந்த வீரர்கள் அணிவகுப்பை சரிசெய்து கொண்டு நின்றார்கள். அமாவாசை தின இருட்டாக இருந்தாலும் வீரர்கள் கணக்கற்ற பந்தங்களை ஜராசந்தனின் வீட்டைச் சுற்றி வெகுதூரம் வரை பூமியில் நடவு செய்திருந்தார்களாதலால் அந்தப் பகுதி மிகவும் பிரகாசமாக இருந்தது.

''யாரந்த கொலைகாரனாக இருக்கும்?'' என்று தனக்குள் கேட்டபடி வீட்டிற்குள் சென்றான் சிகபாகு.

உள்ளே ஜராசந்தனைக் காணாததால் திகைப்படைந்தான்.

இதேநேரத்தில் நகைக் கொள்ளையில் விஜயனும் ஈடுபட்டான்.

◈◈◈

## அத்தியாயம் ஒன்பது

# கர்ணபத்ர பங்கம்

அரண்மனையின் பக்கத்தில் அதுவரை பிச்சைக் காரர்களாகப் படுத்திருந்த விஜயனின் மக்கள் படை வீரர்கள் நள்ளிரவு நேரம் ஆரம்பித்ததுமே அரண்மனையின் பல பகுதிகளிலும் புகுந்து அங்கிருந்த காவல் வீரர்களைத் தாக்கி செயலிழக்கச் செய்தோ அல்லது கொன்றோ அவர்களின் உடைகளை எடுத்து அணிந்து கொண்டார்கள். வீழ்ந்துவிட்ட காவல் வீரர்களின் வாயைக் கட்டி நிர்வாண நிலையிலேயே இருட்டுப் பகுதிக்கு இழுத்துவிட்டு, அரண்மனையில் அவர்கள் நின்ற இடங்களில் காவலுக்கு நின்றார்கள். அதேசமயம் விஜயனும் டெமிட்ரியஸும் அரண்மனைக்குள் உரிய தளவாடப் பொருட்களுடன் சென்றார்கள். அவர்களோடு பத்து காவல் வீரர்களும் சென்றார்கள்.

அரண்மனையில் அரியணையின் அருகே வந்த விஜயன் ''வீரர்களே, இங்குள்ள விசையை நான் முடுக்கியதும் சிம்மாசனமானது நகர்ந்து சுரங்கப் பாதையைக் காட்டும். அதில் இறங்கியதும் வளைவான வட்டவடிவிலான மண்டபம் ஒன்று வரும். அங்கே இருக்கும் காவல் வீரர்களை அழிக்கவேண்டும். இது முதல் வேலை'' என்று கூறிவிட்டு அரியணையின் சுவற்று மாடத்தில் இருந்த விசையை முடுக்கினான்.

அதையடுத்து சிம்மாசனமானது எந்தவிதமான இரைச்சலு மின்றி அமைதியாக நகர்ந்தது. உள்ளே தெரிந்த சுரங்கப் பாதையிலிருந்து யாராவது வெளியே வருகிறார்களா என்று சிறிதுநேரம் வரை கவனித்த விஜயன் சுரங்கத்தில் மெல்ல இறங்கினான். பத்து படிகள் இறங்கியதும் வட்ட மண்டபம் தெரிந்தது. மண்டபத்தில் இடம் விட்டு அமைக்கப்பட்டிருந்த தூண்களில் பந்தங்கள் ஏற்றப்பட்டிருந்தன. நள்ளிரவாகி விட்டபடியாலும் அந்த நேரத்தில் எதிரிகள் யாரையும்

எதிர்பார்க்க முடியாததாலும் வட்ட வடிவ மண்டபத்தில் காவலுக்கு இருந்த வீரர்கள் படுத்துக் கொண்டிருந்தார்கள். அதைக் கண்ட விஜயன் டெமிட்ரஸையும் பத்து வீரர்களையும் உள்ளே வரச்சொன்னான். அச்சமயத்தில் மண்டபத்தின் மேல் விளிம்புகளில் காற்றுக்காக அமைக்கப்பட்டிருந்த துவாரங்கள் ஒன்றில் அமர்ந்திருந்த கழுகொன்று கிரீச்சென்று குரல் கொடுக்கவே படுத்துக் கிடந்த வீரர்கள் எழுந்தார்கள்.

அவர்களின் எண்ணிக்கையும் சுமார் பத்திருக்கலாம். அவர்கள் எழுந்து போருக்குத் தயாராகும் முன்பாகவே விஜயனின் வீரர்கள் மூர்க்கமாகத் தாக்கியதால் அவர்கள் அனைவருமே இன்னதென அறியாத நிலையில் வாட்களுக்கு இரையாகி மாண்டு போனார்கள்.

விஜயன் இறந்துபோன வீரர்களின் உடல்களை மண்டபத்தின் நடுவே இருந்த தடாகத்தில் எறியும்படிச் சொன்னான். உடல்கள் நீருக்குள் வந்து விழுந்ததுமே உள்ளே கிடந்த முதலைகள் மேலெழும்பி உடல்களைக் கவ்விக் கடிக்க முற்பட்டன. தான் கொண்டு வந்திருந்த குவளையை எடுக்கச் சொன்ன விஜயன் அதிலிருந்த விஷத்தை தடாக நீர்பரப்பில் கொட்டும்படி கட்டளையிட்டான். முதலைகள் இறக்கச் சிறிது நேரமாகும் என்ற நிலையில் தன்னுடன் வந்த வீரர்களில் எட்டு பேரை மேலே போகச் சொன்னான்.

அவர்கள் சென்றதும் டெமிட்ரியஸைப் பார்த்த விஜயன், "பார்த்தாயா டெமிட்ரியஸ்? இந்தத் தடாகத்தின் நடுவே இருக்கும் மேடையில் வட்ட வடிவமான பெட்டகம் ஒன்று இருக்கிறதல்லவா அதற்குள்ளேதான் விலைமதிக்க முடியாத நகையான கர்ணபத்ர பங்கம் இருக்கிறது. பெட்டகம் மூடப் பட்டிருக்கிறது. அந்த மூடியைத் திறப்பதுதான் முதல் சாதனை. அதை எளிதில் திறக்க முடியாது" என்றான்.

"ஏன்?" என்று கேட்டான் டெமிட்ரியஸ்.

"பெட்டகத்தின் மூடி சக்திவாய்ந்த காந்தத்தினால் ஆனது. அதன் அருகிலேயே செல்ல முடியாது. அருகில் சென்று கையை நீட்டினால் காந்த சக்தி கையையே பிய்த்துவிடும். அல்லது நரம்புகளை முறுக்கிக் கிழியச் செய்துவிடும்.

''மூடியை எப்படித் திறப்பது?''

''காந்த சக்தியை காந்த சக்தியால்தான் முறியடிக்க வேண்டும்'' என்று சொன்ன விஜயன் பையில் இருந்த கனமான ரப்பர் உறைகளை எடுத்து கைகள் முழுவதற்குமாக அணிந்து கொண்டான். கால்களுக்கும் தொடை வரையில் அணிந்து கொண்டான். டெமிட்ரியஸையும் அவ்வாறே அணிந்து கொள்ளச் செய்தான்.

''டெமிட்ரியஸ், பெட்டகத்திற்கு நேராக மேலே பார். அங்கிருக்கும் வட்டவடிவமான துவாரம் பலமான கண்ணாடியால் மூடப்பட்டிருக்கிறது. அக்கண்ணாடியை உடைக்க வேண்டும்'' என்றான்.

''எதற்கு?''

''நாம் புறப்பட்டபோது காந்த உருளை ஒன்றைக் கொண்டு வந்தோம் அல்லவா?''

''ஆமாம்''

''மேலே இருக்கும் துவாரத்தின் கண்ணாடியை உடைத்து விட்டால் துவாரத்தில் பெட்டகமும் அதன் காந்த மூடியும் தெரியும்''

''ஆமாம்''

''நம்மிடம் இருக்கும் காந்த உருளையை கயிற்றில் கட்டி துவாரத்தில் தொங்கவிட்டால் இது தனது பலமான காந்த ஈர்ப்பு சக்தியால் பெட்டகத்தை மூடியிருக்கும் காந்த மூடியை தனக்காக இழுக்கும். மூடி பெயர்த்தெழுந்து காந்த உருளையில் ஒட்டிக் கொள்ளும். அதை அப்படியே துவாரத்தின் மூலம் மேலே இழுத்துவிட்டால் நாம் தடாகத்தில் இறங்கி மேடையை அடைந்து கர்ணபத்ர பங்கத்தை எடுத்துக் கொள்ளலாம்''

''கண்ணாடியை எப்படி உடைப்பது''

''கீழே இருந்து உடைக்க முடியாது. மேலேதான் போக வேண்டும். அங்கே போக வழி இருக்கிறதா என்று பார்ப்போம் வா'' என்று கூறிய விஜயன் டெமிட்ரியஸை அழைத்துக் கொண்டு மண்டபத்தைச் சுற்றி வந்தான்.

''டெமிட்ரியஸ், அதோ பார்த்தாயா - கழுகு அமர்ந்திருந்த இடத்தைப் பார். அதைபோலத் துளை மாடங்கள் நாலைந்து இருக்கின்றன. அங்கே போக முடிந்தால் கண்ணாடியை உடைக்க முடியும் என்று தோன்றுகிறது'' என்ற விஜயன் சிறிது நேரம் யோசித்தான்.

பிறகு வெளியே சென்ற வீரர்களை வரச்சொன்னான். அவர்களை பாதிபேரை கும்பலாக நிற்கச் சொல்லி அவர்களின் தோள்மீது நான்கு பேரை ஏறி நிற்க வைத்தான். அவர்களின் மீது தொற்றி ஏறிய விஜயன் ஏறக்குறைய கண்ணாடி துவாரத்தின் உயரத்திற்கு வந்து விட்டதை உணர்ந்தான். கனமான மூங்கில் ஒன்றின் நுனியில் நன்றாக இறுக்கப்பட்ட கயிறு ஒன்றைக் கட்டி அதன் இன்னொரு நுனியில் காந்த உருளையைக் கட்டினான். டெமிட்ரியஸ் மூங்கில் கழியைத் தூக்கிக் கொடுக்க அதை வாங்கிக் கொண்ட விஜயன் அதை அப்படியே மேலே தூக்கினான். காந்த உருளை கண்ணாடி துவாரத்திற்கு மேலே வந்ததும் அந்த முனையை பலமாக இறக்கினான். காந்த உருளை தாக்கியதால் கண்ணாடி தூளாகியது. கண்ணாடி உடைந்ததால் காந்த உருளை பெட்டகத்தின் மூடிக்கு நேரே வந்ததும் காந்த மூடியை ஈர்த்தது. சில நிமிடங்களிலேயே பெட்டக மூடி பிய்த்துக் கொண்டு பெயர்ந்து காந்த உருளையில் வந்து ஒட்டிக்கொண்டது. அதை டெமிட்ரியஸ் உணர்ந்ததும் விஜயன் வீரர்கள் தோளிலிருந்து மெதுவாக இறங்காமல் மூங்கில் கழியை அழுத்தமாகப் பிடித்துக்கொண்டு குதித்தான். வீரர்கள் கழியைப் பிடித்துக் கொண்டார்கள். கழியின் மறுமுனை மேலெழுந்து நின்றது. மறுமுனையில் காந்த உருளையும் காந்த மூடியும் ஒட்டிய நிலையில் மேலே இருந்தது. அந்த நிலை மாறாதபடி மூங்கில் கழியை பத்து வீரர்களும் அமுக்கிப் பிடித்துக் கொண்டார்கள். விஜயனும் டெமிட்ரியஸூம் தடாகத்தில் இருந்த முதலைகள் இறந்துவிட்டதை உறுதி செய்து கொண்டபின் முதலைகளின் உடல்களையே அடுக்கி பாலமாக அமைத்து நடுவில் இருந்த மேடையை அடைந்து பெட்டகத்தில் இருந்த கண்ணைப் பறிக்கும் ஆபரணத்தைத் தூக்கிப்பிடித்தபடி சர்வஜாக்கிரதையுடன் முதலைப் பாலத்தைக் கடந்து மண்டபத்திற்கு வந்து கீழே இறக்கினார்கள். விஜயன்

வீரர்களிடம் ''வீரர்களே, இனி கழியை நீங்கள் பிடித்துக் கொண்டிருக்க வேண்டாம். விட்டுவிடுங்கள்'' என்றதும் அவர்கள் விட்டார்கள். அதையடுத்து ஏதேதோ சப்தங்கள் எழுந்தன. வீரர்களின் பிடி விலகியதும் காந்தங்களின் பலம் மூங்கில் கழியை இழுத்தது. சரக் சரக்கென முறியும் பல ஒலிகளுக்கிடையில் காந்த உருளையும் அதோடு ஒட்டிக் கொண்டிருந்த காந்த மூடியும் பெட்டகத்தின்மீது விழுந்து அதை உடைத்தபடி தடாகத்தில் வீழ்ந்து மூழ்கின.

அங்கிருந்த வீரர்கள் சிறிதுநேரம் வரை அமைதியாக இருந்துவிட்டு பிறகு நகையை பறித்து விட்டதை எண்ணி ஆனந்தக் கூச்சலிட்டார்கள். அவர்களை அமைதிப்படுத்திய விஜயன் ஆபரணத்தை எடுத்து பையில் போட்டு கட்டி டெமிட்ரியஸின் தோள்களில் ஏற்றி புறப்பட எத்தனித்தபோது ''பலே! விஜயா! பலே. கொள்ளைக்காரன் என்றால் அது நீதான். உன் துணிவும் திறமையும் அபாரமானவை. இந்த கர்ணபத்ர பங்கத்தைத் திருட இதுவரை பலர் முயன்றிருக்கிறார்கள். ஆனால் முயன்றவர்கள் எல்லோரும் உயிரைத்தான் விட்டிருக் கிறார்கள். நூறு ஆண்டுகளுக்கு மேலாக பாதுகாக்கப்பட்டு வரும் விலைமதிக்க முடியாத இந்த ஆபரணத்தை சிறு காயம் கூட இல்லாமல் கவர்ந்த உன்னை எப்படிப் பாராட்டுவதென்றே தெரியவில்லை'' என்று கேட்டபடி அங்கே வந்தான் ஒருமனிதன்.

அவன் யார் என்பது விஜயனுக்குத் தெரிந்திருந்தாலும் அவன் என்ன செய்ய உத்தேசித்திருக்கிறான் என்பதை அறியாததால் ''வா, ராகுலா. என்ன திடீரென்று இங்கே வந்திருக்கிறாய்?'' என்று கேட்டான்.

வங்க நாட்டின் படைத்தலைவனும் விஜயனின் நண்பனுமான ராகுலன் இதைக் கேட்டுச் சிரித்துவிட்டு ''என் நாட்டில் நான் வரக்கூடாத இடம் என்று ஏதாவது இருக்கிறதா இளவரசே?'' என்று கேட்டான்.

''இருக்கிறது ராகுலா. நீ படைத்தலைவனாக இருந்தாலும் நுழைய முடியாத இடம் ஒன்றிருக்கிறது''

''அப்படியா? என்ன அது?''

''மன்னரின் அந்தப்புரம்''

இதைக் கேட்டுச் சிரித்த படைத்தலைவன் ராகுலன் ''இக்கட்டான நேரங்களில்கூட இனிமையாகப் பேச உங்களால்தான் முடியும்'' என்று சொல்லிவிட்டு ''உங்களது நிலை என்ன என்பது உங்களுக்குத் தெரியுமா?'' என்று கேட்டான்.

''என்ன நிலை''

''உங்களது நண்பர்கள் சிறையில் இருக்கிறார்கள்''

''தெரியும்''

''அவர்களை மன்னர் கொன்றாலும் கொல்லலாம்''

''தெரியும்''

உங்களையும் சல்லடை போட்டுத்தேடி வருகிறார்கள். நீங்கள் கிடைத்தால் விசாரணையின்றி சிரச்சேதம் செய்ய மன்னர் உத்தேசித்திருக்கிறார்''

''இருக்கலாம்''

''உங்களை எதற்காகச் சிரச்சேதம் செய்யவிருக்கிறார் தெரியுமா?'' வங்கதேசத்து சிம்மாதனத்தை கவர நீங்கள் சதி செய்கிறீர்களாம்''

''சரி''

''இந்த நேரத்தில் இந்தத் திருட்டு வேறு''

''எதுவாக இருந்தாலும் ஒரு முறைதான் கொல்ல முடியும். ஒவ்வொரு காரியத்திற்காக ஒவ்வொரு முறை கொல்ல முடியாது''

''இளவரசே, உயிருக்கு நீங்கள் பயந்தவரல்ல. இதை நாடே அறியும். அதோடு நீங்கள் என் சிறந்த நண்பர்''

''ராகுலா, சொல்ல நினைத்ததைச் சுற்றிவளைக்காமல் சொல்''

''இளவரசே, இந்த அணிகலன் மிகவும் பெரியது. யாராலும் அணியமுடியாது. ஆகவேதான் இதை நாட்டின் கௌரவச் சின்னமாக நீண்ட காலமாகவே கருதி பாதுகாத்து வருகிறார்கள். இது களவு போவது நாட்டின் கௌரவம் களவு போவது போல்''

''ராகுலா, நாட்டின் உண்மையான கௌரவம் என்பது மக்களின் நல்வாழ்வு தான். அதை குழிதோண்டி புதைத்துவிட்டு மன்னர் தானுண்டு தன் நலமுண்டு என்று வாழ்ந்து வருவது படைத்தலைவனான உனக்குத் தெரியவில்லையா?''

''தெரியும். ஆனால் அந்த விஷயத்தில் மன்னருக்கு எதிராக நான் எதுவும் செய்ய முடியாது. இளவரசரான தங்கள் பேச்சையே மன்னர் தட்டிக் கழித்துவிட்ட பிறகு என் பேச்சையா ஏற்கப் போகிறார்? அது என் வரம்புக்கு மீறிய விஷயம். ஆனால் இந்த விஷயம் அப்படியல்ல. இதைக் காக்க வேண்டியது இந்நாட்டு மக்கள் ஒவ்வொருவருடைய கடமை''

''இக்காரியத்தில் ஈடுபடும் நான் வேறு நாட்டவன் அல்ல. இந்நாட்டவன். அதோடு இளவரசன். எனக்கில்லாத அக்கறையும் பொறுப்பும் உனக்கு வேண்டியதில்லை''

''இளவரசே, இந்த விலைமதிக்க முடியாத அணிகலன் உங்களுக்கு எதற்கு?''

''எனக்கல்ல. ஒரு நல்ல காரியத்திற்கு இது தேவை''

''ஆனால் நாட்டின் கௌரவத்திற்கு இது தேவை''

''கௌரவத்தைப் பற்றி நான் ஏற்கனவே கூறிவிட்டேன்''

இந்நிலையில் கடகடவெனச் சிரித்த ராகுலன் ''பயந்து விட்டீர்களா இளவரசே? உங்கள் நண்பனான நானா உங்களைத் தடுப்பேன்? சீக்கிரம் வெளியேறி விடுங்கள். விஷயம் வெளிப்படும் முன் தூரத்திற்குப் போய்விட வேண்டும். சீக்கிரம்'' என்று கூறிவிட்டுச் சுரங்கப் படிகளில் ஏறி மறைந்தான்.

''தாமதிக்க வேண்டாம். உடனே புறப்படுங்கள்'' என்று கூறிய விஜயன் சுரங்கப்படிகளில் ஏறி மேலே வந்ததும் விசையைத் திருகி சிம்மாசனத்தை பழையபடியே இருந்த இடத்தில் அமர்த்தி ''வீரர்களே, அரண்மனையின் பின்புறத்தில்

இருக்கும் சோலையில் புரவிகள் இருக்கும். அங்கு சென்று புரவிகளில் ஏறி நம்மிடத்திற்குப் போய்விடவேண்டும். விடிவதற்குள் நம் இருப்பிடத்தில் நாம் இருந்தாக வேண்டும்'' என்றான்.

அப்போது ''நில்லுங்கள்'' என்ற குரல் கேட்டது.

யாரெனப் பார்ப்பதற்காகத் திரும்பினான் விஜயன்.

அங்கே பத்மினி நின்று கொண்டிருந்தாள்.

◈◈◈

## அத்தியாயம் பத்து

# பத்மினியின் நிபந்தனை

பத்மினியை நேரில் பார்த்ததில்லை என்றாலும் வந்திருப்பவள் அவள்தான் என்பதை உணர விஜயனுக்குச் சிரமமாக இல்லை.

இதற்கிடையில் பத்மினியே பேசமுற்பட்டு ''நான் எதிர் பார்த்ததுதான் நடந்திருக்கிறது. ஆனால் மன்னர் ஏமாந்து விட்டார். நான் ஏமாறவில்லை'' என்றாள்.

விஜயன் லேசாகச் சிரித்துவிட்டு ''எல்லாவற்றையும் எதிர்பார்த்ததாகச் சொல்லும் நீ சற்று முன் வந்திருந்தால் களவைத் தடுத்திருக்கலாமே?'' என்றான்.

''இப்போதும் குடி முழுகிப் போய்விடவில்லை இளவரசே. தாமதித்து வந்தாலும் நீங்கள் தப்பும் முன் வந்து விட்டேன்'' என்றாள் பத்மினி

விஜயன் தன் பார்வையைச் சுற்றவிட்டதை கவனித்த பத்மினி ''நான் தனியாக வரவில்லை இளவரசே. உங்கள் வீரர்களை அகற்றிவிட்டு மன்னரது வீரர்களை நிறுத்திவிட்டுத் தான் வந்திருக்கிறேன். நான் கைகளைத் தட்டினால் போதும். உங்களை வந்து சூழ்ந்து கொள்வார்கள்'' என்று சொல்லி முடிப்பதற்குள் அவளது இடுப்பை உரசியபடி வந்து விழுந்தது விஜயனின் குறுவாள்.

''பெண்ணே, நீ கைகளை தட்டுவதற்குள்ளாகவே உன்னை என்னால் வீழ்த்திவிட முடியும் என்பதற்காகவே குறுவாளை எறிந்தேன். அதை உன் இடுப்பில் தைக்கும்படி எறிய என்னால் முடியும். பெண் என்பதால் உன்னைக் கொல்லவில்லை. இப்போது சொல். உன் உத்தேசம் என்ன?'' என்று கேட்டான் விஜயன்.

''உங்களைப் பிடித்து மன்னரிடம் ஒப்படைப்பதுதான்'' என்று நிர்ப்பயமாகச் சொன்னாள் பத்மினி.

''மன்னருக்கும் உனக்கும் என்ன சம்பந்தம்?''

''சம்பந்தம் எதுவும் இல்லை. நான் எந்தப் பதவியையும் வகிக்கவில்லை. என்னை நம்பி பல விஷயங்களில் ஆலோசனை கேட்டவர் அவர். அவரது நம்பிக்கையைக் காப்பாற்றுவது என் பொறுப்பு''

''மன்னரைப் பற்றி உனக்குத் தெரியுமா?''

''தெரியும்''

''அவர் மன்னராகவே நடந்து கொள்ளவில்லை என்பது தெரியுமா?''

''நீங்கள் மட்டும் இளவரசராகத்தான் தற்போது நடந்து கொண்டிருக்கிறீர்களா?''

''என்னைப்பற்றிப் பிறகு பேசிக்கொள்ளலாம். மன்னரைப் பற்றிப் பேசு. இந்த நாட்டு மக்களால் முடிசூடியவர் அவர். மக்களுக்குக் கடன்பட்டவர். மக்களுக்கு நன்மைகளைச் செய்து அவர்கள் நல்வாழ்வு வாழ வழிசெய்ய வேண்டியவர். மக்களின் தயவாலன்றி மரபு வழியில் முடிசூடும் மன்னர்கள்கூட இப்படித்தான் கடமையாற்ற வேண்டும். ஆட்சி செய்ய வேண்டும். அப்படிச் செய்தாரா மன்னர்?''

பத்மினி பேசாமலிருந்ததால் தானே பேச முற்பட்ட விஜயன் ''பெண்ணே, பகவான் புத்தர் வாலிபராக இருந்தபோது அவரது தந்தையும் மன்னருமான சுத்தோதனர் என்ன செய்தார் தெரியுமா? தனது புதல்வர் கார் காலத்தில் கலக்கமின்றி வாழ ஏழு மாடிகளைக் கொண்ட இரம்மிய மாளிகையையும்

வேனிற்காலத்தில் வேர்த்து விறுவிறுத்துப் போகாமல் சுகமாக வாழ ஐந்து மாடிகளைக் கொண்ட அரம்மிய மாளிகையையும் பனிக்காலத்தில் நடுக்கமின்றி வாழ ஏழு மாடிகளைக் கொண்ட சுபதமாளிகையையும் கட்டி கஷ்டம் என்பதையே அறியாமல் வாழ வைத்தார். ஏன் தெரியுமா?'' என்று கேட்டான்.

பத்மினி எதுவும் பேசாததால் விஜயனே தொடர்ந்தான்.

''தானும் தன் மகனும் மட்டும் சுகபோகமாக வாழவேண்டும் என்ற சுயநலத்தில் மன்னர் அவ்வாறு செய்யவில்லை. அவரது மகன் இளமையிலேயே இல்லறத்தைத் துறந்து துறவறத்தை மேற்கொண்டு விடுவான் என்று முனிவர்கள் கூறிய காரணத்தாலும் தனக்குப் பின் நாட்டை ஆளவேண்டிய மகன் துறவறம் பெற்று போய்விடக் கூடாது என்ற காரணத்தாலும் துன்ப நிழல்கூட மகனின் மீது விழக்கூடாது என்று நினைத்து காலங்களுக்கு ஏற்றமாதிரி விதம்விதமான மாளிகைகளை கட்டியும் கலகலப்பூட்டும் சுற்றுப்புரத்தை உண்டாக்கியும் பாதுகாத்தார். அதேசமயம் மன்னர் நாட்டு மக்களைப் புறக்கணிக்கவில்லை. தனது கடமையாக எல்லா நன்மைகளையும் செய்து வந்தார். அவரது செயல்களை சுயநலம் என்று சொல்ல முடியுமா?''

பத்மினி மௌனமாய் இருந்ததால் விஜயனே தொடர்ந்தான்.

''மன்னர் சுத்தோதனர் இத்தனை ஏற்பாடுகளைச் செய்தும் அவரது மகன் எல்லாவற்றையும் வெறுத்து துறவறத்தை மேற்கொண்டு தவமியற்றி ஞானஒளி பெற்று புத்தரானார். இங்கே வங்கதேசத்து மன்னரின் கதை என்ன? புத்தருக்குக் கட்டியதுபோல் விதவிதமான உல்லாச மாளிகைகளை தனது கணக்கற்றப் பிள்ளைகளுக்கும் ஆசைநாயகிகளுக்கும் கட்டி கவலையின்றி வாழ வழிவகுத்தார். அரசாங்கப் பணத்தையெல்லாம் மேற்சொன்ன வகையறாக்களுக்கு கண்மூடித்தனமாகச் செலவிட்டார். மக்களை அறவே புறக்கணித்தார். அவர்கள் செலுத்திய வரிப்பணத்தைக்கூட தன் பிள்ளைகளின் கேளிக்கைகளுக்கு வாரி இறைத்தார். கோரிக்கை வைத்த மக்களையும் எதிர்க்க முற்பட்ட மக்களையும் அச்சுறுத்தினார். அடக்குமுறையைக் கையாண்டார். பலரை

இரக்கமின்றி அழித்தார். மக்கள் என்னிடம் முறையிட்டபோது நான் என் குரலை எழுப்பினேன். அறிவுரைகளைச் சொன்னேன். அவரோ என்னையும் ஏமாற்றத்தான் முயன்றாரே தவிர தன்னை மாற்றிக் கொள்ள முயலவில்லை. வேறு வழியில்லாமல் நான் கொள்ளைக்காரனானேன். அரசாங்கக் களஞ்சியத்தையும் கருவூலத்தையும் கொள்ளையடித்து மக்களுக்கு வழங்கினேன். தடுக்க வந்த அதிகாரிகளையும் அமைச்சர்களையும் வெட்டினேன். இப்படி மக்களுக்கு உதவுவதற்காக இளவரசனான நான் அடாவடி மன்னனை எதிர்த்துச் செயல்பட்டேன். மாறவேண்டிய மன்னரோ மாற்றமடையாமல் என் நண்பர்களை மானபங்கப்படுத்தி சிறையில் அடைத்திருக்கிறார். அரியணையைக் கவர முயல்வதாக என்மீது குற்றம் சாட்டி என்னைப் பிடிக்க ஆணைபிறப்பித்தார். இதெல்லாம் உனக்குத் தெரியுமென்றால் வெறும் நான்கு நாட்கள் அறிவுரை கூறிய காரணத்தாலேயே அவரது நம்பிக்கையை பெற்றுவிட்டதாகவும் அந்த நம்பிக்கையை காப்பாற்றுவதற்காக என்னைப் பிடித்துக் கொடுக்கப் போவதாகவும் கூறுவது விவேகமல்ல. வெட்கக்கேடான செயல்''-

பத்மினி ஏதோ பிரமையில் ஆழ்ந்திருந்தவள் போலிருந்து மீண்டாள்.

''நீங்கள் சொல்வதெல்லாம் சரி. ஆனால் நீங்கள் இளவரசர். நான் சாதாரணப் பெண். உங்கள் பொறுப்பு வேறு. என் போன்ற சாதாரணமானவர்களின் பொறுப்பு வேறு. இன்னும் சொல்லப்போனால் நான் இந்நாட்டவளே அல்ல. கோசலம் என் நாடு. அங்கேதான் நான் பிறந்தேன். வளர்ந்தேன். பிழைப்புக்காக பெற்றோர்களுடன் இந்த நாட்டிற்கு வந்தவள் நான். இந்த நாட்டைப் பற்றியோ மன்னனைப் பற்றியோ கவலைப்பட வேண்டிய அவசியம் எனக்கில்லை. பெற்றோருடன் கோசலத்திற்குத் திரும்பவிருந்த என்னை மன்னர்தான் தடுத்து இங்கேயே இருக்கும்படிக் கேட்டுக் கொண்டார். என்னை நம்புகிறார். அப்படிப்பட்டவருக்கு நான் கடன்பட்டவளாக இருக்க வேண்டியதுதானே முறை?''

''தவறாகப் பேசுகிறாய் பெண்ணே. நரிகளுக்குத் துணை போவது விவேகமாகாது. வெறும் நம்பிக்கை காரணமாக விசுவாசத்தைக் காட்ட விரும்பும் நீ எப்படிப்பட்டவனுக்கு அதைக் காட்ட முற்படுகிறாய் என்று யோசித்துப்பார். நீ உதவ நினைக்கும் மன்னன் நரியைவிடக் கேவலமானவனாக இருக்கிறான். தலைநகரில் திரியும் பிச்சைக்காரர்களைச் சுட்டிக் காட்டி அதை ஒழிக்கவும் மக்களுக்கு நன்மை செய்யவும் மன்னனுக்கு நீ ஆலோசனை கூறியதாகக் கேள்விப்பட்டேன். ஒப்புக்கொண்டானா அவன்? உன் யோசனையை ஏற்க கால அவகாசம் எதற்கு? உடனடியாகச் செயல்பட வேண்டியது தானே? உன்னை ஆலோசனைக்கு அழைத்ததிலிருந்து இன்றுவரை அவன் கவனமாக இருப்பது அவனைப் பாதுகாத்துக்கொள்வதிலும் தன் மகனைப் பாதுகாப்பதிலும் தானே தவிர பொது நலத்திலா இருக்கிறது? பொது நலத்தில் நீ சொன்ன ஆலோசனைகளைக் கேட்காமல் அவனது சுயநலத்திற்குச் சொல்லப்பட்ட ஆலோசனைகளை ஏற்று அமைச்சர்களையெல்லாம் சிறையில் தள்ளியிருக்கிறான் அவன். இப்படிப்பட்ட சுயநலவாதிகளுக்கா அறிவாளியான உன் திறமையும் விசுவாசமும் பயன்படவேண்டும்? சொந்த மகனும் இளவரசனுமான எனக்கில்லாத விசுவாசம் கோசல நாட்டுப் பெண்ணான உனக்கு எதற்கு? ஒன்றை யோசித்துப் பார். நானும் மன்னனைப்போல் - என் சகோதரர்களைப்போல் சுகவாசம் விரும்பியிருந்தால் யார் அதைத் தடுக்க முடியும்? சுகங்களை யெல்லாம் விட்டுவிட்டு பெயரையும் கெடுத்துக்கொண்டு கொள்ளைக்காரனாகி மக்களுக்காக ஏன் பாடுபடவேண்டும்? நல்ல நோக்கம் உள்ளவர்களுக்கும் நல்ல காரியங்களைச் செய்பவர்களுக்கும் உதவுவதும் விசுவாசமாக இருப்பதும்தான் அறிவுள்ள செயல். சுயநலம் பேணும் கேவலமானவர்களை மதிப்பதுகூட கேவலம்தான். இதற்கு மேலும் நீ வறட்டுப் பிடிவாதம் பிடிப்பாய் என்றால் பெண் என்றும் பாராமல் உன்னைக் கொன்றுவிட்டுத் தப்பவும் நான் தயங்கமாட்டேன்''

விஜயனின் உறுதியான பேச்சைக்கேட்டுச் சற்று அமைதியாக இருந்த பத்மினி, ''இளவரசே, என்னைக் கொன்றுவிட உங்களால் முடியலாம். அப்படிக் கொன்று

விட்டால் மட்டும் உங்களால் இந்தக் கர்ணபத்ர பங்கத்தைச் சுமந்து கொண்டு எளிதில் தப்பிவிட முடியாது. மன்னனுக்கு ஏற்கனவே நான் செய்தியனுப்பி விட்டதால் காவல் வீரர்கள் பெருமளவில் இங்கே வருவார்கள்'' என்று எச்சரிக்கும் குரலில் சொன்ன அவள் ''இந்த விலைமதிப்பற்ற பொருளை எதற்காகக் களவாடுகிறீர்கள்?'' என்று கேட்டாள்.

''என் சுக வாழ்க்கைக்காக அல்ல. நல்ல விஷயத்திற்காகத் தான். அதைப்பற்றி விவரமாகச் சொல்ல முடியாது'' என்றான் விஜயன்.

''அப்படியானால் என் நிபந்தனையொன்றை ஏற்றுக் கொண்டால் நீங்கள் தப்புவதற்கு அனுமதிக்கிறேன்''

''சொல்''

சொன்னாள் அவள். அதைக்கேட்டு அவன் மட்டுமல்ல அவனோடு இருந்தவர்களும் திகைத்தார்கள்.

''என்ன? இளவரசரிடமிருந்து பதிலையே காணோம்?'' என்று கேட்டாள் பத்மினி.

''பெண்ணே, நான் திருமணமானவன். மனைவி இருக்கிறாள்'' என்றான் விஜயன்.

''இப்போது இல்லை'' என்றாள் பத்மினி.

''இல்லையா? என்ன சொல்கிறாய் நீ?''

''இளவரசே, மன்னர் உங்கள் மீதான சந்தேகத்தைக் கிளப்பியபோதே உங்களைப் பற்றிய விவரங்களையெல்லாம் மும்முரமாகச் சேகரிக்க முற்பட்டேன். அப்போதுதான் தெரிந்தது உங்கள் மனைவியைப் பற்றிய விவகாரம். நீங்கள் இந்த நாட்டிலிருந்து மறைந்ததும் அவளுக்கு உங்கள்மீதான அன்பும் மறைந்திருக்க வேண்டும். அதற்கான காரணம் எனக்குத் தெரியாது. ஆனால் அவள் உங்கள் வீட்டைவிட்டு வெளியேறி விட்டாள். உங்களோடு மீண்டும் வாழும் விருப்பம் அவளுக்கு இல்லை. அவளை நீங்கள் மறந்துவிடுவதே நல்லது''

''இதை என்னால் நம்பமுடியவில்லை''

''நம்புவது கஷ்டம் தான். ஆனால் நான் கூறுவது பொய்யல்ல. சத்தியம்''

''அப்படியே வைத்துக் கொண்டாலும்...''

''பிறகென்ன தயக்கம்?''

''அதற்கில்லை. நீயும் நானும் மணந்து கொள்ள இதுவா நேரம்?''

''இப்போதே மணம் செய்து கொள்ளவேண்டும் என்று நான் சொல்லவில்லையே! ஓரிரு நாட்களில் நடந்தால் போதும். இப்போதைக்கு வாக்கு கொடுங்கள்''

''நீ என்னை இப்படித் திடீரென்று விரும்புவதற்குக் காரணம்?''

''உங்களுக்குக் கொஞ்சமாவது புத்தி இருக்கிறதா? இதையெல்லாம் இங்கேயா பேசமுடியும்? இன்றிலிருந்து நான்காம் நாள். ஹரகிரி மலையடிவாரத்திலுள்ள சிவன் கோயிலில் நாம் சந்திக்கிறோம். அன்றே நம் திருமணம். மற்றவைகளைப் பிறகு பார்க்கலாம். நீங்கள் உடனடியாகப் புறப்படுங்கள்'' என்றாள் பத்மினி.

★★★

அமாவாசையன்று எத்தனையோ முன்னேற்பாடுகளையும் பாதுகாப்புகளையும் செய்திருந்தும் நள்ளிரவில் குழப்பம் ஏற்பட்டபோது வெளியில் வந்து கொலைகாரனைப் பிடிக்கும்படி கட்டளையிட்டுவிட்டு வீட்டுக்குள் வந்தபோது அங்கே தன் மகன் ஜராசந்தன் காணாததால் பேரதிர்ச்சி அடைந்த சிகபாகு வீரர்களை அழைத்து மகனைத் தேடும்படி கூச்சலிட்டான். வீரர்கள் எங்கெங்கோ தேடிக்கொண்டிருந்த வேளையில் வீட்டிற்குள்ளேயே உணவுப் பொருள் கிடங்கில் ஏதோ முனகும் சப்தமும் உருளும் சப்தமும் கேட்கவே உள்ளே சென்றான் சிகபாகு. அங்கே மூட்டையொன்றிலிருந்து முனகல் வரவே ஓடிப்போய் மூட்டையை அவிழ்த்தபோது உள்ளே மூச்சுத்திணறிய நிலையில் சுருண்டு கிடந்தான் ஜராசந்தன். மூட்டையிலிருந்து வெளியே எடுத்து தரையில் படுக்க

வைத்தான். அதையடுத்து வைத்தியர் வரவழைக்கப்பட்டார்.

''இன்னும் சிறிது தாமதமாகியிருந்தால் இவர் மூச்சுத் திணறி இறந்திருப்பார்'' என்றார் வைத்தியர்.

''நீங்கள் பேசியபடியே தாமதம் செய்து இவனைக் கொன்று விடாமல் இருந்தால் போதும். சிகிச்சையை ஆரம்பியுங்கள்'' என்று கடுகடுத்தான் சிகபாகு.

மகனின் உயிர் காப்பாற்றப்பட்டு விட்ட நிலையில் காவல் வீரன் ஒருவன் ஓடிவந்து கர்ணபத்ர பங்கம் களவாடப்பட்டதாகக் கூறியதும் வெறிபிடித்த நிலைக்கு வந்த சிகபாகு அரண்மனைக்கு வந்தான். அங்கே காவல் வீரர்கள் செத்துக் கிடந்ததைக் கண்டதும் ''இவர்கள் ஏன் நிர்வாணமாக இருக்கிறார்கள்?'' என்று கேட்டான்.

''இவர்களைக் கொன்ற கொலையாளிகள் உடைகளை உருவி அணிந்து கொண்டிருக்க வேண்டும் மகாராஜா'' என்றான் ஒருவீரன்.

''அதாவது நம் வீரர்கள் உடைகளை அணிந்து கொண்டு அவர்களுக்குப் பதிலாக இங்கே காவலுக்கு நின்றிருக்க வேண்டும் என்கிறாய்.''

''ஆம் மகாராஜா''

''எதற்காக?''

''நம் கண்ணில் மண்ணைத் தூவத்தான். பார்க்கிறவர்களுக்கு இங்கே காவல் இருக்கிற மாதிரி தெரியும். சந்தேகம் வராது. இந்த நேரத்தில் திருடர்கள் அரண்மனைக்குள் நுழைந்து நகையைத் திருடியிருக்க வேண்டும்''

அடுத்து சிகபாகு கர்ணபத்ர பங்கம் இருந்த இடத்திற்குச் சென்றான். அந்த இடம் ரணகளமாயும் அலங்கோலமாயும் கிடந்ததைக் கண்டான். அங்கே காவல் வீரர்களும் முதலைகளும் செத்துக் கிடந்ததையும் கண்டான். என்ன நடந்தது என்பதைச் சரியாக ஊகிக்க முடியவில்லை என்றாலும் பெரும் சாகசம் நடந்திருக்க வேண்டும் என்றும் கருத முடிந்தது.

மகன் உயிர் பிழைத்துவிட்ட நிலையில் நாட்டின் கௌரவச் சின்னம் களவாடப்பட்டதை அவனால் தாங்க முடியவில்லை.

இந்த நிலையில் வேறொரு காவலன் வந்து ஒரு செய்தியைக் கூறியதும் பற்களை நறநறவெனக் கடித்தான் சிகபாகு.

அவனது முகம் தணலாய்ச் சிவந்தது.

◈◈◈

## அத்தியாயம் பதினொன்று

# மன்னனின் மாற்றம்

கர்ணபத்ர பங்கம் களவுபோன விஷயத்தை ஜீரணிக்க முடியாமலிருந்த நிலையில் காவல் வீரன் ஒருவன் வந்து ''மகாராஜா, சிறையில் இருந்த இளவரசனின் தோழர்கள் எழுநூறு பேரும் தப்பி விட்டார்கள்'' என்று கூறியதும் ஆற்ற முடியாத நிலையில் பற்களை நறநறவென்று கடித்தான் சிகபாகு. ''ஒழியுங்கள் எல்லோரும். யாரும் எனக்கு முன்னால் நிற்க வேண்டாம். முட்டாள்கள்'' என்று எரிந்து விழுந்தான். அங்கிருந்து புறப்பட்டு அந்தப்புரத்தை அடைந்தான். இன்று வரமாட்டான் என்று எதிர்பார்த்திருந்த அந்தப்புர அழகிகள் எதிர்பாராதவிதமாக அவன் வந்து விட்டதால் தூக்கத்திலிருந்து எழுந்து ஓடோடி வந்தார்கள். மான்களைப் போல் ஓடிவந்த அழகிகளை மூர்க்கமாக தாக்கித் தள்ளிவிட்டுத் தன் அறைக்குச் சென்று தாளிட்டுக் கொண்டான்.

தலையின் பாரம் அவனை பஞ்சணையில் வீழ்த்தியது. எதிர்பாராத விஷயங்கள் அடுத்தடுத்து நேர்ந்து விட்டதாலும் அவற்றைத் தன்னால் தடுக்க முடியாமல் போய் விட்டதாலும், தனக்கு ஆறுதல்கூற யாரும் இல்லாததாலும் ஏதோ அனாதையாகி விட்டதைப்போல் நினைத்தான் சிகபாகு. அரசாங்கப் பணத்தையெல்லாம் தன் பிள்ளைகளுக்கும் ஆசை நாயகிகளுக்கும் வாரி இறைத்திருந்தும் அவர்களால் தனக்கு எந்த உபயோகமும் ஏற்படவில்லை என்பதையும் அவர்களுக்காக

தான்தான் கவலைப்பட வேண்டியிருக்கிறது என்பதையும் உணர்ந்த அவனுக்குத் தன் தவறு புரிந்தது. முறையாக ஆட்சி செய்து மக்களை ரட்சித்து அமைச்சர்கள் முதலியவர்களைச் சரியாகப் பயன்படுத்தியிருந்தால் இந்த அசம்பாவிதங்களைத் தவிர்த்திருக்கலாம் என்று தோன்றியது. இனியாவது சரியாக நடந்து கொண்டாலன்றி நாட்டைக் காப்பாற்ற முடியாது என்று நினைத்த அவன் அதற்கு என்ன செய்யலாம் என்று யோசித்தான். யோசித்தபடியே உறங்கியும் போனான்.

மறுநாள் அவன் கண்விழித்தபோது தன்னிடம் ஒரு சுறுசுறுப்பு உண்டாகியிருந்ததை உணர்ந்தான். காவலாளியை அழைத்து அரண்மனையில் இருக்கும் பார்வையற்ற முதியவரை அழைத்து வரும்படிச் சொன்னான். அரண்மனைக்குப் போய் வந்த காவலாளி அங்கே முதியவர் இல்லை என்று தெரிவித்ததும் அவனுக்கு எல்லாமே புரிந்த மாதிரி இருந்தது. லேசாகச் சிரித்துவிட்டு சிறையில் உள்ள அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் உட்பட பலரைக் குறிப்பிட்டுச் சொல்லி அனைவரையும் அன்று பிற்பகல் அரண்மனையின் சபா மண்டபத்திற்கு வரச்சொல்லி கட்டளையிட்டான். அவனுக்குள் பல்வேறு தீர்மானங்கள் உண்டாயின.

அன்று பிற்பகலில் அரண்மனையை நோக்கி வந்த பிரமுகர்களில் பலர் மன்னனின் கட்டளையால் ஆச்சரியப் பட்டார்கள். சிலர் அச்சப்பட்டார்கள். பெரும்பாலானவர் களுக்கு அலட்சியமே அதிகமாக இருந்தது. இந்த சுகவாசியான மன்னன் என்ன அப்படி பிரமாதமாகப் பேசிவிடப் போகிறான் என்று அவர்கள் நினைத்தார்கள். எல்லோரும் வந்து சேர்ந்த பின் சபாமண்டபம் நிரம்பி வழிந்தது. சிலர் ஆசனங்கள் இல்லாததால் நின்றபடி இருந்தார்கள். சிகபாகு வழக்கமாக சபா மண்டபத்திற்கு வரும்போது காட்டிக்கொள்ளும் ஆர்ப்பாட்டங்கள் எதையும் காட்டிக் கொள்ளாமல் அமைதியாக வந்து அமர்ந்தான். அவன் வரவைக் குறிக்கும் வாத்தியங்கள் கூட முழங்கவில்லை. அரியணையில் அமர்ந்ததும் ஆசனமில்லாமல் நின்றிருந்தவர்களைக் கவனித்த அவன் காவலர்களை அழைத்து ஆசனங்களைப் போடச் சொல்லி அவர்களை அமர வைத்தான்.

பிறகு பேச முற்பட்டு ''நேற்று எதிர்பாராத சம்பவங்கள் பல நடந்துவிட்டன. அவை எல்லாமே நாட்டின் கௌரவத்திற்குப் பாதகமானவை என்பதில் சந்தேகமில்லை. இந்த அசம்பா விதங்கள் எல்லாம் நடைபெறாமல் தடுக்க என்னால் மட்டும் முடியாது. உங்கள் உதவியும் மக்களின் ஆதரவும் இருந்தால்தான் முடியும். துரதிஷ்டவசமாக உங்களையெல்லாம் நானே புறக்கணித்து விட்டதால் எல்லா அசம்பாவிதங்களுக்கும் நானே பொறுப்பாகிவிட்டேன். அறிவாளிகளாகிய உங்களில் பலரை அவமானப்படுத்தி சிறையில் அடைத்தேன். பலரை உதாசீனப் படுத்தினேன். யாருக்கும் உரிய மரியாதையினை நான் தரவில்லை. இதற்கெல்லாம் நீங்கள் என்னை மன்னிப்பதாக இருந்தால் உங்களைக் கௌரவப்படுத்த நான் தாயராக இருக்கிறேன். முதலில் உங்களது மன்னிப்பு கிடைத்தால்தான் நான் இனி மேற்கொண்டு பேசமுடியும்'' என்றான்.

அவன் பேசிய தோரணையிலிருந்து உண்மையாகத்தான் பேசுகிறான் என்று அங்கிருந்தவர்கள் உணர்ந்தாலும் உடனடியாக நம்பி அங்கீகரிக்கத் தயங்கியதால் அமைதியாக இருந்தார்கள்.

அதைக் கண்ட சிகபாகு ''என்னை நீங்கள் நம்பவில்லை என்பதை உங்கள் அமைதி எனக்குப் புலப்படுத்துகிறது. இதில் எனக்கு ஆச்சரியம் ஒன்றுமில்லை. பலநாட்களாக உங்களிடம் அவநம்பிக்கையையும் அவமரியாதைகளையும் விதைத்த நான் ஒரே நாளில் நம்பிக்கையை எதிர்பார்ப்பது சரியில்லைதான். வேண்டுமானால் இன்னும் சில விஷயங்களைச் சொல்கிறேன். இனிமேல் என் பிள்ளைகளுக்குச் சுகவாழ்வு கிடையாது. அத்தனை பேர்களையும் வங்கநாட்டின் பல பகுதிகளுக்கு அனுப்பி அந்தந்தப் பகுதிகளுக்குத் தலைவர்களாக நியமிக்கப் போகிறேன். அவர்களுக்கு நிதி உதவியோ சலுகைகளோ எதுவும் கிடையாது. திறமையைப் பயன்படுத்தி உழைத்து முன்னேற விருப்பமுள்ளவர்கள் அந்தப் பதவிகளில் அமரலாம். விருப்பமில்லாதவர்கள் நாட்டைவிட்டு வெளியேற்றப் படுவார்கள். பதவியில் அமருபவர்கள் என்னைப் போல நடந்து கொள்ள முற்பட்டால் தாட்சண்யமின்றி தண்டிக்கப்படுவார்கள். இவர்களில் யார் உண்மையாக உழைத்து மக்களுக்கு

நன்மைகளைச் செய்து அவர்களது நம்பிக்கைக்குப் பாத்திரமாகிறார்களோ அவர்கள்தான் எனக்குப் பின் அரியணையில் அமருவார்கள். யாருமே தகுதி பெறவில்லை யென்றால் தகுதியுள்ளவனை மக்களே தேர்ந்தெடுக்கலாம். இங்கே நான் ஓர் உண்மையைச் சொல்லிவிட விரும்புகிறேன். நீங்களெல்லாம் என்னைச் சிங்கத்தைக் கொன்ற மாவீரன் என்றும் உங்களையெல்லாம் அச்சிங்கத்திடமிருந்து காப்பாற்றியவன் என்றும் உயர்வாகக் கருதி இந்த நாட்டின் சிம்மாசனத்தை எனக்கு அளித்தீர்கள். ஆனால் உண்மை அதுவல்ல. நானும் என் பெற்றோரும் காட்டில் விலங்குகளோடு வாழ்ந்தவர்கள். குறிப்பாக சிங்கம் போன்ற கொடிய விலங்குகளோடு நண்பர்களாக வாழ்ந்தவர்கள். நாங்கள் நகரத்திற்கு குடிபெயர்ந்தபோது ஒரு சிங்கம் என் பிரிவைத் தாங்கமுடியாமல் இறந்தது. மற்றொன்று என்னைத்தேடி நகரத்திற்கு வந்தது. அன்போடு அணுகிய அதை இரக்கமின்றி நான் கொன்றேன். யானைமீது வைக்கப்பட்ட பொன்னை அடையும் ஆசையால் உருவில் சிங்கமாகவும் பழக்கத்தில் மானாகவும் வந்த அன்புச் சிங்கத்தை கொன்றேன். நீங்கள் அதை அறியாமல் மாவீரன் என்று மதித்து மரியாதை காட்டினீர்கள். பேராசையில் கிடந்த எனக்கு அதிஷ்டவசமாக அரியணை கிடைத்ததால் கண்மூடித்தனமாக நடந்து கொண்டேன். உங்களுக்கு முன்னால் இங்கே அமர நான் தகுதியற்றவன் என்பதை ஒப்புக் கொள்கிறேன்'' என்றான்.

மன்னன் உண்மையைப் பேசுவதையும் அவனது ஆணவம் படிப்படியாக அழிவதையும் உணர்ந்த அமைச்சர் முதலானோர் இன்னும் பேச வேண்டியதை அவன் பேசி முடிக்கட்டும் என்று நினைத்து அமைதியாகவே இருந்தார்கள்.

அவர்களது மனநிலையை ஓரளவிற்கு உணர்ந்திருந்த சிகபாகு தொடர்ந்து பேசமுற்பட்டு ''எனது தகுதியின்மையை உங்களுக்குச் சொல்லிவிட்டாலும் அரியணையிலிருந்து அதுவும் இந்த நிலையில் இறங்கத் தயாராக இல்லை. இதுநாள் வரை சுயநலம் காரணமாக நான் உருவாக்கிய சிதைவுகளை நானே சரிசெய்து கௌரவமான நிலைக்குத் திருப்ப விரும்புகிறேன். அதை நான் மன்னனாக இருந்துதான் செய்ய முடியும்.

மன்னனாக இருந்து எந்த மக்களுக்கு துரோகங்களையும் பாதகங்களையும் செய்தேனோ அந்த மக்களுக்கு இன்று முதல் நல்லதைச் செய்வேன் என்று சூளுரைக்கிறேன். என்னிடமும் என் பிள்ளைகளிடமும் குவிந்து கிடக்கும் செல்வங்களை எடுத்து மக்கள் நலனுக்காகப் பயன்படுத்துவேன். இதுதான் என் நிலை.. இனி நீங்கள் உங்கள் அபிப்பிராயங்களைச் சொல்லலாம்'' என்று சொல்லி நிறுத்தினான்.

சபா மண்டபத்தில் இருந்தவர்கள் தற்போது பெரும் திருப்தியை அடைந்தார்கள். படைத்தலைவனான ராகுலன் எழுந்து ''மகாராஜா, எல்லா விஷயங்களையும் கூறினீர்கள். எங்களுக்கு மகிழ்ச்சி. ஆனால் இளவரசரைப்பற்றி ஏன் எதுவும் கூறவில்லை? நமது நாட்டு கௌரவச் சின்னமான கர்ணபத்ர பங்கத்தைக் கவர்ந்து சென்றவர் அவர் தான்'' என்றான்.

''தெரியும் ராகுலா. இக்களவுக்கு மட்டுமல்ல என் மகன் ஜராசந்தனைக் குற்றுயிரும் குலையுயிருமாய் ஆக்கியது - சிறையில் இருந்த எழுநூறு தோழர்களைத் தப்பச் செய்தது ஆகிய எல்லாவற்றுக்குமே விஜயன்தான் காரணம் என்று நான் நினைக்கிறேன். அதற்கான நடவடிக்கை பற்றி பேசுவதற்கு முன் நாம் பரஸ்பரம் விசுவாசத்துடன் இருக்கவேண்டும். அதை நீங்கள் வெளிப்படுத்தாத நிலையில் நான் விஜயனைப் பற்றிப் பேசிப் பயனில்லை''

''விசுவாசம் பற்றிய சந்தேகம் தங்களுக்கு வேண்டாம் மகாராஜா. மாறவே மாட்டார் என்று நினைத்திருந்த நிலையில் தாங்கள் மாறியிருக்கும்போது அதை மறுக்கும் பிடிவாதம் எங்களுக்கு எப்படி வரும்? அனைவரும் தங்களுக்கு ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறோம்'' என்றார் தலைமை அமைச்சராக இருந்த அமாத்யர்.

அங்கிருந்த எல்லாருமே தங்கள் ஆதரவை தெரிவித்தார்கள்.

அதைக் கண்ட சிகபாகு ''மிகவும் மகிழ்ச்சி. இப்போதைக்கு நாம் கலைவோம். நாளைக்கு முக்கியமான தலைவர்கள் மட்டும் கூடி முடிவெடுப்போம்'' என்றதும் அவை கலைந்தது.

சிகபாகுவின் பேச்சு எல்லோருக்கும் தெரிந்துவிட்ட நிலையில் அவனது பிள்ளைகள்தான் பதறிப் போனார்கள்.

மன்னன் மிகவும் கடுமையானதும் நியாயமற்ற முடிவை எடுத்து விட்டதாக எதிர்ப்பு தெரிவித்தார்கள். மன்னனோ அதைப்பற்றிக் கவலைப்படவில்லை. அதிகாரிகளை அனுப்பி அவர்களது மாளிகைகளில் இருந்த செல்வங்களை உடனடியாகப் பறிமுதல் செய்தான். முப்பத்து நான்கு பிள்ளைகளுக்கும் வங்கநாட்டின் முப்பத்து நான்கு பகுதிகளை அறிவித்து அங்கே பயணப்படும்படி உத்தரவுகளைப் பிறப்பித்தான். நியமனங்களில் விருப்பம் இல்லாதவர்கள் உடனடியாக நாட்டைவிட்டு வெளியேறிட வேண்டும் என்றும் இல்லை யென்றால் கைது செய்யப்பட்டு பாதாள சிறையில் அடைக்கப் படுவார்கள் என்றும் அறிவிப்பு செய்தான். அவனது ஆசை நாயகிகள் ரொம்பவே நொந்து போனார்கள். யாரை எது செய்தாலும் தங்கள் விஷயத்தில் கைவைக்க மாட்டான் என்று மிகவும் நம்பியிருந்தார்கள் அந்த அழகிகள். தங்களது உடலங்கங்கள் காட்டும் ஜாலங்கள் அவனை லேசில் மறக்கச் செய்யாது என்று கர்வப்பட்டுக் கொண்டிருந்த அவர்களை நள்ளிரவிலேயே அவரவர் மாளிகைகளை விட்டு வெளியேற்றியதால் சபித்துக் கொண்டே அகன்றார்கள். அதோடு அந்தப்புரத்தையும் சிகபாகு காலி செய்தான். திருந்துவதற்கு முழுமையாக விரும்பி ஒருவன் செயல்பட்டால் எவ்வளவு வேகமாகச் செயல்பட முடியும் என்பதை நிரூபித்தான் சிகபாகு. அதைக்கண்ட அமைச்சர்களும் மற்றவர்களும் அசந்து போனார்கள். பொழுது விடிவதற்குள் நிலைமைகள் தலைகீழாக மாறிவிட்டதைக் கண்ட மக்களும் வியந்தார்கள்.

மறுநாள் எல்லோருக்குமே பொழுது இனிமையாக விடிந்தது. மாறுபட்ட தலைநகரைக் கண்ட மக்கள் ஆங்காங்கே கூடி சிகபாகுவை பாராட்ட முற்பட்டார்கள்.

சிகபாகுவும் திருப்தியாக அவையைக் கூட்டினான். முக்கியமானவர்களான அமாத்யர், படைத்தலைவன், கோட்டைத் தளபதி, துறைமுகக் காவலன், ஒற்றர் படைத் தலைவர், கப்பல் படைத்தளபதி, ஊர்க்காவல் படைத்தலைவன், சிறை அதிகாரி, முக்கியமான அமைச்சர்கள் என சிலரை மட்டுமே அழைத்திருந்ததால் சபை கச்சிதமாக இருந்தது.

சிகபாகுவே பேசமுற்பட்டு "என் மூத்த புதல்வனும் இளவரசனுமான விஜயனையும் அவனது தோழர்களையும் உடனடியாகப் பிடிக்க வேண்டும். அநேகமாக அவர்கள் கர்ணபத்ர பங்கத்தைத் திருடியிருப்பதால் இந்த நாட்டைவிட்டு ஓடவே தயாராக இருப்பார்கள். எனவே நாட்டின் எல்லைகளை மூடும்படியும் அங்கெல்லாம் காவலை அதிகரிக்கும்படியும் இரவே உத்தரவிட்டு வந்தேன். இன்னேரம் எல்லைப் புறங்களுக்கு ஆட்கள் போயிருப்பார்கள். அதேபோல் தலைநகர கோட்டையின் வாசல்களும் மூடப்பட்டு உள்ளே வருபவர்களையும் வெளியே செல்பவர்களையும் கடுமையான கண்காணிப்பிற்கு உட்படுத்தவேண்டும். துறைமுகமும் மூடப்படுகிறது. கடல்மூலம் அவர்கள் தப்பாத வண்ணம் கடல் வாயில் மரக்கலங்களால் பாதுகாக்கப்படும். நான் கூறியவற்றில் மாற்றங்கள் தேவைப்பட்டால் கூறலாம்" என்றான்.

அமாத்யர் எழுந்து "அனைத்தையும் தாங்களே சரியாகச் சொல்லிவிட்டீர்கள். அவற்றில் மாற்றம் எதுவும் கொண்டு வரத்தேவையில்லை என்று நினைக்கிறேன். அதோடு கர்ணபத்ர பங்கம் களவாடப்பட்டு ஒரு நாளைக்கு மேலாகிவிட்டது. கள்வர்கள் ஏற்கனவே வங்கநாட்டை விட்டு தாண்டியும் இருக்கலாம். எனவே மகத நாட்டிலும் காமரூபத்திலும் நம் ஒற்றர்களை அனுப்பித்தேடுவது நல்லது என்று நினைக்கிறேன்" என்றார்.

எல்லோருமே அதற்குச் சம்மதம் தெரிவித்ததால் சிகபாகுவும் ஒப்புக் கொண்டான்.

படைத்தலைவன் ராகுலன் எழுந்து "மக்கள் தங்களது மாற்றத்தால் மகிழ்ச்சி அடைந்து பாராட்டிக் கொண்டிருக் கிறார்கள். உதவுவதற்கு தாங்கள் முன்வந்து விட்ட பிறகு அவரை முன்புபோல ஆதரிக்க வேண்டிய அவசியம் மக்களுக்கு இல்லை. எனவே நாட்டின் கௌரவச் சின்னமான கர்ணபத்ர பங்கத்தை இளவரசர் சுயநலத்தின் காரணமாகக் களவாடி விட்டார் என்று ஊரெங்கும் அறிவித்து இளவரசரின் சுயரூபத்தை மக்களுக்கு வெளிப்படுத்தலாம். அவரைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்குப் பரிசை அறிவிக்கலாம்" என்றான்.

''நீ கூறுவது உடனடியாகப் பயனளிக்கும் என்று தோன்றவில்லை. கெட்டவனான நான் நல்லவனாக மாறியதற்கு தகுந்த அடையாளங்களை நான் காட்டி விட்டதால் மக்கள் என்னை நம்புகிறார்கள். ஆனால் நல்லவனான விஜயன் கெட்டனாகி விட்டான் என்பதற்கு கர்ணபத்ர திருட்டு மட்டும் அடையாளமாக அமையாது. இந்தத் திருட்டை தங்கள் நலனுக்காக விஜயன் செய்திருக்கலாம் என்று மக்கள் நினைக்கலாம். எதற்கும் நீ சொன்ன உபாயத்தைப் பரிட்சித்து பார்ப்பதால் தவறொன்றும் இல்லை. விஜயனைப் பற்றி மக்களிடம் நாம் அதிகமாகப் பேசாமல் இருப்பதே நல்லது. அவர்களாகவே அவனைப்பற்றி விரைவிலேயே புரிந்து கொண்டு விலக்கிவிடுவார்கள்'' என்று கூறிய சிகபாகு ஒற்றர் படைத்தலைவனைப் பார்த்து ''நம்மில் திறமைசாலியான பலரை விஜயனுக்கு விசுவாசி போல நடிக்க வைத்து ஆங்காங்கே உலவவிடுங்கள். அவர்களை விஜயன் சந்திக்கலாம். அவனைப் பிடிக்க இந்தமுறை ஓரளவிற்கு உதவும். என்ன சொல்கிறீர்கள்?'' என்று கேட்டான்.

''செய்யலாம் மகாராஜா. அதோடு நம் ஒற்றர்களையும் மாறுவேடங்களில் பல இடங்களில் அலைய விடுகிறேன். இளவரசரைச் சேர்ந்த யாராவது ஒரு சிலர் கிடைத்தால்கூட அவர்களைக் கொண்டு எல்லோரையும் பிடித்துவிடலாம்'' என்றான் ஒற்றர் படைத்தலைவன்.

இவ்வாறு ஆலோசனைகளும் மாற்று ஆலோசனைகளும் நடந்தன. நடந்த ஆலோசனைகள் செயல்வடிவமும் பெற்றன. இரண்டே நாட்களில் வங்கதேசம் ஒரு இரும்பு வளையத்திற்குள் வந்தது. இதிலிருந்து தப்ப முடியாது என்று திட்டமாக நம்பினான் சிகபாகு.

அதேசமயம் ஹரிகிரி மலைக்காட்டில் இருந்த விஜயனுக்கு இந்த விஷயம் கூறப்பட்டபோது ''நம் திறமைக்கு ஏற்ற சவால் தான் இது. இப்படித்தான் என் தந்தை இருந்திருக்க வேண்டும். இப்போதாவது மாறியிருப்பதில் எனக்கு மகிழ்ச்சிதான். சதுர்வேதியிடம் நான் அனுப்பிய ஒற்றைக் கண்ணன் அனேகமாக நாளை வந்துவிடுவான் என்று நினைக்கிறேன். வந்தபின் நமது திட்டங்களைப்பற்றி பேசுவோம்'' என்றான் விஜயன்.

விஷயங்களில் ஆலோசனை கேட்டிருந்த சிகபாகு கடந்த நான்கு நாட்களாக அவளை அழைத்ததாகவோ தொடர்பு கொண்டதாகவோ ஒரு செய்தியும் வராததால் அவள் புறக்கணிக்கப்பட்டிருப்பாளோ என்று நினைத்தான் விஜயன். அது உண்மையாக இருக்கலாம் என்று தோன்றியது அவளைப் போய் சந்திக்க வேண்டிய அவசியம் இல்லை என்று தோன்றினாலும் அமாவாசையன்று அவள் உதவியில்லாமல் தன்னால் தப்பியிருக்க முடியாது என்பது உண்மையாதலால் அவளை ஏமாற்ற அவனது மனம் இடம் தரவில்லை. திருமணம் செய்து கொள்வது பற்றி அவன் ஒரு முடிவுக்கு வரவில்லையென்றாலும் அவளைப்போய் சந்திப்பதால் ஒன்றும் குறைந்துவிடாது என்று கருதிய அவன் அவள் குறிப்பிட்ட நாளன்று காலை நேரத்திலேயே வணிகனைப் போன்ற வேஷத்தைப் போட்டுக்கொண்டு ஹரகிரி மலையின் அடிவாரத்தில் இருந்த சிவன் கோயிலுக்குச் சென்றான். தலைநகரைப் பொறுத்தவரை இரண்டு மலைகளின் அடிவாரத்தில் இருந்த சிவன் கோயிலும் விஷ்ணு கோயிலும் பிரதானமாக இருந்தபடியால் அங்கே நிறைய பேர் வந்து வழிபாடு செய்தார்கள். அதோடு சிகபாகு நான்கு நாட்களாக விஜயனைத் தேடுவதற்கு பல்வேறு கெடுபிடிகளை உண்டாக்கியிருந்ததால் ஆலயத்தில் காவல் வீரர்களும் ஒற்றர்களும் கணிசமாக இருந்தார்கள். விஜயனை அங்கே வரும்படிக் கூறியபோது பத்மினி இத்தகைய கெடுபிடிகளையும் காவல்களையும் எதிர்பார்க்கவில்லை. இப்படிப்பட்ட நிலையில் விஜயனை எப்படி அங்கே சந்திப்பது என்றும் திருமணம் செய்து கொள்வது என்றும் புரியாமல் ஆலயத்திற்குள் வந்து தரிசனம் செய்துவிட்டு ஆலயத் திருச்சுற்றில் வலம் வந்து கொண்டிருந்தாள்.

விஜயன் ஆலயத்திற்கு வந்தபோது ஆலயவாசலில் இரண்டு ரதங்கள் நின்றிருந்ததையும் அவற்றைச் சுற்றி வீரர்கள் கண்காணித்துக் கொண்டிருந்ததையும் கண்டான். தலைநகரைச் சேர்ந்த தனவந்தர்கள் அல்லது அமைச்சர்கள் யாராவது ஆலயத்திற்கு வந்திருக்கலாம் என்று தான் நினைத்தானே தவிர சிகபாகு'' வந்திருப்பான் என்று சிறிதும் எதிர்பார்க்கவில்லை.

அதற்குக் காரணம் சிகபாகுவிற்கு ஆலயங்களுக்குச் செல்லும் வழக்கம் கிடையாது. விஜயனுக்குத் தெரிந்து அவனது தந்தை கடவுளைப்பற்றி பேசியதுகூட இல்லை. அந்த நிலையில் சிகபாகு சிவன் ஆலயத்திற்குள் வந்தது மட்டுமின்றி பத்மினியிடம் பேசிக் கொண்டிருந்ததைக் கண்டதும், திகைப்படைந்தான். தான் மாறுவேடத்தில் இருந்ததால் சிகபாகுவிற்கும் பத்மினிக்கும் தன்னை அடையாளம் தெரியாது என்பதால் அவர்களுக்கு அருகில் சென்றான் விஜயன். ஆனால் மன்னனின் அருகில் காவல் வீரர்கள் சிலர் இருந்த காரணத்தால் அங்கு நிற்க முடியவில்லை அவனால். மன்னன் அங்கிருந்து கிளம்பிச் சென்று காவல் வீரர்கள் அகன்றபின் சுற்றுப்புரத்தை நன்றாக நோட்டம் விட்டுவிட்டு உடனடியாக பத்மினியிடம் செல்லாமல் சற்றுநேரம் கழித்த பின்பே அவளிடம் சென்று ''பத்மினி, நான்தான் விஜயன். இங்கே காவல் அதிகமாய் இருக்கிறது. சந்தித்துப் பேசமுடியாது. ஆலயத்திற்கு வடக்கே ஆற்றங்கரையில் நிறைய பேர் உட்கார்ந்திருப்பார்கள். அங்கே கொகுடிக் கொடிகள் நிறைந்த மேடையொன்றிருக்கும். அங்கே வந்துவிடு. நானும் வருகிறேன்'' என்று சொல்லிவிட்டு அகன்றான்.

இருவரும் தங்களை யாரும் கண்காணிக்கவில்லை என்று உறுதி செய்து கொண்ட பிறகே ஆற்றங்கரையில் சந்தித்துக் கொண்டார்கள்.

''என்னைத் தப்பச் செய்த உனக்கு நன்றி பத்மினி'' என்று நேராக பேசவேண்டிய விஷயத்திற்கு வந்தான் விஜயன்.

''என்னிடமிருந்து மீண்டு விட்டாலும் மன்னரிடமிருந்து இன்னும் நீங்கள் தப்பவில்லை. அவர் இந்த நாட்டையே வலையாக மாற்றியிருக்கிறார். நான்கு நாட்களாக எல்லாமே தலைகீழாக மாறியிருப்பதை கவனித்தீர்களா? எப்படி தப்பப் போகிறீர்கள்?'' என்று கேட்டாள் பத்மினி.

''நீ தான் இருக்கிறாயே பத்மினி?''

''என்னால் என்ன செய்ய முடியும் இதில்?''

''என்ன இப்படிச் சொல்லிவிட்டாய்? மன்னரின் ஆலோசகரே நீ தானே?''

''விஷயம் தெரிந்து கேட்கிறீர்களா? தெரியாமல் கேட்கிறீர்களா? மன்னருக்கு ஆலோசனை கூற பழையபடி அமைச்சர்களும் அறிவாளிகளும் வந்து விட்டார்கள். என் ஆலோசனை இனி அவருக்குத் தேவையில்லை''

''தேவையில்லை என்று அவர் உன்னிடம் சொன்னாரா?''

''கடந்த நான்கு நாட்களாக என்னை அவர் அழைக்கவே இல்லை''

''அதனால் உன் ஆலோசனை தேவையில்லை என்றாகிவிடுமோ?''

''தற்போது மிகவும் முக்கியமான விஷயம் தங்களைப் பிடிப்பதுதான். இது விஷயமாக என்னிடம் எதுவும் கேட்கவில்லை. அமைச்சர்களையும் அதிகாரிகளையும் வைத்துக் கொண்டு பல ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார். இது எதைக்காட்டுகிறது? நான் தேவையில்லை என்பதைத்தானே?''

''அப்படியானால் ஆலயத்திற்குள் அவர் உன்னிடம் என்ன பேசினார்?''

''அதை நீங்கள் பார்த்தீர்களா?''

''பார்த்ததால் தான் கேட்கிறேன்''

''என்னை இங்கே பார்த்தபோது வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்தார். நான் இங்கே தரிசனத்திற்காகத் தினமும் வருவதாகச் சொன்னேன். அவர் ஆலயத்திற்கு வருவது இதுவே முதல் தடவை என்றும் ஏதோ ஒரு சக்தி தன்னை இங்கே அனுப்பியதாகவும் சொன்னார். தான் நல்ல மனிதனாக மாறிவிட்டதையும் அதையடுத்துச் செய்த மாற்றங்களை யெல்லாம் சொன்னார். இதையெல்லாம் என்னிடம் ஏன் சொல்கிறீர்கள் மகாராஜா என்று நான் கேட்டேன். பழைய மன்னனாகவே இருந்திருந்தால் உன்னிடம் பேசியிருக்க மாட்டேன். நல்லவனாக மாறிவிட்டதால் தான் நன்றியுணர்ச்சியில் பேசுகிறேன் என்று சொன்னார். அவரது மாற்றம் குறித்து நான் என் மகிழ்ச்சியைத் தெரிவித்தேன். அவரே மாற்றமானது முழுமையடையவில்லை என்றும் முழுமையடைய வேண்டுமானால் நான் நாளைக்கு

அரண்மனைக்கு வரவேண்டும் என்றும் என்னிடம் முக்கியமான விஷயம் ஒன்றைப்பற்றிப் பேசவேண்டும் என்றார்''

''அநேகமாக உன்னை அந்தரங்கமான ஆலோசகராக நியமிப்பார் என்று நினைக்கிறேன்''

''இளவரசே, அந்தப் பதவியெல்லாம் எனக்கு எதற்கு? பதவியைப் பெற வாய்ப்பிருந்தபோதே அதற்கு நான் விரும்பவில்லையே?''

''வங்கதேசத்தின் மன்னருக்கு அந்தரங்க ஆலோசகராகப் பதவி வகிப்பதென்பது லேசான விஷயமோ அற்பமானதோ அல்ல. அதுவும் நல்ல மனிதனாக மாறியிருக்கும் நிலையில் இப்படிப்பட்ட பதவியை வகிப்பது மகத்தானது''

''எப்படி நீங்கள் இவ்வாறு பேசுகிறீர்கள் என்று எனக்குத் தெரியவில்லை. என்னைச் சோதித்துப் பார்க்கிறீர்களா?''

''அப்படிப்பட்ட அற்ப ஆசைகளில் நான் இறங்கியதில்லை பத்மினி. நான் உண்மையைத்தான் சொல்கிறேன்''

''உங்கள் பேச்சு எனக்கு விளங்கவில்லை. உங்களை மணந்துகொண்டு மன்னருக்கு எப்படி நான் ஆலோசகராக இருக்கமுடியும்? உங்கள் நிழலில் இருக்க வேண்டிய நான் அவர் நிழலை எப்படி நாட முடியும்?''

''பத்மினி, என்னை நீ உண்மையாகவே விரும்புகிறாயா?''

''இதில் உங்களுக்கென்ன சந்தேகம்?

''என்னைப்பற்றி எல்லாவற்றையும் அறிந்து கொண்டிருப்பதாகக் கூறுகிறாய். நான் மணமானவன் என்பதும் உனக்குத் தெரிந்திருக்கிறது. எல்லாவற்றையும் நன்றாக யோசித்துப் பார். அன்று அரண்மனையில் என்னை மடக்கியபோது உன்னைக் கொல்லவும் நான் தயாராக இருந்தேன். எந்தவகையில் உனக்குத் தகுதியானவன் நான்?''

''அந்தக் கவலை உங்களுக்கெதற்கு?''

''பத்மினி, இனி நான் இந்த நாட்டின் இளவரசனில்லை. இந்த நாட்டில் இருக்கப்போவதுமில்லை. நாக நாட்டிற்கு

லட்சியம் ஒன்றை நிறைவேற்றுவதற்காக எல்லாவற்றையும் துறந்துவிட்டுப் போகிறேன். என் மனைவி மாயா என்னைப் பிடிக்காமல் ஓடிவிட்டதாக நீ சொன்னாய். அவள் ஓடாமல் எனக்காகக் காத்திருந்தாலும் அவளைத் துறந்து நாக நாட்டிற்குப் போயிருப்பேன். மனைவி, மக்கள், குடும்பம், பதவி என்று எல்லாவற்றையும் மகாலட்சியத்திற்காக துறந்தும் மறந்தும் சென்று கொண்டிருக்கிறேன். கர்ணபத்ர பங்கத்தை களவாடியது கூட இதை நிறைவேற்றுவதற்காகத்தான். இந்த நாட்டை விட்டுத் தப்புவேனா நாக நாட்டிற்குப் போய்ச் சேருவேனா என்பதெல்லாம் கேள்விகளாக என் முன்னே நிற்கின்றன. என்னென்ன சிக்கல்கள் வருமோ தெரியாது. இந்த நிலையிலா நீ என்னை மணக்க விரும்புகிறாய்?''

''உங்கள் பேச்சே உங்கள் தகுதியை நிர்ணயித்து விட்டன. பெரும் லட்சியவாதியான தங்களை மணக்க நான் கொடுத்து வைத்திருக்க வேண்டும்''

''பத்மினி, அன்று கேட்ட கேள்வியை இன்று கேட்கிறேன். என்னை அன்றைக்குத்தான் முதன் முதலாகப் பார்த்தாய். உடனே என்னை விரும்புவதாகவும் திருமணம் செய்துகொள் என்றும் கேட்டாய். இது எப்படி சாத்தியம்?''

பத்மினி லேசாகச் சிரித்தாள்.

''உங்களை அன்றுதான் முதன் முதலாகப் பார்த்தேன். அது உண்மைதான். ஆனால் உங்கள் மீதான காதல் எப்போதோ தொடங்கிவிட்டது. நீங்கள் மக்களுக்கு உதவ தந்தையை எதிர்த்து போர்க்கொடி தூக்கியபோது முதன் முதலாக என் இதயத்தில் நுழைந்தீர்கள். மக்களுக்காக உங்கள் பெயர் கெடுவதைப் பற்றியும் கவலைப்படாமல் மன்னரின் மடியிலேயே கைவைத்த மாதிரி கொள்ளையில் ஈடுபட்ட போது என் இதயமெல்லாம் நீங்கள் நிறைந்தீர்கள். உங்களுக்கு மன்னர் பிரம்மாண்டமான திருமணத்தைச் செய்தபோதுகூட நான் கவலைப்படவில்லை. மாறாக என் இதயமே நீங்களாக மாறியது. உங்களைச் சந்தித்துப் பேச பலவாறு முயன்று தோற்றுக் கொண்டிருந்தபோது தான் மன்னருக்கு இரவு விருந்தாக நான் அனுப்பி வைக்கப்பட்டேன். அன்று சீரழிந்து

போயிருக்க வேண்டிய நான் மாசுபடாமல் திரும்பினேன் என்றால் அது நான் தங்கள்மீது வைத்த காதலின் சக்திதான் என்று நினைத்தேன். மன்னர் தங்களைப்பற்றி ஆலோசனைகளைக் கேட்டபோது உண்மையைச் சொன்னாலும் உங்கள் மீது அவரது பார்வை நிலைத்துவிடாமல் இருக்க ஒவ்வொரு முறையும் அவரைக் குழப்பினேன். உங்கள் மனைவியைப்பற்றியும் அறிந்தேன். எனக்கு அதிக மகிழ்ச்சி ஏற்பட்டது. உங்களை நெருங்குவதாக நான் நினைத்தேன். மன்னருக்கு குழப்பத்தை உண்டாக்கினாலும் நான் என்னவோ உங்களைத்தான் உறுதியாகச் சந்தேகித்தேன். மன்னரின் கவனத்தைத் திருப்பி நீங்கள் ஏதோ பெரிய காரியத்தில் இறங்கப் போவதாக ஊகித்தேன். பிச்சைக்காரி வேடமிட்டு ஒற்றறிந்தபோது தலைநகரில் இருக்கும் பெரும்பாலான பிச்சைக்காரர்கள் பிச்சை யெடுப்பவர்கள் அல்ல என்பதையும் அவர்கள் உங்களைச் சேர்ந்தவர்கள் என்பதையும் அறிந்தேன். உங்களது களவு பற்றியும் சற்று தெரிந்தது. அது அமாவாசையன்று நிறைவேறும் என்பது தெரிந்தபின் தங்களைச் சரியான நேரத்தில் பிடித்து திருமணத்தை நிபந்தனையாக்க வேண்டும் என்று தீர்மானித்தேன். அதைத்தான் செய்தேன்''

பத்மினியின் விளக்கத்தைக் கேட்ட விஜயன், ''இப்படிக் கூட ஒரு காதல் இருக்க முடியுமா என்று தோன்றுகிறது. நான் திருமணம் ஆனவன் என்பதை அறிந்த பிறகுகூட நீ காதலைத் தொடர்ந்தது அன்பின் ஆழத்தையும் நம்பிக்கையையும் காட்டுகிறது. என்னைக் கேட்டால் உண்மையான காதலின் முடிவு திருமணம் அல்ல. அதற்கு முடிவே கிடையாது என்று தான் நினைக்கிறேன். அதனால்தான் நீ மன்னன் விஷயத்தில் கூட பயப்படாமல் ஈடுபட்டது மட்டுமின்றி என் விஷயத்திலும் துப்பறிய முயன்றிருக்கிறாய். மன்னரை இதுவரையில் நீ ஏமாற்றிக் கொண்டுதான் இருந்தாயா?'' என்று கேட்டான்.

''அப்படியல்ல இளவரசே, உங்களை நான் சந்தேகித்ததை அவரிடம் உறுதியாகச் சொல்லவில்லையே தவிர அவருக்குத் தேவையான ஆறுதல்களையும் ஆலோசனைகளையும் தான் சொன்னேன்''

''இன்னொரு கேள்வி. தவறாக எண்ணிக் கோபப்பட்டு விடக்கூடாது''

''கேளுங்கள்''

''மன்னர் தனது இரவுநேரச் சுகத்திற்காகப் புதிய பெண்ணைக் கேட்டபோது ஏதோ ஒரு அமைச்சர் உன்னை அழைத்துப்போய் விட்டாராமே அது எப்படி?''

இக்கேள்வி நியாயம்தான் என்றாலும் பத்மினி இதை எதிர்பார்க்கவில்லை.

''அமைச்சர் விஸ்வக்ஷேனர் எங்கள் குடும்பத்திற்கு மிகவும் வேண்டியவர்''

பத்மினி பேசிக் கொண்டிருக்கும்போதே ''வேண்டியவராக இருந்தால் இப்படியெல்லாம் செய்யலாமா?'' என்று சீறினான் விஜயன்.

அவனது கோபத்தை உள்ளூர ரசித்த பத்மினி ''அவசரப்படாதீர்கள். அவர் எங்களுக்கு வேண்டியவர் மட்டுமல்ல மன்னருக்கும் வேண்டியவர்...'' என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே ''இப்படிப்பட்ட அமைச்சரை நான் பார்த்ததே இல்லை'' என்றான் வெறுப்புடன்.

''என்னை முழுவதுமாகச் சொல்ல விடுங்களேன். அமைச்சர்கள் எல்லோரையும்விட மன்னருக்கு விஸ்வக்ஷேனரை மிகவும் பிடிக்கும். அதற்குக் காரணம் அவரது தேவைகளை அமைச்சர் நிவர்த்தி செய்து வந்தது தான். பெண்கள் விஷயத்தில் அவருக்கு ரொம்பவும் அந்தரங்கமான நம்பிக்கைக்கு உரியவராக இருந்தவர் விஸ்வக்ஷேனர். அன்று புதியதாகப் பெண் வேண்டும் என்று மன்னர் கேட்டபோது சரி என்று சொல்லிவிட்டு வந்தாலும் மகா கோபம் அவருக்கு. 'பத்துக்கு மேற்பட்ட ஆசை நாயகிகள் இருக்கிறார்களே அது போதாதா? இவர்கெட்ட கேட்டிற்கு புதியதாக ஒருத்தி வேண்டுமா? இப்படியே இவர் கேட்டுக்கொண்டிருந்தால் நாட்டிலிருக்கும் பெண்கள் எல்லோருமே கற்பை இழந்து நிற்க வேண்டியதுதான். மன்னனாக இருப்பவன் காமக் கொடூரனாக

இருப்பது மகா பாவம்'' என்றெல்லாம் எங்கள் முன் சரமாரியாக மன்னனைத் திட்டிப் பேசினார். எங்களுக்கெல்லாம் என்னவோ போல் இருந்தது. கடைசியில் அவர் என்னிடம் ஒரு குறுவாளைக் கொடுத்து ''பத்மினி, இன்று நீ மன்னனை முடித்துவிடு. போ. சீக்கிரம்' என்றதும் பதறிப்போன நான் ''எதற்காக நான் மன்னரைக் கொல்ல வேண்டும்? என்னால் எப்படிக் கொல்ல முடியும்?'' என்று கேட்டபோது ''அங்கே போனால் உனக்கு விஷயம் புரியும். உன்னிடம் தந்திருக்கும் குறுவாளைப் பார். மிகவும் சிறியது. இதைப் போல் எங்கும் பார்த்திருக்க முடியாது. சீன தேசத்தில் மட்டுமே இதைத் தயாரிக்கிறார்கள். இதற்குப் பூ நாகம் என்று பெயர். இதை மன்னரின் உடம்பில் எங்கே வேண்டுமானாலும் சரி லேசாகக் குத்தினாலும் சரி. இதன் முனை சற்றே பாம்பின் வாயைப் போல் திறந்து நஞ்சை செலுத்திவிடும். உடனடியாக மன்னன் நுரைத்தட்டி செத்து விடுவான்'' என்றார் அவர்.

''நான் போனேன். நல்ல வேளையாக என் பேச்சில் வியந்து போன அவர் என்னைத் தொடவுமில்லை. பூ நாகத்திற்கு வேலை வைக்கவும் இல்லை. நான் குடும்பத்துடன் கோசலம் செல்லப் போவதாகக் கூறியபோது என்னை மன்னர் தடுத்தார். இங்கேயே இருந்துகொண்டு தனக்கு உதவும்படி கேட்டபோது என் கற்புக்கு உத்திரவாதம் கேட்டேன். என்னைத் தொடவும் மாட்டேன் என்று சத்தியம் செய்தார் அவர்'' என்று கூறிமுடித்தாள் அவள்.

மன்னரின் சத்தியம் நம்பத்தகுந்ததல்ல என்பது விஜயனுக்குத் தெரியும் என்றாலும் பத்மினியின் தூய்மையைப் பற்றித் தெரிந்துகொண்டதால் திருப்தியடைந்தான்.

''உன்னை மணப்பதில் எனக்குப் பிரச்சினை இல்லை பத்மினி. எப்போது என்பதை இனி நீதான் சொல்லவேண்டும்'' என்றான்.

''என் பெற்றோருக்கு முன்னால் அவர்களது சாட்சியாக மாலை மாற்றிக்கொண்டால் போதும். இப்போதைய நிலையில் முடியக் கூடியதும் அதுதான். நான் பெற்றோர்களிடம் கூறிவிட்டு நாளை இங்கேயே உங்களைச் சந்திக்கிறேன். இதேபோல் மாறுவேடத்திலேயே வாருங்கள். என் இல்லத்திற்கு அழைத்துப்

போகிறேன். திருமணத்தை நடத்திவிடலாம். அதற்குப் பின் உங்களோடு வந்துவிடுகிறேன் நான்''

''மன்னர் உன்னை என்று வரச்சொல்லி இருக்கிறார்?''

''அது எதற்கு இப்போது?''

''கேட்டதற்குப் பதில் சொல்ல பத்மினி''

''நாளை வரச் சொல்லியிருக்கிறார்''

''நாளை காலை அவரிடம் போய்வா''

''எதற்காகப் போக வேண்டும்?''

''என்னதான் சொல்கிறார் என்று பாரேன்''

''எதற்குப் பார்க்க வேண்டும்?''

''பத்மினி, நாக தீபத்திற்கு நாம் போகவேண்டும். அப்படிப் போக வேண்டுமென்றால் வங்க நாட்டிலிருந்து தப்ப வேண்டும். அதற்கு உன் மூலம் ஏதாவது வழி கிடைக்குமென்றால் அது நல்லது தானே?''

''தப்புவதற்கு உங்களிடம் திட்டம் எதுவும் இல்லையா?''

''என் நண்பர்கள் வந்தபின் தான் தீட்டவேண்டும்''

பத்மினி சிறிதுநேரம் யோசித்துவிட்டு ''நீங்கள் கூறியபடியே மன்னரிடம் நாளை காலை செல்கிறேன். ஆனால் நாளை மாலை இங்கே வந்து விடுவேன். நீங்களும் வந்துவிட வேண்டும். நாளை எத்தனை நேரமானாலும் நமது திருமணம் நடக்கவேண்டும். சம்மதமா?'' என்று கேட்டாள்.

''சம்மதம்'' என்றான் விஜயன்.

திருப்தியோடு விடைபெற்றுக் கொண்டாள் பத்மினி.

மறுநாள் மாலை வந்தான் விஜயன். நேரம் தான் ஆகிக் கொண்டிருந்ததே தவிர பத்மினி வரவில்லை.

நள்ளிரவு நேரம் நெருங்கியது.

ஆற்றங்கரையில் திரிந்த காட்டு நரிகள் இரண்டு ஊளையிட்டன.

என்ன செய்வது என்று தெரியாமல் யோசித்தான் விஜயன்.

அப்போது அவனை நோக்கி இரண்டு பேர் வந்தார்கள்.

ஒருவர் ஒற்றைக் கண்ணன்.

மற்றொருவர் சதுர்வேதி.

◈◈◈

## அத்தியாயம் பதிமூன்று

# தாமிரலிப்தி

பத்மினியின் உள்ளத்தையும் அவளது காதலையும் புரிந்துகொண்ட விஜயன் அவளை மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டு அவள் கூறியபடி சிவாலயத்திற்கு அருகில் இருந்த ஆற்றங்கரையை அடுத்த கொகுடிக் கொடிகள் நிறைந்த மறைவிடத்தில் மறுநாள் மாலை நேரத்தில் சரியாக வந்து விட்டான். மாலை மறைந்து இருள் சூழ ஆரம்பித்தது. தான் நிற்பதைக்கூட காண முடியாத இருட்டு மேன்மேலும் சூழ்ந்து கொண்டிருந்ததே தவிர பத்மினி வரவில்லை. தனக்குச் செய்தி அனுப்புவது தலைநகரம் இருந்த சூழ்நிலையில் முடியாத காரியம் என்பது அவனுக்கு நன்றாகவே தெரிந்திருந்ததால் செய்தி எதையும் அவன் எதிர்பார்க்கவில்லை. ஒருவேளை மன்னனைச் சந்தித்ததில் ஏதாவது சிக்கல் இருந்திருக்குமோ என்ற சந்தேகம் தோன்றியது அவனுக்கு. 'ஆகா! நான்தானே அவளை மன்னனைச் சந்திக்கும்படி அனுப்பினேன். அது ஒருவேளை தவறாகி விட்டதோ?' என்றெல்லாம் எண்ணி வருந்தினான். ஏறக்குறைய நள்ளிரவு நேரம் துவங்கிவிடவே இனியும் பத்மினி அங்கே வரமாட்டாள் என்ற நினைப்பு அவனுக்கு வந்துவிட்டது. ஆற்றங்கரை பக்கத்திலிருந்து காட்டு நரிகள் இரண்டு கர்ண கொடூரமாக ஊளையிட்டபோது மேலும் அங்கே காத்திருப்பது வீண் என்று கருதிய விஜயன் அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டபோது அவனுக்கெதிரில் வெளிச்சங்கள் தோன்றின. அவனை நோக்கி வரவும் செய்தன.

அருகில் வந்ததும் இரண்டு பேர் பந்தம் ஏந்திக்கொண்டு வருவதைக் கண்டான் விஜயன். அவர்கள் ஒற்றைக் கண்ணன் சிமேரியும், சதுர்வேதியும் தான் என்பதை அறிந்து கொண்டாலும் அவர்களது தோற்றமும் வடிவமும் ஏதோ பேயும் பூதமும் வேட்டைக்குக் கிளம்பி வந்ததுபோல் இருந்தன.

''இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய் விஜயா?'' என்று தேங்காய் உடைப்பதுபோல் சதுர்வேதி கேட்டது விஜயனுக்குப் பிடிக்கவில்லை என்றாலும் ''ஒன்றுமில்லை'' என்றான். சதுர்வேதியோ விடாமல் ''யாருக்காக காத்துக்கொண்டிருக் கிறாய்?'' என்று கேட்டுவிட்டு ''காதலிக்காகவா? கொள்ளைக் காரனுக்கு காதல் வந்துவிட்டதா? இதுதான் உன் லட்சியமா? இதற்குத்தான் தேவபுத்தர் உன்னை அனுப்பினாரா?'' என்று முரட்டுத்தனமாகக் கேட்டார்.

நாகரீகத்திற்கும் இனிமையான சுபாவங்களுக்கும் அவ்வளவாக பரிச்சியம் இல்லாதவர் என்பது விஜயனுக்குத் தெரிந்திருந்தாலும் அவரது கேள்விகளைச் சகித்துக் கொள்ள முடியாமல் ''இதைக் கேட்கத்தான் வந்தீர்களா?'' என்றான் கோபத்துடன்.

''எனக்கென்ன வேறு வேலையில்லை என்று நினைக்கிறாயா? இந்த அற்பமான கேள்விகளைக் கேட்க நான் ஏன் மெனக்கெட வேண்டும்? அதோடு நாங்கள் இங்கே எப்படி வந்தோம் என்று கேட்கத் தோன்றவில்லையா உனக்கு? உன் இருப்பிடமான ஹரிகிரி மலைக்காட்டிற்குத்தான் போனோம். நீ நேற்று அந்த மலையைவிட்டு யாருக்கும் சொல்லாமல் இங்கே வந்து விட்டாய். உன்னைக் காப்பதற்காக உனது வீரர்களில் ஒருவன் உன்னையும் அறியாமல் பின்தொடர்ந்து எல்லா வற்றையும் தெரிந்து கொண்டிருக்கிறான். அவன் சொல்லித் தான் நாங்கள் இங்கே வந்தோம்''

''எல்லைக் காவல்களை மீறி எப்படி நாட்டிற்குள் வந்தீர்கள்?''

''வங்கதேசத்து வீரர்கள் பலரை என் கைகளால் கழுத்தை நெறித்துக் கொன்றேன். வர்மக்கலை தெரிந்தச் சிமேரி பலரைச் செயலிழக்க வைத்தான். ஆற்றில் குதித்து அடிப்பகுதியிலேயே

நீந்தி எங்கோ கரையேறி இன்று காலை ஹரிகிரிக்கு வந்தோம். அங்கே உன் இருப்பிடம் தெரிந்து இங்கே வந்தோம். நாங்கள் பட்ட பாட்டைப் பற்றிய கவலை இல்லாமல் நீயோ காதலில் மயங்கி நிற்கிறாய்''

''ஐயா, விவரம் தெரியாமல் பேசிக்கொண்டிருக்கிறீர்கள். நான் இங்கே காதலைத் தேடியோ காதலிகளைத் தேடியோ அலைந்து கொண்டிருக்கவில்லை. ஒருவிதத்தில் என் கடமையைத் தேடித்தான் இங்கே வந்தேன். அதை நிறைவேற்ற காரணமாக அமைந்த பத்மினி இங்கே வரவில்லை. அவளுக்காகக் காத்திருந்தேன் என்றால் அதற்குக் காரணம் உண்டு. அவள் மட்டும் இல்லையென்றால் கர்ணபத்ர பங்கத்தை உருப்படியாக இங்கே கொண்டு வந்திருக்க முடியாது''

''விஜயா, கொள்ளைக்காரனான இலியாசையும் அவனது கூட்டாளிகளையும் உன் உதவிக்காகக் கூடவே அழைத்து வந்து அவர்களது உதவி தேவையில்லை என்ற நிலையில் தூங்கும் போது அவர்களை வெட்டிக் கொன்றவன் நீ. அங்கே வராத நன்றியுணர்வு பத்மினி விஷயத்தில் மட்டும் எப்படி வந்தது?''

''நான் ஏற்கனவே உங்களிடம் ஆரம்பத்தில் கூறியிருக்கிறேன். கொள்ளைக்காரனாகவும் கொலைகாரனாகவும் இருந்த எனக்குள் தேவ புத்தரைக் கண்ட பிறகு புத்துணர்வு தோன்றியது. 'கொலை கொள்ளைகளில் ஈடுபடக்கூடாது என்றுத் தீர்மானித்தேன். தேவபுத்தர்கூட என்னை நாக நாட்டிற்குச் சென்று அதன் மன்னனாகி புத்தமதத்தைப் பரவச் செய்யும்படிக் கூறினாரே தவிர கொலை கொள்ளைகளில் ஈடுபடச் சொல்லவில்லை. நீங்கள்தான் அவற்றைத் தொடரும்படிச் சொல்லி அதற்கான அவசியத்தைச் சொன்னீர்கள். பெரும் லட்சியத்தை நிறைவேற்றவிருக்கும்போது வழி வகைகளைப் பற்றிப் பொருட்படுத்தக் கூடாது என்பதால் தான் நானும் ஒப்புக் கொண்டேன். அந்த முயற்சியில் நான் தளர்ந்து விடவில்லை. அதேசமயம் சிறிய மனிதாபமானங்களைக்கூட நான் காட்டக் கூடாது என்று நீங்கள் எதிர்பார்ப்பது சரியல்ல''

''விஷயம் புரியாமல் பேசுகிறாய் விஜயா. சிறிய மனிதாபிமானங்கள் மனித நேயங்கள் என்று நீ கருதும்

விஷயங்கள் பெரிய தடைகளாக அமைவதுண்டு. தன் மனைவி கைகேயியிடம் மனிதநேயத்துடன் வரம் கேட்கும்படிச் சொன்னான் தசரதன். உன்னைப் போலவே அவன் அதைச் சாதாரணமான விஷயமாகத்தான் கருதினான். ஆனால் விளைவு என்ன ஆயிற்று தெரியுமா? அந்த வரத்தினால் கைகேயி தசரதனின் மூத்த மகன் ராமனை அரியணை ஏறவிடாமல் காட்டிற்கு அனுப்பினாள். தசரதனும் புத்ர சோகத்தில் மாண்டான்''

அவரிடம் வீணாக விவாதம் செய்து கொண்டிருக்க விஜயன் விரும்பவில்லை. மனிதனை மிருகமாகவே வாழச் சொல்லும் அவரது வித்தை அவனுக்குப் பிடிக்கவில்லை என்றாலும் அதை விவாதப் பொருளாக்கும் அசந்தப்பத்திற்கு இடம் தர விரும்பாத அவன் ''உங்கள் விருப்பப்படியே தான் காரியம் நடந்திருக்கிறது. பத்மினி வரவில்லை. அதோடு விஷயம் முடிகிறது. அவளைத் தேடிப்போக நான் தயாராக இல்லை. அதற்கான நேரமும் இல்லை. அவளைப்பற்றிப் பேசுவதை விட்டுவிட்டு நடக்க வேண்டியவற்றைப் பற்றிப் பேசுவோம்'' என்றதும் சதுர்வேதியும் ஓரளவிற்கு அமைதியடைந்தார் இரவிலேயே அவர்கள் அந்த இடத்தைவிட்டு ஹரிகிரிமலைக் காட்டிற்குச் சென்றார்கள்.

அங்குபோய் எல்லோரும் ஆசுவாசப்படுத்திக் கொண்டு ஒன்றாகக் கூடினார்கள்.

''விஜயா, சிறையில் இருந்த உனது எழுநூறு தோழர்களை எப்படி வெளியே கொண்டு வந்தாய்?'' என்று கேட்டார் சதுர்வேதி.

''ஐயா, அமாவாசை நாள் நமக்கு அதிஷ்டநாளாக அமைந்தது என்றுதான் சொல்லவேண்டும். மன்னன் மற்றும் மற்றவர்களின் கவனத்தை அவனது மகன் ஜராசந்தனின் மீது திருப்பிவிடவே எனது மக்கள் படை மகத்தான பணியைச் செய்தது. எனக்கு ஒரு பிரிவு உதவிய அதே நேரத்தில் நான் ஏற்கனவே சிறையைக் கண்காணிக்க அனுப்பிய ஐம்பது பேர் அடங்கிய மற்றொரு பிரிவு சிறையை அதிரடியாகத் தாக்கியது. உள்ளே இருந்த என் தோழர்களும் உள்ளிருந்தபடியே

தாக்கியதால் சிறைக்காவல் சிறகொடிந்தது. தோழர்கள் வெளியேறினார்கள்''

''அவர்கள் இப்போது எங்கே இருக்கிறார்கள்?''

''துறைமுக நகரமான தாமிரலிப்தியில் இருக்கிறார்கள். மறைந்து வாழ்கிறார்கள்''

''அவர்கள் அங்கே இருந்தால் எப்படியும் பிடிபட்டு விடுவார்கள். அவர்களை அங்கிருந்து அகன்று தூர்வாச நாட்டிற்குப்* போகச் செய்''

''தூர்வாச நாட்டிற்கா? அவ்வளவு தூரத்திற்கு ஏன் போக வேண்டும்?'' என்று கேட்டான் விஜயன்.

''பிடிபடாமலும் உயிரோடும் இருக்கவேண்டும் அல்லவா? அதற்காகத்தான். அதோடு நீ இந்த நாட்டைவிட்டு வெளியேறிய பின் உன்னைக் கடைசிவரை காக்கக் கூடியவர்கள் அவர்கள் தான்''

''அவர்களெல்லாம் அரை மொட்டையாகவும் அரைகுறையாகவும் இருக்கிறார்களே?''

''இதெல்லாமா ஒரு பிரச்சினை? எல்லோரும் மொட்டை யடித்துக் கொள்ளட்டும். தலையை மறைக்கிற மாதிரி வேறு வேறு வேடங்களைப் போட்டுக் கொள்ளட்டும். துறைமுகத்தில் காவல் பலமாக இருக்கும் என்றாலும் அன்றாடம் மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்கள் பேரில் காவல் இருக்காது. அவர்களோடு தொடர்பு கொண்டு உன் தோழர்கள் மீனவர்களாகக் கொஞ்சம் கொஞ்சமாகப் படகுகளில் வெளியேறட்டும். உன் மக்கள் படைமீது மன்னனுக்கோ அவனது வீரர்களுக்கோ சந்தேகம் வராது. ஆகவே அவர்கள் இவர்களுக்கு உதவட்டும்''

''சரி''

''அமாவாசையன்று உன் சகோதரன் ஜராசந்தனைக் கொலை செய்ய முயற்சித்தாயா?''

---

* இன்றைய ஒரிசா மாநிலம் அக்காலத்தில் தூர்வாச நாடு என்று அழைக்கப்படுகிறது.

''இல்லை ஐயா. மன்னனின் கவனத்தைத் திருப்ப அப்படியொரு முயற்சி நடக்கப் போவதாக அசுவத்தாமரிடம் சொன்னேன். மற்றபடி அங்கே நடந்த நிகழ்ச்சிக்கும் எனக்கும் சம்பந்தம் இல்லை''

''அநேகமாக மன்னனின் காவல் வீரர்களில் யாரோ ஒருவன் பழைய பகை காரணமாக அப்படிச் செய்திருக்கலாம்''

''இருக்கலாம் ஐயா''

''உனது அதிஷ்டம் அமாவாசையுடன் முடிவடைந்து போனது என் துரதிஷ்டமாகி விட்டது. அந்த எமகாதக மன்னன் நல்லவனாகி விட்டதால் நான் போட்டத் திட்டங்கள் அடிபட்டுப் போனதோடு புதியதாக திட்டமிட சிரமமாகிவிட்டது. புதிய செலவுகளுக்கும் வழிசெய்து விட்டது''

''என்ன சிரமம்?''

''நீ நாக தீபத்திற்குச் செல்ல நல்ல ஒரு மரக்கலம் வேண்டும். மன்னனும் அவனைச் சேர்ந்தவர்களும் பழையபடிச் சீரழிந்த நிலையில் இருந்தால் ஏதாவது ஒரு மரக்கலத்தை அதன் தலைவனை மிரட்டியே வாங்கியிருப்பேன். இப்போது நாடு இருக்கும் நிலையில் யாரையும் மிரட்ட முடியாது.'' என்று சொன்ன சதுர்வேதி சிறிது நேரம் யோசித்துவிட்டு ''விஜயா, துறைமுகக் காவலன் உன் சகோதரன் சுமிதா தானே? அவன் எப்படி?'' என்று கேட்டான்.

''என் தந்தையை என்னைப் போலவே அவனும் வெறுத்தான். ஆனால் என்னைப் போல தந்தையை எதிர்த்துக் கொள்ளவில்லை. தந்தை எப்படியிருந்தாலும் தன் கடமையைச் சரியாகவே செய்துவரும் நேர்மையானவன் அவன். தற்போது மன்னன் நல்லவனாகி விட்டதால் மன்னனின் விசுவாசியாகவும் ஆகியிருப்பான்''

''மொத்தத்தில் அவனால் உனக்கு எந்தவித உபயோகமும் இல்லை''

''ஆமாம்''

''விஜயா, உன் சகோதரனும் துறைகமுகக் காவலனுமான சுமிதாவின் ஆதரவு நமக்கில்லை. கடற்படை தளபதி நமக்காக அசையமாட்டான். இந்த நிலையில் நாம் எதிர்பார்க்கக்கூடிய நிலையில் இருப்பது மரக்கலத்தலைவன் மட்டும் தான்'' என்று கூறிய சதுர்வேதி புரவி வணிகரும் ஒற்றருமான அசுவநாவிகரைப் பார்த்து ''துறைமுகத்தின் நிலைமையை விஜயனுக்குச் சொல்'' என்றார்.

''ஐயா, கங்கை நதி கடலில் கலக்கும் இடமான தாமிரலிப்தி துறைமுகம் மிகவும் அகலம் வாய்ந்தது. இந்த இடத்தில் கங்கையின் முகத்துவாரம் தாழ்வாக இருப்பதால் பிறநாட்டுத் துறைமுகங்களிலிருந்து இது வேறுபடுகிறது. பிறநாட்டுத் துறைமுகங்களைப் போல் அல்லாமல் இங்கே ஆற்றின் வேகம் குறைவாகவும் கடலின் வேகம் அதிகமாகவும் இருப்பதால் கடல்நீர் அவ்வப்போது பெருத்த அலைகளுடன் கங்கையின் முகத்துவாரத்தில் நதிநீருடன் மோதுவதால் முகத்துவாரத்தை அடைத்தபடி மரக்கலம் எதுவும் நிற்கமுடியாது!. அப்படி நின்றால் கடலின் வேகமும் பேரலைகளும் சேர்ந்து மரக்கலத்தைச் சாய்த்துவிடும். அல்லது தரை தட்டிவிடச் செய்யும். அதை நன்றாக உணர்ந்த மரக்கல மாலுமிகள் கடலின் இந்தச் சவாலை முறியடிக்கும் விதமாக பிரம்மாண்டமான மரக்கலம் ஒன்றை நிர்மானித்தார்கள். ஐந்து தளங்களையும் பத்து பாய்மரங்களையும் கொண்டு சுமார் முன்னூறு மாலுமிகள் துடுப்பு போடும் விதமாக பெரிதாகக் கட்டினார்கள். இதற்குத் தீவுக்கப்பல் என்றேபெயர். கடலில் சென்றால் இது தீவு போலவே இருக்கும் என்பதால் இதற்கு இந்தப் பெயர். இது போன்றத் தீவுக்கப்பல்கள் வேறு எங்குமே கிடையாது. இக்கப்பல் துறைமுகத்தின் வாயிலில் கடலுக்குச் சவாலாக நின்று பாதுகாக்கிறது. கடலில் இருந்து வருபவர்களுக்கு துறைமுகமே தெரியாத வகையில் மலைபோல் நிற்கிறது இக்கப்பல். கடலலைகளின் வேகத்தை இது தாங்கிக் கொள்வதால் உட்புறமாக துறைமுக வாயிலில் இருபுறங் களிலும் இரண்டிரண்டு மரக்கலங்கள் நிறுத்தப்பட்டுள்ளன. இவை சிறியவை. ஆனால் போர் சன்னத்துடன் திகழக் கூடியவை இப்போதைய நிலவரம் தெரியாது'' என்று விளக்கினார் புரவி வணிகர்.

இதைக் கேட்டதும் மலைத்துப் போனான் விஜயன். அவன் இளவரசனாக இருந்த காலத்தில் தன் தந்தையை எதிர்ப்பதற்கு முன்பும் சரி பின்பும் சரி நிர்வாகத்துடன் மட்டும் போக்குவரவை வைத்துக் கொண்டிருந்தானே தவிர துறைமுகம் இருந்த பக்கத்திற்குப் போனதுமில்லை. கப்பல்களைப் பற்றியோ கடல்படை பற்றியோ கடல்போர் பற்றியோ எதையும் அறிந்து கொண்டதில்லை. அரண்மனை, மாளிகை, களஞ்சியம், கிடங்கு என்று நிலப்பகுதிகளின் கூறுகளிலேயே கவனம் செலுத்திக் கொண்டிருந்த அவனுக்கு அசுவநாவிகர் கூறிய விஷயங்கள் பிரமிப்பாக இருந்தன.

அதைக் கவனித்த சதுர்வேதி ''இதற்கே பிரமித்து விடாதே விஜயா. நிஜமான பிரமிப்புகள் கடலுக்குள் போகப் போகத்தான் தெரியவரும்'' என்று கூறிவிட்டு ''அசுவநாவிகர் கூறிய தீவுக்கப்பலைப் பற்றித் தெரிந்து கொண்டதிலேயே உனக்கு இத்தனை பிரமிப்பு என்றால் அதை விலைக்கு வாங்கினால் எப்படி இருக்கும் என்று யோசித்துப் பார்'' என்றார்.

''தீவுக் கப்பலை விலைக்கு வாங்குவதா? இது நடக்கக் கூடிய காரியமா?'' என்று கேட்டான்.

''நடக்க முடியாதது எதுவுமல்ல. அதிலும் வணிகத்தில் எதையும் சாதிக்கலாம். அசுவநாவிகரைக் கேட்டுப் பார். அவர் எத்தனையோ வியாபாரங்களைப் பார்த்தவர். கேட்டவர். செய்தவர். நீங்களே கூறுங்கள். இத்தீவுக் கப்பலை நம்மால் வாங்க முடியுமா முடியாதா?''

''வாங்கலாம் ஐயா'' என்றார் அசுவநாவிகர்.

''அதெப்படி வாங்க முடியும்? மரக்கலத் தலைவன் நமக்கு விற்க எப்படிச் சம்மதிப்பார்?'' என்று கேட்டான் விஜயன்.

''ஒன்றுக்கு நான்காகக் கொடுத்தால் ஏன் சம்மதிக்க மாட்டார் யார் யாருக்கு விற்கிறோம் என்பது முக்கியமில்லை. எதை விற்கிறோம் என்பதுகூட இரண்டாம் பட்சம்தான். எவ்வளவிற்கு விற்பனையாகிறது என்பதுதான் முக்கியம். ஒரு நாணயம் பெறக்கூடிய பொருளுக்கு நான்கு நாணயங்களைக் கொடுத்தால் பொருளைத் தர யார் மறுப்பார்கள்?''

''மரக்கலம் மரக்கலத் தலைவருக்குச் சொந்தமில்லையே? மன்னருக்குத் தானே சொந்தம்?''

''அதுதான் பெரிய அனுகூலம். உங்களுக்கே சொந்தமில்லாத ஒரு நாணயம் விலையுள்ள பொருளை நான்கு நாணயங்கள் கொடுத்தால் கொடுப்பதற்கு உங்களுக்கென்ன கஷ்டம்?''

விஜயனுக்கு அசுவநாவிகர் பேசிய எதுவும் நம்பக் கூடியதாக இல்லை.

எனவே சதுர்வேதியைப் பார்த்து ''தீவுக் கப்பலை வாங்கும் அளவிற்கு நம்மிடம் நிதி இருக்கிறதா?'' என்று கேட்டான்.

''கர்ணபத்ர பங்கம் இருக்கிறதே?'' என்று சொன்ன சதுர்வேதி ''கொள்ளைக்காரனான உனக்கே ஒரு பொருளின் மதிப்பு தெரியவில்லை என்றால் என்ன பிரயோஜனம்?'' என்று கூறிச் சிரித்துவிட்டு ''கர்ணபத்ர பங்கத்தை எட்டாக வெட்டியெடுக்க வேண்டும்'' என்றார்.

''கர்ணபத்ர பங்கத்தை உடைப்பதா? அது முடியாது'' என்றான் விஜயன்.

''பைத்தியக்காரா, இதென்ன காட்சிப் பொருளா அப்படியே வைத்து அழகு பார்ப்பதற்கு? அதோடு இதை அப்படியே தூக்கிக் கொண்டு போக முடியுமா? விற்பதானால் இதைப் பலவாறு பிரித்து பல்வேறு பெட்டிகளில் வைத்து பாதுகாக்க வேண்டும். முதலில் எட்டுப் பகுதிகளாகப் பிரித்தால் அதன் ஒரு பகுதி தீவுக் கப்பலின் விலையைப் போல நான்கு மடங்கிற்கு இணையாகும். ஆகவே அதை வைத்துக்கொண்டு நானும் அசுவநாவிகரும் முயல்கிறோம். அநேகமாக வாங்கி விடுவோம். அதை வாங்கியபின் அந்தக் கப்பலைத் துறைமுகத்தை விட்டுக் கிளப்ப டெமிட்ரியஸ் உதவுவான். கப்பலை நாம் வாங்கிவிட்ட பின் இந்த ஒற்றைக்கண் சிவேரி, மானோகாலன் மற்றும் அசுவத்தாமர் ஆகியோர் வந்து சேர்ந்து கொண்டால் போதும். அதேசமயம் நீங்கள் நால்வரும் துறைமுக நகர் தாமிரலிப்திக்கு வந்துவிடுங்கள்''

பேச்சை அத்துடன் முடித்துக் கொண்டார் சதுர்வேதி.

மறுநாளே காரியங்களைத் துவக்கினான் விஜயன். மக்கள் படையைச் சேர்ந்த வீரர்களை தாமிரலிப்தியில் இருக்கும் தனது தோழர்கள் எழுநூறு பேரை தூர்வாச நாட்டிற்கு அனுப்புவதற்காக பணித்தான். அதையடுத்து கர்ணபத்ர பங்கம் பிரித்தெடுக்கப் பட்டது. அதில் எட்டில் ஒரு பங்கை எடுத்துக்கொண்டு சதுர்வேதியும் அசுவநாவிகரும் மரக்கலத் தலைவனைச் சந்திக்கத் துறைமுகத்திற்குப் புறப்பட்டார்கள்.

இது நடந்து நாட்கள் பதினைந்து கடந்துவிட்ட நிலையில் ஆலோசனை அவையைக் கூட்டினான் சிகபாகு. இந்தப் பதினைந்து நாட்களில் மக்களுக்காக அவன் எடுத்த பல அதிரடி நடவடிக்கைகள் உண்மையாகவே மக்களை அவன் பால் ஈர்த்தன. தனது பிள்ளைகள் மற்றும் ஆசைநாயகிகள் விஷயத்தில் அவன் ஈவு இரக்கம் பார்க்காமல் விரட்டியடித்து அவர்கள் குடியிருந்த மாளிகைகளையெல்லாம் தனவந்தர் களுக்கு விற்று அதனால் கிடைத்த செல்வங்களையெல்லாம் அரசாங்க நிதியில் சேர்த்தான். வரி ஏய்ப்பு செய்துவந்த தனவந்தர்களை விசாரணையின்றி சிறையில் அடைத்து அவர்களிடம் திரண்டிருந்த பொன்னையும் பொருளையும் அரசுக்கணக்கில் கொண்டு வந்தான். அமைச்சர்களையும் அதிகாரிகளையும் வைத்துக்கொண்டு மக்களுக்குச் செய்ய வேண்டிய திட்டங்களைப் பட்டியலிட்டு அவற்றைத் தொடங்கவும் செய்தானாதலால் தூற்றிய மக்களெல்லாம் பாராட்ட முனைந்தார்கள். அவனது மனமும் குளிர்ந்தது. இந்த நிலையில் மகிழ்ச்சியுடன் அவையை அவன் கூட்டியபோது அவைக்கு வந்திருந்த அமைச்சர்களும் இதர தலைவர்களும் மகிழ்ச்சியாகவே இருந்தார்கள். அவரவர்களும் தங்கள் தரப்பில் விஜயனையும் அவனது கூட்டாளிகளையும் பிடிக்க எடுத்த நடவடிக்கைகளைப் பற்றி விவரித்தபோது-

''நீங்களெல்லாம் விஜயன் விஷயத்தில் அதிக முக்கியத்துவம் தருவது எனக்குப் புரிகிறது. ஆனால் இது தேவைதானா என்பது எனக்குப் புரியவில்லை. இந்த அவையை நான் கூட்டியது வெறும் விஜயனின் விஷயத்திற்காக மட்டுமல்ல. கடந்த பதினைந்து நாட்களாக நாட்டில்

ஏற்பட்டிருக்கும் மாற்றங்களைப்பற்றி விவாதிப்பதற்காகவும் தான். நீங்கள் யாருமே அதைப்பற்றிப் பேசவில்லை'' என்றான்.

அமாத்யர் எழுந்து ''மகாராஜா, மக்கள் விஷயம் வெளிப்படையாக எங்கும் தெரிகிறது. தங்களுக்கு நல்ல காலம் பிறந்துவிட்டது என்பதை அவர்கள் கண்கூடாகவே பார்க்கத் தொடங்கிவிட்டார்கள்'' என்றார்.

''இதுதான் நான் எதிர்பார்த்தது. இதுதான் எனக்கு முக்கியமானது'' என்று சொன்ன சிகபாகு ''விஜயன் விஷயத்தில் நீங்களெல்லாம் கூறியதைப் பார்த்தால் அவனும் அவனது கூட்டாளிகளும் இந்த நாட்டிலேயே இன்னும் இருப்பதாகத்தான் தோன்றுகிறது. விலைமதிக்க முடியாத ஆபரணத்தைத் திருடியிருக்கும் அவனது நோக்கம் என்னவாக இருக்கும் என்று யாராவது கூறமுடியுமா?'' என்று கேட்டான்.

படைத்தலைவனான ராகுலன் எழுந்து ''மகாராஜா, கர்ணபத்ர பங்கம் விலைமதிக்க முடியாதது. அதேசமயம் அதைக்கொண்டு ஒரு நாட்டையே வாங்கலாம் என்பது தங்களுக்குத் தெரியாததல்ல. அதை இந்நாட்டிலேயே வைத்துக் கொண்டு சாதிப்பதற்கு இளவரசருக்கு ஒன்றுமில்லை. அவர் அதை இங்கே விற்கவும் முடியாது. எங்காவது வெளி நாட்டிற்குத்தான் கொண்டு செல்ல முடியும். விற்க முடியும். அப்படிச் செய்வதென்றாலும்கூட அண்டை நாடுகளில் செய்ய முடியாது. தொலைதூர நாடுகளுக்குச் சென்றால்தான் முடியும். என் அனுமானப்படி அவர் கடல் கடந்து எங்காவது போவார் என்றுதான் தோன்றுகிறது'' என்றான்.

அவையில் அமர்ந்திருந்த தனது மகனும் துறைமுகக் காவலனுமான சுமிதாவைப் பார்த்த மன்னன் ''என்ன சுமிதா, ராகுலன் கூறுவது உனக்குப் புரிகிறதா?'' என்று கேட்டான்.

''புரிகிறது தந்தையே. விஜயன் கடல் மூலம் தப்புவதற்கு எந்த வாய்ப்பும் இல்லாமல் செய்துவிட்டேன். ஒருவார காலமாக பொருட்களைக்கூட துறைமுகம் மூலமாக அனுப்பவோ பெறவோ கூடாது என்று தடை விதித்து விட்டதால் துறைமுகத்தில் வர்த்தகப் போக்குவரத்து அடியோடு நின்று விட்டது. வெளிநாட்டு வணிகக் கப்பல்கள்கூட இங்கே

வரவேண்டாம் என்பதற்கு அடையாளமாகத் துறைமுகத் தூண்களில் சிவப்புக்கொடிகளை ஏற்றியிருக்கிறேன். படகுகள் மூலமும் யாரும் தப்பிவிடக் கூடாது என்பதற்காக மீனவர்களை மீன்பிடிக்கவும் கடலில் செல்ல அனுமதிக்கவில்லை. படகுகள் மணலில் கவிழ்த்துப் போடப்பட்டிருக்கின்றன. விஜயனோ அவரது கூட்டாளிகளோ துறைமுகம் மூலமாகத் தப்புவதென்பது இயலாத காரியம்'' என்றான் சுமிதா.

''எல்லாம் சரிதான். மொத்தத்தில் விஜயன் இங்கே இருக்கப் போவதில்லை. வெளிநாட்டிற்குத்தான் போகப் போகிறான் என்று தெரிகிறது. போகட்டும். எங்கே போக நினைக்கிறானோ அங்கே போகட்டுமே! எதற்காக நாம் அவனைத் தடுக்க வேண்டும்? எதற்காக நாம் தேவையற்ற முயற்சிகளில் இறங்கி கஷ்டப்பட வேண்டும்? நம் எதிரி நமது நாட்டைவிட்டு வெளியேறிவிடுவது நமக்கு நல்லதுதானே?'' என்று சிகபாகு கூறியபோது அவையில் இருந்த எல்லோருமே உணர்ச்சிவசப் பட்டார்கள்.

அமாத்யர் எழுந்து ''விஜயனும் அவரது கூட்டாளிகளும் மட்டும் நாட்டைவிட்டு வெளியேறுவதில் எங்களுக்கு ஆட்சேபனையில்லை. அவனோடு கர்ணபத்ர பங்கம் போகிறது? அதை எப்படி அனுமதிப்பது?'' என்று கேட்டார்.

சிகபாகுவின் இதழ்களில் வரண்ட சிரிப்பொன்று உண்டாகி மறைந்தது.

''என்றைக்கு அந்த கௌரவச் சின்னம் நம்மிடமிருந்து களவாடப்பட்டதோ அப்போதே அது நமக்குச் சொந்தமில்லாமல் போய்விட்டது. என்னுடைய பாவங்களின் விலை கர்ணபத்ர பங்கமாக இருக்கட்டும். இனி அதற்காகவோ விஜயனுக்காகவோ யாரும் வியர்வை சிந்தவேண்டாம். மக்கள் நலனைப் பாருங்கள்'' என்று அவன் முடிவாகக் கூறியபோது அக்குரலில் இருந்த உறுதியைக் கண்டு அனைவரும் வியந்தார்கள்.

இதற்குப் பிறகு இரண்டு நாட்கள் கழித்து மரக்கலத் தலைவனைச் சந்திக்க அவனது இல்லத்திற்கு சதுர்வேதியும் அசுவ நாவிகரும் வந்தார்கள்.

மரக்கலத்தலைவனைச் சந்திக்க இரண்டு நாட்கள் அவர்கள் காத்திருக்க வேண்டியதாயிற்று.

மூன்றாவது நாள் வந்தான் மரக்கலத்தலைவன்.

அவனைக் கண்டதும் சதுர்வேதியும் அசுவநாவிகரும்அசந்து போனார்கள். ஆடிப்போனார்கள்.

அங்கே இருந்தது மரக்கலத்தலைவனல்ல. மன்னன் சிகபாகு.

◈◈◈

## அத்தியாயம் பதின்நான்கு

# மரக்கலத் தலைவன்

துறைமுக நகரான தாமிரலிப்திக்கு வந்து ஒருவார காலமாக சதுர்வேதியும் அசுவநாவிகரும் மரக்கலத் தலைவனைப் பற்றிய விவரங்களைச் சேகரிப்பதில் ஈடுபட்டார்கள். மரக்கலத் தலைவன் பெரும்பாலும் மரக்கலத்தில்தான் தங்குவது வழக்கம் என்பதும் அவன் நகரத்திற்குள் வருவது அரிது என்பதும் அவர்களுக்குத் தெரியவந்தன. அதேசமயம் மரக்கலத்திற்குச் சென்று அவனைச் சந்திக்கவும் அனுமதி கிடைக்கவில்லை. செய்வதறியாமல் திரிந்த அவர்களுக்கு மரக்கலத் தலைவன் தனது மாளிகைக்கு வரப்போவதாக தகவல் கிடைத்தது. மாளிகையில் இருந்த உபதலைவனிடம் தான் மரக்கலத் தலைவனைச் சந்திக்க வேண்டும் என்று சதுர்வேதி கூறியபோது ''தலைவர் ஏற்கனவே பலபேர்களைச் சந்திக்கவிருக்கிறார். அவர்களைப் பார்க்கவே இரண்டு நாட்களாகிவிடும். உங்களைச் சந்திக்க நேரமிருக்காது. வேறொரு சமயத்தில் வாருங்கள்'' என்று கறாராகக் கூறிவிட்டான். ''எதற்கும் நாங்கள் காத்திருக்கிறோம். நேரம் கிடைத்தால் சந்திக்கிறோம்'' என்று கூறி சதுர்வேதியும் அசுவநாவிகரும் காத்திருந்தார்கள்.

உபதலைவன் கூறியதுபோல் இரண்டு நாட்களில் பல்வேறு நபர்கள் தொடர்ச்சியாக மரக்கலத் தலைவனை அவனது மாளிகையில் சந்தித்த வண்ணம் இருந்தார்கள்.

அதைக் கவனித்த சதுர்வேதி அசுவ நாவிகரிடம் கேட்டார்.

''இந்த மரக்கலத்தலைவனின் பொறுப்புகள் என்ன?''

''ஐயா, பொதுவாக இவர்தான் கப்பல்களின் நிர்வாகி. துறைமுகத்தில் கப்பல்களை நிறுத்துவது, கடலில் இயக்குவது, பழுதுபார்த்து பராமரிப்பது, மாலுமிகளைத் தேர்ந்தெடுத்துப் பழக்குவது, கடலில் சிக்கல்கள் வந்தால் தீர்ப்பதற்கு ஆலோசனை கூறுவது, கப்பலின் பயணத்தை நிர்ணயிப்பது ஆகியவை இவரது பொறுப்பில் அடங்கும்''

''அப்படியானால் கடல்போர் தளபதியின் வேலை?''

''போர் செய்யவேண்டிய சமயம் வரும்போது போரிடுவது அவரது வேலை. அந்தச் சந்தர்ப்பங்களில் கப்பல்களை போருக்கு ஏற்ற மாதிரி இயக்க அவருக்குத்தான் முழுஉரிமை. மரக்கலத் தலைவன் ஆலோசனை வேண்டுமானால் கூறலாம்.''

''ஏறக்குறைய அதிக பொறுப்புகள் எதுவும் இல்லாத இம்மரக்கலத் தலைவனை எதற்காக இத்தனைபேர் வந்து சந்திக்கிறார்கள்?''

''அப்படியல்ல ஐயா, போரில்லாத காலங்களில் போர்க் கப்பல்கள் வணிகக் கப்பல்களாக மாறி கடலில் செல்லும்போது எல்லா அதிகாரமும் இவருக்குத்தான். எதையெல்லாம் கப்பல்களில் ஏற்றுவது என்பதிலிருந்து அதற்கு கட்டணங்களை நிர்ணயம் செய்து வெளிநாடுகளுக்குக் கொண்டுபோய் சேர்ப்பது வரை எல்லாமே இவர் கைகளில்தான் இருக்கும். பணம் பெற்றுக்கொண்டு சலுகை காட்டுவது, ரகசிய வாணிபத்தில் ஈடுபடுவது, முதலிய பல விஷயங்கள் மரக்கலத் தலைவனுக்கு புதிய அந்தஸ்தைத் தந்துவிடும்''

''அதெல்லாம் சரி. தற்போதுதான் துறைமுகத்தில் வாணிபமே நிறுத்தப்பட்டு விட்டதே? இவருக்கென்ன வேலை? போர் எதுவும் நடைபெறுகிற சூழ்நிலையும் இல்லை. பின் என்ன முக்கியத்துவம் வந்து விட்டது இவனுக்கு?''

''ஐயா, என் அனுமானம் சரியாக இருக்குமானால் இந்தத் தீவுக் கப்பல் வணிகக் கப்பலாக மாறி ஒரு சுற்று வரப்போகிறது என்று நினைக்கிறேன்''

''ஒரு சுற்று என்றால்?''

''கீழ்த்திசை நாடுகளான கடாரம், சாவகம், மலையூர், பண்ணை, மலையநாடு, சிங்கபுரம் ஆகியவற்றுக்குப் போய் வணிகப் பரிவர்த்தனை செய்யலாம். அதையறிந்து வணிகர்கள் பலர் அவரைத் தொடர்பு கொள்கிறார்கள் என்று நினைக்கிறேன்''

''தீவுக்கப்பல் வணிகக் கப்பலாக மாறிவிட்டால் துறைமுகம் ஆதரவற்றுப் போய்விடும் அல்லவா?''

''மாற்று ஏற்பாடுகள் ஏதாவது செய்வார்கள் ஐயா''

''நீங்கள் சொல்வது உண்மையானால் இந்தக் கப்பலை நாம் வாங்குவதென்பது இயலாமல் போய்விடும். நம் திட்டமெல்லாம் குலைந்து போய்விடும்''

''ஆமாம் ஐயா''

''அசுவ நாவிகரே, நாம் எப்படியாவது மரக்கலத் தலைவனைச் சந்தித்தே ஆகவேண்டும். இல்லையென்றால் காரியம் கெட்டுவிடும்'' என்று கூறிய சதுர்வேதி மரக்கலத் தலைவனைச் சந்தித்துவிட்டு வந்த சிலரிடம் வினவியபோது அசுவநாவிகரின் அனுமானம் உண்மை என்பது தெரிந்தது.

ஆனால் இரண்டாவது நாள் இரவு மரக்கலத் தலைவனைச் சந்திக்க வந்தவர்களெல்லாம் போனபிறகு உபதலைவனை சதுர்வேதி அணுகியபோது ''பேட்டி முடிந்து விட்டது ஐயா. இனி யாரையும் சந்திக்க முடியாது என்று கூறிவிட்டான். நான் எதுவும் செய்வதற்கில்லை'' என்று கைவிரித்துவிட்டான். பலவாறு கெஞ்சியும் உபதலைவன் மசியவில்லை. ''தலைவரை நிர்பந்தப்படுத்தினால் என் தலை போய்விடும். தலைவரைச் சீண்டாதீர்கள். புறப்படுங்கள்'' என்றான் உபதலைவன்.

''யாரடா அப்பேற்பட்டத் தலைவன்? என் கோபத்தைவிட அவனது கோபம் அத்தனை பெரிதா? விடு வழியை'' என்று கூறி உபதலைவனை கழுத்தை நெறித்து கொன்றுவிட்டு உள்ளே செல்லலாமா என்று ஆத்திரப்பட்ட சதுர்வேதி அதை அடக்கிக் கொண்டு உபதலைவனைத் தனியே அழைத்துப்போய் அவன்

கையில் பத்து பொன் நாணயங்களைக் கொடுத்து ''காரியம் மிகவும் முக்கியமானது. எப்படியாவது சந்திப்பிற்கு ஏற்பாடு செய்'' என்றார். உபதலைவன் அவரையும் பொன்னையும் மாறி மாறி பார்த்துவிட்டு ''தலைவர் தூங்கிவிட்டார். ஒரு வகையில் அதுவும் நல்லதுதான். இரவு நேரத்தை இங்கேயே கழித்துவிட்டு காலையில்தான் கப்பலுக்குச் செல்வார். ஆகவே நாளை விடியற்காலையில் வந்து விடுங்கள். உங்களை மட்டும் சந்திக்க ஏற்பாடு செய்கிறேன்'' என்றான்.

சதுர்வேதியும் வேறு வழியில்லாததால் இரவெல்லாம் அரைகுறை தூக்கம் தூங்கிவிட்டு கருக்கல் நேரத்திலேயே எழுந்து குளித்து முடித்தபின் மரக்கலத் தலைவனின் மாளிகைக்கு அசுவநாவிகருடன் சென்றார். அவரைக் கண்டதும் அங்கிருந்த உபதலைவன் ''என்ன, தாமதமாக வருகிறீர்கள்? தலைவர் உங்களுக்காகத்தான் காத்திருக்கிறார். செல்லுங்கள் உள்ளே'' என்றான்.

பெரும் திருப்தியுடன் உள்ளே சென்ற இருவரும் மரக்கலத்தலைவன் கூடத்தின் ஜன்னலைப் பார்த்தபடி நின்றிருந்ததைக் கண்டதும் ''தலைவருக்கு வணக்கம்'' என்றார்கள்.

மரக்கலத்தலைவன் திரும்பியதும் தலைசுற்றியது அவர்களுக்கு. மரக்கலத் தலைவனை அவர்கள் பார்த்ததில்லை என்றாலும் அதைப்பற்றிய கவலை அவர்களிடம் இல்லை. ஆனால் அவர்களை நோக்கித் திரும்பியவன் மன்னன் சிகபாகு என்று தெரிந்ததும் ஆடிப்போய் விட்டார்கள். ஆனால் மன்னனோ சர்வ சாதாரணமாக இருந்தான்.

''நீங்கள்தானா அவர்கள்? இரண்டு நாட்களாகக் காத்திருந்தீர்களாமே? அப்படி என்ன முக்கியமான விஷயம்?'' என்று இயல்பாகவே பேசினான்.

சதுர்வேதிக்கு பெரும் குழப்பமாக இருந்தது. மரக்கலத் தலைவனும் மன்னனும் ஒருவரா அல்லது வேறு வேறு நபர்களா என்று சந்தேகித்த அவர் வேறுவேறாக இருந்தால் மன்னன் எப்போது எதற்காக இங்கே வந்தான் என்று தனக்குத்தானே

கேட்டுக் கொண்டார். மன்னன் பேசிய தோரணையை வைத்து அவன் மன்னனாகப் பேசுகிறானா மரக்கலைத் தலைவனாகப் பேசுகிறானா என்பதை அவரால் அனுமானிக்க முடியவில்லை.

''எங்களிடம் ஐந்நூறு புரவிகள் இருக்கின்றன. அவற்றை நீங்கள் தான் சிங்கபுரத்திற்குக்* கொண்டுபோய் சேர்க்க வேண்டும்'' என்று ஏதோ நோட்டம் பார்ப்பது போல் பேசினார் சதுர்வேதி.

''சிங்கபுரத்திற்கு இங்கிருந்து கப்பல் செல்லப் போவதாக உங்களுக்கு யார் சொன்னார்கள்?'' - அசராமல் கேட்டான் சிகபாகு.

''கேள்விப்பட்டோம். அதோடு நேற்று உங்களைச் சந்தித்த வணிகர்களும் சொன்னார்கள்'' என்றார் சதுர்வேதி.

''அப்படியா? எனக்கொன்றும் அப்படிச் செய்தி வரவில்லையே?'' என்று சொன்ன சிகபாகு ''புரவிகளைக் கொண்டு செல்லவேண்டுமானால் மன்னரின் அனுமதி தேவை. அதை வாங்கி வந்துவிட்டால் பிரச்சினை இல்லை'' என்றான்.

சிகபாகுவை சதுர்வேதியால் புரிந்துகொள்ள முடியவில்லை. பேச்சை வளர்த்து சிக்கலில் மாட்டிக்கொள்ள அவர் விரும்பவில்லை. அவனிடமிருந்து அகன்றாலே போதும்என்று தீர்மானித்த அவர் ''மன்னரின் அனுமதி கிடைக்குமா? அவருக்கே புரவிகள் தேவைப்படும் என்று கேள்விப்பட்டேன். இந்த நிலையில் நான் அனுமதி கேட்டால் எப்படிக் கிடைக்கும்?'' என்று கேட்டார்.

''அவருக்கே புரவிகளை விற்றுவிடலாமே? '' என்றான் சிகபாகு.

''அது தெரியாதா எங்களுக்கு? புரவிகளை சிங்கபுரத்தில் விற்றால் நான்கு மடங்கு தொகை கிடைக்கும் என்பதால் தான் அங்கே அனுப்ப விரும்புகிறோம்''

---

* தற்கால சிங்கப்பூர் அக்காலத்தில் சிங்கபுரம் என்று அழைக்கப்பட்டது.

''இது உண்மை என்றால் மன்னரால் எப்படி அனுமதிக்க முடியும்? கொள்ளை லாபம் அடிக்க முயற்சிப்பவர்களுக்கு நான் உதவி செய்தால் என் நிலை என்னாகும் தெரியுமா?''

''சரி தலைவரே, உங்களால் முடியும் என்று கேள்விப்பட்டுத் தான் வந்தோம். நீங்கள் முடியாது என்று சொல்லிவிட்டால் நான் என்ன செய்ய முடியும்? வருகிறோம்'' என்று கூறி சதுர்வேதி புறப்பட்டபோது ''நில்லுங்கள்'' என்றான் சிகபாகு.

ஏதோ ஆபத்து உருவாகிறது என்று எண்ணிய அவர்கள் அச்சத்தைக் காட்டிக் கொள்ளாமல் நின்றார்கள்.

''உங்கள் தோளில் தொங்கும் பையில் என்ன இருக்கிறது?'' என்று கேட்டான் சிகபாகு சந்தேகம் ஊடுறுவும் குரலில்.

''அது ஒன்றுமில்லை ஐயா. எங்கள் உடமைகள்'' என்றார் சதுர்வேதி.

''காட்டுங்கள் பார்க்கலாம்''

''இதில் பார்ப்பதற்கு என்ன இருக்கிறது தலைவரே?''

''பார்த்தால் என்ன குடி மூழ்கிவிடப் போகிறது? பையில் இருப்பதைக் கீழே கொட்டுங்கள்''

சதுர்வேதி வேறு வழியில்லாமல் அவ்வாறு செய்தார்.

பையிலிருந்து துணிமணிகள், சில பொன் நாணயங்கள், தந்தத்தால் செய்யப்பட்ட சில நாணயங்கள், ஆகியவை தரையில் வந்து விழுந்தன.

அதைக்கண்ட சிகபாகுவின் முகத்தில் ஏமாற்றம் தெரிந்தது. சிறிதுநேரம் வரை மௌனமாக இருந்துவிட்டு ''நீங்கள் எங்கே தங்கியிருக்கிறீர்கள்?'' என்று கேட்டான்.

''கடற்கரை விடுதியில் தான் தலைவரே''

''அங்கேயே இன்று இருங்கள். புரவிகளை என் கப்பலில் ரகசியமாக ஏற்றிச் செல்லமுடியுமா என்று யோசித்து விட்டுச் சொல்கிறேன்'' என்றான் சிகபாகு.

கீழே கிடந்தவைகளை பையில் போட்டுக் கொண்டு கிளம்பிய அதே நேரத்தில் சிகபாகு வீரர்கள் இருவரை அழைத்து

காதில் ஏதோ கூறியதைக் கண்டார் சதுர்வேதி. கடற்கரை விடுதி இனி சிறையாகிவிடும் என்று கருதிய அவர் பலத்த யோசனையுடன் விடுதிக்குச் சென்றார்.

விடுதிக்குச் சென்றதும் தனது ஊகம் உண்மையானதை அறிந்தார் சதுர்வேதி. விடுதியைச் சுற்றி காவல் வீரர்கள் சுற்றியபடி இருந்தார்கள். சதுர்வேதியும் புரவி வணிகரும் வெளியில் எங்கு சென்றாலும் வீரர்கள் தொடர்ந்து வந்தார்கள். விடுதியிலிருந்து தப்பமுடியாது என்பதும் சந்தேகமறப் புரிந்தது அவனுக்கு.

சதுர்வேதி பேசமுற்பட்டு ''அசுவநாவிகரே, மன்னன் சிகபாகு திடீரென்று இன்று எதற்காக வந்தான்? நம்மை அவனுக்குத் தெரியாது. ஆகவே நம்மை எதிர்பார்த்தும் வந்திருக்க முடியாது? அப்படியிருக்க மரக்கலத்தலைவனின் மாளிகைக்கு ஏன் வரவேண்டும்? கடந்த இரண்டு நாட்களாக இங்கே இருந்தவன் யார்? மன்னனா? மரக்கலத்தலைவனா?'' என்று கேட்டார்.

''கடந்த இரு நாட்களாக மரக்கலத்தலைவன் தான் இங்கே இருந்திருக்க வேண்டும். மன்னன் இருந்திருந்தால் வணிகர்கள் எப்படிப்போய் சந்திப்பார்கள்?''

''அப்படியானால் நேற்று இரவுவரை இங்கே இருந்த மரக்கலைத் தலைவன் என்ன ஆனான்? மன்னன் எப்படி இங்கே வந்தான்?''

''ஐயா, உபதலைவன் விரித்த வலையில் நாம் சிக்கிக் கொண்டிருப்பதாகவே நினைக்கிறேன் நான். மன்னன் கடந்த இரண்டு நாட்களில் இந்தத் துறைமுக நகரில் தான் இருந்திருக்க வேண்டும். எதற்காக வந்தான் என்று தெரியவில்லை. நாம் மரக்கலத் தலைவனை முக்கியமாகச் சந்திக்க வேண்டும் என்றுக் கேட்டுக் கொண்டதை உபதலைவன் சந்தேகித்திருக்க வேண்டும். நாம் ஏதோ சதிசெய்ய வந்திருப்பதாகவும் எண்ணி யிருக்க வேண்டும். ஆனால் தன் சந்தேகத்தை மரக்கலத் தலைவனிடம் கூறாமல் மன்னரிடம் கூற நினைத்திருக்கலாம். நம்மை இன்று காலையில் வரச்சொல்லி விட்டு இரவோடு

இரவாக மன்னரிடம் விஷயத்தைக் கூறி இங்கே அழைத்து வந்திருக்கலாம்''

''அப்படித்தான் இருக்க வேண்டும் அசுவநாவிகரே. மன்னனை எதிர்பாராத நிலையில் சந்தித்த நாம் எதுவும் பேசாமல் இருக்கமுடியாது என்பதால் புரவி விற்பனை பற்றிப் பேசினோம். மன்னனுக்கு நம்மீது சந்தேகம் வருவதில் வியப்பொன்றும் இல்லை. அநேகமாக நாம் விஜயனைச் சேர்ந்தவர்கள் என்றும் எண்ணியிருக்கலாம். நம்மைக் கொண்டு விஜயனைப் பிடிப்பதற்காகவே இங்கே காவலில் வைத்திருக் கிறான். அநேகமாக மரக்கலத் தலைவனிடமும் மற்றவர் களிடமும் எல்லா விஷங்களையும் கேட்டுத் தெரிந்து கொண்டபின் நம்மிடம் வந்து சித்திரவதைகளைத் தொடங்குவான் விஜயனைப் பற்றி அறிய''

''ஐயா, நாமிங்கே வந்தபோது இங்கே இருப்பவர்கள் பேசிக்கொண்டதைக் கேட்டதிலிருந்து மன்னர் விஜயனைத் தேடும் வேலையை விட்டு விடும்படி அதிகாரிகளுக்கு கட்டளையிட்டிருக்கிறாராம்.''

''கட்டளையிட்டது உண்மையாக இருக்கலாம். ஆனால் அதன் நோக்கம் விஜயனைக் காப்பாற்றுவதாக இருக்காது. தேடும் வேலையைக் கைவிடும்படிச் சொல்லி விட்டால் விஜயன் வெளிப்படுவான் என்பதும் அவனை எளிதில் பிடிக்கலாம் என்பதும்தான் அவனது நோக்கமாக இருக்கவேண்டும். இல்லையென்றால் உபதலைவன் சொன்ன விவரங்களைக் கேட்டபின் மரக்கலத் தலைவனின் மாளிகைக்கு மன்னன் எதற்காக வரவேண்டும்''

''உண்மை தான் ஐயா''

''அசுவநாவிகரே, எது எப்படியிருந்தாலும் விஜயன் சிக்கிக் கொள்வதற்கு நாம் காரணமாக இருக்கக் கூடாது. நாம் இங்கிருந்து தப்பியாக வேண்டும்''

''கர்ணபத்ர பகுதியை நாம் கொண்டு வராதது நல்லதாகப் போய்விட்டது. மன்னன் மட்டும் அதைப் பார்த்திருந்தால் விஷயம் விபரீதமாகி இருக்கும்''

சதுர்வேதி பதிலேதும் சொல்லாமல் சிந்தனையில் ஆழ்ந்தார். தப்புவதற்கான மார்க்கம் அவருக்குக் கிடைக்கவில்லை. பொழுது பயனில்லாமல் கழிந்து இரவு முகிழ்த்தது. மன்னனும் அவர்கள் எதிர்பார்த்தபடி வரவில்லை. மாறாகத் தலைமுதல் கால்வரை கவசம் அணிந்திருந்த உருவம் அவர்களை நோக்கி வந்தது. மன்னன்தான் இந்த கோலத்தில் வருகிறானோ என்று நினைத்தார் சதுர்வேதி.

அந்த உருவம் அவர்களை நெருங்கி ''நீங்கள் இருவரும் யார்? உண்மையைச் சொல்லுங்கள்'' என்று கேட்டது.

அக்குரல் பெண்குரலாக இருந்தது.

ஒருவேளை வேவு பார்ப்பதற்காக மன்னனே ஏதாவதொரு பெண்ணை அனுப்பியிருப்பானோ என்ற சந்தேகம் எழுந்ததால் அதற்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் தயங்கினார்கள்.

''சீக்கிரமாகச் சொல்லுங்கள். யார் நீங்கள்?'' என்று மீண்டும் கேட்டது அந்த உருவம்.

அச்சமயத்தில் விடுதியின் வாசலில் அரவங்கள் எழுந்தன.

''மன்னர் வாழ்க'' என்ற வாழ்த்துக் குரலும் கேட்டது.

◈◈◈

## அத்தியாயம் பதினைந்து

# துறைமுகத் திருப்பங்கள்

மன்னனை வாழ்த்தும் ஒலி கேட்டதும் ''இனி நாம் தொலைந்தோம்'' என்று முடிவு கட்டிய நிலையில் சதுர்வேதியும் அசுவநாவிகரும் நொந்து நூலாகிப் போனார்கள்.

ஆனால் அந்தப் பெண்ணுருவம் அசரவில்லை. கைகளைத் தட்டி ''யாரங்கே?'' என்றது.

அதையடுத்து அங்கே வந்து நின்ற இரு வீரர்களிடம் ''யாரையும் இங்கே வரவேண்டாம் என்று சொல்'' என்று உறுதியான குரலில் கூறியது.

''மன்னர் வருகிறார். அவரையுமா தடுப்பது?''

''ஆமாம். நான் சொன்னதாகச் சொல். இவர்களை நான் கவனித்துக் கொள்வதாகச்சொல். போ. சீக்கிரம்.

வீரர்கள் இருவரும் அகன்றார்கள். சிறிதுநேரத்தில் அங்கே பழைய அமைதி நிலவியது.

சதுர்வேதிக்கு திட்டமாக எதுவும் புரியவில்லை என்றாலும் வந்திருக்கும் உருவம் காக்கும் கரங்களாக வந்திருப்பதாக எண்ணிக்கொண்டு ''நான் சதுர்வேதி. இவர் அசுவநாவிகர்'' என்றார் அளவாக.

''உங்கள் பெயரில் ஒரு விவரமும் இல்லை. எனக்குத் தேவை உங்களைப்பற்றிய விவரம்''

சொன்னார் சதுர்வேதி.

''மரக்கலத் தலைவரை எதற்காகச் சந்திக்க வந்தீர்கள்?''

சொன்னார் சதுர்வேதி.

''தீவுக்கப்பல் வாங்கும் அளவிற்கு வசதி இருக்கிறதா உங்களிடம்?''

''இதுபோல நான்கு கப்பல்கள் வாங்கும் வசதி இருக்கிறது. அவ்வளவையும் தருகிறோம். கப்பல் எங்களுக்குக் கிடைத்தால் போதும்''

''பணம் எங்கே இருக்கிறது?''

''விடுதியின் பின்புறம் உள்ள மகிழமரத்தடியில் நகையாக இருக்கிறது''

''நல்லது. நீங்கள் போகலாம்''

''கப்பல்?''

''கிடைக்கும். ஆனால் இன்றல்ல. அமாவாசையன்று''

''அமாவாசை. எங்களுக்கு நல்லநாள்''

''போகலாம்''

''உன்னை நம்பலாமா?''

''அது உங்கள் இஷ்டம்''

''நாங்கள் இங்கிருந்து போனால் மன்னரின் ஆட்கள் தொடருவார்கள்''

''தொடரமாட்டார்கள்''

''நாங்கள் எங்கே இருப்பது?''

''இவ்வூரிலேயே வேறு வேடத்தில் இருங்கள். இத்துறைமுகப் பகுதியில் நடப்பவைகளை உன்னிப்பாக கவனியுங்கள். உங்கள் கூட்டாளிகள் வந்தால் உங்களோடு வைத்துக் கொள்ளுங்கள்''

''எங்களைச் சேர்ந்த எழுநூறு பேர் இங்கிருந்து கடல் மூலம் தப்பி தூர்வாச நாட்டிற்குப் போக வேண்டும். மீனவர்களோடு சேர்ந்து கொண்டு படகுகள் மூலம் தப்ப வேண்டும் என்பது திட்டம். ஆனால் துறைமுகத் தலைவன் சுமிதா செய்துள்ள கெடுபிடிகளால் அவர்களால் தப்ப முடியாது போலிருக்கிறது''

''கெடுபிடிகள் நாளை அகன்றுவிடும். அதோடு அவர்கள் எங்கேயும் செல்ல வேண்டாம். இங்கே இருக்கட்டும். அவர்களுக்கு நானே வழி செய்து தருகிறேன்''

''மிகவும் நன்றி பெண்ணே. ஒரே ஒரு கேள்வி''

''என்ன?''

''நீ யார்?''

''சொல்வதற்கில்லை.''

''நாம் இனிமேல் எங்கே எப்போது சந்திப்பது?''

''கண்ணகி என்ற பெண் வருவாள். அவளைக் கேளுங்கள்'' என்று கூறிவிட்டு மேற்கொண்டு எதுவும் பேசாமல் அங்கிருந்து புறப்பட்டது பெண்ணுருவம்.

சதுர்வேதிக்கும் அசுவநாவிகருக்கும் நடந்ததெல்லாம் கனவு போலவே இருந்தது. ''யாரிந்தப் பெண்? மன்னனையே திருப்பி அனுப்பிய இவள் யாராக இருப்பாள்? மரக்கலத் தலைவனை சந்திக்கவே முடியாத நிலையில் இவள் வருகை தந்து தீவுக்கப்பலை வாங்கித் தருவதாகக் கூறியது சாதாரணமாக எதிர்பார்க்கக்கூடிய விஷயமா? இவளால் மட்டும் எப்படி முடியும்? மன்னன் இங்கிருக்கும் சூழ்நிலையில் இக்காரியத்தை

இவள் எப்படிச் செய்வாள்?'' என்றெல்லாம் தங்களுக்குள் கேள்விகளைக் கேட்டுக்கொண்டு வியந்தார்கள். அவள் கூறியது போலவே விடுதியைவிட்டு வெளியேறியபோது அவர்களை யாரும் பின் தொடரவில்லை. மரக்கலத் தலைவனைச் சந்திக்க முற்பட்டதிலிருந்து நிகழ்ச்சிகள் மாறிமாறி நடந்து வருவதைக் கண்ட சதுர்வேதி துறைமுகமான தாமிரலிப்தியில் ஏதேதோ சூதுவாதுகள் நடக்கின்றன என்று நினைத்தார். விடுதியிலிருந்து வெளியேறிய அவர்கள் அங்கிருந்த தர்மசாலாவிற்குச் சென்று மீனவர்களாக வேடம் போட்டுக்கொண்டு கடற்கரைப் பகுதிக்குச் சென்றார்கள்.

அவர்கள் சென்றபோது காலைநேரம் ஆதலால் கடற்கரை முழுவதும் கதிரவனின் வீரியக் கதிர்களால் வெப்பம் ஏறிக் கொண்டிருந்தது. சாதாரண சமயமாக இருந்தால் மீனவர்களால் கடற்கரை ஆரவாரப்பட்டுக் கொண்டிருக்கும். மீன் மற்றும் கடல்வாழ் இனங்களின் வியாபாரம் களை கட்டியிருக்கும். அவற்றை வாங்குவதற்காக மகத நாடு முதலிய உள்நாடுகளி லிருந்து பலரும் வருவார்களாதலால் மீனவர்களும் அவர்களும் சண்டை போடாத குறையாக விலை நிர்ணயம் செய்து கொண்டிருப்பார்கள். அதேசமயம் கங்கை நதி கடலோடு கலக்கும் துறைமுகப் பகுதியில் வணிகக் கப்பல்களிலிருந்து வெளிநாட்டுப் பொருட்கள் படகுகளில் கொண்டு வந்து கரையில் அடுக்கப்படும். சுங்க அதிகாரிகள் அவற்றைப் பார்வையிட்டு பொருட்களுக்கு ஏற்றாற்போல் சுங்கம் விதிப்பார்கள். அது சம்பந்தமாகச் சச்சரவுகள் உண்டாகும். முடிவில் சுங்கம் வாங்கப்பட்டு முத்திரைகள் குத்தப்பட்டு பொருட்கள் பாரவண்டியில் ஏற்றப்பட்டு அங்காடிகளை நோக்கிச் செல்லும். காவல் வீரர்கள் புரவிகளில் திரிந்தபடி அதட்டிக் கொண்டே இருப்பார்கள். ஆனால் அத்தகைய காட்சிகள் எதுவும் கடற்கரையில் இல்லை. துறைமுகத் தலைவன் சுமிதா உண்டாக்கியிருந்த கெடுபிடிகளின் காரணமாக கடல் போக்குவரத்து முற்றிலுமாக ரத்து செய்யப்பட்டிருந்ததால் எல்லா இடங்களும் அமைதியாகவே இருந்தன. மீனவர்கள் தத்தம் படகுகளை கூடாரம் போல் அமைத்துக் கொண்டு அதன் கீழே அமர்ந்து கொண்டு பலர் பேசிக்கொண்டும் சிலர் பாடிக்

கொண்டும் வேறுசிலர் சண்டையிட்டுக் கொண்டும் இருந்தார்கள். ஆனாலும் அக்காட்சி ஆரவாரமாய் இல்லாமல் அடக்கி வாசிக்கப்பட்ட வாத்தியம் போலவே அமைதியாக இருந்தது. அவர்களோடு போய்ச் சேர்ந்துகொண்ட சதுர் வேதியும் அசுவநாவிகரும் அங்கிருந்தபடியே எல்லாவற்றையும் கவனித்து வந்தார்கள்.

அன்று மாலை தீவுக்கப்பல் வணிகக் கப்பலாக மாறி சாவகத்திற்குச் செல்லப் போவதில்லை என்ற செய்தி வரவே மீனவர்களிடமும் பிறரிடமும் பரபரப்பு உண்டாயிற்று. சதுர்வேதி மட்டும் கடற்கரையை விட்டு மரக்கலத் தலைவனின் மாளிகையின் பக்கம் சென்றார். அங்கே கூட்டம் அலைமோதியது. வணிகர்கள் உபதலைவனிடம் காரசாரமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். அப்போது அங்கு வந்து சேர்ந்த துறைமுகத் தலைவனான சுமிதா ''இங்கே என்ன ரகளை? எதற்காக இங்கே இவ்வளவு கூட்டம்?'' என்று அதட்டினான்.

''வியாபாரக் கப்பல் போகாது என்ற செய்தி வந்தது. அது உண்மைதானா என்று அறியவே நாங்கள் வந்தோம்'' என்றார்கள் கடல் வணிகர்கள்.

''அதிகாரப் பூர்வமான செய்தியாக இருந்தால் பறைகளைக் கொட்டி அறிவிக்கப்படும். தற்சமயம் அப்படி அறிவிப்பு எதுவும் இல்லை. நீங்கள் போகலாம். கூட்டம் கூடுவதற்கு அனுமதியில்லை'' என்றான் சுமிதா.

''அப்படி ஏதாவது அறிவிப்பு வருமா?'' என்று கேட்டார்கள் வணிகர்கள்.

''ஏன் வரக்கூடாது? மன்னரின் கட்டளை என்றால் அறிவிப்பு வரும். இதற்கெல்லாம் நான் ஆரூடம் கூறமுடியாது'' என்றான் சுமிதா.

''மரக்கலத் தலைவரை நாங்கள் சந்திக்க முடியுமா?''

''இங்கே வந்தால் சந்திக்கலாம். சரிசரி எல்லோரும் செல்லுங்கள்''

சுமிதாவின் பேச்சைக் கேட்ட வணிகர்கள் ஏதேதோ பேசியபடி கலைந்தார்கள். அவர்களில் பலர் மரக்கலத்

தலைவனுக்கு கையூட்டு கொடுத்திருந்ததால் அதெல்லாம் வீணாகிப்போய் விடுமோ என்று கவலைப்பட்டார்கள். சதுர்வேதியோ தனது திட்டங்கள் பாழாகிவிடுமே என்று கவலைப்பட்டார்.

ஆனால் இரண்டு நாட்களுக்குப் பின்னர் தீவுக்கப்பல் வணிகக் கப்பலாகச் செல்லப்போவது உறுதியாயிற்று. துறைமுகத்தில் இருந்த கெடுபிடிகளும் நீக்கப்பட்டன. மீனவர்கள் படகுகளை கடலுக்குள் கொண்டு செல்லும் வேலைகளில் இறங்கினார்கள். தீவுக்கப்பலுக்கு பொருட்களை ஏற்றுவதற்கான ஏற்பாடுகளும் மும்முரமாயின. ஏராளமான தொழிலாளர்கள் பற்பல இடங்களிலிருந்து பார வண்டிகளில் வந்து சேர்ந்த சரக்குகளைச் சுங்கச் சாவடிக்குக் கொண்டு சென்று அங்கே அனுமதி கிடைத்தபின் படகுகளுக்குச் சுமந்து சென்றனர். படகுகளில் ஏற்றப்பட்ட பொருட்கள் தீவுக் கப்பலுக்குக் கொண்டு போகப்பட்டன. இந்தப் பணிகள் இரவு பகல் பாராமல் தொடர்ந்து பத்து நாட்களுக்கு நடந்தன. அமாவாசைக்கு மூன்றே நாட்கள் இருந்த நிலையில் கடற்கரையில் மீனவர்களும் வணிகர்களும் ஒன்றுகூடி கொண்டாட்டம் போட்டார்கள். அவர்களோடு பெண்கள் சிலரும் சேர்ந்துகொண்டு ஆடிப்பாடியதை சதுர்வேதியும் அசுவ நாவிகரும் கண்டு களித்தார்கள். அப்பெண்களுக்கு தலைவி போல் தோன்றிய பெண்ணொருத்தி மணற்பரப்பில் சுழன்று சுழன்று ஆடியது அனைவரையும் கிறுகிறுக்க வைத்தது.

கவலைகளையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு அந்தக் களியாட்டங்களைக் கண்டு களித்த சதுர்வேதி அருகில் இருந்தவரிடம் ''யார் இந்தப் பெண்? அபாரமாக ஆடுகிறாளே? இவள் அரண்மனையில் ஆடவேண்டியவளைப் போல் அல்லவா இருக்கிறாள்?'' என்று கேட்டார்.

''உண்மைதான். அரண்மனைக்கு வரும்படி அழைப்பும் வந்தது. அவள்தான் அங்கு போக மறுத்துவிட்டாள். அவளுக்குக் கடலும் கடற்கரையும்தான் சொர்க்கம். இங்கே ஆடுவது தான் அவளுக்கு ஆனந்தத்தை அளிக்கும்''

''இவள் யார்? எங்கே இருக்கிறாள்?''

''விவரமெல்லாம் தெரியாது ஐயா. இவள் பெயர் கண்ணகி என்று மட்டும் தெரியும்''

கண்ணகி என்ற பெயரைக் கேட்டதும் சுறுசுறுப்படைந்தார் சதுர்வேதி. தன்னைக் காப்பாற்றிய பெண் குறிப்பிட்ட கண்ணகி இவளாகத்தான் இருக்கவேண்டும் என்று நினைத்த அவர் அவளோடு பேசுவதற்காக ஆட்டம் முடியும்வரைக் காத்திருந்தார்.

நள்ளிரவுக்கு முன்பாக கொண்டாட்டங்கள் முடிந்தபோது கண்ணகி என்ற பெண்ணைச் சந்தித்து சதுர்வேதி தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டபோது ''தெரியும் ஐயா. மரக்கலத் தலைவர் மாளிகையில் எங்கள் எஜமானியைச் சந்தித்துவிட்டு நீங்கள் புறப்பட்டபோது மன்னரின் ஆட்கள் உங்களைத் தொடரவில்லை என்றாலும் எஜமானியின் கட்டளைப்படி நானும் இன்னொருத்தியும் உங்கள் இருவரையும் நிழல் போல் தொடர்ந்துதான் வருகிறோம். இன்று காலை எஜமானி என்னிடம் உங்களைச் சந்திக்கவேண்டும் என்று சொன்னார். உங்கள் கவனத்தை ஈர்க்கவே இன்று இங்கே களியாட்டத்திற்கு ஏற்பாடு செய்தேன்'' என்று கூறிய கண்ணகி ஓரிடத்தைச் சொல்லி அங்கே செல்லும்படியும் அங்கே சென்று காத்திருந்தால் எஜமானி வருவார் என்றும் கூறினாள்.

கண்ணகியின் எஜமானி இருந்த இடம் ஒதுக்குப்புறத்தில் இல்லை. கடற்கரையிலேயே விரிந்து கிடந்த இரவுநேர அங்காடியில் இருந்தது. விற்போரும் வாங்குவோருமாய் மக்கள் ஈக்களாக குவிந்து கிடந்த அங்காடியில் முத்து மணிகளை விற்பனை செய்யும் கடைக்குச் சென்று சதுர்வேதி தன் பெயரைக் கூறியதுமே ''நீங்கள் மட்டும் கடையின் பின்புறம் செல்லுங்கள். இவர் இங்கேயே இருந்தபடி முத்துக்களை ஆராயட்டும்'' என்று கடைக்காரன் தெரிவித்தான்.

சதுர்வேதியும் மெல்ல நழுவி கடையின் பின்பக்கம் சென்றபோது அங்கிருந்த சிறிய அறையில் அவர் அமர ஒரு ஆசனம் போடப்பட்டிருந்தது. வேறு யாரையும் காணவில்லை. அவர் சென்றதுமே ''ஆசனத்தில் உட்காரலாம்'' என்று குரல்

மட்டும் வந்தது. அறை இருட்டாக இருந்தது. சதுர்வேதி பதில் பேசாமல் ஆசனத்தில் அமர்ந்து கொண்டார். சிறிதுநேரம் கழித்து பெண்ணுருவம் ஒன்று முன்பு போலவே முழுக்கவசம் அணிந்து கொண்டு வந்து நின்றது.

''ஐயா, உங்கள் காரியம் முடிந்துவிட்டது'' என்று பீடிகை எதுவும் போடாமல் கூறியது பெண்ணுருவம். நின்ற நிலையிலேயே பேசியது.

சதுர்வேதி ''கப்பலை வாங்கிவிட்டீர்களா?'' என்று கேட்டார்.

''ஆம். நீங்கள் கொண்டு வந்திருந்த கர்ணபத்ர பங்கத்தைக் கொடுத்து மரக்கலத் தலைவரிடமிருந்து வாங்கிவிட்டேன். இப்போதைக்கு அவரே மரக்கலத் தலைவராக இருப்பார். நாக நாட்டிலோ வேறு எந்த நாட்டிலோ இறங்கி அவர் விடை பெற்றுக் கொண்டபின் கப்பல் உங்கள் வசமாகிவிடும்'' என்றது பெண்ணுருவம்.

''மாலுமிகள்?''

''அவர்களில் மாற்றமில்லை. அக்கப்பலில் இருந்தவர்கள் தான் இருப்பார்கள்'' என்று கூறிய பெண்ணுருவம் ''உங்களைச் சேர்ந்த எழுநூறு பேரும் சரக்குகளை ஏற்றுபவர்களாகவும் இறக்குபவர்களாக நடித்து கப்பலில் போய்ச் சேர்ந்து விட்டார்கள். அதோடு ஒற்றைக் காலன், ஒற்றைக் கண்ணன், அசுவத்தாமர், டெமிட்ரியஸ் ஆகியோரும் பல்வேறு விதங்களில் கப்பலுக்கு வந்து சேர்ந்துவிட்டார்கள்'' என்றது.

''விஜயன்?''

''இதுவரை அவர் கப்பலுக்கு வரவில்லை''

''அவரில்லாமல் கப்பலில் யார் இருந்தாலும் பயனில்லையே!''

''அமாவாசைக்கு இன்னும் மூன்று நாட்கள் இருக்கின்றன. அதற்குள் வருகிறாரா என்று பார்ப்போம்''

''வராவிட்டால்?''

''வரவேண்டும் என்று பிரார்த்தனை செய்யுங்கள்''

''நாங்கள் எப்படி கப்பலுக்குப் போகமுடியும்?''

''அமாவாசைக்கு முன்னால் கப்பலுக்கு பூசை நடக்கப் போகிறது. அப்போது நீங்கள் செல்லலாம். ஒரு பிரச்சினையும் இருக்காது. மற்றபடி அமாவாசையன்று கப்பலை எப்படி துறைமுகத்திலிருந்து இயக்குவது என்பதையெல்லாம் மரக்கலத்தலைவர் பேசினார். அதிலும் பிரச்சினை இருக்காது என்று நினைக்கிறேன்'' என்று கூறிய பெண்ணுருவம் ''நீங்கள் செல்லலாம். அமாவாசைக்கு முன்னால் பார்ப்போம்'' என்று கூறிவிட்டு எழுந்து சென்றது.

அது கூறியது போலவே எல்லாக் காரியங்களும் நல்லபடியாக நடந்தன. சதுர்வேதியும் அசுவநாவிகரும் கப்பலைச் சென்றடைந்தார்கள். ஆனால் விஜயனைப் பற்றிய ஒரு தகவலும் இல்லை. இந்நிலையில் அமாவாசையன்று நள்ளிரவில் மரக்கலம் புறப்படவிருந்தபோது மரக்கலத் தலைவருக்கு செய்தியொன்று வந்தது.

மன்னன் சிகபாகு மரக்கலத்தை பார்வையிட வருகிறான் என்ற செய்தி வந்ததுமே சதுர்வேதியும் மற்றவர்களும் சிலையாகிப் போனார்கள்.

◈◈◈

## அத்தியாயம் பதினாறு

# மீண்டும் அமாவாசை

**கண்ணகி**யின் எஜமானி கூறியதுபோல் அமாவாசைக்கு முன் நாள் தீவுக்கப்பல் நல்ல முறையில் பயணம் மேற்கொள்ளும் பொருட்டு கடற்கரையில் பூஜைகள் நடைபெற்றன. அமாவாசை தினத்திற்கு முதல்நாள் தான் பல விஷயங்களில் சிறந்தது என்று நிமித்திகர்கள் கூறியிருந்த படியால் முதல் நாளே நடைபெற்றது. மாலுமிகளும் கடற்கரை ஊழியர்களும் நடத்திய அப்பூஜையில் மரக்கலப் படைத்தலைவன், துறைமுகக் காவலன் சுமிதா ஆகியோர்

கலந்து கொண்டார்கள். மாலுமிகளோடு மாலுமியாய் சதுர்வேதியும் அசுவநாவிகரும் கலந்து கொண்டார்கள். பூஜை நடக்கத் தொடங்கிய சிறிதுநேரம் கழித்து கண்ணகியும் அவளது எஜமானியும் கலந்து கொண்டார்கள். இரண்டு நாழிகைகளுக்கு மேல் பூஜை நடந்து முடிவில் களப்பலி கொடுக்கப்பட்டது. பிரமுகர்களுக்கு பிரசாதங்கள் வழங்கப்பட்டன. கண்ணகியின் எஜமானியான பெண்ணுருவம் சதுர்வேதியிடம் ஓலைச்சுருள் ஒன்றைக் கொடுத்து ''ஐயா, இதை விஜயனிடம் பத்மினி கொடுத்ததாகக் கொடுத்துவிடுங்கள். மாலுமிகளோடு நீங்களும் கப்பலுக்குப் போய்விடுங்கள். நல்வாழ்த்துக்கள்'' என்று கூறியபோது ''விஜயன் இன்னும் வரவில்லையே?'' என்று தன் கவலையை வெளியிட்டார் சதுர்வேதி. அதோடு ''விஜயன் இல்லாமல் இந்தக் கப்பல் புறப்படுவதில் ஒரு அர்த்தமும் இல்லை. நீ செய்த உதவிகள் எல்லாம் பயனற்றுப் போய்விடும்'' என்றார்.

''தெரியும் ஐயா. அவரைப் பற்றிய கவலை எனக்கும் இருக்கிறது. எப்படியும் நாளையாவது அவர் வந்துவிடுவார் என்று நம்புகிறேன். எது எப்படியானாலும் நீங்கள் நாளை இரவு புறப்பட்டாக வேண்டும். இல்லையென்றால் உங்களைக் காப்பாற்ற யாராலுமே முடியாது'' என்று கூறிவிட்டு புறப்படுங்கள். மாலுமிகளோடு சேர்ந்து செல்லுங்கள்'' என்று கூறிவிட்டுப் பெண்ணுருவம் அகன்றது.

அதற்குப்பின் எந்தப் பிரச்சினையுமின்றி இருவரும் தீவுக்கப்பலை அடைந்தார்கள். சதுர்வேதிக்கோ விஜயன் இல்லாததால் எல்லாமே அர்த்தமற்றதாக இருந்தது. அசுவ நாவிகரிடம் ''பயணப்பட வேண்டிய விஜயன் வந்து சேரவில்லை பயணப்பட அவசியமில்லாத நான் ஒரு நாளுக்கு முன்னதாகவே இங்கு வந்து விட்டேன். என்ன ஆனான் இந்த விஜயன்? ஒருவேளை சிகபாகுவிடம் சிக்கிவிட்டானா? அப்படியெல்லாம் லேசில் சிக்கக் கூடியவனல்லவே! என்ன ஆயிற்று?'' என்றெல்லாம் எண்ணிக்குமைந்தார் சதுர்வேதி. கப்பலில் ஏறிய பின் கப்பலைச் சுற்றிப் பார்ப்பதிலோ யார் யார் அதில் இருக்கிறார்கள் என்பதிலோ ஆர்வம் காட்டவில்லை. தனக்குத் தரப்பட்ட உணவை உண்டு மரக்கலத்தின் மேல்

தளத்திலேயே படுத்தார். கடல் காற்று அவரைத் தாலாட்டவே விரைவில் உறங்கியும் போனார்.

மறுநாளான அமாவாசையன்று விஜயன் எப்படியாவது வந்து சேர்ந்துவிடுவான் என்று எதிர்பார்த்த சதுர்வேதி அவன் வராததால் தன் சகாக்களையெல்லாம் கூட்டினார். மானோகாலன், ஒற்றைக் கண்ணன், அசுவத்தாமர், அசுவநாவிகர், டெமிட்ரியஸ், மரக்கலைத்தலைவன் மற்றும் விஜயனின் தோழர்கள் ஆகியோரை அழைத்து "நமது இளவரசர் விஜயன் இந்நேரமாவது கப்பலுக்குள் வந்திருக்க வேண்டும். மரக்கலம் இன்று நள்ளிரவு புறப்படவேண்டும். இன்னும் அவர் வந்து சேரவில்லை என்றால் நாம் புறப்படலாமா வேண்டாமா என்பதை நீங்கள்தான் கூறவேண்டும்" என்றார்.

"ஐயா, இந்த மரக்கலம் தற்போது என்னுடையது அல்ல. உங்களுடையது. இது புறப்படுவது பற்றி நீங்கள்தான் கூறவேண்டும்" என்றான் மரக்கலத்தலைவன் பாரடைஸ்.

"இந்தக் கப்பல் நம் யாருடையதுமல்ல விஜயனுடையது. அவனுக்காக - அவன் பயணப்படுவதற்காக வாங்கப்பட்டது. இதில் பயணப்பட்டு பெரும் லட்சியம் ஒன்றை அவன் நிறைவேற்ற வேண்டும். அதை நிறைவேற்ற அவனால்தான் முடியும். அவனே இல்லை என்கிறபோது இது புறப்பட்டு என்ன பயன்?" என்றார் சதுர்வேதி.

அசுவநாவிகர் பேசமுற்பட்டு "ஐயா, இந்த மரக்கலம் மிகுந்த சிரமங்களுக்கும் ஆபத்துக்களுக்கும் இடையில் வாங்கப் பட்டிருக்கிறது. இதற்கான ஆபத்து இன்னும் நீங்கவில்லை. இக்கப்பல் இங்கு இருக்கும்வரை ஆபத்து நீடிப்பதாகத்தான் கருதவேண்டும். திட்டமிட்டப்படி இன்றிரவு மரக்கலத்தை செலுத்தலாம். விஜயனுக்கு இது தெரியும்பட்சத்தில் எப்படியாவது நம்முடன் வந்து சேர்ந்து கொள்வார்" - என்றார்.

பெரும்பாலானவர்கள் இக்கருத்தை ஆமோதித்தார்கள்.

"அதுதான் உங்கள் விருப்பம் என்றால் திட்டமிட்டபடி நீங்கள் புறப்படுங்கள். நான் கடற்கரைக்குப் போகிறேன். நான் இந்தப் பயணத்தில் இடம் பெறாதவன்" என்றார் சதுர்வேதி.

''ஏன் தாங்கள் எங்களோடு வந்தால் என்ன?'' என்று கேட்டான் டெமிட்ரியஸ்.

''இல்லை டெமிட்ரியஸ். விஜயன் இங்கிருந்து நல்ல முறையில் புறப்படும்வரை அதற்கான திட்டங்களைத் தீட்டி வழி செய்வதுவரைதான் எனது கடமை. இது தேவ புத்தரின் ஆணை. இதை நான் மீற விரும்பவில்லை'' என்றார் சதுர்வேதி.

''அப்படிப் பார்த்தாலும்கூட விஜயன் இங்கு வந்து சேர்ந்தால்தான் உங்கள் கடமையும் பொறுப்பும் நிறைவேறுகிறது. ஆகவே அவர் வரும்வரை நீங்கள் இங்கிருப்பதுதான் சரி'' என்றான் ஒற்றைக் கண்ணன்.

வேறுவழியில்லாமல் ஒப்புக் கொண்டார் சதுர்வேதி.

ஆனால் அன்று மாலை கப்பல் தலைவனுக்கு ஒரு செய்தி வந்தது.

மகாராஜா, சிகபாகு மரக்கலத்தை நேரில் வந்து பார்வையிட விருப்பதால் அவர் வந்து திரும்பும் வரை மரக்கலத்தை இயக்க வேண்டாம் என்று உத்தரவு பிறப்பித்திருந்தான் துறைமுகக் காவலனான சுமிதா.

சதுர்வேதியின் நிலை சொல்லும் தரமற்றதாக இருந்தது. சிகபாகு மட்டும் கப்பலுக்குள் வந்தால் அனைவரது கதியும் அதோகதியாகிவிடும் என்பது சந்தேகமறத் தெரிந்தது அவருக்கு பேசாமல் எல்லோரும் கப்பலைவிட்டு உடடினயாக இறங்கி படகுகள் மூலமாகத் தப்பிவிட்டால் என்ன என்று தோன்றியது அவருக்கு. ஆனால் தீவுக்கப்பல் கிடைத்த இந்தச் சந்தர்ப்பத்தை போல் மற்றொரு சந்தர்ப்பம் நிச்சயம் கிடைக்காது என்பது சந்தேகமறத் தெரிந்ததால் அதை இழக்க அவர் தயாராக இல்லை.

அதேசமயம் மற்றவர்களை அபிப்பிராயம் கேட்டபோது அவர்களும் கப்பலை விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை என்பதை தெரிவித்ததோடு மன்னன் மரக்கலத்திற்கு வந்தால் அவனை அங்கேயே வெட்டி கடலில் எறிந்து விடலாம் என்று ஆவேசமாகச் சொன்னார்கள். துணிந்தவனுக்குச் சமுத்திரம் முழங்கால் அளவு என்ற வகையில் சிக்கல் உண்டாகும் பட்சத்தில் மன்னனையும் அவனோடு வருபவர்களையும்

மரக்கலத்தி லேயே சமாதி கட்டிவிடுவது என்று தீர்மானித்துக் கொண்டார் சதுர்வேதி.

இதற்கிடையில் இருள் சூழ்ந்துவிட்டதால் மரக்கலத்தில் ஆங்காங்கே தீபங்கள் ஏற்றப்பட்டு ஜொலித்தன. அதேபோல் துறைமுக வாயிலுக்கு உட்புறத்தில் இருந்த மரக்கலங்களிலும் விளக்குகள் ஏற்றப்பட்டிருந்தன. கடற்கரையும் பிரகாசமாக இருந்தது. சிறிதுநேரத்தில் மன்னன் கடற்கரையில் காலெடுத்து வைத்து விட்டதற்கு அறிகுறியாக வேட்டுக்கள் அதிர்ந்தன. வாணங்கள் வர்ண ஜாலங்களைக் காட்டின. வாத்தியங்களும் பேரிகைகளும் முழங்கின.

''ஜாக்கிரதை, எல்லோரும் தயாராக இருங்கள். மன்னனும் அவனைச் சேர்ந்தவர்களும் நூலேணியில் ஏறி கப்பலுக்குள் வரும் வரை காத்திருங்கள். பிறகு அனைவருமாகச் சூழ்ந்து கொண்டு அவர்களைத் கொன்றுவிட வேண்டும்'' என்றார் சதுர்வேதி.

எல்லோரும் தயாரானார்கள்.

அப்போது அங்கு வந்த அசுவத்தாமர் ''எல்லோரும் கவனியுங்கள். நாமிருக்கும் கப்பல் நிற்கவில்லை. நகருகிறது'' என்றார்.

அதைக்கேட்டு எல்லோரும் திகைத்துப்போய் கவனித்தபோது கடலை நோக்கி கப்பல் செல்வது தெரிந்தது.

''நான் இங்கே இருக்கும்போது நங்கூரத்தைத் தூக்கியது யார்?'' என்று கேட்டான் மரக்கலத் தலைவன்.

''நான்தான்'' என்று புதுக்குரல் ஒன்று அங்கே ஒலித்தது.

எல்லோரும் திரும்பினார்கள்.

அங்கே இளவரசனுக்குரிய நல்லாபரணங்களுடன் கம்பீரமாக நின்றிருந்தான் விஜயன்.

அவனைக் கண்டதும் அவனது தோழர்கள் ஆனந்தக் கூத்தாடினார்கள்.

சதுர்வேதி பெரும் நிம்மதியை அடைந்தார்.

அப்போது குறுக்கிட்ட மரக்கலத் தலைவன் பாரடைஸ் ''எல்லோரும் கொண்டாட்டங்களைச் சற்று நிறுத்துங்கள்'' என்றான்.

ஏன் இவன் இப்படி அபசகுனமாகப் பேசுகிறான் என்பது புரியாமல் எல்லோரும் அமைதியடைந்ததும் ''கடற்கரையை எல்லோரும் கவனியுங்கள்'' என்றான் பாரடைஸ்.

மரக்கலத்தில் இருந்தவர்கள் பார்த்தபோது கடற்கரையில் ஏதோ குழப்பம் உண்டானதற்கு அறிகுறியாக வீரர்கள் இங்குமங்குமாக அலைவது தெரிந்தது. சிலர் கடலை நோக்கி ஓடிவந்து கொண்டிருந்தார்கள். பெரும் வேட்டுக்கள் முழங்கின. அதையடுத்து துறைமுக வாயிலின் உட்புறமாக இருந்த இரண்டு மரக்கலங்கள் நங்கூரத்தைத் தூக்கிவிட்டு தீவுக்கப்பலை நோக்கி வரலாயின.

''அந்த மரக்கலங்கள் நம் கப்பலைத்தானே பிடிக்க வருகின்றன! பிடித்துவிடுமா?'' என்று பலர் கேட்டார்கள்.

பாரடைஸ் அதைக் கேட்டுச் சிரித்துவிட்டுத் தன் உபதலைவர்களை அழைத்தான். ''கண்டீர்களா? நிலைமையை?'' என்று கேட்டபோது அவர்களும் அர்த்த புஷ்டியுடன் சிரித்தார்கள்.

பாரடைஸ் உபதலைவர்களைப் பார்த்து ''உங்களில் இரண்டு பேர் அடித்தளத்தில் துடுப்பு போடும் மாலுமிகளிடம் செல்லுங்கள். நான் சங்கை ஊதும்போது புரிந்து கொள்ளுங்கள்'' என்றான். வேறு சில உபதலைவர்களுக்கு வேறு வேறு கட்டளைகளைப் பிறப்பித்ததும் தீவுக்கப்பல் கடலை நோக்கி முன்னேறாமல் கரையை நோக்கிச் சென்றது. அதைக் கண்ட விஜயன் எதுவும் புரியாமல் ''நம் கப்பல் ஏன் கரைக்குப் போகிறது?'' என்று கேட்டான்.

''கரைக்குப் போகவில்லை இளவரசே. சற்று பொறுங்கள்'' என்று மரக்கலத் தலைவன் கூறியபோதே அவனது மரக்கலம் மிகவும் உயரமாக எழுந்தது. அதை உணர்ந்ததும் சங்கை எடுத்து ஊதினான் மரக்கலத்தலைவன். இளவரசனைப் பார்த்து ''இன்று அமாவாசையாதலால் அலைகளில் வேகமும் உயரமும்

அதிகமாக இருக்கும். இந்த அலைகளால் தூக்கப்படும்போது நம்மை நோக்கி வரும் இரண்டு மரக்கலங்களின் மீது மோதும். நம் கப்பலின் அடிப்பாகத்தில் நீண்டிருக்கும் இரும்புச் சலாகைகள் அந்த மரக்கலங்களின் அடிப்பாகத்தில் வேகமாக மோதி கிழிக்கும். இரண்டு மரக்கலங்களும் தரைத்தட்டிப் போகும். அல்லது மூழ்கும்'' என்றான்.

காரியங்கள் அவன் கூறியது போலவே நடந்தன. தீவுக்கப்பல் பெரும் அலைகளால் உயர எழும்பி வெகு வேகமாகத் துறைமுக வாயிலை நோக்கிப் பாய்ந்தபோது எதிரே வந்து கொண்டிருந்த மரக்கலங்களின் அடிப்பாகங்களில் தீவுக்கப்பலின் இரும்புச் சலாகைகள் முட்டியதால் பெரும் சத்தத்துடன் பிளந்தன. அப்போது மரக்கலத்தலைவன் இருமுறை சங்கூதியபோது தீவுக்கப்பலிலிருந்து உருண்டை யான இரண்டு நெருப்புக் கோளங்கள் உடைந்த மரக்கலங்களை நோக்கி வீசப்பட்டதால் அவை தீப்பற்றிக் கொண்டு எரிந்தன. அதேசமயம் மாலுமிகள் துடுப்பை மாறிப் போட்டார்கள். எந்த அலைகள் தீவுக்கப்பலை கரையை நோக்கித் தள்ளியதோ அவை பின்வாங்கியபோது அந்த மரக்கலமும் கடலுக்கு இழுக்கப்பட்டது. மாலுமிகள் துடுப்பு மாறி போட்டதாலும் எல்லா பாய்மரங்களும் விரிக்கப்பட்டிருந்ததாலும் தீவுக் கப்பல் வேகமாக கடலை நோக்கிச் சென்றது.

அதேசமயம் துறைமுகத்தின் வாயிலில் இரண்டு மரக்கலங்கள் தீப்பற்றிக் கொண்ட காரணத்தால் தீச்சுவாலை களை உயரே கிளப்பியபடி மூழ்கலாயின. அதைச் சுட்டிக் காட்டிய மரக்கலத் தலைவன் ''இப்போது துறைமுகத்தின் வாயில் அடைபட்டு விட்டது. அதைச் சரி செய்து மற்ற இரண்டு மரக்கலங்கள் புறப்படுவதற்குள் நாம் கடலில் வெகுதூரத்திற்குப் போய்விடுவோம். நடுக்கடலில் அவை நம்மை நெருங்கி வந்தாலும் கவலையில்லை. அவற்றை எளிதாக அழிக்கலாம்'' என்று கூறியபோது அவனது திறமையையும் சாமர்த்தியத்தையும் எல்லோரும் பாராட்டினார்கள்.

''இளவரசே, நீங்களும் சரி மற்றவர்களும் சரி என்னைக் கேட்காமல் மரக்கல விஷயத்தில் எதுவும் செய்யாதீர்கள்'' என்றான் பாரடைஸ்.

அனைவரும் அதை ஆமோதித்தார்கள்.

அன்றிரவெல்லாம் யாரும் தூங்கவில்லை. மரக்கலத் தளத்தில் இருந்தபடி பலவாறு பேசியபடியே பொழுதைப் போக்கினார்கள்.

''விஜயா, நீ எப்படி மரக்கலத்திற்கு வந்தாய்?'' என்று கேட்டார் சதுர்வேதி.

''நான் நான்கு நாட்களுக்கு முன்பாக மாலுமியாக இங்கு வந்தேன். மாலுமிகளோடு சேர்ந்து பழகினேன். இங்கிருப்பதைப் பற்றி உங்களுக்குக்கூடச் சொல்லாததற்குக் காரணம் விஷயம் லேசாகக் கசிந்தால்கூட மன்னன் மோப்பம் பிடித்துவிடுவான் என்பதால்தான். இங்கே வந்து மாலுமிகளிடம் பழகி பல விஷயங்களைத் தெரிந்து கொண்டேன். இங்கிருந்து புறப்பட்ட பின்புதான் என்னை உங்களுக்கெல்லாம் அறிமுகப்படுத்திக்கொள்ள வேண்டும் என்றிருந்தேன். இந்த நிலையில் மன்னன் மரக்கலத்திற்கு வருவதாக வந்த செய்தியை அறிந்து அவனையும் அவனோடு வருபவர்களையும் தீர்த்துக்கட்ட நீங்களெல்லாம் தீர்மானித்ததை நான் அறிந்தேன். அத்திட்டத்தின் பின் விளைவுகள் மோசமாக இருக்கும் என்று எண்ணிய நான் மரக்கலத்தை மன்னனுக்காக காத்திருக்கும்படி வைப்பதைவிட அதை நகர்த்திவிடலாம் என்று மாலுமிகளை வைத்து நங்கூரங்களைத் தூக்கச் செய்தேன். மரக்கலம் நகர்ந்ததை நீங்கள் உடனடியாக அறியவில்லை. ஆனால் கடற்கரையில் இருந்தவர்கள் அறிந்துகொண்டு இக்கப்பலைப் பிடிக்க முனைந்தார்கள். இதை நான் எதிர்பார்க்கவில்லை. நல்ல வேளையாக மரக்கலத் தலைவர் கவனித்து உரிய நடவடிக்கைகளை எடுத்ததால் நாம் பிழைத்தோம்'' என்றான் விஜயன்.

சதுர்வேதி அடுத்ததாக மரக்கலத்தின் தலைவனான பாரடைஸைப் பார்த்து ''பாரடைஸ், இளவரசர்தான் இக்கப்பலின் உரிமையாளர். அவர்தான் உன்னிடமிருந்து நான்கு மடங்கு விலை கொடுத்து வாங்கியிருக்கிறார்'' என்றதும்.

''எல்லா விவரங்களும் எனக்குத் தெரியும். நான் உங்களிடம் வேண்டிக் கொள்வதெல்லாம் ஒன்றுதான். இக்கப்பல்

வங்கநாட்டிற்குச் சொந்தமானது. இதை நான் விற்றது சட்டப்படி குற்றம். இந்த விஷயத்தை மன்னர் எப்படியாவது பல நாடுகளுக்கும் தெரிவித்து என்னையும் இக்கப்பலையும் பிடிக்கும்படி வேண்டுகோள் விடுப்பார். அது எப்போது வேண்டுமானாலும் நடக்கும். அப்படி நடப்பதற்குள் நான் எனக்குத் தரப்பட்ட செல்வத்துடன் கப்பலைவிட்டுப் போய்விட வேண்டும்'' என்றான் பாரடைஸ்.

அவன் கூறியது ஒப்புக்கொள்ள வேண்டிய விஷயம் தான் என்றாலும் திறமையும் சாமர்த்தியமும் உள்ள அவனை விடுவிக்க யாருக்குமே மனதில்லை.

''பாரடைஸ், இந்த நடுக்கடலில் நீங்கள் எப்படி இக்கப்பலை விட்டுப் போவீர்கள்?'' என்று கேட்டான் விஜயன்.

''இளவரசே, இன்னும் இரண்டு நாள் பயணம் செய்தால் பழமையான ஒரு தீவுக்கருகில் நாம் போகலாம். அங்கே அதிகமான நபர்கள் இல்லையென்றாலும் எனக்கு நன்றாகப் பழகிய இடம்தான் அது. அதற்கருகே என்னை இறக்கிவிட்டால் படகு மூலம் நான் தீவை அடைவேன். அத்தீவுப் பக்கமாக மரக்கலங்கள் வந்து போவதுண்டு. அவற்றில் ஏதாவது ஒன்றில் ஏறி நான் காழகத்திற்குப்* போய் விடுவேன்.''

''நீங்கள் போய்விட்டால் இந்தக் கப்பலை யார் இயக்குவது?'' என்று கேட்டான் விஜயன்.

''எனது உபதலைவர்கள் இருப்பார்கள். அவர்கள் கடல் பயணத்திலும் மரக்கல இயக்கத்திலும் அனுபவம் வாய்ந்தவர்கள். அதோடு உங்களோடு இருக்கும் கிரேக்க டெமிட்ரியஸ் சிறந்த கடலோடி. அவரை மரக்கலத் தலைவராக நியமித்துவிடுங்கள். எல்லாம் நல்லபடியாக அமையும்'' என்றான் மரக்கலத் தலைவன்.

''நீங்கள் கூறிய தீவு வரட்டும். முடிவு செய்துகொள்ளலாம்'' என்றான் விஜயன்.

---

* தற்போதைய பர்மா அக்காலத்தில் காழகம் என்று வழங்கப்பட்டது.

பிறகு சதுர்வேதி விஜயனைத் தனியே அழைத்துச் சென்று ''விஜயா, மரக்கலத் தலைவனுக்குக் கொடுத்தது போக மீதமுள்ள கர்ணபத்திர பங்கத்தை எப்படி கப்பலுக்குக் கொண்டு வந்தாய்?'' என்று கேட்டார்.

''இத்தீவுக்கப்பலுக்கு வணிகப் பொருட்கள் ஏராளமாக வந்து கொண்டிருந்த சமயத்தில் நமது சரக்கையும் ஏழு பெட்டிகளில் வைத்து அவ்வப்போது அனுப்பிவிட்டேன். எல்லா பெட்டிகளும் மரக்கலத்தைப் போய்ச் சேர்ந்துவிட்டது தெரியும். இப்போது கப்பலில் ஏராளமான சரக்குகள் குவிந்திருக்கின்றன. இவற்றுக்கிடையே நமது பெட்டிகள் எங்கே இருக்கின்றன என்பதைத் தேடித்தான் பார்க்க வேண்டும்'' என்றான் விஜயன்.

''இப்போது மரக்கலத்தில் உள்ள எல்லா சரக்குகளுமே நமக்குத்தான் சொந்தம். ஏனென்றால் இவைகளைப் பெற்ற மரக்கலத் தலைவன் நம்மை விட்டுப் பிரியப்போகிறான். அவனது பொறுப்பு அதோடு அறுந்து போகிறது. ஆகவே இதிலுள்ள சரக்குகளுக்கு நாம் தான் சொந்தக்காரர்கள்''

''எதற்கும் இது விஷயமாக பாரடைஸை கேட்போம்''

''அவனை ஏன் கேட்கவேண்டும்? ஏற்கனவே தனக்கு உரிமையில்லாத கப்பலுக்காக உரிய விலையைவிட நான்கு மடங்கு விலையை அவன் பெற்றிருக்கிறான். அவனிடம் இந்தச் சரக்குகளைப் பற்றி விசாரித்தால் பங்கு கேட்பான்''

''அப்படிக் கேட்பான் என்று எனக்குத் தோன்றவில்லை ஐயா. அப்படிக் கேட்டாலும் கொடுப்பதும் கொடுக்காததும் நம் இஷ்டம்தானே?''

அச்சமயத்தில் பாரடைஸே அங்கு வந்து ''இளவரசே, இந்தாருங்கள் பட்டியல். இதில் இக்கப்பலில் என்னென்ன பொருட்கள் இருக்கின்றன, யார் யாரிடமிருந்து அனுப்பப் பட்டன, எங்கே இவை போய் சேரவேண்டும் என்ற விவரங்கள் இருக்கின்றன. இனி இவை உங்களது பொறுப்பு'' என்றான்.

விஜயனும் சதுர்வேதியும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

விஜயன் ஏதோ பேசமுற்பட்டபோது அவனைத் தடுத்த சதுர்வேதி ''சரி பாரடைஸ் நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்'' என்றார்.

பாரடைஸ் போனதும் ''என்னை ஏன் தடுத்துவிட்டீர்கள்? நான் என்ன கேட்க விரும்பினேன் என்பது உங்களுக்குத் தெரியுமா?'' என்று கேட்டான் விஜயன்.

''தெரியாமலென்ன? உண்மையைச் சொல்லியிருப்பாய்''

'உண்மையா?''

''எங்கள் லட்சியம் இந்தப் பொருட்களையெல்லாம் உரியவர்களிடம் கொண்டுபோய் சேர்ப்பது அல்ல. நாக நாட்டிற்குச் செல்லுவதுதான் என்று கூறியிருப்பாய். அதைக் கேட்டதும் பேராசையில் வீழ்வான் மரக்கலத் தலைவன். நம்மை அழித்துவிட்டு இக்கப்பலையே விழுங்க வஞ்சக வலை விரிப்பான். இந்த வம்பையெல்லாம் நாம் விலைகொடுத்து வாங்க வேண்டுமா?'' என்று சொன்ன சதுர்வேதி ''மீதி விஷயங்களைக் காலையில் பேசிக் கொள்ளலாம். இந்தா, இவற்றை பத்மினி உன்னிடம் கொடுக்கச் சொன்னாளாம். படித்துப் பார். ஏதாவது விஷயம் இருந்தால் எனக்குச் சொல்' என்று சொல்லி ஓலை நறுக்குகளை அவனிடம் கொடுத்துவிட்டு அகன்றார்.

எந்த நினைவை தகாதது என்று கூறி ஹரகிரி மலையின் ஆற்றங்கரையில் தன்னைக் கடிந்து கொண்டாரோ அதே சதுர்வேதி தன்னிடம் ஓலைகளைக் கொடுத்து மறந்துவிட்ட நினைவுகளைத் தூண்டிவிட்டதை எண்ணி லேசாகச் சிரித்துக் கொண்டான் விஜயன்.

இதே நேரத்தில் இவர்களது பேச்சு நடவடிக்கைகளைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல் கப்பலின் கீழ்தளத்தில் இருந்த அறையில் கனவுகளோடு படுத்திருந்தான் ஒருமனிதன். அவனது அறைக் கதவைத் திறந்துகொண்டு மெதுவாக உள்ளே நுழைந்தாள் ஓர் அழகி.

## அத்தியாயம் பதினேழு

# அதிஷ்டக்காற்று

தீவுக்கப்பலானது விசாலமானதாகவும் அதிக நீளம் கொண்டதாகவும் ஐந்து தளங்களையும் பத்து பாய்மரங்களையும் கொண்டு ஒவ்வொரு தளத்தின் கோடியிலும் மரக்கலத் தலைவனும் உபதலைவர்களும் முக்கியஸ்தர்களும் தங்குவதற்காக இரண்டு அறைகள் வீதம் இருபது அறைகள் வசதிகளுடன் கூடியதாக இருந்ததால் கடலில் மிதக்கும்போது தீவே மிதப்பதாக எண்ண வைக்கும். எனவேதான் அதற்குத் தீவுக்கப்பல் என்று பெயரிட்டு வங்கதேசத்தைக் காக்கும் கடல் தேவதை என்று போற்றினார்கள். அத்தகைய அந்தஸ்துடன் சுமார் ஐந்து வருடங்களாக அக்கப்பல் கடலில் தவழ்ந்து வந்தது. பெரும்பாலும் கடற்படையின் பிரதான அங்கமாகவே அது விளங்கி வந்தது. ஆனால் வங்கதேசத்தை கடல் மூலம் தாக்கும் வல்லமை அப்போது எந்த நாட்டிற்கும் இருக்கவில்லை. பாரத தேசத்தைத் தவிர வேறு எந்த நாடும் வங்கதேசத்தைக் கடல் மூலம் தாக்குவதற்கு அஞ்சின. தீவுக் கப்பல் அந்த வகையில் எல்லோருக்கும் சிம்ம சொப்பனமாக இருந்தது. வங்கநாட்டின் தலை சிறந்த வணிகர்கள் பலர் பல்வேறு கீழைக் கடல் நாடுகளுடன் வாணிபம் செய்தார்கள். அதற்குச் சிறிய மரக்கலங்களே பயன்படுத்தப்பட்டு வந்தன. வணிகர்கள் சிறிய மரக்கலங்கள் மூலம் வாணிபம் செய்ததில் பல்வேறு கஷ்டங்களை அனுபவித்து வந்தார்கள். அயல்நாட்டுப் பகையோ அச்சுறுத்தலோ எதுவும் இல்லாத நிலையில் தீவுக்கப்பலை ஒரு முறையாவது வணிகக் கப்பலாக இயங்க அனுமதிகேட்டு மன்னனை வற்புறுத்தி வந்தார்கள் கடல் வணிகர்கள். தீவுக் கப்பல் மூலம் வாணிபம் செய்வது பாதுகாப்பானது என்றும் ஐந்து சிறிய மரக்கலங்கள் மூலம் கொண்டு போகும் சரக்குகளை ஒரே சமயத்தில் தீவுக்கப்பல் மூலம் கொண்டு செல்ல முடியும் என்பதைச் சுட்டிக்காட்டிக் கொண்டிருந்தார்கள்.

இந்த நிலையில்தான் தீவுக்கப்பல் விலை பேசப்பட்டது. விலைபேச வந்த நபரைக் கண்டதும் மரக்கலத்தலைவன் வியப்பில் ஆழ்ந்தான். ''இதற்குள் வியப்படைய வேண்டாம். இந்தப் பையைத் திறந்து பாரும். இதற்குள் இருப்பது கப்பலின் விலை. அதைப் பார்த்துவிட்டு ஆச்சரியப்படலாம்'' என்று விலைபேச வந்த நபர் கூறியதும் பையைத் திறந்து பார்த்த மரக்கலைத் தலைவன் மயக்கம் போடாத குறையாகச் சமைந்து போனான்.

''இதைக் கொண்டு நான்கு தீவுக்கப்பல்களை வாங்கலாம்'' என்றான்.

''மகிழ்ச்சி. இப்போது இதை வாங்கிக்கொண்டு இக்கப்பலை விற்க முடியுமா உன்னால்?''

''மரக்கலம் மன்னருக்குச் சொந்தம். எனக்கல்ல''

''அது சௌகரியம்தானே? உமக்குச் சொந்தமில்லாத கப்பலை இந்த விலைக்கு விற்க உமக்குக் கசக்கிறதா?''

''மன்னருக்குத் தெரியாமல் இப்படிச் செய்வது பேராபத்து''

''அந்த ஆபத்துக்கும் சேர்த்துதான் விலை கொடுத்திருக்கிறேன். அதோடு நான் யார் தெரியுமா?

''தெரியும்''

''நானே கேட்கும்போது உமக்கென்ன பிரச்சினை?''

''யாருக்கு இந்தக் கப்பல்?''

''இளவரசருக்கு''

''அவருக்கா? அவர் ஏன் விலைக்கு வாங்க வேண்டும்? புரியவில்லையே!''

''மரக்கலத்தலைவரே, தேவையற்ற விஷயங்கள் புரியாமல் இருப்பதே நல்லது. உமக்குத் தேவை எதுவோ அது பையில் இருக்கிறது. அதோடு நீங்கள் திருப்தியடைவது நல்லது''

''சரி''

''இந்த விஷயம் வெளியே தெரிந்தால் உமக்கு கிடைக்கக் கூடியது சித்திரவதை''

பையை வாங்கிக் கொண்ட மரக்கலத் தலைவன் குழப்பம் பாதியும் குதூகலம் பாதியுமாய் தள்ளாடிக் கொண்டிருந்தபோது தீவுக்கப்பலை வணிகக் கப்பலாக மாற்றும்படி மன்னன் சிகபாகுவிடமிருந்து ஆணை வந்தது. திணறிப் போனான் மரக்கலத் தலைவன். மன்னனின் ஆணை வந்ததிலிருந்து கடற்கரையில் சரக்குகள் மலைபோல் குவியலாயின. அவற்றை கப்பலில் ஏற்றிச் செல்லும் அதிகாரம் மரக்கலத் தலைவனுக்கே முழுமையாக இருந்தபடியால் அவனது மாளிகையில் பல்வேறு வணிகர்கள் வந்து சந்தித்தார்கள். கப்பலில் சரக்குகளை கொண்டு செல்ல அரசாங்கம் கட்டணங்களை நிர்ணயித் திருந்தாலும் மரக்கலத் தலைவனுக்கு என்று தனியாக கையூட்டு கொடுப்பதென்பது நீண்டகால வழக்கமாக இருந்தபடியால் மரக்கலத் தலைவனிடம் தத்தம் பங்குகளைக் கொடுத்துவிட்டுப் போனார்கள். ஏற்கனவே விலையைவிட நான்கு மடங்கு விலைத்தொகை கிடைத்திருந்த நிலையில் இதுவேறு வந்து குவிந்ததால் திக்குமுக்காடிப் போனான் மரக்கலத் தலைவனான பாரடைஸ். தன்னைத்தேடி வந்த அதிஷ்டத்தை அவனால் நம்ப முடியவில்லை. அதிஷ்டத்திற்குப் பின்னால் என்ன இருக்குமோ என்ற திகிலும் அவனுக்கு இருக்கவே செய்தது.

இந்த நிலையில் சரக்குகளை கப்பலில் ஏற்றும் சாக்கில் வருகிற எழுநூறு பேரைக் கப்பலிலேயே வைத்துக் கொள்ளும்படி தன் எஜமானி கட்டளையிட்டதாகக் கண்ணகி கூறியபோது திணறிப்போன பாரடைஸ் எஜமானியைச் சந்தித்தான்.

''கப்பலில் பெருமளவு சரக்குகள் இருக்கின்றன'' என்றான்.

''தெரியும் ''

''துடுப்பு போடும் மாலுமிகள் பக்கத்திற்கு 100 வீதம் 200 பேர் இருக்கிறார்கள்''

''இருக்கட்டும்.''

''சரக்குகளை அனுப்பும் வியாபாரிகள் தங்கள் சரக்கிற்கு பாதுகாப்பாக ஆளுக்கு ஒருத்தரை அனுப்பி வைப்பார்கள். அது ஐந்நூறைத் தாண்டும்''

''இந்த நிலையில் தாங்கள் எழுநூறு பேரை அனுப்பியிருக்கிறீர்கள். இது மிகவும் அதிகம். பாரம் தாங்காது''

''தீவுக்கப்பல் என்று சொல்கிறீர்கள். இத்தனைப் பேரைத் தாங்காதா?''

''சரக்குகள் இல்லையென்றால் பரவாயில்லை. அதன் எடை இரண்டாயிரம் பேர்களின் எடைக்குச் சமம். மொத்தத்தில் பார்த்தால் கப்பலில் மூவாயிரம் பேருக்கும் மேலே இருப்பார்கள் என்று கூறலாம். நபர்கள் அதிகரிக்கும்போது அவர்களுக்கான உணவும் தண்ணீரும் அதிகரிக்கும். அதோடு கப்பல் கடலுக்கு வந்து ஐந்து ஆண்டுகளாகிறது. இதுவரை பழுது பார்க்கப்படவில்லை. கப்பலின் அடியில் பாசிகள் மிகவும் அதிகமாகச் சேர்ந்திருப்பதால் கப்பலின் வேகம் குறைந்திருக்கிறது. இந்த நிலையில் அதிக பாரம் உசிதமானதல்ல''

''மரக்கலத் தலைவரே, நான் கூறிய எழுநூறு பேர் இளவரசரின் தோழர்கள். இக்கப்பல் இனி இளவரசருக்குச் சொந்தம். அவருக்குச் சொந்தமான கப்பலில் அவரது நண்பர்களுக்கு இடமில்லை என்றால் எப்படி? அதோடு நீர் ஒன்றும் இக்கப்பலை கடைசிவரை ஆளப்போவதில்லை. சரக்குகளை கொண்டுபோய் சேர்க்கும் பொறுப்பும் உங்களுக்கு இல்லை. ஆகவே சரக்குகளை பாதுகாக்க கப்பலில் வந்திருக்கும் வணிகர்களை தயவுதாட்சண்யம் இன்றி இறக்கிவிடுங்கள். சரக்குகளில் தேவையற்ற பொருட்களையும் தட்டுமுட்டு சாமான்களையும் கடலில் தூக்கி எறியுங்கள்''

''மரக்கலத்தலைவன் எதுவும் பேசாமல் கண்ணகியின் எஜமானி கூறியது போல சரக்குகளைப் பாதுகாக்க வந்திருந்த வணிகர்களையெல்லாம் இறக்கிவிட்டதால் சுமார் நானூறு பேர்களது சுமை குறைந்தது.

★★★

இக்கதையின் ஆரம்பத்திலிருந்து ''விஜயனின் தோழர்கள் எழுநூறு பேர்'' என்று அடிக்கடி வந்து கொண்டே இருப்பதை

வாசகர்கள் கவனித்திருக்கலாம். விஜயனைப் பற்றிச் சொல்லும் வரலாறுகளும் அவன் கெட்டவனாக இருந்ததிலிருந்து இலங்கைக்குச் சென்று அரசை ஸ்தாபித்து முடிக்கும்வரை அந்த எழுநூறு தேழர்களை இணைத்துதான் கூறுகின்றன. மற்றபடி அவர்கள் யார் எங்கிருந்து வந்தார்கள் என்ற விவரம் எதையுமே கூறவில்லை.

விஜயன் தனது பால பருவத்திலேயே இணைபிரியாத நண்பர்களைக் கொண்டிருந்தான். தான் ஒரு அரச குமாரன் என்ற வித்தியாசத்தைக் காட்டாமல் அவர்களோடு பழகினான். இளவரசன் ஆன பின்பும் அந்தப் பண்பு மாறவில்லை. இளவரசனான பின் பலர் நண்பர்களானார்கள். அவர்களை யெல்லாம் தனது உடன்பிறவாத சகோதரர்களாகக் கருதி அவர்களது சுகதுக்கங்களில் பங்கு கொண்டதால் அவர்கள் அவனைப் பெரிதும் மதித்து தங்கள் தலைவனாக ஏற்றுக் கொண்டார்கள். அவனைக் காக்கும் பொருட்டும் உயர்த்தும் பொருட்டும் அவனுக்காக எதையும் செய்யத் தயாராக இருந்தார்கள். அதற்காக அனைத்து வேலைகளையும் கற்றார்கள். விஜயன் மன்னனுக்கு எதிராகத் திரும்பியபோது மேலும் சிலர் அவனது நண்பர்களானார்கள். அவனது காரியங்களுக்கு உறுதுணையாயிருந்து சகல வேலைகளையும் செய்தார்கள்.

ஒருமுறை சிகபாகு விஜயனிடம் கோபப்பட்டுக் கூறியபோது ''உன்பலம் எங்கே இருக்கிறது என்று எனக்குத் தெரியும் விஜயா. உன் தோழர்கள் எழுநூறு பேரையும் சிறைப்பிடித்து விட்டால் நீ கிளைகளற்ற மரமாகிவிடுவாய். உன்னை வெட்டுவது சுலபம்'' என்று சொன்னதிலிருந்துதான் தனது உயிர்த் தோழர்களின் எண்ணிக்கை எழுநூறு என்பதே அவனுக்குத் தெரியவந்தது. மன்னன் குறிப்பிட்ட எண்ணிக்கையை விசேஷமாகக் கருதிய விஜயன் தன் தோழர்களின் எண்ணிக்கை எழுநூறு என்பதை நிலையாக வைத்துக் கொண்டான். அவர்களுக்கு 'விஜயன் படை' என்ற பெயரும் உண்டாயிற்று.

இப்படி அவனும் அவனது தோழர்களும் இணைபிரியாம லிருந்து வந்தார்கள். இந்த நிலையில் விஜயன் புத்த பிட்சு

ஆனந்தரால் கடத்தப்பட்டும் தோழர்கள் சிகபாகுவினால் சிறைப்பட்டும் பிரிந்தார்கள்.

★★★

தீவுக்கப்பல் கடலில் மிதக்கத் தொடங்கிய நள்ளிரவு வேளையில் விஜயனின் தோழர்கள் இரண்டாவது மூன்றாவது தளங்களில் ஆயாசம் நீங்கும்விதமாகக் காலை நீட்டிப் படுத்தார்கள். நான்காவது தளத்தில் விஜயனுக்கு கூட்டாளிகளாக வந்திருந்த ஒற்றைக்காலன், ஒற்றைக் கண்ணன், அசுவத்தாமர், டெமிட்ரியஸ், அசுவநாவிகர், சதுர்வேதி மற்றும் பணியாட்களும் பணிப் பெண்களும் படுத்திருந்தார்கள். ஐந்தாவது தளத்தில் இரண்டு அறைகளில் மரக்கலத்தலைவனும் விஜயனும் தங்கினார்கள். தளத்தில் உபதலைவர்கள் படுத்தார்கள்.

அரவமற்றுக் கிடந்த முதல் தளத்தில் இருந்த அறையில் மரக்கட்டிலில் கனவுகளோடு படுத்துக்கிடந்த மனிதன் தன் கனவுகள் மீதே பொறாமை கொண்டான். இப்படிப்பட்ட கனவு தனக்கு எப்படி வந்தது என்பதை எண்ணிப் பார்க்கவே அவனுக்குப் பூரிப்பாக இருந்தது. தனது கனவானது நல்ல முறையில் வெற்றியடைந்து வருவது அவனுக்கு ஆறுதலாக இருந்தது. தேனைத் தேடிப் போனவனுக்கு தானாகக் கரும்பு ஒன்று வந்து மேலே விழுந்ததுபோல அதிஷ்டக் காற்றொன்று தன்னை நோக்கி வீசியபோது தன்னைப் போல இன்பகரமானவன் வேறு இருக்க முடியுமா என்று தனக்குத்தானே கேட்டுக்கொண்டான். அந்த சமயத்தில் அவனது அறைக் கதவு லேசாகத்திறந்து அந்த அதிஷ்டக் காற்று உள்ளே நுழைந்தது. தன்னை அணைக்கப் போகிற அக்காற்று இத்தனை அழகுடன் இருக்கும் என்று அவன் எதிர்பார்க்கவில்லை. மாறாக சொக்கிப் போக வைத்தது.

அதிஷ்டக் காற்றென்று அவன் கருதிய அழகி அறைக்குள் நுழைந்து உள்ளே எரிந்து கொண்டிருந்த பந்தத்தைத் தூண்டி அறையைப் பிரகாசப்படுத்தினாள். பந்தத்தை அவள் தூண்டிய விதமானது தன் உணர்ச்சிகளைத் தூண்டியதுபோல் இருக்கவே துள்ளி எழுந்த அந்த மனிதன் அந்த அழகியை அப்படியே அள்ளி

எடுத்து கட்டிலில் போட்டு அவளது உதடுகளை மிகவேகமாக தன் உதடுகளால் பற்றினான். உதடுகள் தங்களுக்குத் தெரிந்த வித்தைகளையெல்லாம் சில நிமிடங்களுக்குப் பரிமாறிக் கொண்டன. பிறகு அவள் எழுந்து அமர்ந்து கொண்டு ''அதென்ன இப்படியொரு வேகம்?'' என்று கேட்டாள் உதடுகளைத் துடைத்தபடி.

''உன்னைக் கண்டுவிட்ட பிறகும் இந்த வேகம் வரவில்லை என்றால் அது உன் அழகை அவமானப்படுத்துவதுபோல் ஆகாதா?'' என்று கேட்டான் அந்த மனிதன் கள்ளச் சிரிப்புடன்.

''என் அழகின்மீது நீங்கள் வைத்துள்ள அபிமானம் அழகாக இருக்கிறது'' என்றாள் அந்த அழகி உடலை நெளித்தபடி.

''பெண்ணிடம் அழகிருப்பதும் அந்த அழகை ஆடவன் அனுபவிப்பதும் இயற்கை. ஆனால் உன் அழகை அனுவிப்பதென்பது இயற்கையைகூட அதிரவைக்கும் விசேஷம். உன் உடலுக்கு இத்தனை அழகைத்தர ஒரு பிரம்மாவினால் முடியாது'' என்றான் அந்த வாலிபன்.

''நீங்கள் எவ்வளவு பேசினாலும் எனக்குத் திகட்டுவதே இல்லை. ஏன் தெரியுமா?''

''ஏன்?''

''என் அழகை யாரும் ரசிக்கவில்லை. வர்ணிக்கவில்லை. ஏங்கி ஏங்கி தவித்த எனக்கு ஏங்கும் அளவிற்கு ரசனையைத் தந்தது நீங்கள் தான்''

''அதற்குக் காரணம் நீ கசப்பதும் இல்லை. திகட்டுவதும் இல்லை. எப்போதுமே தேனாக இருக்கிறாய்''

''அதற்கு நீங்களும் ஒரு காரணம் தான்''

''எப்படி?''

''அதை நான் சொல்ல வேண்டுமா?''

''ஆரம்பித்ததை நீதானே முடிக்க வேண்டும்? உன் அழகிய உதடுகளால் வார்த்தைகள் வெளிப்படுவது கள்ளுண்ட இன்பம் தரும்''

''ஐயோ''

''சொல் முதலில்''

''உங்கள் அசைவு ஒவ்வொன்றிலும் வித்தியாசம் இருக்கிறது. ஒவ்வொரு சமயத்திலும் ஒவ்வொரு வித்தியாசத்தைக் காட்டுகிறீர்கள். அதில் கிறங்கிப் போகும்போது எப்படித் திகட்டுவேன்?''

''அப்படியானால் இன்றைக்கும் ஒரு வித்தியாசத்தைக் காட்ட வேண்டியது தான்''

''கைவசம் நிறைய வித்தைகளை வைத்திருப்பீர்கள் போலிருக்கிறது''

''இந்த விஷயத்தில் அதற்குப் பஞ்சமில்லை. அதுவும் உன்னிடம் இருக்கும்போது புதுப்புது வித்தைகள் உண்டாகின்றன'' என்று சொன்னபோது அவனது உணர்வுகள் வெகுவாகச் சூடேறின. அதேசமயம் காமவிகாரங்களால் கலைந்து கிடந்த அவள் அவனது கரத்தைப் பற்றி இழுத்தாள். ரதிதேவியே தன்னை இழுப்பதுபோல் உணர்ந்த அவன் அவளுக்கு எந்தவிதமான குறைவும் வைக்கக்கூடாது என்று கருதியதால் வித்தியாசத்தைக் காட்ட முற்பட்டான். காமத்தில் வித்தியாசங்கள் உண்டாகிறபோது தருகிறவனும் சரி பெறுகிறவளும் சரி பூரண திருப்தியை அடைகிறார்கள். அப்போது அவர்கள் வேறு எதைப்பற்றியும் கலைப்படுவதில்லை. அதிலும் அந்த மனிதனும் சரி அந்த அழகியும் சரி காமத்தைத் தவிர்த்த மற்ற விஷயங்களில்கூட கவலையற்று வாழப் பழகிவிட்ட படியால் காமத்தில் முழு மூச்சுடனும் வீச்சுடனும் செயல்பட முடிந்தது. அவளோ அதிகம் எதிர்பார்த்து எதிர்பார்த்து கிடைக்காத நிலையில் அவனை வந்து அடைந்தவள். அவனோ எதையும் எதிர்பார்க்காத நிலையில் இருந்தபோது தானாக அவள் வந்து விழுந்தாளாதலால் அவளைச் சக்கையாகப் பிழியலானான். காம வித்தையில் வித்தியாசம் என்று சொல்லிக்கொண்டு வக்கிரங்களை வெளிப்படுத்தி தீர்த்துக் கொண்டிருந்தார்கள் அவர்கள்.

தொட்டிலைப் போல அலைகளில் ஆடிய கப்பலில் உல்லாசமாக ஆனந்தித்த அவர்கள் நீண்டநேரம் கழித்து விடுபட்டபோது அவள் கேட்டாள்.

''ஊருக்குள் இருந்தபோது யாருக்கும் தெரியாமல் நாம் இருந்து வந்தோம். இங்கே அப்படி முடியுமா?''

''ஏன் முடியாது? நாம் இருவரும் பணியாட்கள் வேடத்தில் தானே இருக்கப் போகிறோம்? நம்மை யார் கண்டு கொள்ளப் போகிறார்கள்?''

''நாம் யார் என்பது மாலுமிகளுக்குத் தெரியும். நாம் கொடுத்த பணத்தால் அவர்கள் தங்களது அறையைக் கொடுத்திருக்கிறார்கள். நமது உறவைப்பற்றி மூச்சுவிட மாட்டோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த நிலை எத்தனை நாளைக்கு நீடிக்கும்?''

''நீடிக்கும்வரை நீடிக்கட்டும். அதோடு நம் உறவு எப்படியும் வெளிப்பட்டுத்தான் ஆகவேண்டும். அதற்குள் நான் என்னென்ன செய்கிறேன் பார்''

''உங்கள் தீர்மானம் என்ன?''

சொன்னான் அவன். அவளோ அவனைக் கட்டிப்பிடித்து எங்கெல்லாமோ முத்தமிட்டாள் ஆர்வ வெறியினால்.

இவர்கள் உல்லாசமாக பொழுது போக்கிக் கொண்டிருந்த அதே நேரத்தில் கப்பலின் ஐந்தாவது தளத்தில் தனக்கு ஒதுக்கப்பட்டிருந்த அறையில் கட்டிலில் சாய்ந்தபடி பந்த ஒளியில் சதுர்வேதி கொடுத்த ஓலை நறுக்குகளைப் படித்திருந்தான் விஜயன். தன்னை மணந்துகொள்ளும்படி ஆசையோடு கேட்டிருந்த பத்மினிதான் தனது அவலத்தை எழுதியிருந்தாள்.

அன்று ஹரகிரிமலைக்கு அருகே இருந்த ஆற்றங்கரையில் விஜயனோடு பேசிக்கொண்டிருந்த பத்மினி மறுநாள் அங்கு எத்தனை நேரமானாலும் வருவதாகவும் திருமணம் கட்டாயம் நடந்தாக வேண்டும் என்று சொல்லிவிட்டுப் போயிருந்தாள். மறுநாள் காலை விஜயன் சொல்லியபடி மன்னன் சிகபாகுவைப் பார்க்க அவனது அரண்மனைக்குப் போனாள்.

அவளை நல்லமுறையில் வரவேற்று உபசரித்த சிகபாகு தனது எண்ணத்தை வெளியிட்டபோது திகைத்துப் போனாள் பத்மினி.

★★★

அவள் அதைச் சிறிதும் எதிர்பார்க்கவில்லை.

◈◈◈

## அத்தியாயம் பதினெட்டு

# சிகபாகுவும் பத்மினியும்

''என் அழைப்பை ஏற்று இங்கே வந்ததற்கு மிகவும் நன்றி பத்மினி'' என்று இதமான குரலில் கூறினான் சிகபாகு.

''நன்றியெல்லாம் எதற்கு மகாராஜா? இதற்கு முன்பெல்லாம்கூட தாங்கள் அழைத்தபோது நான் வந்து கொண்டுதானே இருந்தேன்?'' என்று கேட்டாள் பத்மினி.

''உண்மை. ஆனால் அந்த நிலைவேறு. இந்த நிலைவேறு. அப்போது ஆலோசனைகூற நீ மட்டுமே இருந்தாய். ஏறக்குறைய எல்லா விஷயங்களுக்கும் உன்னையே அழைத்தேன். இப்போது அந்த நிலை இல்லை. ஆலோசனை கூற அமாத்யர் முதல் பல்வேறு அறிஞர்கள் வந்து விட்டார்கள். அவர்கள் வந்தபின் உன்னை மறந்தேவிட்டேன். உதாசீனப் படுத்தப்பட்டதாக நீ எண்ணவும் வழி இருக்கிறது. இப்படிப் பட்ட நிலையில் உன்னைச் சந்தித்து அழைப்பு விடுத்தேன். நீயோ மனதில் எதையும் வைத்துக் கொள்ளாமல் வந்திருக் கிறாய். இதற்கு நன்றி சொல்வது தவறா?''

''நீங்கள் அழைத்தால் வரவேண்டியது என் கடமை. அழைப்பதும் அழைக்காமல் விடுவதும் தங்கள் உரிமை''

''உன் பெருந்தன்மையான பேச்சு எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. என் கோரிக்கை நிறைவேறும் என்ற நம்பிக்கையும் வருகிறது''

''இனி நான் எதற்கு மகாராஜா? அமைச்சர்கள் தான் வந்து விட்டார்களே?''

''எத்தனை பேர் வந்தாலும் உன் இடத்தை அவர்களால் பிடிக்க முடியாது பத்மினி. என் மகன் ஜராசந்தனை அரண்மனைக்கே அழைத்து வந்து காவல் செய்யுங்கள் என்று நீ ஆலோசனை சொன்னாய். அதை நான் ஏற்றிருந்தால் என் மகன் தாக்கப்பட்டிருக்கவும் மாட்டான். கர்ணபத்ர பங்கம் களவும் போயிருக்காது''

''நடந்ததை மறந்துவிடுங்கள் மகாராஜா. கசப்புகளை மறப்பதுதான் இனிப்பானது''

''அழகான வார்த்தைகள்'' என்று பாராட்டிய சிகபாகு ''நீங்களெல்லாம் விரும்பியபடி நான் மாறி விட்டேன் தெரியுமா?'' என்று கேட்டான்.

''தெரியும் மகாராஜா. மிகவும் எதிர்பார்க்காத திருப்பம் இது. உங்கள் மாற்றம் மக்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியிருக்கிறது. உங்களைத் தூற்றியவர்களெல்லாம் இப்போது போற்றிப் பாராட்டுகிறார்கள்''

''எனக்கும் மகிழ்ச்சியாகத்தான் இருக்கிறது. அமைச்சர்களும் மற்றவர்களும் என்னிடம் விசுவாசமாகவும் எனக்கு உதவியாகவும் இருக்கிறார்கள். சுகவாசத்தில் மூழ்கியிருந்த பிள்ளைகளையும் ஆசை நாயகிகளையும் அதிரடியாக நான் அடித்துவிரட்டிய விதம் அமைச்சர்களுக்கு என் மீது நம்பிக்கையை உண்டாக்கியிருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில் உன்னையும் என் பக்கத்திலேயே வைத்துக் கொள்ள விரும்புகிறேன்''

''நான் எதற்கு மகாராஜா? என்னை ஆலோகராக வைத்துக் கொண்டால் பழையபடி அமைச்சர்கள் எதிர்ப்பார்கள்''

''எதிர்க்கமாட்டார்கள். இப்போதெல்லாம் என் செயல்களை அவர்கள் அங்கீகரிக்கிறார்களே தவிர நிராகரிப்பதில்லை. அதோடு இதுபற்றி அவர்களிடம் பேசி சம்மதமும் வாங்கிவிட்டேன். உன்னை வெறும் ஆலேசகராக

வைத்திருக்க எனக்குச் சம்மதமில்லை. உரிய அந்தஸ்தையும் தர முடிவு செய்துவிட்டேன்''

''என்ன அந்தஸ்து மகாராஜா?''

சொன்னான் அவன்.

அதிர்ந்தாள் அவள்.

இதை அவள் சிறிதும் எதிர்பார்க்கவில்லை.

உடனடியாக அவனுக்குப் பதில் சொல்லவும் முடியவில்லை.

''எனக்கு ஒருநாள் அவகாசம் கொடுங்கள் மகாராஜா'' என்று கேட்டாள் அவள்.

''அதற்கென்ன எடுத்துக்கொள். இப்போது உள்ளே வா. இன்று நான் அமைச்சர்களுக்கு பெரிய விருந்து ஒன்றை வைத்திருக்கிறேன். நீ தான் சிறப்பு விருந்தாளி'' என்று கூறி அவளைப் பதில் சொல்லவிடாமல் விருந்து கூடத்திற்கு அழைத்துச் சென்றான் சிகபாகு.

விருந்து பிரமாதமாக இருந்தது. அதுவும் மன்னனே அளித்த விருந்து என்பதால் மான்களும் முயல்களும் உணவாகி யிருந்தன. பழங்கள் இனிப்புகள், தேன், மது என்று உணவுவகைகள் அமர்க்களப்பட்டதால் விருந்தினர்கள் ஒருபிடி பிடித்தார்கள். சிகபாகு அரக்கனைப் போலவே விருந்துண்டான். ஆனால் சிறப்பு விருந்தாளியாக இருந்த பத்மினிக்கோ எதுவும் பிடிக்கவில்லை. அதோடு அமாத்யரும் ஒருசில அமைச்சர்களும் பேசிய பேச்சு அவளுக்கு ரசிக்கக் கூடியதாக இல்லை. அவர்கள் தவறாக எதுவும் பேசவில்லை என்றாலும் அவளது மனநிலை சரியாக இல்லாததால் ரசிக்க முடியவில்லை. கசக்கவே செய்தது.

விருந்து முடிந்ததும் மன்னனே அவளை அவளது வீட்டிற்குத் தேரில் அனுப்பி வைத்தான். வீட்டிற்கு வந்து அவள் அங்கே இருக்க விரும்பாமல் அருகே இருந்த புத்த விஹாரத்திற்குச் சென்றாள். விஹாரத்திற்கு முன்னால் இருந்த சோலையில் அமர்ந்து கொண்டு சிகபாகுவின் பேச்சுக்களை அசை போட்டாள். அவனது கோரிக்கை நியாயமற்றதாகவும்

விவேகமற்றதாகவும் தோன்றியது அவளுக்கு. என்னதான் அறிவால் கவரப்பட்டாலும் இந்த ஆண்கள் ஒருகட்டத்தில் பெண்களின் அங்கங்களில்தான் ஈர்க்கப்படுகிறார்கள் என்று தோன்றியது அவளுக்கு. விஜயனை நினைத்துப் பார்த்தாள். அவனுக்காகவே பிறந்தவள் என்று தன்னை எண்ணிக் கொண்டு காதல் கொண்ட அவளுக்கு காதல் நிறைவேறவிருந்த நிலையில் இடிவிழுந்த மாதிரி திருப்பம் உருவாவதை அவளால் ஜீரணிக்க முடியவில்லை. ''மன்னன் கூறியதை எதற்காகப் பொருட்படுத்துகிறாய்? நீ திட்டப்படி இன்றிரவு விஜயனைச் சந்தித்து அவனை மணந்துகொண்டு அவனுடன் போய்விட வேண்டியதுதானே? இதில் எதற்கு உனக்குத் தயக்கம்? மன்னனுக்கு நீ என்ன கடன் பட்டவளா? இல்லையே!'' என்றது அவளது மனசாட்சி.

அச்சமயத்தில் அவளுக்கு வேறொரு எண்ணம் தோன்றியது. அப்படிச் செய்தால் என்ன? சிகபாகுவிற்குச் சம்மதம் தெரிவித்து அதன் மூலம் அவருக்கு உதவினால் என்ன? என்று தோன்றியது அவளுக்கு. ''தனக்கு உதவுவதற்கு ஏதாவது வழி கிடைக்கிறதா என்றுதான் பாரேன்!'' என்று விஜயன் கூறியதை நினைவு கூர்ந்தாள் அவள். அவன் யதார்த்தமாகக் கூறியிருந்தாலும் அதில் பொருள் இருப்பதாகக் கருதிய அவள் ஒரு தீர்மானத்திற்கு வந்தாள். அப்படி வந்ததில் ஒரு திருப்தி ஏற்பட்டாலும் மறுபுறம் வேதனையாக இருந்தது. அன்று இரவெல்லாம் தனக்கு வந்தச் சோதனையை எண்ணி அழுதுகொண்டே இருந்தாள்.

மறுநாள் மன்னனைச் சந்தித்தபோது ''மகாராஜா, எனக்கொரு சந்தேகம் இருக்கிறது'' என்றாள் பத்மினி.

''என்ன சந்தேகம்? கேள்''

''என்னை மணந்துகொள்ள விரும்புவதாகக் கூறினீர்கள். அவ்வாறு மணந்துகொண்டால் என்னை ஆசை நாயகியாக்கி சுகபோகப் பொருளாக்கி விடுவீர்களா?''

''ஆசைநாயகிகளுக்கு இனி என் வாழ்வில் இடமில்லை பத்மினி. உன்னை மணந்தால் மகாராணி அந்தஸ்து கொடுத்து சிம்மாசனத்தில் எனக்குப் பக்கத்தில் அமரச் செய்வேன்''

''தங்கள் பக்கத்தில் ராணியாக அமர்வதற்கு நான் கொடுத்து வைத்திருக்க வேண்டும் மகாராஜா அதேசமயம் வெறும் பொம்மை ராணியாக அமர நான் விரும்பவில்லை''

''என் எண்ணமும் அதுதான். உன்னை வெறும் ஆலோசகனாக வைத்துக் கொண்டால் அது தேவையில்லாத பிரச்சினைகளை வளர்க்கும் என்பதால்தான் உன்னை மணந்து அந்த அந்தஸ்தை அளிக்க விரும்பினேன்''

''மகாராஜா, ஆலோசனை மட்டும் சொல்லிக் கொண்டிருப்பதுகூட பொம்மை ராணியாக இருப்பது போலத்தான். நான் உங்கள் மனைவியாகி விட்டபின் எனக்கு உங்களைத் தவிர வேறு யாரும் ஒரு பொருட்டல்ல. உங்களுக்காக உயிரையும் கொடுக்கத் தயாராக இருக்கிறேன்''

''இது நான் எதிர்பார்த்ததுதானே பத்மினி?''

''மகாராஜா, உங்களுக்காக என்னை அர்ப்பணிப்பதென்றால் நான் செயல்பட வேண்டும். உங்களது எதிரிகளை வேரறுக்க வேண்டும். அதற்கு எனக்கு அதிகாரம் வேண்டும். தங்களுக்கு நிகரான அதிகாரம் வேண்டும். என் அதிகாரத்தில் யாருடைய தலையீடும் இருக்கக்கூடாது. இதில் என் சுயநலம் எதுவும் இல்லை. என்னைத் தாங்கள் மணப்பதில் ஓர் அர்த்தம் இருக்க வேண்டும் என்பதால்தான் கேட்கிறேன். இதற்குத் தாங்கள் சம்மதித்தால் இக்கணமே தங்கள் மனைவியாகத் தயாராக இருக்கிறேன்''

''ஆகா. ஆரம்பத்திலிருந்தே உன்னைக் கவனித்து வருகிறேன். உன்னைப் போன்ற ஒரு பெண்ணை நான் என் வாழ்நாளில் கண்டதில்லை. என் மனைவியும் சரி என்னோடு இருந்த ஆசை நாயகிகளும் சரி என்ன லாபம் என்றுதான் கணக்கிட்டு வந்தார்கள். என்னைப்பற்றி ஒருத்தியும் கவலைப்பட்டதில்லை. நான் நன்றாக இருக்கவேண்டும் என்று விரும்பியதுகூட தங்களது வாழ்வு வளமாக இருக்கவேண்டும் என்ற சுயநலத்திற்காகத்தான். நீ ஒருத்திதான் என்னைக் காப்பதற்காக என்னை மணக்கிறாய். இப்படிப்பட்ட உனக்கு நான் எதைத் தந்தாலும் அது குறைவாகத்தான் இருக்கும். கவலையேப்படாதே. எனக்கு என்னென்ன அதிகாரங்கள்

உண்டோ அவ்வளவும் உனக்குண்டு. உன் ஆணை என் ஆணை. அனைவருமே உனக்கு அடுத்தபடி தான். போதுமா?''

இதைக் கேட்டதும் அவனது பாதங்களில் குனிந்து வணங்கினாள் பத்மினி.

அன்றே ஹரகிரி சிவன் ஆலயத்தில் அவர்களது திருமணம் எளிமையாக நடைபெற்றது.

அத்திருமணத்திற்கு வங்கதேசத்து அனைத்து மண்டலாதிபதிகளையும், தளபதிகளையும், தலைவர்களையும் அமைச்சர்களையும் அதிகாரிகளையும் தவறாமல் கலந்து கொள்ளும்படிக் கட்டளையிட்டிருந்தானாதலால் எல்லோரும் தவறாமல் கலந்து கொண்டார்கள். பத்மினியை அனைவருக்கும் மகாராணியாக அறிமுகப்படுத்திய சிகபாகு அவளுக்கு உள்ள அதிகாரங்களைப்பற்றி விவரித்து அவளது ஆணைகளுக்கு யாராக இருந்தாலும் கீழ்ப்படிய வேண்டும் என்று அறிவித்தான்.

அந்த நாளைத் திருநாளாகக் கருதினாள் பத்மினி. அறுபத்தைந்து வயதினனான சிகபாகுவிடம் பதினெட்டே வயதான பத்மினி தன்னை முழுவதுமாக ஒப்படைத்தாள். சிகபாகுவிற்கும் அந்த நாள் திருநாளாக அமைந்தது என்றுதான் சொல்லவேண்டும். பதினெட்டு வயதான அழகி தன் மனைவியானது மட்டுமின்றி அவள் வெற்றுச் சுகத்திற்காக மனைவியாகாமல் லட்சியத்திற்காக மனைவியாகியிருந்ததால் அந்த திருப்தியுடன் அவளது உடலைப் பகிர்ந்து கொண்டான் சிகபாகு. உடல் சுகம் மற்றும் மனச்சுகம் ஆகிய இரண்டும் அவனுக்குப் பரிபூரணமாகக் கிடைத்தன. பத்மினியோ தனக்காகவும் இல்லாமல் சிகபாகுவிற்காகவும் இல்லாமல் விஜயனுக்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டாளாதலால் அவள் சுகம் என்று எதையும் அடையவில்லை. சொல்லப் போனால் அன்றுதான் அவள் எல்லா சுகத்தையும் இழந்து போனாள்.

சிகபாகுவிடம் தன்னை மனரீதியாகவும் உடல் ரீதியாகவும் ஒப்படைத்துவிட்ட காரணத்தால் தன்மீது அவனுக்கு எந்தவிதமான சந்தேகமும் வர வாய்ப்பில்லை என்பதை உணர்ந்து கொண்ட பத்மினி விஜயனுக்கு எந்தவிதத்தில் உதவ

முடியும் என்பதை ஆராய்ந்தாள். கடைசியாக அவன் பேசியதிலிருந்து அவனும் அவனைச் சேர்ந்தவர்களும் கடல் மூலம் தப்பவேண்டியதுதான் முக்கியமானது என்பதை உணர்ந்தாள்.

இந்த நிலையில் விஜயனைப் பற்றி இனி யாரும் மெனக்கெட வேண்டாம் என்று சபா மண்டபத்தில் அறிவித்திருந்ததை நினைவூட்டிக் கொண்டு சிகபாகுவிடம் கேட்டாள்.

''உண்மைதான் பத்மினி. விஜயனுக்காக அலைவது வெட்டி வேலையாகத் தோன்றியது. அவனைப் பற்றிக் கவலைப்படுவது அர்த்தமற்றதாகத் தோன்றியது. மக்கள் என் பக்கம் திரும்பிவிட்டபின் அவர்கள் என்னைக் காப்பார்கள். இவனைப்பற்றி நாம் ஏன் கவலைப்பட வேண்டும்?'' என்றான் சிகபாகு.

''அப்படி இருந்துவிடுவது சரியில்லை பிரபு. எதிரிகள் ஒன்று அழியவேண்டும் அல்லது சரணடைய வேண்டும். இரண்டுமில்லாத நிலையில் அவர்களை மறக்க நினைப்பது ஆபத்தானது. அடிபட்ட புலி சும்மாயிருக்காது. அது நம்மை தாக்குவதற்குள் அதை நாம் பிடித்துவிட வேண்டும்'' என்றாள் பத்மினி.

அவளது பேச்சு அவனைச் சிந்திக்க வைத்தது. உண்மையாகவும் தோன்றியது. இவளைப்போல அமைச்சர்கள் ஏன் சிந்திக்கவில்லை என்று கேட்டுக் கொள்ளவும் செய்த அவன் ''நீ கூறுவதில் உண்மையிருக்கிறது பத்மினி'' என்றான்.

''நான் ஒரு திட்டத்தைக் கூறட்டுமா?''

''சொல்''

''அவர்களைத்தேடி அலைவது வீண்வேலை. அவர்கள் மாறு வேடங்களில் திரிந்து கொண்டிருப்பார்கள். ஆகவே அவர்களைத் தேடிப் போவதைவிட வலையை விரித்தால் அவர்களாக வந்து விழுவார்கள்''

''எப்படி?''

''நமது கர்ணபத்ர பங்கத்தைத் திருடியிருக்கிறார் விஜயன். அதைக்கொண்டு ஒரு நாட்டையே விலைக்கு வாங்க முடியும். ஆனால் இந்த வங்க நாட்டை வாங்கமுடியாது. பரத நாட்டில் உள்ள வேறு எந்த நாட்டையும் வாங்க முடியாது. இவைகளையெல்லாம் போரிட்டுத்தான் பெறமுடியும். எப்படிப் பார்த்தாலும் ஒரு நாட்டையே வாங்கக் கூடிய பொருளை வைத்துக் கொண்டு என்ன செய்யமுடியும்? கடல் கடந்து எங்காவது சென்று புதியதாக ஒரு நாட்டைத்தான் உருவாக்க முடியும். இதுதான் விஜயனின் நோக்கம். அது நிறைவேற வேண்டுமென்றால் அவரும் அவரைச் சேர்ந்தவர்களும் வங்கதேசத்தைவிட்டு வெளியேற வேண்டும். அதற்கு நில வழியைவிட நீர் வழியே சிறந்தது. அந்த வழியாகத்தான் விஜயனும் அவனது தோழர்களும் வெளியேற முயற்சிப்பார்கள். அதற்கு அவர்களுக்கு ஒரு கப்பல் வேண்டும். அல்லது கப்பலில் இருப்பவர்கள் உதவ வேண்டும். அவர்களை நாமாகவே கப்பலை நோக்கி இழுக்கலாம். நமது தீவுக்கப்பலை வாணிகக் கப்பலாக மாற்றுவதாகவும் சரக்குகளை ஏற்றிக்கொண்டு கீழைநாடுகளுக்கு அக்கப்பல் செல்லப் போவதாக அறிவிப்பை வெளியிடுங்கள். இது அவர்களை மரக்கலத்திற்கு இழுக்கும். உண்மையான வணிகர்களுடன் இவர்களும் போலி வணிகர்களாக நுழைவார்கள். சரக்குகளை கப்பல்களுக்குக் கொண்டு செல்லும் ஊழியர்களாக ஊடுருவுவார்கள். அவர்களிடம் இருக்கும் கர்ணபத்திரமும் கப்பலுக்கு வரும். இப்படி நாம் விரிக்கும் இந்த வலையில் விஜயனும் அவரது தோழர்களும் கர்ணபத்திரமும் தீவுக் கப்பலுக்கு வந்துவிட்டால் எல்லாவற்றையும் ஒரே கப்பலில் வைத்து நாம் பிடித்து விடலாம் அல்லவா?''

இதைக் கேட்டதும் சிகபாகு பத்மினியைக் கட்டிப்பிடித்து முத்த மழைகளைப் பொழிந்தான். ''நீ ஒருத்தி போதும். யாரும் எனக்கு வேண்டாம்'' என்றான். ''உன் வலை நேர்த்தியானது. எல்லா மீன்களும் சிக்கும்'' என்றான். ''நாட்டின் கௌரவச் சின்னமான கர்ணபத்ர பங்கமும் மீட்கப்படும். பலே'' என்று சிலாகித்து அவளது திட்டத்திற்கு ஒப்புதல் தந்தான்.

''திட்டம் வெளிப்படையாக இருந்தாலும் இதற்கான உண்மையான காரணம் என்ன என்பது நம் இருவருக்கு மட்டும் தெரிந்த ரகசியமாக இருக்கட்டும் பிரபு. சிறிது கசிந்தாலும் மீன்கள் எச்சரிக்கையடைந்து வலையில் சிக்காமல் போய்விடும். துறைமுகத்தலைவன், மரக்கலத் தலைவன் ஆகியோருக்கும் கூட இந்த ரகசியம் இப்போதைக்குத் தெரியவேண்டாம். நான் நாளைக்கே தாமிரலிப்திக்குப் போகிறேன். என் வேலைகளை ஆரம்பிக்கிறேன். இரண்டு நாட்கள் கழித்து நீங்களும் வாருங்கள். இந்தமுறை திட்டம் வெற்றி பெறுகிறதா இல்லையா என்று பார்த்துவிடுவோம்'' என்றாள் அவள்.

சிகபாகு அவளது எண்ணங்களுக்கும் திட்டங்களுக்கும் பரிபூரண அங்கீகாரம் கொடுத்து விட்டதால் பத்மினி உடனடியாகத் துறைமுக நகரமான தாமிரலிப்திக்கு வந்தாள். அங்கே கடற்கரைப் பகுதியில் பிரபலமாய் இருந்த நாட்டியக்காரப் பெண்ணான கண்ணகியை தன் தோழியாக வைத்துக்கொண்டு பணிப்பெண்ணாக நடிக்கச் சொன்னாள். இருவருமாகத் துறைமுகத்தைச் சலிக்க முற்பட்டார்கள். விஜயனையோ அவனைச் சேர்ந்தவர்களையோ கண்டால் தன்னிடம் அழைத்து வரும்படிச் சொல்லியிருந்தாள் பத்மினி. வங்கதேசத்திலிருந்து தப்புவதென்றால் விஜயனுக்கு மரக்கலம் ஒன்று அவசியம் என்பதையும் அதை வாங்கவோ அல்லது கடத்தவோ அவனும் அவனைச் சேர்ந்தவர்களும் முயல்வார்கள் என்பதால் மரக்கலத் தலைவனையும் அவனது மாளிகையையும் கண்காணிக்கும்படி கண்ணகியிடம் சொல்லியிருந்ததால் மரக்கலத் தலைவனை வணிகர்கள் சந்தித்தது, சதுர்வேதியும் அசுவநாவிகரும் அவனைச் சந்திக்கத் தவமிருந்தது, மரக்கலத் தலைவனுக்கு பதிலாக மன்னன் திடீரெனத் தோன்றி அவர்களைச் சந்தித்தது ஆகிய விவரங்களை அறிந்தாள். சதுர்வேதியும் அசுவநாவிகரும் விஜயனின் ஆட்களாகத்தான் இருக்க வேண்டும் என்று நினைத்த பத்மினி உடனடியாக அவர்களைச் சந்தித்து விவரத்தை அறிந்தாள். அச்சமயத்தில் அவர்களைப் பார்ப்பதற்காக மன்னன் வருவதாக தகவல் வந்தபோது அவர்களைத் தற்போது மன்னன் சந்திப்பது நல்லதற்கில்லை என்று கருதிய அவள் மன்னன் உட்பட

அனைவரையும் திரும்பிச் செல்லும்படியும் எல்லாவற்றையும் தான் பார்த்துக் கொள்ளுவதாகவும் மகாராணிக்கே உள்ள தோரணையுடன் சொன்னாள். அவள் அவ்வாறு கூறியதை சிகபாகு தவறாக நினைக்கவில்லை. அவள் கூறியிருந்த திட்டம் கச்சிதமாக இருந்ததாலும் அவள் தன்னைவிட இத்திட்டத்தில் சிறப்பாகச் செயல்படக் கூடியவள் என்பதாலும் விடுதிக்குள் நுழையாமல் திரும்பினான் மன்னன்.

பிறகு வேலைகள் வேகமாக நடந்தன. மரக்கலத் தலைவனிடம் அவள் மகாராணியாகப் பேசியதால் அவன் அதிகமாக கேள்வி கேட்காமல் தீவுக்கப்பலை விஜயனுக்கு விற்க ஒப்புக்கொண்டான். அதோடு மகாராணி கப்பலுக்கு கொடுத்த விலையானது தன் வாழ்நாள் முழுவதும் உழைத்தாலும் கிடைக்காது என்பதை உணர்ந்த காரணத்தால் மரக்கலத் தலைவன் எந்தப் பிரச்சினையையும் எழுப்பவில்லை. கண்ணகியின் மூலம் விஜயனின் தோழர்களைப்பற்றி அறிந்த பத்மினி அவர்களையும் சாமர்த்தியமாக கப்பலில் சேர்த்தாள். ஆனால் விஜயனை மட்டும் அவளால் கண்டுபிடிக்க முடியவில்லை. அவனைச் சந்தித்து விவரங்களைக் கூறி அவனது காலடியிலேயே உயிரைவிட எண்ணியிருந்த அவளுக்கு அந்த வாய்ப்பு கிடைக்கவில்லை. எனவே விவரங்களை யெல்லாம் ஒலை நறுக்குகளில் குறித்து விஜயனிடம் சேர்த்துவிடும்படி சதுர்வேதியிடம் கேட்டுக் கொண்டாள். அமாவாசையன்று இரவு விஜயன் வந்தாலும் வராவிட்டாலும் மரக்கலத்தைக் கடலில் செலுத்தும்படி கண்டிப்பாகக் கேட்டுக் கொண்டாள்.

ஆனால் அமாவாசையன்று திடீரென்று சிகபாகு துறைமுகத்திற்கு வந்தான்.

அவனைச் சிறிதும் எதிர்பார்க்காத பத்மினி சுதாரித்துக் கொண்டு ''நீங்கள் எதற்காகச் சிரமப்படுகிறீர்கள்? எல்லா வற்றையும் நான் பார்த்துக் கொள்ள மாட்டேனா?'' என்று அன்பான குரலில் கேட்டாள்.

இதைக் கேட்டதும் இடியெனச் சிரித்தான் சிகபாகு.

◈◈◈

## அத்தியாயம் பத்தொன்பது

# காதலின் சக்தி

அவனது சிரிப்பு வித்தியாசமாக இருந்ததால் ''ஏன் சிரிக்கிறீர்கள்?'' என்று கேட்டாள் பத்மினி சந்தேகத்துடன்.

அதற்கு நேரடியாக பதில் கூறாத சிகபாகு ''விஜயனும் அவனைச் சேர்ந்தவர்களும் கப்பலுக்கு வந்து விட்டார்களா?'' என்று கேட்டான்.

''அதைப் பார்க்கத்தானே நானிருக்கிறேன்?'' என்றாள் பத்மினி.

''மரக்கலம் இன்று நள்ளிரவு புறப்படப் போகிறது''

''தெரியும் மகாராஜா.''

''நீ கூறியபடி வலை விரிக்கப்பட்டிருந்தால் இன்னேரம் பட்சிகள் சிக்கியிருக்க வேண்டும்''

''அதிலென்ன உங்களுக்குச் சந்தேகம்?''

''சிக்கியிருந்தால் வலையைப்பற்றி இழுக்க வேண்டியது தானே? மரக்கலம் போன பின்பு என்ன செய்யமுடியும்?''

''உண்மைதான். கப்பலில் எல்லோரும் வந்து விட்டார்கள். இன்னும் விஜயன் வரவில்லை. அதனால்தான் காத்திருக் கிறேன்''

''எவ்வளவு நேரம் காத்திருப்பாய்? மரக்கலம் புறப்படும் வரையிலா?''

''உங்கள் கேள்வியில் அவநம்பிக்கை தெரிகிறது பிரபு''

''அதற்குக் காரணம் உன் செயலில் அவநம்பிக்கை உண்டானதுதான்''

''என் செயலில் அவநம்பிக்கையா?''

''பத்மினி, அறிவுச்சுடர் நீ. நீ இப்படி நடந்து கொள்வாய் என்று நான் எதிர்பார்க்கவில்லை. விஜயன் ஒருவன் வராமல் போனால் என்ன? அவனைச் சேர்ந்தவர்களெல்லாம் வந்து சேர்ந்தபின் அவர்களை வளைப்பதைவிட்டு விஜயன் ஒருவனுக்காகக் காத்திருப்பதா விவேகம்? அறிவாளியான உன்னிடம் இதை நான் எதிர்பார்க்கவில்லை பத்மினி.''

மன்னன் தன்னை வகையாக மடக்கிவிட்டதை உணர்ந்த பத்மினி அவனிடம் சரியாகப் பேசாவிட்டால் தன் குட்டு வெளிப்பட்டுவிடும் என்பதையும் உணர்ந்து கொண்டாள். உள்ளுணர்வுகளை மறைத்துக்கொண்டு கலகலவென முத்துப் பற்கள் தெரியசிரித்த அவள் ''என்னிடம் விவேகமில்லை. விவேகமான செயல்திட்டம் ஏதாவது வைத்திருக்கிறீர்களா மகாராஜா?'' என்று கேட்டாள்.

களங்கமில்லாத அவளது சிரிப்பைக் கண்ட சிகபாகு ''ஒருவேளை நான் கேள்விப்பட்டது பொய்யாக இருக்குமோ?'' என்று தனக்குத்தானே கேட்டுக்கொண்டு அவளை பரிட்சித்துப் பார்க்கும் விதத்தில் ''உனக்கும் மரக்கலத் தலைவனுக்கும் ரகசிய பேரம் ஏதோ நடந்ததாகக் கேள்விப்பட்டேன்'' என்று கேட்டுவிட்டு அவளையே உற்றுப்பார்த்தான்.

அவள் அசரவில்லை. ''சந்தேகம் வருவது சில நேரங்களில் விவேகமானதுதான்'' என்று கூறிய அவள் ''அதற்கு என்ன செய்யப் போகிறீர்கள்?'' என்று கேட்டாள்.

''மரக்கலத் தலைவனை கப்பலில் போய் விசாரிக்கப் போகிறேன்''

''அதற்கு அங்கே ஏன் போகவேண்டும்? தலைவரை இங்கே வரவழைக்க வேண்டியதுதானே?''

''நான் கேள்விப்பட்டது மட்டும் உண்மையாக இருக்குமானால் மரக்கலத் தலைவன் கூப்பிட்டாலும் வரமாட்டான்''

''சிறை செய்து கொண்டு வரமுடியாதா?''

''முடியும். இருந்தாலும் நானே மரக்கலத்திற்குப் போய் பார்க்க விரும்புகிறேன்''

''உங்கள் சந்தேகம் உண்மையென்றால் மரக்கலத்தில் தலைவன் உட்பட அனைவரும் தங்கள் விரோதிகள் என்றல்லவா ஆகிறது? அங்கே செல்லும் உங்களை அவர்கள் சிறைசெய்து விட்டால்?''

''சிகபாகுவை இன்னும் நீ சரியாகப் புரிந்துகொள்ளவில்லை பத்மினி. நான் சிங்கங்களோடு பழகியவன் நரிகளைக் கண்டு அஞ்சமாட்டேன்''

''வேண்டாம் மகாராஜா. சிங்கத்தை நரி ஏமாற்றிய கதைகள் உண்டு. பொறுமையாக இருங்கள். நாம் விரித்த வலையில் சிக்க வேண்டியது எதிரிகளேயன்றி தாங்களல்ல.''

''பத்மினி, இதை நான் அயோக்கியனாக இருந்தபோது கூறியிருந்தால் ரசித்திருப்பேன். ஒப்புக்கொண்டும் இருப்பேன். இப்போது நான் பழைய சிகபாகு அல்ல. எளிதில் ஏமாறமாட்டேன். கவலைப்படாதே. மரக்கலத்திற்கு நான் தனியாகப் போகவில்லை. தகுந்த பாதுகாப்போடுதான் செல்வேன். மரக்கலத் தலைவனை விசாரிப்பேன். அவன் மீதான சந்தேகம் உண்மையானால் அங்கேயே அவனை வெட்டுவேன். கப்பலைக் கொளுத்தச் சொல்லி அனைவரையும் அழிப்பேன்''

''நான் மட்டும் எதற்கு இங்கே இருக்க வேண்டும்? மரக்கலத்திற்கு நானும் வருகிறேன். விசாரணையின்போது இருதரப்பும் இருப்பது தானே சரி?''

''வேண்டாம் பத்மினி. சந்தேகம் என்னை மரக்கலத்திற்குப் போகும்படித் தூண்டுகிறதென்றால் ஏதோ ஒரு நம்பிக்கை உன்னை இங்கேயே விட்டு விடும்படிச் சொல்கிறது. நான் கேள்விப்பட்ட விஷயம் பொய் என்ற செய்தியோடு வருவேன். உன்னைக் கட்டி அணைப்பேன். முத்த மழையில் உன்னை நனையச் செய்வேன்''

''இனி நான் எதுவும் சொல்வதற்கில்லை மகாராஜா. தங்கள் நம்பிக்கை வெல்லட்டும்'' என்று கூறிவிட்டு அவ்விடத்தை விட்டு அகன்றாள்.

விஜயனுக்கு எழுதிய ஓலையில் மன்னனின் வரவு பற்றி எதுவும் எழுதவில்லை. காரணம் - அதற்கு முன்பாகவே ஓலைகளை அனுப்பிவிட்டிருந்தாள்.

அதுவரையிலான சம்பவங்களை எழுதிவிட்டு-

''என்னால் முடிந்ததை தங்களுக்காகச் செய்துவிட்டேன் இளவரசே. நான் செய்ததெல்லாம் ராஜத்துரோகம் என்றும் பதி துரோகம் என்றும் நீங்கள் நினைக்கலாம். ஆனால் நான் அப்படி நினைக்கவில்லை. ஓர் காரியத்திற்காக மன்னரை மணந்தேனே தவிர என் உள்ளம் அவரை மணக்கவில்லை. என் உடல் வேண்டுமானால் அவருக்குத் தரப்பட்டிருக்கலாம். ஆனால் உள்ளம் தரப்படவில்லை. அது உங்கள் ஒருவருக்காக எப்போதோ தரப்பட்டுவிட்டது. யாரிடம் உள்ளமானது நிரந்தரமாகத் தரப்பட்டு விட்டதோ அவர்தான் என் கணவர். அக்கணவரான தங்களுக்காக நான் செய்தது என் கடமைதானே தவிர துரோகமல்ல. இது தங்களுக்குத் தெரிந்தால் போதும். என் செயல்களை துரோகம் என்று மன்னரும் மற்றவர்களும் முடிவு கட்டலாம். எனக்குத் தண்டனையளிக்க முன்வரலாம். ஆனால் அதுவரை நான் காத்திருக்க மாட்டேன். என் கடமையும் முடிந்து தாங்களும் போய்விட்ட நிலையில் நான் உயிருடன் இருக்க மாட்டேன். புனித கங்கையில் பாய்ந்து என் உயிரை மாய்த்துக் கொள்வேன். தங்கள் லட்சியத்தை ஹரகிரி சிவனும் ஹரிகிரி திருமாலும்தான் நிறைவேற்ற வேண்டும். இதோடு என்னை மறந்துவிடுங்கள். அதுதான் தங்களுக்கு நல்லது'' என்று முடித்திருந்தாள் பத்மினி.

படித்து முடித்ததும் விஜயனின் கண்கள் நீர் முத்துக்களைச் சிந்தின. இப்படியொரு பெண் இருக்கமுடியுமா என்று எண்ணிப் பார்த்து மாய்ந்துபோனான். காதலுக்கு எத்தனை சக்தி இருந்தால் காதலனுக்காக இன்னொருவனை மணந்துகொள்ள வைக்கும் என்று எண்ணியபோது நம்புவதற்குக் கஷ்டமாக இருந்தது அவனுக்கு. தன் தந்தை சிகபாகுவை உடலால் மணந்து கொண்டதாகவும் உள்ளத்தால் தன்னை மணந்து கொண்டதாகவும் அவள் குறிப்பிட்டிருந்தது அவனை நெகிழ வைத்தது. தன்னை மறந்து விடுங்கள் என்று அவள் எழுதியிருந்த விதமானது அவளை மறந்துவிட வேண்டாம் என்று சொல்வது

போல் இருந்தது. அப்போதைய நிலையில் அவளை மறக்க முடியும் என்று அவனுக்குத் தோன்றவில்லை. சோகங்களை மறப்பதுதான் நல்லது என்பது வழக்கமானதாக இருந்தாலும் சில நினைவுகளும் நிகழ்ச்சிகளும் நல்ல ஞாபகங்களாய் என்றும் இருந்து கொண்டிருக்கும் என்பதை உணர்ந்திருந்தான் விஜயன். அவனைப் பொறுத்தவரை பத்மினி ஒரு நல்ல ஞாபகமாய் இருப்பதே அப்போதைக்கு அவனது விருப்பமாக இருந்தது. அவளது கடிதமே அவனைத் தாலாட்டித் தூங்க வைத்தது.

மறுநாள் சுறுசுறுப்படைந்த விஜயன் ஒற்றைக் காலனையும் ஒற்றைக் கண்ணனையும் அழைத்து கப்பலில் உள்ளவர்களை தொழில் அந்தஸ்து வாரியாக தினமும் கணக்கெடுத்து அதை அசுவத்தாமரிடம் சொல்லும்படி கூறினான்.

பிறகு மரக்கலத் தலைவன் கொடுத்த பட்டியலோடு அவனிடம் சென்ற விஜயன் ''பாரடைஸ், இந்தப் பட்டியலை என்னிடம் எதற்காகக் கொடுத்தாய்?'' என்று கேட்டான்.

''இது கப்பலில் இருக்கும் பொருட்களின் பட்டியல். யாரிடமிருந்து அனுப்பப்படுகிறது, மற்றும் யாருக்கு அனுப்பப் படுகிறது, பொருட்களின் மதிப்பு எவ்வளவு என்ற விவரங்கள் இருக்கின்றன. நான் இடையிலேயே விடைபெற்றுக் கொள்ளப் போவதால் மரக்கலத்தலைவர் மற்றும் உரிமையாளர் என்ற முறையில் உங்களிடம் கொடுத்தேன்'' என்றான் பாரடைஸ்.

''பொருட்கள் எங்கெங்கே போகின்றன?'' என்று கேட்டான் விஜயன்.

''ஸ்ரீ விஜயம், மலையூர், கடாரம், சாவகம் ஆகிய இடங்களுக்குப் போகின்றன''

''இப்பொருள்கள் என்னென்ன என்பதைக் கூறமுடியுமா?''

''பெரும்பாலும் யானைத்தந்தங்கள், மணிகள், முத்துக்கள் வாசனைப் பொருட்கள், முதல்தரமான மது வகைகள், ஆடைகள், பதப்படுத்தப்பட்ட பொருட்கள், மிளகு ஆகியவை உள்ளன. இவைகளில்லாமல் வேறு பொருட்களும் இருக்கலாம். பட்டியலைப் பார்த்தால் எல்லா விவரங்களும் கிடைக்கும்''

''கப்பலில் உள்ளவர்களுக்கு உணவு எப்படி வழங்கப் படுகிறது?''

''பதப்படுத்தப்பட்ட பொருட்கள் ஏராளமானவை இருக்கின்றன. பழங்களும் காய்களும் இருக்கின்றன. மாமிசங்கள் பனிக்கட்டிப் பெட்டியில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கின்றன. மரக்கலத்திலிருந்து நீண்ட கயிற்றுடன் கூடிய வலைகள் வீசப்பட்டுள்ளன. தேவையான போது வலையை இழுத்து அதில் பிடிபட்ட கடல்வாழ் இனங்களை உணவுக்காக எடுத்துக் கொள்ளலாம். பச்சை மாமிசங்களை வேகவைக்கவும் அரிசி, பருப்புகளை வேக வைக்கவும் கீழ்தளத்தில் அடுப்புகள் அவ்வப்போது உருவாக்கப்பட்டு சமைப்பதற்கு வசதிகள் உள்ளன. அதற்கான பணியாளர்கள் இருக்கிறார்கள். நிலத்தில் இருக்கும்போது கஷ்டமான நேரத்தில் இஷ்டமான உணவுகளை உண்ணலாம். தேவைக்கு அதிகமாகவும் உண்ணமுடியும். இங்கே அப்படி கிடையாது. கப்பலில் இருக்கும் வரை மூன்று வேளை மட்டும் தான் உணவை உண்ணமுடியும். பிற சமயங்களில் கேட்டாலும் கிடைக்காது. அந்த மூன்று வேளை உணவிலும்கூட அளவு இருக்கிறது. அதற்கு அதிகமாகக் கிடைக்காது. தண்ணீர்கூட மிகவும் சிக்கனமாகத்தான் தரப்படும். எங்காவது தரையிறங்க நேரிட்டால் அங்கிருந்து நீரையும் உணவுப் பொருட்களையும் சேகரிக்க வேண்டும்''

''இப்போது கப்பலில் உள்ள உணவு எத்தனை நாளுக்கு வரும்?''

''கப்பலில் இருப்பவர்களின் எண்ணிக்கை சற்று அதிக மென்பதால் நான் கூறியபடி அளவோடு செலவழித்தால் இருபது நாட்களுக்கு வரும்''

''சரக்குகளில் உள்ள பதப்படுத்தப்பட்ட உணவு வகைகளைச் சேர்த்தால் முப்பது நாட்களுக்கு வருமா?''

''வரலாம்''

''பாரடைஸ், இக்கப்பலில் உள்ள மாலுமிகள் எப்படிப் பட்டவர்கள்? உனக்கு விசுவாசமானவர்களா?''

''இளவரசே, மாலுமிகள் பலநாட்டைச் சேர்ந்தவர்கள். அத்தனை பேரும் அடிமைகள். கொடுக்கும் உணவை உண்டு துடுப்பு போடக் கூடியவர்கள். விசுவாசத்திற்கு இங்கே இடமில்லை. கசையடிக்குத்தான் மாலுமிகள் கட்டுப் படுவார்கள். கடமை தவறுபவர்கள் வெட்டப்பட்டு கடலில் வீசப்படுவது வழக்கம். அவர்களை அடிமைகளாக நடத்தினால் மட்டுமே வேலை வாங்கமுடியும்''

''தொடர்ந்து அவர்கள் மட்டுமே வேலை செய்ய முடியுமா?''

''நாள் முழுதும் துடுப்பு போட வேண்டிய அவசியம் இருக்காது. துடுப்பு போடாமலேயே காற்றும் பாய்மரங்களும் கப்பலை ஓட வைக்கும். அதோடு பக்கத்திற்கு 100 பேர் வீதம் 200 அடிமைகள் இருக்கிறார்கள். அவர்கள் முறை வைத்துக் கொண்டு ஓய்வெடுத்துக் கொள்வார்கள். அவர்களைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்''

மரக்கலத் தலைவனின் விளக்கங்களைக் கேட்டு அறிந்து கொண்ட விஜயன் தனது தோழர்கள் எழுநூறு பேரை கப்பலின் மூன்றாவது தளத்தில் சந்தித்தான்.

''என் தந்தை உங்களையெல்லாம் அவமானப்படுத்தியதை என்னால் தடுக்க முடியாமல் போனதற்காக எல்லோரும் என்னை மன்னிக்க வேண்டும். நமக்கு இனிமேல் நல்ல காலம் தான். இக்கப்பலுக்கு நீங்கள் தான் பாதுகாவலர்கள். இங்கே ஊழியர்கள் நீங்கள்தான். வீரர்கள் நீங்கள்தான். உங்களை பல குழுக்களாகப் பிரித்துக்கொண்டு பல்வேறு பணியை ஆற்றுங்கள். அவற்றில் ஒரு குழு இக்கப்பலில் வைக்கப் பட்டுள்ள உணவுப் பொருட்களைத் தனியாகப் பிரித்தெடுங்கள் ஏற்கனவே மரலக்கலத் தலைவன் வைத்துள்ள உணவுப் பொருட்கள் எல்லாமாகச் சேர்ந்து ஒருமாத காலத்திற்கு வரவேண்டும். இந்தத் தகவல்களையும் கப்பலில் இருக்கும் இதர சரக்குகள் பற்றிய விவரங்களையும் அசுவத்தாமரிடம் கொடுங்கள். எல்லாவற்றையும்விட முக்கியமான வேலை ஒன்றிருக்கிறது. இந்தச் சரக்குகளோடு சரக்காக நமது கர்ணபத்ர பெட்டிகளும் இருக்கின்றன. அவற்றைத்தேடி தனியாகப்

பிரித்தெடுங்கள். பிரித்தபின் எனக்குச் சொல்லுங்கள்'' என்றான் விஜயன். அதையடுத்து காரியங்கள் விரைவாக நடைபெற்றன.

இதற்கிடையில் மரக்கலத் தலைவனையும் சதுர்வேதியையும் சந்தித்த விஜயன் ''பாரடைஸ், வங்கதேசத்திலிருந்து நம்மைத் தாக்கிப் பிடிப்பதற்கு மரக்கலங்கள் புறப்பட்டிருந்தால் இந்நேரம் நம்மை நெருங்கியிருக்க வேண்டும் அல்லவா?'' என்று கேட்டான்.

''துறைமுகத்தில் நம் கப்பலைத் தவிர்த்து நான்கு மரக்கலங்கள்தான் இருந்தன. அவற்றில் இரண்டை நான் மூழ்கடித்து விட்டேன். துறைமுக வாயிலை அடைத்துக் கொண்டிருக்கும் அந்த இரண்டு கப்பல்களையும் தூக்கிவிட்டு பிறகுதான் மற்ற இரண்டு மரக்கலங்கள் புறப்பட்டு வரவேண்டும். அப்படியே வந்தாலும் அந்த இரண்டு மரக்கலங்களால் நமது மரக்கலத்தைப் பிடிக்க முடியாது. இது மன்னருக்குத் தெரியும். ஆகவே இப்போதைக்கு நம்மை எந்த மரக்கலமும் தொடராது'' என்றான் மரக்கலத் தலைவன்.

''இதற்கென்ன அர்த்தம்?''

''நம்மை உண்மையாகவே பிடிக்கவேண்டும் என்று மன்னர் விரும்பினால் அது நடக்கும். உங்கள் பயணம் முடிவதற்குள் எந்த விதத்திலாவது நடக்க வாய்ப்புண்டு''

பிறகு சதுர்வேதி விஜயனை தனியே அழைத்துச்சென்று கடல் பற்றியும், கடல்பயணம் பற்றியும் கடல் போரைப் பற்றியும், மாலுமிகளைப் பற்றியும் கீழை நாடுகளையும் பற்றி முக்கியமான விஷயங்களையும் நீண்டநேரம் வரை எடுத்துக் கூறிவிட்டு ''விஜயா, நானும் மரக்கலத் தலைவனோடு தீவிலேயே இறங்கிக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன்'' என்றார்.

''இது என்ன ஐயா நடுவழியிலேயே பிரிந்து போகிறேன் என்கிறீர்கள்? மரக்கலத் தலைவனும் போவதாகச் சொல்கிறான். எல்லோரும் போய்விட்டால் எப்படி?'' என்று கேட்டான் விஜயன்.

''நான் உன்னோடு கடைசிவரை பயணப்படுவதற்காக இக் கப்பலில் வரவில்லை விஜயா. உன்னைக் காணாததினாலேயே இதில் ஏறவேண்டியதாயிற்று. உன்னைக் கண்டதும் கப்பலி லிருந்து இறங்கும் நிலை இல்லை. ஆகவேதான் வந்தேன். இடையிலேயே இறங்கிக்கொள்வது தான் சரி. மரக்கலத் தலைவன் இறங்கும் தீவில் இறங்கி எப்படியாவது காழகத்திற்குப் போய்விட்டால் நல்லது. தேவ புத்தரைப் பார்த்து நீ பயணப்பட்டதைப் பற்றிச் சொல்லவேண்டும். அதோடு வரப்போகும் சிக்கல்களையும் தடைகளையும் களையவும், போராடி வெற்றி பெறவும் நீ கற்றுக் கொள்வதற்கு இதுதான் வாய்ப்பு. அதைப் பயன்படுத்திக்கொள்'' என்றார்.

விஜயன் எதுவும் சொல்லவில்லை.

இதற்கிடையில் கப்பலில் உள்ளவர்களின் எண்ணிக்கை யைக் கணக்கிட்ட மானோகாலன் அசுவத்தாமரிடம் கீழ்கண்டவாறு கூறினான்.

''இளவரசர், மரக்கலத் தலைவன் பாரடைஸ், சதுர்வேதி, டெமிட்ரியஸ், அசுவநாவிகர், அசுவத்தாமர், மானோகாலன், சிமேரி ஆகிய எட்டுபேர், உப தலைவர்கள் ஏழுபேர், இளவரசனின் தோழர்கள் எழுநூறு பேர், துடுப்பு தள்ளும் அடிமைகள் இருநூறு பேர், ஆண் பணியாளர்கள் பத்துபேர், பெண் பணியாட்கள் பத்து பேர் ஆக மொத்தம் தொள்ளாயிரத்து முப்பத்தைந்து பேர்''

இதே கணக்கை விஜயனிடமும் கூறினான். அன்றிரவு மானோகாலன் தனது ஒரு காலால் நடனமாடி கப்பலில் இருந்தவர்களை மகிழ்வித்தான். கோர சொரூபியான ஒற்றைக் கண்ணன் சிமேரி இனிமையாகப்பாடி சொரூபத்திற்கும் குரலுக்கும் சம்பந்தமில்லை என்பதை நிரூபித்தான். அசுவத்தாமரும் தனது நினைவாற்றலை பலவிதங்களில் வெளிப்படுத்தினார்.

மறுநாள் மதியத்தில் ''தீவுப்பக்கம் வந்து விட்டோம்'' என்றான் மரக்கலத் தலைவன்.

''எப்படிச் சொல்கிறாய்?'' என்று கேட்டான் விஜயன்.

''மண்வாசனையிலிருந்து''

மரக்கலைத் தலைவன் கூறியது போலவே விரைவிலேயே தீவு எல்லோரது கண்களிலும் புலப்பட்டது.

தீவை நெருங்கியபோது அதனருகில் வேறு இரண்டு மரக்கலங்கள் இருந்ததைக் கண்டான் விஜயன். அவ் விரண்டிலும் வங்கதேசத்துக் கொடிகள் பறந்து கொண்டிருந்ததை டெமிட்ரியஸ் சுட்டிக் காட்டினான்.

விஜயன் சிந்தனையில் ஆழ்ந்தான்.

◈◈◈

## அத்தியாயம் இருபது

# கடல்வழித் தீவு

தீவுக்கருகே நின்றிருந்த இரண்டு மரக்கலங்களில் வங்கதேசத்து கொடிகள் பறந்து கொண்டிருந்ததைக் கண்ட விஜயன் மரக்கலத் தலைவனிடம் அதைச் சுட்டிக் காட்டி ''கவனித்தாயா பாரடைஸ்? அவை நம் நாட்டுக் கொடிகள் தானே?'' என்று கேட்டான்.

''ஆமாம்.'' என்றான் பாரடைஸ்.

''நமது துறைமுகத்திலிருந்த கப்பல்களா இவை? எனக்கென்னவோ அப்படித் தோன்றவில்லை'' என்றான் விஜயன்.

''எனக்கும்தான். அதோடு நாம் இந்தத் தீவுக்கு வரப்போகிறோம் என்பது அவர்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. மேலும் கொடிகளை நன்றாக கவனியுங்கள். அவை கிழிந்திருக்கின்றன. மரக்கலத்தின் வெளிபாகம் மிகவும் அசுத்தமாகவும் பாசி படிந்தும் இருக்கின்றன. எதற்கும் அருகே சென்று பார்ப்போம்'' என்று கூறிய பாரடைஸ் தீவுக்கப்பலுக்கு நங்கூரம் பாய்ச்சிவிட்டு அதிலிருந்து படகுகளை இறக்கினான்.

அவனும் விஜயனும் நூலேணியில் இறங்கி படகில் தாவினார்கள். ஐந்தாறு படகுகள் அவ்வாறு இறக்கப்பட்டு சதுர்வேதி, அசுவநாவிகர், டெமிட்ரியஸ் ஆகியோரும், விஜயனின் தோழர்கள் சிலருமாய் படகிற்கு வந்தார்கள். தீவுக்கருகே இருந்த மரக்கலங்களின் மீது கயிறுகளை வீசி அதன்மீது ஏறினார்கள். அனைவரும் ஏறி அந்த மரக்கலங்களில் குதித்தபோது அவற்றில் ஒருவரும் இல்லாததைக் கண்டார்கள். கப்பலில் இருந்த உணவுப் பொருட்கள் சிதறியும் நாற்றமடித்தும் இருந்தன. நீர்ஜாடிகளில் இருந்த நீர் பாசிபடிந்து கிடந்தத. வாட்களும் இதர ஆயுதங்களும் நிரம்ப இருந்தாலும் அவை துருபிடித்து இருந்தன. மரக்கலம் தாக்கப்பட்டதற்கான அடையாளங்கள் எதுவும் இல்லை. அவற்றையெல்லாம் கண்ட மரக்கலத் தலைவன் ''எப்போதோ நமது நாட்டிலிருந்து இந்த இரண்டு மரக்கலங்களும் வந்திருக்க வேண்டும். இதில் இருந்தவர்கள் தீவுக்குள் போயிருக்க வேண்டும். அங்கே அவர்களுக்கு ஏதாவது நடந்து இறந்திருக்க வேண்டும். அதனால்தான் இந்த மரக்கலங்கள் இங்கேயே நிற்கின்றன'' என்றான்.

''பாரடைஸ், இந்த மரக்கலங்களைப்பற்றி நம் நாட்டிற்கு யாரும் செய்தியனுப்பியிருக்க மாட்டார்களா?'' என்று கேட்டான் விஜயன்.

''இத்தீவுக்கு வரும் மரக்கலங்கள் மிகவும் குறைவு. இத்தீவில் பெரியதொரு நீர்வீழ்ச்சி இருக்கிறது. அதிலிருந்து கப்பலுக்கு வேண்டிய நீரை எடுக்க வேண்டிய அவசியம் இருந்தால்தான் இங்கு வருவார்கள். அப்படி ஏதாவது வணிகர் மரக்கலங்கள் இங்கு வந்து பிறகு நம் நாட்டிற்கு வந்திருந்தால் விவரம் சொல்லியிருப்பார்கள். சிலபேர் மரக்கலம் காலியாக இருப்பதைப் பார்த்துவிட்டு இதில் இருந்தவர்களுக்குத் தீவில் ஏதாவது தீங்கு நேர்ந்திருக்கலாம் என்று விவரங்களை அறிந்து கொள்ளாமலேயே போயிருக்கலாம். எப்படியானாலும் நான் இருந்தவரை எனக்கு எந்தத் தகவலும் இல்லை. இவை நீண்ட நாட்களுக்கு முன்னால் இங்கே வந்திருக்க வேண்டும்'' என்றான் பாரடைஸ்.

''இதில் இருந்தவர்களுக்கு என்ன நடந்திருக்கும் இந்தத் தீவில்? இத்தீவில் நிறையபேர் இருக்கிறார்களா?'' என்று கேட்டான் விஜயன்.

''இங்கே அதிகம் பேர் கிடையாது. பழங்குடிகள் யாராவது சிலர் இருக்கலாம். நான் ஒருமுறை இங்கே வந்தபோது ஐம்பது பேர்களுக்கு குறைவாகவே இங்கிருந்தார்கள். மரக்கலத்தில் இருந்தவர்களை அவர்கள் தாக்கியிருக்க முடியாது. அப்படித் தாக்கியிருந்தால் மரக்கலத்தையும் தாக்கி தீ வைத்து சேதப்படுத்தியிருப்பார்கள். அப்படி எதுவும் நடந்ததாகத் தெரியவில்லை'' என்றான் பாரடைஸ்.

''தீவின் நிலை மர்மமாக இருந்தாலும் இதில் உள்ளவர்களுக்கு என்ன ஆயிற்று என்பதை அறிந்துகொள்ள வேண்டியது வங்க தேசத்தைச் சேர்ந்த நம் கடமை'' என்றான் விஜயன்.

ஆனால் பலரும் அதற்கு மறுப்பு தெரிவித்தார்கள். அது தேவையற்ற வேலை என்றும் ஆபத்தான காரியம் என்றும் சொன்னார்கள். அப்போது விஜயன் பேசமுற்பட்டு ''நீங்கள் கூறுவதெல்லாம் சரி. இன்னும் சொல்வதென்றால் வங்க நாட்டிற்கும் எனக்கும் உள்ளத்தொடர்பை அறுத்துக் கொண்டு வந்திருக்கிறவன் நான். இந்த நிலையில் வங்க நாட்டுக் கப்பல்களைப் பற்றியோ அதில் இருந்தவர்களைப் பற்றியோ நான் ஏன் கவலைப்படவேண்டும்? ஆக தீவுக்குப் போக நான் விரும்பியது அந்த ஒரு காரணத்திற்காக மட்டுமல்ல. தீவில் சில நாட்கள் நம்மால் தங்க முடியுமென்றால் இந்த இரண்டு மரக்கலங்களையும் சுத்தம் செய்து பழுது பார்த்து நம்மோடு கொண்டு செல்லலாம் அல்லவா? அல்லது காழகம் செல்லவுள்ள பாரடைஸுக்கும் சதுர்வேதிக்கும் ஒரு கப்பலைத் தயார் செய்து கொடுத்துவிட்டு இன்னொன்றை நாம் அழைத்துச் செல்லலாம் இல்லையா? தீவுக் கப்பலில் இருக்கும் அனைவரும் மாலுமிகள் உட்பட இத்தீவில் சில நாட்கள் தங்கினால் என்ன?'' என்று கேட்டான்.

இத்திட்டத்தை அனைவருமே ஆதரித்தார்களாதலால் தீவுக்கப்பலில் இருந்த அனைவரையும் தீவுக்கு வந்து சேரும்படி அறிவிக்கச் செய்தான் விஜயன்.

படகுகள் மூலம் கொஞ்சம் கொஞ்சமாய் எல்லோரும் தீவுக்கு வரலானார்கள். விஜயன், மரக்கலத் தலைவன், சதுர்வேதி, டெமிட்ரியஸ், அசுவநாவிகர், ஒற்றைக் காலன், ஒற்றைக் கண்ணன், அசுவத்தாமர் ஆகியோர் மட்டும் தீவுக்குள் செல்வதாக முடிவாயிற்று. மற்ற எல்லோரையும் தீவின் முகப்பிலேயே இருக்கும்படிச் சொன்னான் விஜயன்.

தீவுக்குள் செல்வதற்கு பாதைகள் எதுவும் தென்படவில்லை. அதிலிருந்து அங்கே மனித நடமாட்டம் அதிகமாக இல்லை என்பதை உணர்ந்து கொண்டான் விஜயன். திரும்பிய இடங்களிலெல்லாம் பெருமரங்களும் புதர்களு மாகவே காட்சியளித்தது. புதர்களை வெட்டி பாதையை உருவாக்கிக் கொண்டு அவர்கள் சென்றார்கள். சிறிதுதூரம் சென்றதும் அசுவத்தாமர் எல்லோரையும் அப்படியே நிற்கச் சொல்லிவிட்டு ''அருகிலிருந்து விஷச்செடிகளின் வாசனை வருகிறது. அவற்றில் நிறைய பழங்கள் இருக்கும். அப்படி ஏதாவது தெரிகிறதா என்று பாருங்கள். யாரும் அச்செடியைத் தொடவேண்டாம். பழங்களையும் பறிக்காதீர்கள்'' என்றார்.

இதைக் கேட்டதும் எல்லோரும் எச்சரிக்கை அடைந்து அவர்கூறிய விஷச் செடிகளைத் தேடினார்கள். சிறிது தூரத்திலேயே அச்செடிகளும் அவற்றில் இருந்த பழங்களும் தென்பட்டன. கண்ணுக்கெட்டியவரை அச்செடிகள் பச்சைப் பசேலென வளர்ந்திருந்தன. அவற்றின் அருகிலேயே பற்பல பாறைகள் காணப்பட்டன. அவற்றில் ஒன்றின் மீதிருந்ததொரு பொருளைச் சுட்டிக்காட்டிய ஒற்றைக் கண்ணன் ''அதோ பாருங்கள்'' என்றான்.

அவன் சுட்டிக்காட்டிய பாறையின் மீது ஒரு எலும்புக்கூடு கிடந்தது. அதைக்கண்டதும் அருகில் சென்ற விஜயன் தன் பார்வையை பாறைகளை நோக்கித் திருப்பியபோது பல இடங்களில் எலும்புக் கூடுகள் இருப்பது தெரிந்தது.

வங்கமரக்கலத்தில் வந்தவர்கள் இந்த விஷக் கனிகளை உண்டு அழிந்திருக்க வேண்டும் என்பது விஜயன் உட்பட அனைவருக்குமே புரிந்தது.

இதற்கிடையில் மாலைநேரமாகி விட்டதால் மேற்கொண்டு தீவுக்குள் போக வேண்டாம் என்று கருதி அனைவரும் திரும்பினார்கள். அன்றிரவு கப்பலிலேயே போய் தங்கலாம் என்று பலரும் கூறியதால் எல்லோரும் தீவுக்கப்பலுக்கே சென்று இரவில் தங்கினார்கள்.

மறுநாள் காரியங்கள் வேகமாக நடந்தன. மாலுமிகளும் விஜயனின் நண்பர்களுமாகச் சேர்ந்து பாரடைஸ் கூறிய அறிவுரைகளின்படி வங்கக் கப்பல்கள் இரண்டையும் சுத்தப்படுத்துவதில் இறங்கினார்கள். தீவுப்பகுதியில் விஷக் கொடிகள் இருந்த பகுதி சுத்தம் செய்யப்பட்டு நாலைந்து கூடாரங்கள் அடிக்கப்பட்டன. இளவரசன் விஜயன் போன்றவர்களுக்கு அக்கூடாரம் அமைக்கப்பட்டாலும் அவர்கள் யாரும் அங்கே தங்காமல் கூடாரத்திற்கு வெளியே சுத்தம் செய்யப்பட்ட பகுதியிலேயே எல்லோருடனும் தங்கினார்கள். ஒற்றைக் கண்ணனும் விஜயனின் தோழர்கள் சிலருமாய் தீவின் உட்பகுதிக்குச் சென்று வேட்டையாடி மான்களையும் முயல்களையும் கொண்டு வந்தார்களாதலால் இரவு நேரங்களில் அந்த விலங்குகளின் மாமிசம் நன்றாக வாட்டப்பட்டு அனைவருக்கும் நல்ல உணவாகப் பயன்பட்டது. இரவு நேரங்களில் வழக்கப்படி ஒற்றைக் காலன் ஆடியும் ஒற்றைக் கண்ணன் பாடியும் எல்லோரையும் மகிழவைத்தார்கள். இவற்றால் எல்லாம் தெம்படைந்த மாலுமிகளும் மற்றவர்களும் வேலைகளை சுறுசுறுப்பாகச் செய்யலானார்கள். மரக்கலங்கள் சுத்தப்படுத்தப்பட்டபின் அவை சாய்க்கப்பட்டு அடிப்பாகத்தி லிருந்த பாசை முதலிய பொருட்கள் கீறி எடுக்கப்பட்டு பழுது பார்க்கப்பட்டன. ஒருவார காலத்தில் அனைத்தும் செய்து முடிக்கப்பட்டபோது மரக்கலங்கள் இரண்டும் புதுப் பொலிவோடு விளங்கியதைக் கண்டு மகிழ்ந்தான் விஜயன். ஏற்கனவே திட்டமிட்டபடி வங்க மரக்கலங்கள் இரண்டில் ஒன்று சதுர்வேதியும் பாரடைஸூம் திரும்புவதற்காக ஒதுக்கப்பட்டிருந்தது. இரண்டு மரக்கலங்களிலும் தீவுக் கப்பலிலிருந்து உணவுப்பொருட்கள் கொண்டு வரப்பட்டன. தண்ணீர் ஜாடிகளில் தீவில் இருந்த நீர்வீழ்ச்சிப் பகுதியிலிருந்து நீர் நிரப்பப்பட்டு மரக்கலங்களில் ஏற்றப்பட்டன. எல்லாமே

முடிந்திருந்த நிலையில் அன்றிரவு அனைவரும் கொண்டாடி மகிழ்ந்தார்கள்.

அதேசமயம் தீவின் உட்பகுதியில் நீர் வீழ்ச்சிக்கு அருகே இருந்த பாறையில் படுத்திருந்தார்கள் பணியாட்கள் வேலையில் இருந்த மனிதனும் அழகியும். அன்று பௌர்ணமி தினமாக இருந்ததால் பந்தங்கள் இல்லாமலேயே வெளிச்சமாக இருந்தது அந்தக் காட்டுப்பகுதி. நிலவொளியில் அந்த அழகியைப் பார்த்தபோது அந்த மனிதனுக்கு வனதேவதையைப் போலத் தோன்றியதால் அவளைக் கண்கொட்டாமல் பார்த்தான்.

''என்ன, என்னை அப்படிப் பார்க்கிறீர்கள்?'' என்று மயக்கும் குரலில் கேட்டாள் அந்த அழகி.

''உன்னை அப்படியே விழுங்கி விடலாம் போலிருக்கிறது'' என்றான் அந்த மனிதன்.

''நீங்கள் என்ன அரக்கனா?'' என்று கேட்டாள் அவள்.

''உனக்கு முன்னால் நான் அரக்கனாக இருக்கவே விரும்புகிறேன். ஏன் தெரியுமா?''

''ஏன்?''

''அரக்கனிடம் எவ்வளவு முரட்டுத்தனம் இருக்கும்? அவ்வளவையும் வெளிப்படுத்தும்போது உனக்கு எப்படி இருக்கும்?''

''என்னைக் கொன்றுவிடப் பார்க்கிறீர்களா?''

''உன்னைப்போய் கொல்வதா? அரக்கனேகூட உனக்கு அடிபணிவானே தவிர இம்சிக்கமாட்டான்'' என்று சொன்ன மனிதன் இன்னொன்றைச் சொன்னபோது-

''உங்களுக்கு வெட்கமே இல்லை. இப்படி ஒரு ஆசையா?'' என்றுச் சிணுங்கினாள் அந்த அழகி.

''நமக்குள் இருக்கும் பல அர்த்தமற்ற வார்த்தைகளில் வெட்கமும் ஒன்று. நமக்கு எதற்காக வெட்கம்? அதோடு இங்கே யார் இருக்கிறார்கள்?''

''அதற்காக இப்படியெல்லாமா?''

''இதோ பார். நமக்கு முன்னால் பெரிய காரியங்கள் இருக்கின்றன. அவற்றில் இருக்கும் ஆபத்துகள் உனக்குத் தெரியும். இந்த நிலையில் கிடைக்கும் வாய்ப்பை வீணாக்குவது சரியே அல்ல'' என்றுகூறி தனது விருப்பத்தைச் செயல்படுத்தத் துவங்கினான் அந்த மனிதன்.

அவனது தூண்டுதலாலும் தன்னிடமே பெருகியிருந்தக் காம இச்சைகளாலும் அவனது வக்கிரங்களுக்கு வழிவிட்ட அந்த அழகி போகப் போக அவனைக் காட்டிலும் ஒரு மடங்கு அதிகமாகவே வக்கிர காமங்களை வெளிப்படுத்தினாள். அதைக் கண்டு பாறைகள் அசந்துபோய் அதிர்ந்தன. நீர்வீழ்ச்சியில் அவர்கள் புரண்டபோது நீரும் மருண்டது. அவர்களது அநாகரீகக் கூத்தைக் கண்ட இரண்டு நரிகள் தங்கள் உடலை மறைத்துக் கொள்ள மறைவிடத்திற்குச் சென்றன.

நீரில் உருண்டு புரண்டு எழுந்த அவர்கள் நீருக்குள் இருந்த நிலையிலேயே பாறையின் மீது படுத்தார்கள்.

''நிலைமைகளை கவனித்தீர்களா?'' என்று கேட்டாள் அழகி.

''மரக்கலங்களைப் பற்றித்தானே கேட்கிறாய்?''

''ஆமாம்''

''அவற்றுக்கென்ன?''

''ஒரு மரக்கலத்தை அனுப்பிவிடப்போகிறார்கள். அதில் நம் மாலுமிகள் போய் விட்டால்?''

''போகமாட்டார்கள்''

''அதெப்படி?''

''நாளை காலை நீயே பார்த்துத் தெரிந்துகொள்'' என்றான் அந்த மனிதன்.

மறுநாள் விஜயனிடம் வந்த மரக்கலத் தலைவன் பாரடைஸ் ''இளவரசே, காழகம் போகும் திட்டத்தை நான் மாற்றிக் கொண்டேன். உங்களோடு வர முடிவு கட்டி விட்டேன்'' என்றான்.

''நல்ல முடிவு. நான் விரும்பிய முடிவு. அப்படியானால் சதுர்வேதியை மட்டும் ஒரு மரக்கலத்தில் அனுப்பி விடலாமா?'' என்று கேட்டான் விஜயன்.

''சதுர்வேதி சம்மதித்தால் அனுப்பிவைக்கலாம். தீவுக் கப்பலில் இருக்கும் ஐம்பது மாலுமிகளைத் தேர்ந்தெடுத்து அக்கப்பலுக்கு நான் அனுப்பி வைக்கிறேன்''

''தீவுக்கப்பலுக்கு மாலுமிகள் குறைவாக இருக்குமே?''

''பாதகமில்லை. பார்த்துக் கொள்ளலாம்''

''சதுர்வேதியை எப்படித் தனியாக அனுப்புவது?''

''மரக்கலத்தை இயக்க மாலுமிகளிலேயே ஒருவனை நியமித்து விடலாம். வேண்டுமானால் துணிச்சல் மிகுந்தவனான ஒற்றைக் கண்ணனைத் துணைக்கு அனுப்பலாம்''

''சதுர்வேதி இந்த ஏற்பாடுகளுக்கு ஒப்புக் கொள்வாரா?''

''ஒப்புக்கொண்டேன்'' என்றபடி வந்தார் சதுர்வேதி.

அதையடுத்து ஐம்பது மாலுமிகளைத் தேர்ந்தெடுத்து வங்க மரக்கலம் ஒன்றுக்கு அனுப்பினான் பாரடைஸ். சதுர்வேதியும் ஒற்றைக் கண்ணனும் அதில் ஏறிப் புறப்பட்டார்கள்.

பிறகு மற்றொரு வங்க மரக்கலத்திற்கு விஜயனின் தோழர்களிடமிருந்து ஐம்பது பேர் மாலுமிகளாக அனுப்பப்பட்டு அந்த மரக்கலத்தின் தலைவனாக டெமிட்ரியஸ் நியமிக்கப்பட்டான். பணியாட்கள் நால்வர் அக்கலத்திற்கு அனுப்பப்பட்டார்கள்.

மீதமுள்ளவர்கள் தீவுக்கப்பலுக்கு வந்ததும் நங்கூரங்கள் தூக்கப்பட்டன. தீவுக்கப்பலும் வங்கக் கப்பலும் ஒன்றன்பின் ஒன்றாக கடலில் சென்றன. அதைக்கண்டு நிம்மதி பெருமூச்சு விட்டான் விஜயன்.

ஆனால் அவனது நிம்மதி நிலைக்கவில்லை.

அன்றிரவு தீவுக்கப்பலில் பெரியதோர் அலறல் கேட்டது.

அங்கு போய்ப் பார்த்தான் விஜயன்.

அங்கே ரத்த வெள்ளத்தில் கிடந்தான் மோனோகாலன்.

## அத்தியாயம் இருபத்தொன்று

# நீர்க்கம்பம்

**வி**ஜயனும் மற்றவர்களும் அங்கு வந்து பார்த்தபோது மோனோ காலன் ரத்த வெள்ளத்தில் கிடந்தான். அவனது ஒற்றைக்கால் வெட்டப்பட்டு தூரத்தில் கிடந்தது. தலை வெட்டப்பட்டு அருகிலேயே உருண்டிருந்தது. காலும் தலையும் மற்ற உடல் ரத்தத்தில் நனைந்த நிலையில் இருந்தது. மோனோ காலன் மிகவும் கோரமான நிலையில் கொலை செய்யப் பட்டிருக்க வேண்டும் என்பது எல்லோருக்கும் புரிந்தது. அந்த நேரத்தில் மரக்கலத் தலைவனும் அங்கு வந்து அக்காட்சியைக் கண்டு திடுக்கிட்டான். அசுவத்தாமர் துண்டுபட்ட காலைத் தேடி கையில் வைத்துக்கொண்டு மிகவும் கம்மிய குரலில் ''மோனோ காலா' என்று சொல்லி விம்மினார். ''இளவரசே டெமிட்ரியஸுக்கு தகவல் சொல்லி வந்து பார்க்கச் சொல்லுங்கள்'' என்று சொன்னார். ''ஆமாம். ஆமாம்'' என்று சொல்லிக் கொண்ட விஜயன் தன் தோழர்களில் ஒருவனை வங்கக் கப்பலுக்கு அனுப்ப, சிறிது நேரத்தில் அங்கு வந்த டெமிட்ரியஸ் மோனோ காலனின் உடலைக் கண்டு திகைத்து ''இளவரசே, இங்கு என்ன நடந்தது?'' என்று கேட்டான்.

''கொலை நடந்திருக்கிறது. இதுதான் எல்லோருக்கும் தெரிந்த விஷயம்''' என்றான் விஜயன்.

''மோனோகாலனை எதற்காகக் கொல்ல வேண்டும்?'' என்று கேட்டான் டெமிட்ரியஸ்.

''அதற்குப் பதில் இல்லாததால் ''மோனோ காலனுக்கு யாராவது விரோதி இருக்கிறார்களா டெமிட்ரியஸ்?'' என்று கேட்டான் விஜயன்.

''அவன் பாவம். மிகவும் நல்லவன். அவனுக்கு விரோதி யாரும் கிடையாது. எங்கள் தலைவர் சதுர்வேதியும், நண்பன் சிமேரியும் வங்கக் கப்பலில் போய் விட்டார்கள். நான்

இன்னொரு கப்பலில் இருக்கிறேன். மற்றபடி அவனுக்குத் தெரிந்த மற்ற இரண்டு நபர்களான அசுவநாவிகரும், அசுவத்தாமரும் இங்கே இருக்கிறார்கள். அவர்கள் அவனுக்கு மிகவும் நெருங்கிய நண்பர்கள். நாங்கள் மொத்தமே ஆறு பேர்கள்தானே? விரோதம் வந்தால் எங்களுக்குள்தான் வரவேண்டும். அப்படி வர ஒரு காரணமும் இல்லை இளவரசே''

''அப்படியானால் என் விரோதிதான் இதைச் செய்திருக்க வேண்டும்''

''தங்கள் விரோதியா? யாரவன்?''

''தெரியவில்லை. புதிதாக யாரோ கப்பலில் இருக்கிறான்''

''அப்படியே இருந்தாலும் அவன் ஏன் மோனோ காலனைக் கொல்ல வேண்டும்?''

''தெரியவில்லை டெமிட்ரியஸ். அதைத்தான் கண்டுபிடிக்க வேண்டும்''

''தங்களுக்கு தன் இருப்பை உணர்த்த இப்படிச் செய்திருக்கலாமோ?''

''இருக்கலாம்'' என்ற விஜயன் ''அசுவத்தாமரே, கப்பலில் இருப்பவர்களின் எண்ணிக்கை கூடியிருக்கிறதா?'' என்று கேட்டான்.

''தீவுக்குப் போனதிலிருந்து எனக்கு கணக்கு வரவில்லை இளவரசே. கணக்கைச் சொல்ல வேண்டிய இருவரில் சிமேரி சதுர்வேதியுடன் போய்விட்டான். மற்றொருவனான மோனோ காலன் மாண்டு விட்டான்'' என்றார் அசுவத்தாமர்.

விஜயன் மரக்கலத்தலைவனைப் பார்த்து ''இந்த உடலை என்ன செய்வது?'' என்று கேட்டான்.

''நடுக்கடலில் இறப்பவர்களுக்கு சடங்குகள் செய்ய முடியாது இளவரசே. கடலில் தூக்கி எறிந்துவிட வேண்டியது தான்''

''அப்படியே நடக்கட்டும். என் உதவிக் கரங்களில் ஒருவன் இறந்ததற்காக நான் ஒரு நாள் விரதம் இருக்கப் போகிறேன்.

யாரும் வற்புறுத்தாதீர்கள்'' என்று கூறிவிட்டு தனது தோழர்களில் தன் மெய்க்காப்பாளனாக இருந்தவனைக் கூப்பிட்டு ''உதயணா, நீ போய் கப்பல் இரண்டிலும் உள்ளவர்கள் கணக்கை அறிந்து வா. கணக்கெடுப்பு ரகசியமாக இருக்கட்டும்'' என்றான்.

''விஜயா, நான் உன் நண்பன் மட்டுமில்லை. மெய்க்காப்பாளன். உன்னை விட்டுப் போகமுடியாது'' என்றான் உதயணன்.

''எனக்கு இப்போது ஆபத்து எதுவுமில்லை. அதோடு இந்த வேலையை நீதான் சரியாகச் செய்யமுடியும். போய் வா. விவரம் தெரிந்ததும் எனக்கு முதலில் கூறிவிட்டு அசுவத்தாமரிடமும் சொல். தினமும் இந்த வேலை உனக்கு'' என்றான் விஜயன்.

★★★

இரண்டு நாழிகை கழித்து மரக்கலத்தின் ஐந்தாவது தளத்தில் தனியே அமர்ந்திருந்த விஜயனிடம் வந்த உதயணன் ''நமது தீவுக் கப்பலில் இருந்தவர்கள் மொத்தம் 935 பேர். காழகம் சென்றுவிட்ட கப்பலில் சதுர்வேதி, ஒற்றைக் கண்ணன், மாலுமிகள் 50 பேர் பணியாட்கள் நால்வர் ஆக 56 பேர் போய் விட்டனர். ஆக நம்மிடம் இருக்க வேண்டியவர்கள் 879 பேர். கணக்கு சரியாக இருக்கிறது'' என்றான்.

''தீவிலிருந்து யாராவது புதியதாக கப்பலுக்கு வந்திப்பார்களோ என்று சந்தேகித்தேன். யாரும் வரவில்லை என்று தெரிகிறது. அது சரி, கணக்கெடுப்பு நடத்தினாயே - அந்தஸ்து வாரியாக நடத்தினாயா? அதில் மாற்றம் இருக்கிறதா?'' என்று கேட்டான் விஜயன்.

''அதெல்லாம் இல்லை. மாலுமிகள், பணியாட்கள் நம் நண்பர்கள் எல்லாம் சரியாகவே இருக்கிறார்கள்''

''பணியாட்களில் ஆடவர், பெண்கள் இருக்கிறார்களே அவர்கள்?''

''சதுர்வேதிக் கப்பலில் 4 ஆண் பணியாளர்கள் போய் விட்டதால் நம்மிடம் 6 பேரும் பெண் பணியாளர்கள் 10 பேரும் இருக்கிறார்கள்''

''இதை அசுவத்தாமரிடம் தெரிவித்துவிடு. இந்த எண்ணிக்கையின் பேரில் எப்போதும் உனக்கு ஒரு கண் இருக்கட்டும்''

உதயணன் போன பிறகு தனித்துவிடப்பட்ட விஜயன் நீண்ட நேரம் வரை யோசித்தபடியே இருந்தான். தன் தந்தை சிகபாகுவிடமிருந்து தப்பி தீவுக் கப்பலையும் பெற்று கடலுக்குள் வந்தபின் பெரும் திருப்தியாக இருந்தது விஜயனுக்கு. தேவபுத்தர் கூறிய நாகதீபத்தை அடைவதில் இனி பிரச்சினை ஒன்றும் இருக்காது என்று நினைத்தான். ஆனால் தன் கப்பலுக்குள் எதிரி ஒருவன் தோன்றுவான் என்றும் அவன் தன் இருப்பை கொடூரமான கொலையின் மூலம் உணர்த்துவான் என்பதையும் அவன் கனவிலும் நினைத்துப் பார்க்கவில்லை. கப்பலில் புதியதாக யாரும் வராத நிலையில், இருப்பவர்களில் யார் எதிரியாக மாறியிருக்க முடியும் என்று யோசித்துப் பார்த்தான். அப்படி தனக்கு எதிரியாக மாறவேண்டும் என்றால் அவன் பலம் வாய்ந்தவனாகவும் தன்னைப்பற்றி நன்றாகத் தெரிந்தவனாகவும் இருக்க வேண்டும் என்று தோன்றியது அவனுக்கு. அப்படிப் பார்த்தால் அவனது தோழர்கள் எழுநூறு பேரில் யாராவது ஒருவன்தான் அப்படி எதிரியாக மாற வாய்ப்பிருந்தது. ஆனால் தோழர்கள் எழுநூறு பேரையுமே தனிப்பட அவனுக்குத் தெரிந்திருந்ததால் அவர்களில் யார் மீதும் அவனுக்குச் சந்தேகம் வரவில்லை. பலவாறு யோசித்தபோது மாலுமிகளின் பேரில்தான் அவனது கவனமும் சந்தேகமும் திரும்பியது. அவர்களில்தான் மாலுமி என்ற போர்வையில் யாராவது ஒரு புல்லுருவி சேர்ந்திருக்க வேண்டும் என்றும் தன்னைப் பற்றியே அச்சத்தை உருவாக்கவே மோனோகாலனை கொலை செய்திருக்க வேண்டும் என்றும் முடிவிற்கு வந்தான். இந்த ஊகம் உண்மையாகவே இருந்தாலும் அந்த எதிரியின் நோக்கம் என்னவாக இருக்கும் என்பது விஜயனுக்குப் பிடிபடவில்லை. தனி ஒரு மனிதனாக இருந்து கொண்டு மரக்கலத்தில் உள்ள எழுநூறு பேர்களை எதிர்த்து அவனால் என்ன செய்யமுடியும் என்று யோசித்தபோது அவனுக்கு கர்ணபத்ர பங்கத்தைப் பற்றிய நினைவு வந்தது. கர்ணபத்ர

பங்கத்தைக் கொண்ட பெட்டிகள் கப்பலில் உள்ள சரக்குகளோடு சேர்ந்து விட்டதால் அவற்றைத்தேடி எடுக்கும்படி தன் நண்பர்களிடம் கூறியிருந்தும் அதுபற்றி எந்தவிதமான தகவலும் தனக்கு வராததும் நினைவிற்கு வரவே நண்பர்கள் சிலரை அழைத்து அதுபற்றி விசாரித்தான். நண்பர்களோ சரக்குகள் கண்டபடி குவிக்கப்பட்டுள்ளதால் அவற்றைப் புரட்டிப் போட்டு பெட்டிகளைத் தேட சிரமமாய் இருக்கிறது என்றும் அதேசமயம் தொடர்ந்து அந்தப் பணியை செய்து வருவதாகவும் விரைவிலேயே தேடி விடுவோம் என்று தெரிவித்தார்கள். அதோடு விஜயன் கூறியிருந்தபடி சரக்குகளின் பட்டியல்களை அசுவத்தாமரிடம் வாசித்து விட்டதாகவும், கப்பலில் ஏற்கனவே மரக்கலத்தலைவன் சேர்த்து வைத்திருந்த உணவுப் பொருள் விவரங்களையும் அவரிடம் கூறியதாகவும் சொன்னார்கள்.

''அவர் இப்போது எங்கிருக்கிறார்?''

''மோனோ காலன் மாண்டது அவரை மிகவும் பாதித்து விட்டது. அவன் கொலையுண்ட இடத்திலேயே படுத்துக் கிடக்கிறார்''

''அவரைச் சற்று அழைத்து வாருங்கள்''

அசுவத்தாமர் அங்கே வரவழைக்கப்பட்டதும் அவரது தோள்களைப் பற்றிய விஜயன் ''நாம் எதிர்பாராத விஷயங்கள் நடக்கும்போது பொறுமையால்தான் அவற்றைத் தாங்கிக் கொண்டு மறக்க வேண்டும். மனம் தளர்ந்து விடக்கூடாது'' என்றான்.

''நான் மனம் தளரவில்லை இளவரசே. மன உறுதியைத் தான் பெற்றிருக்கிறேன். மோனோ காலன் கொலையுண்ட இடத்தில் நான் படுத்திருப்பது கொலைகாரனை அடையாளம் காணத்தான். கொலைகாரனின் வாசனை எனக்குள் படிந்திருக் கிறது ஐயா. எப்படியும் அவனை நான் கண்டுபிடித்து விடுவேன்'' என்றார் முதியவர்.

''மிகவும் மகிழ்ச்சி ஐயா. நான் எதிர்பார்த்தது இதைத்தான்'' என்று சொன்ன விஜயன் ''சரக்குகளின் பட்டியல்களையும், கப்பலில் உள்ள உணவுப் பொருட்களின் விவரங்களையும்

பெற்றீர்கள் அல்லவா? இவற்றில் வித்தியாசம் ஏதாவது வந்தால் எனக்குச் சொல்லுங்கள்'' என்றான்.

''ஆகட்டும் ஐயா'' என்றார் முதியவர்.

முதியவர் போய் விட்டபின் சுற்றிலும் நோட்டம் விட்டான் விஜயன். அதுவரை வீசிக்கொண்டிருந்த காற்று முற்றிலுமாக நின்று ஒருவிதமான புழுக்கம் உண்டாகியிருந்ததை உணர்ந்தான். அதுபற்றி மரக்கலத் தலைவனிடம் கேட்க அவன் புறப்பட்டபோது அவனே எதிரில் வந்தது மட்டுமின்றி கடலில் எதையோ சுட்டிக்காட்டி ''கவனித்தீர்களா?'' என்று கேட்டான்.

மரக்கலத் தலைவன் சுட்டிக்காட்டிய திசையை நோக்கிய விஜயன் ''ஆமாம், லேசாக புகை மண்டலம் வருவது தெரிகிறது'' என்றான்.

''புகை மண்டலம் ஒரு அறிகுறிதான் இளவரசே. ஆனால் பின்னால் பெரும் ஆபத்து இருக்கிறது'' என்றான் பாரடைஸ்.

''என்ன ஆபத்து?''

''கொள்ளையர் ஆபத்து?''

''கொள்ளையர்களா?''

''ஆமாம். கடல் கொள்ளையர்கள். அவர்களது வருகையைத்தான் புகைமண்டலம் உணர்த்துகிறது''

''கடல் கொள்ளையர்களின் ஆதிக்கம் எரித்திரிய கடலில்* தான் என்று கேள்விப்பட்டேன்''

''அது உண்மைதான் இளவரசே. ஆனால் பூர்வக் கடலில் வணிகக் கப்பல் போக்குவரத்து அதிகரித்து விட்டது. தமிழ் நாட்டிலிருந்தும் கலிங்க நாட்டிலிருந்தும் நிறைய கப்பல்கள் வருவதால் இப்போது இக்கடல் பகுதியிலும் அவர்களின் ஆதிக்கம் அதிகமாகிக் கொண்டு வருகிறது''

''கொள்ளையர்களின் பலம் எவ்வளவு இருக்கும்?''

---

* எரித்திரிய கடல் என்பது அரபிக் கடலையும், பூர்வக் கடல் என்பது வங்கக் கடலையும் குறிக்கும்

''பூர்வக் கடலைப் பொறுத்தவரை தனி ஒருவனின் ஆதிக்கம் தான் இருந்து வருகிறது. அவனிடம் ஆறு மரக்கலங்கள் இருப்பதாகக் கேள்வி'' என்று சொல்லிக் கொண்டே மரக்கலத் தலைவன் ''அதோ பாருங்கள். புகை மண்டலம் விலகி கொள்ளையர் கலங்கள் தெரிகின்றன'' என்றான்.

''ஆமாம். ஐந்து கப்பல்கள் தெரிகின்றன'' என்றான் விஜயன். சொல்லிவிட்டு ''இவர்களைச் சமாளிக்க முடியுமா?'' என்று கேட்டுவிட்டு கடலை நோக்கியபோது எதிரே தெரிந்த கொள்ளையர் கலங்கள் தீவுக்கப்பலை நோக்கி வராமல் விலகி ஓடுவதைக் கண்டு வியந்தான்.

''பாரடைஸ், இது என்ன? கொள்ளையர் கலங்கள் ஏன் ஓடுகின்றன? நம் தீவுக் கப்பலைக் கண்டவுடன் பயந்து ஓடுகிறார்களா?'' என்று கேட்டான்.

''அதுவும் காரணமாக இருக்கலாம். நமது தீவுக்கப்பல் ஒரே நேரத்தில் பத்து மரக்கலங்களை எதிர்கொள்ளும். ஆனால் கொள்ளையர்கள் ஓடுவதற்கு உண்மையான காரணம் அதுவல்ல. அதோ பாருங்கள்'' என்றான் பாரடைஸ்.

விஜயன் கடலில் கண்ட காட்சி காணக்கிடைக்காத பயங்கரக் காட்சியாக இருந்தது.

புழுக்கமாக இருந்த அக்கடற்பகுதியில் கரிய மேகங்கள் வானத்தில் எங்கோ தோன்றி திரை போல தொங்கலாயின. சில வினாடிகளே நீடித்த அக்காட்சி மாறியது. மேகத் திரையின் அடிப்பாகங்களிலிருந்து சிற்சில இடங்களில் கூர் உருளை வடிவத்தில் மேகங்கள் நீட்டிக்கொண்டு வந்தன. பஞ்சிலிருந்து நூல் திரிந்து வருவதுபோல் இருந்தது அக்காட்சி. அவ்வாறு மேகங்கள் கூர்முனைகளாக நீட்டிய இடத்தில் கடல் நீர் கொந்தளிக்க ஆரம்பித்தது. அதே சமயம் கூர்முனை நன்றாக நீண்டு கடல்நீரைத் தொடவும் அந்த அழுத்தத்தினால் கடல்நீர் உயரத் தொடங்கியது. அப்படியே ஒரு தூணைப் போல உயரமாக எழுந்தது கடல்நீர். அப்படி தூண் போல் உயர்ந்த நீர்க்கம்பத்தின் முனையைச் சீண்டுவது போல் காற்று சீண்டியதும் நீர்க்கம்பமானது ஆடத்துவங்கியது. அப்படியே

அது நகரவும் தொடங்கியது. ஏறக்குறைய குழல் போன்ற அந்த நீர்க்கம்பம் காற்றோடு சேர்ந்து சுழன்றபடி கடல் கொள்ளையர்கள் சென்ற திசையை நோக்கி நகரலாயிற்று. அதன் வேகம் மிகவும் அதிகமாக இருந்ததால் சுற்றியுள்ள கடல் பகுதி பெரிதாகக் கொந்தளித்தது. கொந்தளிப்பின் எல்லையானது தீவுக் கப்பலின் பக்கம் நீண்டது.

அதைக் கண்ட பாரடைஸ் ''நல்ல வேளையாக நீர்க்குழல் நமது பக்கமாக வராமல் அந்தப் பக்கமாகச் செல்கிறது. அது செல்லும் வேகத்தைப் பார்த்தால் விரைவிலேயே கொள்ளையர் கலங்களைத் தாக்கும். கொள்ளையர்களின் கலங்கள் நமது வங்கதேசத்து கப்பலைப் போல சிறியவை. நீர்க்குழலில் சிக்கிக் கொண்டால் சிதறுண்டு போகும்'' என்றான்.

'நீர்க்குழல் நம்மை நோக்கி வந்திருந்தால்?'' என்று கேட்டான் விஜயன்.

''நமது தீவுக்கப்பல் மிகவும் பெரியதாகையால் நீர்க் குழலைச் சமாளிக்கும். நீர்க்குழல் நம் கப்பலை கவிழ்க்க முடியாது. சற்றே ஆடச் செய்து அகன்றுவிடும். ஆனால் வங்கக் கப்பலின் நிலையைப்பற்றிச் சொல்ல முடியாது. அது கவிழலாம். அல்லது உடையலாம்'' என்றான் பாரடைஸ்.

''இந்த நீர்க்குழல் எவ்வளவு நேரத்திற்கு நீடிக்கும்?''

''அதிகபட்சமாக இரண்டு நாழிகை வரை நீடிக்கும். பிறகு வலுவிழந்து கலைந்து விடும்''

''இந்த நீர்க்குழல் அடிக்கடி நிகழுமா?''

''இளவரசே, நீர்க்குழல்கள் உண்டாவதற்கு சூரிய வெப்பம் தான் முக்கிய காரணம். வெப்பம் அதிகமாகி அழுத்தத்தை உண்டாக்கும்போது இவை நிகழ்கின்றன. இந்த நீர்க்குழல் பகலில் மட்டுமே உண்டாகும்'' என்று சொன்ன பாரடைஸ் ''நமக்கு அசம்பாவிதம் நேராததற்கு கடல் தெய்வத்தை வணங்குங்கள். உணவருந்தும் நேரமாகிவிட்டது. அருந்துவோம். வாருங்கள்'' என்று கூறிவிட்டு ஐந்தாம் தளத்திலிருந்த அவனது அறைக்குச் சென்றான்.

விஜயனும் அதே தளத்தில் மறுகோடியில் இருந்த தன் அறைக்குச் சென்றான். அங்கு சென்றதுமே பணிப்பெண் உணவை அவன் முன்வைத்து விட்டுத் திரும்பியபோது எதையோ கவனித்த விஜயன் அவளைப் பார்த்து ''நில்'' என்றான்.

நிற்காமல் போகமுற்பட்ட அவளை ஒரே எட்டில் பாய்ந்து போய் கையைப் பிடித்து அவளது முகத்தை நன்றாக நோக்கினான்.

''நீயா?'' என்றான் அதிர்ச்சியுடன்.

◈◈◈

## அத்தியாயம் இருபத்திரண்டு

# பணிப்பெண்

''நீயா?'' என்று கேட்டபோது விஜயனுக்குத்தான் அதிர்ச்சியாக இருந்ததே தவிர அப்பணிப் பெண்ணுக்கு இல்லை. மாறாக லேசாக சங்கடத்தை மட்டுமே அடைந்தாள்.

தன் கேள்விக்கு அவள் பதில்சொல்லாததால் ''எப்படி நீ இங்கு வந்தாய்?'' என்று விஜயனே மீண்டும் கேட்டபோது ''பார்த்தால் தெரியவில்லையா?' என்றாள் அவள். குரலில் பணிப்பெண்ணுக்கு உரிய பணிவு இல்லை.

''பணிப்பெண்ணாக வந்தாயா?'' என்று கேட்ட விஜயன் ''அப்படி ஏன் வரவேண்டும்?'' என்று கேட்டான்.

அவளோ அசராமல் ''வேறெப்படி வரமுடியும்? என் அந்தஸ்துதான் போய்விட்டதே''' என்றாள் குற்றம் சாட்டும் பாவனையில்.

''அந்தஸ்து போய்விட்டதா? எப்படி அவ்வாறு சொல்கிறாய்?''

''என்னைப் பிரிந்தீர்கள். காணாமல் போனீர்கள். திரும்ப வந்தீர்கள். என்னிடம் வந்தீர்களா? தகவலாவது சொன்னீர்களா?

இல்லை. கவலைப்படவும் இல்லை. என்னை மறந்தே விட்டீர்கள். ஏதேதோ நடந்திருக்கிறது. நீங்களோ என்னைத் தேடி வரவில்லை. என்னைப்பற்றிய நினைவுகூட இல்லாமல் என்னென்னவோ செய்தீர்கள். முடிவில் என்னைத் துறந்துவிட்டு கப்பலேறிவிட்டீர்கள். இதற்கெல்லாம் என்ன அர்த்தம்? என்னைக் கைகழுவி விட்டீர்கள் என்றுதானே அர்த்தம்? என் அந்தஸ்து பறிபோனதாகத்தானே அர்த்தம்? பிறகு நான் எப்படி பழைய அந்தஸ்தோடு இங்கே வரமுடியும்? அதனால்தான் பணிப் பெண்ணாக வந்தேன்'' என்று விஜயனைக் குற்றவாளி யாக்கி வார்த்தைகளைச் சரமாரியாகக் கொட்டினாள் அப்பெண்.

விஜயனுக்கு தேவபுத்தரின் நினைவு வந்தது.

தன்னை நாக நாட்டுக்குப் போகும்படிச் சொன்னதும் ''என் மனைவி மாயாவை என்ன செய்வது?'' என்று கேட்டபோது ''மாயையை விலக்குவதுதான் நல்லது'' என்று சொல்லியிருந்தார் அவர்.

அவர் கூறியது அப்போது தத்துவம் போல் இருந்தாலும் பிறகு அவனுக்குப் புரிந்தது ''மாயாவை மறந்துவிடு'' என்பது தான் அவரது வார்த்தைக்கு அர்த்தம் என்பது.

இமாலயத்திலிருந்து வங்கதேசத்திற்கு வந்தபோது அவனைப் பிடிப்பதற்கான அரசகட்டளை இருந்த காரணத்தால் அவனால் வெளிப்படையாக நடமாட முடியவில்லை. தன் சகாக்களோடு ஹரிகிரி மலைக்காட்டில் மறைந்து வாழ வேண்டியதாயிற்று. ஒருமுறை தன் மனைவியைக் காண வீட்டிற்கு மாறுவேடத்தில் அணுகியபோது வீட்டைச்சுற்றி பலமான கண்காணிப்பு இருந்ததால் உள்ளே நுழையவோ அவளைக் காணவோ முடியவில்லை - மற்றொரு முறை தன்னிடம் இருந்த மக்கள் படையில் ஒருவனை அனுப்பியபோது மாயா வீட்டில் இல்லை என்பது தெரியவந்தது. அவளைப்பற்றிய தகவல் வராததாலும் அவன் மேற்கொள்ள வேண்டிய காரியங்கள் நிறைய இருந்ததாலும் அவளை மறந்தே போனான்.

கர்ணபத்ர பங்கத்தைக் களவாடியபோது பத்மினியின் மூலம்தான் மாயாவைப் பற்றிய தகவல் அவனுக்குத் தெரிந்தது.

அதன்படி மாயா அவனோடு வாழ விரும்பாமல் ஓடிவிட்டாள் என்பது தெரிந்தது. விஷயம் இவ்வாறு இருக்கையில் தற்போது அவள் தன்னைக் குற்றவாளியாக்கிப் பேசியது அவனுக்கு வியப்பாக இருந்தது.

சிகபாகுவின் ஆசைநாயகிகளில் ஒருத்தியான அம்பாலி என்பவளின் தங்கை தான் மாயா. விஜயன் தனக்கு எதிராக நடந்து கொண்டபோது அவனைத் திருமணத்தின் மூலம் வழிக்குக் கொண்டு வரலாம் என்ற எண்ணத்தில் மாயாவை விஜயனுக்கு மணம் செய்து வைத்தான் சிகபாகு. அத்திருமணத்தை நாடே வியக்கும் வண்ணம் பிரம்மாண்டமான வைபவமாக பத்து நாட்களுக்கு நடத்தினான். அப்போதாவது விஜயனின் மனம் சுகபோகங்கள் மீதும் படாடோபங்கள் மீதும் திரும்பும் என்று எதிர்பார்த்தான். ஆனால் சிகபாகு எதிர்பார்த்தது நடக்கவில்லை. நேர்மாறானதே நடந்தது. திருமணம் முடிந்ததும் சிகபாகு கட்டியிருந்த ரம்மிய மாளிகையில் விஜயன் குடியேறவில்லை. திருமணப் பரிசுகளாகக் குவிக்கப்பட்ட பொன்னையும் பொருளையும் அவன் தொடவில்லை. மாயாவை அழைத்துக் கொண்டு மக்களோடு மக்களாகச் சேர்ந்து எளிய வாழ்க்கையே மேற்கொண்டான் விஜயன்.

இந்த நிலை சிகபாகுவைவிட மாயாவுக்கே பெரும் ஏமாற்றமாக இருந்தது. தனது சகோதரி அம்பாலி சிகபாகுவிடம் வாழ்ந்து கொண்டிருந்த உல்லாச வாழ்க்கையைக் கண்டிருந்த அவள் தனது வாழ்க்கையும் அவ்வாறே அமைய வேண்டும் என்ற கனவில் மூழ்கினாள். அப்படிப்பட்ட வாழ்க்கைக்காக சிகபாகுவிற்கு ஆசைநாயகியாக ஆகவும் தயாராக இருந்தாள். இப்படிப்பட்ட நிலையில் சிகபாகு தன்னை தன் மகனும் இளவரசனுமான விஜயனுக்கே மணம் செய்தபோது பேரானந்தம் அடைந்தாள் மாயா. திருமணமும் படாடோபமாய் பிரம்மாண்டமாக நடந்தபோது தனது கனவு பலித்து விட்டதாக நினைத்தாள். பரிசுப் பொருட்களாகக் குவிந்த குவியலைக் கண்டபோது சொக்கிப்போய் மயங்கினாள்.

ஆனால் எல்லாமே விஜயனின் போக்கால் தலைகீழாகி விடவே பெரிதும் ஏமாற்றமும் தவிப்பும் கொண்டாள் மாயா. சுக

போகங்களும் செல்வங்களும் தயாராக இருந்தபோது அவற்றையெல்லாம் விஜயன் வேண்டாமென விலக்கியபோது மகா வெறுப்பாகவும் கோபமாகவும் இருந்தது அவளுக்கு. ராஜகுமாரனாக ராஜ அந்துஸ்துடன் சுகபோகமாக வாழ்வதைவிட்டு விட்டு மக்களோடு சேர்ந்து இவர் எதற்காக வீணாகிப் போகவேண்டும்? எதற்காகத் திருமணம் செய்து கொண்டு தன் கனவுகளையும் வீணாக்க வேண்டும்? பேசாமல் துறவறம் போயிருக்க வேண்டியது தானே? இல்லறத்திற்குள் எதற்குத் தேவையற்ற துறவறம்?'' என்றெல்லாம் தனக்குள் கேட்டுக் கேட்டு மாய்ந்து கொண்ட மாயா ''உங்கள் செய்கைகள் எனக்குப் பிடிக்கவில்லை'' என்று கோபத்துடன் சொன்னாள் விஜயனிடம்.

''எந்தச் செய்கைகளைச் சொல்கிறாய்?

''எல்லாவற்றையும் தான்''

''எல்லாவற்றையும் தான் என்றால்? உன்னை மணந்தது கூடவா?''

''ஆமாம்'' என்று சொல்ல நினைத்த மாயா தன் உணர்ச்சிகளை சற்றே அடக்கிக் கொண்டு ''திருமணம் மன்னராகப் பார்த்துச் செய்த மாபெரும் பாக்கியம். அதில் தவறில்லை'' என்றாள்.

''வேறு எதில் தவறு?''

''மன்னர் அளித்த சுகபோகங்களையெல்லாம் மறுத்து விட்டீர்களே, அது மாபெரும் தவறு''

''விஷயம் தெரியாமல் பேசுகிறாய் மாயா. மன்னர் அளிக்கும் சுகபோகங்கள் எல்லாமே என்னை வீழ்த்தவிருக்கும் வலை. ஆகவே தான் அவற்றை மறுத்தேன்''

''சுகபோகங்கள் எப்படி வலையாகும்? உங்கள் சகோதரர்கள் சுகமாக இல்லையா? உல்லாசமாக இல்லையா? சொர்க்கலோக வாழ்க்கையை எப்போதும் அனுபவிக்கிறார்களே - உங்களுக்கு மட்டும் ஏன் தேவையற்ற சிந்தனை?''

''என் சகோதரர்கள் மட்டுமல்ல என் தந்தைகூட இந்திர போகத்தில்தான் இருக்கிறார்? ஆனால் இதற்கெல்லாம் பணம்

எப்படி வந்தது? யாரிடமிருந்து வந்தது? எல்லாமே நம் நாட்டு மக்களிடமிருந்துதானே வந்தது? மக்களின் பணத்தில் உல்லாசமாக வாழ்வது கௌரவமானதா? இதைத்தான் நீயும் விரும்புகிறாயா?''

''அதில் என்ன தவறு? இதையெல்லாம் எதிர்பார்த்துதான் நான் உங்களை மணந்தேன்''

''தவறு மாயா. தவறு. அந்த ஆசைகளை நீ விட்டுவிடு. அவை தவறானவை. நாம் மக்களுக்கு கடன்பட்டவர்கள். அவர்களுக்கு நல்லது செய்ய வேண்டியவர்கள். மன்னர் அதைச் செய்யாதபோது நானாவது செய்யவேண்டும். எனவேதான் அவரது வழியை மேற்கொள்ளாமல் - அவர் தந்த சுகபோக அந்தஸ்துகளை ஏற்றுக்கொள்ளாமல் மக்களுக்கு உதவ மக்களோடு சேர்ந்தேன். நீயும் சேர்ந்துகொள். மக்கள் உன்னை மகாராணியாக வணங்குவார்கள்''

தன்னை வணங்குவது பற்றிய கவலை மாயாவுக்கு இல்லை. எல்லோரும் தூற்றினாலும்கூட உல்லாச வாழ்க்கை வாழ்வதுதான் பிறவிப்பயன் என்று நினைத்த அவள் விஜயனை அடியோடு வெறுத்து அவனுடன் சரிவர வாழ்க்கையை நடத்தவில்லை. அதோடு விஜயன் மக்கள் இயக்கத்தில் மும்முரப்பட்டு கொள்ளை கொலை என இறங்கி விட்டதால் மனைவியோடு இருக்கும் காலமும் நேரமும் குறையத் தொடங்கின. மிகப் பெரிதாக எதிர்பார்த்து படுபாதாளத்திற்கு வந்தது போன்ற பெரும் ஏமாற்றத்திற்கு ஆளான மாயா தவித்தாள். தனது மைத்துனர்கள் விதவிதமான மாளிகைகளில் பலவிதமான சுகங்களை அனுபவித்துக் கொண்டிருக்கும் நிலையில் சர்வ சாதாரணமான வீட்டில் இருந்து கொண்டு சமைத்துக் கொண்டும் சுத்தம் செய்து கொண்டும் வாழ்வது அவளுக்குச் சகிக்க முடியாத நரகமாக இருந்தது. தன் சகோதரி அம்பாலியிடம் தன் சோகத்தை எடுத்துச் சொன்னாள்.

''நானோ மன்னரோ என்ன செய்ய முடியும் மாயா? எல்லாவற்றையும் கொடுக்கத்தான் முடியும். எடுக்க முடியாது என்று மறுத்தால் என் செய்வது சொல். நீ உன் கணவரிடம் கண்டிப்பாக உன் எதிர்பார்ப்புகளைச் சொல். உன் வழியில்

அவனைத் திருப்பு. இதையெல்லாமா உனக்கு நான் கற்றுத் தரமுடியும்?'' என்றாள் அம்பாலி.

அழகில் மயங்குபவன் நாணலைப் போன்றவன். எப்படி வேண்டுமானாலும் வளைக்கலாம். அழகை உதாசீனப் படுத்துபவன் இரும்பைப் போன்றவன். இஷ்டத்திற்கு வளைக்க முற்பட்டால் கைதான் முறியும். இதை மாயா அறிந்திருந்த காரணத்தால் விஜயனை தன் அழகால் தன் வழிக்கு இழுக்க முயலவில்லை. தனது பேரழகு அங்கீகரிக்கப்படாமலும் அனுபவிக்கப்படாமலும் புறக்கணிக்கப்படுவதைத் தாங்க அவளால் இயலவில்லை. தன் உடல் தொட்டும் தொடாமலும் பட்டும் படாமலும் ஏதோ ஊறுகாயைப் போல விஜயனால் பயன்பட்டு வந்தது அவளுக்கு அவமானமாக இருந்தது. சிகபாகு ஆசைநாயகியாகப் போயிருக்கலாமோ என்று கூடத் தோன்றியது. செய்வதறியாமல் காலத்தை ஓட்டிக் கொண்டிருந்த போது தான் விஜயன் இமாலயத்திற்குக் கடத்தப்பட்டான். ஊரில் இருக்கும்போதே இல்லாதது போல் விஜயன் இருந்து வந்த காரணத்தால் அவன் காணாமல் போனது மாயாவுக்கு பெரிய விஷயமாக இல்லை. அதனால் அவள் பதட்டப்படவும் இல்லை.

★★★

தன்மீது மாயா குற்றச்சாட்டுகளை அடுக்கியபோது அவளோடு துவக்கிய வாழ்க்கையை நினைத்துப் பார்த்தான் விஜயன். ஆரம்பத்திலிருந்தே தன் போக்கு பிடிக்காமல் தன்னோடு அவள் பிடிகொடுக்காமல் தான் வாழ்ந்தாள் என்பது அவனுக்குத் தெரியாமலில்லை. மக்களுக்காகத் தான் வாழ முற்பட்டதால் அவள் புறக்கணிக்கப்பட்டுக் கொண்டிருந் ததையும் அவன் அறிந்திருந்தான். ஆனாலும் அவளது ஆசைக் கனவுகளை நிறைவேற்ற முனைந்தால் சிகபாகுவைப் போல சீரழிய நேரிடும் என்பதால் கனவுகளை கலைத்துக் கொள்ளும்படி அவளிடம் சொல்லிக் கொண்டு வந்தான். ஒருவரையொருவர் புரிந்து கொண்டாலும் ஒன்றாக அனுசரித்துப் போகாமல் அவரவர் வழியிலேயே இருவரும் போய்க் கொண்டிருந்தார்கள்.

அதையெல்லாம் சற்றே அசைபோட்ட விஜயன் "நீ சொல்வதெல்லாம் உண்மை. பழைய விஷயங்களை நாம் விவாதிக்க வேண்டாம். நீ இந்தக் கப்பலில் அதுவும் பணிப் பெண்ணாக எதற்காக வந்தாய்? இத்தனை நாட்களாக என்னிடம் ஏன் சொல்லாமல் இருந்தாய்?" என்று கேட்டான்.

"எதற்காகச் சொல்ல வேண்டும்? எதை எதிர்பார்த்துச் சொல்ல வேண்டும்? எதிர்பார்ப்பதைச் சொன்னால் உடனே நிறைவேற்றி விடுவீர்களா?" முறைப்பாகவே கேட்டாள் மாயா.

"நீ இன்னும் பழைய கனவிலேயே இருக்கிறாயா?"

"உங்களுக்கு ஒரு கனவு இருக்கும்போது எனக்கு இருக்கக் கூடாதா? உங்கள் கனவுகளுக்காக நீங்கள் காரியங்களைச் செய்யும் போது நான் செய்யக்கூடாதா?"

"செய்யலாம். அதற்கு இப்பணிப்பெண் கோலம் உதவும் என்பது உன் எண்ணமா?"

"கோலம் எதுவானால் என்ன கலைந்துதானே போகும்? ஆனால் மனதிற்குள் இருக்கும் கனவு அப்படியில்லை. அவ்வளவு எளிதில் அது கலையாது. அதை நிறைவேற்றிக் கொள்ள எந்த வேஷமும் போட நான் தயாராகி விட்டேன்"

"நீ இன்னும் மாறவில்லை என்பதையும் மாறாமல் இருக்க விரும்புகிறாய் என்பதையும் நினைத்தால் உன் மீது எனக்கு அனுதாபமாக இருக்கிறது"

"என்மீது அனுதாபப்பட நீங்கள் யார்? ஆசையை நிறைவேற்ற முன்வராதவர்களுக்கு அனுதாபப்படவும் உரிமையில்லை. நான் விரும்புவதை விரும்பாத உங்கள் அனுதாபம் எனக்குத் தேவையில்லை"

அவளது பேச்சைக்கேட்டு வறட்சியாகச் சிரித்த விஜயன் "உன் ஆசையை என்னால் ஏன் நிறைவேற்ற முடியவில்லை தெரியுமா? ஆசைப்படாமலிருக்க நான் ஆசைப்பட்டதுதான்" என்றான்.

அவனது பேச்சால் மேலும் வெறுப்படைந்த அவள் மேற்கொண்டு எதுவும் பேசாமல் விருட்டென்று அகன்றாள்.

தன் மீது கணவன் என்ற மரியாதையை அறவே அவள் அறுத்தெறிந்து விட்டதாகவே தோன்றியது விஜயனுக்கு. நிறைவேறாத கனவுகளுடன் ஏங்கும் இவளைப் போன்ற பெண்களுக்கு பேச்சுக்கள் எந்தவிதத்திலும் ஆதரவாகவோ ஆறுதலாகவோ இருக்காது என்பது அவனுக்குத் தெரிந்தது. தன்னைக் கணவனாக மதிக்க முடியாமலும் கணவனிடம் மனைவியாக வாழ விருப்பமில்லாமலும் தடுத்துவிட்ட அவளது ஆசைகளை எண்ணிப்பார்த்த அவனுக்கு பத்மினியின் நினைவு வந்தது. அவளுக்கும் ஓரளவிற்கு நியாயமான ஆசை இருக்கத் தான் செய்தது. ஆனால் அந்த நியாயமான ஆசைகளைக்கூட அவனது நல்வாழ்விற்காகத் தியாகம் செய்துவிட்டு எதுவும் இல்லாமலேயே அவனைக் கணவனாகக் கருதியவள் அவள். பத்மினியும் மாயாவும் ஒரே பெண்ணினமாக இருந்தாலும் குணங்களால் இரு துருவங்களாக இருந்ததை எண்ணிப் பெருமூச்செறிந்தான் விஜயன்.

மாயா தனது கனவுகளை நிறைவேற்றவே கப்பலுக்கு வந்ததாகக் கூறியது விஜயனைச் சிந்திக்க வைத்தது. அவளது கனவென்பது சுகபோக வாழ்க்கை, படாடோபம், அதிகாரம் ஆகியவற்றை உள்ளடக்கியது. அது எப்படி அவளுக்கு இக்கப்பலில் கிடைக்கும் என்பது அவனுக்கு விளங்கவில்லை. அவளால் தனிப்பட முயன்று வெற்றிபெறுவதற்கு வாய்ப்பில்லை. யாரையாவது துணைக்கு வைத்துக் கொண்டு தான் முயற்சிக்க வேண்டும். அந்த அளவிற்கு அவளது எல்லையற்ற கனவுகளை நிறைவேற்ற இக்கப்பலில் யார் இருக்க முடியும் என்பது அவனுக்குத் தெரியவில்லை. ஒரு வேளை நாகத்தீவுக்கு வந்தபின் ஏதாவது திட்டம் தீட்டுவாளா என்றும் யோசித்தான். உருப்படியான விடை எதுவும் கிடைக்கவில்லை.

அவளது பேச்சும் போக்கும் அவள் தனக்கு எதிரியாகி வருவதை உணர்த்துவதாக நினைத்த விஜயன் மோனோ காலனைக் கொன்றது ஒருவேளை இவளாக இருக்குமோ என்று சந்தேகித்தான். அதே சமயம் அவளைக் கொலைகாரியாகவும் கருதமனம் இடம் தரவில்லை. தற்போதைக்கு அவளுக்கு எதிரான எந்த நடவடிக்கையும் வேண்டாம் என்று அமைதியாக இருந்தான்.

அன்றிரவு கீழ்தளத்தின் அறையில் தன் மனம் கவர்ந்த மனிதனிடம் மாயா தன்னை விஜயனுக்கு அடையாளம் தெரிந்துவிட்டதைத் தெரிவித்தபோது "உன்னை யார் அவனது அறைக்கு உணவு கொண்டு போகச் சொன்னது?" என்று கேட்டான் அந்த மனிதன்.

"மரக்கலத்தலைவர் அறை என்று நினைத்துப்போய் விட்டேன்" என்றாள் மாயா.

"மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டியவர்கள் நாம். இதுபோல் கவனக்குறைவாகவும் கண்மூடித்தனமாகவும் நடந்து கொண்டால் அழிக்கப்படுவோம். ஜாக்கிரதை" என்று கூறிய அவன் "கடைசியில் என்னதான் சொன்னாய் அவனிடம்?" என்று கேட்டான்.

"சொல்வது என்ன? தீர்மானமாகவே கூறிவிட்டேன் அவருக்கும் எனக்கும் ஒட்டும் உறவும் இல்லை என்று. பணிப் பெண்ணாகவே இருந்து கொண்டு என் கனவுகளை நிறைவேற்றிக் கொள்வேன் என்று கூறிவிட்டு வந்து விட்டேன்"

"கனவுகளைப்பற்றிய பேச்சு எதற்கு? வீணான சந்தேகங்களை எழுப்பும். சரி போனது போகட்டும். உன்னை அடையாளம் கண்டு கொண்ட விஜயன் உன்மீது கண்காணிப்பை வைப்பான். ஆகவே நீ என்னைச் சந்திக்க வரும்போது எச்சரிக்கையாகவும் யாரும் பார்க்காத நேரமாகவும் பார்த்து வா. என்னை யாரென்று தெரிந்து விட்டால் ஆபத்தாகிவிடும்" என்று கூறிவிட்டு "பேச்சு போதும்" என்றான் உள்ளர்த்தத்துடன்.

"இன்று வேண்டாம். நாளை வைத்துக் கொள்ளலாம்" என்றாள் மாயா.

"நான் ஏற்கனவே கூறியிருக்கிறேன். நாம் இருக்கும் இடம் கடல். இங்கே நமக்கு விஜயனால் மட்டும் ஆபத்து வராது. கடல் மூலமாகவும் வரும். ஆகவே கிடைத்த வாய்ப்பை வீணாக்காதே அதுவும் இந்த விஷயத்தில் மறு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து கிடைத்த சந்தர்ப்பத்தை விடவே கூடாது"

அவளும் அப்படித்தான் நினைத்தாள். கனவுகள் உடனடியாக நிறைவேறாது என்றாலும் உடனடியாக காமம்

நிறைவேறக்கூடியதாக இருந்ததால் அவன் கருத்தை ஆமோதித்து அவனோடு இழைந்தாள்.

காமுகனும் காமுகியும் கருத்தொருமித்து கலந்தார்களாதலால் காம இன்பம் கடலாகப் பெருகியது.

காம அலைகள் ஓய்ந்தபோது ''கர்ணபத்ர பங்கம் இருந்த பெட்டிகளைத்தேடி எடுத்து விட்டார்களாமே? அவை இப்போது விஜயனின் அறையில் இருக்கிறதாமே?'' என்று கேட்டாள் மாயா.

''இருக்க வேண்டிய இடத்தில் தான் இருக்கின்றன. நல்லது தான்'' என்றான் அந்த மனிதன்.

இரண்டு நாட்கள் அமைதியாகச் சென்றன.

மூன்றாவது நாள் விஜயனின் இருப்பிடத்திற்கு பணியாள் ஒருவனின் துணையோடு வந்தார் அசுவத்தாமர்.

அவர் கூறிய செய்திகள் விஜயனுக்கு வியப்பை அளித்தன.

◈◈◈

## அத்தியாயம் இருபத்துமூன்று

# சந்தேகமும் தெளிவும்

மாயாவிடம் பேசியபிறகு ஏதேதோ சிந்தனை வயப்பட்டாலும் அது விஷயமாக யாரிடமும் பேச விஜயன் விரும்பவில்லை. அவள் மீது எந்த நடவடிக்கையையும் எடுக்கத் துணியவில்லை. அவளது போக்கைத் தனக்குள்ளேயே ஜீரணித்துக் கொண்டான். இரண்டு நாட்கள் அமைதியாகக் கழிந்தன. இந்த நிலையில் அசுவத்தாமரை பணியாள் ஒருவன் விஜயனிடம் அழைத்து வந்தான்.

அவரை அமரச்சொன்ன விஜயன் ''என்ன பெரியவரே எங்கே இவ்வளவு தூரம்? ஏதாவது விசேஷமா?'' என்று கேட்டான்.

''ஆம் இளவரசே. உதயணன் என்னிடம் நமது கப்பலில் உள்ளவர்களின் எண்ணிக்கை மற்றும் உணவுப் பொருட்களின்

சேமிப்பு ஆகியவற்றை தினமும் கொடுத்து வருகிறார். கடந்த பத்து நாட்களாக உணவுப் பொருள் சேமிப்பு அதிகமாகக் குறைகிறது'' என்றார் முதியவர்.

''சற்று விளங்கும்படிச் சொல்லுங்கள் ஐயா''

''இளவரசே, மரக்கலத்தைப் பொறுத்தவரை உணவு வழங்குவதென்பது பாரபட்சமற்ற முறையில் இருந்து வருகிறது. நிலத்தில் இருக்கும்போது கண்டபடி உண்பது போல கடலில் இருக்கும்போது உண்டால் உணவு பற்றாக் குறையும் பஞ்சமும் உண்டாகி பட்டினி கிடக்க வேண்டிய நிலை வந்துவிடும். ஆகவேதான் இங்கே மரக்கலத் தலைவர் முதல் மாலுமி வரை ஒரே அளவான உணவு தான் வழங்கப்பட்டு வருகிறது. இளவரசரான தங்களுக்குக் கூட அதிகம் வழங்கப்படுவ தில்லை. அப்படி இருக்கும் போது கடந்த பத்து நாட்களாக உணவுப் பொருள் இருப்பிலிருந்து அதிகமாகக் குறைகிற தென்றால் கட்டுப்பாட்டை மீறி யாரோ சிலருக்கு அதிகமாக உணவு வழங்கப்படுகிறது என்றாகிறது. இதற்கு காரணம் வேண்டு மல்லவா?''

''சராசரியாக தினமும் அதிகப்படும் அளவு எவ்வளவு இருக்கும்?''

''ஐந்து பேருக்கு கூடுதலாக வழங்கும் அளவிற்கு இருக்கும்''

''உணவுப் பொருட்களை எடுத்து எல்லோருக்கும் வழங்குவது யார்?''

''பணியாட்கள் தான்''

''அதிகமாக விரயமாகும் உணவுப்பொருள் எது?''

''பதப்படுத்தப்பட்ட - நீண்ட நாட்கள் கெடாமல் இருக்கக் கூடிய உணவு வகைகள் தான்''

''இதைக் கவனிக்காமல் விட்டால் என்ன ஆகும்?''

''அதிகமாக விரயமாவது மேலும் அதிகமாகும். விரைவிலேயே பற்றாக்குறை வரும்''

''இந்த உணவுக் கட்டுப்பாடு விஷயம் கப்பலில் உள்ள அனைவருக்கும் தெரியுமல்லவா?''

''தெரியும்''

''பணியாட்களுக்கு?''

''தெரியும்?''

''பிறகு எப்படி அதிகமாகச் செலவிடுகிறார்கள்?''

''தெரியவில்லை ஐயா''

''சற்று யோசித்த விஜயன்'' நல்லது அசுவத்தாமரே. இதை நான் கவனிக்கிறேன். வேறு விஷயம் உண்டா?'' என்று கேட்டான்.

''மிகவும் முக்கியமான விஷயம் ஐயா. நான் கடல் பயணம் செய்ததில்லை என்றாலும் என் புலன்களுக்கு இருக்கும் கூடுதல் சக்தியால் பல விஷயங்களை பார்க்க முடியாவிட்டாலும் உணர்ந்து தெரிந்து கொள்கிறேன். காற்று வீசும் முறை, அதன் வேகம், மாற்றங்கள் ஆகியவற்றையும் சில அதிர்வுகளையும் உணரும்போது இந்தத் தீவுக்கப்பல் இருநாட்களுக்கு முன்பு வரை நாகதீபத்தை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது. இப்போது வேறு பாதையில் செல்வதாகத் தோன்றுகிறது''

இதைக் கேட்பதற்கு வியப்பாக இருந்தது விஜயனுக்கு. பார்வையற்றவர் இப்படியொரு மாற்றத்தைக் கூறியதை அவனால் நம்பமுடியவில்லை.

எனவே-

''நீங்கள் கூறுவதை என்னால் நம்பமுடியவில்லை பெரியவரே. மரக்கலத் தலைவனான பாரடைஸ் அனுபவம் வாய்ந்த கடலோடி. அவன் இதுபோன்ற தவறுகளைச் செய்ய மாட்டான்''

''பாரடைஸைப் பற்றி நான் சொல்லவில்லை இளவரசே. கப்பலைப் பற்றிக் கூறுகிறேன். சந்தேகமிருந்தால் டெமிரிட்ரியஸை வங்கக் கப்பலிலிருந்து வரவழையுங்கள்''

விஜயன் உபதலைவன் ஒருவனை அழைத்து அவனை வங்கக் கப்பலுக்குச் செல்லும்படியும், அங்கே இருக்கும் டெமிட்ரியஸை தீவுக்கப்பலுக்கு வரும்படியும் கட்டளையிட்டான்.

சிறிது நேரத்தில் தீவுக்கப்பலுக்கு வந்த டெமிட்ரியஸ் அசுவத்தாமர் கூறிய விவரங்களைக் கேட்டுவிட்டு வானத்தைப் பார்த்தான். ''எப்படி இந்த விஷயத்தை கவனிக்காமல் விட்டோம்?'' என்று வியப்படைந்து உபதலைவன் ஒருவனிடம் எதையோ கொண்டுவரச்செய்து அதன்மூலம் விஷயத்தை ஊர்ஜிதம் செய்து கொண்ட பின் ''அசுவத்தாமர் கூறுவது உண்மைதான் இளவரசே'' என்றான்.

''எதற்காக கப்பல் வழிமாற வேண்டும்?'' என்று கேட்டான் விஜயன்.

''பாரடைஸைத்தான் கேட்கவேண்டும்''

பாரடைஸ் வரவழைக்கப்பட்டான்.

அவனிடம் ''பாரடைஸ், நம் கப்பல் நாக தீபத்துக்குத் தானே செல்கிறது?'' என்று கேட்டான் விஜயன்.

''இதென்ன திடீர் சந்தேகம்?'' என்று கேட்டான் மரக்கலத் தலைவனான பாரடைஸ்.

''இதோ - இந்த இருவரும் நம் கப்பல் பாதை மாறிச் செல்வதாகச் சொல்கிறார்கள்'' என்றான் விஜயன்.

பாரடைஸ் டெமிட்ரியஸ் பக்கம் திரும்பி ''உங்களுக்கு கடல் பயணத்தில் அனுபவம் ரொம்பவும் அதிகமோ?'' என்று கேட்டான்.

''போதுமான அளவிற்கு இருக்கிறது'' என்றான் டெமிட்ரியஸ்.

''எதை வைத்துக்கொண்டு கப்பல் பாதை மாறி விட்டதாகச் சொல்கிறீர்கள்?'' கேட்டான் பாரடைஸ்.

''தீவுக்கப்பல் புறப்பட்ட இடத்திலிருந்து தென் மேற்கே இருக்கிறது நாகதீபம்''

''ஆமாம்''

''ஆனால் கப்பல் தென்கிழக்கில் செல்கிறது?''

''என்ன ஆதாரம்?''

''வானத்தைப் பாருங்கள். வடக்கே இருப்பது துருவ நட்சத்திரம். இதர நட்சத்திரங்களைவிட பெரிதாக இருக்கிறது. அதுதான் கப்பல்களுக்கு வழிகாட்டி''

''அதற்கென்ன?''

''கப்பல் நாக தீபத்தை நோக்கி அதாவது தென்மேற்கில் போனால் இக்கப்பலுக்கு வடமேற்கு பக்கத்தில் துருவ நட்சத்திரம் இருக்கும். ஆனால் வட கிழக்கில் இருக்கிறது. கப்பல் தென்கிழக்கில் போகும்போது தான் இது சாத்தியம்'' அதுமட்டுமல்ல''

''வேறென்ன?''

''இக்கருவியைப் பாரும். இதன் பெயர் மத்ஸய யந்திரம். திசைகாட்டும் கருவி. இதன் காந்தமுள் வடதிசையைத்தான் காட்டும். துருவ நட்சத்திரமும் எப்போதும் வடதிசையில்தான் இருக்கும். காந்தமுள் வடக்கைக் காட்டுகிறது. துருவ நட்சத்திரமோ வடகிழக்கில் தெரிகிறது. இதைவிட வேறு ஆதாரம் வேண்டுமா?''

டெமிட்ரியஸின் பேச்சைக்கேட்டு நகைத்தான் பாரடைஸ்.

''உங்களுக்குகெல்லாம் நட்சத்திரங்களைப் பற்றித் தெரிந்திருக்கிறது கடலைப்பற்றித் தெரியவில்லை. அதோடு நீங்கள் காட்டும் கருவியை எப்போதும் நம்ப முடியாது. துருவப் பகுதியில் போகும்போது ஈர்ப்பு சக்தியின் காரணமாக காந்தமுள் தெற்கு திசையைக் காட்டும். ஆகவே கடல் பயணத்தில் கடல் தான் முக்கியம். கடலில் நீரோட்டங்கள் உள்ளன. அவை பகுதிக்குப் பகுதி மாறுபடும். நாமிருக்கும் இக்கடல் பகுதியில் எந்த மாதிரி நீரோட்டம் இருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியுமா? கப்பலை தென்மேற்கில் செலுத்தினால் நீரோட்டம் தடையாக அமைந்து கப்பலை நிலைகுலையச் செய்துவிடும். இங்கேயிருந்து தென்கிழக்காகச் சென்று அரைவட்டமடித்து நாகதீபத்தை அடைவதுதான் சிறந்தது. அதுதான் நீரோட்டத்தை ஒட்டி கப்பல்களை பத்திரமாக இயக்கும்முறை. அதைத்தான் நான் செய்கிறேன். இதையெல்லாம் கப்பலில் இருப்பவர்களுக்கு நான் சொல்லிக் கொண்டிருக்க வேண்டுமா?

எத்தனைமுறை இக்கடலில் நான் சென்றிருப்பேன்? எனக்குத் தெரியாதது உங்களுக்கு தெரிந்துவிட்டதா?''

பாரடைஸ் இப்படி விளக்கமாகக் கூறியபோது யாரும் பதில் பேசவில்லை.

அவன் மீண்டும் பேச முற்பட்டபோது ''போதும் பாரடைஸ், சந்தேகங்கள் வரும்போது அவை தீர்க்கப்பட வேண்டும். அவர்களுக்கு வந்தது. நீ தீர்த்துவிட்டாய். அதோடு விஷயம் முடிந்தது'' என்றான் விஜயன்.

''என்மீது நம்பிக்கை இல்லை என்றால் டெமிட்ரியஸே மரக்கலத்தலைவனாக இருக்கட்டும். எனக்கொன்றும் ஆட்சேபணை இல்லை'' என்றான் பாரடைஸ்.

''இது அர்த்தமற்ற பேச்சு பாரடைஸ். என்மீது சந்தேகம் வந்தாலும் அதைத் தீர்க்கக் கடமைப்பட்டவன் நான். எல்லோருமே சந்தேகத்திற்கு உட்பட்டவர்கள் தான். முதலில் நீ தீவில் இறங்கி காழகத்திற்குப்போய் விடுவதாகச் சொன்னாய். நான் வேண்டாம் என்று கேட்டுக் கொண்டேன் என்றால் அதற்குக் காரணம் உன்மீது நான் வைத்த நம்பிக்கை தான். பிறகு நீயாகவே காழகத்திற்கு போகாமல் தொடர்ந்து மரக்கலத்தலைவனாக இருப்பதாகச் சொன்னாய். அதை ஏற்றுக் கொண்டேன் என்றால் அதற்குக் காரணமும் நம்பிக்கைதான். இப்படி உன்மீது நம்பிக்கை வைக்கும்போது அங்கீகரித்துவிட்டு சந்தேகப்படும்போது மட்டும் கோபப்படுவது என்ன நியாயம்? சந்தேகங்கள் தீர்க்கப்படுவது தெளிவடைவதற்காகத்தானே தவிர சண்டைக்காரர்களாக மாறுவதற்காக அல்ல'' என்று கூறி பாரடைஸை அனுப்பிவைத்த விஜயன் டெமிட்ரியஸிடம் ''நீ இங்கேயே இரு. வங்கக் கப்பலுக்குப் போக வேண்டாம். அதை உபதலைவனே இயக்கட்டும்'' என்றான்.

பிறகு தன் நண்பன் உதயணனை அழைத்து உணவுப் பொருள் குறித்து அசுவத்தாமர் கூறியவற்றை தெரிவித்த விஜயன் ''இதை அற்ப விஷயமாக எண்ணி விட்டுவிடக்கூடாது உதயணா. இந்த விவகாரத்தால் பற்றாக்குறை ஏற்படுவது ஒருபுறம் இருந்தாலும் பத்து நாட்களாக அதிகமான உணவை யார் உட்கொள்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ள

வேண்டியது அவசியம். கட்டுப்பாட்டு விதிகளுக்கு மாறாக அப்படி அதிகமாக உண்கிறார்கள் என்றால் அதற்கு உண்பது மட்டுமே காரணமாக இருக்க முடியாது. அவர்கள் நமக்குச் சவால் விடுகிறார்கள். அவர்கள் ஒருவரா அல்லது பலரா என்பது தெரியாது. யாராக இருந்தாலும் அவர்கள் நமக்கு எதிரானவர்கள். அவர்களைக் கண்டுபிடிக்க வேண்டும்'' என்றான்.

''அவர்களைக் கண்டுபிடிக்க வேண்டும் என்றால் கண்காணித்தால்தான் முடியும். உணவுகொண்டு செல்லும் பணியாளர்களை ரகசியமாகக் கண்காணிக்கலாம்'' என்றான் உதயணன்.

''அதுமுடியாது உதயணா, கப்பலில் எழுநூறு பேர் இருக்கிறார்கள். அவர்கள் அனைவரையும் உண்ணும்போது கண்காணிக்க முடியாது அதற்கு பதிலாக உணவை எடுத்து அவரவர்களுக்கும் விநியோகிப்பதை தற்போது இங்கே இருக்கும் பணியாட்கள் செய்து வருகிறார்கள். அவர்களை அப்பணியிலிருந்து நிறுத்திவிட்டு நமது நண்பர்கள் அப்பணியை மேற்கொள்ளட்டும். இதனால் அதிக உணவு செல்வது நிறுத்தப்படும். அதைக்கண்டு யார் யார் நிர்பந்திக்கிறார்கள் என்பதை அறியலாம் அல்லவா?''

''நான் அப்படி நினைக்கவில்லை. உங்கள் நடவடிக்கையைக் கண்டதும் நீங்கள் விழித்துக் கொண்டீர்கள் என்பதை உணர்ந்து அமைதியாகி விடுவார்கள். எதிர்ப்பைக் காட்டினால் ஆபத்தாகிவிடும் என்பது அவர்களுக்குத் தெரியாதா?''

''அதுவும் நல்லதுதான் உதயணா இருந்தாலும் உணவுப் பொருள் விரயமாவது தடுக்கப்பட்டு கட்டுப்பாடு வந்துவிடும் இல்லையா?''

''அப்படியானால் குற்றம் புரிகிறவர்களைக் கண்டுபிடிக்கும் எண்ணம் உங்களுக்கு இல்லையா?''

''சந்தேகங்கள் இருக்கின்றன உதயணா, அவற்றைக் கொண்டு குற்றவாளி என்று முடிவு செய்துவிட முடியாது.

அதற்கு வலுவான ஆதாரங்கள் தேவை. யாரும் தப்பிச் சென்றுவிட நான் விரும்பமாட்டேன். முதலில் உணவு விஷயத்தைக் கவனி. முடிவைப் பிறகு பார்ப்போம்''

விஜயனுக்கு மோனோகாலன் கொலையுண்டபோது தனக்கு ஒரு எதிரி உருவாகியிருக்கிறான் என்று புரிந்துகொள்ள முடிந்தது. மாயாவை அடையாளம் கண்டதும் அந்த எண்ணம் உறுதியாயிற்று. தற்போது உணவுப் பிரச்சினை வெளிப்பட்ட போது அதற்கு மாயா காரணமாக இருக்குமோ என்ற சந்தேகம் உண்டாயிற்று. எதிரிக்கு இவள் மூலமாக உணவுப் பொருட்கள் அதிகமாகச் செல்கிறதோ என்று நினைத்தான். அது உண்மையானால் தனது எதிரிக்கு மாயா வேண்டியவளா? அவளுக்கு வேண்டியவர்கள் வேறு யாராவது இருப்பார்களா? அவர்கள் அவளது கனவுகளை நிறைவேற்றுவதாக ஆசை காட்டியிருப்பார்களா? அவர்களுக்காக இவளும் சதிசெய் கிறாளா? இவளைப் பிடித்து விசாரிக்க வேண்டிய விதத்தில் விசாரித்தால் ஒருவேளை உண்மை தெரியலாம். ஆனால் எப்படி விசாரிப்பது? அவள் தன் மனைவி என்பது தோழர்கள் அனைவருக்கும் தெரியுமே! அவர்கள் முன்னால் எப்படி அவளைச் சித்திரவதை செய்யமுடியும்? என்றெல்லாம் யோசித்த விஜயன் சற்று நிதானித்தான்.

உணவு விவகாரம் உதயணன் கூறியது போல்தான் முடிந்தது. உணவு வழங்கும் வேலையை விஜயனின் தோழர்கள் மேற்கொண்டதால் அதிகப்படியாக வழங்கும் பழக்கம் நின்றது. யாரும் அதற்காக எதிர்ப்பு தெரிவிக்கவில்லை.

நான்கு நாட்கள் அமைதியாகக் கழிந்த நிலையில் ஒரு நாள் இரவு மோனோகாலன் கொலையுண்ட இடத்தில் சாய்ந்தபடி அமர்ந்திருந்த அசுவத்தாமர் எழுத்தாணி ஒன்றை வைத்துக் கொண்டு பக்கப் பலகையில் ஏதோ எழுத ஆரம்பித்தபோது அருகில் ஒரு சத்தம் கேட்டது. யாரோ அவரை நோக்கி மெதுவாக வருவதை உணர்ந்த அவர் காதுகளைத் தீட்டிக் கொண்டார். அவரது நாசியும் உன்னிப்பாக நுகர்ந்தது. விரைவிலேயே அவரது அருகாமையில் யாரோ வந்து விட்டதை உணர்ந்து அவர் ''நில்! யார் நீ?'' என்றார்.

''நான் யாரா? அதைச் சொல்ல நானிங்கு வரவில்லை'' என்றது அந்த உருவம்.

''எனக்குத் தெரியும். ஏற்கனவே நீ இங்கு வந்திருக்கிறாய்'' என்றார் முதியவர்.

''என்ன உளறுகிறாய்?''

''உளறும் வழக்கம் எனக்குக் கிடையாது. நீ இங்கே வந்திருக்கிறாய். அதுவும் மோனோகாலன் கொலையுண்ட சமயத்தில்...''

முதியவர் பேசி முடிப்பதற்குள் அந்த உருவம் அவரது மண்டையில் உருள் கட்டையால் ஓங்கி அடித்துவிட்டு ஓடியது.

முதியவர் சாய்ந்தார்.

★★★

மரக்கலத்தின் கீழ்தளத்து அறையில் படுத்துக்கிடந்த மாயாவைக் கண்ட அந்த மனிதன் ''என்ன யோசனை மாயா? ரொம்ப நேரமாக அசையாமல் இருக்கிறாய்?'' என்று கேட்டு அவளை ஏதோ ஓரிடத்தில் கிள்ளவே துள்ளிய அவள் ''இதென்ன இங்கெல்லாம் கிள்ளுகிறீர்கள்?'' என்று கேட்டபடி புரண்டாள்.

''பிறகென்ன? இதென்ன மடமா அல்லது யோசிக்கும் இடமா? அதுமட்டுமல்ல''

''வேறென்ன?''

''நான் கிள்ளிய இடத்தில் உன் அதிஷ்டமச்சம் இருக்கிறது''

''சீ! இதென்ன வெட்கம் கெட்டப்பேச்சு?''

''நமக்குள் வெட்கம் எதற்கு? வெட்கம் இருந்தால் நாம்இப்படிப் பழகமுடியுமா?''

''சரி சரி''

''மாயா, நான் சொன்னேனே அந்த மச்சம் உள்ளபடியே அதிஷ்டம் வாய்ந்தது. உன் கனவுகளை நிறைவேற்றக் கூடியது''

அவள் இதைக் கேட்டுச் சிரித்தாள்.

''ஏன் சிரிக்கிறாய்?''

''எனக்கு அதிஷ்டம் இருந்தால் இங்கே ஏன் இருக்கிறேன்?''

''தப்பு மாயா. அதிஷ்டம் இருப்பதால்தான் என்னிடம் வந்தாய். விஜயனிடம் இருந்திருந்தால் நீ அழிந்திருப்பாய்''

''இப்போது மட்டும் என்ன?''

''என்ன இப்போது?''

''சாதாரண உணவு விஷயம். நாம் இருவரும் கொஞ்சம் அதிகமாக சாப்பிட நினைத்தோம். பத்தே நாட்களில் அடிவாங்கிவிட்டது''

''அந்தக் குருட்டுக் கிழவன் கெடுத்தான்''

''அந்தக் குருடனுக்கு இருக்கும் திறமை உங்களிடம் இல்லையே''

''எதைச் சொல்கிறாய்?''

''நம் மரக்கலம் பாதை மாறிவிட்டதை ஒரு குருட்டுக் கிழவன் அறிந்து கொண்டது எதைக்காட்டுகிறது?''

''மாயா, அவன் அறிந்து கொண்டது அதுமட்டுமல்ல. மோனோ காலனைக் கொன்றது நான்தான் என்பதும் தெரிந்துவிட்டது''

''அதெப்படி? அவனால் பார்க்க முடியாதே?''

''உண்மைதான். ஆனால் மிகச்சரியாக என்னிடமே சொல்லிவிட்டான்''

''ஐயோ! விஜயனிடம் சொல்லிவிட்டால்?''

''சொல்லமாட்டான்''

''அதைச் சொல்ல வேண்டுமானால் நான் கேட்டதை நீ தரவேண்டும்''

''தந்து கொண்டுதானே இருக்கிறேன்''

''அரைகுறையாக இருக்கிறது''

''வேறென்ன வேண்டும்?''

''அந்தத் தீவில் - அருவிப் பாறையில் - அருவி நீரில் - பூரண நிலவொளியில் நாம் இருந்த நிலையை மறந்து விட்டாயா?''

''ஐயா, இது என்ன விபரீதம்? இது தீவு அல்ல. தீவுக்கப்பல். இங்கே அருவி இல்லை. நீரும் இல்லை. பாறையும் இல்லை. தனிமையும் இல்லை...''

''இரு இரு. எது இல்லை என்றாலும் நீ இருக்கிறாய் இல்லையா? அது போதாதா?''

''நீங்கள் ரொம்ப மோசம்''

''அதிருக்கட்டும். சீக்கிரமாகத் தொடங்கு''

மாயாவும் அவனது நினைவுகளுக்கும் கற்பனைகளுக்கும் சிறிதும் குறைந்தவள் அல்ல. எனவே உடனடியாக அதற்கு உடன்பட்டதால் மரக்கல அறை தீவானது. மரக்கட்டில் பாறையானது. பந்தம் நிலவானது. எண்ணங்களே அருவியாகவும் நீராகவும் இருந்ததால் காமக் கள்ளர்கள் இருவரும் கள்ளுண்ட நிலையை அடைந்து கள்ளக் காம வெள்ளத்தில் முங்கி முங்கி எழுந்தார்கள்.

அச்சமயத்தில் அறைக்கதவு தட்டப்பட்டது.

இருவரும் திகைத்தார்கள்.

◈◈◈

## அத்தியாயம் இருபத்து நான்கு

# விபரீதமும் விளைவும்

இன்பசாகரத்தில் மூழ்கி திளைத்துக்கொண்டிருந்த நிலையில் அறையின் கதவு தட்டப்பட்டதால் பெரும் திகைப்புக்கு ஆளான மனிதனும் மாயாவும் அவசரம் அவசரமாகப் பிரிந்து கலைத்துப் போடப்பட்ட ஆடைகளை அணிந்து கொண்டு சற்றே எத்தனித்தபோது இரண்டாவது முறையாக கதவு தட்டப்பட்டது.

''நமது ரகசியம் தெரிந்திருக்குமோ? விஜயன்தான் வந்து கதவைத் தட்டுகிறாரா?'' என்று பீதியுடன் கேட்டாள் மாயா.

''இருக்காது அவனாக இருந்தால் கதவைத் தட்டமாட்டான். உடைத்துக்கொண்டு உள்ளே வருவான். அநேகமாக மாலுமியாக இருக்கும். பணம் கொடுத்து பழக்கமாகி விட்டதல்லவா? அதனால்தான் உரிமையோடு அகாலத்தில் வந்து தட்டுகிறான். எதற்கும் பந்தத்தை அணைத்துவிடு. நீ கட்டிலில் படுத்துக் கொண்டு தூங்குவதுபோல் பாவனை செய்'' என்றான் அந்த மனிதன்.

அவன் சொன்னதுபோல் மாயா நடந்து கொண்டதும் கோபம் கொண்டவனைப்போல் பாவனை செய்து கொண்ட அந்தமனிதன் ''யாரது?'' என்று முரட்டுக் குரலில் கேட்டபடி கதவைத் திறந்தான்.

வெளியே நின்றிருந்தவனை அவன் சிறிதும் எதிர்பார்க்க வில்லை.

''நீயா? நீ எப்படி இங்கு வந்தாய்! நீ இன்னும் சாகவில்லையா?'' என்று கேட்டான் அந்த மனிதன்.

''இல்லை. சாகவில்லை. மோனோகாலனைக் கொன்ற போது உன் உடல் வாசனையைப் பிடித்துக் கொண்டிருந்த நான் இன்று நீ என்னைத் தாக்கிவிட்டு வந்தபின் அதே வாசனையை மோப்பம் பிடித்து இங்கே வந்தேன். என் கணக்குத் தப்பவில்லை'' என்றார் அசுவத்தாமர்.

''கிழமே, இந்த வயதில் உனக்கேன் இந்த வேலை? எங்காவது தூங்கிக் கொண்டிருக்க வேண்டியதுதானே?''

''தூங்குவேன். கொலைகாரனான உன்னைக் காட்டிக் கொடுத்துவிட்டு நிரந்தரமாகத் தூங்குவேன்''

''கண்ணில்லாத நீ எப்படிக் காட்டிக் கொடுப்பாய்?'' என்று அவன் கேட்டபோது கட்டிலிலிருந்து மாயா எழுந்து கொள்ளவே ''உள்ளே உன்னோடு இருப்பது யார்? யார் அந்தப் பெண்?'' என்று கேட்டார் முதியவர்.

''யார் என்று சொல்லட்டுமா? அவள்தான் மாயா. விஜயனின் மனைவி. இப்போது என் காதலி. நான் யார் தெரியுமா?'' என்று கூறி தன்னை யார் என்று கூறினான் அந்த மனிதன்.

''அடப்பாவிகளே! நீங்களா துரோகம் செய்கிறீர்கள்? நீங்கள் அழிவீர்கள். நானே அழிக்கிறேன்'' என்று கூறியபடி இடுப்பில் கையை வைத்தார் முதியவர்.

அவரது நோக்கத்தைத் தெரிந்து கொண்ட மனிதன் அவருக்கு அவகாசம் கொடுக்காமல் பாய்ந்து சென்று அவரது கழுத்தைப் பிடித்து குரல் வளையை அழுத்தினான். பார்வையற்ற பெரியவரின் கண்கள் பிதுங்கியதும் அவரைத் தூக்கித் தோளில் போட்டுக் கொண்ட அவன் அவரது இருப்பிடத்திற்குப்போய் அங்கே கிடத்திவிட்டு அறைக்கு மீண்டான்.

சிலநிமிடங்கள் கழிந்த நிலையில் முதியவரின் கண்கள் லேசாகத் திறந்தன. மரணத்தை நோக்கிதான் விரைவாகப் போய்க் கொண்டிருப்பது அவருக்குத் தெரிந்தது. 'மிகவும் சிரமப்பட்டு அருகே இருந்த எழுத்தாணியை எடுத்து மரக்கலத் தளத்திலேயே சில வாக்கியங்களைக் கீறி எழுதினார். முடிப்பதற்குள் மூச்சு நின்றது. எழுத்தாணி உருண்டு போய் எங்கோ விழுந்தது.

மறுநாள் அவரது கொலை மிகுந்த பரபரப்பை உண்டாக்கியது. இந்தமுறை பலரும் விஜயனிடம் முறையிட்டு இதுபோல மரக்கலத்தில் கொலைகள் நடைபெறுவதும் அது கண்டுபிடிக்க முடியாமல் காலம் கடத்துவதும் நல்லதல்ல என்றும் கொலையாளியைக் கண்டுபிடிப்பதில் இனியும் தாமதம் கூடாது என்றும் வலியுறுத்தினார்கள். பணியாட்கள் தங்கள் அச்சத்தை தெரிவித்தார்கள். அப்படி அச்சத்தை தெரிவிக்க வந்த பணியாட்களில் மாயாவும் இருந்ததைக் கவனித்தான் விஜயன். எல்லோரையும் சமாதானப்படுத்தி அனுப்பினான். அப்போது அவனுடன் இருந்தவர்கள் அசுவநாவிகரும் டெமிட்ரியஸும் தான்.

''இளவரசே, சதுர்வேதியும் சிமேரியும் தீவிலிருந்து காழகம் போய்விட்டதால் தப்பினார்கள்'' என்று ஏதோ சூசகமாகச் சொன்னான் டெமிட்ரியஸ்.

''கொலையுண்ட இருவருமே எங்களைச் சேர்ந்தவர்கள். கொலையாளிக்கு மற்றவர்கள் யாரும் கண்ணுக்குத் தெரியவில்லை'' என்றார் அசுவநாவிகர்.

''கொலையாளி என்னைக் கொன்றிருந்தால் உங்களுக்குச் சந்தோஷமாக இருந்திருக்குமா?'' என்று கேட்டான் விஜயன்.

''நான் அப்படிச் சொல்லவில்லை'' - என்று அசுவநாவிகர் கூறியபோது ''வேறு எப்படிச் சொல்கிறீர்கள்? ஏதோ நான் தான் கொலையாளியிடம் இன்னாரையெல்லாம் அடுத்தடுத்து கொல்லச் சொன்ன மாதிரி அல்லவா இருக்கிறது உங்கள் பேச்சு? கொலைகளுக்கும் கொலையாளிக்கும் உள்ள உள்நோக்கம் உங்களுக்குப் புரியவில்லையா? ஆரம்பத்தில் தன்னைப் பற்றி அறிவிப்பதற்காகவும் பயமுறுத்துவதற்காகவும் யாரையாவது கொல்ல நினைத்த அவன் ஒற்றைக் காலோடு திரிந்து கொண்டிருந்த மோனோகாலனின் திறமைகளைக் கண்டிருக்கிறான். அவனது திறமையை எல்லோரும் புகழ்வதையும் பார்த்திருக்கிறான். எல்லோருக்கும் அதிர்ச்சியாக இருக்கட்டும் என்று ஒற்றைக் காலனைக் கொன்றிருக்கிறான். அடுத்த கொலைக்கு அவன் ஆளைத் தேடும்முன் அசுவத்தாமரே தன்னை அடையாளம் காட்டிக் கொண்டார். மோனோகாலனைக் கொன்றவனைக் கண்டுபிடிப்பேன் என்ற வைராக்கியத்துடன் கொலை நடந்த இடத்திலேயே படுத்துக் கிடந்தது கொலையாளிக்கு எரிச்சலை உண்டாக்கியிருக்கிறது. பிறகு அவரது விவரங்களால் உணவு அதிகமாக வழங்குவது தடுக்கப்பட்டது. அதோடு மரக்கலம் திசைமாறியது குறித்துச் சொன்னவரும் அசுவத்தாமர்தான். இவைகளுக்கும் கொலையாளிக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்க வேண்டும். குருடராக இருந்தாலும் தொல்லையாக இருக்கிறார் என்பதை உணர்ந்து கொண்ட கொலையாளி அவர் உயிரோடு இருப்பது ஆபத்து என்று தீர்த்துக் கட்டிவிட்டான். இதுதான் நடந்திருக்கிறது. இதில் உங்களைச் சேர்ந்தவர்களை மட்டும்

தேர்ந்தெடுத்து கொல்லப்படுவதாக எப்படி நினைக்கிறீர்கள்? உங்கள் கோஷ்டியில் எஞ்சியிருப்பது நீங்கள்தான் என்பதால் கொலைசெய்யக் கூடும் என்று இருவரும் பயப்படுகிறீர்களா?'' என்று கேட்டான் விஜயன்.

''அச்சத்தைப் பற்றிய விஷயம் இல்லை இளவரசே. சதுர்வேதியிடம் இருந்தபோது பல ஆபத்துகளை நாங்கள் சந்தித்திருக்கிறோம். உயிருக்கு உத்திரவாதமில்லாத சந்தர்ப் பங்களைக் கண்டிருக்கிறோம். ஆகவே உயிரைப் பற்றியோ சாவதைப் பற்றியோ நாங்கள் கவலைப்படவில்லை. அடுத்ததாக நாங்கள் இருவரும்கூட கொலை செய்யப்பட்டால் எங்களுக்கு அது மகிழ்ச்சிதான்'' என்றான் டெமிட்ரியஸ்.

''கொலையாவதற்கு மகிழ்ச்சி தெரிவிப்பது அறிவீனம் டெமிட்ரியஸ். இங்கே யார் கொலையுண்டாலும் நான் கவலைப்படுவேன். எல்லோரும் எனக்கு முக்கியம். எல்லோரும் எனக்கு வேண்டும். நீங்கள் இருவரும் சுற்றி வளைத்துப் பேசாமல் நேரடியாக கேட்க விரும்பியதைக் கேளுங்கள்'' என்றான் விஜயன்.

''கொலையாளி கண்டுபிடிக்கப்படாமல் இருப்பதுதான் எங்கள் கவலை. மோனோகாலனைக் கொன்றவனைக் கண்டுபிடித்திருந்தால் அசுவத்தாமர் கொலைப்பட்டிருக்க மட்டார்'' என்றார் அசுவநாவிகர்.

''சரி. நான் இளவரசன் என்பதாலும் மரக்கலத்திற்குச் சொந்தக்காரன் என்பதாலும் என்னிடம் இந்தக் கேள்வியைக் கேட்கிறீர்கள். இந்தப் பட்டங்களை எடுத்துவிட்டால் உங்களுக்கும் எனக்கும் எந்த வித்தியாசமும் இல்லை. இப்போது என் பதவியை உங்களுக்குக் கொடுக்கிறேன். கொலையாளியை கண்டுபிடித்துச் சொல்லுங்கள். இரண்டு நாட்களுக்கு இந்தப் பதவி உங்களுக்கு. மூன்றாவது நாள் உங்கள் பதிலைச் சொல்லுங்கள். கொலையாளியைக் கண்டுபிடித்து விட்டால் இத்தீவுக் கப்பல் உங்களுக்குச் சொந்தம்'' என்றான் விஜயன்.

இதைக் கேட்டதும் இருவருக்குமே ஒரு மாதிரியாகி விட்டது. கிணற்றைத் தோண்டப்போய் பூதம் கிளம்பிய

கதையாக தங்களது நிலை ஆகிவிட்டதாகக் கருதிய அவர்கள் பேச முற்பட்டபோது ''பேச்சு வேண்டியதில்லை. இரண்டு நாட்கள் அவகாசம் இருக்கிறது. மூன்றாம் நாள் பேசலாம்'' என்று கூறியதோடு நிற்காமல் உதயணனை அழைத்து 'உதயணா, அடுத்த இரண்டு நாட்களுக்கு என் பதவியை இவ்விருவரும் வகிப்பார்கள். எனக்குரிய மரியாதையை இனி இவர்களுக்குக் கொடு. தினசரி கணக்குகளையும் அவர்களிடமே சொல்'' என்று கட்டளையிட்டுவிட்டு எழுந்து சென்றான்.

அவன் சென்றபின் இருவருமே சிறிது நேரம் வரை போமலிருந்தார்கள். பிறகு ''நாம் அவசரப்பட்டு விட்டோமா?'' என்று கேட்டார் அசுவநாவிகர்.

''அதிலென்ன சந்தேகம்? நான் முதலிலேயே சொன்னேன் வேண்டாமென்று. நீங்கள்தான் நச்சரித்தீர்கள்'' என்றான் டெமிட்ரியஸ்.

''இளவரசர் இப்படிச் செய்வார் என்று எனக்கென்ன தெரியும்?'' என்றார் அசுவநாவிகர்.

''யார் யார் எப்படி நடந்துகொள்வார்கள் என்பது முன்பாகவே தெரிந்துவிட்டால் இங்கே கொலைகளே நடந்திருக்காது''

அசுவநாவிகருக்கு உடனடியாக என்ன பேசுவதென்று தெரியவில்லை. சிறிதுநேரம் சும்மாயிருந்துவிட்டு ''நாம் போய் இளவரசரிடம் மன்னிப்பு கேட்டு விடுவோம். கொலையாளிகளை நம்மால் எப்படி கண்டுபிடிக்க முடியும்?'' என்றார்.

''அவரெங்கே நம்மைப் பேசவிட்டார்? அவர் தன் கஷ்டங்களை நாம் உணரவேண்டும் என்பதற்காகத்தான் இப்படிச் செய்திருக்கிறார். எதற்கும் இரண்டு நாட்கள் போகட்டும்'' என்றான் டெமிட்ரியஸ்.

இதே நேரத்தில் விஜயனைத் தனிமையில் சந்தித்த உதயணன், ''நீங்கள் கூறிய விஷயம்...'' என்று ஏதோ கேட்க ஆரம்பித்தபின் ''அப்படியே இருக்கட்டும் உதயணா. அவர்கள் இருவரும் என் பதவிகளை வகிக்கட்டும். அவர்களுக்கும்

திறமை இருக்கலாம். கொலையாளிகளை கண்டு பிடிக்கட்டுமே?'' என்றான் விஜயன்.

''பிரச்சினை என்ன?''

சொன்னான் விஜயன்.

''பயந்து போயிருக்கிறார்கள் அவர்கள். உங்களோடு அவர்கள் இன்னும் சரியாக ஒட்டவில்லை என்பது என் அபிப்ராயம். அப்படி ஒட்டியிருந்தால் உயிரைப்பற்றிய கவலை அவர்களுக்கு வந்திருக்காது. உங்களிடம் இப்படிக் கேட்டிருக்கவும் மாட்டார்கள்''

''உண்மைதான் உதயணா. உங்களுக்கும் அவர்களுக்கும் வித்தியாசம் இருக்கிறது. நீங்களெல்லாம் ஆரம்பத்திலிருந்து என்னோடு இருக்கிறீர்கள். என் உயிரைக் காக்கச் சபத மெடுத்தவர்கள். அவர்களோ இடையில் சதுர்வேதியினால் அறிமுகப்படுத்தப்பட்டவர்கள். ஒவ்வொருத்தருக்கும் என்று தனி அடையாளம் அவர்களுக்கு இருக்கிறது. உங்களுக்கிருக்கும் ஒரே அடையாளம் தோழர்கள் என்ற பொது அடையாளம் தான். அதோடு அவர்கள் வங்கநாட்டவரும் அல்ல'' என்று சொன்ன விஜயன் ''அவர்களுக்கு மரியாதைகொடு. கப்பல் விவரங்களைச் சொல். அதேசமயம் அந்த விவரங்களை என்னிடம் சொல்லவும் மறந்துவிடாதே'' அவர்களுக்கு என்பதவியைக் கொடுத்தது சோதனைக்காகத்தானேயன்றி வேறெதற்கும் இல்லை'' என்றான்.

அசுவத்தாமர் கொலைக்குப்பிறகு மாயாவும் அந்த மனிதனும் மரக்கல அறைக்குப் போய் தங்குவதைத் தவிர்த்து பணியாளர்கள் படுக்கும் மரக்கல தளத்திலேயே படுத்து நடப்பதைக் கவனித்தார்கள். விஜயன் தனது பதவியை டெமிட்ரியஸுக்கும் அசுவநாவிகருக்கும் தற்காலிகமாகக் கொடுத்திருப்பது அவர்களுக்கும் தெரியவந்தது. விஜயன் இதை ஏதோ ஒரு காரணத்திற்காகச் செய்திருக்கிறான் என்று தோன்றியதே தவிர சரியான காரணம் அவர்களுக்குத் தெரியவில்லை. அதோடு டெமிட்ரியஸும் அசுவநாவிகரும் பொறுப்பேற்றுக் கொண்டதும் மரக்கலத்திலிருந்த பலரும் அவர்களிடம் அதிக உணவு கேட்டு நச்சரித்தார்கள். உணவு

கட்டுப்பாடு பற்றி அவ்விருவர் அறிந்திருந்தாலும் பலரும் வந்து கெஞ்சியபோது அவர்களுக்கெல்லாம் கூடுதலாக உணவளிக்கும் படிக் கட்டளையிட்டார்கள். விஜயனுக்குரிய அதிகாரம் அவர்களுக்கு இருக்கவே அதைக் காட்டிக்கொள்ளும் ஆர்வத்தில் கட்டளையிட்டார்கள். இரண்டு நாட்களுக்கு இவ்வாறு நடந்தது. இதைக்கண்ட மரக்கலத்தலைவன் பாரடைஸ் விஜயனிடம் விசாரித்தான். விஜயன் கூறிய தகவலைக் கேட்டதும் ''நீங்கள் நடந்து கொண்ட முறை சரியல்ல இளவரசே. டெமிட்ரியஸூம் புரவி வியாபாரியும் முட்டாள்கள். கப்பல் திசைமாறிவிட்டது என்று டெமிட்ரியஸ் கூறிய விதத்திலேயே அவனது முட்டாள்தனம் வெளிப்பட வில்லையா? அவர்கள் பைத்தியக்காரத்தனமாக கேட்டார்கள் என்பதால் நீங்கள் இப்படிச் செய்யலாமா? இதன் விளைவுகளை யோசித்தீர்களா? மரக்கலத்தை இயக்குவது நானாக இருந்தாலும் கப்பலின் தலைவன் நீங்கள்தான். உங்களை இங்கே யாரும் கேள்வி கேட்க முடியாது. அப்படி கேட்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை வெட்டி வீழ்த்தும் அதிகாரம் உங்களுக்கு உண்டு. திறமை, தைரியம், அதிகாரம் ஆகியவை மட்டும் தான் உங்களுக்கு இருக்க வேண்டியவை. அன்பு, கருணை, காருண்யம், தயவு என்றெல்லாம் காட்டினால் நீங்கள் தலைவராக இருக்கமுடியாது. கப்பல் பயணங்களுக்குத் தாங்கள் புதியவர் என்பதால் எச்சரிக்கை செய்தேன். என்னை மன்னித்து விடுங்கள்'' என்று கூறிவிட்டுப் போனான்.

இரண்டு நாட்களுக்கு கப்பல் அல்லோலகல்லோலப் பட்டது. கூடுதல் உணவைப் பெற்ற காரணத்தால் மாலுமிகள் கீழ்தளத்தில் கும்மாளம் போட்டார்கள். விஜயனின் தோழர்களும், பணியாட்களும் அவரவர்கள் இருந்த தளங்களில் கூத்தாடினார்கள். யாரும் யாரையும் கவனிக்க முடியாத நிலை. இந்நிலையைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட கொலையாளி பணம் கொடுத்து தன் பக்கம் இழுத்திருந்த மாலுமியைப் பிடித்து சக மாலுமிகளுக்கு முன்பாகவே குத்திக்கொன்றான். உடலை கடலில் வீசிவிட்டு மாலுமிகளிடம் மிரட்டினான். ''என் சொல்லைக் கேட்காமல் விட்டாலோ என்னைக் காட்டிக் கொடுக்க முற்பட்டாலோ உங்களுக்கும்

இதே கதிதான். ஜாக்கிரதை'' என்று கூறிவிட்டு பணியாட்கள் இருக்கும் இடத்திற்கு வந்துவிட்டான். இக்கொலை மற்றவர்களுக்கு உடனடியாகத் தெரியவில்லை.

இதற்கிடையில் மூன்றாவது நாள் உதயணன் டெமிட்ரியஸிடமும் அசுவநாவிகரிடமும் அதிக உணவுப் பொருட்களை வழங்க மறுத்துவிட்டதால் அந்த இருவரும் விஜயனிடம் வந்தார்கள்.

''தங்கள் பதவியை எங்களிடமிருந்து பறித்து உதயணனுக்கு வழங்கி விட்டீர்களா?'' என்று கேட்டார்கள்.

''என்ன விஷயம்?'' என்று கேட்டான் விஜயன்.

''உணவுப்பொருட்களை அதிகமாக வழங்க எங்களுக்கு அதிகாரம் கிடையாதா?''

''அதற்கென்ன இப்போது''

''உதயணன் அதற்குத் தடையாக இருக்கிறார்''

''கொலையாளியைக் கண்டுபிடித்து விட்டீர்களா?''

''இன்னும் இல்லை''

''ஏதாவது ஊகமாவது கிடைத்ததா?''

''இல்லை''

''முயற்சி ஏதாவது செய்தீர்களா?''

''இல்லை''

''இரண்டு நாட்கள் முடிந்துவிட்டதல்லவா?''

''ஆமாம்''

''இரண்டு நாட்களாக நீங்கள் செய்த செயல்கள் கொலைகாரன்கூட செய்யாததை செய்துவிட வழிவகுத்து விட்டன.''

''தாங்கள் கூறுவது புரியவில்லை''

''எப்படிப் புரியும்? அதிகாரம் கிடைத்த இரண்டு நாட்களிலேயே உங்களுக்குத் தலை, கால் புரியவில்லையே!

மற்றவை எங்கே புரியப்போகிறது? இரண்டு நாட்களாக என்ன செய்திருக்கிறீர்கள் தெரியுமா?''

''உணவுப் பொருட்களை கூடுதலாகக் கேட்டவர்களுக்குக் கொடுத்தோம்''

''எத்தனைபேர் கேட்டார்கள்?''

''ஏறக்குறைய எல்லோரும் தான்''

''நான்?''

''நீங்கள் பாரடைஸ், உதயணன், உபதலைவர்கள் மட்டும் கேட்கவில்லை''

''இவர்களைவிட்டு விட்டாலும் குறைந்தது எழுநூறு பேர் கேட்டிருப்பார்கள்''

''ஆ...மாம்''

''மூன்று வேளையும் கேட்டதாகத் தகவல்''

''ஆமாம்''

''நீங்களும் வாரி வழங்கிவிட்டீர்கள். இதன் விளைவு என்ன தெரியுமா?''

''அதாவது...''

''கொலையாளிகூட இடைவெளிவிட்டு ஒருவரைத்தான் கொல்கிறான். உங்கள் செய்கை எல்லோரையும் கொன்று விடும்''

''தாங்கள் சொல்வது...''

''நாக தீபத்திற்கு போவதற்குள் உணவுப் பொருட்கள் தீர்ந்துபோய் கப்பலில் இருக்கும் எல்லோரும் பட்டினியால் மாண்டு போவார்கள். பெண்கள் அதிகபட்சமாக நான்கு நாட்களும் ஆண்கள் 12 நாட்களும் பட்டினி கிடக்க முடியும். அதற்குப் பிறகு சாவுதான். இதென்ன வங்க நாடா உணவுப் பொருட்கள் குறைந்தால் ஈடுகட்டுவதற்கு? இந்தச் சாதாரண விஷயமே புரியாத நீங்கள் கொலையாளி பற்றிப் பேசுகிறீர்கள். அவனைக் கண்டுபிடிக்க நான் தாமதம் செய்வதாக நினைக்கிறீர்கள். இந்த விஷயம்கூட உணவுப்பொருள் விஷயம்

போலத்தான். அவசரப்பட்டு கண்டபடிச் சந்தேகப்பட்டு யாரையும் பிடித்துவிட முடியாது. கண்டுபிடித்து விட்டால் கூட அவனை எச்சரிக்கையாக அணுகவேண்டும். அவனது பக்க பலங்களை அறியவேண்டும். கண்மூடித்தனமாகச் செயல் பட்டால் கப்பலில் உள்ளவர்கள் அழிவார்கள். கப்பலே கூட அழியும். மரக்கலத்தலைவன் பாரடைஸ் கூறியதைச் சொன்னால் என்ன ஆவீர்களோ தெரியவில்லை. உங்களுக்குக் கொடுத்த பதவிக்காலம் முடிந்து விட்டது''

அப்போது அங்கே வந்த உதயணன் ஒரு செய்தியைக் கூறியதும்-

''இந்தக் கூத்து நடந்தபோதே இப்படி ஏதாவது நடக்கும் என்று நினைத்தேன். அப்படியே நடந்துவிட்டது'' என்றான் விஜயன்.

அவனது முகத்தில் வேதனை தெரிந்தது.

◈◈◈

## அத்தியாயம் இருபத்து ஐந்து

# விஜயனின் விளக்கம்

''இது எப்போது உனக்குத் தெரியும்?'' என்று உதயணனைக் கேட்டான் விஜயன்.

''இன்று காலை கணக்கெடுப்பின் போதுதான்''

''நேற்றும் அதற்கு முன்னாளும் ஏன் கணக்கெடுப்பு பற்றி எனக்குத் தெரியப்படுத்தவில்லை?''

''இரண்டு நாட்களாக நடந்த கூத்தில் யாருமே கணக்கெடுப்பு செய்யவில்லை. அப்பணியைச் செய்ய வேண்டிய நமது தோழர்கள் எதுவும் செய்யாமல் கணக்கெடுத்த மாதிரிச் சொல்லிவிட்டார்கள்''

''நம் தோழர்களும் கெட்டுவிட்டார்களா?''

''அதிக உணவு கிடைத்ததால் தலைகால் தெரியவில்லை'' என்று சொன்ன உதயணன் ''தலைவரே அசுவநாவிகர், டெமிட்ரியஸ் மற்றும் உணவைப் பங்கிடும் பணிபுரிந்த தோழர்கள் இருபது பேர் ஆகியோர் தனது கடமைகளைச் சரிவர செய்யாமல் விபரீதம் நடக்க வழி வகுத்துவிட்டார்கள். அவர்களைச் சில நாட்களுக்காவது பட்டினி போடவேண்டும்'' என்றான்.

''தலைவன் பொறுப்பை எப்போது அசுவநாவிகருக்கும் டெமிட்ரியஸுக்கும் மாற்றினேனோ அவர்கள் தலைவர்களாக நடந்து கொண்ட இரண்டு நாட்களுக்கு அவர்களது தவறுகளுக்கு தண்டிக்கும் உரிமை எனக்குக் கிடையாது. நல்லவேளையாக இரண்டு நாட்களுக்கு மட்டுமே அவர்கள் என் பதவியில் இருந்தார்கள். அவர்களது தவறும் கண்டுபிடிக்கப்பட்டுச் சரி செய்யப்பட்டு விட்டது. இப்போது யாரையும் தண்டிக்க வேண்டிய அவசியம் இல்லை''

அரைமனதோடு ''சரி'' என்றான் உதயணன்.

''கணக்கெடுப்பில் ஒரு மாலுமி குறைவதாகச் சொன்னாயே அது இந்த இரண்டு நாட்களில் ஏதாவது ஒரு நாளில் நடந்திருக்கலாம் அல்லவா?''

''அப்படித்தான் நடந்திருக்க வேண்டும்''

''ஒரு மாலுமி எங்கே போகமுடியும்?''

''குழப்பமாக இருக்கிறது''

''குழப்பமே இல்லை உதயணா. நடுக்கடலில் மாலுமி தப்பமாட்டான். தற்கொலையும் செய்து கொள்ள வேண்டிய அவசியம் கிடையாது. கொலைதான் செய்யப்பட்டிருக்க வேண்டும். இரண்டு நாட்கள் கப்பலில் இருந்த அனைவருமே கும்மாளம் போட்டுக் கொண்டிருந்ததால் அதுதான் நல்ல சந்தர்ப்பம் என்று கொலை செய்யப்பட்டிருக்கலாம்''

''மாலுமியைக் கொல்ல வேண்டிய அவசியம் இல்லையே?''

''அப்படிச் சொல்ல முடியாது. கொலையாளி தனக்குத் தொல்லைத்தரக் கூடிய நபரைக் கொல்கிறான் என்பது

அசுவத்தாமர் கொலையின் மூலம் நமக்குத் தெரிகிறது. மாலுமியும் அப்பேர்பட்டவனாக இருக்கலாம் அல்லவா?''

''அப்படியானால் கொலையாளி தனிநபர் அல்ல. ஒரு குழுவோடு இருக்கிறான் என்று நினைக்கிறீர்கள்?''

''ஆமாம். தனி ஒரு ஆள் அவ்வாறு செய்ய முடியுமா? யோசித்துப் பார்''

''உண்மை தான்''

''ஒரு மாலுமி இல்லாதது பற்றி மற்ற மாலுமிகளிடம் நீ ஏதாவது விசாரித்தாயா?''

''உங்கள் மனதில் என்ன திட்டம் இருக்கிறது என்பது எனக்குத் தெரியாது. ஆகவே தான் விசாரிக்கவில்லை''

''இந்த விஷயம் இப்போது மற்றவர்களுக்கும் தெரிந்திருக்கும் இல்லையா?''

''தெரிந்திருக்கும்'' என்று சொன்ன விஜயன் மறுநாள் உதயணனை அழைத்து ''உதயணா, மிகவும் ரகசியமாகவும் எச்சரிக்கையாகவும் செய்யவேண்டிய காரியம் ஒன்றிருக்கிறது. அதை நீ தான் செய்யவேண்டும்'' என்றான்.

''சொல்லுங்கள்''

''நம் தோழர்களில் மிகவும் அதிக விசுவாசமுள்ள இருபது பேரைத் தேர்ந்தெடுத்துக்கொள். என் அறையில் இருக்கும் கர்ணபத்ர பங்கமிருக்கும் ஏழு பெட்டிகளை அகற்றிவிட வேண்டும்''

''அகற்றி?''

''பலமான வலைகளில் ஒவ்வொரு பெட்டியையும் பத்திரமாகக் கட்டுங்கள். மீன் எண்ணையாலும் கொழுப்பாலும் வலுவேற்றப்பட்ட கயிறுகள் இருக்கின்றன. அவற்றில் கட்டிக் கடலில் மூழ்கச் செய்யுங்கள். கயிற்றின் மறுமுனையை கப்பலின் பக்கத் தளைகளில் இணைத்துவிடுங்கள். கப்பல் கடல் மேல் பயணம் செய்யும் அதே நேரத்தில் பெட்டிகள் கடலுக்குள் பயணம் செய்யும்''

''எதற்கு இந்த ஏற்பாடு?''

''எனக்கென்னவோ கொலையாளிகள் இந்தப் பெட்டிகளை கவரலாம் என்று தோன்றுகிறது''

''இப்போதே அந்த ஏற்பாட்டைச் செய்வதைவிட நாகதீபத்தை நெருங்கும் நிலையில் செய்யலாமே! இன்னும் நாகதீபத்திற்கு நீண்டதூரம் இருக்குமானால் இந்த ஏற்பாடு கடலில் விளையக்கூடிய விபரீதங்களால் அடிப்பட்டுப் போய்விடும். ஒருவேளை புயல் குறுக்கிட்டு விட்டால் பெட்டிகள் அறுபட்டு கடலுக்குள் போய் விடலாம்''

''உண்மைதான். நீ எதற்கும் தேவையான ஏற்பாடுகளைச் செய். கடலில் இறக்குவதை மட்டும் நான் சொல்லும்போது செய்யலாம். நான் மரக்கலத்தலைவனிடம் இது விஷயமாகப் பேசுகிறேன்''

விஜயனின் போக்கில் மாறுதல் இருப்பதை உணர்ந்த அசுவநாவிகர் ''டெமிட்ரியஸ்! இளவரசர் நமக்கு இரண்டு நாட்களுக்குப் பதவியைக் கொடுத்து நமக்கும் பாடம் கற்பித்தார். அவரும் பாடம் கற்றுக் கொண்டார். அவர் நினைத்திருந்தால் நமது தவறுகளுக்கு தண்டனை வழங்கியிருக்கலாம். அதுவும் உதயணன் நமக்கு தண்டனை வழங்கச்சொல்லி வற்புறுத்திய தாகக் கேள்விப்பட்டேன். அவன் பேச்சைக்கேட்டு நடந்து கொள்ளாமல் தண்டிப்பதற்கு தனக்கு உரிமையில்லை என்று நேர்மையாக நடந்து கொண்டிருக்கிறார். இது உனக்கு எதை உணர்த்துகிறது?'' என்று கேட்டார்.

''ஐயா வணிகரே, அவர் இத்தனை நாட்களாக இளவரசராக இருந்தார். இப்போது தான் நூறு சதவிகிதம் மரக்கலத் தலைவராக மாறியிருக்கிறார்''

''நீ என்ன சொல்கிறாய்?''

''எப்போது கப்பலுக்கு வந்தாரோ அப்போதே அவருக்கும் இளவரசர் பதவிக்கும் சம்பந்தம் இல்லை. அதோடு வங்க நாட்டிற்கே முழுக்கு போட்டுவிட்டு வந்து விட்டதால் அந்த நாட்டிற்கும் அவருக்கும் உள்ள உறவு அறுந்துவிட்டது. அவரது சொந்தம் இக்கப்பல் மட்டும்தான். இதில் வந்ததுமே அவர்

மரக்கலத்தலைவர் என்ற பதவியை ஏற்றுக்கொண்டு அதற்கு ஏற்றமாதிரி நடந்து கொண்டிருக்க வேண்டும். ஆனால் அவரோ இளவரசராகவே இத்தனை நாட்களாக நடந்துகொண்டு கண்டிப்பும் மனஉறுதியும் காட்டாமல் அன்பு, கருணை, பாசம், வருத்தம், வேதனை என்று உணர்ச்சிவசப்பட்ட மனிதராக இருந்து வந்தார். அது தவறு என்பது அவருக்குப் புரிந்திருக்க வேண்டும். மரக்கலத்தலைவனாக மாறினார். மரக்கலத் தலைவன் பொறுப்பு என்பது ஆசா பாசங்களுக்கு அசையக்கூடிய பொறுப்பு அல்ல. இது ஒரு சர்வாதிகாரிக்கு உள்ள பொறுப்பு. இங்கே மனஉறுதியும் கண்டிப்புமே ஆயுதங்கள். இளவரசர் அந்த ஆயுதத்தைக் கையில் எடுத்துவிட்டார் என்றே நினைக்கிறேன். இனிமேல் அவர் கொலையாளியைக் கூடக் கண்டுபிடித்து விடுவார்''

இரண்டு நாட்கள் கழித்து அனைத்துமே அமைதியான நிலைக்குத் திரும்பின.

இதற்கிடையில் மரக்கலத்தலைவனிடம் விஜயன் தீவுக்கப்பல் நாகதீபத்தை அடைய எத்தனை நாட்களாகும் என்று விசாரித்தான்.

''இரண்டு நாட்களாகவே நமக்கு அனுகூலமான காற்று வீசி வருகிறது. துடுப்புக்களின் லேசான துழாவலோடு காற்று நம் மரக்கலத்தை தள்ளிக்கொண்டு போகிறது. இந்த நிலை நீடித்தால் நான்கு நாட்களில் நாம் நாகதீபத்தை அடையலாம்'' என்றான் பாரடைஸ்.

அவனிடம் பெட்டிகளைக் கட்டத் தொடங்குவது பற்றியும் விஜயன் கேட்டு வைத்தான்.

''அது வேண்டாம் இளவரசே. இத்தீவுக்கப்பலில் முன்பக்கமும் பின்பக்கமும் மட்டுமின்றி இரண்டு பக்கவாட்டுப் பலகையின் கீழும் இரும்புச் சலாகைகள் அமைக்கப் பட்டிருக்கின்றன. ஒருவேளை அவற்றின் முனைகள் நீட்டப்பட்டால் கயிறுகள் அறுபட்டு பெட்டிகள் கடலில் மூழ்கிவிடும். அதற்குப் பதிலாக எப்போதுமே கப்பலிலிருந்து வீசப்பட்டு வரும் மீன்களுக்கான வலை மீன்களைச் சுமந்தபடி கூடவே வரும். அவ்வப்பொழுது வலையை இழுத்துத் தூக்கி

மீன்களை எடுத்துக்கொண்டு வலை கடலிலேயே வீசப்படும். அது கடலின் முதல்தளத்துடன் கயிற்றால் இணைக்கப் பட்டுள்ளதால் கயிறு எப்போதும் சேதமாகாது. ஆகவே அந்த வலையில் பெட்டிகளைப் போட்டுக் கட்டிவிட்டால் கப்பலோடு பத்திரமாக வந்து கொண்டிருக்கும். நாக தீபத்தை அடைந்ததும் வலையை இழுத்துக் கொள்ளலாம்'' என்றான் பாரடைஸ்.

''மீன்களுக்காக வலை இழுக்கப்பட்டால் விஷயம் தெரிந்து விடாதா?''

''மீன்களை எடுக்க வாரத்திற்கு ஒருமுறைதான் வலை இழுக்கப்படுகிறது. இன்று இழுத்து மீன்களை எடுத்துக் கொண்டால் அடுத்த ஒரு வாரத்திற்கு யாரும் இழுக்கப் போவதில்லை. அதற்குள் நாம் நாக தீபத்தை அடைந்து விடலாம்''

பாரடைஸ் கூறிய யோசனையை ஏற்றுக்கொண்ட விஜயன் உதயணனை அழைத்து அதை நிறைவேற்றும்படிச் சொல்லவே மறுநாள் காலை வலை இழுக்கப்பட்டு மீன்கள் அகற்றப் பட்டன. அன்றிரவு நடுசிக்கு அப்பால் பெட்டிகள் வலையில் கட்டப்பட்டு கடலில் விடப்பட்டன. அந்த வகையில் திருப்தியடைந்த விஜயன் ஒருவிதத் தீர்மானத்துடன் மறுநாள் உதயணனை அழைத்து ''உதயணா, நீ போய் பணிப்பெண்களில் மாயா என்று ஒருத்தி இருப்பாள். அவளை உடனே என் அறைக்கு அழைத்து வா. வரமறுத்தால் கைது செய்து இழுத்து வா'' என்றான்.

''வரவர உங்கள் பேச்சும் போக்கும் விசித்திரமாக இருக்கின்றன. எனக்கே கூடப் புரியவில்லை'' என்று சற்றே வியப்புற்றவனாகச் சொன்னான் உதயணன்.

''கவலைப்படாதே உதயணா. நேரம் வரும்போது தெரிய வேண்டியவைகள் தெரியும். புரிய வேண்டியவைகள் புரியும்'' என்றான் விஜயன்.

விஜயனின் இந்த பதில் புதிராகவே இருந்தது உதயணனுக்கு. என்றாலும் மேலே எதுவும் பேசாமல்

பணிப்பெண்கள் அனைவரையும் அழைத்து அவர்களில் மாயா என்பது யார் என்று விசாரித்தபோது அப்படி யாரும் இல்லை என்ற பதில் வந்தது. உதயணனின் மனநிலை மேலும் குழப்பமடைந்தது. விஜயனிடம் வந்து தகவலைச் சொன்னபோது விஜயன் தன் தவற்றை உணர்ந்தான். தன் மனைவியான மாயா எப்போது பணிப்பெண் வேஷத்தைப் போட்டாளோ அப்போதே பெயரையும் மாற்றிக் கொண்டிருக்க வேண்டும் என்பது அவனுக்குப் புரிந்தது. எனவே ''எல்லோரையும் அழைத்து வா உதயணா. நான் அடையாளம் காட்டுகிறேன்'' என்றான்.

அடுத்த சில நிமிடங்களில் அனைத்துப் பணிப்பெண்களும் வரவழைக்கப்பட்டனர். மாயாவை மட்டும் நிறுத்திக் கொண்டு மற்றவர்களைத் திருப்பி அனுப்பினான் விஜயன். உதயணனையும் போகச் சொன்னான்.

அவனுக்கு முன்னால் தனிமையில் வந்ததுமே பணிப் பெண்ணுக்குரிய பணிவை விட்டு விட்டு முரட்டு குதிரை போல்நின்ற மாயா ''நான் தான் உங்கள் மனைவி என்ற உறவை அறுத்து விட்டேனே? எதற்காக என்னைக் கூப்பிடுகிறீர்கள்?'' என்று திமிரோடு கேட்டாள்.

''கணவனாக உன்னைக் கூப்பிடவில்லை. மரக்கலத் தலைவனாக கூப்பிட்டிருக்கிறேன் என்பதை நினைவில் வைத்துக்கொள். நீ இப்போது பணிப்பெண். அதற்கு ஏற்றவளாய் நடந்துகொள். வேறு மாதிரி நடந்து கொண்டால் உன் தலையைச் சீவும் அதிகாரம் எனக்கு உண்டு'' என்றான் விஜயன். அவனது குரல் தலைவனுக்குரிய தோரணையில் இருந்ததே தவிர அதில் நெகிழ்ச்சியோ பாசமோ தொனிக்கவில்லை.

அதைக்கண்டு சற்றே அதிர்ந்துபோன மாயா அமைதியாக நின்றாள்.

''இதோ பார் பெண்ணே, இக்கப்பலில் சில நாட்களாக கொலைகள் நடந்துள்ளன. அவற்றைச் செய்த கொலையாளியுடன் உனக்குத் தொடர்பு இருப்பதாகத்

தெரிகிறது. அவர்கள் யார் என்பதைச் சொல்லிவிடு'' என்றான் விஜயன் அதே குரலில்.

''இது என்ன தலைவரே விசித்திரமாக இருக்கிறது? திடீரென்று என்னை அழைத்து இப்படியொரு அபாண்டமான குற்றச்சாட்டைச் சொல்கிறீர்களே - எந்த ஆதாரத்தில் சொல்கிறீர்கள்?'' என்று சற்று அடக்கமான குரலிலேயே கேட்டாள் மாயா.

''இங்கே, என்னைக் கேள்வி கேட்டும் உரிமை யாருக்கும் இல்லை. கேட்டதற்கு மட்டும் பதில் சொல்''

''இல்லாத பதிலை எப்படிச் சொல்லமுடியும்?''

''இதோ பார் - முறையாக விசாரணை நடந்தால் உன்னால் இப்படியெல்லாம் பேசமுடியாது. ஒரு சில காரணங்களால் அந்த விசாரணையை தவிர்க்கவே உன்னைத் தனியாக வரவழைத்து கேட்கிறேன். இருக்கும் பதிலுக்கு இல்லாத வார்த்தைகளைச் சொல்லி உன் சுபாவத்தைக் காட்ட நினைக்காதே. நீ யார் என்ற உண்மை எனக்குத் தெரியும் என்பதை மறக்காதே''

''என்னை யாரென்று தெரியுமென்றால் என்னிடமிருந்து நீங்கள் எதிர்பார்க்கும் பதில் வராது என்பது உங்களுக்குத் தெரியவில்லையா?''

''நீ மீண்டும் மாயாவாக நடந்துகொள்கிறாய். நீ பேசுவது ன் கணவனிடமல்ல''

''ஐயா, தலைவரே, ரொம்பவும் மிரட்ட வேண்டாம். நான் யார் என்பதை நானே எல்லாருக்கும் சொல்லிவிட்டால் என் அந்தஸ்து உயர்ந்துவிடும். அப்போது இங்கே இருப்பவர்கள் எல்லோரும் என்னை ஆதரிக்கவும் தொடங்குவார்கள். உங்களால் எதுவும் செய்ய முடியாது''

''உன் விதியை நீயே எழுதிக்கொள்ள முற்பட்டு விட்டாய். உன்னை இனி ஆண்டவன்கூட காப்பாற்ற முடியாது. நீ போகலாம்'' என்றான் விஜயன்.

அவளோ அவனை வென்று விட்டதாக எண்ணி திமிரோடு வெளியேறினாள்.

அன்றிரவு நடுஜாமத்திற்குப் பிறகு கப்பலின் தளத்தில் பணியாட்களுடன் படுத்துக்கிடந்த அவளை பணியாள் வேடத்திலேயே இருந்த மர்மமனிதன் கீழ்த்தள அறைக்கு வரச்சொல்லி விட்டுச் சென்றான். சிறிதுநேரம் கழித்து மாயா மெல்ல எழுந்து கீழ் அறைக்குச் சென்றாள்.

அவளைப் பார்த்த அந்த மனிதன் ''என்ன மாயா, தளத்திலேயே படுத்துக்கொண்டு நாட்களை கடத்திவிடலாம் என்று முடிவுகட்டி விட்டாயா? இந்த அறைக்கு வருவதற்கு ஆசையாக இல்லையா?'' என்று கேட்டு அவளை இழுத்து இறுக்கமாக அணைத்தான்.

அவனது பிடியிலிருந்து சற்றே விலக முற்பட்ட மாயா ''தினமும் இங்கே தான் நாம் சந்தித்து வந்தோம். நீங்கள் தான் திடீரென தளத்திலேயே படுத்துக் கொள்ளலாம் என்றீர்கள். நான் என்ன செய்வது?'' என்று கேட்டாள்.

அவளது குரலில் வழக்கமான உற்சாகம் இல்லாதது அவனுக்கு அசதியைத் தந்தது.

◈◈◈

## அத்தியாயம் இருபத்தாறு

# மாயாவின் நிலை

''நான் சொன்னதற்கு காரணம் இருந்தது. அதற்காக நீ ஒரேயடியாக ஒதுங்கி விட்டால் எப்படி? தினமும் உண்பவர்கள் எத்தனை நாட்களுக்குப் பட்டினி கிடப்பது? உனக்குப் பசிக்கவே இல்லையா?'' என்று தன் குழப்பத்தை மறைத்துக் கொண்டு கேட்டான் அந்த மனிதன்.

''பசிக்காமல் இருக்குமா? இருந்தாலும் நானாக எப்படி அழைப்பது?'' என்று கேட்டபடி அவனது கைகளுக்குள் சுழன்றாள் அவள்.

''மாயாவா இப்படிப் பேசுவது? நம்ப முடியவில்லையே?'' என்று கூறியபடி அவளைத் தன் பிடியிலிருந்து விடுவித்து மரக்கட்டிலில் அமர்ந்தான் அவன்.

''நீங்கள் சொல்வது எனக்கு விளங்கவில்லை''

''விளங்கவில்லையா? ஆச்சரியமாக இருக்கிறது''

''எதற்கு ஆச்சரியம்?''

''ஏதோ ரொம்பவும் வெடகப்படுகிறவள் போலப் பேசுகிறாயே, அது வியப்பாக இருக்கிறது? நீ யார் விஜயனின் மனைவி, அவனது மனைவியாக இருந்து கொண்டு என்னைத் தேடி வந்தபோது இல்லாத வெட்கம் இப்போது வந்துவிட்ட மாதிரி நீ பேசுவது வியப்பாக இருக்கிறது மாயா''

அவன் இப்படி வெளிப்படையாகப் பேசியது அவளுக்கு என்னவோ போலிருந்தது.

''என்னைப் பற்றிக் கீழ்த்தரமாக நினைக்கிறீர்கள் இல்லையா?'' என்றாள் கம்மிய குரலில்.

தன் பேச்சின் கடுமையை உணர்ந்த அவன் ''அப்படியெல்லாம் நீ நினைக்காதே மாயா. நீ எந்த நிலையில் வந்தாய் என்பது எனக்குத் தெரியும். உன்மீது குற்றமில்லை. உன்னைப் புரிந்துகொள்ளாத உன் ஆசையை நிறைவேற்ற வக்கில்லாதவனோடு வாழ முடியாமல் அவனை உதறிவிட்டு கையறு நிலையில் என்னிடம் வந்தவள் நீ. உன்னை முழு மனதோடு ஏற்றுக் கொண்டவன் நான். அந்த நிமிடத்திலேயே என் குடும்பம், பதவி ஆகிய எல்லாவற்றையும் உதறிவிட்டு உன்னோடு வந்திருக்கிறேன். அன்று முதல் நாம் மிகவும் சுதந்திரமாக வாழ்ந்து வருகிறோம். நமது ஆசைகளை வெளிப்படுத்திக்கொள்ள நாம் தயங்கியதில்லை. ஒருவர்மீது ஒருவர் பழியைப் போட்டுக்கொண்டு நாம் குழம்பியதும் சண்டையிட்டதுமில்லை. திடீரென கப்பலில் சூழ்நிலை மாறியது. கண்காணிப்பு அதிகமாகியது. ஆகவேதான் இந்த அறைக்கு வருவதைத் தவிர்த்து மரக்கலத்திலேயே இரவில் படுத்து வந்தோம். அந்த நிலை எனக்குப் பிடிக்கவில்லை. என்ன

ஆனாலும் ஆகட்டும் என்று உன்னை இங்கே அழைத்து வந்து தழுவவே ஆசைப்பட்டேன். ஆனால் ஏதோ ஒன்று என்னை அவசரப்பட வேண்டாம் என்று எச்சரிக்கவே நான் பொறுமையாக இருந்தேன். இந்தத் தவிப்பு உன்னிடம் இருந்ததா என்று அறியவே அப்படிக் கேட்டேன். இது புரியவில்லையா உனக்கு?'' என்றான்.

''பெண்களின் உணர்வைப்பற்றி உங்களுக்கென்ன தெரியும்? ஐம்புலன்கள் ஆண்களுக்கும் உண்டு. பெண்களுக்கும் உண்டு. ஆனால் ஐந்து புலன்களும் ஒரே சமயத்தில் பெண்களுக்கு மட்டுமே வேலை செய்யும். அப்படியானால் அவர்களது உணர்ச்சிகள் எப்படி வெளிப்படும் என்று பாருங்கள். உங்களால் கற்பனை செய்து பார்க்க முடியாத உணர்ச்சிக் கொந்தளிப்பில் நான் இருந்தது உங்களுக்குத் தெரியுமா? இதுவே வங்க நாடாக இருந்து என் நிலை இப்படி இருந்திருந்தால் உங்களைக் கடித்துத் தின்றிருப்பேன். இருக்குமிடம் கப்பலாக இருந்ததோடு பிரச்சினைகள் சுற்றிக் கொண்டிருந்ததால் வேறு வழியில்லாமல் அடங்கிக் கிடந்தேன்''

''ஆகா. உன்னால் இப்படியெல்லாம் கூடப் பேச முடியுமா? இன்று நான் உன்னிடம் பேச்சிலும் தோற்றுவிட்டேன்'' என்று பாராட்டிய அவன் ''இனி என்ன தயக்கம்?'' என்று கூறி அவளைக் கட்டிலுக்கு இழுத்தான்.

மாயா பெண்களது உணர்வுகளைப்பற்றி உண்மையைப் பேசியிருந்தாலும் செயலில் அவற்றைப் பிரதிபலிக்கவில்லை. ஒன்றுக்கு ஒன்பதாய் செயல்பட வேண்டிய காம இந்திரியங்கள் ஒடுங்கியே இருந்தன. ஏதோ ஒன்று அவளது காம வெள்ளத்திற்குத் தடையாக இருந்தது. அவளது பேச்சிற்கும் செயலுக்கும் வித்தியாசம் இருந்ததை மர்ம மனிதனும் உணரவே செய்தான். லேசாகத் தொட்டாலே சீறிப்பாயும் அவளது காமம் விஸ்தாரமான விளக்கத்தைச் சொன்ன நிலையில் மேலும் சீறிப் பாய்ந்து சிகரங்களை எட்டும் என்று எதிர்பார்த்த அவன் ஏமாந்து போனான். வற்றிப்போன வீழ்ச்சியைப்போல குன்றிவிட்ட அவளது காமம் அவனுக்கு இனிக்கவில்லை. புளித்தது.

''மாயா, உனக்கு என்ன ஆயிற்று?'' என்று கேட்டான் இனிப்பு புளிப்பாக இருந்த நிலையில்.

''ஏன் இப்படிக் கேட்கிறீர்கள்?'' என்று கேட்டாள். ஆனால் அவளுக்கு அவன் கேள்விக்கான காரணம் தெரிந்தே இருந்தது.

''உனக்குத் தெரியவில்லையா மாயா? சுறாமீன் சிறுமீனாக மாறமுடியும் என்று இன்று தான் எனக்குத் தெரிந்தது''

''சுறாமீன் சிறு மீனாக எப்படி மாறமுடியும்?''

''காமக்கடல் காமக்குட்டையாகும்போது அது ஆகாதா?''

''அதெல்லாம் ஒன்றுமில்லை. திடீரென்று ஏதோ உடல் அசதி. வேறொன்றும் இல்லை''

''என்ன ஆயிற்று உடம்புக்கு?''

''சுரம் வரும் போல இருக்கிறது''

''திடீரென்று எதற்கு சுரம்?''

''தெரியவில்லை''

மர்மமனிதன் உடனடியாகப் பேசாமல் சற்று அமைதியாக இருந்துவிட்டுப் பிறகு கேட்டான்.

''மாயா, இன்று நீ விஜயனை சந்தித்தாயாமே என்ன விஷயம்?''

இந்தக் கேள்வியை எந்த நிமிஷமும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள் மாயா. அதற்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாததால்தான் காமத்தில் அவளால் முழு ஈடுபாட்டைக் காட்ட முடியவில்லை.

சற்றே தயங்கிய அவள் ''நான் சந்திக்கவில்லை. அவர் தான் அழைத்தார்'' என்றாள் தன் மீது தவறில்லை என்று உணர்த்துவது போல்.

''எதற்காக உன்னை அழைத்தான்?''

இக்கேள்விக்கு உண்மையைச் சொல்ல மாயாவின் மனம் இடம்தரவில்லை.

''நான் பணிப்பெண்ணாக உலவுவது தனக்கு அவமானமாக இருக்கிறது என்று சொன்னார். பழையபடி மாயாவாக மாறிவிடும்படிச் சொன்னார்'' என்று பொய்யைச் சொன்னாள்.

அவளது பதிலை அவன் நம்பத்தயாராக இல்லை. அவளைவிட விஜயனைப் பற்றி அவனுக்கு அதிகம் தெரியுமாதலால் அவன் இதுபோலப் பேசியிருக்க மாட்டான் என்று கருதிய மர்மமனிதன் தனது அவநம்பிக்கையைக் காட்டிக் கொள்ளாமல் ''நீ என்ன பதில் சொன்னாய் அவனுக்கு?'' என்று கேட்டான்.

''உடைந்த கண்ணாடி ஒட்டாது என்றும் சிந்திப்போன பால் மடியில் போய்ச் சேராது என்றும் சொன்னேன்''

''இத்தனை நயமாகவா சொன்னாய்?''

''உறைக்க வேண்டுமல்லவா? அதற்காகத்தான் உதாரணத்தோடு சொன்னேன்''

''உண்மையாகவே விஜயனை உனக்குப் பிடிக்கவில்லையா மாயா?''

''இதென்ன அர்த்தமற்ற கேள்வி? என்னைப் புறக்கணித்தவரை நான் எப்படி விரும்ப முடியும்? என் கனவுகளை நிறைவேற்றாதவர் எனக்கெதற்கு? அவர் நிறைவேற்றாத கனவுகளை நீங்கள் நிறைவேற்றுவதாகச் சொன்னீர்கள். நாகதீபத்திற்கு ராணியாக்குவதாக வாக்களித்தீர்கள். அப்போதே உங்களிடம் என்னைப் பூரணமாக ஒப்படைத்து விட்டேன். இந்த நிலையிலா அவரை நான் விரும்பமுடியும்?''

''மகிழ்ச்சி மாயா, உன் மன உறுதி என்னை பிரமிக்க வைக்கிறது. நீ தளத்திற்குப் போ. நான் சிறிது நேரத்தில் வருகிறேன்'' என்று கூறி அவளை அனுப்பிவைத்த மர்ம மனிதன் யோசனையில் ஆழ்ந்தான்.

மாயா கூறியது பொய் என்பது அவனது தீர்மானமாக இருந்ததால் அவள் பொய் சொல்ல வேண்டிய அவசியம் என்ன என்று யோசித்தான். தன்னையே முழுவதுமாக நம்பி தன்னை ஒப்படைத்துக் கொண்டவள் தன்னிடமே பொய் சொல்கிறாள்

என்றால் தன்மீதான அவளது விசுவாசம் ஆட்டம் கண்டுவிட்டது என்று தான் அர்த்தம் என்பதை உணர்ந்தான். மிகவும் ஆபத்தான காரியங்களில் தான் இறங்கும் நிலையில் தனக்கு உதவிக்கரமாக இருக்கும் மாயா விசுவாசமில்லாமல் போவது மிகவும் அபாயகரமானது என்பது அவனுக்குப் புரிந்தது. ஏறக்குறைய தனது திட்டங்கள் நிறைவேறவிருக்கும் நிலையில் அவளது விசுவாசம் குறைந்தால் திட்டங்களைக் குலைத்துவிடும் என்று திடமாக நம்பினான். அப்படிப்பட்ட குலைவிற்குக் காரணமாக அமையக்கூடும் என்று கருதியதால்தான் அசுவத்தாமரையும் மாலுமி ஒருவனையும் அவன் கொன்றிருந்தான். தற்போது மாயாவும் தனக்கு இடையூறாக அமையக்கூடும் என்று அவனுக்குத் தோன்றியதால் அவளையும் தீர்த்துக்கட்டிவிடுவது தான் சரி என்ற முடிவுக்கு வந்தான்.

மறுநாள் அவன் முற்றிலும் எதிர்பாராத சம்பவம் ஒன்று நடந்ததைக் கண்டபோது சற்றே அரண்டு போனான்.

பொழுது விடிந்த சிறிது நேரத்திலேயே உதயணனை அழைத்த விஜயன் ''உதயணா, நேற்று பணிப்பெண் ஒருத்தியை விசாரித்துக் கொண்டிருந்தேன் அல்லவா? அவளுக்கு ஒரு ராணிக்குரிய ஆபரணங்களையெல்லாம் அணிவித்து இந்த தளத்தில் இருக்கும் மரக்கல கம்பத்தில் கட்டிவிட்டு எல்லோரையும் இங்கே வரச்சொல்'' என்றான்.

உதயணனுக்கு தலை கிறுகிறுத்தது.

விஜயனுக்கு மூளை பிசகிவிட்டதோ என்று நினைத்தவனாய் அப்படியே பிரமை பிடித்து நின்றான்.

அதைக்கண்ட விஜயன் ''நீ இன்னும் போகவில்லையா?'' என்று கேட்டான்.

''எனக்கு எதுவும் புரியவில்லை'' என்றான் உதயணன்.

''நேரம் வரும்போது புரியவேண்டிய விஷயங்கள் புரியும். தெரியவேண்டிய விஷயங்கள் தெரியும் என்று ஏற்கனவே நான் உன்னிடம் சொல்லவில்லையா?''

''உண்மைதான். அதற்காக என்னிடம் ஏன் புதிர்போட வேண்டும் என்பதுதான் புரியவில்லை''

''என்ன புரியவில்லை உனக்கு?''

''பணிப்பெண்ணை அழைத்து வரவேண்டும் என்கிறீர்கள்? அவளுக்கு ஏன் ராஜாங்க உடைகளை அணிவிக்க வேண்டும்?''

''வங்க இளவரசனின் மனைவிக்கு ராஜாங்க உடைகளை அணிவிப்பது தவறில்லையே?''

''யார்? தங்கள் மனைவியா? பணிப்பெண்ணா உங்கள் மனைவி?''

''பணிப்பெண் என் மனைவியல்ல. என் மனைவி மாயா பணிப்பெண்ணாக வேஷம் போட்டிருக்கிறாள்''

''இது உண்மையா? தங்கள் மனைவியை எனக்குத் தெரியுமே?''

''சம்பந்தமில்லாத யாரையோ என் மனைவி என்று நான் சொல்வேனா?''

''அடையாளமே தெரியவில்லை எனக்கு?''

''உனக்கு மட்டுமா? நம் தோழர்கள் யாருக்கும் அடையாளம் தெரியவில்லை. அதற்குக் காரணம் அவளை யாரும் இங்கே எதிர்பார்க்கவில்லை. அது அவளுக்கு அனுகூலமாய் இருந்திருக்கிறது.''

''தங்கள் துணைவியாருக்கு ராஜாங்க உடை அணிவிப்பது சரி. கம்பத்தில் ஏன் கட்டவேண்டும்?''

''விசாரணை நடத்துவதற்காகத்தான்''

''எதற்கு விசாரணை?''

''இங்கே நடந்த கொலைகளைப் பற்றிய விசாரணை''

''அதற்கும் உங்கள் துணைவியாருக்கும் என்ன சம்பந்தம்?''

''அது விசாரணையில் தெரியும்''

''இப்போது எதுவும் தெரியாதா?''

''உதயணா!'' என்று அதட்டிய விஜயன் ''உனக்கு இந்த அநாகரீகம் எப்படி வந்தது? ஏதோ குழம்பியிருக்கிறாய் என்று

விளக்கம் சொன்னால் என்னையே விசாரணை செய்ய ஆரம்பித்து விட்டாயே? போய் நான் சொன்னதைச் செய்'' என்று கடிந்து கொண்டான்.

''இளவரசே, என்னைக் கடிந்து கொண்டாலும் பரவாயில்லை. நான் சொல்ல வேண்டியதைச் சொல்லி விடுகிறேன். கொலைப் பழியை யார்மீது வேண்டுமானாலும் சுமத்தலாம். ஆனால் ஆதாரமின்றிச் சுமத்த முடியாது. அதுவும் கடலில் செல்லும் போது இப்படிப்பட்ட விசாரணையை மிகவும் கவனமாகச் செய்யவேண்டும். நீங்கள் ஆதாரமின்றி குற்றம் சாட்டுவது தெரிந்துவிட்டால் கப்பலில் இருப்பவர்கள் அனைவரும் உங்களுக்கு எதிராகத் திரும்பி விடுவார்கள். என்ன வேண்டுமானாலும் செய்வார்கள். எனவே ஆழம் தெரியாமல் காலை விடாதீர்கள் என்று உங்களுக்குப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்றான் உதயணன்.

''உன் அறிவுரைக்கு நன்றி. போய் வா''

விஜயனின் குரல் உறுதியாக ஒலித்தாலும் உதயணனுக்கு என்னவோ சந்தேகமாகத்தான் இருந்தது. இருந்தாலும் மேற்கொண்டு அவனோடு பேச இயலாத காரணத்தால் மாயாவை அழைத்துக் கொண்டு வரச் சென்றான். போகும் போதே தன் தோழர்களுக்கு விஷயத்தைத் கூறிவிட்டுச் சென்றானாதலால் பலரும் வியப்பும் அதிர்ச்சியும் கொண்டவர்களாய் கப்பலின் மேல்தளத்தில் கூடலானார்கள். அவர்களோடு மர்மனிதனும் பணியாளன் வேடத்தில் கூட்டத்தோடு கூட்டமாக நின்றான். அவனுக்குள் ஏதேதோ எண்ணங்கள் அலைமோதின. இப்படியொரு பகிரங்க விசாரணையை அவன் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. கப்பலில் நடைபெறும் விசாரணைகளைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்தான் அவன். விசாரணை என்பது பெயரில்தான் இருக்கும் என்பதும் உண்மையிலேயே அது ஒரு சித்திரவதை என்பதும் அச்சித்திரவதையில் எப்பேர்ப்பட்டவர்களும் உண்மையைக் கக்கி விடுவார்கள் என்பதையும் கேள்விப்பட்டிருந்த அவன் விசாரணை என்னும் சித்திரவதையின்போது 'மாயா உண்மையைச் சொல்லிவிட்டால் தன் உயிர் தப்பாது என்பதை

உணர்ந்த அவன் அந்த நிலை வந்தால் என்ன செய்யலாம் என்பதைப் பற்றி யோசிக்கலானான்.

இதற்கிடையில் ராஜாங்க உடைகள் அணிவிக்கப்பட்டு அங்கே அழைத்து வரப்பட்டாள் மாயா. அந்த கோலத்தில் அவள் கடல் தேவதையைப்போல காணப்பட்டாள். அந்த கோலத்தில் இருந்தவளை கம்பத்தில் கட்டியபோது எல்லோருக்குமே அனுதாபமாக இருந்தது.

விஜயனின் தோழர்கள் சிலர் முன்வந்து ''இளவரசே, தங்கள் துணைவியாரை இப்படி விசாரிக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. அவரை அவமானத்திற்கு இலக்காக்காமல் தங்கள் அறையிலேயே விசாரிக்கலாம்'' என்றார்கள்.

''யாரை எப்படி விசாரிக்க வேண்டும் என்ற உரிமை மரக்கலத்தலைவனுக்கு மட்டுமே உண்டு. அந்த உரிமையில் தான் விசாரிக்கிறேன். இங்கே எந்த வித்தியாசமும் கிடையாது. எல்லோரும் சமம். யாரும் எனக்கு அறிவுரை கூற வேண்டியதில்லை'' என்று கூறிய விஜயன் மாயாவைப் பார்த்தான்.

சாதாரணமாகவே மிடுக்குடன் இருப்பவளான அவள் தப்போது உயர்ரக ஆடை அணிகலன்களை அணிந்திருந்த காரணத்தால் பெரும் தோரணையுடன் காணப்பட்டாள். முகத்தில் அலட்சியம் தான் தெரிந்ததே தவிர அச்சத்தின் அடையாளம் எதுவும் காணப்படவில்லை. விஜயன் அதைக்கண்டு அசந்துவிடாமல் ''மாயா, இக்கப்பலில் நடந்த கொலைகளுக்குக் காரணமான கொலையாளிகளோடு உனக்குச் சம்பந்தம் இருப்பதாகத் தெரிய வருகிறது. யார் அந்தக் கொலையாளிகள்? உனக்கும் அவர்களுக்கும் என்ன தொடர்பு? சொல்'' என்றான்.

''பதிலை ஏற்கனவே சொல்லிவிட்டேன்'' என்றாள் மாயா.

''இது பகிரங்க விசாரணை. இங்கே சொல் உன் பதிலை''

''எங்கே கேட்டாலும் 'தெரியாது' என்பது தான் என் பதில்''

''தெரியும் என்பதற்கு ருசு இருக்கும்போது தெரியாது என்று சொல்வது பொய்''

''யார் எப்படி நினைத்துக் கொண்டாலும் எனக்குக் கவலையில்லை. நான் சொல்வது உண்மை கொலையாளி பற்றி எனக்கு எதுவும் தெரியாது''

விஜயன் அருகே இருந்த பணியாட்களை அழைத்து ''இவளுக்கு பத்து பலமான கசையடிகளைக் கொடுங்கள். அப்போதாவது உண்மையைச் சொல்கிறாளா பார்ப்போம்'' என்றான்.

அவனது உத்தரவு பலபேரையும் திகைப்படைய வைத்தது. இப்படியொரு கொடூரமான விஜயனை அவர்கள் அதுவரை கண்டதில்லை.

பணியாட்களுக்கும் ஒருமாதிரியாகத்தான் இருந்தது. இருந்தாலும் மறுத்துப் பேச முடியாமல் மாயாவுக்கு பத்து கசையடிகளைக் கொடுத்தார்கள். மாயாவின் உடலில் பல இடங்களில் ரத்தம் பீறிட்டது. வலி தாங்காமல் அவள் அலறினாள். அதைக் கண்ட மர்மமனிதன் 'இனி இவள் உண்மையைச் சொல்லி விடுவாள்'' என்று எண்ணியவனாய் கவனமாகப் பார்த்தான்.

''இப்போதாவது உண்மையைச் சொல் மாயா'' என்றான் விஜயன்.

''ஏற்கனவே சொல்லிவிட்டேன்'' என்றாள் மாயா.

''உதயணா, இவளை கீழ்த்தள அறையில் வைத்துப் பூட்டு. உணவோ நீரோ எதுவும் தரவேண்டாம் நீயே அந்த அறைக்குக் காவல் செய். அவளை யாரும் சந்திக்கக் கூடாது''என்றான் உதயணன்.

அங்கிருந்த பலபேருக்குச் சங்கடமாக இருந்தது. சிலருக்கு தன் மனைவி என்றும் பாராமல் கடுமையாக நடந்து கொள்ளும் விஜயனை எண்ணி பிரமிப்பாக இருந்தது. உதயணன் தன் இதயத்தைக் கல்லாக்கிக் கொண்டு மாயாவை கீழ்த்தள அறைக்குக் கொண்டு போனான். உள்ளே அவளை வைத்துவிட்டு அறையைப் பூட்டினான். வெளியே காவலுக்கு நின்றான்.

இது நடந்து நான்கு நாட்களில் ஏதேதோ நடந்துவிட்டன. நான்காம் நாளன்று உபதலைவன் ஒருவன் விஜயனிடம் வந்து ''தலைவரே, நாம் அனைவரும் மோசம் போய்விட்டோம்'' என்று அலறினான்.

◈◈◈

## அத்தியாயம் இருபத்தேழு

# கல்மன விஜயன்

மாயா விசாரணைக்கு உட்பட்டதிலிருந்து அவளைத் தனி அறையில் வைத்துப் பூட்டப்பட்டது வரை அனைத்தையும் கவனித்த மர்ம மனிதன் பலத்த யோசனைகளுடன் தன் வேலைகளை கவனித்தான். மாயாவுக்கு கசையடிகள் கொடுக்கப்பட்டபோது நிச்சயமாக அவள் தன்னை காட்டிக் கொடுப்பாள் என்று நினைத்தான் அவன். ஆனால் ரத்தம் பீறிட்டபோது கூட அவள் அவ்வாறு முற்படாதது அவனுக்கு வியப்பாக இருந்தது. அதேசமயம் அவளை அறையில் அடைத்து தண்ணீர் உட்பட எதையும் தரவேண்டாம் என்று விஜயன் கட்டளையிட்டபோது பழைய பயம் மீண்டும் அவனைக் கவ்விக் கொண்டது. கசையடிகளை மாயா தாங்கிக் கொண்டாலும் பட்டினியை நிச்சயம் தாங்கமாட்டாள் என்றும் தன்னைக் காட்டிக்கொடுத்து விடுவாள் என்றும் நினைத்த அவன் எப்படியாவது அந்த அறையிலேயே அவளைக் கொலை செய்துவிட விரும்பினான். ஆனால் அறை வாசலில் யமதர்மனைப் போல உதயணன் காவலுக்கு நின்றிருந்தது பெரும் இடைஞ்சலாக இருந்தது.

எதற்கும் முயற்சி செய்யலாம் என்ற நினைப்புடன் உதயணனிடம் வந்த அவன் ''தலைவர் என்ன இப்படிச் செய்து விட்டார்?'' என்று உதயணனின் வாயைக் கிளற முற்பட்டான்.

''உன் வேலையை ஒழுங்காய் போய்ச்செய். தலைவரைப் பற்றி எதுவும் பேச வேண்டாம்.'' என்று கறாராகச் சொன்னான் உதயணன்.

''ஏனய்யா இதற்குப் போய் கோபித்துக் கொள்கிறீர்? மனிதனுக்கு இரக்கம் இருப்பதுகூடத் தவறா?'' என்று கேட்டான் மர்மமனிதன்.

''இரக்கம் எல்லாரிடமும் இருக்கிறது. அதேசமயம் பொறுப்பு என்று வரும்போது இரக்கம் மறைந்து இறுக்கம் ஏற்படுவது இயற்கைதான். தலைவர் பதவி வகிப்பவர்களுக்கு இது சகஜம்'' என்றான் உதயணன்.

''உண்மைதான் ஐயா. நாமொன்றும் தலைவரின் கட்டளையை மாற்றி விடப்போவதில்லை. நமக்குள் அனுதாபப்பட்டுக்கொள்ளக் கூடாதா?'' என்றான் மர்மனிதன்.

''தலைவரின் கட்டளை உறுதியாக நிறைவேறும்போது நமது பரஸ்பர அனுதாபங்களால் என்ன பயன்? பயனற்ற உணர்வுகளை நாம் ஏன் ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்ள வேண்டும்? போய் வேலையைப் பாருங்கள்''

''ஏனய்யா, பெண் பாவம் பொல்லாது என்று பெரியவர்கள் சொல்வார்களே அது உங்களுக்குத் தெரியாதா?''

''பெரியவர்கள் அதை மட்டும் சொல்லவில்லை. தன்னைக் கொல்லவரும் பசுவையும் கொல்லலாம் என்றும் சொல்லி யிருக்கிறார்கள்''

இப்படி எதற்கெடுத்தாலும் உதயணன் வெடுக் வெடுக்கென பதில் சொல்லி விட்டதால் எதுவும் செய்ய முடியாமல் திரும்பினான் மர்ம மனிதன்.

அறையின் உள்ளே கிடந்த மாயா வலியினால் முனகினாள். பசியும் தாகமும் அவளை வாட்டின. ''ஐயா! ஐயா!'' என்று லேசாகக் குரல் கொடுத்தாள்.

வெளியே இருந்த உதயணன் உள்ளே போகலாமா வேண்டாமா என்று யோசித்துவிட்டு பிறகு பூட்டைத் திறந்து உள்ளே சென்று ''என்ன?'' என்று கேட்டான்.

''ரொம்பவும் தாகமாக இருக்கிறது ஐயா கொஞ்சம் தண்ணீர் கொடுங்கள்'' என்றாள் மாயா.

உதயணனுக்குத் தர்மசங்கடமாக இருந்தது. விஜயனின் கட்டளை ஒருபுறம் இருந்தாலும் மாயா விஜயனின் மனைவி என்ற நினைப்பு அவனை வாட்டியது.

மனதை மீண்டும் கல்லாக்கிக் கொண்டு ''அதற்கு எனக்கு அனுமதியில்லை தாயே. தலைவரின் கட்டளையை நான் மீறமுடியாது'' என்றான் கம்மிய குரலில்.

''உங்களை என் சகோதரனாக எண்ணிக் கேட்கிறேன். நெஞ்சு அடைக்கிறது - கொஞ்சம் தண்ணீர் கொடுங்கள். இனிமேல் கேட்க மாட்டேன்'' என்றாள்.

''தண்ணீர் என்ன, உணவைக்கூடத் தருகிறேன். என் பங்கைக்கூடத் தருகிறேன். உண்மையைச் சொல்லி விடுங்களேன். ஏன் பிடிவாதம் பிடிக்கிறீர்கள்?'' என்று கேட்டான் உதயணன்.

''எனக்குத் தண்ணீர் கொடுத்தால் உங்கள் உயிர் போய்விடும் என்று பயப்படுகிறீர்களா?''

''உயிர் போய்விடும் என்றில்லை. ஒழுங்கு போய்விடும் என்று தான் அஞ்சுகிறேன்''

''ஒழுங்கா?''

''ஆம். உங்களுக்குத் தண்டனை அளிக்கப்பட்டிருக்கிறது. அதை நிறைவேற்றுவது தான் என் கடமையே தவிர இரக்கப் படுவதல்ல. நானும் இரக்கப்பட்டு என்னைப்போல் அவரவர்களும் கடமையை மறந்து இரக்கப்பட ஆரம்பித்தால் ஒழுங்கு கெட்டுப் போய்விடும்''

''ஐயா, உங்கள் தலைவர் செய்வது சரியா?''

''அவர் தவறு செய்ய மாட்டார்''

''என்னைத் சந்தேகிப்பதற்கு ருசு வேண்டாமா?''

''வேண்டும்''

''அவரிடம் அது இருக்கிறதா?''

''இல்லாமல் போகாது''

''இருந்தால் என்னிடம் கூறலாமே?''

''கூறலாமா வேண்டாமா என்பதை அவர்தான் நிர்ணயிக்க முடியும்''

''நீங்கள் அவரது நெருங்கிய நண்பரா?''

''ஆமாம்''

''அவரிடம் என்னைப்பற்றிய ஆதாரம் எது என்பதை மட்டும் கேட்டு வந்து எனக்குச் சொல்ல முடியுமா?''

உதயணனுக்கே அதை அறியும் ஆவல் இருந்ததால் ''முயற்சி செய்கிறேன்'' என்று கூறிவிட்டு அறையைவிட்டு வெளியே வந்து கதவைச் சாத்தி தாளிட்டான். தோழர்கள் இருவரை அழைத்து வந்து காவலுக்கு வைத்துவிட்டு விஜயனின் இருப்பிடம் நோக்கிச் சென்றான்.

மேல் தளத்தில் தனது அறையில் படுக்காமல் தளத்திலேயே கால்களை நீட்டிப்படுத்திருந்தான் விஜயன். கடற்காற்று அவனது உடலுக்கு மிகவும் சுகமாக இருந்தது. அந்த இதமான நிலையில் தன் கண்களை வானத்தில் படரவிட்டான். வானம் மேகங்கள் இல்லாமல் நிர்மலமாய் இருந்ததால் நான்கு திசைகளிலும் கண்ணுக்கு எட்டியவரை நட்சத்திர கோலம் விரிந்திருந்தது. இயற்கையின் அளப்பறிய அழகு அவனைக் கவர்ந்தது. மனிதனால் முடியாத அதேசமயம் இயற்கையால் மட்டுமே முடியக்கூடிய அந்த நட்சத்திர சித்திரம் அவனுக்கு பிரமிப்பைத் தந்தது. கீழே தண்ணீரானது எல்லையில்லா கடலாக விரிந்திருக்க, வானத்திலேயோ அதேபோல் எல்லையில்லா நட்சத்திரங்கள் பூத்திருந்த விதமானது அவனை ரசிகனாக்கியது. கப்பலைப் பற்றியோ, கொலைகளைப் பற்றியோ, கொலைகாரர்கள் பற்றியோ, தனது லட்சியத்தைப் பற்றியோ எல்லா நினைவுகளையும் விட்டுவிட்டு இயற்கையின் அழகிலேயே மனதைச் செலுத்திய காரணத்தால் சந்தோஷமாக இருந்தது அவனுக்கு. இயற்கையின் குணமே சந்தோஷம்தான். இயற்கையோடு இணைந்து இயல்பாய் வாழ்பவனுக்குச் சுகங்கள் தான் கிடைக்குமேயன்றிச் சோகங்கள் தொடுவதும்

இல்லை. கிட்டத்தட்ட ஞானியின் சலனமற்ற நிலையில் இருந்தான் விஜயன்.

அந்த நேரத்தில் உதயணன் வந்து வணக்கம் தெரிவித்ததும் விஜயனின் 'இயற்கை தொடர்பு' அறுபட்டு செயற்கைத் தொடர்பைப் பற்றியது.

''நீயா, உன்னைக் காவலுக்கல்லவா நிற்கச் சொன்னேன்?'' என்று கேட்டான் விஜயன் படுத்தபடியே.

''காவலுக்கு வேறு ஆட்களை நிறுத்திவிட்டுத் தான் வந்தேன்''

''என்ன விஷயம்?''

''தங்கள் துணைவியாரைச் சந்தேகிக்க உங்களிடம் ஆதாரம் இருக்கிறதா?''

விஜயன் லேசாகச் சிரித்தபடி எழுந்து உட்கார்ந்து கொண்டு ''கப்பலில் இருக்கும் யாருக்கும் இல்லாத கவலை உனக்கு எதற்கு?'' என்று கேட்டான்.

''எல்லோரையும் போல் என்னால் இருக்க முடியவில்லை'' என்றான் உதயணன்.

''எல்லோரும் எப்படி இருக்கிறார்கள்?''

''அவரவர் வேலைகளைப் பார்க்கிறார்கள். கவலையில்லாமல் இருக்கிறார்கள்''

''உலக உண்மை அதுதான் உதயணா. அவரவர் வேலைகளை அவரவர் பார்த்தால் கவலையே வராது. நீ மட்டும் ஏன் முரண்படுகிறாய்?''

''மனம் கேட்கவில்லை இளவரசே. தங்கள் துணைவியாருக்கு அநீதி நடக்கிறதோ என்று மனம் என்னை வாட்டி எடுக்கிறது''

''மனம் என்பது என்ன? எண்ணங்களின் தொகுப்பு. அவ்வளவுதான். அந்த எண்ணங்களோடு வாழ்ந்தால் தொல்லைதான் வரும். எண்ணங்களை விட்டுவிடு. சுகமாக இருக்கிறதா இல்லையா பார்''

''மரக்கலத் தலைவர் வேதாந்தம் பேசுவது விந்தையாக இருக்கிறது''

''வேதாந்தம் என்பதற்கு உண்மை என்றுதான் அர்த்தம். இது தெரியாதவர்கள் வேதாந்தம் என்றால் வேண்டாத பொருள் என்று நினைக்கிறார்கள். உதயணா, இந்த உலகத்தில் அநீதிகளும் அக்கிரமங்களும் பாவங்களும் நடந்து கொண்டு தான் இருக்கின்றன. பலபேர் துன்பப்பட்டுக் கொண்டிருக் கிறார்கள். அவர்கள் மீதெல்லாம் வராத கவலை மாயாவின் மீது மட்டும் உனக்கு ஏன் வரவேண்டும்? அவள் என் மனைவி என்பதாலா?''

''அதில்லை இளவரசே. கண் முன்னால் ஒரு பெண் சித்திரவதைப்படுவதைக் காணச் சகிக்கவில்லை''

''ஒரு பாவமும் அறியாத மோனோ காலனும் பார்வையற்ற அசுவத்தாமரும் கொலையுண்டபோது எப்படிச் சகித்துக் கொண்டாய்?''

உதயணனால் இதற்கு உடனடியாக பதில் கூற முடியவில்லை.

''கண்முன்னால் பல நிகழ்வுகளைப் பார்க்கிறோம். பார்க்க முடியாத எத்தனையோ நிகழ்வுகள் எங்கேயும் நடந்து கொண்டிருக்கின்றன. ஆனால் குறிப்பிட்ட ஒருசில நிகழ்வுகளுக்கு மட்டும் உணர்ச்சிவசப்படுவது ஏன்?'' என்று கேட்ட விஜயன் ''எந்த விஷயத்திலும் உணர்ச்சி வசப்படுவதை நிறுத்திக்கொள். மோனோகாலன் கொலையுண்டபோது எல்லோரையும்விட அதிகமாக வேதனைப்பட்டவர் அசுவத்தாமர். இருவரும் நெருங்கிய சகாக்கள். சதுர்வேதியின் தலைமையின் கீழ் பணிபுரிந்தவர்கள். அந்த வகையில் மனமுடைந்துபோன அவர் அவன் கொலையுண்ட இடத்திலேயே படுத்துக் கிடந்தார். கொலைகாரனை கண்டுபிடிக்காமல் விடமாட்டேன் என்று என்னிடம் சபதம் செய்தார். அப்படிச் சபதம் செய்தவர் கொலையுண்டபோது எனக்கு வருத்தம் உண்டாயிற்று. கொலையாளியை கண்டுபிடிக்க முடியாமல் போய் விட்டாரே என்று நினைந்த நான் இரண்டு நாட்களுக்கு முன் அவர் உடல் கிடந்த

இடத்திற்குப் போய் படுத்துக் கொண்டேன். அந்த இடத்தை ஆராய்ந்தேன். பக்கப் பலகையின் இடுக்கில் ஓர் எழுத்தாணி இருந்தது. அதை எடுத்துப் பார்த்தேன். அதை வைத்துக் கொண்டு அவர் ஏதேதோ கிறுக்கியிருந்ததை நான் பார்த்திருக்கிறேன். எனக்கு ஏதோ பொறிதட்டியது. அவர் படுத்திருந்த தளத்தை நன்றாகத் துடைத்துவிட்டுப் பார்த்தேன். அதில் எழுத்தாணியால் ஏதோ கீறப்பட்டிருந்தது தெரிந்தது. உற்று கவனித்தேன். ''கொலையாளிக்கு மாயாவுடன் தொடர்பு உண்டு. அவன்...''என்று மட்டும் எழுதியிருந்தது. குற்றுயிரும் கொலையுயிருமாய் இருந்தபோது அவர் இதை எழுதியிருக்க வேண்டும். கொலைகாரனின் பெயரைக் குறிப்பிட முனைந்த போது உயிர் பிரிந்திருக்க வேண்டும். ஆகவே தான் வாக்கியம் அரைகுறையாக முடிந்திருந்தது. அசுவத்தாமர் எழுதியிருப்பது உண்மையாக இருக்க வேண்டும் என்று நான் கருதினேன். அதோடு வேறொரு விஷயமாக மாயாவின் பேரில் எனக்குச் சந்தேகம் இருந்ததால் அசுவத்தாமரின் செய்தியைக் கண்டபின் சந்தேகம் உறுதியாயிற்று. மாயாவை விசாரித்தால் கொலையாளியை அறியலாம் என்று முதலில் அவளைத் தனிமையில்தான் விசாரித்தேன். அவளோ பிடிகொடுக்க வில்லை. உரியமுறையில் விசாரித்தால் தான் உண்மையைச் சொல்வாள் என்று இன்று உரியமுறையில் விசாரணையை ஆரம்பித்தேன். துப்பு இல்லாமல் நான் துணியமாட்டேன் என்பதை இப்போதாவது புரிந்து கொண்டாயா?'' என்று கேட்டு நிறுத்தினான்.

அவன் கூறிய விவரங்கள் உதயணனை பரவசப்படுத்தின. மீண்டும் வணக்கம் தெரிவித்து அகன்றான்.

மறுநாள் மாயாவின் நிலை மோசமாகியது. அடிக்கடி மயக்கமடைந்து வந்தாள். நினைவிருந்தபோது தனது பிடிவாதத்தைப் பற்றி எண்ணிக்கொண்டாள். 'வாழ்நாள் முழுதும் வாழவேண்டிய கணவனிடம் உண்மையைச் சொல்லாமல் இடையில் வந்து சேர்ந்தவனைப் போய் எதற்காகக் காப்பாற்ற வேண்டும்? ஒரே காரணம் தான். விஜயனுக்கு கணவன் என்ற அந்தஸ்து இருந்ததே தவிர அவன் கணவனாக நடக்கவில்லை. மனைவிக்குரிய அந்தஸ்தை மட்டும் தந்தானே

தவிர அவளது ஆசைகளை கவனிக்கவில்லை. ஆனால் இடையில் வந்த மர்ம மனிதனோ எந்த அந்தஸ்தையும் சுமக்காமல் அவளைச் சுமந்தான். அவளது உடல் தேவைகளை கவனித்தான். அவளது கனவுகளை நிறைவேற்றுவதாகவும் வாக்களித்தான். அந்த ஒரே காரணத்தால் அவனைக் காட்டிக் கொடுக்க அவள் முன்வரவில்லை. 'காட்டிக் கொடுத்தாலும்கூட விஜயன் தனக்கு உபயோகமானவனாக இருக்கப் போவதில்லை. ஆசைகளை மறக்க ஆசைப்படு என்று கூறுகிறவன் எங்கே தனது கனவுகளை நிறைவேற்றப் போகிறான்? அவனுக்கு உதவுவது வீண். சாமர்த்தியம் இருந்தால் உண்மையை அறிந்து கொள்ளட்டும். நான் ஏன் உதவவேண்டும்'' என்ற நிலையில்தான் பிடிவாதமாக இருந்தாள் அவள்.

விஜயன் வெற்றுக் கணவனாக இருந்தாலும் நல்லவன் என்பதும், நல்லவனைப் போல இருக்கும் மர்மமனிதன் தன்னைக் கொன்றுவிடத் துடிக்கிறான் என்பதும் அவளது எண்ண வளையத்திற்கு அப்பாற்பட்டிருந்தன.

இரண்டாவது நாள் அவளிடம் வந்த விஜயன் ''இப்போதாவது சொல். யார் அந்தக் கொலையாளி? இரக்கம் காட்டி விட்டு விடுவேன் என்று மட்டும் நினைக்காதே'' என்று கூறியபோது எங்கிருந்தோ ஏதோ குரல் வருவது போல் தோன்றியதே தவிர பேசுவது யார் என்றோ என்ன பேசுகிறார்கள் என்றோ அவளுக்குப் புரியவில்லை. அவளது நிலை விஜயனுக்குப் புரிந்தது. அவள் ஏதாவது பேசவேண்டு மென்றால் தண்ணீராவது கொடுத்தால்தான் முடியும் என்று சிலர் கூறியபோது தண்ணீரைக் கொடுக்கச் சொன்னான் விஜயன். ஆனால் சிறிதளவு தண்ணீர் மட்டும் உள்ளே இறங்கியது. அதற்குமேல் தண்ணீர் வெளியே வந்தது.

மூன்றாவது நாள் ஏறக்குறைய மரணவாசலுக்கு வந்தாள் மாயா. அழகு அழகு என மர்மமனிதன் கள்ளத்தனமாய் சுவைத்த அவளது உடல் சுருங்கிப் போயிற்று. காந்தக் கண்கள் உள்ளே செருகிக் கொண்டன. நினைவு முழுவதுமாக தப்பிப் போயிற்று. தோழர்கள் சிலர் அவளுக்கு கருணை காட்டலாம் என்றார்கள். பிடிவாதத்திற்கு கருணைகாட்ட முடியாது என்றான் விஜயன்

உறுதியான குரலில். அன்று இரவு மாயா மரணமடைந்தாள். விஷயத்தை விஜயனுக்கு தெரிவித்தான் உதயணன்.

''உடலை எப்படி அப்புறப்படுத்த வேண்டுமோ அப்படியே செய்துவிடு'' என்றான் விஜயன்.

''நீங்கள் வந்து உங்கள் மனைவியின் சடலத்தைப் பார்க்க விரும்பவில்லையா?'' என்று கேட்டான் உதயணன்.

''தேவையில்லை'' என்றான் விஜயன்.

பிறகு உடல் கடலில் தூக்கி எறியப்பட்டது. பல்வேறு கனவுகளைச் சுமந்து தடம் மாறிப் பயணப்பட்டவள் அனாதைச் சடலம் போல் கடலில் மூழ்கினாள்.

அச்சம்பவம் கப்பலில் இருந்த அனைவரையுமே சற்று பாதிக்கத்தான் செய்தது விஜயனைத்தவிர.

அவன் மரக்கலத் தலைவனாக நடந்து கொண்டானே தவிர மாயாவின் மணாளனாக நடந்து கொள்ளவில்லை.

இந்நிலையில் உபதலைவன் ஒருவன் விஜயனிடம் வந்து ''தலைவரே, நாம் அனைவரும் மோசம் போய்விட்டோம்'' என்றான் பரபரப்புடன்.

''என்ன விஷயம்?'' சாதாரணமாகக் கேட்டான் விஜயன்.

''நம் மரக்கலம் நாகதீபத்திற்குப் போகவில்லை''

''வேறெங்கு போகிறது?''

'நாகர்மலைத் தீவுகளுக்கு''

''எப்படிச் சொல்கிறாய்?''

''அதோ கப்பலின் உச்சியை கவனியுங்கள்''

''பறவை ஒன்று உட்கார்ந்திருக்கிறது''

''தரையிலிருந்து வந்த பறவை அது. அதாவது கரை அருகில் இருந்தால் தான் பறவை வரும்''

''நெருங்கும் கரை நாகதீபக் கரையாக இருக்க முடியாதா?''

''அப்படித் தோன்றவில்லை''

''ஏன்?''

''அந்தப் பறவையின் பெயர் சாரா பறவை''

''சரி''

''அப்பறவைகள் நாகர்மலைத் தீவுகளில் மட்டுமே இருக்கின்றன''

''மரக்கலம் ஏன் திசைமாறி இங்கே வந்தது?''

''பாரடைஸைதான் கேட்கவேண்டும்''

''கூப்பிடுங்கள்''

ஆனால் பாரடைஸ் மரக்கலத்தில் எங்கும் காணாததால் ''பாரடைஸைக் காணவில்லை'' என்றார்கள்.

அப்போது உதயணன் வந்து ''கர்ணபத்ர பங்க பெட்டிகள் கொண்ட வலை காணவில்லை. அறுந்து தொங்குகிறது'' என்றான்.

அவனையடுத்து கப்பலில் உள்ளவர்களைக் கணக்கெடுப்பவன் வந்து ''இரண்டு பேர் குறைகிறார்கள்'' என்றான்.

''யார் யார்?''

''பாரடைஸ் ஒரு ஆள். பணியாளர் ஒரு ஆள்''

''கொலையாளி தப்பிவிட்டான்'' என்றான் விஜயன்.

அவன் கூறுவதை ஒப்புக்கொள்வதைப் போல் சாராப் பறவைகள் பல கப்பலை நோக்கி பறந்து வந்தன. தூரத்தில் நீண்ட மலை உச்சிகளும் தெரியலாயின.

◈◈◈

## அத்தியாயம் இருபத்தெட்டு

# நாகர் மலைத்தீவு

ஒரே நேரத்தில் பற்பல விபரீதங்கள் நடந்தேறின. அவற்றில் குறிப்பாக பாரடைஸூம் மர்மமனிதனும் கப்பலிலிருந்து காணாமல் போனது. மற்றும் அவர்களோடு கர்ணபத்ரபங்கப் பெட்டிகளும் பறிபோனது ஆகியவற்றைப் பற்றி விஜயனுக்கு கணக்கற்ற கேள்விகள் எழுந்தாலும் அவற்றையெல்லாம் அடக்கிக் கொண்டு மரக்கலத்தை நோக்கி வந்து கொண்டிருந்த சாராப் பறவைகளையும் தூரத்தே தெரிந்த மலைஉச்சிகளையும் கண்டான். மரக்கலம் நாகதீபத்திற்குப் போகாமல் நாகர்மலைத் தீவுக்கு வந்து விட்டது என்று கூறிய உபதலைவனைப் பார்த்து ''மரக்கலம் நாகர்மலைத் தீவுகள் பக்கம் வந்து விட்டது உனக்கு எப்போது தெரியும்?'' என்று கேட்டான்.

''பறவை ஒன்று நம் மரக்கலத்தில் வந்து அமர்ந்து கொண்ட பிறகு தான் நாகர்மலைத் தீவுக்கு வந்துவிட்டது உறுதியாகத் தெரிந்தது. ஆனால் கப்பல் பாதை மாறிப் போவதை பல நாட்களுக்கு முன்பே எல்லா உபதலைவர்களும் அறிந்தோம். பாரடைஸிடம் கேட்டோம். எல்லாம் தனக்குத் தெரியும் என்று சொல்லிவிட்டார்''

''மரக்கலம் பாதை மாறியதை முதலில் உணர்ந்தவர் அசுவத்தாமர். அதை உறுதி செய்தது டெமிட்ரியஸ். அதுபற்றி கேட்டபோது கடல் நீரோட்டங்களைக் காரணமாகச் சொன்னான் பாரடைஸ்'' என்றான் விஜயன்.

''பாரடைஸ் கூறியது உண்மைதான். கடல் நீரோட்டத்தை யொட்டி மரக்கலம் அரைவட்ட வடிவில் சுற்றி பிறகு நாகதீபம் இருக்கும் தென்மேற்கு திசையில் திரும்பவேண்டும். ஆனால் மரக்கலம் அவ்வாறு திரும்பாமல் நேர் தெற்கிலேயே சென்றது'' என்றான் உபதலைவன்.

''அதை எப்போது கண்டுபிடித்தீர்கள்?''

''பத்து நாட்களுக்கு முன்பாகக் கண்டுபிடித்தோம். பாரடைஸிடம் கேட்டோம். அவரோ எல்லாம் தனக்குத் தெரியும் என்று கூறிவிட்டார்''

''என்னிடம் ஏன் கூறவில்லை?''

''ஏற்கனவே பாரடைஸ் உங்களுடன் இது விஷயமாகப் பேசியதாகக் கேள்விப்பட்டேன். உங்களுக்குத் தெரிந்துதான் எல்லாம் நடக்கிறது என்று நினைத்துக் கொண்டோம்''

''இப்போது பாரடைஸைக் காணவில்லை. இதற்கென்ன அர்த்தம்?''

''தெரியவில்லை''

''ஏதோ ஒரு திட்டத்தோடு தான் வேண்டுமென்றே கப்பலை இங்கே கொண்டு வந்துவிட்டு தப்பியோடியிருக்கிறான். அநேகமாக கொலையாளியும் அவரோடு போயிருக்கலாம். கர்ணபத்ர பங்கப் பெட்டிகளை வலைகளில் கட்டி மறைக்கச் சொன்னவன் பாரடைஸ். இப்போது அப்பெட்டிகளும் பறிபோய் விட்டன. மொத்தத்தில் கொலையாளியும் பாரடைஸும் கூட்டு சேர்ந்து கொண்டிருக்க வேண்டும். ஆரம்பத்தில் அருவித் தீவில் இறங்கி திடீரென தொடர்ந்து நம்மோடு வருவதாகச் சொன்னான். அநேகமாக அந்த அருவித் தீவில் தான் கொலையாளியும் பாரடைஸும் கூட்டு சேர்ந்திருக்க வேண்டும். நம்மை திசை மாற்றி எங்கோ கொண்டுபோய் விட்டுவிட்டு கர்ணபத்ர பங்க பெட்டிகளோடு ஓடிவிட வேண்டும் என்பது அவர்களது திட்டமாக இருக்க வேண்டும். இது தெரியாமல் அவர்களோடு மாயாவும் கூட்டு வைத்திருக்க வேண்டும்''

விஜயன் கூறியதை அங்கிருந்த எல்லோருமே ஒப்புக் கொண்டார்கள்.

உபதலைவனைப் பார்த்த விஜயன் ''கொலையாளியும் பாரடைஸும் எப்படித் தப்பியிருக்க முடியும்? தப்பி எங்கே போக முடியும்?'' என்று கேட்டான்.

''நேற்றிரவு எல்லோரும் அசந்திருக்கும் சமயத்தில் நம் கப்பலிலிருந்து படகை இறக்கி அதில் ஏறிக்கொண்டு வலையை

அறுத்து பெட்டிகளையும் ஏற்றிக் கொண்டிருக்க வேண்டும். படகு மூலம் வேறெங்கும் போகமுடியாது. இதே நாகர் மலைத் தீவுகளில் வேறெங்காவதுதான் இறங்க வேண்டும்''

''அப்படியானால் தீவில் நாம் இறங்கினால் அவர்களைப் பிடித்து விடலாம் அல்லவா?''

''தலைவரே, உங்களுக்கு நாகர்மலைத் தீவுகளைப் பற்றித் தெரியுமா?''

''தெரியாது''

''நாகர்மலைத் தீவுகளில்* வாழ்பவர்கள் நாகரீகமற்ற காட்டுமிராண்டித்தனமான பழங்குடியினர். நரமாமிசம் உண்பவர்கள். பெரும்பாலானவர்கள் ஆடைகளைக் கூட அணிவதில்லை. இந்தியாவிலிருந்த வரும் எந்த மரக்கலமும் இத்தீவுகள் பக்கம் வருவதில்லை. தப்பித் தவறி வந்தால் இத்தீவு வாசிகள் கப்பலில் உள்ளவர்களைப் பிடித்து விருந்துணவாக்கிக் கொள்வார்கள். ஒருசிலர் கைகள் கால்கள் என்று தனித்தனியாக வெட்டி வைத்துக்கொண்டு வேக வைத்து உண்பதுண்டு. இத்தீவுகளில் நாம் அதிகமாகப் பார்க்கக் கூடியது மண்டை ஓடுகளைத்தான்''

''அப்படிப்பட்ட ஆபத்தான தீவிற்கு நாம் ஏன் போகவேண்டும். விலகிவிடலாம் அல்லவா?''

''விலகுவதென்பது இனிமேல் முடியாது''

''ஏன்?''

''தீவு வாசிகள் நம்மைப் பார்த்து விட்டார்கள்''

''எப்படிச் சொல்கிறாய்?''

---

* தற்கால அந்தமான் நிக்கோபார் தீவுகள் தான் பழங்காலத்தில் நாகர்மலைத் தீவுகள் என்றும் பிறகு மாநக்காவரத் தீவுகள் என்றும் அழைக்கப்பட்டது. இங்கே ஆடையின்றி வாழ்ந்தவர்களை நக்கசாரணர் என்று மணிமேகலை கூறுகிறது.

''அதோ அந்த மலை உச்சியைப் பாருங்கள். பெரியதாக சிவப்புக்கொடி ஒன்றிருக்கிறது. பகலாக இருந்தால் சிவப்புக் கொடியும் இரவாக இருந்தால் தீபமும் ஏற்றப்படும்''

''எதற்கு?''

''தீவுவாசிகளுக்கு நம் மரக்கலம் தீவுக்கு அருகில் வந்து விட்டதை அறிவிக்க. இந்த அடையாளத்தைக் கண்டதும் தீவு வாசிகள் உடனடியாகத் திரளுவார்கள். படகுகளில் ஏறி நம்மை நோக்கி வருவார்கள். அதோ பாருங்கள். கடற்கரைப் பகுதி அமர்க்களப்படுகிறது. படகுகள் கூட சில நம்மை நோக்கி வருகின்றன''

''அந்தப் படகுகளை அழிக்க நம்மால் முடியாதா?''

''ஒன்றிரண்டல்ல நூற்றுக்கணக்கில் படகுகள் வரும். நம் கப்பலைச் சூழ்ந்து கொள்ளும். அதில் உள்ளவர்கள் தீ வாளிகளையும் விஷ அம்புகளையும் சரமாரியாக நம்மை நோக்கி வீசுவார்கள். கப்பல் பற்றிக் கொள்ளும். அச்சமயத்தில் அவர்கள் நம் கப்பலில் தொற்றி ஏறுவார்கள். தாறுமாறாகத் தாக்குவார்கள். ஒருசிலர் இங்கேயே தாம் கொன்றவர்களின் உடல்களைப் பச்சையாகவே தின்பதும் உண்டு''

''அவர்களை எதிர்க்க முடியாதா?''

''நமது கப்பல் போர்க்கப்பலாக இருந்தால் ஓரளவிற்கு முடியும். போர்க்கப்பலாக இருந்த இது வங்க நாட்டுத் துறைமுகத்திலேயே வணிகக் கலமாக மாற்றப்பட்டு விட்டது. தற்போது இக்கப்பலில் போர் ஆயுதங்கள் எதுவுமில்லை. போர் வீரர்களும் இல்லை''

''உன் பெயர் என்ன?''

''தனஞ்செயன்''

''முதலில் தன் கப்பலையும் அதில் உள்ளவர்களையும் காப்பாற்ற வழிசெய்ய வேண்டும். அதற்குப் பிறகுதான் மற்றவை பற்றி யோசிக்க வேண்டும்'' என்று நினைத்த விஜயன் கடற்கரையை நோக்கினான்.

கடற்கரை என்று சொல்லும் அளவிற்கு அத்தீவின் முகப்பில் பெரிய மணற்பரப்பு இல்லை. பெயருக்கு சிறியதொரு திட்டு மட்டுமே காணப்பட்டது. மற்ற இடங்களில் பாறைகளும் குன்றுகளுமே இருந்தன. அவற்றின்மீது கடல்நீர் வேகத்துடன் மோதி பேரிரைச்சலை எழுப்பிக் கொண்டிருந்தன. மணல் திட்டிற்குப் பின்னால் அடர்ந்த காட்டுப் பகுதியும் அதற்கு பின்பு உயர்ந்த மலைகளும் இருந்தன.

ஒருவிதத் தீர்மானத்திற்கு வந்த விஜயன் தீவுக்கப்பலின் நங்கூரங்களை இறக்கி கப்பலின் இயக்கத்தை நிறுத்தும் படியும் தீவுக்கப்பலுக்குப் பின்னால் வந்து கொண்டிருந்த வங்க மரக்கலத்தை கடலுக்கு அனுப்பும்படியும் கூறினான்.

''தனஞ்ஜெயா, நம்மை நோக்கி வரும் தீவுவாசிகளின் படகுகளைத் தடுத்து நிறுத்த வேண்டும். தீவுக்கு நாமே வருவதாகத் தெரிவிக்க வேண்டும். ஆகவே கப்பலில் உள்ளவர்களை முகப்பிற்கு வரச்சொல்லி கைகளை ஆட்டச் சொல். வெள்ளைக்கொடிகள் இருந்தாலும் ஆட்டச் சொல்'' என்றான் விஜயன்.

''நீங்கள் சொல்வதையெல்லாம் செய்யலாம். ஆனால் அவர்கள் சட்டை செய்வார்களா என்பது தெரியவில்லை. நாம் பணிந்தாலும் பணியாவிட்டாலும் அவர்களுக்குக் கவலையில்லை. நரமாமிசத்திற்கு அலையும் அவர்களுக்கு வெறித்தனத்தைத் தவிர எதையும் காட்டத் தெரியாது'' என்று சொன்னான் உபதலைவன் தனஞ்செயன்.

''அனுமானங்கள் இருக்கட்டும். சொன்னதைச் செய்'' என்றான் விஜயன்.

விஜயன் அவ்வாறு கூறிக்கொண்டிருந்த சமயத்தில் கடற்கரையிலிருந்து சுமார் ஐம்பது படகுகள் கடலில் தள்ளப்பட்டுக் கொண்டிருந்தன. அவற்றில் ஏறி கடலுக்குள் வர நூறு பேர்களுக்கு மேல் தயாராக இருந்தார்கள். இந்த நிலையில் தீவுக்கப்பலில் இருந்தவர்கள் பெருமளவில் கப்பல் தளங்களின் முகப்பில் கூடி கைகளை ஆட்டலானார்கள். அபாயத்திற்கு அடையாளமாக சங்கொன்றை எடுத்து ஊதச் சொன்னான் விஜயன். இதைக் கண்ட தீவுவாசிகள் கடற்கரையில் திரண்டு

ஏதோ பேசிக்கொண்டார்கள். பிறகு ஏதோ முடிவு செய்தவர்களாய் படகுகளை கரைக்கு இழுத்துவிட்டார்கள்'' ஐந்தாறு பேர் முன்னால் வந்து பறைகளைக் கொட்டினார்கள்.

அதையெல்லாம் பார்த்த விஜயன் தன் அறைக்குப்போய் ராஜரீக உடைகளையும் கிரீடமும் அணிந்துகொண்டு வந்தான். தனஞ்செயனைப் பார்த்து ''உனக்கு இத்தீவு வாசிகளின் மொழி தெரியுமா?'' என்று கேட்டான்.

''ஓரளவிற்குத் தெரியும்''

''அது போதும். படகை இறக்கச் சொல். அதில் நீ, நான், உதயணன், டெமிட்ரியஸ், ஒரு பணியாள் ஆகியோர் முதலில் போகலாம். தேவைப்பட்டாலன்றி யாரும் தீவுக்கு இப்போது வரவேண்டாம்'' என்று கூறிய விஜயன் தீவுக்கப்பலில் இருந்த மாமிச உணவுகளையும் ஒரு படகில் ஏற்றச்சொல்லி கடற்கரையை நோக்கிப் புறப்பட்டான்.

தீவுவாசிகள் படகுகளில் வராமல் கடற்கரையிலேயே நின்று விட்டதை விஜயன் சுட்டிக்காட்டியபோது ''அவர்களை அற்பமாக எடைபோட்டு விடாதீர்கள் தலைவரே. அவர்களிடம் நாகரீகம் இல்லை என்றாலும் திறமைகள் பல இருக்கின்றன. நாமாக முன் வந்து அவர்களிடம் சரணடையும்போது தாமாக ஏன் சிரமப்படவேண்டும் என்றுதான் படகுகளில் வராமல் கடற்கரையிலேயே நின்றுவிட்டார்கள்'' என்றான் உபதலைவன் தனஞ்செயன்.

அவன் கூறியது உண்மை என்பது கரைக்குப் போனதுமே தெரிந்தது விஜயனுக்கு. கடற்கரையில் இருந்தவர்களில் பாதிக்கு மேல் ஆடையில்லாதவர்களாக இருந்தார்கள். மற்றவர்கள் தழைகளைக் கோர்த்து அணிந்து கொண்டு இடுப்புக் கீழே மட்டும் மறைத்திருந்தார்கள். அவர்களில் ஆண் பெண் இருபாலர்களும் இருந்தார்கள். பலருக்கு தலையில் முடி வளராமல் மொட்டையாகவும் கரடுமுரடாகவும் இருந்தது. சிலருக்கு ஜடாமுடிகள் காடாக வளர்ந்து முறையாகப் பராமரிக்கப்படாததால் ஆலம் விழுதுகளைப் போல இறுகி ஒட்டிக் கொண்டிருந்தன. அனைவருமே கன்னங்கரேலென்று இருந்தார்கள். எது இல்லை என்றாலும் சாப்பாட்டிற்குக்

குறைவில்லை என்பதை அவர்களது வாளிப்பான உடல் எடுத்துக்காட்டியது. சிலர் குட்டையாகவும் பலர் நெட்டையாகவும் இருந்தார்கள். ஆனால் ஒருவர் கூட பார்க்கும் படியாக இல்லை. அனைவருமே கோரச் சொரூபிகளாகவே இருந்தார்கள்.

அங்கே இருந்த அனைவரையும் நோட்டம் விட்டபடி விஜயனும் மற்றவர்களும் கரையில் இறங்கியதும் பின்னால் வந்த படகில் இருந்த உணவு வகையறாக்களைச் சுட்டிக்காட்டி ''இது உங்களுக்கு'' என்று விஜயன் சொல்ல அதை தனஞ்செயன் மொழி பெயர்த்தான்.

ஆனால் தீவுவாசி இதைக்கேட்டு அசரவில்லை. மாறாக ''இக்கப்பலே எங்களுக்குச் சொந்தம். இது என்ன பிரமாதம்?'' என்று சொல்லி விஜயனை அசர வைத்தான்.

விஜயன் தன் ஏமாற்றத்தைக் காட்டிக் கொள்ளாமல் ''அதனால் என்ன? இந்த அரிய மாமிச உணவை நீங்களெல்லாம் உண்ணக் கூடாதா என்ன?'' என்று கேட்டான்.

அதற்குத் தீவுவாசி கூறிய பதில் விஜயனை மேலும் அசர வைத்தது.

''நாங்கள் மற்றவர்கள் கொண்டு வரும் உணவுப் பொருட்களை உண்பதில்லை. அவற்றை காட்டு நாய்களுக்குத் தான் போடுவோம். நாங்கள் உண்பதாக இருந்தால் புதியதாக யாரையாவது கொன்றுதான் சாப்பிடுவோம்'' என்று சகஜமாகக் கூறிய தீவுவாசி'' கப்பலில் இருந்த மற்றவர்கள் எங்கே?'' என்று கேட்டான்.

''விரைவில் வருவார்கள்'' என்றான் விஜயன்.

தீவுவாசி அதை ஒப்புக் கொள்ளவில்லை.

''அதெல்லாம் முடியாது. எல்லோரும் இப்போதே வரவேண்டும். அப்போதுதான் கணக்கு போடமுடியும்''

''என்ன கணக்கு?''

''எங்களுக்கு எத்தனை நாள் உணவுக்குப் போதுமானவர்கள் இருக்கிறார்கள் என்று கணக்கு போடவேண்டும்''

''எங்களையெல்லாம் கொல்லப் போகிறீர்களா?''

''ஆமாம். வேறு எதற்கு நீங்கள்?''

இச்சமயத்தில் வீராவேசமாகப் பேசிப்பயனில்லை என்று நினைத்த விஜயன் லேசாகச் சிரித்தான்.

தீவுவாசிக்கு அந்தச் சிரிப்பு பிடிக்கவில்லை.

''எதற்காகச் சிரிக்கிறாய்?'' என்று மிரட்டினான்.

''சாகப்போகிறவர்கள் அழுதாலென்ன? சிரித்தால் என்ன? இரண்டும் ஒன்றுதானே?''

''நல்ல பேச்சு. இது எங்களுக்குப் பிடித்திருக்கிறது'' என்று சொன்ன தீவுவாசி ''வரச்சொல்லுங்கள் கப்பலில் உள்ளவர்களை'' என்றான்.

விஜயனும் வேறு வழியில்லாமல் தீவுக்கப்பலை நோக்கி கைகளைக் காட்டி வரும்படிச் சைகை செய்தான்.

கடற்கரையைப் பார்த்தபடி நின்றிருந்த எல்லோரும் விஜயனின் சைகையைக் கண்டதும் படகு மூலம் கரைக்கு வரலானார்கள். தீவுக் கப்பலில் படகுகள் அதிகம் இல்லாததால் தீவுவாசிகளே தங்கள் படகுகளை அனுப்பி அனைவரையும் வரவழைத்தார்கள். அசுவநாவிகர் மட்டும் தீவுக்கப்பலிலேயே இருந்தார்.

கடற்கரைக்கு வந்து சேர்ந்தவர்களை வரிசையாக நிற்க வைத்து இருபுறங்களிலும் தீவுவாசிகள் வரிசையாக நின்றார்கள். போர்க்கள அணிவகுப்பு போல கச்சிதமாக அமைந்தது அந்த அணிவகுப்பு. அதையடுத்து பறையடிப்பவர்கள் பறைகளை அடிக்க ''புறப்படுங்கள். தலைவரைப் பார்ப்போம்'' என்றான் தீவுவாசி. அதையடுத்து அணிவகுப்பானது கடற்கரையிலிருந்து நகர்ந்து காட்டுப் பகுதியில் நுழைந்தது.

அணிவகுப்பு புறப்படும்போது பட்டப்பகல் ஆகிவிட்டதால் காட்டுவழியில் நுழைந்த சிறிது நேரத்திலேயே ஏரிபோன்ற ஓர் இடத்திற்கு வந்ததும் விஜயனையும் அவனைச் சேர்ந்தவர்களையும் ஆட்டு மந்தையைப் போல கும்பலாக அமர வைத்துவிட்டு தீவு வாசிகள் அருகே சென்று விலங்குகள்

சிலவற்றைப் பிடித்து வந்தார்கள். அவற்றில் பல வகையறாக்கள் இருந்தன. மான்கள், முயல்கள், பன்றிகள், பறவைகள் என வேட்டையில் கிடைத்த சகல உயிரினங்களையும் கொண்டு வந்து சிக்கிமுக்கிக் கற்களால் தீயை உண்டாக்கி கட்டைகளைப் போட்டு எரித்து அதில் வேட்டையாடப்பட்ட மிருகங்களின் தோலை உரித்துவிட்டு மாமிசத்தைத் தீயில் வைத்து வாட்டி அவரவர்களும் மிருகங்களைப் போலவே கடித்து உண்டார்கள். மாமிசத்தையடுத்து பழங்களும் பிறகு மதுவும் அவர்களது வயிற்றுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. ஏரியிலிருந்து தண்ணீரை மரக்குவளைகளில் மொண்டு குடித்தார்கள்.

விஜயனைப் பற்றியோ அவர்களுடன் இருந்தவர்களைப் பற்றியோ கவலைப்படவில்லை. விசாரிக்கவுமில்லை. தங்கள் அளவில் பசியாறிய உடனே ''ம். கிளம்புங்கள்'' என்று கூறி பழையபடியே அணிவகுப்பை அமைத்து அழைத்துச் சென்றார்கள். பல இடங்களில் சூரிய ஒளியே விழாத அளவிற்கு காட்டுப்பகுதியில் மரங்கள் அடர்த்தியாக இருந்தபடியால் தீவு வாசிகள் பந்தங்களைக் கொளுத்தினார்கள். வழிநெடுக விலங்குகளின் உறுமல்கள் கேட்டபடி இருந்தாலும் எந்த மிருகமும் அவர்களைத் தாக்க முன்வரவில்லை. நாகர்மலைத் தீவுகளைப் பொறுத்தவரை விலங்குகளைவிட தீவுவாசிகள் பலம் கொண்டவர்களாக இருந்ததாலும் அடிக்கடி மிருகங்களை ஈவு இரக்கமின்றி வேட்டையாடிக் கொன்றதாலும் மிருகங்கள் அவர்களுக்கு அஞ்சியே வாழ்ந்து வந்தன.

இந்த விவரங்கள் எதுவும் தெரியாத நிலையில் விலங்குகளின் உறுமல்களைக் கேட்டு அஞ்சியவர்களாகவே நடந்தார்கள் விஜயனின் தோழர்கள். அணிவகுப்பு நீண்டதூரம் வரை சென்று மலை அடிவாரம் ஒன்றின் முன் நின்றது. அந்த இடத்தில் மலை குடையப்பட்டு பெரியதொரு குகைபோல அமைக்கப்பட்டிருந்தது. அங்கு சென்றதும் பறையொலி நிறுத்தப்பட்டது. குகைப் பகுதி முழுவதும் பந்தங்கள் ஏற்றப்பட்டு பிரகாசப்படுத்தப்பட்டது. தீவுக்கப்பலைச் சேர்ந்தவர்களை குகைக்குள் அமரச் செய்த தீவுவாசிகள் அவர்களைச் சுற்றி அமர்ந்து கொண்டார்கள்.

குகையில் ஒருமேடை இருந்தது. அதன் மீது மண்டை ஓடுகளால் அமைக்கப்பட்ட பெரிய ஆசனம் ஒன்றிருந்தது. அதன் இரு பக்கமும் பூதங்களைப் போல இரண்டு பேர் நின்றிருந்தார்கள். அவர்கள் கையில் இருந்த பட்டையான கத்திகள் பயங்கரமாக இருந்தன. தீவுவாசி ஒருவன் சங்கை எடுத்து ஊதினான். மற்றொருவன் மிருகத்தைப் போல குரல் கொடுத்தான். அதையடுத்து சில நிமிடங்களில் தீவுவாசிகளின் தலைவன் வந்து மண்டையோட்டு ஆசனத்தில் அமர்ந்தான். அவனுக்குப் பின்னால் வந்த பெண் அவனது தொடையிலே அமர்ந்தாள்.

அப்போது காட்டு நாய் ஒன்று மரண ஓலமிட்டது.

◈◈◈

## அத்தியாயம் இருபத்தொன்பது

## டிமார்க்கோ

நரமாமிசம் உண்ணும் தீவுவாசிகளின் தலைவன் புராணங்களில் கூறப்படும் அரக்கனைப் போல பிரம்மாண்டமாயும் படுபயங்கரமாயும் இருப்பான் என்று எதிர்பார்த்த விஜயன் ஏமாந்து போனான். மண்டையோட்டு ஆசனத்தில் வந்து அமர்ந்த தலைவன் ஒற்றைநாடி சரீரம் கொண்டவனாயும் நல்ல உயரம் கொண்டவனாயும் இருந்தான். முகத்தை மறைக்கும் புதர்போன்ற மீசை இருக்கும் என்று எதிர்பார்த்ததற்கு மாறாக அவனது முகம் நன்றாக மழிக்கப்பட்டு மீசையில்லாமல் இருந்தது. தலையில் நீண்ட மயிர்கள் இருந்தாலும் அவை நன்றாக வாரி பின்னப்பட்டு ஓரிரு மலர்களும் செருகப்பட்டிருந்தன. கரியதொரு துணியை கண்டபடிச் சுற்றிக் கட்டியிருந்தான். மற்றபடி மார்பும் தோள்களும் திறந்தும் திரண்டும் இருந்தன. கறுப்பு நிறத்தை அவன் கொண்டிருந்தாலும் அது பார்ப்பதற்கு அருவறுப்பானதாக இல்லை.

அவன் தொடையில் வந்து அமர்ந்த பெண்ணும் கறுப்பாகவே இருந்தாள். ஆனால் தீவுவாசிகளிடமெல்லாம் இல்லாத அழகு அவள் முகத்தில் இருந்தது. நீண்டு கிடந்த கூந்தலை வாராமல் விட்டிருந்தாளாதலால் அது கண்டபடி அலைந்து தனி அழகைக் கொடுத்திருந்தது. இடையில் அவள் தாவர இலைகளால் கோர்க்கப்பட்ட ஆடையை அணிந்திருந்தாள். அதேபோன்ற தாவரக் கவசம் மார்பு பகுதியிலும் இருந்தது. அவனது தொடையில் வந்து கொத்தாக அமர்ந்தபோது பருத்த மார்பகங்கள் குலுங்கியதால் கச்சு அறுந்து விடவே அதை எடுத்து பொறுமையாகக் கட்டினான் தீவுவாசிகளின் தலைவன். கச்சு அறுந்த போதும் சரி பிறகு கட்டப்பட்ட போதும் அவள் சிறிதும் வெட்கப்படவில்லை. அவனது தொடையில் அமர்ந்தபோது இடையில் இருந்த தாவர இலைகள் தாறுமாறாக மடிந்த போதும் கவலைப்படவில்லை. அவளும் சரி, தலைவனும் சரி, தீவுவாசிகளும் சரி வெட்கம் என்பது என்னவென்பதை அறியாதவர்களாய் இருந்தார்கள்.

விஜயனைச் சேர்ந்தவர்களின் நிலையோ சொல்லும் தரமற்றதாக இருந்தது. ஆடையற்றுத் திரிந்த தீவுவாசிகளைக் கண்டதிலிருந்து அவர்களின் உணர்ச்சி ஒருநிலையில் இல்லை. ஆனால் அவர்கள் எல்லோருமே கோரமானவர்களாக இருந்ததால் வெறும் மிருகங்களைப் போலவே தோன்றினார்கள். தலைவனின் தொடையில் அமர்ந்தவளோ சற்று அழகாக இருந்து விட்டதால் அவளது அங்கங்கள் தெரிந்தபோதும் குலுங்கிய போதும் அவர்களால் உணர்ச்சிப்படாமல் இருக்க முடியவில்லை.

இதற்கிடையில் தீவுவாசிகளின் தலைவன் விஜயனைப் பார்த்து ''யார் நீங்கள்?'' என்று கேட்டான்.

விஜயன் சற்றே துணிந்து ''எங்கள் நாட்டில் பலியாட்டிற்கு நல்ல உணவளிப்பார்கள். மாலைசூட்டி கௌரவப் படுத்துவார்கள். உங்கள் ஆட்களுக்கோ இந்தச் சாதாரண விஷயம்கூடத் தெரியவில்லை. பலியிடப் போகும் எங்களைப் பட்டினி போட்டுவிட்டு அவர்கள் எல்லோரும் வயிறார உண்டார்கள். இதை நீங்கள் ஒப்புக் கொள்கிறீர்களா?'' என்று தனஞ்செயன் மூலமாகக் கேட்டான்.

இக்கேள்வி தலைவனுக்கு வியப்பாக இருக்கவே ''இது உண்மையா?'' என்று கேட்டான்.

தீவுவாசியொருவன் அதற்குத் தலையை ஆட்டவே ''யார் அப்படிச் செய்தது? இங்கே வருபவர்கள் எல்லோரும் நம் உணவாகப் போகிறவர்கள். அப்படிப்பட்டவர்களுக்கு ஒரு வார காலத்திற்கு அவர்கள் விரும்பும் வகையறாக்களை அளித்து சந்தோஷப்படுத்துவது தானே நம் வழக்கம்? அப்படி அவர்கள் சந்தோஷத்தில் இருக்கும்போது பலி கொடுத்தால் தானே நம் தெய்வம் திருப்திப்படும்? அப்படி இருக்கும் இவர்களை எப்படி பட்டினி போடலாம்?'' என்று கோபமாக எழுந்த தலைவன் ''யாரது இக்காரியத்தைச் செய்தது?'' என்று கேட்டான்.

கடற்கரையில் விஜயனோடு பேசிய தீவுவாசி எழுந்து ''தலைவரது விருப்பம் எதுவென்று தெரியாததால் அப்படி ஆகிவிட்டது'' என்றான்.

''என் விருப்பம் என்பது ஒன்று தானே? யாராக இருந்தாலும் பலியிடுவதுதான் என் வழக்கம். இது உனக்கு எப்படித் தெரியாமல் போனது?'' என்று கூறி அருகில் நின்றிருந்தவனிடமிருந்து பட்டாக் கத்தியை வாங்கி தீவுவாசியின் கழுத்தை நோக்கி வீச அக்கத்தியும் குறிதவறாமல் அவனது கழுத்தை அறுத்து தலையை வீழ்த்தியது. அதைக் கண்டு எல்லோரும் கைகளைத் தட்டி ஆரவாரம் செய்தார்கள்.

ஏதோ ஒரு சோதனைக்காக கேட்ட கேள்வி இத்தகைய விபரீதத்தை உண்டாக்கிவிடும் என்று விஜயன் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. தலைவன் நியாயமானவனைப் போல் தோன்றினாலும் இப்படி திடுதிப்பென்று சரிவர விசாரிக்காமல் தன் தீவுவாசியை இரக்கமின்றி கொன்றதும் அதைக்கண்டு தீவுவாசிகள் மகிழ்ந்து பாராட்டியதும் அவனுக்கு அசாதாரணமாக இருந்தது. மனிதர் உயிர்கள் இத்தீவில் ஒரு பொருட்டே இல்லை என்பதை உணர்ந்த அவன் தான் மட்டும் புத்திக் கூர்மையோடு நடந்து கொள்ளாவிட்டால் தோழர்களோடு தீவை விட்டு வெளியேறுவது வெறும் கனவாகிவிடும் என்பதையும் அறிந்தான். நரமாமிசம் உண்பவர்களுக்கு உயிர்கள் ஒரு பொருட்டல்ல என்றாலும்

உயிரை நீக்குவதற்கு முறையான காரணமோ விசாரணையோ அவசியம் என்பதை தீவுவாசிகளும் தலைவனும் உணராமல் இருப்பது விஜயனுக்குச் சற்று கவலை அளித்தது.

இதற்கிடையில் தீவின் தலைவன் தனது சகாக்கள் சிலரிடம் உடனடியாக உணவையும் பழங்களையும் கொண்டு வரும்படி உத்தரவிட்டு விட்டு ஆசனத்தில் அமர்ந்தான். அந்தப் பெண் அவனைக் கட்டிப்பிடித்து அனைவர் முன்னிலையிலும் முத்தமிட்டாள். முன்பு போலவே மார்புக் கச்சு அவிழ்ந்து விடவே அவள் தன் மார்பை அவனோடு மோதச் செய்தாள். விவஸ்தையற்ற அவளது செயல்கள் முற்றுவதற்குள் அருகில் இருந்த பணிப்பெண் ஒருத்தி ஏதோ ஒரு பட்டையைக் கொண்டு வந்து மார்பகங்களை மறைக்கும்படிக் கட்டி இழுத்து ஒரு முடிச்சையும் போட்டாள். அடுத்த சில நிமிடங்களில் உணவு வரவே வயிறார உண்டார்கள். அடுத்து எல்லோருக்கும் மது வழங்கப்பட்டது. மதுவை அவர்களோடு சேர்ந்து தலைவனும் அவனது மார்பில் தவழ்ந்த பெண்ணும் அருந்தி மகிழ்ந்தார்கள்.

ஒருவழியாக எல்லாம் முடிந்தபின் அப்பெண்ணை எலும்புகூட்டு ஆசனத்தில் பக்கத்தில் அமர வைத்துக்கொண்ட தலைவன் ''சரி. இப்போது சொல்லுங்கள். நீங்களெல்லாம் இந்தத் தீவிற்கு எதற்காக வந்தீர்கள்?'' என்று கேட்டான்.

விஜயன் அவனோடு தனஞ்ஜெயனின் மூலம் உரையாடினான்.

''யாருமே இந்தத் தீவுக்கு வருவதில்லை என்று கேள்விப்பட்டேன். ஆகவே தான் வந்தேன்'' என்றான் விஜயன்.

''இங்கே வருவதற்கும் இப்படிப் பேசுவதற்கும் உனக்கு மிகவும் துணிச்சல் இருக்க வேண்டும்'' என்றான் தலைவன்.

''இங்கே வருவதற்கு நாங்கள் ஏன் பயப்படவேண்டும்?'' என்று கேட்டான் விஜயன்.

''இத்தீவைப் பற்றி நீ என்ன கேள்விப்பட்டாய்?''

''இங்கே வருபவர்கள் கொல்லப்படுவார்கள் என்று கேள்விப்பட்டேன். அதற்கு பயந்தே மரக்கலங்கள் இத்தீவுப் பக்கம் வருவதில்லை என்றும் கேள்விப்பட்டேன்''

''பிறகு எந்த தைரியத்தில் இங்கே வந்தாய்?''

''மனிதனாகப் பிறந்தவன் ஒவ்வொருத்தனும் ஒரு நாள் சாகத்தான் வேண்டும். அதுவும் கடலில் பயணப்பட்டவனுக்கு சாவு எப்போது வேண்டுமானாலும் வரலாம். ஆகவே மரணத்திற்குப் பயப்படுவது அர்த்தமற்றது. அந்த அர்த்தமற்ற காரணத்திற்காக இத்தீவுக்கு வர மறுப்பது முட்டாள்தனமானது''

விஜயனின் பேச்சு தலைவனை அசரவைத்திருக்க வேண்டும். ''இத்தீவில் வருகிற எவனும் உயிரோடு திரும்பாத பட்சத்தில் இவன் மட்டும் சாகாவரம் பெற்றவனைப் போல் எப்படிப் பேசுகிறான்'' என்று வியந்த தலைவன் அதை வெளியே காட்டிக் கொள்ளவில்லை.

''நீ யார்?'' என்று கேட்டான்

''பரத நாட்டில் உள்ள வங்கதேசத்தின் இளவரசன் விஜயபாகு'' என்றான் விஜயன்.

''ஓ! சிகபாகுவின் புதல்வனா?''

''என் தந்தையை உங்களுக்குத் தெரியுமா?''

''கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் அதனால் உனக்கு எந்தப் பலனும் இல்லை. நீ இளவரசன் என்பது உன் தோரணையில் தெரிகிறது. ஆனால் அதனாலும் உனக்கு எந்தப் பலனும் இல்லை. ஏனென்றால் இத்தீவுக்கு யார் வந்தாலும் 'எங்களது உணவு' என்ற ஒரே அந்தஸ்துதான்'' என்று கூறி ஏதோ நகைச்சுவையைக் கூறிவிட்ட மாதிரி பெரிதாகச் சிரித்தான்.

''இந்தத் தீவைவிட்டு வெளியே வரவேண்டும் என்று நீங்கள் நினைப்பதில்லையா?'' என்று கேட்டான் விஜயன்.

''எதற்கு வரவேண்டும்? எங்களுக்கு வேண்டியது நீர் மற்றும் உணவு. நீருக்கு இங்கே பஞ்சமில்லை. உணவுக்கும் இக்காடுகளில் உள்ள மிருகங்கள் பயன்படுகின்றன. சமயத்தில் சிறப்பு உணவாக உங்களைப் போன்றவர்கள் வந்து சேருகிறார்கள். நாங்கள் ஏன் வெளியே போகவேண்டும்?''

''அது உண்மைதான். நாகரீகம் எதுவும் இல்லாமல் அதைப் பற்றி அறிந்துகொள்ள வேண்டிய விருப்பமும் இல்லாமல்

கண்டபடி திரிந்துகொண்டு மிருகங்களோடு மிருகங்களாய் மிருகம் போலவே உண்டு வாழும் உங்களுக்கு வெளி உலகம் எதற்கு?'' என்று உள்ளுக்குள் சொல்லிக் கொண்ட விஜயன். ''இதெல்லாம் மிருகங்களுக்குத்தான் பொருந்தும். மனிதர்களுக்கு அல்ல'' என்றான்.

இதைக் கேட்டுக் கோபமடைந்த தலைவன் ''என்ன சொல்கிறாய் நீ?'' என்று கேட்டான்.

''உடைகளைப் பற்றிய கவலையோ உணர்வோ இல்லாமல் உண்பதையும் உறங்குவதையும் மட்டும் வாழ்வாகக் கொண்டது மிருகங்கள். மனிதன் அப்படிப்பட்டவனல்ல. அவனுக்கு நாகரீகம் முக்கியம். அதைக் கற்றுக்கொள்ள அவனுக்கு ஆறாவது அறிவு இருக்கிறது. அதைக் கற்றுக் கொள்ள அவன் வேறு இடங்களுக்கு வரவேண்டும். இங்கேயே இருந்தால் விலங்குகள் சிறைச்சாலையில் இருப்பதைப் போலத்தான் இருக்க வேண்டும்''

''உனக்குப் பாலி மொழி தெரியுமா?''

''என் தாய் மொழியே அதுதான்''

''இங்கே வந்து சிக்கியவர்களில் பெரும்பாலோர் பாலிமொழி பேசுபவர்கள். அவர்களிடமிருந்து நானும் இத்தீவு வாசிகளும் அம்மொழியைக் கற்றோம்''

''உங்களுக்குத் தேவை உணவும் நீரும் தானே? பாலிமொழி எதற்கு? அதைக் கற்று என்ன செய்யப் போகிறீகள்?'' என்று பாலி மொழியிலேயே நேரடியாகப் பேசினான் விஜயன்.

''நான் சொல்ல வந்ததைக் கேள். இங்கே வந்தவர்களிடம் பாலி மொழியைக் கற்றோம். ஆனால் கற்றுக்கொடுத்த யாரையும் உயிரோடு விடவில்லை. எங்கள் தெய்வத்திற்குப் பலிகொடுத்து எல்லோருமாக உண்டோம். இப்போது பாலிமொழி பேசும் நீங்கள் வந்திருக்கிறீர்கள். உங்கள் கதியும் இதுதான்'' என்று கூறிச் சிரித்தான் தலைவன்.

எப்படிப் பேசினாலும் மனித இறைச்சியை உண்ணும் அநாகரீகத்திற்கே தலைவன் திரும்பியதைக் கண்ட விஜயனுக்கு வெறுப்பாக இருந்தது. அவனிடம் பேசுவதற்கு இது

சந்தர்ப்பமல்ல என்று முடிவு செய்த அவன் ''பேசிப் பயனில்லை. இனி நீங்கள் என்ன சொல்கிறீர்களோ அதன்படி நடந்து கொள்கிறோம். தலைவரது பெயர் என்ன என்பது தெரியவில்லை'' என்றான்.

''என் பெயர் டிமார்க்கோ. நீ என் வழிக்கு வந்தது மகிழ்ச்சியாக இருக்கிறது விஜயபாகு. இன்றிலிருந்து ஐந்து நாட்களுக்கு உங்களுக்கெல்லாம் பூரண சுதந்திரம் தரப்படுகிறது. இத்தீவில் எங்கு வேண்டுமானாலும் நீங்கள் சுற்றலாம். எவ்வளவு வேட்டையாட முடியுமோ வேட்டையாடலாம். உண்ணலாம். குடிக்கலாம். குதிக்கலாம். கொண்டாட்டம் போடலாம். இத்தீவை விட்டு மட்டும் வெளியேற முடியாது. ஆறாவது நாள் முழுச் சந்திரன் வரும்போது எங்கள் தெய்வமும் வரும். அதற்கு உங்களையெல்லாம் பலி கொடுத்து இத்தீவுவாசிகள் அனைவரும் உங்கள் மாமிசங்களை உண்டு விழா கொண்டாடுவோம்'' என்று கூறிவிட்டு டிமார்க்கோ என்ற அந்தத் தீவின் தலைவனும் அவனைக் கொஞ்சிக் குலாவிய பெண்ணும் எழுந்தார்கள். சங்குகளும் பறைகளும் ஒலிக்க இருவரும் தங்கள் இருப்பிடங்களுக்குச் சென்றார்கள். தீவுவாசிகளும் மகிழ்ச்சி யோடு கலைந்து போனார்கள். தலைவனால் வெட்டபட்டத் தீவு வாசியின் தலையும் உடலும் அனாதையாகக் கிடந்தன. அவற்றைப் பூமிக்குள் புதைக்கும்படி உத்தரவிட்டான் விஜயன்.

பிறகு எல்லோரும் அங்கேயே அமர்ந்து கொண்டு ஏதோ பேசிக் கொண்டிருந்தார்கள். விஜயனையும் வேறு சிலரையும் தவிர மற்ற எல்லோருக்குமே மரணபயம் தொற்றிக் கொண்டிருந்தது. அவர்களெல்லாம் விஜயனிடம் ''நாம் பலியாக வேண்டியதுதானா?'' என்று புலம்பினார்கள்.

''பலியாவதற்கு ஐந்து நாட்கள் இருக்கின்றன. அதற்குள் யாரும் பயந்து சாகவேண்டியதில்லை. தீவுத் தலைவன் கூறியபடி அனைவரும் சந்தோஷமாக இருந்து கொண்டாடுங்கள். இதை நாகர் மலைத் தீவாக எண்ணாமல் சொர்க்க பூமியாக எண்ணி உற்சாகமாக இருங்கள். எங்கே போனாலும் கூட்டமாகவே செல்லுங்கள். எந்த காரணத்தைக்

கொண்டும் தீவைவிட்டு வெளியே செல்ல ஆசைப்பட வேண்டாம். நம்மைத் தின்பதற்குத் துடிக்கும் காட்டுமிராண்டிகள் நம்மை ரகசியமாகக் கண்காணிப்பார்கள். ஒருவரைக்கூடத் தப்பவிட மாட்டார்கள்'' என்று சொன்ன விஜயன் தன்னோடு உதயணனையும், நான்கு தோழர்களையும் மூன்று உபதலைவர்களையும் வைத்துக் கொண்டான்.

உதயணனை அழைத்து ''நீயும் நான்கு தோழர்களும் சேர்ந்து கொண்டு இந்தத் தீவை ஜல்லடை போடுங்கள். நம் கப்பலிலிருந்து தப்பிய பாரடைஸ் மற்றும் கொலையாளியைக் கண்டுபிடியுங்கள். அவர்கள் இந்தத் தீவில் வேறெங்காவது இறங்கியிருக்க வேண்டும். அவர்களோடு தான் நம் நகைப் பெட்டியும் இருக்க வேண்டும். மாலுமிகளை விட்டு விலங்கை வேட்டையாடவும் சமைக்கவும் சொல்கிறேன். உணவு வேளைகளில் இங்கே வந்து எல்லோரும் உண்ணலாம்'' என்று கூறிவிட்டு ''இரவாகிவிட்டது. இனிமேல் யாரும் எங்கும் போக வேண்டாம். இங்கேயே படுத்து ஓய்வெடுக்கலாம். நாம் உண்ட உணவு மிச்சமிருக்கிறது. அதை இரவில் உண்ணலாம்'' என்றான். மற்ற யாரும் வேறு அபிப்ராயம் எதுவும் சொல்ல முடியாமல் இருந்தார்களாதலால் அவன் கூறியதை ஒப்புக் கொண்டார்கள்.

இரவு முற்றியதும் அவரவர்களும் உண்டு உறங்கியபோது விஜயனும் தனஞ்செயனும் மாலுமிகளைத் தனியே அழைத்துச் சென்று விசாரித்தார்கள்.

''உங்களில் ஒரு மாலுமியைக் காணவில்லை. அவன் என்ன ஆனான்?'' என்று கேட்டான் விஜயன்.

''அவனை எங்கள் முன்பாகவே வைத்து வெட்டிவிட்டார் எசமான். எங்களையும் அதே கதிக்கு ஆளாக்கி விடுவதாகவும் மிரட்டினார்'' என்றார்கள் மாலுமிகள்.

''யார் அவன்? அவன் பெயர் என்ன?''

''எங்களுக்குத் தெரியாது. சாதாரண பணியாளராகத் தான் இருந்தார்''

''அவன் ஏன் மாலுமியை உங்கள் முன் வெட்டவேண்டும்? உங்களை மிரட்ட வேண்டும்?''

''அவர் கூறும்படி கப்பலை இயக்க நாங்கள் ஒத்துழைத்தால் எங்களுக்குப் பணம் தருவதாகச் சொன்னார். நாங்கள் ஒப்புக்கொண்டோம். திடீரென என்ன ஆயிற்றோ தெரியவில்லை. அந்த ஒரு மாலுமியை எங்கள் முன் கொன்று எங்களை மிரட்டினார்''

''மரக்கலத்தலைவன் நான் இருக்கும்போது சாதாரணமான அந்தப் பணியாளனுடன் நீங்கள் கூட்டு சேர்ந்து சதி செய்திருக்கிறீர்கள். முதலில் அவனுக்கு அடங்கினாலும் பிறகாவது நீங்கள் என்னிடம் கூறியிருக்க வேண்டும். ஏன் சொல்லவில்லை?''

''பயம் தான் காரணம் எசமான். அதோடு துடுப்பு போடும் இடத்தைவிட்டு வேறு இடத்திற்குச் செல்ல எங்களுக்கு உரிமை கிடையாது. நாங்கள் படுப்பது கூட துடுப்பு போடும் இடத்தில்தான். எங்களுக்கென்று இருந்த தரைத்தளத்தின் அறையையும் அவர் கேட்டு வாங்கிக் கொண்டார். அங்கே அவரும் ஒரு பெண்ணும் தினந்தோறும் உல்லாசமாக இருந்தார்கள். எங்களையும் கண்காணித்துக் கொண்டிருந் தார்கள்''

''பாரடைஸ் உங்களோடு வந்து பேசியதுண்டா?''

''இல்லை. ஆனால் எங்கள் இருப்பிடத்தில் பாரடைஸும் அந்தப் பணியாளரும் ரகசியமாகப் பேசிக்கொள்வதுண்டு''

விஜயனுக்கு மர்மனிதன் யாரென்றுத் தெரியவில்லை என்றாலும் அவனது திட்டங்கள் புரிந்தன.

தீவுக்கப்பல் புறப்பட்டபோது அவனும் மாயாவும் கூட்டாக இருந்திருக்க வேண்டும் என்றும் அருவித் தீவுக்கு வந்தபின் பாரடைஸும் மூன்றாவது கூட்டாளியாகி விட்டிருக்க வேண்டும் என்று நினைத்தான் விஜயன். கனவுகளை நிறைவேற்றுவதாகச் சொல்லி மாயாவைக் கைக்குள் போட்டுக் கொண்ட அவன் கர்ணபத்ர பங்கத்தைப் பங்கு போட்டுக்கொள்ளும் ஆசையை பாரடைஸுக்குத் தூண்டி கப்பலை திசைமாறிச் செல்ல

திட்டமிட்டிருக்க வேண்டும் என்றும் நினைத்தான் விஜயன். கர்ணபத்ரபங்கப் பெட்டிகளை கடலுக்குள் மறைவாகக் கொண்டுவர திட்டம் தீட்டியபோது பாரடைஸ் தனக்குச் சாதகமான வகையில் மீன் வலையில் வைத்துக் கட்டச் சொல்லியதை நினைவு கூர்ந்த விஜயன் சதிகாரனிடமே வழிகேட்டு ஏமாந்து போன தன் விதியை எண்ணி நொந்து கொண்டான். மனிதர்களை உண்ணும் காட்டு மிராண்டிகள் வாழும் நாகர்மலைத் தீவுகளின் பக்கம் கப்பலைக் கொண்டு வந்துவிட்டு விட்டு கர்ணபத்ர பெட்டிகளோடு பாரடைஸும் மர்ம மனிதனும் தப்பிவிட திட்டம் தீட்டியது தெளிவாகப் புரிந்தது விஜயனுக்கு. இதில் மாயாவை தான் தண்டித்து விட்டது கொலைகாரனுக்கு அனுகூலமாகி விட்டதையும் உணர்ந்தான்.

இதே சமயத்தில் தங்கள் இருப்பிடத்தில் தீவின் தலைவன் டிமார்க்கோவும் அவனது கொஞ்சும் கிளியும் ஆனந்த அலையில் நீந்திக் கொண்டிருந்தார்கள்.

அப்போது கொஞ்சும் கிளி வெளியிட்டதொரு விருப்பம் தலைவனைச் சங்கடப்படுத்தியது.

◈◈◈

## அத்தியாயம் முப்பது

# லியானா

நாகமலைத் தீவுகளில் அக்காலத்தில் கட்டிடக் கலை அறிமுகம் ஆகாததாலும் அங்கிருந்த காட்டுமிராண்டிகள் அதன் அவசியத்தைப் பற்றிக் கவலைப்படாததாலும் அங்கு மாடமாளிகைகளோ கூடகோபுரங்களோ இல்லை. தீவுத் தலைவன் டிமார்க்கோவின் இருப்பிடம் மலைக்குகையாகத் தான் இருந்தது. அந்த குகைக்குள் என்னென்ன வசதிகளைச் செய்து கொள்ள முடியுமோ அவற்றைச் செய்து கொண்டான் அவன். பாறைகளாலேயே கட்டில்களையும் இருக்கை களையும் அமைத்தான். கற்கட்டிலில் தழைகளையும் மலர்களையும் போட்டு மென்மையாக்கிக் கொண்டான். அவர்களுக்கு காற்று

வசதிக்காக மயில் இறகுகளால் ஆன ஆலவட்டங்களைத் தயார் செய்து பணிப்பெண்களிடம் கொடுத்து வீசச் செய்தான். சர்வ காலமும் அவர்கள் அந்தப் பணியைச் செய்ய அவர்களது கண்களைக் குருடாக்கி காதுகளையும் அறுத்துவைத்தான். தற்போதும் அத்தகைய பணிப்பெண்கள் ஆலவட்டம் வீச, மலர்களால் அலங்கரிக்கப்பட்ட கற்கட்டிலில் கொஞ்சும் கிளியோடு படுத்துக் கிடந்த டிமார்க்கோ அவளைக் கண்டபடி உருட்டியும் புரட்டியும் சரமாரியான சேட்டைகளைச் செய்தபடியால் சொக்கிப்போன அந்தப் பெண் அடுத்து அவன் செய்யவிருந்த சேட்டைகளை எதிர்பார்த்து ஏங்கிக் கிடந்தாள். இருவருக்குமே பெயருக்கென்று தழை ஆடைகள் இருந்தனவேயன்றி அவர்களின் அங்கங்களை மறைக்க முற்படவில்லை. அவர்களும் மனிதராய்ப் பிறந்த மிருகங்களாக இருந்ததால் அதைப்பற்றி கவலைப்படாமல் கண்டபடி இன்பம் துய்க்க முற்பட்டார்கள்.

''இன்று எனக்கு எத்தனை சந்தோஷமாக இருக்கிறது தெரியுமா?'' என்று கூறி அவன் செய்த சேஷ்டையொன்று அவளுக்கு கிளுகிளுப்பைத் தந்தது. அந்த மயக்கத்தில் அவனது மார்புகளை உதட்டால் வருடிய அவள் ''என்ன சந்தோஷம்?'' என்று கேட்டாள்.

''ரொம்ப நாளைக்குப் பிறகு பெரிய அளவில் மனித மாமிசம் நமக்குக் கிடைக்கப் போகிறதல்லவா? இதைவிட நமக்கு வேறு சந்தோஷம் உண்டா?'' என்று கேட்டு தன் கைகளை அவளது பின்புறத்திற்கு கொண்டு போனான் டிமார்க்கோ.

அவனது விரல்கள் என்ன செய்யப்போகின்றன என்று எண்ணிக் கொண்டே அவள் ''எனக்கு கிடைக்கும் உடல்களை நான் தான் தேர்ந்தெடுப்பேன்'' என்றாள்.

''ராணியின் விருப்பம் எதுவோ அப்படியே ஆகட்டும். உனக்குரிய உடல்களில் நீ பிரியப்படும் அங்கங்கள் எது? முன்பு சொல்வாயே-அவைதானா?'' என்று அவன் கேட்டதும் தலையை ஆட்டினாள் அவள்.

''அடிக்கள்ளி! உன் ஆசையே ஆசை'' என்றுகூறி இறுகத் தழுவிய அவன் தனக்கு ஆலவட்டம் வீசிக்கொண்டிருந்த

பணிப்பெண்களைப் போகச் சொல்லிவிட்டு பந்த ஒளியில் அவளது கறுத்த உடலை ஆசையுடன் பார்த்துவிட்டு இனியும் பார்வையால் அவளை அனுபவிப்பது பயனில்லை என்று எண்ணியவனாய் செயலில் இறங்கினான். எந்த விஷயத்தில் இல்லையென்றாலும் இந்த விஷயத்தில் முழு மூச்சுடன் ஈடுபடுவது டிமார்க்கோவின் வழக்கம் என்பது கொஞ்சும் கிளிக்குத் தெரிந்த காரணத்தால் அவன் பார்வைகளை அகற்றிவிட்டு செயலில் இறங்கியபோது பெரும் ஆனந்தத்தை அடைந்தாள். அவனது இழுப்புகளுக்கெல்லாம் முழு ஒத்துழைப்பைத் தந்ததால் அவள் பெற்ற இன்பம் திகட்டும் அளவிற்கு பூரணமாக இருந்தது.

சாதாரண விஷயங்களிலேயே அவன் மிருகம் போல நடந்து கொண்டு வந்ததால் இந்த விஷயத்திலும் மிருகமாகவே நடந்து கொண்டான். அவளும் அந்த ரகம்தான் என்றாலும் உடல் மட்டும் பெண்ணுடலாக இருந்ததால் சற்றே மென்மை கொண்டிருந்தது. அந்த மென்மையை மிருகத்தன்மையுடன் டிமார்க்கோ ஆண்டடக்கியபோது அவளது உடல் இன்பத்தில் துடித்தது. அவர்களுக்கு நேர காலமில்லை. கடமையோ கட்டுப்பாடோ இல்லை. கவலையோ துக்கமோ இல்லை. அவர்களைத் தட்டிக் கேட்கவும் யாரும் இல்லை. எனவே எல்லாவற்றையும் கடந்து களிப்பில் ஆழ்ந்த அவர்களை சூர்யோதயம்தான் தெளிய வைத்தது. மலைப்பக்கம் காடுகள் அவ்வளவாக இல்லாததால் சூரிய வெளிச்சம் விழுந்தது எனவே அவர்கள் எழுந்து கொண்டார்கள்.

தனது ஆடைகளெல்லாம் சிதறிவிட்ட நிலையில் அவனைக் கட்டிக் கொண்ட அவள் ''எனது ஆசையை நிறைவேற்று வீர்களா?'' என்று கேட்டாள்.

''அதைத்தான் சொல்லிவிட்டாயே?''

''இது வேறு ஆசை''

''எதுவாயிருந்தால் என்ன? சொல்''

சொன்னாள் அவள்.

அவனோ அதைக்கேட்டு அதிர்ச்சியும் சங்கடமும் அடைந்தான்.

அவனது முகத்தில் ஏற்பட்ட மாற்றத்தைக் கவனித்த அவள் ''என்ன, நிறைவேற்ற மாட்டீர்களா?'' என்று கேட்டுவிட்டு தனியாக அமர்ந்தாள்.

''நான் உனக்கு என்ன குறை வைத்துவிட்டேன்?'' என்று கேட்டான் டிமார்க்கோ.

''அப்படி நான் சொல்லவில்லையே?''

''பிறகு ஏன் இந்த ஆசை?''

''ஆசை ஏன் வருகிறதென்று யாரால் சொல்லமுடியும்? எனக்கு வங்கதேசத்து இளவரசன் வேண்டும். உங்களால் தரமுடியுமா முடியாதா?''

''இதோ பார் லியானா, அவனை முழுவதுமாக உனக்குத் தர எனக்கு எந்தவிதமான மறுப்பும் இல்லை. தலையை வெட்டி உடலோடு உன்னிடம் தந்து விடுகிறேன். நீ உன் இஷ்டம் போல சாப்பிடு''

''எனக்கு அவன் உயிரோடு வேண்டும்''

''அதுதான் ஏன் என்று எனக்கு விளங்கவில்லை''

''அவன் பேரழகனாக இருக்கிறான். அவனைப் போன்ற அழகனை நான் இதுவரை பார்த்ததில்லை. அவனை அனுபவிக்க என் உடல் துடிக்கிறது''

''நீயும் உன் விபரீத ஆசையும். இதோ பார் லியானா. அவனை பலியிட இன்னும் ஐந்து நாட்கள் இருக்கின்றன. அந்த ஐந்து நாட்களும் அவனை உன்னோடு வைத்துக்கொள். இஷ்டம் போல இன்பமாய் இரு''

''இதற்கு உங்கள் சம்மதம் எதற்கு? ஐந்து நாட்களுக்குப் பிறகும் அவன் உயிரோடு வாழவேண்டும். அவனோடு நான் இன்பமாக இருக்கவேண்டும்''

''அது முடியாத காரியம் என்று உனக்குத் தெரியாதா?''

''ஏன் முடியாது?''

''இங்கே வருபவர்களை பலியிட்டு உண்பதுதான் இத்தீவின் வழக்கம். இன்றுவரை அப்படியே செய்து வருவதால் குழப்பமில்லாமல் இருக்கிறது. திடீரென்று வழக்கத்தை மாற்ற முடியாது''

''நீங்கள்தானே தீவின் தலைவர்? உங்களால் மாற்ற முடியாதா?''

''இந்த விஷயத்தில் முடியாது லியானா. ஒருவனை மட்டும் உயிரோடு விட்டால் தீவுவாசிகள் ஒப்புக் கொள்ளமாட்டார்கள்''

''இத்தனை பேரில் ஒருத்தன் இல்லாமல் போனால் கண்டுபிடிக்க முடியுமா அவர்களால்?''

''கப்பலிலிருந்து இத்தீவுக்கு வந்தவர்களின் கணக்கைச் சொன்னவர்களே அவர்கள்தான். பலியிடும்போது அறுபட்டத் தலையை எண்ணுவார்கள். அதில் குறைந்தால் கேள்வி கேட்பார்கள்''

''எனக்காக விஜயனை விட்டு விட்டதாகச் சொன்னால் ஒப்புக்கொள்ள மாட்டார்களா?''

''உனக்காக என்ன, எனக்காகச் சொன்னாலும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். தீவுக்கு வருகிறவர்கள் தீவுவாசிகளின் பொதுச்சொத்து. அதை யாருக்காகவும் தளர்த்த மாட்டார்கள்''

''நானே கேட்டுப் பார்க்கட்டுமா?''

''பாறை என்று தெரிந்தும் முட்டிப் பார்க்கவேண்டாம் லியானா. உன் உயிருக்கே ஆபத்து உண்டாகிவிடும். அதோடு உன் செயல் அவனுக்குத் தெரிந்தால் அவன் மனமொடிந்து போவான். நம்மைவிட்டுப் போய்விடுவான்''

''நான் அவனிடம் பேசிவிட்டு உங்களிடம் பேசுகிறேன்''

லியானாவின் பிடிவாதம் தலைவனுக்குப் பிடிக்கவில்லை. அவனொன்றும் லியானாவே கதி என்று இருப்பவனில்லை. சமயம் கிடைக்கும் போதெல்லாம் தீவுப்பெண்கள் பலரை மிரட்டி இஷ்டப்படி இச்சித்து வருபவன் தான். லியானாவும் அதே ரகம்தான். இருவருமே ஒருவருக்கொருவர் தெரிந்தே

மற்றவர்களுடன் காமக் களியாட்டங்களைப் போட்டுக்கொண்டு தான் இருந்தார்கள். ஆகவே விஜயனை அதே காமத்திற்காக அவள் விரும்பியது அவனுக்குச் சங்கடமாகவோ வெறுப் பாகவோ இல்லை. தீவுமக்களின் எதிர்ப்பை நினைக்கும்போது தான் சங்கடமாகவும் திகைப்பாகவும் இருந்தது. தீவுவாசிகள் காட்டு மிராண்டிகளாக இருந்தாலும் இந்த அநாகரீகமான பலியிடும் விஷயத்தில் மட்டும் ஒற்றுமையாக இருந்தார்கள். தீவுக்கு வருபவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் பொது சொத்து என்பதிலும் அனைவரையும் பலியிடவேண்டும் என்பதிலும் அவர்கள் ஒற்றுமையாகவும் உறுதியாகவும் இருந்தார்கள். ஒருமுறை தீவில் ஒதுங்கிய குழு ஒன்றில் பெண்ணொருத்தி வெள்ளையாகவும் சற்று அழகாகவும் இருந்ததையும் கண்டுச் சபலத்திற்கு ஆளான டிமார்க்கோ அவளைப் பலியிடாமல் தனது போகப் பொருளாக வைத்துக்கொள்ள முயன்றபோது அவனைக் கொல்லவும் தயாரானார்கள் தீவுவாசிகள். அப்பெண்ணை பலியிட்ட பிறகே அவர்கள் சமாதானமடைந்தார்கள். இச்சம்பவம் லியானவுக்கும் தெரியும். இப்படித் தெரிந்திருந்தும் விஜயனை பலியிடாமல் தன் சுகப் பொருளாக வைத்துக்கொள்ள விரும்பியது அவனுக்குப் பிடிபடாத விஷயமாக இருந்தது.

★★★

மறுநாள் காலைபொழுது விடிந்ததுமே விஜயனின் ஆட்கள் தங்களுக்கு ஒப்படைக்கப்பட்ட காரியங்களைச் செய்வதற்காகப் புறப்பட்டார்கள். விஜயன் உபதலைவர்கள் நால்வருடன் புறப்பட்டான். மலைப்பகுதியில் நடந்து மலையின் மறுபக்கத்திற்கு வந்தான். மலைக்குப் பின்புறம் சிறிதுநேரம் வரை தீவு விரிந்திருந்தது. ஏறக்குறைய ஒரே நாளில் சுற்றி வரக்கூடிய அளவிற்குத்தான் இருப்பதாகத் தோன்றியது டிமார்க்கோவின் தீவு.

அத்தீவிற்குப் பின்பு கடலில் சிறிய தீவுகள் சிதறிக் கிடந்ததைக் கண்ட விஜயன் ''இத்தீவுக் கூட்டம் டிமார்க்கோவின் ஆதிக்கத்தில் இருக்கிறதா?'' என்று உபதலைவனிடம் கேட்டான்.

''எனக்குத் தெரிந்தவரை இந்தத் தீவு மட்டுமே அவனுக்குச் சொந்தம். மற்றத் தீவுகளில் ஒன்றிரண்டில் தான் சொற்ப அளவில் இங்கே இருப்பதைப் போல காட்டுமிராண்டிகள் வாழ்கிறார்கள். அவர்களுக்கு பல்வேறு அமானுஷ்ய சக்திகள் இருப்பதாகவும் அவர்களது பழக்க வழக்கங்கள் வினோதமானவை என்றும் கூறப்படுகிறது. மற்றத் தீவுகளில் மனிதர்கள் இல்லை. பழங்காலத்தில் வாழ்ந்ததாகக் கூறப்படும் வினோத மிருகங்கள் இருப்பதாகச் சொல்கிறார்கள். யாரும் அந்தப் பக்கம் செல்வதில்லை. இத்தீவுகள் எல்லாமே கடலுக்குள் ஆழ்ந்துள்ள மலைகளின் உச்சிகள்தான். இதுபோன்றத் தீவுகள் பசுபிக் பெருங்கடலில் நிறைய உள்ளன. நில அதிர்வுகளின்போது கடலுக்குள் சில தீவுகள் மூழ்குவதும் சிலகாலம் கழித்து மேலெழுவதும் உண்டு''

''தனஞ்ஜெயா, எனக்கென்னவோ டிமார்க்கோ சிறந்த நிர்வாகியாகவோ சாமார்த்தியங்கள் கொண்டவனாகவோ தெரியவில்லை'' என்றான் விஜயன்.

''ஏன் இப்படிச் சொல்கிறீர்கள்''

''அப்படிப்பட்டவனாக இருந்திருந்தால் இந்தத் தீவுகளை அனாதைகளாக விட்டிருக்க மாட்டான். தன் சாமர்த்தியத்தைக் காட்டி அனைத்து தீவுகளையும் தன் வசப்படுத்தியிருப்பான். இங்கே வருபவர்களைக் கொன்று சாப்பிடும் அநாகரீகத்தை விட்டு விட்டு அவர்களது திறமைகளை பயன்படுத்திக் கொள்வான். இத்தீவுகளை வெறும் காடுகளாக வைத்திருக் காமல் கட்டிடங்களைக் கட்டி தீவுகளின் தரத்தை உயர்த்தி யிருப்பான். வணிகக் கப்பல்கள் இங்கே வருவதற்கும் வாணிபம் இத்தீவுகளில் நடைபெறுவதற்கும் வழிவகுத்திருப்பான். இவனோ வெறும் மூடனாக இருந்து கொண்டு தீவுவாசிகளையும் மூடர்களாகவே வைத்திருக்கிறான்''

''தாங்கள் ஏதாவது திட்டம் தீட்டியிருக்கிறீர்களா?''

''பல திட்டங்கள் இருக்கின்றன. ஆனால் அவற்றை நிறைவேற்ற முடியுமா என்பதை இரண்டொரு நாட்களில் தெரிந்து கொண்டுதான் முயற்சிக்க வேண்டும்''

''இவர்களது நரபலியிலிருந்து நாம் தப்பமுடியும் என்று உங்களுக்குத் தோன்றுகிறதா?''

''இப்போதைக்கு எதுவும் சொல்லமுடியாது. இரண்டு நாட்கள் போகட்டும். பார்க்கலாம்''

இவ்வாறு பேசியபடி விஜயனும் மற்றவர்களும் தீவை ஒரு சற்று சுற்றி வர புறப்பட்டார்கள்.

உணவு நேரம் நெருங்கியபோது தன்னுடன் இருந்த உபதலைவர்களை மட்டும் அனுப்பிவிட்டுதான் மட்டும் பாறையொன்றின்மீது படுத்துக் கொண்டான் விஜயன். சுற்றிலும் மரங்களும் செடிகளும் இருந்ததால் அந்த இடம் ரம்மியமாக இருந்தது. கடல் காற்று பலமாக வீசியதால் மரங்களும் பலமாக அசைந்தன. சுகமான காற்றாக இருந்ததால் லேசாகக் கண்களை மூடினான். தூக்கம் அவனை வந்து தழுவ முற்பட்டபோது வேறு ஏதோ ஒரு பொருள் அவனைத் தழுவுவது போல் தோன்றவே சடாரென்று எழுந்தான்.

''நீயா?'' என்று கேட்டபடி லியானாவின் கைகளை அகற்றியபடி பாறையைவிட்டு இறங்கினான்.

லியானா அவனை விழுங்கிவிடுவது போல் பார்த்தாள். வழக்கத்திற்கு மாறாக இடுப்புக்கு கீழேயும் மார்பகத்திலும் வண்ணத்துண்டுகளைக் கட்டியிருந்தாள். அதைச் சுட்டிக்காட்டி'' இது உனக்குப் பிடித்திருக்கிறதா?'' என்று கேட்டாள்.

விவஸ்தையற்ற அவளது கேள்வியைப் பொருட்படுத்தாமல் ''நீ எதற்காக இங்கே வந்தாய்?'' என்று கேட்டான் வெறுப்புடன்.

''இது என் தீவு. இங்கே வர நான் யாரையும் கேட்க வேண்டியதில்லை'' என்றாள் லியானா ஒரு காலைத் தூக்கிப் பாறையில் வைத்தபடி.

வெட்கங்கெட்ட அவளைக் காணவும் பிடிக்காதவனாய் ''என்ன காரணமாய் வந்தாய் என்று கேட்டேன். உன் உரிமையைப் பற்றி கேட்கவில்லை'' என்றான் விஜயன்.

''காரணம் இருக்க வேண்டும் என்ற கட்டாயம் என்ன? காரணமில்லாமலும் வருவேன்'' என்றாள் அவள் அலட்சியமாக.

''காரணமில்லாமல் தான் என்னைத் தழுவ முற்பட்டாயா?''

''விஜயா, விஷயத்தைப் புரிந்து கொண்டும் எதற்காகத் தேவையில்லாத கேள்விகளைக் கேட்கிறாய்!'' என்றாள் லியானா.

தன்னை ஒருமையில் அவள் அழைத்தது அவளது ஆசையை உணர்த்துவதுபோல் இருந்தாலும் அதைப்பற்றிக் கவலைப்படாத அவன் ''நீ நடந்து கொண்ட முறை தவறு'' என்றான்.

அவளோ ''இந்தத் தீவில் எத்தனையோ பேரை நான் தழுவியிருக்கிறேன்'' என்றாள்.

''அது உனக்கும் இத்தீவு வாசிகளுக்கும் முறையானதாக இருக்கலாம். எனக்கில்லை''

''ஏன்?''

''நான் இத்தீவு வாசியல்ல''

''இருக்கலாம். ஆனால் இங்கு வந்தபின் உனக்கு உன் பேரில் எந்த உரிமையுமில்லை. எல்லா உரிமையும் எனக்குத்தான்''

''உன் உரிமையும் அதிகாரமும் பலியிடும் விஷயத்தோடு நிற்கக்கூடும். உயிரை இழக்க நான் தயாராகவே இருக்கிறேன். மற்றபடி என்னிடம் இந்த விஷயத்தில் நெருங்க வேண்டாம்''

''ஏன் அப்படிச் சொல்கிறாய்? இந்தத் தீவிலேயே அழகானவள் நான்தான். இதை ஒப்புக்கொள்கிறாயா?''

''அதற்கென்ன?''

''அதேபோல நான் கண்ட ஆண்களிலேயே பேரழகன் நீ தான். நாம் இருவரும் சந்தோஷமாக ஏன் இருக்கக் கூடாது?''

''நீ இத்தீவுத் தலைவரின் மனைவி.''

''அதனால் என்ன?''

''அவருக்குத் துரோகம் செய்யாதே''

''துரோகமா? அப்படியென்றால்?''

துரோகம் என்றால் என்னவென்றே அறியாதவளாய் லியானா பேசியது அவனுக்குச் சுத்தமாகப் பிடிக்கவில்லை. அதே சமயம் அவள் அத்தீவில் பலபேரைத் தழுவியிருப்பதாகக் கூறியிருந்ததால் துரோகம் என்ற வார்த்தை அவளிடம் பயன்படாது என்பதை உணர்ந்துகொண்ட அவன் ''விருப்பமில்லாதவனிடம் வந்து வற்புறுத்தாதே பெண்ணே. உன்னை எனக்குப் பிடிக்கவில்லை'' என்றான்.

என்னைப் பிடிக்கவில்லை என்று யாரும் சொன்னதில்லை. என்னை அடைய டிமார்க்கோ எத்தனை கஷ்டப்பட்டான் தெரியுமா?''

''இருக்கலாம். எனக்கு அது மாதிரியான ஆசை எதுவும் வரவில்லை''

''எனக்கு நீ சம்மதித்தால் இந்தத் தீவுக்கு நீ ராஜா ஆகலாம்''

''இந்தச் சுடுகாட்டுத் தீவிற்கு ராஜாவாக நான் வரவில்லை'' என்று கூற நினைத்த அவன் அப்படிக் கூறாமல் ''இன்னும் நான்கு நாட்களில் பலியாகப்போகும் நான் எப்படி ராஜாவாக முடியும்?'' என்று கேட்டான்.

''ராணி நான் நினைத்தால் முடியும்?''

''அதெப்படி?''

''அதெல்லாம் உனக்கு ஏன்? நீ என் ஆசைக்கு ஒப்புக் கொள்கிறாயா இல்லையா?''

விஜயன் சற்று யோசித்தான்.

''யோசிக்கிறாயா? அதுவும் நல்லதுதான். உன் முடிவை நாளைக்குச் சொல். மற்றதை நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்று கூறிவிட்டு அங்கங்கள் குலுங்க அசைந்து சென்றாள் லியானா.

அவளது பேச்சும் போக்கும் அத்தீவு முழுவதும் பரவியிருந்த அநாகரீகத்தின் வெளிப்பாடுதான் என்பதால் அவற்றுக்காக

விஜயன் வியந்துவிடவில்லை. ஆனால் தனது ஆசைக்கு இணங்கினால் பலியிலிருந்து காப்பாற்ற முடியும் என்று சொன்னதுதான் அவனுக்கு வியப்பாக இருந்தது. அது எப்படி அவளால் முடியும் என்று அவனுக்கு விளங்கவில்லை. அப்படியே முடிந்தால்கூட தான் மட்டுமே உயிர்பிழைக்க முடியும் என்பதால் அவனுக்கு அவளது யோசனை சரியாகப்பட வில்லை.

சிறிதுநேரம் வரை அவன் அங்கே இருந்தான். உபதலைவர்கள் உணவை முடித்துவிட்டு அவனிடம் வந்தார்கள். அவர்களோடு தீவைச் சுற்ற முற்பட்டான் விஜயன். தீவானது மேற்குப் பகுதியில் நீண்டதாக இருக்கவே தான் நினைத்தது போல் தீவு சிறியது அல்ல என்பதை உணர்ந்த அவன் அப்பகுதிக்கு மறுநாள் சென்று கொள்ளலாம் என்று முடிவு செய்து இருப்பிடத்திற்குச் சென்றான். அங்கே அவனது தோழர்கள் பலர் அமர்ந்து கொண்டு சிரித்தபடி பேசிக் கொண்டிருந்தார்கள். ஆரம்பத்தில் அவர்களிடம் இருந்த மரணபயணம் மறைந்து உற்சாகம் பிறந்திருந்ததற்கு காரணம் தெரியவில்லை என்றாலும் அந்த உற்சாகம் நல்லதுதான் என்று நினைத்து ஆறுதலடைந்தான்.

இரவு நேரம் தொடங்கவிருந்தபோது ஏதோ ஒரு தீர்மானத்துடன் தலைவனைச் சந்திக்க அவனது இருப்பிடத்தை நோக்கிச் சென்றான். துணைக்கு ஒரே ஒரு உபதலைவன் தனஞ்செயனை மட்டும் அழைத்துச்சென்றான். தலைவனின் இருப்பிடத்திற்குச் சென்றபோது இருட்டிவிட்டது. அவனது குகைக்குள் நுழையமுற்பட்டான் விஜயன். உள்ளே பெண்கள் சிலரது சிணுங்கல்களும் டிமார்க்கோவின் ஆபாச பேச்சுக்களும் கேட்கவே அந்நேரத்தில் அவனைச் சந்திப்பது சரியல்ல என்ற முடிவோடு திரும்பியபோது அருகில் ஏதோ சலசலப்பு கேட்டது. அருகில் சென்றபோது யாரோ சிலர் பந்தங்களைப் பிடித்தபடி செல்வது தெரிந்தது. இந்த நேரத்தில் எங்கே செல்கிறார்கள் என்பதை அறிய விரும்பிய விஜயன் தனஞ்செயனோடு அவர்களைப் பின்தொடர்ந்தான். விரைவிலேயே தீவின் தெற்கு கடற்கரைக்கு அவர்கள் வந்து சேர்ந்தார்கள். அவர்களில்

லியானா இருந்ததைக் கண்ட விஜயன் வியப்படைந்தான். கடற்கரையில் படகு ஒன்று தயாராக இருந்தது. அதில் லியானாவும் பந்தம் ஏந்திய மூவரும் ஏறிக்கொண்டார்கள். படகைச் செலுத்த இரண்டுபேர் இருந்தார்கள். அவர்கள் துடுப்பை போட படகானது நேரெதிரே இருந்த தீவைநோக்கி நகர்ந்தது. சிறிது தூரம் சென்றதுமே தீவாளி ஒன்றைக் கொளுத்திய லியானாவின் ஆள் ஒருவன் எதிரே இருந்த தீவை நோக்கி எய்தான். அதையடுத்து சில நிமிடங்கள் கழித்து தீவுப்பகுதியில் விளக்கு ஒன்று தெரிந்தது. அது இருமுறை ஆடவும் செய்தது. படகு அந்த விளக்கை நோக்கி வேகமாகச் சென்றது. அதேசமயம் விளக்கும் மறைந்தது.

''அந்தத் தீவுக்கும் இந்தத் தீவுக்கும் ஏதோ தொடர்பு இருக்கும் போல் தெரிகிறதே தனஞ்செயா?'' என்று கேட்டான் விஜயன்.

தனஞ்ஜெயனின் முகம் வியப்பால் விரிந்தது.

◈◈◈

## அத்தியாயம் முப்பத்தொன்று

# டிமார்க்கோவின் திட்டம்

''இந்த நேரத்தில் இந்தப் பெண் எதற்காக அந்தத் தீவுக்குப் போகவேண்டும் தலைவரே?'' என்று கேட்டான் தனஞ்ஜெயன்.

விஜயனோ அன்று பிற்பகலில் லியானோ தன்னிடம் பேசியதை நினைத்துக்கொண்டிருந்தான். அந்தப் பேச்சிற்கும் தற்போதைய படகுப் பயணத்திற்கும் ஏதாவது சம்பந்தம் இருக்குமோ என்று நினைத்துப் பார்த்தான். தன்னை உயிரோடு வைத்துக் கொள்வதற்கான சக்தி அத்தீவில் இருக்கலாம் என்று அவனுக்குத் தோன்றியது. எனவே தனஞ்ஜெயனின் கேள்விக்குப் பதில் சொல்லாமல் ''அந்தத் தீவில் யார் இருக்கிறார்கள் என்று கண்டுபிடிக்க வேண்டும் தனஞ்ஜெயா'' என்றான்.

''இத்தீவை விட்டு நாம் வெளியே செல்லக்கூடாது என்று தலைவன் கூறியது உங்களுக்கு நினைவில்லையா?''

''இருக்கிறது. ஆனால் நாம் தீவைவிட்டு வெளியே சென்றால் கண்காணிப்பார்கள் என்று நினைக்கிறாயா? எனக்கென்னவோ அப்படித் தோன்றவில்லை''

''எதை வைத்துக் கொண்டு இப்படிச் சொல்கிறீர்கள்?''

''நாம் இருவரும் இவ்வளவு தூரம் வந்திருக்கிறோம். கண்காணிப்பவர்கள் இருந்தால் இந்நேரம் நம்மை மடக்கி கேள்வி கேட்டிருக்க மாட்டார்களா?''

''அப்படி எதுவும் செய்யாமல் தலைவனிடம் போய் செய்தியை மட்டும் சொல்லலாம் அல்லவா?''

''அதைப்பற்றிக் கவலையில்லை. இப்போதைக்கு அந்தப் படகு இங்கே திரும்பி வரும் வரை நாம் காத்திருக்கலாம். அந்தப் படகில் தீவிலிருந்து யாராவது வரலாம் அல்லவா?''

ஒரு நாழிகை நேரம் கழித்து எதிர் தீவிலிருந்து படகு திரும்பியது. கரையை அடைந்தது. ஆனால் அதில் புதியவர்கள் யாரும் இல்லை. லியானாவும் அவளோடு சென்றவர்கள் மட்டுமே இருந்தார்கள்.

★★★

மறுநாள் விஜயனும் அவனது தோழர்களும் காலை உணவுக்குத் தயாராகிக் கொண்டிருந்தபோது யாரும் எதிர்பாராத விதத்தில் அங்கு விஜயம் செய்தான் தீவுத் தலைவன் டிமார்க்கோ. அவனோடு தீவுவாசிகள் சிலர் உணவு வகையறாக்களைக் கொண்டு வந்து வைத்தனர். விஜயனும் அவனைச் சேர்ந்தவர்களும் அவற்றை வியப்போடு பார்த்தபோது ''என்ன அப்படி பார்க்கிறீர்கள்? சாப்பிடுங்கள்'' என்றான் டிமார்க்கோ.

''எங்கள் உணவை மாலுமிகள் தயார் செய்து கொண்டிருக்கிறார்கள்'' என்றான் விஜயன்.

''இருக்கட்டுமே. அதற்காக நான் விருந்து தரக்கூடாது என்று விதி இருக்கிறதா என்ன? என் விருந்தை நீங்கள் சாப்பிட்டாலும்

முடிவில் நாங்கள் தானே உங்களை உண்ணப் போகிறோம்?'' என்று கூறிவிட்டு ஏதோ நகைச்சுவையாகப் பேசிவிட்டவனைப் போல கடகட வெனச் சிரித்தான் டிமார்க்கோ.

அவனது பேச்சைக்கேட்டு யாரும் சிரிக்கவில்லை. அதைப் பற்றிக் கவலைப்படாத தலைவன் உணவை எல்லோருக்கும் பறிமாறும்படிக் கூறிவிட்டு எல்லோரும் சாப்பிடும் வரைக் காத்திருந்தான்.

பிறகு ''விஜயபாகு! நீங்கள் மட்டும் என்னோடு சற்று வாருங்கள்'' என்றான் டிமார்க்கோ மரியாதையுடன். அவன் காட்டிய மரியாதை விஜயன் உட்பட யாருக்குமே நம்பும் படியாக இல்லை. ''ஒருவேளை இரவில் தானும் தனஞ்செயனும் கடற்கரைக்குச் சென்றதைக் கேள்விப்பட்டு அது விஷயமாக 'விசாரிக்க' கூப்பிடுகிறானோ?'' என்று நினைத்த விஜயன் ''பொறுத்திருந்து பார்ப்போம்'' என்று எண்ணியவனாய் அவனோடு சென்றான். அவன் பாலிமொழியில் பேசத் துவங்கியதிலிருந்து எல்லோருமே அந்த மொழியில் பேசிய காரணத்தால் யாருக்கும் சிரமமிருக்கவில்லை.

தனது இருப்பிடத்தைத் தாண்டி மலைமேலே ஓரிடத்திற்கு அழைத்துச் செல்லும்வரை விஜயனிடம் தலைவன் எதுவும் பேசவில்லை. மலையில் சுனை ஒன்றின் அருகே சென்று விஜயனை அமரச் சொன்ன டிமார்க்கோ ''தீவையெல்லாம் சுற்றி பார்த்து விட்டீர்களா?'' என்று கேட்டான்.

தன்னை ஆழம் பார்ப்பது போல் கேட்கப்பட்ட அக்கேள்வியைக் காதில் வாங்கிக்கொண்ட விஜயன் ''நான் எதற்காக தீவைச் சுற்றிப்பார்க்க வேண்டும்?'' என்று கேட்டான் தலைவனை ஆழம் பார்ப்பது போல்.

''தீவில் பல இடங்களில் உங்களைப் பார்த்ததாகச் சொன்னார்கள். அதனால் தான் கேட்டேன்''

''அப்படியானால் எங்கள் நடமாட்டங்களை கவனிக்கிறீர்களா? கண்காணிக்கிறீர்களா?''

''அது இயற்கை தானே? இங்கே வந்தவர்கள் தப்பிவிடாமல் பார்த்துக் கொள்வது என் கடமையல்லவா?''

''நானும் ஒரு சிலரும் எப்படி தப்பியோட முடியும் எங்கே ஓட முடியும்? அதுவும் வெறும் கைகளுடன்? இனிமேல் நான் என் இருப்பிடத்தை விட்டு நகரமாட்டேன். எனது ஆட்களும் நகரமாட்டார்கள்''

''அதெல்லாம் தேவையில்லை. ஏதோ உங்களை மட்டும் தான் கண்காணித்தேனே தவிர எல்லோரையுமா கண்காணித் தேன்? இனி யாரும் உங்களைக் கண்காணிக்க மாட்டார்கள்''

''டிமார்க்கோ, இங்கேயிருந்து தப்ப முடியாது என்பது எங்களுக்கு திட்டவட்டமாகத் தெரியும். சாவுக்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். அதற்கு இன்னும் மூன்று நாட்கள் தான் உள்ளன. இதில் நாங்கள் எங்கே சுற்றினால் என்ன? இதற்கு எதற்காக கண்காணிப்பு? சரி. எதற்காக என்னை அழைத்தாய்?''

இதற்கு டிமார்க்கோ உடனடியாகப் பதிலைச் சொல்லாமல் சிறிது நேரம் மௌனமாக இருந்துவிட்டு ''நீங்கள் துறவியா?'' என்று கேட்டான்.

''இளவரசன் என்று ஏற்கனவே கூறியிருக்கிறேன்?''

''பிறகென்ன? இளவரசனைப் போல அனுபவிக்க வேண்டியது தானே? இத்தீவில் பெண்களுக்கும் பஞ்சமில்லை. அவர்கள் இதற்கெல்லாம் மறுப்பு சொல்வதுமில்லை''

''உங்களுக்கும் எங்களுக்கும் உள்ள வித்தியாசம் இதுதான். வாய்ப்பு கிடைத்தாலும் நெறி தவறமாட்டோம்''

''இந்தத் தீவில் பேசக்கூடாத வார்த்தைகளைப் பேசுகிறீர்கள். அதோடு சாவிற்கு நாள் குறித்துவிட்ட நிலையில் அனுபவித்து விட்டுப் போவது தான் சரி''

''உனக்கு எப்போது சாவு என்று குறிக்கப்பட்டு விட்டதா?''

''ஏன் கேட்கிறீர்கள்?''

''எங்களுக்கு மரணநாள் குறிப்பிட்டு விட்டதாகச் சொல்கிறாயே - நீ என்ன நூறாண்டுகள் வாழப் போவதாக எழுதப்பட்டிருக்கிறதா? இல்லை டிமார்க்கோ, நாளைக்கே கூட நீ சாகலாம். நாள் எதற்கு? அடுத்த நிமிடத்தில் கூட உனக்கு

மரணம் வரலாம். ஆகவே மரணத்தை எண்ணி நெறி கெட்டு வாழ்வது என்பது எங்கள் நாட்டவருக்குக் கிடையாது''

விஜயனின் உறுதியான பதிலைக் கேட்டுச் சற்று அசந்து போனான் தீவுத்தலைவன். அத்தீவுக்கு வந்தவர்கள் எல்லோருமே பலியிடப் போவதாக அறிவிப்பு செய்து அதற்கு நாள் குறித்தபின் அச்ச உணர்வில் அமிழ்ந்து உணவைக்கூட உண்ண விரும்பாமல் ஒடுங்கி விடுவதையே வழக்கமாகக் கொண்டிருந்தார்கள். பலியிடும் சமயத்தில் அவர்களுக்கு அரை நினைவே இருக்கும். ஆனால் விஜயனின் ஆட்களோ அதற்கு நேர்மாறானவர்களாக இருந்தார்கள். விஜயனோ ஒருபடி மேலே போய் தீவின் தலைவனுக்கே மரணபயத்தை உண்டாக்கினான்.

இதையெல்லாம் அறிந்த டிமார்க்கோ விஜயனிடம் பீடிகை போடுவதும், அச்சுறுத்துவதும் பயனற்றவை என்பதை உணர்ந்தவனாய் ''வங்க இளவரசரே, நான் இந்தத் தீவுக்கு எப்படி வந்தேன் தெரியுமா? சகலவிதமான ஆயுதங்களைக் கொண்ட போர்க்கப்பல் ஒன்று என் கைவசம் இருந்தது. அக்கப்பலில் என்னோடு நூறு மாலுமிகள் இருந்தார்கள். ஸ்ரீவிஜயத்தின் கடற்படைத் தளபதி என்ற பொய்யான பெயரோடும் அந்தஸ்தோடும் மலையநாட்டின்* பக்கமும் சிங்கபுரத்தின்* பக்கமும் அடிக்கடி சென்று வந்த எனக்கு ஒரு சிலர் கொடுத்த யோசனைகளின்படி நடுக்கடலில் திரிந்து மேற்கண்ட இரண்டு நாடுகளுக்கும் வந்து கொண்டிருந்த சில வணிக கப்பல்களைத் தாக்கிக் கொள்ளையடித்தேன். கணிசமான பொருள் சேர்ந்தது. அச்சமயத்தில் எனக்கும் மற்றவர்களைப் போல நாடாளும் ஆசை வந்தது. மாலுமிகளும் அதை ஆதரித்தார்கள். நாகர்மலைத் தீவைப்பிடித்து அதை ஆளலாம் என்று எனக்குச் சொல்லப் பட்டதே தவிர அங்கே உள்ள குடிகளைப் பற்றியும் அவர்களது பழக்க வழக்கங்களைப் பற்றியும் சொல்லப்படவில்லை. ஆழம் தெரியாமல் காலை விட்டேன். தீவை என் மரக்கலம் நெருங்கியதும் தீவுவாசிகள் அனைவரும் தீவிலிருந்து

* மலையநாடு என்பது தற்போதைய மலேசியா

** சிங்கபுரம் என்பது தற்போதைய சிங்கப்பூர்

படகுகளில் கிளம்பி என் மரக்கலத்தைச் சூழ்ந்து கொண்டு எரியம்புகளை வீசினார்கள். நானும் மாலுமிகளும் அவர்களோடு விஷயம் தெரியாமல் போரிட்டோம். அவர்கள் வீசிய எரியம்புகளால் என் மரக்கலம் பற்றி எரிந்தது. தீவுவாசிகள் கயிறுகளை வீசி குரங்குகளைப் போல மேலே ஏறிவந்தார்கள். மாலுமிகளைக் குத்திக் கொன்றார்கள். நான் மட்டும் அஞ்சாமல் அவர்களிடம் போரிட்டேன். அது அவர்களை அசத்தியிருக்க வேண்டும். கணக்கற்ற காயங்களைத் தாங்கிக் கொண்டு சுழன்று சுழன்று நான் போரிட்டவிதம் என்மீது அவர்களுக்கு அனுதாபத்தை உண்டாக்கவே என்னைத் தாக்குவதை விட்டு விட்டு என்னைத் தலைவனாக ஏற்பதாகச் சொன்னார்கள். என் கனவு பலித்துவிட்டதாக நினைத்தேன் நான்.

''ஆனால் தீவுக்குச் சென்ற பிறகு தான் நான் சேற்றில் காலை விட்டது புரிந்தது. எனக்கு வைத்தியர்களை வைத்து நல்ல விதமாக வைத்தியம் பார்த்தார்கள். மலைக்குகையில் நான் தங்குவதற்கு எல்லா வசதிகளையும் செய்தார்கள். ஆனால் நான் தோற்றத்தாலும் பழக்கத்தாலும் தீவுவாசியாக மாறவேண்டும் என்று கூறி என் உடைகளை அவிழ்த்து தழையால் ஆன உடைகளைத் தந்தார்கள். நரமாமிசத்தை உண்ண வைத்தார்கள். இத்தீவுக்கு வருபவர்களை பலியிட்டு உண்ணும் வழக்கத்தைச் சொன்னார்கள். ஆரம்பத்தில் கஷ்டமாக இருந்த இந்த வழக்கங்கள் போகப் போக பழகிப்போயிற்று. நானும் தீவுவாசியாகவே மாறினேன். அந்த கால கட்டத்தில்தான் லியானா என் கண்ணில் பட்டாள். தீவில் இருந்த பெண்கள் எல்லாம் கோரமாக இருந்த நிலையில் அவள் மட்டுமே சராசரி அழகோடு இருந்தாள். அவளைக் கைப்பற்ற முயன்றேன். அவளோ லேசில் எனக்குச் சிக்கவில்லை. ரொம்பவும் பிகு செய்து கொண்டாள். நான் மரக்கலத்தில் கொள்ளையடித்து வைத்திருந்த நகைகளில் பாதிக்குமேல் அவளுக்குக் கொடுத்து அவள் பின்பாகவே சுற்றினேன். அவளோ எனக்குப் பின் பாகத்தை மட்டுமே கொடுத்தாள். மேன் மேலும் நகைகளைக் கொடுத்த பிறகே பூரணமாகத் தன்னைக் கொடுத்தாள். அவளை

ராணியாக்கினேன். தீவுவாசிகள் ஆமோதித்தார்கள். அதற்குப் பிறகு அவள் நன்றாகப் பழகி என் இன்பலோகமானாள்.

''அதற்குப்பிறகு நான் வேறெந்தச் சிந்தனையிலும் இறங்கவில்லை. நிம்மதியாக உட்கார்ந்துகொண்டு நன்றாகச் சாப்பிட்டுக்கொண்டு சுகமாக இருந்தேன். திசை மாறியோ அல்லது தெரியாமலோ இங்கு வந்து சேரும் மனிதர்களை தீவுவாசிகள் பலியிட்டு உண்டு வந்தார்கள். பல விஷயங்களில் அவர்கள் என் பேச்சைக் கேட்டாலும் பலி விஷயத்தில் மட்டும் கறாராக இருந்தார்கள். யாருக்கும் இரக்கம் காட்டுவதையோ பாரபட்சம் காட்டுவதையோ அவர்கள் அனுமதிக்கவில்லை. நரமாமிச ருசி அவர்களைப் பைத்தியமாக அடித்திருந்தது. ஓரிரு முறை இங்கே வந்து சிக்கிக் கொண்டவர்களில் சில அழகிகள் இருந்தார்கள். அவர்களையெல்லம் மாமிசமாக உண்ணத்தான் முடிந்ததே தவிர என் அந்தப்புரத்தில் உயிரோடு சேர்த்துக் கொள்ள முடியவில்லை'' - இவ்வாறு தன் கதையைச் சொல்லி நிறுத்தினான் டிமார்க்கோ.

இந்தக் கதைகூட எதற்கோ பீடிகை தான் என்பதை உணர்ந்த விஜயன் ''எதற்காக நேரத்தை வீணாக்கி உன் கதையைச் சொல்கிறாய் டிமார்க்கோ? இதைக்கேட்டு நான் என்ன செய்யமுடியும்? நான்தான் மூன்று நாட்களில் பலியாகப் போகிறேனே?'' என்றான்.

''நான் இங்கே வந்து மூன்று ஆண்டுகள் ஆகின்றன. இருபது தடவைகளுக்குமேல் பலி நடந்திருக்கிறது. ஒருமுறை கூட பலியைத் தடுக்கவோ அல்லது பலியிலிருந்து ஒரு சிலரைத் தடுக்கவோ நான் முயன்றும் முடியவில்லை. நான் பிடிவாதம் பிடித்தால் என்னைக் கொல்வதற்குத் தயாராக இருந்தார்கள். இது லியானாவிற்கு நன்றாகத் தெரியும். அதோடு அவள் நான் வருவதற்கு முன்பாகவே இங்கே இருந்தவள். இருந்தும் பிடிவாதம் பிடிக்கிறாள்'' என்றான் டிமார்க்கோ.

''எதற்கு?''

''பலியிடப் போகும் நிகழ்ச்சியில் ஒருவரை மட்டும் பலியிடாமல் வைத்துக் கொள்ள விரும்புகிறாள்''

''டிமார்க்கோ, இது உங்கள் பிரச்சினை, உங்கள் தீவின் பிரச்சினை. இந்த விஷயத்தில் நீ முயன்றபோது தீவுவாசிகள் உன்னையே கொல்லத் தயாராக இருந்ததாக நீயே சொன்னாய். இப்போது லியானா பிடிவாதம் பிடித்தால் அவளைக் கொல்லப் போகிறார்கள். அவ்வளவுதானே?''

''லியானா இல்லாமல் என்னால் வாழமுடியாது விஜயபாகு''

''எல்லோரையும் போலத்தானே அவளும்?''

''ஆனால் அவள் என் மனைவி''

''இந்தத் தீவில் உறவுகளுக்கோ உயிர்களுக்கோ ஒரு மதிப்பும் கிடையாது. உறவுகளுக்கும் உயிருக்கும் ஏங்கிய கணக்கற்ற அப்பாவிகளை ஈவு இரக்கமின்றி கொன்ற உனக்கு லியானா மீது மட்டும் இரக்கம் உண்டாவது என்ன நியாயம்?''

''எனக்கு இரக்கம்-பாசம் எல்லாமே இந்தத் தீவுக்கு வரும்போது இருந்தது. ஆனால் அதையெல்லாம் காட்ட இத்தீவுவாசிகள் அனுமதிக்கவில்லையே?''

''நீ அவர்களுக்கு இந்த உணர்வுகளையெல்லாம் கற்றுக் கொடுத்திருக்க வேண்டும். மரக்கலத்தில் நீ பிடிப்பட்ட போது நீ காட்டிய வீர உணர்வை அவர்கள் மதித்தார்கள் அல்லவா? அது எதைக் காட்டுகிறது? நல்ல உணர்வை மதிக்கும் குணம் அவர்களுக்கு இருப்பதையே காட்டுகிறது. உரியமுறையில் அந்த உணர்வுகளை அவர்களிடம் வளர்ப்பதை விட்டுவிட்டு உயிருக்குப் பயந்து அவர்களது காட்டுமிராண்டித்தனத்திற்கு பலியாகி அடிமையாகிவிட்டாய்? மாறாக அவர்களின் நிர்பந்தங்களுக்குப் பணியாமல் துணிச்சலோடு எதிர்த்து நீ மாண்டு போயிருக்க வேண்டும். அப்படிச் செய்திருந்தால் அது அவர்களது இதயத்தைத் தொட்டிருக்கும். அவர்கள் ஓரளவிற்காவது உணர்வுகளை மதிக்க முற்பட்டிருப்பார்கள். நீயோ உயிருக்கும் சுக போகங்களுக்கும் ஆசைப்பட்டு உன்னை அவர்களிடம் விற்றுவிட்டாய். அவர்களது காட்டுமிராண்டித்தனத்திற்கு துணையாக இருந்துவிட்டாய். இப்போது திடீரென பாசம் காட்ட முற்பட்டால் யார் ஏற்பார்கள்?''

''விஜயபாகு, இந்த விஷயத்தை உங்களிடம் எதற்காகச் சொல்கிறேன் தெரியுமா?''

''நீதான் சொல்ல வேண்டும்''

''லியானா உங்களை விரும்புகிறாள். அதற்காக பலியிலிருந்து காப்பாற்ற நினைக்கிறாள்.''

''என்னை விரும்பும் அவள் இல்லையென்றால் உன்னால் வாழ முடியாதா?''

''அவள் யாரை விரும்பினாலும் கவலையில்லை. எத்தனை பேரை அனுபவித்தாலும் வருத்தமோ தடையோ இல்லை. ஆனால் என் மனைவியாக இருக்க வேண்டும்''

''விசித்திரமாக இருக்கிறது டிமார்க்கோ. உன் உணர்வும் விருப்பமும் அர்த்தமற்றவைகளாக இருக்கின்றன''

''அதெல்லாம் இருக்கட்டும். அவள் உயிரை நீங்கள் தான் காக்கவேண்டும்''

''நானா?''

''ஆமாம். உங்கள் உயிரைக் கொடுத்து அவள் உயிரைக் காப்பாற்றவேண்டும்''

''என்னைத்தான் பலியிடப் போகிறீர்களே!''

''ஆம். அது சரியாக நடக்கவேண்டும்''

''அது உன் கையில்தானே இருக்கிறது?''

''இல்லை. உங்கள் கையில்தான் இருக்கிறது''

''எப்படி?''

''பலியிடும் வரை அவள் விரும்புவதுபோல நெருக்கமாகப் பழகுங்கள். நான் அதை அங்கீகரித்து உன்னை பலியிடாமல் பாதுகாப்பதாகச் சொல்லி வைக்கிறேன். அவள் எந்த நடவடிக்கையிலும் இறங்காமல் இருப்பாள். பலியிடும் திடலில் நீங்கள் என் அருகிலேயே இருங்கள். ஒவ்வொரு பலியாக இது நடக்கட்டும். கடைசியில் நானே உங்கள் தலையை வெட்டிவிடுகிறேன்''

டிமார்க்கோவின் திட்டத்தைக் கேட்டபோது சிரிப்பாகு இருந்தது விஜயனுக்கு.

''என்னை வெட்டி வீழ்த்திவிட்டால் லியானா அமைதியாகி விடுவாளா?''

''வேறு வழியில்லை நீங்கள் செத்துவிட்ட பின் அவளால் எதுவும் செய்யமுடியாது''

'நானிங்கே தனியாகத்தானே இருக்கிறேன்? வெட்டி விட வேண்டியதுதானே?''

''அது நடவாது. அப்படிச் செய்தால் பெரிய பிரச்சினைகள் வரும். பலிநாள் அன்றுதான் நீங்கள் சாகவேண்டும்''

''நான் லியானாவிடம் ஏற்கனவே என் விருப்பமின்மையைச் சொல்லிவிட்டேன்.''

''அதனால் என்ன? மீண்டும் சந்திக்கும்போது விரும்புவதாகச் சொன்னால் சரியாகிவிடுகிறது''

''என் முடிவை நாளை சொல்கிறேன்''

''மொத்தம் இருப்பதே மூன்று நாட்கள்தான்''

''அதனாலென்ன? பார்ப்போம்''

டிமார்க்கோ மேலும் சிறிது நேரம் பேசிவிட்டு விஜயனை அனுப்பிவைத்தான். விஜயன் பல்வேறு சிந்தனைகளுடன் இருப்பிடத்திற்குச் சென்றபோது பட்டப் பகலாகிவிட்டது. அவன் வரும் வரை அனைவரும் அங்கேயே அவனுக்காகக் காத்திருந்து அவனைக் கண்ட பின்பே மூச்சு விட்டார்கள்.

''தலைவரே, என்ன நடந்தது? நாங்கள் மிகவும் பயந்துபோய் விட்டோம்'' என்றான் தனஞ்செயன்.

''பயம் ஒன்றுமில்லை. பேசிக்கொண்டிருந்தோம். அவ்வளவுதான்'' என்றான் விஜயன்.

அப்போது பகல் உணவு வந்தது.

உணவை லியானா அனுப்பி வைத்ததாகச் சொன்னார்கள் பணியாளர்கள்.

''தலைவரே, என்ன ஆயிற்று இவர்களுக்கு? காலையில் உணவை டிமார்க்கோ அனுப்பினான். இப்போது லியானா அனுப்புகிறாள். என்ன நடக்கிறது இங்கே?'' என்று கேட்டார்கள் தோழர்கள்.

''யார் அனுப்பினால் என்ன? நமக்குச் சுவையான உணவு கிடைக்கிறதல்லவா? திருப்தியாகச் சாப்பிடுங்கள்'' என்றான் விஜயன்.

சாப்பிட்டு சிறிதுநேரம் வரை ஓய்வெடுத்த விஜயன் தனஞ்செயனோடு புறப்பட்டான் தீவைப் பார்ப்பதற்காக. தீவின் மேற்குப் பகுதியைப் பார்வையிட்டபோது மாலைநேரம் முகிழ்த்திருந்தது.

''தனஞ்செயா, நீ நம் இருப்பிடத்திற்குப் போ. நான் சற்றுதூரம் போய்விட்டு வருகிறேன். எவ்வளவு நேரமானாலும் வந்து விடுவேன். யாரையும் பதட்டப்பட வேண்டாம் என்று சொல். என்று கூறி தனஞ்செயனை அனுப்பிவிட்டு நடந்த விஜயன் இரவு தொடங்கும் நேரத்தில் தெற்குக் கடற்கரைக்கு வநதான்.

எதிரே தெரிந்த தீவைச் சிறிது நேரம் பார்த்தான். கடற்கரையில் படகு எதுவும் இல்லை. நீந்தியே தீவை அடையலாம் என்ற எண்ணத்துடன் கடலில் இறங்க முற்பட்டான் விஜயன்.

''நானும் வரட்டுமா?'' என்று குரலொன்று கேட்டது.

திரும்பிப் பார்த்தான் விஜயன்.

அங்கே லியானா நின்றிருந்தாள்.

◈◈◈

## அத்தியாயம் முப்பத்திரண்டு

# லியானாவின் திட்டம்

லியானாவைப் பார்த்ததும் சற்றே திடுக்கிட்டாலும் வெளியே காட்டிக் கொள்ளாமல் ''எங்கே லியானா இவ்வளவு தூரம்?'' என்று கேட்டான் விஜயன்.

''நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன் இது என் தீவு. நான் எங்கு வேண்டுமானாலும் செல்வேன்'' என்றாள் லியானா.

''அகால வேளைகளில் பெண்களைத் தனியாகப் பார்த்தால் இப்படி கேட்பது எங்கள் வழக்கம். அந்த வழக்கத்தில் கேட்டு விட்டேன்'' என்றான் விஜயன்.

''அதுசரி எங்கே கிளம்பிவிட்டாய் இந்த நேரத்தில்?'' என்று கேட்டாள் அவள்.

எந்த பதிலைச் சொன்னாலும் அது நம்பக்கூடியதாக இருக்காது என்பதை உணர்ந்த அவன் ''அதோ அந்தத் தீவுக்குப் போகப் போகிறேன்'' என்று உண்மையைச் சொன்னான்.

''எதற்கு?''

''நேற்று நீ போவதைப் பார்த்தேன். அதனால் இன்று நான் போகிறேன்''

''நான் போனால் நீயும் போக வேண்டுமா?''

''நீ போகும்போது நீ விரும்புபவன் போகக்கூடாதா?''

''என்ன, என்ன சொன்னாய்?''

''நீ போகும் போது நான் போகக்கூடாதா என்று கேட்டேன்''

''இல்லை வேறு ஏதோ சொன்னாய்''

''நீ விரும்பும் நான் போகக் கூடாதா என்று கேட்டேன்''

''நான் விரும்புவது தான் தெரியுமே. நீ விரும்புகிறாயா?''

''விரும்பினால் என்ன?''

''விஜயா, உண்மையாகவா சொல்கிறாய்? காதில் வார்த்தைகள் விழவில்லை. அமுதங்கள் விழுந்தன''

''அவசரப்படாதே லியானா. உன்மீது உள்ள ஆசையால் நான் விரும்பவில்லை. என் உயிர் மீது உள்ள ஆசையால் தான் விரும்புகிறேன்''

''எப்படியானால் என்ன விரும்புவது உண்மைதானே?''

''என் உயிரை நீ காப்பாற்றினால்தான் உண்மையாகும்''

''நீ என்னை விரும்பினால் உன்னை நான் காப்பாற்றுவேன் என்று சொன்னேனே மறந்துவிட்டாயா?''

''அது முடியாத காரியம் என்பதால்தான் சந்தேகமாக இருக்கிறது''

''கடலைவிட்டு இங்கே வா. வந்து இந்த மணலில் உட்கார்'' என்றாள் லியானா.

அவனும் வந்து உட்கார்ந்தான். பௌர்ணமிக்கு மூன்றே நாள் இருந்ததாலும் நேற்றைய நாளைப்போல வானத்தை மேகங்கள் சூழாமல் இருந்ததாலும் சந்திர ஒளி கடற்கரையில் விழுந்ததால் அந்த ஒளியில் அவள் மயக்கம் தரும் கவர்ச்சியான தோற்றத்தில் இருந்தாள். கரையில் காற்று பலமாக வீசியதால் அவள் அணிந்திருந்த தழை ஆடைகள் தாறுமாறாகப் பறந்து அவளது அங்க லாவண்யங்களையும் அவற்றின் வனப்பையும் வெளிப்படையாகக் காட்டிக் கொண்டிருந்தன. விஜயன் மட்டும் சிகபாகுவைப் போல வளர்ந்திருந்தால் இந்நேரம் அவளை விட்டு வைத்திருக்க மாட்டான். கடற்கரையைச் சொர்க்க புரியாக மாற்றியிருப்பான். விஜயனோ உணர்ச்சிகளை அடக்கிப் பழக்கியிருந்தானாதலால் அவளது காம ஈர்ப்புக்கு ஆளாகாமல் சாதாரணமாகவே இருந்தான்.

''இதோ பார் விஜயா, நான் சொல்வதை கவனமாகக் கேள். நான் உன்னை விரும்புவதையும் காப்பாற்ற நினைப்பதையும் டிமார்க்கோ கொஞ்சமும் விரும்பவில்லை. எனக்கு உதவும் மனம் அவனுக்கில்லை. ஆகவே ஏதாவது ஏடாகூடமான

நடவடிக்கைகளை எடுத்து என் விருப்பத்தை அழிக்க முயல்வான். உன்னை அழைத்துகூட எதையாவது பேசி உனக்கு என் மீது வெறுப்பு வரும்படிச் செய்வான். நீ ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்'' என்றாள் லியானா.

டிமார்க்கோ அவளை இழக்க விரும்பாமல் தன்னைச் சாகும்படி வேண்டிக் கொண்டிருக்க அவளோ அதை உணராமல் அவன் மீது வெறுப்பு கொண்டு பேசுவதைக் கேட்ட விஜயன் ''எத்தனை முரண்பாடுகள்?'' என்று நினைத்தான்.

''நான் ஜாக்கிரதையாகத்தான் இருக்கிறேன். உன் திட்டம் என்ன? எப்படி என்னைக் காப்பாற்றப் போகிறாய்? அதைச் சொல்'' என்றான் விஜயன்.

''உன்னை உயிரோடு வைக்க வேண்டுமென்றால் உன் பெயர் உயரவேண்டும். டிமார்க்கோவின் பெயர் கெடவேண்டும். இதற்கான வேலையை நாளைக்கே நான் துவங்கிவிடுவேன். இத்தீவில் உள்ளவர்களிடம் உன்னைப் பற்றியும் உன் திறமைகளைப் பற்றியும் உயர்வாகப் பேசுவேன். இந்தத் தீவை திறம்பட ஆளக்கூடிய திறமை உனக்கு மட்டுமே உண்டு என்று சொல்லுவேன். அதே சமயம் டிமார்க்கோ மோசமாகிக் கொண்டு வருவதாகவும் எனக்கு பதிலாக வேறு யாரையோ அமர்த்திக் கொள்ள இருப்பதாகவும், அதை நிறைவேற்ற என்னைக் கொலை செய்ய இருப்பதாகவும் செய்தி பரப்புவேன். இத்தீவு வாசியான என் பேச்சை மக்கள் நம்புவார்கள். பலி நிகழ்ச்சி வழக்கம் போல நடக்கும். நீ என் அருகில் அமர்ந்துகொள். ஒவ்வொருவராக பலியாகட்டும். கடைசியாக உன்முறை வரும்போது நான் வாளை எடுத்து டிமார்க்கோவின் தலையை திடீரென வெட்டுவேன். உன் கைகளை உயர்த்தி 'இவரே இனி நம் தலைவர்' என்று கூறுவேன். மக்கள் அதை ஏற்பார்கள். உன்னையும் என்னையும் அங்கீகரிப்பார்கள். பிறகென்ன நீயும் நானும் நாகர்மலைத் தீவை சொர்க்கபுரியாக்கி இஷ்டப்படி இன்பமடையலாம். என்ன சொல்கிறாய்?''

டிமார்க்கோவுக்கும் லியானாவிற்கும் இருந்த வித்தியாசத்தைக் கண்டு விஜயன் வியந்தான். லியானாவை இழக்க விரும்பாமல் தன்னைச் செத்துப் போகும்படி அவன்

வினோதமாக வேண்டிக் கொண்டதையும் தன்னை அடைய விரும்பி டிமார்க்கோவை கொலைசெய்ய லியானா திட்டமிட்டதையும் எண்ணிப் பார்த்த விஜயன் இருவரையுமே வெறுத்தான். இருவரிடமும் நம்பகத்தன்மை இல்லாததும் அதேசமயம் டிமார்க்கோவைவிட லியானாவுக்கு புத்திசாலித் தனம் சற்று கூடவே இருந்ததை அவன் கவனித்தான். இருவருமே தன்னைப்பற்றி மட்டும் அக்கறை காட்டினார்களே தவிர தன்னைச் சேர்ந்த எழுநூறு பேர்களை பற்றி கவலையே படாதது அவனுக்கு அசதியைத் தந்தது. அவர்களை பலி கொடுத்துவிட்டுத் தான் மட்டும் உயிரோடு இருப்பது எந்த விதத்திலும் அர்த்தமுற்றதாகாது என்பதால் விஜயன் அவர்களைக் காப்பற்ற வழிகிடைக்குமா என்று யோசித்தபடி அவளைக் கேட்டான்.

''இன்னும் மூன்று நாட்கள் தானே இருக்கின்றன! அதற்குள் தீவுவாசிகளை மாற்றமுடியுமா?''

''முடியாது''

''பிறகு?''

''பலியைத் தள்ளிப்போட வேண்டியதுதான்''

''தள்ளிப் போடுவதா?'

''ஆமாம். இங்கே இருக்கும் வைத்தியர்களை வைத்து எனக்கு கடுமையான நோய் வந்திருப்பதாகச் சொல்லலாம். யட்சிணி ஒருத்தி இருக்கிறாள் அவளை வைத்து எனக்கு தோஷம் இருப்பதாகவும் அது விலக சில நாட்கள் ஆகும் என்றும் சொல்லலாம். நான் இந்த நிலையில் இருந்தால் நிகழ்ச்சி நடக்காது. அடுத்த பௌர்ணமிக்குத் தள்ளிப் போடலாம். ஒரு மாத அவகாசம் கிடைக்கும். அதற்குள் தீவை தலைகீழாக்கி விடலாம்''

லியானா லேசுப்பட்டவளல்ல என்று பட்டவர்த்தனமாகத் தெரிந்தது விஜயனுக்கு, பலியை அவள் தள்ளிப்போடுவது தனக்கும் பலவிதத்தில் அனுகூலமானது என்று நினைத்த அவன் 'லியானா, நீ அழகி மட்டுமல்ல. பெரிய அறிவாளி'' என்று பாராட்டினான்.

''நீயே பாராட்டுகிறாய் என்றால் எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி'' என்றாள் லியானா.

''திட்டம் பிரமாதமாக இருக்கிறது. ஆனால் நீ ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். உன் உயிருக்கு ஆபத்து வந்து விடக்கூடாது'' என்றான்.

இதைக் கேட்டதும் திடீரென ஆவேசத்துடன் அவனைக் கட்டிப் பிடித்துக்கொண்டு தன் அங்கங்களை பலமாக அழுத்தினாள். அவளுக்கு அது ஆனந்தமாக இருந்தாலும் அவனுக்கோ வெறிநாய் ஒன்று மேலே வந்து விழுந்தமாதிரி இருந்தது.

கஷ்டப்பட்டு அவளை விலக்கிவிட்டு ''அவசரப்படாதே லியானா. மிகவும் கவனமாக இருக்க வேண்டிய நேரம் இது. நீ உணர்ச்சிவசப்பட்டால் காரியம் கெட்டுவிடும். எதையும் படிப்படியாகச் செய்யவேண்டும்'' என்று கூறிவிட்டு ''நான் போகட்டுமா?'' என்றான்.

''எங்கே?''

''அந்தத் தீவுக்குத்தான்''

''கண்டிப்பாக போகத்தான் வேண்டுமா?''

''நீ வேண்டாம் என்றால் போகவில்லை''

''போ. போ. நீ அங்கே போய்விட்டு வருவது ஒரு வகையில் நல்லது தான்''

''அங்கே இருப்பது யார்?''

''நீயே போய் தெரிந்துகொள். அங்கே நீ நீந்திப் போகவேண்டாம். படகிலேயே செல்'' என்று கூறிய லியானா வாயில் விரலை வைத்து பலமாகக் குரல் எழுப்பினாள்.

சிறிது நேரத்தில் பணியாளர் இருவர் பந்தங்களை ஏந்தியபடி வந்து நின்றார்கள்.

அடுத்த சில நிமிடங்களில் படகு ஒன்றும் கடற்கரை பக்கம் வந்து நின்றது.

''பந்தம் எதற்கு? நிலவொளிதான் இருக்கிறதே?'' என்றான் விஜயன்.

''நிலவு மறைந்துவிட்டால் என்ன செய்வாய்? இருக்கட்டும். புறப்படு'' என்று சொல்லி அவன் கன்னத்தில் முத்தமிட்டாள் லியானா.

விஜயன் எழுந்து சென்று படகில் ஏறினான். படகு நகர்ந்தது. சிறிதுநேரம் வரை படகையே பார்த்துவிட்டு காட்டிற்குள் மறைந்தாள் லியானா.

முதல்நாள் இரவன்றே கேட்கவிருந்த சந்தேகத்தை தற்போது கேட்க முற்பட்ட விஜயன் ''நீ பிடித்திருக்கும் பந்தம் கடல்காற்றிலும் அணையாமல் இருப்பது எப்படி?'' என்று தீவுவாசியிடம் கேட்டான்.

அவனது கேள்விக்குப் பதில் சொல்லாத தீவுவாசி படகில் இருந்த மூட்டை ஒன்றில் கையை விட்டு சிலவற்றைக் கையில் எடுத்து பந்தத்தில் கொளுத்தி கடலில் எறிந்தான். அவை கடல் நீரில் நெருப்புப் பூக்களைப் போல் மிதந்து கலைந்தன. வானத்தில் பூத்துக் கிடந்த நடசத்திரங்களில் சில கடலில் விழுந்து மிதப்பது போல் இருந்தது அந்த காட்சி.

''இது என்ன?'' என்று கேட்டான் விஜயன்.

''கிரேக்க நாட்டு கப்பல் ஒன்று எங்களிடம் பிடிபட்ட போது அதில் ஒரு பொருள் பல மூட்டைகளாக இருந்தது. அதை நாங்கள் கைப்பற்றினோம். அதன் பெயர் எங்களுக்குத் தெரியாது. ஆனால் அதன் பயன்பாட்டைக் கண்ட எங்கள் தலைவர் அதற்கு எரி நட்சத்திரம் என்று பெயரிட்டார்.* இதை எடுத்து எதன் மீதாவது வீசியோ அல்லது பூசியோ பற்ற வைத்தபோது தீ பிரகாசமாக எரிந்தது. ஒன்றிலிருந்து இன்னொன்றுக்கு எளிதில் பரவியது. நீங்கள் பார்த்ீர்களே அவை சிறிய துணி அல்லது தழை மூட்டைகள். அதன் மீது இதைப் பூசி கொளுத்தி கடலில் போட்டால் நீரின் மேலேயே பூக்களைப் போல மிதக்கும். எரி நட்சத்திரப்

* இது தற்காலத்து பாஸ்பரஸைப் போன்ற ஒரு பொருள்.

பூச்சு இருக்கும்வரை இவை எரியும். இதே பொருளை இப்பந்தங்களுக்கும் நன்றாகப் பூசியிருப்பதால் பந்தம் பிரகாசமாக எரிகிறது. இது காற்றில் அணையாது. பெருமழை பெய்தாலோ அல்லது புயல் வீசினாலோதான் அணைந்து போகும்'' என்றான் தீவுவாசி.

''இப்பொருள் இன்னமும் இருக்கிறதா?''

''இருக்கலாம் ஐயா. தலைவரைத்தான் கேட்கவேண்டும்''

இதற்குப் பின் விஜயன் எதுவும் பேசாமல் சிந்தனையில் ஆழ்ந்தான்.

இதற்கிடையில் படகில் இருந்த தீவுவாசி ஒருவன் எரியம்பு ஒன்றை தீவை நோக்கி வீசவும் அதையடுத்து தீவில் இரண்டு விளக்குகள் தோன்றி இரண்டுமுறை ஆடி மறைந்தது. அடுத்த சில நிமிடங்களில் படகு தீவை அடைந்தது. படகோட்டிகள் இருவரும் கரையில் குதித்து படகைப் பிடித்து அங்கே ஊன்றப் பட்டிருந்த மரக்காலில் கட்டிவிட்டு விஜயனை இறங்கச் சொன்னார்கள். படகு போய்ச் சேர்ந்த இடத்தில் புதர்களே மண்டிக்கிடந்தன. கால் வைப்பதற்கு சிறிய இடம் கூட இல்லாதிருந்தது. தீவுவாசி ஒருவன் படகில் இருந்த எரிநட்சத்திர மூட்டைகள் சிலவற்றைக் கொளுத்தி புதர்கள் மீது வீசவும் அங்கெல்லாம் நெருப்பு பூக்கள் பூத்தன. கீழே இறங்கிய விஜயனிடம் பந்தத்தைக் கொடுத்த தீவுவாசி ''நீங்கள் உள்ளே செல்லுங்கள். நாங்கள் இங்கேயே இருக்கிறோம். ஆபத்து எதுவும் வராது. வந்தால் குரல் கொடுங்கள். நாங்கள் வருகிறோம்'' என்றான்.

பந்தத்தை வாங்கிக்கொண்டு ''நீங்களும் வரலாமே?'' என்றான் விஜயன்.

''உள்ளே செல்ல ஒருவருக்கு மட்டும்தான் அனுமதி. நாங்கள் வரமுடியாது''

''உள்ளே யார் இருக்கிறார்கள்?''

''நேரிலேயே தெரிந்து கொள்ளுங்கள்''

விஜயன் அவர்களோடு பேசுவதில் எந்தப் பிரயோஜனமும் இல்லை என்று உணர்ந்தவனாய்ப் பந்தத்தைப் பிடித்துக் கொண்டு நடந்தான்.

கீழே மற்றும் பக்கங்களில் எல்லாம் புதர்கள் மண்டிக் கிடக்க அறிமுகமற்ற தீவுக்குள் இரவு நேரத்தில் தனியாகச் செல்வது விஜயனுக்கு ஒரு மாதிரியாகத்தான் இருந்தது. காட்டு விலங்குகள் எதுவும் குறுக்கிடவில்லை என்றாலும் ஏதேதோ சப்தங்கள் மங்கலாகக் கேட்டுக்கொண்டுதான் இருந்தன. அதோடு மூலிகைச் செடிகள் நிறைந்திருந்ததாலோ என்னவோ நாசியைத் துளைக்கும் வாசனை வீசிக் கொண்டிருந்தது. இத்தகைய தீவில் யார் இருக்க முடியும் என்று கேட்டுக் கொண்ட விஜயன் அது யார் என்பதை லியானா உட்பட யாரும் கூறாதது ஏன் என்று நினைத்தான். டிமார்க்கோவும் லியானாவும் பேசியவற்றைக் கொண்டு அவனுக்குள் ஒரு திட்டம் உருவாகி யிருந்தது. அந்த நிலையில் இந்தத் தீவுக்கு வரவேண்டிய அவசியம் இல்லை யென்றாலும் லியானா வந்து போயிருந்த படியால் மர்மத்தை அறிந்து கொள்ள விரும்பினான் விஜயன்.

தான் செல்வது புதர்கள் மீதாக இருந்தாலும் அது ஒரு பாதைபோல் மடிந்து அமைந்திருப்பதை உணர்ந்த அவன் அதையே அடையாளமாகக் கொண்டு நடந்தான். சுமார் அரை நாழிகை நடந்த நிலையில் தீப ஒளி ஒன்று தெரியவே அதை நோக்கிச் சென்றான்.

அருகில் சென்றபோது நன்றாக வேயப்பட்ட குடில் ஒன்று கண்ணில்பட்டது. குடிலுக்குள் நிறைய பந்தங்கள் ஏற்றப்பட்டிருந்ததால் உட்பகுதி பிரகாசமாக இருந்தது. கையில் இருந்த பந்தத்தைக் கீழே செருக வைத்துவிட்டு குடிலுக்குள் சென்றான். உள்ளே சென்றபோது அவனது கண்களை அவனால் நம்ப முடியவில்லை. அவன் பார்த்த இடத்தில் பெண்ணொருத்தி அமர்ந்திருக்க அவளைச் சுற்றி கணக்கற்ற பாம்புகள் தவழ்ந்து கொண்டிருந்தன. தன்னை அந்தப் பெண் கவனிக்காததால் அவளையே உற்று நோக்கினான் விஜயன். நாகமலைத் தீவில் காணப்பட்ட பெண்களுக்கு நேர்மாறாக அழகையெல்லாம் ஒன்று திரட்டிக்கொண்டு வந்தவளைப்

போல அழகின் சிகரமாக இருந்தாள் அந்தப்பெண். நல்ல வேளையாக தீவுவாசிகளைப் போல் தழைகளை அணியாமல் துணி ஆடைகளையும் ஆபரணங்களையும் நேர்த்தியாக அணிந்திருந்த காரணத்தால் விஜயனுக்கு ஆறுதலாக இருந்தது. வங்கதேசத்தில் இருந்தபோது கூட கண்டிராத பேரழகியாக அப்பெண் இருந்ததாலோ என்னவோ அவளையே கவனித்துக் கொண்டிருந்த விஜயன் கருத்தையும் இழந்திருந்ததால் பெரியதோர் சர்ப்பமொன்று அவனுக்குப் பின்னால் தொங்கிக் கொண்டிருந்ததையும் அவனது கழுத்தை நோக்கி வளைந்து வந்ததையும் அவன் அறியவில்லை.

◈◈◈

## அத்தியாயம் முப்பத்து மூன்று

# நாக நந்தினி

பாம்புகளோடு விளையாடிக் கொண்டிருந்த பெண்ணின் அழகைப் பருகுவதில் கருத்தை இழந்து விட்டிருந்த விஜயன் தன்னைக் கொத்துவதற்குத் தலையை நீட்டிய சர்ப்பத்தைக் கவனிக்கவில்லை. அதேசமயம் தற்செயலாகத் தலையை உயர்த்திய அப்பெண் அதைக் கவனித்துவிட்டு ''வாசுகி, வேண்டாம். நில்'' என்று கூறி கையில் இருந்த முத்தொன்றை எறிந்தாள். முத்து தன்மேல்பட்ட பிறகே தெளிவடைந்த விஜயன் பெண்ணின் குரல் கேட்டுத் திரும்பினான். அவனைக் கொத்த வந்த பாம்பு தலையை இழுத்துக்கொண்டு குடிலின் கூரையில் இருந்த மூங்கிலை நோக்கி நகர்ந்தது. பாம்புகளுடன் விளையாடிய பெண்ணும் அந்நியனான விஜயனைக் கண்டதும் எழுந்து கொண்டாள்.

இமைக்கும் நேரத்தில் அமைதி கலைந்து விட்டதையும் தன் உயிர்பிழைத்ததையும் கண்ட விஜயன் ''பெண்ணே, நீ ஏதோ சொன்னாயே பாம்பைப் பார்த்து அது என்ன?'' என்று கேட்டான் பாலி மொழியில்.

அவனது கேள்விக்குப் பதில் சொல்லாமல் ''நீங்கள் யார்? உங்களை யார் இங்கே அனுமதித்தது? உங்களுக்கு என்ன வேண்டும்?'' என்று பாலி மொழியிலேயே நிதானமாகக் கேட்டாள்.

அறிமுகமாகாத நிலையிலும் ஒருமையில் பேசாமல் மரியாதையுடன் பேசிய அவளது நாகரீகத்தைக் கண்டு ''உன் நாகரீகத்திற்காகவும் என் உயிரைக் காப்பாற்றியதற்காகவும் நன்றி பெண்ணே. நான் வங்கதேசத்து இளவரசன் விஜயன்'' என்றான்.

''நீங்கள் நன்றி தெரிவிக்க வேண்டியது எனக்கல்ல. வாசுகிக்கு'' என்றாள் அப்பெண்.

''அந்தப் பாம்பின் பெயர் வாசுகியா?''

''வாசுகியின் வம்சத்தில் வந்த எல்லா பாம்புகளுக்கும் வாசுகி என்றே பெயர்''

''அதனிடம் தானே நீ பேசினாய் என்னைக் கடிக்க வேண்டாம் என்று''

''ஆமாம்''

''அப்படியென்றால் உனக்குத்தானே நன்றி சொல்ல வேண்டும்?''

''பொதுவாக நான் சொல்வதை பாம்புகள் கேட்கும். ஆனால் அஷ்ட நாகங்களில் ஒன்றான வாசுகி என் பேச்சைக் கேட்பது அரிது''

''அதென்ன அஷ்ட நாகங்கள்?''

''புராணங்கள் சொல்லும் நாகங்களில் எட்டுவித நாகங்கள் சிறப்பானவை. அவை அனந்தன், கார்கோடகன், பிங்களகன், வாசுகி, சங்கா, பத்மன், அனந்த பத்மன், மற்றும் தவுகன் ஆகும்.* இவற்றில் ஒன்றான வாசுகிதான் உங்களைக் கொத்த முற்பட்டது. இங்கே வந்த பலரை அது கொத்திக் கொன்றிருக்கிறது. இன்று என்னவோ தெரியவில்லை. வழக்கம்

* இந்தியாவில் நாகவழிபாடு - தமிழாக்கம் by டி. சிவராமன்

போலத்தான் அதனிடம் நான் வேண்டாம் என்று சொன்னேன். அது கடிக்காமல் சென்றுவிட்டது. என் வார்த்தைகளுக்கு அது திடீரென மரியாதை கொடுத்து நடந்து கொண்டதாக நான் நம்பவில்லை. இருந்தாலும் கடிக்காமல் விட்டுவிட்டது. எனவே நன்றியை அதற்குக் கூறுங்கள்'' என்று சொன்ன அப்பெண் ''புது இடங்களுக்கு வரும்போது புதுமையான வற்றைக் காணலாம். அதை ரசிக்கலாம். ஆனால் விழிப்பாக இருக்கவேண்டும். லயித்து விடக்கூடாது. அதுவும் பாம்பு கொத்த வருவதை அறியாத அளவிற்கு கவனத்தைச் சிதற விடக்கூடாது'' என்றாள்.

அவள் எதைக் கூறுகிறாள் என்பது விஜயனுக்குப் புரிந்தது. அதை அவள் ஆணவத்தோடு கூறாமல் அடக்கத்தோடு கூறியது அவனைக் கவர்ந்தது.

''பெண்ணே, உன் அறிவுரைக்கு நன்றி. நான் இங்கு வர நினைத்தபோது எதை எதையோ பயங்கரமாக எதிர்பார்த்தேனே தவிர உன்னைப் போன்ற அழகான பெண்ணைக் கனவிலும் எதிர்பார்க்கவில்லை. அதோடு புதியவனான என்னைக் காக்க முற்பட்டாய். உன்னிடம் அழகோடு அடக்கமும் நாகரீகமும் இருக்கின்றன. எல்லாமே அபூர்வங்களாக இருக்கின்றன'' என்றான் விஜயன் சற்றே உணர்ச்சி வசப்பட்டவனாய்.

''இளவரசே, எனக்கு இன்னொரு முகம் இருக்கிறது. அதில் நீங்கள் அடக்கம் முதலிய பண்புகளைக் காணமுடியாது. காணவும் வேண்டாம்''

''இது என்ன திடீரென்று புதிர் போடுகிறாய்?''

''புதிர் ஒன்றுமில்லை. உண்மையைச் சொல்கிறேன். இங்கே வருபவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதை நாகங்கள் எனக்கு உணர்த்துகின்றன''

''நாகங்களா?''

''ஆம். இவை என் நண்பர்கள். என்னிடம் அன்போடு பழகுகின்றன. எனக்கு உதவுகின்றன. என்னைக் காக்கின்றன. இங்கே தீயவர்கள் வந்தால் என்மீது தவழும் இவை சீறும். ஆனால் அவை இன்று சீறவில்லை. அதாவது இங்கே

வந்திருக்கும் உங்களைத் தீயவராக எனக்கு அறிவிக்கவில்லை. அதனால்தானோ என்னவோ வாசுகியும் தீண்டவில்லை. ஆகவே வந்திருப்பது தீயவரல்ல என்பதால் நான் அடக்கத்தையும் மரியாதையும் காட்டினேன்''

''பெண்ணே, உன்னிடம் பொய்யைச் சொல்ல நான் விரும்பவில்லை. நீ நினைப்பது போல் நான் நல்லவனில்லை. கொலை கொள்ளை என்று பலவற்றையையும் செய்த தீயவன்''

''அரசகுமாரரே, மனிதர்கள் பொய் சொல்லலாம். விலங்குகள் அப்படியல்ல - அவை இயற்கையான உணர்ச்சிகளையே உணர்த்துகின்றன. அதில் உண்மை மட்டுமே பிரதிபலிக்கும். அதிலும் பாம்புகள் பொய்ப்பதே இல்லை. அதனால் தான் அது எல்லா விலங்குகளிடமிருந்து தனித்தன்மை பெற்று விளங்குகின்றன. ஏழு உலகங்களில் நாகங்களுக்கென்று தனி உலகம் இருக்கிறது. நாகங்களில் நான் வாசுகி என்று கீதையில் கிருஷ்ணபகவான் சிறப்பாகக் கூறுகிறார். நாகம் அனந்த பத்மனாக திருமாலுக்கு படுக்கையாக இருக்கிறது. சிவபெருமானின் கழுத்தில் மாலையாக அழகு செய்கிறது. தேவர்களும் அசுரர்களும் நாகத்தால்தான் பாற்கடலைக் கடைந்தார்கள். சிவபெருமானின் பிள்ளையான பிள்ளையாரின் ஆயுதங்களில் ஒன்று நாகபாணம். அர்ஜுனனை வீழ்த்த கர்ணன் வைத்திருந்த அஸ்திரம் நாகாஸ்திரம். பாம்பு ஒன்று தான் தன் தோலை உரித்து புதுப்பித்துக் கொள்கிறது. வேறு எந்த உயிரினத்திலும் இந்தச் சிறப்பு இல்லை. இத்தகைய தனித்தன்மையும் மகத்துவமும் பெற்ற பாம்புகள் உங்களைத் தீயவர் அல்ல என்று உணர்த்தினால் அது தவறாக இருக்க முடியாது''

''பெண்ணே, நான் கூறுவதைக் கேட்டுவிட்டு நீயே என்னைப் பற்றிச் சொல்'' என்று கூறிய விஜயன் தனது தந்தை மக்களை மறந்து சுகபோக வாழ்க்கையில் ஆழ்ந்தது முதல் நாகர்மலைத் தீவுகளுக்கு மரக்கலத்தலைவன் தன்னை திசைமாறி போகச் செய்ததையும் இத்தீவில் மூன்று நாட்களில் பலியாவதற்கு நிர்ணயம் செய்யப்பட்டது வரை விவரமாகக் கூறினான்.

''நீங்கள் கூறிய விவரங்களின்படி நீங்கள் நல்லவர் என்பது தானே தெரிகிறது? போரில் வீரர்களைக் கொல்பவன் தீயவன் அல்ல. தீய அரசனுக்கு எதிராக மக்களுக்கு உதவ நீங்கள் கொலை கொள்ளைகளில் ஈடுபட்டதும் அதர்மம் அல்ல. உயர்ந்த லட்சியத்திற்காக புறப்பட்ட நீங்கள் ஏமாற்றப் பட்டிருக்கிறீர்கள். மொத்தத்தில் என் பாம்புகளின் கணிப்பு சரியாகவே இருக்கிறது''

''பெண்ணே, உன் பெயரென்ன?''

'நாக நந்தினி''

''நாகக் கன்னிகையா?''

''ஆமாம்''

''இத்தீவில் நீ மட்டும் தான் இருக்கிறாயா?''

''ஆமாம்''

''துணையில்லாமல் தனியாகவா இருக்கிறாய்?''

''இத்தனைப் பாம்புகள் போதாதா துணைக்கு? இந்தத் தீவு முழுவதும் பாம்புகள் தான் இருக்கின்றன. இவற்றைவிட வேறு துணை எனக்கு வேண்டுமோ? தீயவர்கள் வந்தால் எனக்கு வேலையே தராமல் இவைகளே அவர்களை அழித்துவிடும்''

''பாம்புகள் உன்னைக் காப்பது இருக்கட்டும். நீ தனியாக இருந்து கொண்டு இங்கே என்ன செய்ய முடியும்? உனக்கு உணர்ச்சிகள் இல்லையா? அவற்றைத் துறந்து உன்னால் வாழமுடியுமா?''

இதற்கு உடனடியாக நாக நந்தினி பதில் கூறவில்லை.

''உனக்கு விருப்பமில்லை என்றால் எதுவும் பதில் சொல்ல வேண்டாம்'' என்றான் விஜயன்.

''எனக்கு என்று ஒன்றுமில்லை. எல்லாமே பாம்புகளின் இஷ்டம் தான். அவகளைக் கேட்கிறேன். அவை சம்மதித்தால் என்னைப் பற்றிச் சொல்கிறேன்''

''அது உன் இஷ்டம். நான் போய் வருகிறேன். நந்தினி''

''எதற்காக இங்கே வந்தீர்கள்?''

''நேற்றிரவு லியானா இங்கே வந்துவிட்டுப் போனது எனக்குச் சந்தேகமாக இருந்தது. ஆகவேதான் இங்கு இருப்பது யார் என்று தெரிந்து கொள்ள விரும்பினேன். முதலிலேயே நான் சொன்னதுபோல் நான் இங்கே எதிர்பார்த்தது பயங்கரமான மனிதனைத்தான். ஆனால் என் நினைப்பிற்கு நேர் விரோதமாக நாக கன்னியான உன்னைக் கண்டேன். இனி இங்கே எனக்கு வேலையில்லை. திரும்புகிறேன்''

''லியானா இங்கே ஏன் வந்தாள் என்பது உங்களுக்குத் தெரிந்து விட்டதா?''

''தெரியவில்லை. அதேசமயம் பிரமாதமான விஷயம் இருக்கும் என்று நான் எண்ணவில்லை''

''முக்கிய விஷயமாகத்தான் என்னைப் பார்க்க வந்தாள் லியானா?''

''முக்கிய விஷயமா?''

''ஆமாம். அதுவும் உங்களைப் பற்றியது''

'என்னைப் பற்றியா?''

''ஆம். அரசகுமாரரே. லியானா உங்களை மிகவும் விரும்புகிறாளாம். உங்களை மணக்க ஆசைப்படுகிறாளாம். அதற்காக உங்களை பலியிடாமல் காக்கத் திட்டமிட்டிருக்கிறாளாம். இதற்கெல்லாம் என் சம்மதத்தைப் பெறவே என்னிடம் வந்தாள் லியானா''

''இந்த விஷயத்தில் உன் சம்மதம் எதற்கு?''

''இது ரகசியம்''

''நீ சம்மதம் தெரிவித்து விட்டாயா?''

''அதுவும் ரகசியம் தான்''

''ரகசியம் என்றால் நான் அதுபற்றிக் கேட்பதில் அர்த்தமில்லை. நான் புறப்படுகிறேன்''

''பலிக்குத் தயாராகி விட்டீர்களா?''

''லட்சியப் பயணத்தில் வரும் சோதனைகளுக்குத் தயாராக இருப்பதுதான் என் போன்றவர்களின் குணம்''

''நாளைக்கு இதே நேரத்தில் இங்கே வரமுடியுமா நீங்கள்?''

''எதற்கு வரவேண்டும்? நீதான் எதையும் சொல்ல மறுக்கிறாயே!

''அதற்குக் காரணம் யார் என்பதைத்தான் சொல்லி விட்டேனே! மறந்து விட்டீர்களா? இன்று நான் என் பாம்புகளிடம் கேட்கிறேன். நாளைக்கு நீங்கள் வாருங்கள்''

''இன்று என்னை இங்கே அனுப்பி வைத்தவள் லியானா. நாளைக்கு எப்படி இங்கே வரமுடியும் அவள் உதவி இல்லாமல்''

''அவள் உதவி வேண்டாம். நீங்களாகவே நீந்தி வரலாம். நான் தீவின் முகப்பிலேயே காத்திருக்கிறேன்''

''என்னோடு யாரையாவது அழைத்து வரலாமா?''

''எதற்கு?''

''என்னைச் சேர்ந்தவர்கள் என்மீது சந்தேகப்படாமல் இருப்பதற்காகத்தான்''

''ஒருவரை மட்டும் அழைத்து வாருங்கள். சரியாக இந்த நேரத்திற்கு வந்துவிடுங்கள்''

அத்தீவிலிருந்து விடைபெற்றுக்கொண்டு டிமார்க்கோவின் தீவை அடைந்து தன் இருப்பிடத்தை அடைந்போது தோழர்கள் விஜயனைக் கேள்விகளால் துளைத்தெடுத்தார்கள். எல்லோருக்கும் ஆறுதலான பதில்களைக் கூறிவிட்டு தனியாக வந்து படுத்தான். ஆனால் தூக்கம் வருவதாக இல்லை. அவனது நினைவுகள் முழுவதையும் நாகநந்தினி ஆக்கிரமித்துக் கொண்டு அவனை அலைக்கழித்தாள். அவளைச் சுற்றி ஏதேதோ மர்மங்கள் இருந்தாலும் தற்போது விஜயனை ஆட்கொண்டது அவளது அழகுதான். வங்கதேசத்தில்கூட பார்த்தறியாத அழகியாக அவள் இருந்தது அவனைச் சொக்க வைத்தது. அன்று வரையில் அழகை ரசிப்பதென்பதும் அழகியை ரசிப்பது என்பதும் அவனுக்குப் பழக்கமில்லாததாக இருந்தது. ஆனால்

நாக நந்தினியைக் கண்டபின் தனக்குள் ரசிகத்தன்மை வளர்ந்திருப்பதை அவன் உணர்ந்தான். தன் மனைவி மாயாவிடம்கூட ஏற்படாத ஓர் உணர்வு இப்பெண்ணிடம் ஏற்பட்டது அவனுக்கு வியப்பாக இருந்தது. தானிருக்கும் நிலையில் தனக்கு இப்படியொரு உணர்வு வரமுடியுமா என்று தனக்குத்தானே கேட்டுக் கொண்டான்.

அழகால் அரிதாகத் தன்னை ஆட்கொண்ட அந்த ஆரணங்கு அந்தப் பாம்புத் தீவில் தனியாய் இருந்தது பொறுத்தமில்லாத தாக இருந்தது அவனுக்கு. அவளுக்கும் லியானாவுக்கும் ஏதோ சம்பந்தம் இருக்கும்போது அவள் மட்டும் பாம்புத் தீவில் தனியாக இருக்க வேண்டியதற்கான காரணம் அவனுக்குப் புலப்படவில்லை. தன்னை லியானா மணந்து கொள்ள அவளிடம் சம்மதம் பெறவேண்டிய அவசியம் என்ன என்பதும் அவனுக்குப் புரியவில்லையாதலால் குழம்பினான். எல்லாவற்றையும் மீறி அவளது அழகு அவனுக்கு முன் வந்து மருட்டியது.

மறுநாள் காலை டிமார்க்கோ உணவளித்தான்.

உணவுண்ட பின் அவனைத் தனியே அழைத்த டிமார்க்கோ ''என்ன, முடிவெடுத்து விட்டீர்களா?'' என்று கேட்டான்.

''முடிவெடுத்து விட்டேன். ஆனால் நீ எதிர்பார்க்கிற மாதிரியல்ல. வேறு மாதிரி'' என்றான் விஜயன்.

''வேறு மாதிரியா?''

''ஆம்'' என்று சொன்ன விஜயன் தன் திட்டத்தைச் சொன்னான். அதைக் கேட்டதும் அவனைக் கட்டிப்பிடித்துக் கொண்டான் டிமார்க்கோ.

அன்றிரவு தனஞ்ஜெயனோடு பாம்புத் தீவிற்குச் சென்றான் விஜயன்.

நாக நந்தினி தன் கதையைக் கூறவும் செய்தாள்.

◈◈◈

## அத்தியாயம் முப்பத்து நான்கு

# விஜயனின் திட்டம்

தனது யோசனையை விஜயன் ஏற்பானோ மாட்டானோ என்ற கவலையோடு இருந்த டிமார்க்கோ அவனது முடிவைத் தெரிந்துகொள்ளும் ஆவலோடு ''என்ன, முடிவெடுத்து விட்டீர்களா?'' என்று கேட்டான்.

விஜயன் அவனை ஆழம் பார்க்க முயன்று ''என் முடிவில் என்ன இருக்கிறது டிமார்க்கோ? நான் முடியாது என்று கூறிவிட்டால் வேறு வழி இல்லாமலா போய்விடும்?'' என்று கேட்டான்.

''என்னைப் பொறுத்தவரை நல்ல திட்டமாக முதலிலேயே தீட்டிவிடுவேன். அது வெற்றி பெற பாடுபடுவேனே தவிர இதர மார்க்கங்களைப்பற்றி யோசிக்கவும் மாட்டேன்''

''சிறப்பான நோக்கம்தான்'' என்று கூறிய விஜயன் 'லியானாவை இந்த அளவிற்கு விரும்புகிறாயே - அந்த அளவிற்கு உன்னை அவள் விரும்புகிறாளா?'' என்று கேட்டான்.

''அதிலென்ன சந்தேகம்? ஏதோ உங்களைப் பார்த்ததும் லேசான சபலம் வந்துவிட்டது அவ்வளவுதான்''

''பிறரைக் கண்டதும் சபலப்படுபவள் எப்படி உண்மையான அன்புள்ளவளாக இருக்கமுடியும்?''

''உங்களை பலியிட்டு விட்டால் எல்லாம் சரியாகிவிடும்''

''முட்டாளாகப் பேசுகிறாயே டிமார்க்கோ. என்னைப் பலியிட்டு விட்டால் பிரச்சினை தீர்ந்துவிடுமோ? தான் விரும்புபவனை நீ வெட்டிவிட்டால் அவள் ஆவேசப்பட மாட்டாளா? உன்னை வெறுக்க மாட்டாளா? அப்படி வெறுக்கவில்லை என்று வைத்துக் கொண்டாலும் எனக்குப் பிறகு என்னைப்போல யாருமே இத்தீவுக்கு வரமாட்டார்களா? அவர்கள் மீது சபலம் வராதா?''

''விஜயபாகு, ஊகங்களுக்கு அளவில்லை. அதேசமயம் ஊகித்துக்கொண்டே இருப்பதில் அர்த்தமும் இல்லை. எதிர்காலத்தில் எது வேண்டுமானாலும் நடக்கும். அதை எண்ணி நிகழ்காலத்தை இழந்து விடக்கூடாது''

''தெளிவாகத்தான் பேசுகிறாய் டிமார்க்கோ. உன் தெளிவை நிகழ்காலத்திலேயே இன்னும் சற்று ஆழமாகக் காட்ட முயற்சிக்கக் கூடாதா?''

''நீங்கள் சொல்வது எனக்குப் புரியவில்லை.

''டிமார்க்கோ, உனது திட்டப்படியே நடப்பதாக இருக்கட்டும். அதன் விளைவு என்ன? நான் சாகப் போகிறேன். நீயும் லியானாவும் பழையபடி காதல் வாழ்க்கையில் ஈடுபடப் போகிறீர்கள். அவ்வளவுதானே?''

''வேறென்ன வேண்டும்?''

''எத்தனை காலத்திற்குத்தான் இந்தத் தீவுவாசிகளுக்குப் பயந்து கோழைத்தனமாக வாழ்ந்து கொண்டிருப்பாய்? அப்படி வாழ்வதால் உனக்கென்ன சிறப்பு கிடைக்கும்? காட்டு மிராண்டிகளின் தலைவன் என்றுதானே எல்லோரும் சொல்வார்கள்?''

''நமக்குத் தேவையானது எல்லாம் கிடைக்கும் அவற்றை வைத்துக்கொண்டு சுகமாக வாழ்வதுதான் புத்திசாலித்தனம்?''

''நீ சொல்வது இந்தத் தீவுவாசிகளுக்கு வேண்டுமானால் பொருந்தலாம் உனக்கு எப்படிப் பொருந்தும்? நீ இத்தீவைச் சேர்ந்தவனல்ல. என்னைப்போல இங்கு வந்து சிக்கியவன். இங்கு வந்து சிக்குவதற்கு முன் வரை நீ யார்? ஒரு மரக்கலத் தலைவன். வணிகக் கப்பல்களைக் கொள்ளையடிக்கும் அளவிற்குத் துணிச்சல் மிகுந்தவன். மொத்தத்தில் ஒரு வீரன். இத்தீவுக்கு வந்ததும் எல்லாவற்றையும் பறிகொடுத்தாய். வீரனான நீ கோழையானாய். உன் சகாக்களும் மரக்கலமும் அழிந்தன. மரக்கலத்தலைவனான நீ தீவுத் தலைவன் என்ற பெயரில் அடிமைத் தலைவன் ஆனாய். உண்டு உறங்கும் மிருகங்களில் ஒன்றாக மாறினாய். இதுதானே உண்மை? வீரனின் கடமை வீரனாக வாழ்ந்து வீரனாக மடியவேண்டுமே

தவிர உயிருக்கு பயந்து வீரத்தைச் சாகவிட்டு கோழையாக வாழ்ந்து கோழையாகவே சாவது அல்ல'' என்று சொல்லி நிறுத்தி டிமார்க்கோவின் முகத்தைக் கூர்ந்து கவனித்தான் விஜயன்.

டிமார்க்கோவின் முகத்தில் லேசான குழப்பம் தெரிந்தது.

விஜயனே பேசமுற்பட்டு ''நான் பேசுவதைக் கேட்டு குழம்பாதே டிமார்க்கோ. யோசித்துப்பார். உன் பழைய கௌரவத்தை நீ ஏன் நிலைநாட்ட முடியாது?'' என்று கேட்டான்.

''அது எப்படி முடியும்? இத்தீவுவாசிகளை மீறி நான் எதையும் செய்யமுடியாதே?''

''இந்தத் தயக்கம்தான் உன் பலவீனம். இத்தீவு வாசிகளை விட பயங்கரமான சக்திகள் உலகில் இருக்கின்றன. அவைகளுக்கு முன் இவர்கள் வெறும் தூசு தான்''

''என் ஒருவனால் அது முடியக்கூடிய காரியம் அல்ல''

''ஏன் நானில்லையா? என் தோழர்கள் இல்லையா?''

''அவர்களைவிட தீவுவாசிகளின் எண்ணிக்கை அதிகம்''

''துரியோதனனுக்கு நூறு தம்பிகள். அவனுக்கு இருந்த படைகள் அதிகம். கிருஷ்ணனின் நாராயணப் படைகள்கூட அவன் பக்கம் இருந்தன. ஆனால் போரில் ஜெயித்தது அவனல்ல. பாண்டவர்கள். வெறும் எண்ணிக்கை வெற்றியை உறுதிசெய்யாது என்பதற்கு இதைவிட வேறு உதாரணம் தேவையா?''

''என்னை பழையபடி கொள்ளைக்காரனாகச் சொல்கிறீர்களா?''

''முதலில் மரக்கலத் தலைவனாக மாறு''

''மரக்கலம்?''

''என் கப்பல் தான் இருக்கிறதே?''

''அது''

''அது உன் சொந்தம் என்றுதானே சொல்லிக் கொண்டிருந்தாய்? அது போதாதா? அது சாதாரணக் கப்பல்

அல்ல. தீவுக்கப்பல். மிகவும் பெரியது. அதன் தலைவனாக நீ ஆவதற்கு கசக்கிறதா? இதை வைத்துக்கொண்டு இக்கடலில் என்னவெல்லாம் சாதிக்கலாம் என்று கற்பனை செய்து பார். நீ மட்டும் சரியாகவும் சாமர்த்தியமாகவும் இயங்கினால் இப்பூர்வ கடலில் நீ ஆதிக்கம் செலுத்தலாம். உன்னை அழிப்பது கஷ்டம்''

விஜயன் விரித்தவலை நேர்த்தியாக இருந்ததால் அதில் எளிதில் சிக்கினான் டிமார்க்கோ. கொள்ளைக்காரனாக இருந்தபோது வாழ்ந்த வாழ்க்கையையும் தற்போதைய வாழ்க்கையையும் ஒப்பிட்டுப் பார்த்தான். விஜயன் சுட்டிக் காட்டியபடி தீவு வாழ்க்கை கோழைத்தனமான வாழ்க்கை என்பது அவனுக்கு நன்றாகத் தெரிந்தது. கொள்ளைக்காரன் வாழ்க்கையில் அனுபவித்த சுதந்திரமும் பெருமையும் தற்போதைய வாழ்க்கையில் இல்லை என்பதும் புரிந்தது.

அதேசமயம் தயங்கிய அவன் ''நீங்கள் கூறுகிற மாதிரி மாற அவகாசம் வேண்டும். ஆனால் நாளைக்கு மறுநாள் பலிநாள் ஆயிற்றே! இரண்டு நாட்களில் என்ன செய்யமுடியும்?'' என்று கேட்டான்.

''இரண்டு நாட்களில் எதுவும் செய்யமுடியாது''

''பின்?''

''பலியைத் தள்ளிப்போட வேண்டியதுதானே?''

''அதெப்படி?''

''லியானாவுக்கு உடல் நலம் சரியில்லை என்று வைத்தியரை வைத்துக் கூறிவிடு. பலியை அடுத்த பௌர்ணமிக்குத் தள்ளி வைக்கலாம்''

''அருமையான யோசனை. எனக்குத் தோன்றாமல் போயிற்று''

''நமக்குள் யாருக்குத் தோன்றினால் என்ன? பலியைத் தள்ளி வைத்தால் ஒருமாத அவகாசம் கிடைக்கிறது. இத்திட்டத்தைப் பற்றி லியானா உட்பட யாருக்கும் சொல்ல வேண்டாம். ரகசியமாகவே இருக்கட்டும். கப்பலை கரைக்கு இழுத்து அதன் அடியில் உள்ள பாசிகளையும் கிளிஞ்சல்களையும் தீவு

வாசிகளைவிட்டு இறச்சொல், அடிப்பாகம் சுத்தப்படுத்தப் பட்டால் தான் கப்பலின் வேகம் அதிகரிக்கும்.

இதைக் கேட்டதும் விஜயனைக் கட்டிப்பிடித்துக் கொண்டான் டிமார்க்கோ.

''என் கௌவரத்தை மீட்க இதைவிடச் சிறந்த திட்டம் இருக்கமுடியாது'' என்று ஒப்புக்கொண்டான் டிமார்க்கோ.

''உன் மனம் கவர்ந்த லியானாவை மரக்கலத்திற்கு வரவழைத்துக் கொள்ளலாம். காதலிக்கு காதலியும் கிடைக்கிறாள். வீரத்திற்கு வீரமும் கிடைக்கிறது. ஆகவே பலியைத் தள்ளிப்போடும் அறிவிப்பை இன்றே செய்துவிடு. லியானாவை வெளியே அதிகமாக நடமாட விடாதே. தீவுக்கப்பலிலிருக்கும் பொருட்களை பத்திரமாகக் கொண்டு வந்து கடற்கரையில் பாதுகாப்பாக வைத்துவிட்டு கப்பலை கரைக்கு இழுக்கும் வேலையை நாளைக்கே துவங்கிவிடு. உன்னை நாளைக்கு வந்து சந்திக்கிறேன்'' என்று சொல்லிவிட்டு அகன்றான் விஜயன்.

இவ்வாறு விஜயன் டிமார்க்கோவிடமும் லியானாவிடமும் சர்வசகஜமாகப் பேசிவிட்டு வருவதையும் உணவு நேரங்களில் விதவிதமான உணவுகள் தீவுவாசிகள் மூலமாகவே வருவதையும் கண்ட அவனது தோழர்கள் அவனிடம் ''இங்கே என்ன நடக்கிறது?'' என்று கேட்டார்கள்.

''நல்லதே நடந்தன. நல்லதே நடக்கின்றன. நல்லதே நடக்கும்'' என்றான் விஜயன்.

★★★

தீவைச்சுற்றிப் பார்க்கவும் ஆராயவும் இரண்டு நாட்களாகத் தனது நேரத்தைச் செலவிட்டுக் கொண்டிருந்த விஜயன் தீவுத்தலைவனிடம் பேசிவிட்டு வந்ததற்குப் பிறகு அந்த வேலையைத் தொடரவில்லை. மாறாக தன் தோழர்களிடம் சில செய்திகளைச் சொல்லி அந்த வேலையைச் செய்யும்படிக் கட்டளையிட்டான். டிமார்க்கோவிடம் பேசிவிட்டு வந்த விஷயம் குறித்து யாரிடமும் எதுவும் கூறவில்லை.

தனஞ்ஜெயனிடம் மட்டும் அன்றிரவு பாம்புத் தீவுக்குப் போக வேண்டியது பற்றி சொல்லிவைத்தான்.

பகல் உணவை அவன் முடிப்பதற்கும் லியானாவின் பணியாள் ஒருவன் வந்து அவனை அழைத்துப் போவதற்கும் சரியாக இருந்தது. லியானாதான் அவனை அழைத்திருந்தாள்.

அவளது இருப்பிடத்திற்கு விஜயன் வந்து சேர்ந்தபோது லியானாவின் கோலம் படுமோசமாக இருந்தது. மலைக் குகையின் பிரத்தியேக அறையில் தனியாக இருந்தாலும் அவள் ஆடை எதுவும் அணியாமல் நிர்வாணமாகவே பாறைக்கட்டிலில் ஒருக்களித்த நிலையில் படுத்துக் கிடந்தாள். அக்காட்சியைக் காணச் சகிக்காத விஜயன் தனது அழுக்கான மேலங்கியை எடுத்து அவள் மீது வீசினான். விஜயனே தன் மீது விழுந்து படர்வது போல் உணர்ந்த அவள் அந்த ஆடையை ஆசையோடு வாங்கி போர்த்துக் கொண்டு எழுந்தாள். ஓரளவிற்கு அவளது அங்கங்கள் அவனது அங்கியில் மறைந்தன. கட்டிலை விட்டு எழுந்த அவள் ''உனக்கு என்னைப் பார்க்க வெட்கமாக இருக்கிறதா?'' என்று கேட்டாள்.

கேள்வி உனக்கு ஒரு கேடா என்று நினைத்தான் விஜயன்.

அவன் உடனடியாகப் பேசாததால் ''உன் வெட்கத்திற்குக் காரணம் நீ ஆடைகளை அணிந்திருப்பதுதான். அவற்றைக் கழற்றி எறிந்துவிடு. வெட்கம் போய்விடும்'' என்றாள் சாதாரணமாக.

அது விஷயமாக விவாதத்தில் இறங்க விரும்பாத விஜயன் ''என்னை எதற்காக அழைத்தாய் லியானா?'' என்று கேட்டான்.

''நேற்றிரவு தீவுக்குப் போனாயா?''

''போனேன்''

''நந்தினியைப் பார்த்தாயா?''

''பார்த்தேன்''

''என்ன சொன்னாள்?''

''எதுவும் சொல்லவில்லை''

''சொல்லவில்லையா? எதுவுமே சொல்லவில்லையா?''

''எதுவானாலும் பாம்புகளைக் கேட்க வேண்டும் என்கிறாள்''

''அது உண்மைதான். பாம்புகள்தான் அவளுக்கு வழிகாட்டி, அவளிடம் நீ என்ன பேசினாய்?''

''லியானா இதெல்லாம் உனக்கெதற்கு? நான் தான் உனக்குச் சம்மதம் கொடுத்து விட்டேனே?''

''உண்மைதான். இருந்தாலும் நந்தினியின் சம்மதம் இந்த விஷயத்தில் அவசியம். ஆகவேதான் கேட்டேன். நமது திட்டத்தைப் பற்றி அவளிடம் சொல்லிவிட்டாயா?''

''அவளிடம் எதற்காகச் சொல்லவேண்டும்? அதோடு தன்னைப்பற்றி அவள் கூறுவதற்கு முன் நான் எப்படி பேசமுடியும்? அதோடு பாம்புத் தீவில் அவளைப் போன்ற பெண்ணை நான் எதிர்பார்க்கவில்லை. ஏமாந்ததுதான் மிச்சம்''

''நீ ஏமாறுவாய் என்பது எனக்குத் தெரியும். ஆகவே தான் அவளைப்பற்றி முன்கூட்டி எதையும் உனக்குச் சொல்லவில்லை. உன்னை மீண்டும் வரும்படிச் சொன்னாளா?''

''இன்று வரும்படிச் சொன்னாள். பாம்புகளைக் கேட்டு விட்டுப் பேசுவதாகச் சொன்னாள். எனக்கு அங்கு போகும் விருப்பம் இல்லை''

''ஏன்?''

''அவளைப்பற்றி தெரிந்து கொண்டு எனக்கு ஆகப் போவது எதுவும் இல்லை''

''உனக்கு எதுவும் இல்லாமல் இருக்கலாம். ஆனால் எனக்கு இருக்கிறது''

''உனக்கா?''

''ஆமாம் விஜயா நீ தான் இந்த விஷயத்தில் உதவி செய்ய வேண்டும்''

''என்ன உதவி?''

''உன்னை மணக்க அவளது சம்மதத்தைக் கேட்டேன். அவள் மறுத்து விட்டாள்''

''அவள் சம்மதம் எதற்கு?''

''அதைப் பிறகு சொல்கிறேன். நீ தான் அவளிடம் இதுபற்றிப் பேசி சம்மதம் வாங்கவேண்டும்''

''அவள் தான் சரிவரப் பேசவே மறுக்கிறாளே?''

''பாம்புகள் சம்மதம் கிடைத்தவுடன் சகஜமாகப் பேசுவாள். ஆகவே இன்று கட்டாயமாகப் பேசு. நாளைக்குப் போ. எப்போது வேண்டுமானாலும் போ. அவளது சம்மதத்தை மட்டும் எப்படியாவது வாங்கிவிடு''

''பலியைத் தள்ளிப்போட ஏற்பாடு செய்து விட்டாயா?''

''இன்று எப்படியும் அறிவிக்கச் செய்து விடுவேன். அந்தக் கவலை உனக்கு வேண்டாம்''

''டிமார்க்கோவை வெட்டிப் போடுவது பற்றி நந்தினியிடம் கூறிவிட்டாயா?''

''இல்லை. அது நம் இருவருக்கு மட்டுமே உள்ள ரகசியம்'' என்று சொன்ன லியானா ''இன்றும் படகை அனுப்புகிறேன். போய் வா'' என்றாள்.

''படகு வேண்டாம். உன் ஆட்களும் வேண்டாம். நான் அங்கே செல்வது ரகசியமாக இருப்பதே நல்லது. ஆகவே நான் நீந்தியே செல்கிறேன்''

''ஜாக்கிரதையாகப் போ. இக்கடல் பகுதியில் சிலசமயம் கொம்பு சுறாக்கள் வருவதுண்டு''

''கொம்பு சுறாக்களா?''

''ஆம். கனத்த சரீரம் கொண்ட இந்த மீன்களுக்கு இரண்டு கொம்புகள் இருக்கும். கொம்பின் நீளமே இருபத்திரண்டு அடி இருப்பதுண்டு. தன் உடல் வலிமை முழுவதையும் கொம்புகளுக்கு இது கொடுக்கும்போது அவை மரக்கலங்களை

கூட துளைத்துவிடும். படகுகளை கவிழ்க்கும். நாம் எதிர்ப்பட்டால் அக்கொம்புகளால் கிழிக்கப்படுவோம்''*

''இதுபோன்ற சுறாக்கள் பசுபிக் கடல் பகுதியில்தானே இருப்பதாகச் சொல்கிறார்கள்?

''உண்மைதான். இந்தத் தீவில் பிணவாடை அதிகமாக வீசுவதால் இரையை எதிர்பார்த்து சில சுறாக்கள் நாகர்மலைப் பகுதியில் வந்துவிட்டன. இத்தீவுப் பகுதிகளைச் சுற்றித் திரிகின்றன.''

''நம் தீவுவாசிகள் யாராவது இவற்றால் தாக்கப்பட்டிருக் கிறார்களா?''

''ஒருமுறை படகில் சென்று கொண்டிருந்தபோது இந்த வகை சுறா ஒன்று தென்பட்டிருக்கிறது. திரப்பகா என்ற அந்தப் படகு உறுதியான நார்களால் கட்டப்பட்டு கெட்டியான மெழுகுகளால் பூசப்பட்டவை. இப்படகுகள் அலைகளாலோ புயல் காற்றினாலோ உடைபடாது** இந்தச் சுறாவின் கொம்புகள் படகைக் குத்தியும் படகு துளைக்கப்படவில்லை. எனவே சுறா தன் கொம்புகளால் படகைத் தூக்கி எறிந்துவிட்டது. படகில் இருந்தவர்கள் தூக்கிவீசப்பட்டார்கள். ஒருவனைத் தவிர மற்றவர்கள் மூழ்கிப்போய் இறந்துவிட்டார்கள்''

இப்படி உருப்படியான விஷயங்களை லியானா கூறியபோது ''இவள் மட்டும் நல்லவளாகவும் காமமற்றவளாகவும் இருந்தால் நாட்டையே கட்டி ஆளலாமே?'' என்று நினைத்த விஜயன் அவளிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு இரவுப் பொழுது வந்ததும் தனஞ்ஜெயனை அழைத்துக் கொண்டு தெற்கு கடற்கரைக்கு வந்தான். பாம்புத் தீவுக்கு நீந்திப் போய்விட முடியும் என்றாலும் கொம்பு சுறா பற்றி லியானா கூறியிருந்ததால் சற்றே அச்சப்பட்டான் விஜயன். பிறகு அதற்கெல்லாம் கவலைப்பட்டால் ஆகாது என்று தெம்பும் தெளிவையும் அடைந்து உபதலைவனுடன் கடலில் இறங்கி

* பக்கம் 114 'கடல்' by கு. ராசாராம்

** பக்கம் 168-169 'பெரிப்ளுஸ்'

நீந்தலானான். நந்தினியைக் காணும் ஆவல் காரணமாய் அவனிடம் சோர்வு ஏற்படவில்லை. உபதலைவன் தனஞ்ஜெயனோ கடலில் நீந்திப் பழக்கப்பட்டவனாதலால் அவனும் சோர்வடையவில்லை.

இருவரும் ஒரு வழியாகப் பாம்புத் தீவின் கரையை அடைந்தபோது கையில் பந்தத்துடன் நின்றிருந்தாள் நாக நந்தினி. உபதலைவனுக்கு அக்காட்சி பேராச்சரியமாக இருந்தது. ஏதோ கடல் தேவதையே நேரில் வந்து வரவேற்பது போல் இருந்தது அவனுக்கு. அப்படிப்பட்டவள் விஜயனுக்கு தெரிந்தவளாக இருப்பதைக் கண்ட அவன் ''இவருக்கு ஏதோ ஒன்று வேலை செய்கிறது. இல்லையென்றால் இவர் எப்போதோ மரணமடைந்திருக்க வேண்டும்'' என்று தனக்குள் கூறிக்கொண்டான்.

கரையில் ஏறியதும் அவள் பந்தமுடன் நின்ற காட்சியைக் கண்ட விஜயன் ''அழகை வரவேற்பவர்கள் தான் இருப்பார்கள். இங்கே அழகே நின்று வரவேற்கிறது'' என்றான்.

''பேச்செல்லாம் இருக்கட்டும். தலையையும் உடம்பையும் துடைத்துக்கொண்டு இந்த ஆடைகளை அணிந்து கொள்ளுங்கள்'' என்று கூறி சில உடைகளைக் கொடுத்தாள் நாகநந்தினி.

தீவுக்கு வந்ததிலிருந்து மாற்று உடையில்லாமல் ஒரே ஆடையை அணிந்திருந்த அவர்களுக்கு அவள் கொடுத்த ஆடை அமுதம் போல இனித்தது.

ஆடைகளை அணிந்துகொண்ட அவர்கள் அவள் காட்டிய வழியில் நடந்து அவளது குடிலை அடைந்தார்கள். குடில் சுத்தமாக இருந்தது. பாம்புகள் எதுவும் இல்லை. அந்த நிலை விஜயனுக்குப் பிடித்திருந்தது. அவள் சில பழங்களை இருவருக்கும் கொடுத்து உண்ணும்படி கேட்டுக் கொண்டாள். இருவரும் உண்ட நிலையில் தனக்குப் பின்னால் கரியதோர் பாம்பு படமெடுத்ததைக் கண்ட தனஞ்ஜெயன் அதை வீழ்த்த தன் இடையில் இருந்த வாளை உருவினான்.

அதைக்கண்ட நாக நந்தினி ''முட்டாளே, என்ன செய்கிறாய்?'' என்று கூச்சலிட்டாள்.

அதேசமயம் கருநாகம் தனஞ்ஜெயனின் முதுகில் கொத்தி விடவே அவன் ஒரு துள்ளல் துள்ளி தரையில் வீழ்ந்தான்.

◈◈◈

## அத்தியாயம் முப்பத்தைந்து

# நந்தினியும் பாம்புத்தீவும்

துள்ளிவிழுந்த உபதலைவனின் வாயில் நுரை தள்ளியது. அதைக் கண்டு விஜயன் ஸ்தம்பிக்க, அந்தப் பெண்ணோ ''யார் இந்த முட்டாள்?'' என்று கோபத்துடன் கேட்டாள்.

''என் உபதலைவன் நாகநந்தினி, அவனிடம் இத்தீவு பற்றியோ பாம்புகள் பற்றியோ நான் எதுவும் கூறவில்லை. தவறு என்மீது தான். பாம்பைக் கண்டதும் பயந்து வாளை உருவி விட்டான். அவனைக் காப்பாற்று'' என்று கேட்டுக் கொண்டான் விஜயன்.

''இவனைத் தீண்டிய நாகம் எது தெரியுமா? தக்ஷகன். இது கடித்தவர்கள் பிழைத்ததில்லை. நான் ஒன்றும் செய்யமுடியாது'' என்றாள் நாகநந்தினி.

விஜயன் உடனடியாக உபதலைவனின் உடலருகே அமர்ந்தான். விரல்களில் ஒருவித யோக முத்திரையைப் போட்டுக்கொண்டு ஏதோ மந்திரங்களை வாய்விட்டே ஜெபிக்கலானான்.

அவனது செயல் புதுமையாக இருந்ததால் ''என்ன சொல்கிறீர்கள்?'' என்று கேட்டாள்.

விஜயனோ பதிலும் சொல்லவில்லை. கண்களையும் திறக்கவில்லை.

நாக நந்தினி குடிலுக்குள்ளே இருந்த குவளையொன்றில் இருந்த களிம்பை எடுத்தாள். கீழே கிடந்த தனஞ்ஜெயனின்

முதுகில் பாம்பு கொத்திய இடத்தில் அழுத்தி அப்படியே உடலில் ஒட்டிக்கொள்ளும்படிச் செய்தாள்.

விஜயனோ எதையும் கவனிக்காத நிலையில் மந்திரங்களை உச்சரித்தபடியே இருந்தான். அது ஒரு நாழிகை வரை நீடித்தது. அச்சமயத்தில் 'கிரீச்' சென்ற ஒரு ஒலிகேட்டது. அதையடுத்து கருடப் பறவை ஒன்று குடிலின் வாயிலுக்கு வந்தது. சிறிதுநேரம் வெளியே இருந்துவிட்டு பிறகு பறந்து வந்து தனஞ்ஜெயனின் முதுகில் உட்கார்ந்தது. நாகநந்தினி அவனது முதுகில் வைத்திருந்த களிம்பை மூக்கால் அகற்றியது. பின் தனது மூக்கை பாம்பு கொத்திய இடத்தில் வைத்து கீறியது. உடனே அந்த இடத்தில் ரத்தம் பீறிட்டு வந்தது. ''ஐயோ'' ''ஹா'' என்று முனகினான் அவன். சிறிதுநேரம் வரை ரத்தம் வெளியேறுவதைப் பார்த்துவிட்டு வெளியே பறந்து சென்றது பறவை. நாகநந்தினி ஒருதுணியைக் கொண்டு வந்து ரத்தத்தைத் துடைத்தபின் பறவை கீறிய இடத்தில் வேறொறு களிம்பை வைத்து ரத்தப் போக்கை நிறுத்தினாள். இதெல்லாம் நடந்து முடிந்து சிலநிமிடங்கள் கழிந்த பின்பே மந்திரம் சொல்வதை நிறுத்திவிட்டு கண்களைத் திறந்தான் விஜயன். சுற்றிலும் ஒருமுறை பார்த்துவிட்டு ''கருடபகவான் இங்கே வந்தாரா?'' என்று கேட்டான்.

நாகநந்தினி கருடப்பறவை வந்ததிலிருந்து சென்றது வரை எல்லாவற்றையும் சொன்னாள்.

விஜயன் கருடபகவானை மனதிற்குள்ளாகவே வணங்கிக் கொண்டு ''விஷம் இறங்கி விட்டதல்லவா?'' என்று கேட்டான்.

''வந்தது கருடன் ஆயிற்றே? விஷத்தை எடுக்காமல் விடுமா? காயம் மட்டும் இருக்கிறது. அதன்மேல் களிம்பை வைத்திருக்கிறேன். விடிவதற்குள் அது ஆறிவிடும்'' என்று கூறிய நாகநந்தினி ''நீங்கள் என்ன செய்தீர்கள்?'' என்று கேட்டாள்.

''வங்கதேசத்தில் ஒருமுறை அரசகுமாரன் ஒருவனை கார்கோடகன் தீண்டிவிட்டது. வைத்தியர்கள் வந்து பார்த்து கைவிரித்து விட்டார்கள். அப்போது அரண்மனை புரோகிதர் வந்தார். அரசகுமாரனின் உடலை திறந்தவெளியில் வைத்து

பாம்பு தீண்டிய இடத்தில் களிம்பொன்றை வைத்துவிட்டு ஒரு நாழிகைவரை கருட மந்திரத்தைச் சொன்னார். கருடப் பறவை ஒன்று பறந்து வந்தது. அரச குமாரனிடம் வந்து பாம்பு கடித்த இடத்தைத் கொத்தியது. அதிலிருந்து ரத்தம் வெளியேறியது. புரோகிதர் வைத்தியரை அழைத்து ரத்தப் போக்கை நிறுத்தி காயம் ஆறுவதற்கு மருந்திடச் சொன்னான். அரசகுமாரனும் பிழைத்தான். உன்னை நான் வேண்டிக் கொண்டபோது நீ உடனடியாக சிகிச்சையளிக்க முன் வரவில்லை. எனக்கு கருட மந்திரம் நினைவுக்கு வந்தது. வேறு எதையும் யோசிக்காமல் செயல்பட்டேன்''

''இந்த விஷயத்தில் உங்கள் நல்ல மனம் தான் உபதலைவனின் உயிரைக் காத்தது. சாதாரணமாக தக்ஷகன் பாம்பு கடித்தால் உடனடி மரணம்தான். ''தார்க்ஷ்யா' என்ற மருந்து இருந்தாலும்* இத்தீவில் அது கிடையாது. பாம்பு கடித்ததும் விஷம் இரத்தத்தில் கலந்து இதயத்தைத் தாக்கி மரணத்தை உண்டாக்கிவிடும். அல்லது நரம்புகள் வழியாக மூளையை அடைந்து மரணத்தை அளித்துவிடும். ஆகவேதான் நான் சிகிச்சை அளிக்காமல் இருந்தேன். நீங்கள் ஏதோ மந்திரம் சொல்வதைக் கேட்டதும் நான் களிம்பொன்றை எடுத்து வந்து பாம்பு கடித்த இடத்தில் அழுத்தி ஒட்டினேன். சாதாரண பாம்பு கடிகளுக்கு நான் இவ்வாறு செய்வேன். களிம்பானது உடலில் பரவிய நஞ்சை இழுத்து ஒரே இடத்திற்கு கொண்டு வந்துவிடும். பிறகு அந்த இடத்தைக் குத்தினால் விஷரத்தம் வெறியேறிவிடும். அந்த நோக்கத்தில் நான் செய்தாலும் தயக்கமாகத்தான் இருந்தது. ஏனென்றால் இந்த சிகிச்சை தக்ஷகன் விஷயத்தில் பயன்படாது. அரை மனதோடு அதை நான் செய்த அதே நேரத்தில் நீங்கள் மந்திரம் ஓதினீர்கள். அதுபற்றி ஓரளவிற்கு என்னால் ஊகிக்க முடிந்தாலும் மந்திரத்தை அந்தணர் ஓதினால்தான் பயனுண்டு என்று நான் கேள்விப் பட்டிருக்கிறேன். அதோடு இம்மந்திரத்தைக் கேட்டு கருடன் வருவதானால் பகல் நேரமாகவும் வெட்ட வெளியாகவும் இருக்க வேண்டும். ஆனால் இது இரவு நேரம் வெட்ட

* பக்கம் 2 'இந்தியாவில் நாக வழிபாடு' தமிழாக்கம் by டி. சிவராமன்

வெளியுமல்ல. ஆகவே தான் உங்கள் முயற்சி வெற்றி பெறாது என்று நினைத்தேன். என் நினைப்பு பொய்த்தது. சம்பிரதாயங் களை மீறி உள்ளன்போடு யார் நல்ல காரியத்தை செய்தாலும் வெற்றி கிட்டும் என்பது புரிந்தது. கருடப் பறவை வந்தது நம்பவே முடியாத நிகழ்ச்சி. அதன் அலகு பட்டதினால்தான் உடம்பில் இருந்த நஞ்சு இழுக்கப்பட்டு வெளியேற்றப்பட்டது.

நாகநந்தினி இவ்வாறு சொன்னதும் ''உபதலைவன் விவரம் அறியாதவன். எங்கே பாம்பு தன்னைக் கொட்டி விடுமோ என்ற அச்சத்தில்தான் வாளை உருவினான். பாம்பை வெட்டவும் இல்லை. அதனால் தான் கருட மந்திரம் வேலை செய்திருக்க வேண்டும்'' என்று கூறிய விஜயன் ''இனி உபதலைவனைப் பற்றிய கவலை இல்லை. என்னை இன்று வரச்சொன்னாயே, பாம்புகளிடம் பேசிவிட்டாயா?'' என்று கேட்டான்.

''பாம்புகள் எனக்கு என்றுமே அனுமதி மறுத்ததில்லை. உங்கள் முன்பாகவே அவற்றிடம் நேற்று அனுமதியை வாங்கியிருக்க முடியும். நான் உங்களை இன்று வரச் சொன்னதற்குக் காரணம் யோசிப்பதற்கு எனக்கு அவகாசம் வேண்டியிருந்ததால் தான்'' என்றாள் நாகநந்தினி.

''எதைப்பற்றி யோசிக்க உனக்கு அவகாசம் தேவைப்பட்டது?''

''நல்லவர் என்று பாம்புகள் அறிவித்தாலும் முன்பின் அறியாத உங்களிடம் முழுமையாக என்னைப் பற்றிச் சொல்லலாமா என்பதைக் குறித்து யோசிக்க விரும்பினேன். உங்கள் பலி குறித்தும் யோசித்தேன்''

''என் பலி குறித்து நீ என்ன செய்ய முடியும்?''

''என் சம்மதம் இல்லாமல் பலிகொடுக்க முடியாது''

''ஏன்?''

''நான் டிமார்க்கோ -லியானா ஆகியோரின் மகள்''

''லியானாவின் மகளா நீ? அதெப்படி? உனக்கும் அவளுக்கும் ஒரு சாயலும் இல்லையே?''

''அரச குமாரரே, நான் பரத கண்டத்தில் உள்ள தமிழகத்தின் கடற்கரைப் பட்டினமான நாகையில் நாகர் குலத்தில் பிறந்தவள். என் தந்தை நாகைப்பட்டினத்தை நாக அரசாக உருவாக்கி ஆண்டு வந்தார். எனக்கு எட்டு வயதாக இருக்கும்போது ஆழிப் பேரலையொன்று தாக்கியதால் நாகப்பட்டினம் அழிந்தது. நகரத்தில் இருந்த மாடங்களும் மாளிகைகளும் கூடங்களும் கோபுரங்களும் இடிந்தன. ஏராளமான மக்கள் மாண்டு போனார்கள். என் தந்தை காணாமல் போனார். அனாதையாக ஏதோ ஓர் மாளிகை முற்றத்தில் மயக்கமுற்று கிடந்த என்னை பறக்கும் பாம்பொன்று கொண்டு வந்து நாகர்மலைத் தீவில் சேர்த்தது''

''என்ன சொன்னாய்? பறக்கும் பாம்பா?''

''ஏன், நீங்கள் பார்த்ததில்லையா? பறக்கும் பாம்புகள் அராபிய நாட்டில் அதிகம் உள்ளன.* அங்கிருந்து பல கிரேக்க நாட்டிற்கும் பரத கண்டத்திற்கும் குடி பெயர்ந்தன. அப்படிக் குடிபெயர்ந்த சில நாகைப்பட்டினத்திலும் இருந்தன. நானே பார்த்திருக்கிறேன். எப்போதாவது தான் அவை காணப்படும். அவற்றுக்கு இறக்கைகள் இல்லை. உடம்பையே இறக்கை போல் விரித்து வானில் பறக்கும். அப்படிப்பட்ட பறக்கும் பாம்பு ஒன்றுதான் என்னை நாகர்மலைத் தீவுக்கு கொண்டு வந்தது. என்னைக் கண்டத் தீவுவாசிகள் லியானாவை அழைத்து வந்து காட்டினார்கள். என் அழகால் கவரப்பட்ட லியானா என்னைத் தன் மகளாகவே கருதி என்னை கையில் எடுக்க முயன்றாள். அப்போது பறக்கும் பாம்பு தோன்றியது. நான் இருக்க வேண்டிய இடம் பாம்புத் தீவு என்றும் அங்கு லட்சக்கணக்கான பாம்புகள் இருக்கின்றன என்றும் அங்கே நான் வசிக்க வேண்டியது நாகதேவதையின் கட்டளை என்றும் கூறியது. லியானாவுக்கு என்னை அவ்வாறு பாம்புத் தீவில் விட்டுவிட மனமில்லை. ஒரு வருடம் தன் தீவில் வைத்துக் கொண்டு பிறகு கொண்டுபோய் பாம்புத் தீவில் விட்டு விடுவதாகவும் கூறினாள். பாம்பு ஒப்புக்கொண்டு மறைந்தது.

* Page 280 ஹிராட்டடஸ் by வி.எஸ்.வி. ராகவன்

ஆனால் ஆண்டுகள் நான்கு ஆகியும் லியானா என்னைப் பாம்புத் தீவிற்குக் கொண்டுபோய் விடவில்லை. இதற்கிடையில் டிமார்க்கோ நாகர் மலைத் தீவுக்கு வந்து சேர்ந்தான். லியானாவை மணந்தான். அவனும் என்னை அவளைப் போலவே தன் மகளாகவே நினைத்தான். அச்சமயத்தில் பறக்கும் பாம்பு அங்கு வந்தது. வாக்கு தவறி விட்ட லியானாவைச் சபித்தது. தீவு வாசிகள் பலர் திடீர் நோய்களால் மாண்டனர். டிமார்க்கோவும் கடுமையான நோயால் பாதிக்கப்பட்டான். லியானா அவனிடம் உண்மையைச் சொன்னாள். தவறு செய்துவிட்டதை உணர்ந்த இருவரும் பாம்புத் தீவில் அழகான ஒரு குடிலைக் கட்டி என்னை அங்கே கொண்டு வந்துவிட்டனர். அப்போது அப்பாம்பு இருவரையும் எச்சரித்தது. நான் சாதாரணமானவள் அல்ல என்றும் தெய்வீக அருள் நிறைந்தவள் என்றும் என்னை அத்தீவு வாசிகள் தங்கள் தேவதையாக கருதவேண்டும் என்றும் தீவில் நடக்கும் முக்கிய காரியங்களுக்கு என் ஒப்புதலைப் பெறவேண்டும் என்றும் கூறிவிட்டுச் சென்றது. அப்போது எனக்கு வயது பதிமூன்று'' என்று கூறிவிட்டுச் சற்று நிறுத்திய அவள் உபதலைவனின் காயத்தைப் பரிசோதித்துப் பார்த்து ''ஒன்றும் பயமில்லை'' என்று கூறிக்கொண்டாள்.

பிறகு பேசத்தொடங்கி ''பாம்புத்தீவில் விடப்பட்ட என்னை ஏராளமான பாம்புகள் சூழ்ந்து கொண்டன. என்மீது தவழ்ந்தன. கழுத்திலும் தலையிலும் சுற்றிக்கொண்டன. நான் பயத்தால் அலறினேன். உடனே பாம்புகள் என்னைவிட்டு ஒதுங்கி என்னையே பார்த்தபடி படமெடுத்து நின்றன. எனக்கு எதுவும் நேராததால் என்பயம் சற்றே விலகியது. எந்தப் பாம்பும் என்னைக் கடிக்காததால் அவற்றை என் செல்லங்களாகக் கருதி அவற்றோடு விளையாடினேன். அவைகளும் என்னோடு ஆர்வமாகப் பழகின. பாம்புத் தீவு முழுவதும் சுற்றினேன். தீவில் எங்கு பார்த்தாலும் பாம்புகளே இருந்தன. என்னைக் கண்டதும் என்னைச் சுற்றித் தழுவின. படமெடுத்து ஆடின. எந்தக் கெடுதலையும் செய்யவில்லை. யாராவது தீவில் காலை வைத்தால் அவர்களைக் கொத்தி மரணமடைய வைத்தன. ஆகவே எனக்குப் பாம்புகளே பாதுகாப்பு என்பதை நிசர்சனமாக

உணர்ந்தேன். ஒருமுறை துறவி ஒருவர் இத்தீவில் காலடி எடுத்து வைத்தார். அவரைப் பாம்புகளே என்னிடம் அழைத்து வந்தன. அவர் எனக்கு பாம்புகளைப் பற்றியெல்லாம் விவரமாக எடுத்துச் சொன்னார். அவற்றின் வகைகள், சக்திகள், வினோத குணங்கள் ஆகியவற்றை விவரித்தார். எனது பூர்வ ஜென்மம் பற்றி யெல்லாம் கூறி ஐந்து ஆண்டுகள் வரை எக்காரணம் கொண்டும் இத்தீவை விட்டு நான் போகக் கூடாது என்றும் போனால் உடல் சிதறி மாண்டு போவாய் என்றார்.

''ஐந்து ஆண்டுகள் பாம்புகளுடன் வாழ்வது என்பது முதலில் மலைப்பாக இருந்தாலும் நாகர் குலத்து கன்னிகையான நான் போகப் போக அந்த வாழ்க்கையைப் பழகிக் கொண்டேன். நான்கு ஆண்டுகள் என்னைச் சொந்த மகளாகவே கருதி வளர்த்த டிமார்க்கோவையும் லியானாவையும் என் பாம்புகளுக்கு அறிமுகம் செய்து வைத்தேன். அதனால் அவ்விருவர் என் குடிலுக்கு எப்போது வேண்டுமானாலும் வருவார்கள். பாம்புகள் அவர்களை எதுவும் செய்வதில்லை. அவர்களைத் தவிர தீயவர்கள் யார் வந்தாலும் அவர்களைப் பாம்புகள் கொத்திவிடும். அதனால் புதியவர்கள் யாரும் இங்கே வருவதில்லை. நாகர்மலைத் தீவுவாசிகள் என்னை அவர்களது தேவதையாகவே கருதி வழிபட்டார்கள். தீவில் நடக்கும் எந்த நிகழ்ச்சியாக இருந்தாலும் என்னிடம் சம்மதம் கேட்ட பிறகுதான் செய்து முடிப்பார்கள். தற்போது இந்தத் தீவுக்கு வந்து ஐந்தாண்டுகள் முடிந்துவிட்டன'' என்று கூறி முடித்தாள்.

அவளது கதை புராணக்கதையைப்போல் இருந்தது. அதை எந்த அளவிற்கு நம்புவது என்று அவனுக்குத் தெரியவில்லை. இருந்தாலும் கடந்த கால நிகழ்ச்சிகள் என்பதால் அவற்றை ஆராய விரும்பாத விஜயன் ''நாகநந்தினி, நீ வந்தபின் உன் சம்மதத்துடன் பலி நடந்திருக்கிறதா?'' என்று கேட்டான்.

''நடந்துள்ளன''

''நாக நந்தினி, மனிதர்களை அதுவும் அப்பாவிகளை பலியிடுவது தர்மமா? அதற்கு நாகரீகம் தெரிந்த நீ சம்மதிக்கலாமா?''

''அரச குமாரரே, நானொன்றும் பலியை புதியதாக ஆரம்பித்து வைக்கவில்லை. நாகர்மலைவாசிகளுக்கு நர மாமிசம் உண்பதென்பது நீண்ட கால வழக்கமாக இருந்து வந்திருக்கிறது. நரமாமிசம் உண்பதை அவர்கள் சிறப்பான தாகவும் சுவையானதாகவும் கருதினார்கள். அதற்காக அவர்கள் மனிதர்களைத்தேடி வேட்டையாடவில்லை. இத்தீவே கதி என்று வாழ்ந்து வந்தார்கள். இத்தீவுக்குத் தெரிந்தோ அல்லது தெரியாமலோ வந்து சேர்பவர்களை மட்டும் பலியிட்டு உண்பது அவர்களது வழக்கமாக இருந்தது. அவர்களைப் பொறுத்தவரை இது தர்மம் தான்''

''இல்லை நந்தினி, அநாகரீகமான விஷயங்கள் தர்மங்கள் ஆகாது. மனிதர்களைக் கொன்று தின்பது என்பது மிருகங்களுக்கு மட்டுமே தர்மமாக ஆண்டவனால் நிர்ணயிக்கப் பட்டது. மனிதர்களை மனிதர்களே தின்பதற்கு ஆண்டவனின் கட்டளை இல்லை. அது தவறானது. இயற்கைக்கு மாறுபட்டது. அநாகரீகமானது. மனித இறைச்சியை உண்ணாத நாகரீகம் அறிந்தவளான நீ இத்தகைய காட்டுமிராண்டித்தனமான காரியங்களுக்கு அனுமதி கொடுப்பது தவறு. இந்த விஷயத்தில் நீ யோசித்துப் பார்த்திருக்க வேண்டும். என்னிடம் பேசுவதற்காக யோசித்தாகச் சொல்லும் நீ மனிதர்களைக் கொல்லும் காட்டு மிராண்டித்தனத்தைப் பற்றி யோசித்துப் பார்த்திருக்க வேண்டாமா? எந்த லட்சியத்திற்காக நான் புறப்பட்டேன் என்பதையும் சதிகாரர்களால் எனது பயணம் திசை மாற்றப் பட்டதையும் இந்த தீவுவாசிகளிடம் சிக்கிக் கொண்டதையும் உன்னிடம் நேற்று கூறினேன். இதையும் சற்று யோசித்துப்பார். எங்கள் மீது என்ன தவறு? எங்களை பலியிடுவது என்ன நியாயம்?''

''அரச குமாரரே, உங்களுக்குத் தெரியாத விஷயமல்ல. ஒரு விஷயத்தைப் பொதுவாகப் பார்க்கும்போது ஒருவித கண்ணோட்டம் இருக்கும். சம்பந்தப்பட்டவர்கள் தத்தம் கோணங்களில் பார்க்கும்போது வேறு வேறு கண்ணோட்டங்கள் இருக்கும். நியாயங்கள் மாறுபடும். முதலைகள் தாமிருக்கும் நீர்நிலைகளில் யார் சிக்கினாலும் கவ்வி கடிப்பதென்பது அவற்றின் குணம். சிக்கியவர்கள் நல்லவர்களா கெட்டவர்களா

என்று பார்க்கும் அறிவு அவற்றுக்கு இல்லை. அந்த முதலைகளைப் போலத்தான் இத்தீவு வாசிகளும்''

''முதலைகளுக்கு இல்லாத பகுத்தறிவு தீவுவாசிகளுக்கு இருக்கிறது. சரியா தவறா என்று கணிக்க அவர்களால் முடியும். ஆனால் அப்படியெல்லாம் சிந்திக்க அவர்கள் தயாராக இல்லை. ஒருவித வெறியோடும் கண்மூடித்தனத்துடனும் நடந்து கொள்கிறார்கள். அவர்களது கண்களை நீதான் திறக்க வேண்டும். நீ அதைச் செய்யவில்லை''

இதற்கு உடனடியாக பதில் கூறாமல் சற்று யோசனையில் ஆழ்ந்தாள் நந்தினி.

◈◈◈

## அத்தியாயம் முப்பத்தாறு

# வேறுபட்ட மனங்கள்

நாகநந்தினியைச் சிறிதுநேரம் சிந்திக்கவிட்ட விஜயன் பிறகு ''நீ மனம் வருந்த வேண்டும் என்று இதை நான் சொல்லவில்லை நந்தினி. நல்ல விஷயத்தைச் சொல்வதற்கு வாய்ப்பு வரும்போது சொல்லிவிடுவதுதான் உத்தமம் என்பதால் சொன்னேனே தவிர அதை ஏற்பதும் ஏற்காததும் உன் இஷ்டம். அதில் நான் தலையிட மாட்டேன்'' என்று கூறிவிட்டு ''லியானா விருப்பத்திற்கு மட்டும் நீ ஏன் சம்மதம் தரவில்லை?'' என்று கேட்டான்.

''பலியிடுவதற்கு சம்மதம் கேட்டிருந்தால் வழக்கம் போலவே சம்மதித்திருப்பேன். அவள் உங்களை மட்டும் பலியிலிருந்து விடுவிப்பதற்குச் சம்மதம் கேட்டாள். ஆகவே மறுத்து விட்டேன்'' என்றாள் நந்தினி.

''ஏன், ஒரு ஆள் உயிர் தப்புவதற்கு உன்னிடம் கருணையில்லையா?''

''அதுவல்ல விஷயம். அவள் உங்களை விடுவிக்க முயன்றது உங்களை மணந்துகொள்ள, ஆகவே தான் மறுத்தேன்''

''எதற்காக மறுக்க வேண்டும்? லியானா என்னை ஏன் மணந்து கொள்ளக்கூடாது?''

இதற்குப் பதில் சொல்ல சற்றே தடுமாறிய அவள் ''டிமார்க்கோ உயிரோடு இருக்கும்போது லியானா எதற்காக உங்களை மணக்க வேண்டும்?''

''ஏன், மணந்தால் என்ன?''

''அது என் தந்தைக்குச் செய்யும் துரோகம் ஆகாதா?''

''துரோகமா? அப்படியொரு வார்த்தை இருப்பது அவர்களுக்குத் தெரியுமா?''

பதில் சொல்லத் தடுமாறினாள் அவள். விஜயனே பேச முற்பட்டு ''இந்தத் தீவில் எந்த நெறிமுறை இருக்கிறது? எந்தப் பண்பும் ஒழுக்கமும் இருக்கிறது? மனிதர்களைக் கொன்று தின்னும் காட்டுமிராண்டிகளுக்குத் திருமண விஷயத்தில் மட்டும் ஒழுக்கம் இருக்க முடியுமா? இருக்க வேண்டும் என்று தான் யாராவது எதிர்பார்க்க முடியுமா? லியானாவுக்கு என்ன கட்டுப்பாடு வேண்டியிருக்கிறது? அவள் எத்தனை பேரை மணந்தால் என்ன? எதற்காக அவள் விருப்பத்தை நீ நிராகரித்தாய்?'' என்று கேட்டான்.

பெரும் குழப்பத்திற்கும் சங்கடத்திற்கும் ஆளான நாகநந்தினி ''நான் வேண்டுமானால் என் மறுப்பை விலக்கி விடுகிறேன்'' என்றாள்.

''எதற்கு?''

''நீங்கள் மட்டுமாவது உயிர் பிழைக்கலாம்''

''உயிர் பிழைத்து லியானாவை மணந்து கொள்ளட்டுமா?''

''ஐயோ, என்னை என்னதான் செய்யச் சொல்கிறீர்கள்?'' தவிப்புடன் கேட்டாள் அவள்.

அவளது மனநிலையை உணர்ந்த அவன் அவளைத் தொட்டு தன் மார்பில் அணைத்துக் கொண்டு ''கவலைப்படாதே நந்தினி. நீ எதுவும் செய்யவேண்டாம். பேசாமல் இரு. எல்லாவற்றையும் நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்றான் ஆறுதலாக.

''நீங்கள் உயிர் பிழைக்க முடியுமா?'' என்று கேட்டாள் அவள்.

''முடியும் நந்தினி முடியும். அதற்கான ஏற்பாடுகளைச் செய்து விட்டுத்தான் வந்திருக்கிறேன். நாளைக்கு பலிச் சம்பவம் நடக்காது. தள்ளிப்போடப்படும். பிறகு என் திட்டத்தை நீயே அறிந்து கொள்வாய். நான் வரட்டுமா?''

''நானும் அங்கே வந்து விடட்டுமா?''

''அவசரப்படாதே நந்தினி. இத்தீவிலேயே தங்க வேண்டிய கால அவகாசம் முடிந்து விட்டாலும் இப்போதைய சூழ்நிலையில் நீ அங்கு வருவது ஆபத்து. நான் தினமும் எப்படியாவது வந்து உன்னைச் சந்திக்கிறேன். நான் இப்போது புறப்படுகிறேன். தனஞ்ஜெயன் கண் விழித்தாலும் உடனே புறப்பட வேண்டாம். கடலில் நீந்தினால் காயம் துளிர்த்துவிடும். நான் போய் படகை அனுப்புகிறேன். அவனை அதில் அனுப்பிவை'' என்று கூறிவிட்.டு அவளை ஒருமுறை இறுகத் தழுவிவிட்டு புறப்பட்டான் விஜயன்.

★★★

தன் இருப்பிடத்திற்கு விஜயன் ஈர ஆடைகளோடு மட்டுமின்றி நாக நந்தினி கொடுத்த ஆடைகளுடன் வந்து சேர்ந்ததால் எல்லோரும் அவனை வியப்போடும் சந்தேகத்தோடும் பார்த்தார்கள். அவர்கள் நம்புகிற மாதிரி எதுவும் சொல்லமுடியாது என்பதை உணர்ந்த விஜயன் ''என்னைப்பற்றி ஆச்சரியப்படுவதை விட்டுவிட்டு ஆக வேண்டியதைப் பாருங்கள்'' என்றான்.

''அதுவும் ஆச்சரியமாகத்தான் இருக்கிறது'' என்றார்கள் தோழர்கள்.

''எது?'' என்று கேட்டான் விஜயன்.

''நடந்தது, நடப்பது, நடக்கப் போவது எல்லாம்தான்''

''அப்படி என்ன நடந்துவிட்டது?''

''இன்று மாலை டிமார்க்கோ இங்கு வந்தான்''

''இதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது''

''அதல்ல விஷயம். அவன் வந்து நம்மை பலியிடும் நாள் தள்ளிப்போடப்பட்டு விட்டதாகச் சொன்னான்''

''லியானாவுக்கு உடல் நலம் சரியில்லாமல் போயிருக்கும்''

''நாங்கள் சொல்ல வேண்டியதை நீங்கள் சொல்கிறீர்கள். எப்படி?''

''கேள்விப்பட்டதைச் சொன்னேன். பிறகு என்ன சொன்னான்''

''அதையும் நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்களோ என்னவோ?''

''இதோ பாருங்கள் தோழர்களே, நாம் இப்போது அபாயமான இடத்தில் அபாயமான நிலையில் இருக்கிறோம். இதுவரை நீங்கள் எப்படி இருந்திருந்தாலும் கவலையில்லை. இனிமேல் தான் கவனமாக இருக்கவேண்டும். இங்கே நமக்குள்ள ஆபத்திலிருந்து எல்லோரையும் காப்பாற்ற முயற்சி செய்து வருகிறேன். இதற்காக என்ன செய்கிறேன் எப்படி செய்கிறேன் என்பதையெல்லாம் அவ்வப்போது வந்து உங்களுக்குச் சொல்லிக் கொண்டிருக்க முடியாது. நீங்களும் அப்படி எதிர்பார்க்காதீர்கள். நாளையிலிருந்து நம் மரக்கலத்தை கரைக்கு இழுத்து அடிப்பாகத்தைச் சுத்தம் செய்யும் வேலை தொடங்கும். அதை நீங்களும் மாலுமிகளும் தீவுவாசிகளின் துணையோடு செய்யவேண்டும். முதலில் கப்பலில் இருக்கும் சரக்குகளை பத்திரமாக கரைக்குக் கொண்டு வந்து இறக்கி பாதுகாப்பு செய்யவேண்டும். அவற்றை யாரும் களவாடாதபடி பாதுகாக்க உங்களில் சிலர் அங்கேயே காவலுக்கு நில்லுங்கள். எல்லா சரக்குகளும் இறக்கப்பட்டபின் கப்பலை கரைக்கு இழுத்து பழுது பார்க்கவேண்டும். அனேகமாக கொஞ்ச நாட்களுக்குத் தீவுவாசிகள் உங்களுக்கு தொல்லைதர மாட்டார்கள். உங்களுக்கு நல்ல உணவளித்து பார்த்துக் கொள்வார்கள். அதேசமயம் நீங்கள் உங்கள் உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டு பலியாவதற்கு அஞ்சிக் கொண்டிருப்பது போலவே நடந்து கொள்ளுங்கள். நாளையிலிருந்து கப்பலில் உள்ள நமது உடுப்புகளை மாறிமாறி அணிந்து கொள்ளுங்கள்.

தேவைப்படும்போது உங்களைச் சந்தித்து தேவையான விஷயங்களைச் சொல்கிறேன்'' என்று கூறிவிட்டுப் படுக்கச் சென்றான் விஜயன். அவனைப் பொறுத்தவரை தோழர்கள் முதல் நாகநந்தினி அவரை பேச வேண்டியவற்றைப் பேசிவிட்டானாதலால் அவனுக்கு ஒரு குழப்பமும் இல்லை. மற்றவர்கள் தான் குழம்பினார்கள்.

அத்தகைய குழப்பம் டிமார்க்கோவிடமும் லியானா விடமும் இருக்கவே செய்தது. தங்கள் திட்டம் பற்றி ஒருவருக்கொருவர் சொல்லாமல் மறைத்தார்கள். ஆனால் விளைவு மட்டும் இருவரும் விரும்பியபடியே நடக்க ஆரம்பித்தது. பலியிடுவதை தள்ளிப்போட முடியுமா என்று இருவருமே கவலைப்பட்டுக் கொண்டிருந்தார்கள். ஆனால் அது சுலபமாக நடந்திருந்தது. அது எப்படி என்று இருவரும் குழம்பினாலும் தங்களது திட்டம் நிறைவேறுவதற்கு தாம் விரும்பியபடியே வாய்ப்பு உண்டாகிவிட்டதை நினைத்து திருப்தியே அடைந்தார்கள்.

தான் நினைத்தபடி தீவுவாசிகளிடம் விஜயனைப் பற்றி உயர்வாகச் சொல்லி நல்ல அபிப்ராயத்தை உண்டாக்கிவிட்டு அடுத்த பௌர்ணமியன்று பலியிடும் நிகழ்ச்சியின்போது டிமார்க்கோவை வெட்டி வீழ்த்தி விஜயனைத் தலைவனாக்கி விட்டால் அதற்குப் பிறகு அவனோடு விரும்பியபடி உல்லாச வாழ்க்கை வாழ எந்தப் பிரச்சினையும் இருக்காது என்ற நினைப்பில் அன்றிரவு டிமார்க்கோவிடம் காமத்தை அதிகமாகவே காட்டி மகிழ்ந்தாள் லியானா.

டிமார்க்கோவோ விஜயன் உருவாக்கிய புதிய திட்டத்தை அடுத்த பௌர்ணமிக்குள் நிறைவேற்றி கொள்ளைக்காரத் தலைவனாகி பழைய வாழ்க்கையை மீண்டும் துவக்கி லியானாவுடன் கப்பலிலேயே சொர்க்கத்தைப் படைக்கலாம் என்ற ஆசையால் லியானாவுடன் காமப் பசியையும் வெறியையும் அதிகமாகக் காட்டி மகிழ்ந்தான்.

இப்படி ஒருவரையொருவர் ஏமாற்றிக் கொண்டு ஒருவரையொருவர் வெற்றி பெற்றதாக எண்ணியவர்களாய் இரவு முழுவதும் பரிபூரண உடலின்பத்தில் ஈடுபட்டார்கள்.

இருவருமே பேராசையால் ஆளப்பட்டிருந்தார்கள். தான் பெரிதும் விரும்பும் ஆணழகன் விஜயன் தனக்குக் கிடைக்கப் போவது நிச்சயம் என்ற எண்ணத்தில் டிமார்க்கோவை விஜயனாகவே எண்ணிக் கொண்ட லியானா விஜயன் கிடைக்கும்பட்சத்தில் அவனை எப்படியெல்லாம்அங்க இன்பங்களால் கவரவேண்டும் என்பதை பரீட்சித்துப் பார்ப்பது போல் காமக் கலைகளை விதவிதமாக வெளிப்படுத்தினாள். காமத்திற்கு படிப்போ நாகரீகமோ தேவையில்லையாதலால் எங்கோ கிடந்த ஒரு தீவில் இருந்தாலும் அக்கலையைப் பற்றி பூரணமாகத் தெரிந்து கொண்டிருந்தாள் லியானா. வாழும் இடம் மனிதர்கள் மட்டுமின்றி விலங்குகளும் புழங்கிய காரணத்தால் மிருகங்களின் காம வக்கிரங்களும் அவளுக்குத் தெரிந்திருந்தது. எனவே பெண் பாதி மிருகம் பாதி என்று மாறி தனது காமமழையைப் பொழிந்தாள் லியானா.

பேராசையில் சற்றும் திளைக்காதவனான டிமார்க்கோ இத்தீவுக்கு வருவதற்கு முன்னால் கொள்ளைக்காரனாக இருந்தபோது பலவகையான பெண்களை கண்டபடி இச்சித்திருந்தானாதலால் அவர்களிடமெல்லாம் காட்டிய முரட்டுத்தனங்களை லியானாவிடம் காண்பித்தான். பழையபடி கொள்ளைக்காரனானதும் இந்த விஷயத்தில் எப்படியெல்லாம் நடந்து கொள்ள விரும்பினானோ அதையெல்லாம் லியானவிடம் காட்டினான். பேராசையும்-பகற்கனவுகளும் நிறைந்த இருவர் காமவயப்பட்டால் எந்த அளவிற்குத்தன்னை இழப்பார்களோ அந்த அளவிற்கு காமலோகத்தை சிருஷ்டி செய்து உருண்டு புரண்டார்கள்.

மறுநாள் பௌர்ணமி தினம். தீவுவாசிகளுக்கு ஏமாற்றமாக இருந்தாலும் மூடநம்பிக்கைகளில் திடமாக ஊறிக் கிடந்தார்களாதலால் லியானாவின் உடல்நிலை சரியில்லை என்ற காரணத்தாலும் அவளுக்கு தோஷ நிவர்த்தி செய்யவேண்டும் என்ற காரணத்தாலும் தீவின் வைத்தியர்களும் மாந்தர்களும் பலியை அடுத்த பௌர்ணமிக்கு ஒத்தி வைத்ததை எந்தவித மறுப்புமின்றி ஏற்றுக்கொண்டார்கள். அதற்கு ஏற்றமாதிரி லியானவும் குகையிலேயே தங்கினாள்.

வைத்தியர்கள் சிகிச்சை செய்வது போலவும் மாந்தரீகர்கள் தோஷ நிவர்த்தி செய்வது போலவும் நடித்தார்கள்.

மறுபுறம் டிமார்க்கோ தீவுக்கப்பலைப் பழுது பார்த்து நல்ல நிலைக்குக் கொண்டு வரவேண்டும் என்று உத்தரவிட்டதால் பௌர்ணமி நாளன்றே கப்பலில் இருந்த பொருட்கள் கயிற்றால் கட்டப்பட்டு படகுகளில் இறக்கி கடற்கரைக்கு கொண்டு வரப்பட்டன. அவற்றை அடுக்கி வைக்க கடற்கரை பகுதியில் இருந்த புதர்களும் கற்களும் அகற்றப்பட்டு சுத்தம் செய்யப்பட்டன. விஜயனும் டிமார்க்கோவும் நேரில் இருந்து அக்காரியங்களை பார்வையிட்டார்கள். அன்று பகல் உணவு கடற்கரையிலேயே பரிமாறப்பட்டது. கப்பலிலிருந்து கொண்டு வந்த ஆடைகளை விஜயனின் தோழர்கள் மாற்றிக் கொண்டதோடு சில ஆடைகளை தீவுவாசிகளுக்கும் போட்டு விட்டார்களாதலால் தீவுவாசிகளுக்குப் புது உற்சாகம் ஏற்பட்டது. ஆடை அணிவதை அவர்கள் வினோதமாக முதலில் நினைத்தாலும் போகப்போக அது பிடித்திருந்த காரணத்தால் ஆடைகளைக் கேட்டார்கள். கப்பலில் கீழ்த்திசை நாடுகளுக்கு அனுப்ப வேண்டிய துணிமணிகள் நிரம்ப இருந்ததால் அவற்றையெல்லாம் தீவுவாசிகளுக்கு வினியோகம் செய்யும்படி உத்தரவிட்டான் விஜயன். விதவிதமான ஆடைகளை தீவுவாசிகள் அணிந்துகொண்டு உற்சாகமாகச் சுற்றினார்கள். டிமார்க்கோவுக்கும் லியானாவுக்கும்கூட சிறப்பான ஆடைகளைத் தேர்வு செய்து அனுப்பிவைத்தான் விஜயன். தீவுக் கப்பலுக்கும் ஒருமுறை சென்று வந்தான். கப்பல் தீவுக்கருகே நங்கூரம் பாய்ச்சி அதில் இருந்தவர்கள் தீவுக்கு வந்தபோது அசுவநாவிகர் மட்டும் வராமலிருந்ததை விஜயன் கவனித்திருந்தான். அவர் தீவுக்கு வராமல் மரக்கலத்திலேயே மறைந்து கொண்டதற்கு ஏதாவது காரணம் இருக்க வேண்டும் என்று நம்பினான். ஆனால் நான்கு நாட்கள் கழிந்த நிலையில் மரக்கலத்திற்குப் போனபோது அவரைக் காணவில்லை. எங்கே போயிருப்பார் என்பதை ஊகிக்க முடியவில்லை. ஆனாலும் அதுபற்றி யாரிடமும் பிரஸ்தாபிக்காமல் கப்பலை விட்டு இறங்கியபோது கடற்கரையில் இரண்டு கூடாரங்களை டிமார்க்கோ அமைத்திருந்ததைக் கண்டான்.

''இதென்ன கூடாரங்கள்?'' என்றான் விஜயன்.

''ஒன்று உங்களுக்கு. மற்றொன்று எனக்கு'' என்றான் டிமார்க்கோ.

''அது தெரிகிறது. எதற்காக இங்கே கூடாரங்களை அமைக்க வேண்டும்?''

''நாம் ஓய்வெடுப்பதற்கும் இங்கு நடக்கும் காரியங்களை கவனிப்பதற்கும் தோதாக இருக்கும் அல்லவா?''

டிமார்க்கோவின் இந்த பதில் சாதாரணமானதைப் போல் தோன்றினாலும் அதற்குள் ஓர் எச்சரிக்கை உணர்வு ஊடுருவி யிருந்ததை உணர்ந்தான் விஜயன். டிமார்க்கோ தனது பேச்சை முழுமையாக நம்பி விடவில்லை என்பதையும் உணர்ந்த அவன் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் ''சிறப்பான ஏற்பாடு தான். ஆனால் இரவில் இங்கே நான் தங்கமுடியாது. வழக்கமான இடத்தில்தான் தங்குவேன்'' என்று கூறிவிட்டு லியானாவைப் பார்க்க குகைக்குச் சென்றான் விஜயன்.

அவனைக் கண்டதும் சுற்றியிருந்த வைத்தியர்களையும் மற்றவர்களையும் வெளியேற்றினாள் லியானா. அவள் அருகில் தான் அனுப்பிய ஆடைகள் அலட்சியமாக கிடந்ததைக் கண்ட விஜயன் ''இதை நீ அணியவில்லையா லியானா? இதை நீ அணிந்திருக்கும் கோலத்தைப் பார்க்கத்தானே நான் வந்தேன்?'' என்று கேட்டான்.

''இதை ஏன் நான் அணியவேண்டும்? எனக்குப் பிடிக்கவில்லை'' என்றாள் லியானா.

''ஆடைகளின் சிறப்பு உனக்குத் தெரியவில்லை. இதை அணிந்துகொள். நான்கைந்து நாட்களில் உன் உடலில் அங்கங்களுக்கு தனிப்பொலிவு வந்துவிடும். ஒருவேளை நான் அனுப்பினேன் என்பதால் அணியவில்லையா? டிமார்க்கோ அனுப்பியிருந்தால் அணிந்து கொண்டிருப்பாயா?''

''டிமார்க்கோவா? அவன் அனுப்பியிருந்தால் இன்னேரம் அவற்றைக் கொளுத்தியிருப்பேன்''

''அவனால் எப்படி அனுப்ப முடியும்? இவையெல்லாம் என் கப்பலில் இருந்தவை. நானாகத் தேர்ந்தெடுத்து உனக்கு அனுப்பி வைத்தேன்''

''உண்மையாகவா?''

''இதில் ரகசியமோ பொய்யோ இல்லை. எல்லோருக்கும் முன்புதான் இவற்றை உனக்காக அனுப்பினேன். அது மட்டுமல்ல. உன் தீவுவாசிகளுக்கும் கொடுத்திருக்கிறேன். ஏன் தெரியுமா?''

''ஏன்?''

''தீவுவாசிகளிடம் நீ என்னைப் பற்றி உயர்வாகச் சொல்லப் போவதாகச் சொன்னாய். இந்த நிலையில் நான் புத்தாடைகளை அவர்களுக்கு கொடுப்பது பொறுத்தமாக இருக்கும் இல்லையா?''

''உண்மைதான்''

''மொத்தத்தில் உன் திட்டம் நல்லபடியாக தொடங்கியிருக்கிறது அல்லவா?''

''அதெல்லாம் சரி. இந்த மரக்கல விஷயம் என்ன? எதற்கு அதில் உள்ள பொருட்களைத் தீவுக்கு கொண்டு வருகிறீர்கள்? கப்பலைப் பழுது பார்க்கவும் ஏற்பாடுகள் நடக்கிறதாமே?''

''ஏனென்று தெரியவில்லையா?''

''தெரியவில்லை''

''யூகித்துப் பார். தெரியவில்லையென்றால் நாளைக்கு நானே சொல்கிறேன். இன்றிரவு நான் பாம்புத் தீவுக்குப் போக வேண்டும். படகை அனுப்ப முடியுமா? பாதி வேலை பாக்கியிருக்கிறது''

''பாதி வேலையா?''

''ஆம். உன் மகளின் சம்மதத்தைப் பெற வேண்டாமா? நேற்று அரைகுறையாகச் சம்மதித்திருக்கிறாள். இன்று போய் தான் உறுதி செய்யவேண்டும்''

''அவளைப் பற்றி எல்லாவற்றையும் தெரிந்து கொண்டிருக்கிறாய் போலிருக்கிறது. கெட்டிக்காரன்தான் நீ. தினமும் அவளைப் பார்த்துப் பேசு. முழுசம்மதத்தை பெற்று வா. உனக்காகத் தினமும் ஒருபடகு எனது ஆட்களுடன் தெற்குக் கடற்கரையில் இரவின் முதல் ஜாமத்தில் காத்திருக்கும்'' என்று கூறிய லியானா கைகளைத் தட்டி பணியாட்களை அழைத்து ''இவரை அழைத்துச் செல்லுங்கள்'' என்றாள்.

அவன் புறப்பட்டபோது ''சற்று நில்'' என்று கூறிய லியானா அவன் அனுப்பிய உடைகளை எடுத்து அணிந்து கொள்ள முற்பட்டாள். உடைகளைச் சரியாக அணிய அவள் தடுமாறியதைக் கண்ட விஜயன் அருகில் சென்று ஆடைகளை அணிவித்தபோது அவளுக்கு ஆனந்தமாக இருந்தது. ஆடைகளை அணிந்தநிலையில் தன்னை ஒருமுறை பார்த்துக் கொண்ட அவள்அவனைக் கட்டிப்பிடித்து கன்னத்தில் முத்த மிட்டாள். முத்தம் பித்தமாக மாறுவதற்குள் அவளிடமிருந்து விடைபெற்றுக்கொண்ட விஜயன் விரைவிலேயே படகில் ஏறி பாம்புத் தீவை அடைந்து நாகநந்தினியைச் சந்தித்தான்.

அவனுக்காக அவள் காத்திருந்தமாதிரி இருந்தது. அதை உணர்ந்த அவன் அவளது கையைப்பற்றிக் கொண்டு ''எப்போது இங்கே வரப்போகிறேன் என்று ஏங்கிக் கொண்டிருந்தேன் நான். தெரியுமா?'' என்றான்.

''பொய்'' என்றாள் அவள்.

''உன்னிடம் பொய் சொல்லும் சந்தர்ப்பம் எனக்கு வரக்கூடாது. இது என் ஆசை'' என்றான் விஜயன்.

முடிவில் ''நந்தினி, லியானா இங்கே வரும்போது அவளிடம் இந்த பலி விஷயமாக சம்மதம் தெரிவித்துவிடு'' என்றான்.

''என்ன சொல்கிறார் விஜயபாகு?'' என்ற குரல் ஒன்று குறுக்கிட்டது.

அதையடுத்து குடிலுக்குள் நுழைந்தான் டிமார்க்கோ.

◈◈◈

## அத்தியாயம் முப்பத்தேழு

# 37. கோபங்கள், நாடகங்கள்

''உன்னிடம் பொய் சொல்லும் சந்தர்ப்பம் எனக்கு வரக்கூடாது. இது என் ஆசை'' என்று விஜயன் கூறியபோது ''ஒரே நாளில் இது எப்படி சாத்தியம்?'' என்று கேட்டாள் நாகநந்தினி. ஆனால் அவனது வரவுக்காக அவள் காத்திருந்தது உண்மையானால் அது சாத்தியம்தான் என்பது அவளுக்குப் புரிந்தது. இருந்தாலும் அவன் என்ன பதில் சொல்கிறான் என்று அறியும் ஆவலால் அவ்வாறு கேட்டாள்.

''இதில் நாள் கணக்கு எங்கிருந்து வருகிறது நந்தினி? உன் வளர்ப்புத்தாய் லியானாவும் இளையவள்தான். அவளைப் பார்த்து நான்கு நாட்கள் ஆகியும் ஏக்கம் எதுவும் வரவில்லையே அது ஏன்? எந்த இடத்தில் ஆழமான ஈர்ப்பு ஏற்படுகிறதோ அது மனதில் ஆழமான ஞாபகமாக நிலைத்துவிடுகிறது. அந்த ஞாபகம் ஏக்கங்களையும் தாபங்களையும் உருவாக்குவது இயல்பு தான்'' என்றான் விஜயன்.

''இதுபோன்ற வார்த்தைகளைக் கேட்டு ரொம்ப காலமாகிறது'' என்றாள் நாகநந்தினி.

''என்ன தான் பாம்புகள் உன் துணையாக இருந்தாலும் அவற்றால் வசனங்களைப் பேச முடியாதல்லவா?''

''என் தந்தை நன்றாகப் பேசுவார்''

''நாகர்களின் மன்னரல்லவா? பேசத்தான் செய்வார். ஆமாம் நீ பிறந்தது தமிழ் நாடாயிற்றே உனக்குத் தமிழ் தெரியுமா?''

''தாய்மொழியாயிற்றே? தெரியாமல் போகுமா? ஆனால் இங்கு வந்தபின் தமிழில் பேசவே முடியவில்லை''

''அப்படியானால் உன் கவலையைவிடு. இனி உன்னோடு தமிழ் பேச நானிருக்கிறேன்''

''உங்களுக்குத் தமிழ்தெரியுமா? எப்படி?''

''மன்னனாகவும் இளவரசனாகவும் இருக்கிறவர்களுக்கு பல்வேறு நாட்டவர்களின் தொடர்பு உண்டாகிறது. அவர்களது மொழியைக் கற்க முடிகிறது. என் தோழர்களில் பலர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள். அவர்களிடமிருந்து தான் தமிழைக் கற்றுக்கொண்டேன்'' என்று தமிழிலேயே பேசினான் விஜயன்.

''கற்றுக்கொண்ட மொழியை அழகாகப் பேசுகிறீர்கள்'' என்றாள் அவளும் தமிழில்.

''எதையும் கற்றுக் கொள்ளும்போது பூரணமாகக் கற்றுக் கொள்ளவேண்டும். அப்படிச் செய்தால் கற்றுக்கொண்ட மாதிரியே தெரியாது''

''நேற்று உங்கள் பேச்சைக் கேட்டதிலிருந்து எனக்கு ஒரே குழப்பமாக இருக்கிறது''

''நீ தெளிவில்லாமல் இருந்தாய் நந்தினி. நான் திடீரென உண்மைகளை எடுத்துச் சொன்னதால் உன்னால் ஜீரணிக்க முடியவில்லை. அவ்வளவுதான்''

''பலியிடுவது தர்மமல்ல என்று கூறினீர்கள். அதற்கு நான் சம்மதம் அளிப்பது அறிவுடைமையாகாது என்று சொன்னீர்கள். இனிமேல் நான் என்னதான் செய்வது?''

''நந்தினி, நீ இந்தத் தீவிலேயே இருந்து விடுவதென்று தீர்மானித்து விட்டாயா?''

''ஏன் இப்படிக் கேட்கிறீர்கள்?''

''இந்தப் பாம்புத் தீவில் இருக்கவேண்டிய கால வரம்பு முடிந்து விட்டதல்லவா? இனிமேல் எதற்காக இங்கு இருக்க வேண்டும்? இங்கே இருந்து வெளியேறிவிட்டால் தீவுவாசிகளின் அதர்ம காரியங்களுக்கு சம்மதம் தெரிவிக்க வேண்டிய அவசியம் வராது அல்லவா?''

''நான் எங்கே போவது?''

''நீ எங்கே போக விரும்புகிறாய்?''

''அந்த சிந்தனையே என்னிடம் இல்லையே! நீங்கள்தானே இப்போது உண்டாக்கியிருக்கிறீர்கள்?''

''இப்போது சிந்தனை உண்டாகிவிட்டதல்லவா? எங்கே போக விரும்புகிறாய்?''

''இளவரசே, நான் தனிப் பெண்ணாக எங்கே போகமுடியும்? எப்படிப் போகமுடியும்?''

''வருவதற்குத் தயார் என்று நீ சொல். அழைத்துச் செல்ல நான் தயாராக இருக்கிறேன்''

''எங்கே?''

''நாக தீபத்திற்கு''

''அங்கே போய்?''

''இங்கிருந்து உன்னை அழைத்துப் போகும் எனக்கு உன்னை என்ன செய்யவேண்டும் என்று தெரியாதா?''

''என்னிடம் என்னென்னவோ தோன்றினாலும் எதையும் என்னால் சொல்ல முடியவில்லை''

''ஆனால் எனக்குப் புரிகிறது நந்தினி. உன் மனதில் உள்ளவைகளை என்னால் அறியமுடிகிறது. அவற்றை நீ வாய்திறந்து சொல்ல வேண்டியதில்லை''

''என் பெற்றோர்களைவிட்டு நான் எப்படி வரமுடியும்?''

''உனக்குப் பெற்றோராக இருக்கும் தகுதி டிமார்க்கோ - லியானவுக்கு இல்லை. இதை நீ முக்கியமாகப் புரிந்து கொள்ள வேண்டும்''

''அவர்கள் பல ஆண்டுகள் என்னை வளர்த்தார்கள்''

''வளர்த்தவர்கள் என்ன பெற்றவர்களாகவே இருந்தாலும் கூட அவர்களது பெண்கள் அவர்களோடு இருக்க முடியாது. ஒரு கட்டத்தில் வெளியேறித்தான் ஆகவேண்டும். அதோடு உன் எதிர்காலத்தை இவ்விருவரால் நல்லவிதமாக அமைக்க முடியாது''

''எப்படிச் சொல்கிறீர்கள்?''

''அதையெல்லாம் விவரமாகச் சொன்னால் உன் மனது வேதனைப்படும். ஆகவே அவற்றைக் கேட்காதே. நான் கூறுவது உண்மை'' என்று சொன்ன விஜயன் அவளைத் தன் மார்பில் சாத்திக்கொண்டு ''என்மீது உனக்கு நம்பிக்கை இருக்கிறதா நந்தினி?'' என்று கேட்டான்.

''இருக்கும் என்று தான் தோன்றுகிறது''

''இதென்ன உத்தேசமான பேச்சு?''

''நான்தான் சொன்னேனே - என்னிடம் என்னென்னவோ தோன்றினாலும் எதையும் என்னால் சொல்ல முடியவில்லை''

''நந்தினி, எனக்கு மனைவியாக்கப்பட்ட மாயாவின் மீது எனக்கு அன்புவரவில்லை. அவள் தன் பாதையை மாற்றிக் கொண்டு சீரழிந்து போனாள். என்னை விரும்பிய பத்மினி என்னைக் காப்பதற்காக என் தந்தையை மணந்துகொண்டு தற்கொலை செய்து கொண்டாள். எனக்கும் பெண்களுக்கும் ராசியில்லை என்று எண்ணிக் கொண்டிருந்த வேளையில் கடலில் கிடைத்த முத்தைப்போல நீ தென்பட்டாய். யாரிடமும் இழக்காத என் இதயத்தை உன்னிடம் இழந்துவிட்டேன். ஆகவே உன்னை இழக்க நான் தயாராக இல்லை. நீ விரும்பினால் நான் செல்லும் நாகதீபத்திற்கு உன்னை அழைத்துக் கொண்டுபோய் மணந்து கொள்ள தயாராக இருக்கிறேன். நீ என்ன சொல்ல விரும்புகிறாயோ சொல்''

''இங்கிருந்து நாம் வெளியேற முடியுமா?''

''வெளியேற வேண்டியது நாம் இருவர் மட்டுமல்ல. என் தோழர்கள் எழுநூறு பேர் இருக்கிறார்கள். மாலுமிகளும் மற்றவர்களும் இருக்கிறார்கள். அனைவரையும் இங்கிருந்து உயிரோடு வெளியேற்ற வேண்டியது தான் என் நோக்கம். அதற்கான காரியங்களில் ஏற்கனவே இறங்கிவிட்டேன். உனக்கு அந்தக் கவலை வேண்டாம்''

இவ்வாறு விஜயன் கூறியதும் ஓரளவிற்கு ஆறுதலடைந்த நந்தினி அவனிடமிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு ''உங்கள் உபதலைவர் உங்களிடம் வந்து சேர்ந்துவிட்டாரா?'' என்று கேட்டாள்.

''வந்துவிட்டான். ஒரு பிரச்சினையும் இல்லை''

''பலி தள்ளி வைக்கப்பட்டு விட்டதாமே உண்மையா?''

''உனக்குத் தெரியாதா?''

''உங்களைத் தவிர யாரும் வரவில்லை. அதனால் சரியாகத் தெரியாது''

''பிறகு எப்படி உனக்குத் தெரிந்தது?''

''நடப்பதாக இருந்தால் இன்றைக்கு இன்னேரம் நடந்திருக்க வேண்டும். நடக்கவில்லை என்றால் தள்ளி வைக்கப் பட்டிருக்கிறது என்று தானே அர்த்தம்?''

''பலியை நடத்த மட்டும் தான் உன் சம்மதம் கேட்பார்களா? தள்ளிப்போடுவதற்கு கேட்க மாட்டார்களா?''

''இதுவரை தள்ளிப்போட்டதில்லை''

''இருந்தாலும் உன்னிடம் சொல்ல வேண்டும் இல்லையா?''

''லியானா நாளை அனேகமாக வந்து விவரத்தைச் சொல்வாள்''

''முதலில் சொல்லவேண்டிய விஷயத்தை முடிந்த பிறகு சொல்வது முறையா? தேவதையாக உன்னைக் கருதுவது உண்மையானால் நடந்து முடிந்த பின்தான் சொல்வார்களா? உன்னை அவர்கள் உண்மையான மரியாதையோடு நடத்தவில்லை என்பதற்கு இது ஒரு உதாரணம். டிமார்க்கோவும் லியானாவும் உன் பெற்றோர்களாக இருக்கத் தகுதியற்றவர்கள் என்பதற்கு இதுவும் ஒரு காரணம். உன்னிடம் சம்மதம் கேட்டு வந்த லியானா நீ சம்மதம் தராதபட்சத்தில் இன்று பலியை நடத்தியிருக்க வேண்டும். இல்லையென்றால் அதற்கான காரணத்தை உன்னிடம் சொல்லி சம்மதம் வாங்கியிருக்க வேண்டும். ஏன் வாங்கவில்லை? இங்கே வருவதற்கு முன் அவளைச் சந்தித்துவிட்டுத்தான் வருகிறேன். அவள் பலியைத் தள்ளிப் போட்டதை உன்னிடம் தெரிவிக்க அக்கறை காட்டவில்லை. மாறாக அவளது விருப்பத்திற்கு எப்படியாவது உன் சம்மதத்தை வாங்கி வரும்படி தூது அனுப்பியிருக்கிறாள்''

''நான் என்ன செய்வது?''

''நான் தான் இருக்கிறேனே! லியானாவின் விருப்பத்திற்கு நீ சம்மதிப்பதாகச் சொல்லிவிடு''

இச்சமயத்தில் தான் ''என்ன சொல்கிறார் விஜயபாகு?'' என்று கேட்டபடி உள்ளே நுழைந்தான் டிமார்க்கோ.

விஜயன் நந்தினியிடம் ''நிதானம்'' என்று மட்டும் மெல்லத் தமிழில் சொன்னான்.

உள்ளே நுழைந்த டிமார்க்கோ ''என்ன விஜயபாகு இங்கே எப்படி வந்தீர்கள்? இவள் இங்கே இருப்பது எப்படித் தெரியும்? என்ன வேலையாக வந்தீர்கள்? கடற்கரைக் கூடாரத்தில் இரவில் தங்கமாட்டேன் என்று சொன்னதற்கு இதுதான் காரணமா?'' என்றுச் சந்தேகமும் கிண்டலும் தொனிக்கக் கேட்டான்.

''டிமார்க்கோ! வார்த்தைகளை அளந்து பேசு. உன் அநாகரீகத்தை என்னிடம் காட்ட வேண்டாம்'' என்று கோபமாகவே கேட்டான் விஜயன்.

அப்போது நந்தினி குறுக்கிட்டு ''தந்தையே! நான் உங்கள் மகள் தானா?'' என்று கேட்டாள் கோபமாக.

''நீயே தந்தை என்று சொல்லும்போது நீ என் மகள் தானே நந்தினி?'' என்றான் டிமார்க்கோ வாஞ்சையுடன்.

''இல்லை. அது பொய்''

''ஏன் இவ்வாறு சொல்கிறாய்? உன்மீது இத்தனை வருடங்களாக காட்டிய பாசம் எப்படி பொய்யாக முடியும்?''

''அது இருக்கட்டும். என்னை நீங்கள் எல்லோரும் தேவதையாகக் கருதுவது உண்மையா?''

''உன் ஆணையாக உண்மை மகளே''

''இன்று என்ன நாள்?''

''பௌர்ணமி''

''பலி ஏன் நடக்கவில்லை?''

''அது வந்து... தள்ளிவைத்து விட்டோம்'' என்று சற்றே தடுமாறினான் டிமார்க்கோ.

''தள்ளி வைக்க உங்களுக்கேது உரிமை?'' கேட்டாள் நந்தினி.

''லியானா உன்னிடம் சொல்லியிருப்பாள் என்று நினைத்தேன்''

''நீங்கள் பேசுவது விந்தையாக இருக்கிறது தந்தையே. நேற்றே தள்ளி வைப்பதற்கான அறிவிப்பைச் செய்துவிட்டு இன்றைக்கு வந்து சொல்வதுதான் நீங்கள் தேவதைக்குச் செய்யும் மரியாதையா? பலியாக வேண்டிய இவரைத் தூது அனுப்புகிறாள் என் தாய். இவரோ செய்தியைச் சொல்லிவிட்டு உங்களுக்காக மன்னிப்பு கேட்டுக் கொண்டு நிற்கிறார். உங்கள் தவற்றை உணராமல் நீங்கள் இவரை அவமரியாதையாகப் பேசுகிறீர்கள். இதற்கெல்லாம் என்ன அர்த்தம்? என்னை மகளாகவும் தேவதையாகவும் உண்மையாகவே கருதுவீர் களானால் இப்படி அலட்சியம் காட்டி அவமரியாதை செய்வீர்களா? இந்த ஒரு காரியத்தின் மூலம் பெற்றவர்கள் வேறு வளர்ப்பவர்கள் வேறு என்பதன் வித்தியாசத்தை எனக்கு உணர்த்தி விட்டீர்கள். நான் உங்கள் தேவதையில்லை என்பதையும் காட்டி விட்டீர்கள். இன்று முதல் நான் தேவதையுமல்ல. உங்கள் மகளும் அல்ல. நீங்கள் போகலாம்''

அநாகரீகமும் காட்டுமிராண்டித்தனமும் பேராசையும் கொண்டிருந்த டிமார்க்கோ நந்தினியின் பேச்சைக் கேட்டு அரண்டு போனான். அவள் இத்தகைய சுடு சொற்களைக் கூறுவாள் என்று அவன் எதிர்பார்க்கவில்லை. எனவே அவளைச் சமாதானம் செய்யும் முயற்சியில் ஈடுபட்டான். நந்தினியைப் பொறுத்தவரை டிமார்க்கோவின் கவனத்தை விஜயனிடமிருந்து திருப்புவதற்காகவே நாடகமாடினாளாதலால் மிகவும் பிடிகொடுக்காமல் பேசி கடைசியாகச் சமாதானம் அடைவது போல் அமைதியானாள். அவளது சமயோசிதமான நாடகத்தைக் கண்டு உள்ளூர பாராட்டிய அவன் மேலும் அங்கேயே இருந்தால் டிமார்க்கோவின் சந்தேகம் மீண்டும் துளிர்விடும் என்று கருதி அவனுடனேயே நாகர்மலைத் தீவுக்குத் திரும்பினான்.

அன்றிரவு தன் இருப்பிடத்திலேயே தோழர்களுடன் தங்கினான் விஜயன். மறுநாள் லியானாவிடம் அவள் விருப்பம் சம்பந்தமாக சம்மதத்தை வாங்கிவிட்டதாகக் கூறிய அவன் ''எதற்கும் நீ நேரில் போய் உன் காதால் கேட்டுவிட்டு வா. அவளிடம் கூறாமல் நீங்கள் எல்லோருமாக பலியைத் தள்ளிப் போட்டதை நினைத்துக் கோபமாக இருக்கிறாள். அதற்கான சமாதானத்தையும் நீ நேரில் கூறினால்தான் அவளது ஒத்துழைப்பு நமக்குப் பூரணமாகக் கிடைக்கும்'' என்று சொன்னதும் அதற்கு ஒப்புக்கொண்ட அவள் ''நேற்று நான் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லவில்லையே?'' என்றாள் லியானா.

''எதைக் குறிப்பிடுகிறாய்?''

''மரக்கலத்தைப் பற்றிச் சொன்னேனே அதுதான்''

''உன்னால் ஊகிக்க முடியவில்லையா?''

''ஊகம் எதற்கு? நீயே சொல்லிவிடு''

''நமது திட்டம் நிறைவேற ஒரு மாதம் இருக்கிறது. அதுவரை நேரத்தை வீணாக்க வேண்டாம் என்றுதான் மரக்கலத்தைக் கடற்கரைக்கு இழுத்து அடிப்பாகத்தைச் சுத்தம் செய்யும்படிச் சொன்னேன்''

''ஒப்புக் கொண்டானா டிமார்க்கோ?''

''ஆசை காட்டினேன். ஒப்புக் கொண்டான்''

''என்ன ஆசை?''

''கப்பலைப் பழுது பார்த்து நல்ல நிலைக்குக் கொண்டு வந்தால் அதை வைத்துக் கொண்டு பழையபடி கொள்ளைக் காரனாகி நிரம்ப கொள்ளையடிக்கலாம் என்று கூறினேன். ஒப்புக்கொண்டான்''

''உன்னைப் போன்ற தந்திரசாலியை நான் பார்த்ததே இல்லை''

''எப்படி பார்க்க முடியும்? நீதான் இத்தீவிலேயே முடங்கிக் கொண்டு காமச் சேற்றில் திளைக்கிறாயே?'' என்று உள்ளுக்குள் நினைத்துக் கொண்ட விஜயன் ''எல்லாமும் உனக்காகத்தான்

லியானா. இது புரியவில்லையா உனக்கு?'' என்று கேட்டான்.

''உன் பேச்சு எத்தனை இனிப்பாக இருக்கிறது தெரியுமா? வாயேன் கடலில் சிறிதுநேரம் ஜலக்கிரீடை செய்யலாம்'' என்றாள் லியானா.

''முதலில் உன் மகளைப் பார்த்துவிட்டு வா. பிறகு ஒருநாள் முழுதும் கடலிலேயே மிதக்கலாம்'' என்று கூறிவிட்டு அகன்றான் விஜயன்.

★★★

அதற்குப் பிறகு வேலைகள் வேகமாக நடந்தன. தீவுக் கப்பலில் இருந்த சரக்குகளை இறக்கி வைக்க ஐந்து நாட்கள் பிடித்தன. அதற்குப் பிறகு கப்பலை தீவுவாசிகள் அனைவருமாகக் கூடி உபதலைவர்களின் ஆலோசனைகளின்படி பெரும் கயிறுகளைக் கொண்டு கரையை நோக்கி இழுத்தார்கள். பிறகு காட்டு மரங்களை வெட்டி நீண்ட கழிகள் உருவாக்கி கப்பலின் அடிப்பாகத்தில் வைத்து அசைத்தார்கள். பெரும் பாடுபட்டு கப்பலை போதுமான அளவிற்குச் சாய்த்தார்கள். விஜயன் கூறியிருந்தபடி அந்த மரக்கலம் கடந்த ஐந்து ஆண்டுகளாக கடலிலேயே ஓடிக்கொண்டிருந்ததால் மூன்றடி அகலத்திற்கு கடல் பாசிகளும் அழுக்கும் கிளிஞ்சல்களும் படிந்து கிடந்தன. விஜயனின் தோழர்களும், மாலுமிகளும் தீவுவாசிகளும் அவற்றை லகுவாக கீறி எடுக்கும் வேலையில் ஈடுபட்டார்கள். விஜயனும் டிமார்க்கோவும் பெரும்பாலான நேரத்தை கடற்பகுதியிலேயே கழித்தார்கள். அவர்களுக்குத் தேவையான உணவு அவ்வப்போது தீவில் தயாரிக்கப்பட்டு பரிமாறப்பட்டது. ஒருநாள் விட்டு ஒருநாள் கடற்கரை கூடாரத்தில் விஜயன் தங்காமல் தன் இருப்பிடத்திற்குப் போவதாகச் சொல்லிவிட்டு சென்றதைக் கவனித்த டிமார்க்கோவிற்கு அவன் பாம்புத் தீவிற்குச் சென்று தன் மகளைச் சந்தித்துவிட்டு வருவதாகச் சந்தேகம் உண்டாயிற்று. தனது ஆட்களை விட்டு வேவு பார்த்ததில் தன் சந்தேகம் உறுதியானதை உணர்ந்த அவனுக்கு ஒன்றும் பிடிபடவில்லை. ''எதற்காக விஜயன் நந்தினியைச் சந்திக்கிறான் அதுவும்

இரவில்? இருவருக்கும் என்ன தொடர்பு இருக்க முடியும்? ரகசியமாகப் போய் அவளைச் சந்திக்க வேண்டிய அவசியம் என்ன'' என்று தனக்குள்ளேயே ஏதேதோ கேள்விகளைக் கேட்டுக்கொண்டு குழம்பினான். ஒருமுறை அவனது வாயைக் கிளற முற்பட்டு ''என்ன விஜயபாகு, அடிக்கடி இரவு நேரங்களில் காணாமல் போய்விடுகிறீர்களே? கேட்டால் இருப்பிடத்திற்குப் போவதாகச் சொல்கிறீர்கள். அங்கே யார் இருக்கிறார்கள்? எல்லோருமே இங்கு இருக்கிறார்களே?'' என்று கேட்டுப் பார்த்தான்.

''அர்த்தமற்ற கேள்விகள் கேட்பதைவிட்டு உருப்படியான காரியங்களைச் செய்ய முற்படு. வீணான கேள்விகளைக் கேட்டு உன் தலைவில் மண்ணைப் போட்டுக் கொள்ளாதே'' என்று விஜயன் நெற்றிப் பொட்டில் அடித்த மாதிரி பதில் கூறிவிட்டதால் அவனிடம் எதுவும் பேச முற்படாமல் தன் கோபத்தை லியானாவிடம் காட்ட முனைந்து ''விஜயனை நீ தான் பாம்புத் தீவுக்கு அனுப்பி வைத்தாயாமே எதற்காக? அவன் அங்கே போகவேண்டும்?'' என்று கேட்டான்.

''நான் அனுப்ப வேண்டிய அவசியம் இல்லை. நான் அங்கே போய்விட்டு வந்ததைப் பார்த்துவிட்டு அவனாகவே போக முயற்சித்தான். நான் அவனைத் தடுக்கவில்லை'' என்று லியானாவும் கடுப்பாக பதிலளித்தாள்.

''ஏன் தடுக்கவில்லை?'' என்று கேட்டான் டிமார்க்கோ.

''தடுத்தால் என்ன ஆகிவிடும்? மீண்டும் மற்றொரு நாள் போகத்தான் போவான்''

''இதை ஆரம்பத்திலேயே ஏன் என்னிடம் சொல்லவில்லை?''

''உங்களிடம் சொல்ல என்ன இருக்கிறது இதில்?''

''அப்படி நினைப்பது முட்டாள்தனம். நம்மைத் தவிர வேறு மனித வாடையே அறியாமல் வாழ்பவள் நந்தினி. அவளுக்கு விஜயனின் வாடை பட்டால் விபரீதம் ஆகிவிடும் அல்லவா?''

''நந்தினி ஒன்றும் லேசில் ஏமாறுகிறவள் அல்ல''

''அப்படிப்பட்டவளாக அவள் இருந்தால் விஜயன் அடிக்கடி அங்கே செல்ல முடியாது''

''அடிக்கடி அவன் அங்கே செல்வதாக உங்களுக்கு யார் சொன்னது?''

''நமது ஆட்கள் தான்''

''வேவு பார்க்கிறீர்களா? யார் யாரையெல்லாம் வேவு பார்க்கிறீர்கள்? விஜயனை மட்டுமா இல்லை என்னையுமா?''

''இதென்ன கேள்வி? உன்னை எதற்காக நான் வேவு பார்க்க வேண்டும்?''

''வேவு பார்ப்பது எதனால்? சந்தேகத்தால். ஓரிடத்தில் சந்தேகம் வந்துவிட்டால் அது பல கிளைகளை உருவாக்கும். விஜயனை சந்தேகிக்கும் நீங்கள் என்னையும் சந்தேகிக்க மாட்டீர்கள் என்பது என்ன நிச்சயம்?''

''இதென்ன லியானா என்னைப்போய் இப்படிக் கேட்கிறாய்? உன்மீது எனக்கிருக்கும் அன்பு இந்தக் கடலை விடப் பெரியது என்பது உனக்குத் தெரியாதா?''

''கடல் பெரியதாக இருந்தால் என்ன? அதில் கலந்திருப்பது உப்பு தானே?''

''கடல் அப்படியிருக்கலாம். கடல் போன்ற என் காதலில் எதுவும் கலக்கவில்லை. என்னை நம்பு'' என்று கூறி மேற்கொண்டு பேசாமல் லியானாவைத் தூக்கிக்கொண்டு போய் பாறைக் கட்டிலில் வீழ்த்தி பாறையே நொறுங்கும்படி அவளிடம் சல்லாபித்தான். விஜயன் எப்படிப் போனால் என்ன என்று எண்ணிக் கொண்ட அவன் தனது எண்ணங்களை சல்லாபங்களை அதிகரிப்பதில் செலவிட்டான். இரவு பகல் என்ற வித்தியாசமின்றி அவளைத் தூக்கிச் சென்று காமக் கடலில் ஆழ்த்தினான்.

டிமார்க்கோவிடம் பேச்சில் வென்று விட்டாலும் அவனுக்கு ஏற்பட்ட சந்தேகம் அவளுக்கும் உண்டாயிற்று.

அதுபற்றி நந்தினியிடமே விசாரித்து விடலாம் என்ற தீர்மானத்துடன் மறுநாள் இரவு படகை எடுத்துக் கொண்டு பணியாட்களுடன் பாம்புத் தீவிற்குப் புறப்பட்டாள் லியானா.

அவள் வருவதை அறியாத விஜயனோ நந்தினியிடம் காதல் வயப்பட்ட நிலையில் இருந்தான்.

◈◈◈

## அத்தியாயம் முப்பத்தெட்டு

# விஜயனின் மிரட்டல்

நாகநந்தினியைப் பார்த்த முதல் பார்வையிலேயே அவளைத் தன் சொந்தமாக்கிக் கொள்வதென்று தீர்மானித்திருந் தான் விஜயன். மனைவியாக வந்த மாயா கனவுகளில் திளைத்து தகாத செயல்களில் ஈடுபட்டு தண்டனையை அடைந்து உயிரை விட்டாள். மனைவியாக வரத்துடித்த பத்மினி தன்னைக் கணவனாகவே எண்ணிக்கொண்டு அதேசமயம் தனக்காக தன் தந்தையை மணந்து தற்கொலை செய்து கொண்டாள். இப்படி இரு பெண்களும் அரைகுறையாகவே அச்சு முறிந்த தேர்களாகி அழிந்துவிட்ட நிலையில் குப்பையில் கிடைத்த மாணிக்கத்தைப் போல் காட்டுமிராண்டிகளுக்கிடையே ஓர் தேவதையாக நாக நந்தினி காணப்படவே அன்றுவரை அவன் இதயத்தில் தோன்றாத காதல் உணர்வும் ஆசையும் தோன்றி அவள்பால் ஈர்த்தன. ஏறக்குறைய எதிர்காலச் சிந்தனைகளே இல்லாமல் ஜடமாய் வாழ்ந்து வந்த நாகநந்தினியின் மனத்தில் அத்தகைய சிந்தனைகளை விஜயன் உண்டாக்கிய பிறகுதான் அவளுக்குள் புத்துணர்வுகள் பூத்தன. தன்னைச் சந்தித்த விஜயன் அரசகுமாரனாக இருந்ததும் நம்பிக்கைக்கு உரிய வீரபுருஷனாக காட்சியளித்ததும் மொட்டாக இருந்த அவளது உள்ளுணர்வு களை மலரச் செய்தன. இருவருமே தத்தம் கடந்த காலங்களை ஒளிவு மறைவு இன்றி கூறிக் கொண்டார்களாதலால் பரஸ்பர நம்பிக்கையும் ஈர்ப்பும் பெருகியது.

எனவே அவளிடம் வீணாகப் பீடிகைகளைப் போடாமல் வெளிப்படையாகவே தனது எண்ணங்களையும் ஆசைகளையும் எடுத்துரைத்தான். நாக தீபத்திற்குப் போய் அங்கே ஓர் அரசை அமைத்து அரசனாக அமரும்போது தனது பக்கத்தில் ராணியாக அமர்வதற்கு நாகநந்தினி பொறுப்பானவளாக இருப்பாள் என்று கருதினான். அந்த வகையில் அவளுடனான உறவையும் உணர்வையும் வளர்க்க முடிந்தபோதெல்லாம் பாம்புத் தீவுக்கு வந்து போனான். லியானாவும் அத்தீவுக்குச் சென்றுவர அனுமதியையும் வசதிகளையும் அளித்திருந்தது அவனுக்கு அனுகூலமாய் இருந்தது. திடீரென டிமார்க்கோ இது குறித்து வினவியபோது சற்றே வியப்படைந்தான் விஜயன். அதேசமயம் டிமார்க்கோவின் கேள்விக்கு நேரடியாக பதில் கூறுவதைவிட இடக்காக பதில் சொல்வதுதான் தன் மீது அவனுக்கு தயக்கத்தையும் பயத்தையும் உண்டாக்கும் என்று கருதி அவ்வாறே பதிலைச் சொல்லிவிட்டு பாம்புத் தீவுக்குச் சென்று வந்தான். நாக நந்தினி விஷயத்தில் அவன் டிமார்க்கோவை எதிர்க்கவும் மனதை தயார்படுத்திக் கொண்டு வந்தான்.

லியானா விஷயமோ அவனைப் பொறுத்தவரை சற்று யோசிக்கவே வைத்தது. டிமார்க்கோவைவிட லியானா புத்திசாலியாக இருந்தாள். தந்திரசாலியாக இருந்தாள். வஞ்சக எண்ணமும் மன உறுதியும் அதிகமாகவே இருந்தன. அதோடு அவளது திட்டமே பலி நாளில் டிமார்க்கோவை கொலை செய்வதாக இருந்ததால் அவளொரு பயங்கரமான பெண்மணி என்பது விஜயனுக்கு நன்றாகப் புரிந்திருந்தது. அதோடு தீவுவாசிகளின் பலம் அவளுக்கே அதிகமாக இருந்ததாகவும் தோன்றியது. எல்லாவற்றுக்கும் மேலாக லியானா டிமார்க்கோவை தீர்த்துக்கட்டி விட்டு தன்னோடு உல்லாச வாழ்க்கை வாழ வெறிகொண்டிருந்தாளாதலால் தான் நாகநந்தினியை விரும்புவது அவளுக்கு முற்றிலும் பிடிக்காது என்பதை உணர்ந்திருந்தான் விஜயன். அந்த விஷயத்தில் டிமார்க்கோவைப் போல அவளை அலட்சியமாக ஒதுக்கிவிட முடியாது என்பதையும் அறிந்து கொண்டான்.

தற்போது நாகநந்தினியிடம் பேசியபோது "ஒரு விசித்திரத்தைப் பார்த்தாயா நந்தினி? உன்னை நான்

விரும்புகிறேன். என்னை உன் தாய் விரும்புகிறாள். இது போன்று எங்கேயாவது நீ கேள்விப்பட்டிருக்கிறாயா?'' என்று கேட்டான் விஜயன்.

அவன் சுட்டிக் காட்டியபோது தான் நந்தினிக்கும் அந்த வினோதம் புரிந்தது.

''லியானா ஏன் இப்படி மாறி விட்டாள் என்று எனக்குப் புரியவில்லை'' என்றாள் நந்தினி.

''அவள் மாறவில்லை நந்தினி. அவள் வாழும் நாகர்மலைத் தீவில் உள்ளவர்களின் பண்பாடு அது. யாரும் யாருடன் வேண்டுமானாலும் வாழலாம் என்ற மிருகப் பண்பாட்டில் வாழ்பவள் லியானா. அதன் ஒரு பகுதிதான் கணவனைப் புறக்கணித்துவிட்டு என்னை மணக்க விரும்புவது''

''லியானா ரொம்பவும் முரடானவள். தன் ஆசையை நிறைவேற்ற அவள் எதையும் செய்வாள்''

''அது எனக்குத் தெரியும்''

''அவளது திட்டத்திற்கு நான் சம்மதம் தெரிவித்தபோது வெறி கொண்டவளைப் போல் ஆடிப்பாடி மகிழ்ந்தாள். தன் செயல் குறித்து அவளுக்கு வெட்கம் இல்லை''

''இதெல்லாம் எதிர்பார்க்கக் கூடிய விஷயங்கள் தான்''

''அப்படியிருக்கும்போது நம் உறவை அவள் எப்படி ஏற்பாள்?''

''ஏற்பது பிறகு. முதலில் நமது உறவு பற்றி அறிந்தால் என்ன செய்வாள் என்று பார்''

''உண்மைதான். அவளை எப்படிச் சமாளிக்கப் போகிறீர்கள்?''

''யோசித்துக் கொண்டுதான் இருக்கிறேன். இது நம் இருவர் மட்டுமே சம்பந்தப்பட்ட விஷயம் என்றால் எதை வேண்டுமானாலும் உடனடியாகச் செய்ய என்னால் முடியும். ஆனால் என் தோழர்கள் மற்றும் மாலுமிகள் இருக்கிறார்கள். அவர்கள் உயிரையும் காப்பாற்ற வேண்டும். ஆகவேதான் பொறுமையாக இருக்கிறேன்''

''இத்தீவிலிருந்து எப்படித் தப்பிச் செல்வீர்கள்?''

''அதுபற்றி இப்போது சொல்ல முடியாது நந்தினி. சில நாட்கள் ஆகட்டும்''

நந்தினி ஏதோ பேசமுற்பட்டபோது திடீரென உள்ளே பிரவேசித்தாள் லியானா - நந்தினியும் விஜயனும் கட்டிப் பிடித்துக் காதல் புரியவில்லை என்றாலும் நெருக்கமாக நின்றிருந்ததைக் கண்ட லியானாவின் கண்கள் சிவந்தன.

''இங்கே என்ன செய்கிறாய் விஜயா?'' என்று கேட்டாள் லியானா.

விஜயன் அசந்து விடாமல் ''இங்கே என்ன செய்துவிட முடியும் என்று நினைக்கிறாய் லியானா?'' என்று கேட்டான்.

அவளும் ஆடி விடாமல் ''என்ன வேண்டுமானாலும் நடக்கலாம்'' என்றாள்.

''பிறகு எதற்காக கேட்கிறாய்?''

விஜயனின் பேச்சு அவளுக்குப் புரியவில்லை. ''நீ சொல்வது எனக்குப் புரியவில்லை'' என்றாள்.

''புரியும்போது புரியட்டும். நீ எதற்காக இந்த நேரத்தில் இங்கே வந்தாய்?''

''அதைக் கேட்க உனக்கு உரிமையில்லை''

''அந்த உரிமையில்லாத நான் உன்னை ஏன் மணக்க வேண்டும்?''

லியானா இதைக்கேட்டு சற்று அதிர்ந்தாள்.

''விஜயா! இத்தீவு என் வசம் இருக்கிறது. இதில் எங்கே வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் நடமாட எனக்கு உரிமை இருக்கிறது. அதோடு நந்தினி என் மகள். அவளைப் பார்க்க நான் வரக்கூடாதா?''

''கூடாது என்று நான் சொல்லவில்லையே?''

''ஏன் வந்தாய் என்று எதற்காகக் கேட்டாய்?''

''காரணம் தெரிந்து கொள்வதற்காக கேட்டேன்''

''நந்தினியைப் பார்க்க வந்தேன்''

''பாரேன். அதைவிட்டு விட்டு என்னிடம் எதற்காக கேள்வி கேட்கிறாய்?''

''நான் இங்கே வருவதற்கும் நீ இங்கே வருவதற்கும் வித்தியாசம் இருக்கிறது''

''என்ன வித்தியாசம்?''

''நான் அவளது தாய்... நீ...''

''சொல். நான் யார்?''

''நந்தினியோடு எந்த சம்பந்தமும் இல்லாதவன்.''

''சம்பந்தமில்லாத என்னை இவளிடம் ஏன் தூது அனுப்பினாய்?''

''யாரைத் தூது அனுப்ப வேண்டும் என்பது என் விருப்பம். உன்னைத் தேர்ந்தெடுத்தேன். அனுப்பினேன். வேலை முடிந்து விட்டது. இனியும் நீ இங்கே வர வேண்டியது அவசியமில்லை''

''நான் இங்கே வரக்கூடாது என்கிறாயா?''

''ஆமாம்''

''நான் என்ன உன் அடிமையா?''

''நீ என்ன, உன்னோடு வந்தவர்கள் எல்லோரும் எங்கள் அடிமைகள் தான்''

''டிமார்க்கோ?''

''அவன் தீவின் தலைவன்''

''தீவின் தலைவனைக் கொல்லவும் தீவுக்கு வந்த அடிமையை மணக்கவும் இத்தீவுவாசிகள் சம்மதிப்பார்களா?''

பேச்சு ஆபத்தான திசையில் திரும்புவதை உணர்ந்த லியானா ஏதோ பேச முற்பட்டபோது ''இதோ பார் லியானா. நீ என்னை மணக்க விரும்புவது உண்மையானால் என்னிடம் மரியாதையை காட்டுவதுதான் உனக்கு நல்லது. அடிமை என்ற வார்த்தையை இனியும் உச்சரிப்பது உனக்கு நல்லதல்ல. நீ விரும்பினால்

இங்கு வருவதற்கும் விரும்பாவிட்டால் வராமல் இருப்பதற்கும் நானொன்றும் உன் பணியாள் அல்ல. என்னை வேவு பார்க்கும் வேலையெல்லாம் உனக்கு வேண்டாம். இதோடு இது நிற்கட்டும். மேலும் தொடர முற்பட்டால் உன் திட்டத்தை தீவுவாசிகளுக்கும் டிமார்க்கோவுக்கும் சொல்லி உன்னை அழித்து விடுவேன். நீ நினைப்பது போல் நான் ஒன்றும் ஏமாளியுமல்ல. கோழையுமல்ல''

இதைக் கேட்டதும் பெரிதும் குழம்பிப்போன லியானா எதுவும் பேசாமல் குடிலைவிட்டு வெளியேறினாள்.

அவள் சென்றபின் ''இதென்ன அவளை ஒரேயடியாக மிரட்டி விட்டீர்கள்?'' என்று கேட்டாள் நந்தினி.

''நியாயமோ தர்மமோ எதுவும் இல்லாத அவள் என்னை மிரட்டலாம். நான் மிரட்டக் கூடாதா? அவள் உன் வளர்ப்புத் தாயாக இருக்கலாம். எனக்கு அவள் எதிரி''

''அவளைக் கொன்றுவிடப் போகிறீர்களா?''

''நான் கொலைகளை நிறுத்தி நீண்ட நாட்கள் ஆகிவிட்டன நந்தினி. அதை இத்தீவில் மீண்டும் ஆரம்பிக்க நான் விரும்பவில்லை. எதுவுமே லியானாவைப் பொறுத்து இருக்கிறது''

''அவள் வெளியேறிய விதத்தைப் பார்த்தால் சும்மாயிருப்பாள் என்று எனக்குத் தோன்றவில்லை''

''பார்க்கலாம். எதற்கும் நீ தைரியமாக இரு'' என்றான் விஜயன்.

மறுநாள் கடற்கரையில் மேற்பார்வையிட்ட விஜயன் டிமார்க்கோவிடம் ''உன்னிடம் ஆயுதங்கள் இருக்கிறதா டிமார்க்கோ?'' என்று கேட்டான்.

''ஆயுதங்களா? எதற்கு?''

''எல்லாவற்றையும் மறந்து விட்டாயா? மரக்கலம் தயாரானதும் நீ அதன் தலைவனாக வேண்டும். உன் பழைய வீரச் செயலைத் தொடரவேண்டும். அதற்கு வெறும் கைகள் போதுமா? ஆயுதங்கள் வேண்டாமா?''

''என்னோடு வாருங்கள்'' என்றுகூறி டிமார்க்கோ விஜயனை தன் மலைக்குகைக்குப் பின்னால் அழைத்துச் சென்றான். அங்கே பெரியதோர் பள்ளம் இருந்தது. அப்பள்ளத்தை மூடியிருந்த தழைகளை தீவுவாசிகளைக் கொண்டு அப்புறப்படுத்தினான். உள்ளே ஏராளமான ஆயுதங்கள் இருந்தன. பெரும்பாலும் ஈட்டிகளும் வாட்களுமாக இருந்தன. அவை அதிக காலமாகப் பயனின்றி அந்த மண் பள்ளத்தில் இருந்த காரணத்தால் துரு பிடித்திருந்தன.

அதைப் பார்த்த விஜயன் ''இதுதானா ஆயுதங்கள்? இவற்றை வைத்துக் கொண்டு என்ன செய்யமுடியும்?'' என்று கேட்டான்.

டிமார்க்கோ ஏதோ பேசமுற்பட்டபோது ''இதோ பார் டிமார்க்கோ, துருபிடித்த இந்த ஆயுதங்களைக் கொண்டு எதுவும் செய்ய முடியாது. எனவே இவற்றையெல்லாம் எடுத்து நன்றாகத் துடைத்து கல்லில் தேய்த்து கூராக்கச் சொல். எண்ணெய் இருந்தால் எல்லா ஆயுதங்களுக்கும் பூசி கடற்கரை பகுதியில் அடுக்கி வைக்கச்சொல்'' என்று சொன்ன விஜயன் ''உன்னிடம் எரி நட்சத்திரம் இருக்கிறதா?'' என்று கேட்டான்.

''யார் சொன்னது உங்களுக்கு?''

''வேறு யார் சொல்ல முடியும்? உன் தீவுவாசிகள்தான். ஒன்றுமில்லாத விஷயங்களுக்கெல்லாம் வியப்படையாதே. அவை எங்கே இருக்கின்றன?''

''என் குகையில் தான்''

''பார்க்கலாமா?''

டிமார்க்கோ சற்று யோசித்துவிட்டு பிறகு ''போகலாம்'' என்று கூறி விஜயனைத் தன் குகைக்கு அழைத்துச் சென்றான். அங்கே லியானா படுத்துக்கொண்டிருக்க வைத்தியர்களும் மாந்தரீகர்களும் வழக்கப்படி ஏதேதோ செய்வதுபோல் நாடகமாடிக் கொண்டிருந்தார்கள். குகைக்குள் வந்த விஜயனையும் டிமார்க்கோவையும் கவனித்தாலும் லியானா எதையும் கூறிக்கொள்ளவில்லை. டிமார்க்கோ குகைக்குள் இடதுபுறமாக அழைத்துச் சென்று அங்கே அடுக்கி

வைக்கப்பட்டிருந்த எரிநட்சத்திர மூட்டைகளைக் காட்டினான். மூட்டைகள் நூற்றுக்கும் மேற்பட்டிருந்ததைக் கண்ட விஜயன் ''டிமார்க்கோ! நீ மிகவும் அதிஷ்டசாலி. மரக்கலத்தை இயக்கி கடலில் நீ துவங்கவிருக்கும் செயலுக்கு இந்த மூட்டைகள் பெரிதும் உபயோகமாக இருக்கும். வழிக்கு வராத கப்பல்கள் மீது எரிநட்சத்திரங்களைக் கொளுத்தி வீசினால் அவை அடங்கிவிடும். நீ சொல்வதைக் கேட்கும். இதையும் கடற்கரையில் கொண்டுபோய் அடுக்கி வை. இவை இருக்க வேண்டிய இடம் மரக்கலமே தவிர இந்த குகையல்ல'' என்று கூறிவிட்டு பதிலுக்கு எதிர்பாராமல் கடற்கரை கூடாரத்திற்குச் சென்றான்.

அதையடுத்து வேலைகள் சுறுசுறுப்பாக நடந்தன. எரிநட்சத்திர மூட்டைகளை தீவுவாசிகள் சுமந்து கொண்டு கடற்கரைக்குச் செல்ல, மற்றவர்களோ துருபிடித்த ஆயுதங்களை எடுத்து சுத்தம் செய்வதில் ஈடுபட்டனர். டிமார்க்கோ கூடவே இருந்து தீவுவாசிகளை துரிதப்படுத்திக் கொண்டிருந்தான். இரவு நேரம் வந்ததும் நேராக கடற்கரைக்குச் சென்று விஜயனோடு உணவருந்திவிட்டு குகைக்கு வந்தான். அங்கே லியானா மட்டும் படுத்துக் கிடந்தாள். ஏதோ யோசனையில் ஆழ்ந்திருப்பது போலத் தோன்றவே ''என்ன யோசனை?'' என்று விசாரித்தான் டிமார்க்கோ.

''என்னைத் தொடாதீர்கள். என் யோசனையை கெடுக்காதீர்கள். வெளியே செல்லுங்கள்'' என்று எரிந்து விழுந்தாள் லியானா.

அவளைத் தொடுவதற்கான சந்தர்ப்பம் அதுவல்ல என்பதை உணர்ந்த அவன் அங்கிருந்து கிழக்கில் புறப்பட்டு புதர்கள் மண்டிக்கிடந்த ஓரிடத்திற்குச் சென்றான். அங்கே மரத்தின் மேல் அமைக்கப்பட்டிருந்த குடிசைக்கு மரத்தில் ஏறிச் சென்றான். அங்கே தீவுவாசியான ஒருத்தி எப்போதும் போலவே நிர்வானமாக கவிழ்ந்து கிடந்தாள். நல்ல உணவும் உறக்கமும் அவளது அங்கங்களையெல்லாம் புஷ்டியாக வைத்திருந்தன. அரைகுறை வெளிச்சத்தில் அந்தக் கரிய அழகுகளைக் கண்டு உன் மத்தம் கொண்ட டிமார்க்கோ ஒரே எட்டில் அவளை அடைந்து

தன் கைகளால் அவளைத் தூக்கினான். மரக்குடிசையில் பரப்பப் பட்டிருந்த தழைகளில் அவளை உருட்டினான். தன்னைத் தூக்கியவனும் உருட்டியவனும் தீவின் தலைவன் என்பதை உணர்ந்த அந்தப் பெண் அலாதிப் பிரியத்துடன் அவனை ஏற்றாள். லியானா கிடைக்காத ஏக்கத்தில் தன் காமப் பசியை அந்த புஷ்டியான அங்கங்களில் மிருகத்தனமாகத் தீர்த்துக் கொண்டான் டிமார்க்கோ. அவன் இவ்வாறு பலமுறை வந்திருந்தானாதலால் அவனது பசி எப்படிப்பட்டதாக இருக்கும் என்பதை உணர்ந்திருந்த அவள், அவனை விடியும்வரை அகலவிடாமல் காமத்தால் கட்டிப்போட்டாள்.

கடற்கரை கூடாரத்திற்கு வந்த விஜயனோ தனஞ்ஜெயனையும் இதர இரண்டு உபதலைவர்களையும், டெமிட்ரியஸையும் அழைத்து ''நாம் இங்கே வந்து பதினைந்து நாட்களாகின்றன. முதல் நாள் அன்றே உதயணனையும் நான்குத் தோழர்களையும் பாரடைஸைத் தேடும்படி அனுப்பி வைத்தோம். இன்றுவரை ஒருவரும் திரும்பவில்லை. என்ன ஆனார்கள் அவர்கள்?'' என்று கேட்டான்.

அப்போது அவர்கள் இருந்த பகுதியில் ஏதோ சலசலப்பு கேட்டது.

அதையடுத்து உதயணனும் நான்கு தோழர்களும் வந்தார்கள்.

''என்ன ஆயிற்று உதயணா?'' என்று கேட்டான் விஜயன்.

''நாம் மோசம் போய்விட்டோம்'' என்று கம்மிய குரலில் கூறினான் உதயணன்.

◈◈◈

## அத்தியாயம் முப்பத்தொன்பது

# உதயணனும் அசுவநாவிகரும்

விஜயன் தன்னையும் தன் தோழர்கள் நால்வரையும் தேர்ந்தெடுத்து பாரடைஸையும் கொலையாளியையும் கண்டுபிடிக்கும் பணியை ஒப்படைத்தபோது அப்பணியைக் குறித்து மலைத்துப் போனாலும் ஒப்புக் கொண்டான் உதயணன். வெறும் கைகளோடு திக்கு தெரியாத ஓர் தீவில் இவ்வாறு நால்வரிடம் இப்பணியை விஜயன் ஒப்படைத்ததை சவாலாக ஏற்றுக் கொண்டான். ஆகவே அதற்கான திட்டத்தையும் வகுத்துக் கொண்டு தோழர்களிடம் கூறினான்.

''நண்பர்களே, இத்தீவும் இந்தப் பிராந்தியமும் நமக்குப் புதியவை. இங்குள்ள எதைப்பற்றியும் எதுவும் நமக்குத் தெரியாது. நாம் தேட வேண்டிய பகுதி இந்தத் தீவுஅல்ல. இதற்கு அப்பால் கடலில் ஆங்காங்கே காணப்படும் தீவுகளுக்கெல்லாம் சென்று தேடியாக வேண்டும். அப்படிச் செல்ல வேண்டுமென்றால் நாம் தீவு தீவாக நீந்திக் கொண்டிருக்க முடியாது. ஆகவே நமது முதல் தேவை ஒருபடகு. அடுத்த தேவை உணவு மற்றும் தண்ணீர். இவைகளில்லாமல் நம்மால் எதுவும் செய்யமுடியாது. ஆகவே இவற்றை முதலில் சம்பாதிக்க நான் ஒரு யோசனை சொல்கிறேன். நமது தீவுக் கப்பலில் இருந்தவர்களையெல்லாம் தீவுவாசிகள் தீவின் உட்புறமாகக் கொண்டு சென்று விட்டார்கள். நமது கப்பல் நின்ற இடம் மற்றும் நம்மவர்களைத் தீவு வாசிகள் கொண்டு சென்ற இடம் ஆகிய இரண்டும் தீவின் கிழக்குப் பகுதி. மேற்குப் பகுதியில் அவர்களின் கண்காணிப்பு இருக்காது. எனவே நாம் அந்தப் பக்கமாகச் சென்று இரவு நேரத்தில் நமது தீவுக்கப்பலுக்குப் போவோம். அங்கே நமக்குத் தேவையான உணவுப் பொருட்களை எடுத்துக் கொள்வோம். படகு ஒன்றையும் கவர்ந்து கொண்டு மற்றத் தீவுகளுக்குச் சென்று தேடும் பணியை மேற்கொள்வோம்'' என்றான்.

வேறு மாற்று வழி எதுவும் இல்லாததால் தோழர்கள் ஒப்புக் கொண்டார்கள். திட்டமிட்டபடியே அன்றிரவு நீந்தி தீவுக் கப்பலுக்கு மறுபுரத்திற்கு வந்தார்கள். கப்பலில் இருந்த தளைகளைப் பற்றி மிகவும் சிரமப்பட்டு மேலே ஏறினார்கள். ஒரு வழியாக கப்பலுக்குள் வந்து சேர்ந்தார்கள். கப்பல் இருளில் மூழ்கியிருந்தது. உணவுப் பொருட்கள் இருந்த இரண்டாவது தளர்த்திற்கு வந்தபோது அங்கே யாரோ இருப்பது போல அவர்களுக்குத் தோன்றியது. ''வெற்றுக் கப்பலில் யார் இருக்க முடியும்? ஒரு வேளை கொலையுண்டவர்களின் ஆவியாக இருக்குமோ?'' என்று தங்களுக்குள் கேட்டுக் கொண்டார்கள்.

''யாரது? இங்கே இருப்பது யார்? உடனே வராவிட்டால் உடலில் தலையிருக்காது'' என்று சத்தமிட்டான் உதயணன்.

அவனது குரலைக் கேட்டதும் அருகில் வந்தது ஓர் உருவம். இருட்டில் அடையாளம் தெரியவில்லை என்றாலும் அது நல்லவனாக இருக்க முடியாது என்று கருதிய நால்வரும் அதன்மீது பாயத் தயாராக இருந்தார்கள். அந்த உருவம் அவர்களை அணுகியது தைரியமாக ''என்ன உதயணா, என் உடலில் தலை இருப்பது உனக்குப் பிடிக்கவில்லையா? பட்டினி போட்டு கொல்ல முயன்ற நீ நான் சாகாதது சகிக்காமல் கொன்று விடுவதற்காக ஆட்களுடன் வந்து விட்டாயா?'' என்று கேட்வும் செய்தது.

குரலை அடையாளம் கண்டுகொண்ட உதயணன் ''அசுவநாவிகரே, நீங்கள் தானா பேசுவது?'' என்று கேட்டான்.

''ஏன்? பேசுவதுகூட பிடிக்கவில்லையா?'' கேட்டார் அசுவநாவிகர்.

''பேச்சு ஏன் பிடிக்காமல் போகவேண்டும்? நீங்கள் ஏன் எல்லோருடனும் தீவுக்குப் போகவில்லை''

''தீவுக்குள் என்ன இருக்கிறது? சாவுதான் காத்திருக்கிறது. அதைத்தேடி நான் ஏன் போகவேண்டும்?''

''தனி ஆளாக இங்கே இருந்து கொண்டு என்ன செய்யப் போகிறீர்கள்?''

''தீவுக்குப் போனவர்கள் சாகப் போவதை வேடிக்கைப் பார்க்கப் போகிறேன். எல்லோரும் செத்தபிறகு இக்கப்பலைக் கொளுத்திவிட்டு நானும் சாகப் போகிறேன்''

''எதற்காக உங்களுக்கு இப்படிப்பட்ட விபரீத எண்ணம்? இது நியாயமானதா?''

''என்னைப் பன்னிரண்டு நாட்களுக்கு பட்டினி போடுவதற்கு நீங்களெல்லாம் விஜயனிடம் கூறினீர்களே - அது நியாயம் என்றால் இதுவும் நியாயம் தான்''

''அது வெறும் அபிப்ராயம்தானே? விஜயன் உங்களை யொன்றும் தண்டித்து விடவில்லையே! இப்போது நீங்கள் உத்தேசித்திருக்கும் செயலோ அடாவடியானது. கோழைத் தனமானது''

''உதயணா, நாங்கள் செய்த தவறு தெரியாமல் செய்த தவறு. அதை நீங்களும் விஜயனும் பொருட்படுத்தியிருக்கக் கூடாது''

''நீங்கள் செய்த தவறுகள் நிலத்தில் நடந்திருந்தால் பரவாயில்லை ஓடும் மரக்கலத்தில் செய்திருக்கிறீர்கள். இதில் விளைவுகள் தான் முக்கியம். உங்களது அறியாமை மேலும் தொடர்ந்திருந்தால் கப்பலில் இருந்த உணவுப் பொருட்கள் காலி செய்யப்பட்டிருக்கும். பிறகு உணவில்லாமல் பட்டினியால் ஒவ்வொருவராக மடிந்துபோக வேண்டியிருக்கும். விஜயன் அந்த விபரீதம் நடக்காமல் தடுத்தார். அதைச் செய்து கொண்டிருந்த உங்கள் இருவரையும் வெட்டியிருக்க முடியும் உணவின் அருமையை உங்களுக்கு உணர வைத்தார். அவ்வளவுதான்''

''உன் இளவரசரை நன்றாகத்தான் தாங்கிப் பிடிக்கிறாய். அவருக்கு உன்னைப்போல ஒருவன் தேவைதான்''

''அவரது தோழர்கள் எழுநூறு பேரும் என்னைப் போன்றவர்கள்தான் அசுவநாவிகரே. அவரைத் தாங்கிப் பிடிப்பதும் அவரைக் காப்பதும்தான் எங்கள் குறிக்கோள். அவரது உயிரைக் காக்கச் சபதமெடுத்தவர்கள் நாங்கள். எது வந்தாலும் அவருக்காக உயிரைக் கொடுக்கத்தான் நாங்கள் முன்

வருவோமே தவிர உங்களைப் போலத் துரோகம் செய்ய கனவிலும் நினைக்கமாட்டோம். எங்களைவிட அதிகமாக கடல் பயணங்களை மேற்கொண்டிருக்கும் நீங்கள் கடல் விதிகளையும் கப்பல் விதிகளையும் அறியாதவர் போல் பேசுவது விந்தையாக இருக்கிறது. நீங்களோ கோழையைப் போல இங்கே ஒளிந்து கொண்டு தீவுக்குள் போனவர்கள் செத்துப் போவதை வேடிக்கை பார்க்கப் போவதாகச் சொல்கிறீர்கள். இளவரசரோ தன்னோடு இருக்கும் தோழர்களையும் மற்றவர்களையும் எப்படிக் காப்பாற்றுவது என்று தான் எண்ணிக் கொண்டிருப்பார். உங்களுக்குத் தெரியுமோ தெரியாதோ? இளவரசரையும் மற்ற நம் நண்பர்களையும் வரும் பௌர்ணமியன்று பலி கொடுக்கப் போகிறார்கள். தீவின் தலைவன் அறிவித்து விட்டான்''

''பிறகு எப்படி அவரால் நம்மவர்களைக் காப்பாற்ற முடியும்?''

''உங்களுக்கும் அவருக்கும் வித்தியாசமே இல்லை என்று கருதி விட்டீர்களா? சாவை எண்ணி நடுங்கியபடி நீங்கள் இங்கே ஒளிந்து கொண்டிருக்கிறீர்கள். அவரோ சாவை மாலையாக்கி கழுத்தில் போட்டுக் கொண்டு நிற்கிறார்? அவரைச் சாவு அணுகும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? அனைவரையும் சாகவிட்டு உங்களைப்போல் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருப்பார் என்று எண்ணுகிறீர்களா?''

உதயணனின் பேச்சைக் கேட்டு சற்றே அசந்துபோன அசுவநாவிகர் மௌனமாக இருந்தார்.

''விஜயன் கர்ம வீரர் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். பெரிய லட்சியத்திற்காகப் பயணப்படும் கர்ம வீரர்கள் உங்களைப் போன்ற தடைகளால் அதிர்ந்து விடுவதில்லை. எதிர்பாராத சோதனைகளால் சோர்ந்து போவதும் இல்லை. உங்களுக்குத் தெரியாத விஷயமல்ல. கொலையாளியை கண்டுபிடிக்கும் முயற்சியில் சந்தேகத்திற்கு உரியவராக அமைந்த தன் மனைவியை துப்பறிந்தார். கொலையாளிக்கு அவர் உடந்தை என்பதை ஆதாரப் பூர்வமாக அறிந்த போது மனைவி என்றும் பாராமல் பட்டினி போட்டார். உங்களுக்குக் கொடுத்த நீரைக்கூட அவருக்குக் கொடுக்கவில்லை. அதனால்

மனைவி இறக்க நேரிட்டது. இளவரசர் அதனால் கலங்கவில்லை. உடலை கடலில் எறியச் சொல்லிவிட்டு பணியைத் தொடர்ந்தார். அந்த மன உறுதி உங்களுக்கு வருமா?'' என்று கேட்டான் உதயணன்.

அசுவநாவிகர் சற்றே தயங்கியவராக ''நான் இங்கே இருப்பது அவருக்குத் தெரியுமா?'' என்று கேட்டார்.

''தெரிந்திருந்தால் சந்தோஷப்பட்டிருப்பார்''

''ஏன்?''

''நீங்கள் மட்டுமாவது சாகாமல் தப்புகிறீர்கள் அல்லவா? அதனால் தான்''

உதயணன் பேசிய பேச்சுக்கள் ஏதோ பேசவேண்டும் என்பதற்காகப் பேசப்பட்டவைகளாக அல்லாமல் உண்மைகளை எடுத்துரைக்கும் உரைகளாக அமைந்ததால் தன்மீதான தவற்றை உணர்ந்த அசுவநாவிகர் விஜயனின் மனத்தையும் மாண்பையும் உணர்ந்தார். விஜயன் தன் மனைவியின் உடலை கடலில் எரிந்ததை கடைசி நேரத்தில் அவர் கண்டிருந்தாராதலால் அவனிடம் பாரபட்சமில்லை என்பதை உணர்ந்துகொண்டு உதயணனிடம் அதைக் கூறவும் செய்தார்.

பிறகு ''நீங்கள் எதற்காக இங்கு வந்தீர்கள்?'' என்று கேட்டான்.

விஷயத்தைச் சொன்னான் உதயணன்.

''உங்கள் திட்டம் சரியானது. படகும் உணவும் இல்லாமல் கடலில் அலையமுடியாது. ஆமாம், நீங்கள் இங்கு வந்ததை தீவுவாசிகள் யாராவது பார்த்தார்களா?'' என்று கேட்டார்.,

''பார்த்திருக்க முடியாது'' என்றான் உதயணன்.

அசுவநாவிகர் அவர்களுக்குத் தீவின் நடுவே இருந்த மலை உச்சியையும் அங்கே தெரிந்த ஒரு தீபத்தையும் சுட்டிக் காட்டி ''கவனித்தீர்களா? மலை உச்சியில் தீபம் ஏன் எரியவேண்டும்?'' என்று கேட்டார்.

''கடலில் வருபவர்களுக்கு தீவை அடையாளம் காட்டுவதற்காக இருக்கலாம்''

''இத்தீவு என்ன பெரிய வணிகத்தலமா? காட்டு மிராண்டிகளும் நரமாமிசம் உண்பவர்களும் உள்ள இத்தீவுக் காரர்கள் எதற்காக இங்கே வருபவர்களுக்கு அடையாளம் காட்ட வேண்டும்? இதென்ன கலங்கரை விளக்கமா வழிகாட்ட?''

''பிறகு என்ன காரணம்?''

''மலை உச்சியில் தீவுவாசிகள் இருக்கிறார்கள். அவர்கள் தான் தீப அடையாளம் காட்டுகிறார்கள்''

''யாருக்கு?''

''கடற்கரையில் இருக்கும் தீவுவாசிகளுக்கு''

''எதற்கு?''

''நீங்கள் இங்கே வந்ததை அவர்கள் பார்த்திருக்க வேண்டும்? கடற்கரையில் உள்ளவர்களுக்கு எச்சரிக்கை விட்டிருக்க வேண்டும்''

''நாங்கள் இங்கே இரவில்தானே வந்தோம்?''

''பகலில் எங்கே இருந்தீர்கள்?''

''தீவுன் மேற்கு பக்கத்தில் நடந்து வந்தோம்''

''மலை உச்சியிலிருந்து தீவின் மேற்குப் புற பகுதியை பார்க்க முடியும் என்று நினைக்கிறேன். தீவின் கிழக்குப் புறம் தான் புதர்களும் பாறைகளுமாக இருக்கின்றன. மேற்குப் புறம் அவ்வளவாக இல்லை. ஓரளவிற்குத் திறந்த வெளியாக இருக்கிறது. அங்கே நீங்கள் நால்வரும் நடந்ததை அவர்கள் பார்த்திருக்கலாம். அதை கடற்கரையில் உள்ள தீவுவாசிகளுக்கு சிவப்பு கொடிகளை நட்டு உணர்த்தியிருப்பார்கள். கடற்கரையில் எதிர்நடவடிக்கை எதுவும் காணப்படாததால் இரவில் பந்தத்தை ஏற்றியிருக்கிறார்கள்''

''அப்படியானால் தீவுவாசிகள் இங்கே வருவார்களா?''

''இதுவரை யாரும் வராததைப் பார்த்தால் கடற்கரைப் பகுதியில் யாரும் இல்லை என்று தெரிகிறது. தீவின் உட்

பகுதியிலிருந்து மலை உச்சியை பார்க்க முடியாது என்று தோன்றுகிறது. எதற்கும் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். விளக்கு எதுவும் கொளுத்த வேண்டாம்'' என்று கூறிய அசுவநாவிகர் அவர் உட்பட ஐந்து பேர்களுக்கும் தேவையான உணவுப் பொருட்களையும் ஆடைகளையும் தனித்தனி மூட்டையாகக் கட்டி ஒவ்வொருவரது முதுகிலும் வைத்துப் பிணைத்தார்.

தானும் உடன் வருவதாக அவர் சொன்னபோது உதயணனும் தோழர்களும் மகிழ்ச்சியோடு வரவேற்றார்கள். ஐவரும் கப்பலிலிருந்து நூலேணியை இறக்கி கடல்பகுதிக்கு வந்தார்கள். கடற்கரைப் பகுதி வரை நீந்தி அங்கிருந்த படகுகளில் ஒன்றை அவிழ்த்துக்கொண்டு அதில் ஏறினார்கள். அவர்களது உடைகள் நனைந்திருந்ததால் கடலில் வீசிய குளிர் காற்று அவர்களது உடல்களை நடுங்கச் செய்தது.

அதைப் பொருட்படுத்தாமல் துடுப்பு போட்டு படகை நகர்த்தி தீவின் கிழக்குப் புறத்தை அடைந்து அங்கிருந்து நேர்தெற்கில் படகை இயக்கினார்கள்.

''உங்களுக்கு இங்குள்ள தீவுகளைப் பற்றித் தெரியுமா?'' என்று கேட்டான் உதயணன் அசுவநாவிகரிடம்.

''இத்தீவுகளுக்கு யாருமே துணிந்து வருவதில்லை. வணிகக் கப்பல்களில் பயணம் செய்த நான் இத்தீவுகளைப்பற்றி பலர் பலவிதமாகச் சொல்வதைக் கேள்விப்பட்டிருக்கிறேன். நாகர்மலைத் தீவில் மனித இறைச்சியை உண்ணும் பழங்குடிகள் உள்ளதாகக் கேள்விப்பட்டிருந்தேன். ஆனால் அவர்கள் தங்கள் தீவுப்பக்கம் கப்பல்களை மடக்கி அதில் உள்ளவர்களை பலியிடுவார்கள் என்ற அளவிற்கு கேள்விப்பட்டதில்லை. இப்போதுதான் தெரிகிறது. அது போலத்தான் மற்ற தீவுகளும் இருக்கும். கேள்விப்பட்டது ஒன்றாகவும் நேரில் காணும்போது வேறு ஒன்றாகவும் இருக்கும்'' என்றார் அசுவநாவிகர்.

கடலில் கணிசமான தூரம் வரை பயணப்பட்ட அவர்களுக்கு குறுக்கிட்டது ஒரு தீவு.

''இங்கே போகலாமா?'' என்று கேட்டான் உதயணன்.

அச்சமயத்தில் பொழுது விடிந்திருந்தது.

''படகை தீவைச்சுற்றி வலம் வரச்செய்வோம். அதற்குப் பிறகு உள்ளே செல்வதைப் பற்றித் தீர்மானிப்போம்'' என்றார் அசுவநாவிகர்.

படகும் அவர் கூறியபடியே தீவை வலம் வந்தது.

''இத்தீவில் இறங்குவதால் பயனில்லை. அடுத்த தீவுக்குப் போவோம்'' என்றார் அசுவநாவிகர்.

அடுத்தத்தீவு சற்று பெரியதாக இருந்தது. அடர்ந்தக் காடுகள் நிறைந்திருந்தன. தீவுக்குள்ளேயிருந்து புகையெழுவதைச் சுட்டிக் காட்டிய அசுவநாவிகர் ''புகை எழுகிறது. அங்கே யாராவது இருக்க வேண்டும்'' என்று கூறிவிட்டு படகைத் தீவை நோக்கிச் செலுத்தும் படிச் சொன்னார்.

''தீவில் கரை எதுவும் தெரியவில்லை. கடலுக்குள் முளைத்து எழுந்த புதர்போல இருந்தது தீவு. அதன் ஒரு பகுதியை நெருங்கியதும் படகை மரம் ஒன்றோடு பிணைக்கும்படி கூறிய அசுவநாவிகர் ''எல்லோரும் நீரில் குதித்து நீந்துங்கள். மணல் எதுவும் தென்படாததால் நீர் ஆழமாக இருக்கும். தீவுக்குள் கூட சிறிது தூரத்திற்கு நீந்தும்படி இருக்கலாம். ஜாக்கிரதையாக இருங்கள். தீவை அடைந்து காலைக் கடன்களை முடித்துக் கொண்டு உணவருந்தியபின் உள் பகுதிக்குப் போய் பார்க்கலாம்'' என்றார்.

அனைத்தும் அவ்வாறே நடந்தது. தீவின் மேட்டுப் பகுதிவரை நீந்தி தரையில் கால் பதித்த அவர்கள் உணவை முடித்துக் கொண்டு சிறிது நேரம் கழித்துப் புறப்பட்டார்கள். நடக்கும் வழி எதுவும் தென்படாததால் அங்கே மனிதர்கள் வந்து நெடுநாட்கள் ஆகியிருக்க வேண்டும் என்று தோன்றியது.

அப்போது தோழர்களில் ஒருவன் எதையோ பார்த்துவிட்டு அலறி விழுந்தான். மயக்கமும் அடைந்தான்.

◈◈◈

## அத்தியாயம் நாற்பது

# ரகசியத்தீவு

மயங்கி விழுந்த தோழன் மணிவர்மாவைத் தெளியவைத்து மற்றவர்கள் வினவியபோது அவனுக்கு வார்த்தைகள் வரவில்லை உடனடியாக. முகத்தில் உண்டாகியிருந்த மிரட்சி மறையாமலேயே இருந்தது.

''சொல் மணிவர்மா - சொல். எதைக் கண்டு அப்படி அலறினாய்?'' என்று மீண்டும் வினவினான் உதயணன்.

''அது... ஒரு... பயங்கர உருவம். மிருகமா வேறு ஏதாவதோ என்று புரியவில்லை... நான் இதுவரைக் கண்டதில்லை'' என்று மிரட்சியோடு சொன்னான் மணிவர்மா.

''அது எப்படி இருந்தது?'' என்று கேட்டான் உதயணன்.

''சிங்கம்... சிங்கம்தான்... ஆனால்...''

''என்ன ஆனால்?''

''கண்கள் வைரம் போல மின்னியது. ஆனால்...''

''ஆனாலென்ன?''

''அது சிங்கமல்ல...''

''என்ன குழப்புகிறாய் மணிவர்மா?''

''இல்லை. நான் குழப்பவில்லை. சிங்கத்தை நான் பார்த்திருக்கிறேன். சிங்கத்திற்கு எங்காவது தும்பிக்கை உண்டா?''

''மணிவர்மா! பயத்தில் நீ குழம்பியிருக்கிறாய். சிங்கம் என்கிறாய். இல்லை. என்கிறாய். தும்பிக்கை என்கிறாய். ஒன்றும் சரியாக இல்லையே? ஒரு வேளை நீ பார்த்தது யானையாக இருக்குமா?''

''அவ்வளவு பெரியதாக இல்லை''

''யானைக் குட்டியோ?''

''இல்லை உதயணா? யானைக் குட்டியைப் பார்த்து யாராவது அலறுவார்களா?''

''மணிவர்மாவின் விளக்கத்தில் உதயணனுக்கு எதுவும் பிடிபடவில்லை.

''உங்களுக்கு ஏதாவது பிடிபடுகிறதா அசுவநாவிகரே?''

''இங்குள்ள ஏதோ ஒரு தீவில் அதிசயமிருகங்கள் வாழ்வதாகக் கேள்விப்பட்டதுண்டு. ஆதிகாலத்தில் வாழ்ந்த பல அரிய விலங்குகளும் புராண காலத்து உயிரினங்களும் அத்தீவில் இருப்பதாக கடலோடிகள் சொல்லியிருக்கிறார்கள். அந்த வகையில் ஏதாவது ஒன்றை மணிவர்மா பார்த்திருக்கலாம்''

''அப்படியானால் நீங்கள் கேள்விப்பட்ட தீவு இதுதானா?''

''அப்படித்தான் தோன்றுகிறது''

''அப்படிப்பட்ட தீவில் நாம் ஏன் இருக்க வேண்டும்? பாரடைஸ் இந்தத் தீவுக்கு வரவாய்ப்பில்லை அல்லவா?''

''உண்மைதான் உதயணா. ஆனால் புகை மண்டலத்தைப் பார்த்ததால் இங்கே வினோதமான பிராணிகள் மட்டுமின்றி மனிதர்களும் இருக்கிறார்கள் என்று தோன்றுகிறது''

''இருந்தால் என்ன? அவர்களை நாம் ஏன் இந்த பயங்கரமானச் சூழ்நிலையில் போய் பார்க்க வேண்டும்?''

உதயணன் இவ்வாறு கேட்கும்போதே தீவே அலறுவது போன்ற பேரொலி ஒன்று கேட்டது.

''இது என்னவாக இருக்கும்?'' என்று கேட்டான் உதயணன்.

''பெரியதோர் விலங்கின் கூச்சலாக இருக்கலாம்'' என்றார் அசுவநாவிகர்.

''இல்லை. இல்லை. இது விலங்கின் குரலாகவே தெரியவில்லை. ஏதோ அரக்கன் கர்ஜித்தது போல் இருந்தது.

இங்கே அரக்கர்கள் இருந்தாலும் இருக்கலாம். நமக்கேன் வம்பு? வாருங்கள் போய்விடுவோம்'' என்றான் மணிவர்மா.

அதுவரை தீவைவிட்டுப் போய்விடலாம் என்ற எண்ணத்தில் இருந்த உதயணனுக்கு மணிவர்மாவின் பேச்சைக் கேட்டபின் அந்த எண்ணம் மறைந்தது.

''அசுவநாவிகரே, இந்தத் தீவில் ஏதோ மர்மங்கள் இருப்பது உறுதி. இவ்வளவு தூரம் வந்துவிட்டபின் அவற்றை அறியாமல் போவது சரியல்ல'' என்றான்.

''இங்கே இருக்கும் மனிதர்களைச் சந்தித்தால் ஏதாவது வழியோ விவரமோ கிடைக்கலாம். ஆகவே உள்ளே சென்று பார்ப்பது தான் நல்லது'' என்றார் அசுவநாவிகர்.

''ஐயா, நீங்களும் இந்த நால்வரும் முன்னே செல்லுங்கள். நான் சற்று பின் தங்கி வருகிறேன். அது ஒரு வகையில் நல்லது'' என்றான் உதயணன்.

அதற்கு எல்லோரும் ஒப்புக்கொண்டு கிளம்பினார்கள்.

புகை எழுந்த இடத்தை காட்டுக்குள்ளிருந்து கண்டுபிடிக்க விஜயனின் தோழர்களுக்குச் சிரமமாக இருந்தது. இருந்தாலும் தீவின் மைய்ப் பகுதியை கணக்கிட்டுக் கொண்டு நடந்தார்கள். வழியெல்லாம் அக்கம் பக்கத்திலிருந்து அவர்கள் கேட்டறியாத குரல்கள் பல கேட்டபடி இருந்தன. மணிவர்மா ஏற்கனவே அடையாளம் சொல்லமுடியாத வினோத மிருகத்தினைக் கண்டிருந்ததாலும் அத்தீவு வினோத மிருகங்கள் குடியிருக்கும் இடம் என்று தோழர்களுக்கு அசுவநாவிகர் கூறியிருந்ததாலும் ஏதேதோ மிருகங்கள் தங்களைத் தொடர்ந்து வருவது போன்ற பிரமையே ஏற்பட்டது.

ஓரிடத்தில் மரக்கிளையில் ராட்சதப் பறவையொன்று அமர்ந்துகொண்டு அவர்களைப் பார்த்து இறக்கைகளை விரித்தது. அப்படி விரித்ததால் மரத்தின் கிளைகள் சில முறிந்து விழுந்ததைக் கண்ட அவர்கள் அப்பறவையின் பலத்தை உணர்ந்து கொண்டு புதர்களில் சிறிதுநேரம் மறைந்து கொண்டார்கள். மீண்டும் கிளைகள் முறியும் ஓசை கேட்டது. பிறகு சிறிதுநேரம் வரை ஒரு சத்தமும் வராததால் தோழர்கள்

புதர்களிலிருந்து எழுந்தார்கள். அவர்கள் கண்ட ராட்சதப் பறவை அந்த மரத்தின் கீழே புதர்களில் செத்துக் கிடந்தது. அதைப்பற்றி ஆராய ஒருவரும் விரும்பவில்லை. மாறாக அது செத்து விட்டதில் மகிழ்ச்சியுற்றவர்களாய் தொடர்ந்து நடந்தார்கள்.

நிச்சயமில்லாத சூழ்நிலையில் அச்சத்துடன் நடந்த அவர்கள் மேலும் அரை நாழிகை வரை நடந்தபோது புகை வாசனையை நுகர்ந்தார்கள். ஏதோ ஒரு வழியாக மனிதர்கள் இருக்கும் இடத்திற்கு வந்துவிட்டோம் என்ற திருப்தியுடன் வாசனை வந்த இடம் நோக்கிச் சென்றார்கள். அதுவரை புதராகவே மண்டிக் கிடந்த அந்தப் பகுதியில் புல்தரை காணப்பட்டது. அதில் ஆனந்தத்தோடு நடந்த அவர்களைச் சிறியதொரு தடாகம் வரவேற்றது. தடாக நீரைக் கண்டதும் அமுதமே கிடைத்தது போல மகிழ்ந்து அவர்கள் நீரை மாந்தி மாந்திக் குடித்தார்கள். குடித்துவிட்டு நிமிர்ந்தபோது தான் புல்தரையின் ஒரு மூலையில் பாறைகள் சேர்ந்து கிடந்த ஒரு பீடத்தின் மீது ஒரு முனிவர் அமர்ந்திருப்பது தெரிந்தது. வினோதமான அந்தப் பகுதியில் அம்முனிவர் அவர்களுக்குக் கடவுளாகவே தெரிந்தார். முனிவரிடம் அசைவு எதுவும் தெரியவில்லை. நீண்டநாள் தவத்தில் இருப்பவரைப் போலத் தோன்றினார் அவர். அவரை அவர்கள் அணுக முற்பட்டபோது திடீரென காதைப் பிளக்கும் குரல்கள் எழுந்து அவர்களைப் பீதியடைய வைத்தன. அதையடுத்து மணிவர்மா கண்டு கலங்கிய வினோதமான விலங்குகள் இரண்டு பாய்ந்து வந்து ஒன்றோடு ஒன்று பயங்கரமாக மோதின.

''இதுதான். இதுதான் நான் பார்த்த பிராணி'' என்று நடுங்கும் குரலில் சொன்னான் மணிவர்மா.

அந்த விலங்கை அசுவநாவிகர் உட்பட மற்றவர்களும் கண்டதில்லை. சிங்கம் அளவிற்கான உடலமைப்பு கொண்டிருந்த அவை தும்பிக்கையொன்றையும் கொண்டிருந்தன. முகத்தில் இருந்த கண்கள் நன்றாக பிதுங்கி வெளியே வந்திருந்ததால் பயங்கரமாக இருந்தது. வாயில் இருந்த கோரைப் பற்களும் பெரிதாக வெளியே தெரியும்படி இருந்தது. விபரீத கோலமும் வினோதமான குரலும் கொண்ட அவை

மோதிக் கொண்டதுகூட அசாதாரணமாக இருந்தது. தும்பிக்கைகளால் முறுக்கிக் கொண்டும், புரண்டும், கோரைப் பற்களால் கடித்தும் அவை சண்டை போட்டவிதம் எங்கேயும் கண்டறியாத மெய்ச்சிலிர்க்கும் சண்டையாக இருந்தது. திடீரென சண்டையை நிறுத்திய அவை அசுவநாவிகரையும் மற்ற மூவரையும் கண்டன. சிங்கத்தைப் போலவே பாய்ந்து இரண்டிரண்டு பேர்களாக தும்பிக்கையால் பற்றி வீசியெறிந்தன. ஐந்து பேர்களது உடலும் முனிவர் இருந்த பாறையின் பக்கமாக குப்பைகளைப் போல் எறியப்பட்டன. அந்த உடலைக் கண்ட அந்த இரண்டு மிருகங்களும் என்ன காரணத்தாலோ உடல்களை நோக்கி முன்னேறாமல் இருந்த இடத்திலேயே நின்றபடி இயலாமையை வெளிப்படுத்துவதுபோல் உறுமிக் கொண்டு நின்றன. கீழே விழுந்த நால்வரும் மெதுவாக எழுந்து அந்த மிருகங்களை பார்த்தார்கள். ஏன் அவை தங்களை நெருங்கித் தாக்கவில்லை என்பதற்கான காரணம் அவர்களுக்குப் புரியவில்லை. இதற்கிடையில் அந்த மிருகங்கள் மீண்டும் இரைச்சலிட்டபடி சண்டையில் ஈடுபட்டன. நான்கு பேர்களுக்கும் உடல் முழுதும் வலித்தது. சில நிமிடங்களிலேயே நினைவையும் இழந்தார்கள்.

இதே சமயத்தில் அவர்களோடு வராமல் பின்தங்கிய உதயணன் இப்புல்வெளி பக்கம் வராமல் புதர்கள் பக்கமாகவே வந்து முனிவரது பாறைக்குப் பின்புறமாக வந்து இந்த மிருகங்கள் சண்டையிடுவதையும் தனது தோழர்கள் நினைவின்றி கிடப்பதையும் கண்டு திகைத்தான். என்ன செய்வதென்றே அவனுக்கு விளங்கவில்லை. சில நிமிடங்களில் சண்டையிட்டுக் கொண்டிருந்த விலங்குகள் காட்டுப் பகுதியை நோக்கி ஓடின.

சிறிதுநேரம் இருப்பிடத்திலேயே இருந்த உதயணன் தன் தோழர்களை நோக்கி அடியெடுத்து வைக்க முற்பட்டபோது "நில். மேலும் ஓர் அடியெடுத்து வைத்தாலும் நீ சாவாய்" என்ற ஒரு குரல் குறுக்கிட்டது.

உதயணன் பின்வாங்கி நின்று சுற்றும் முற்றும் பார்த்தான். யாரையும் காணவில்லை. பாறையின் பின்புறம் சுமார் பத்தடி

தள்ளிய நிலையில் அவன் இருந்தானாதலால் முனிவரை அவனால் காணமுடியவில்லை. எனவே பின்புறமாகவே நடந்து புல்வெளியின் முன் பக்கம் வந்தான் அவன். அப்போது தான் பாறையின் மீது முனிவர் இருப்பது தெரிந்தது. ஆனால் அவரது அசையாத தோற்றத்தைக் கண்ட அவன் குரல் கொடுத்தது அவராக இருக்க முடியாது என்று நினைத்தான்.

இருந்தாலும் ''முனிவரே! முனிவரே'' என்று குரல் கொடுத்தான்.

''சொல்'' என்று எதிரேயிருந்து குரல் வந்ததே தவிர முனிவரிடமிருந்து வந்ததாகத் தெரியவில்லை.

எனவே ''பேசுவது யார் என்றே தெரியவில்லையே! யார் பேசுவது என்று காட்டக் கூடாதா?'' என்று கேட்டான்.

''நீ யார் என்பதைச் சொல்.'' என்றது குரல்.

''என் பெயர் உதயணன். பரத கண்டத்தில் உள்ள வங்க தேசத்திலிருந்து வருகிறேன்'' என்றான் உதயணன்.

''சிறுவனே! இது ரகசிய தீவு. இங்கே மனிதர்கள் அறியாது - அறியக் கூடாத தேவரகசியங்கள் இருக்கின்றன. மனிதர்கள் இங்கே வருவதற்கு அனுமதியில்லை. நீ மட்டும் எப்படி வந்தாய்?'' என்றது குரல்.

''எனக்குத் தெரியாது முனிவரே. தெரிந்தால் நான் வந்திருக்க மாட்டேன்'' என்றான் உதயணன்.

''விதி இருப்பது தெரியாது என்று கூறும் குற்றவாளிகளை உங்கள் நாட்டில் விடுதலை செய்து விடுவார்களா?''- கேட்டது குரல்.

''முனிவரே,'' என்று மீண்டும் உதயணன் ஆரம்பித்ததும் ''நான் முனிவனல்ல. அப்படி என்னை அழைக்காதே'' என்றது குரல்.

''வேறு எப்படி அழைப்பது?''

''யட்க்ஷன் என்று அழைத்துக்கொள்''

''யட்க்ஷரே! நாங்கள் நடுக்கடலில் ஏமாற்றப்பட்டோம். எங்களை ஏமாற்றியவர்கள் கப்பலை திசைமாற்றி நாகர்மலைத் தீவில் விட்டுவிட்டு கர்ணபங்க பத்திரத்தை களவாடிக் கொண்டு தப்பி விட்டார்கள். அவர்களைத் தேடி தீவுதீவாக அலையும் படி ஆகிவிட்டது. இந்தத் தீவுகள் பற்றி எங்களுக்குத் தெரியாது. கடலிலிருந்து பார்த்தபோது தீவுக்குள்ளேயிருந்து புகை மண்டலம் எழுவதைக் கண்டோம். மனிதர்கள் இருப்பார்கள் என்று கருதி விசாரிக்கலாம் என்ற ஆவலில் வந்தோம். எங்களிடம் எந்த கெட்ட எண்ணமும் இல்லை''

''எது எப்படியானாலும் இத் தீவுக்கு வந்த மனிதர்கள் உயிரோடு திரும்பியதில்லை''

''யட்சரான நீங்கள் எங்கள் மீது கருணை காட்டக் கூடாதா?''

''சிறுவனே, பத்தடிகள் முன்பாக வா'' என்றது குரல்.

உதயணனும் அவ்வாறே செய்தான். திடீரென விநோதமான மிருகம் ஒன்று அங்கே துள்ளிக்கொண்டு வந்து நின்றது. பிரம்மாண்டமான உடலும் நீண்ட கழுத்தும் உருண்டையான முகமும் கொண்ட அந்த விநோதமிருகம் உதயணனை நோக்கி கழுத்தை நீட்டியதே தவிர ஒரு அடிகூட நகரவில்லை. தான் மட்டும் பழைய இடத்திலேயே நின்றிருந்தால் அந்த அதிசய மிருகத்திற்கு இரையாகியிருப்போம் என்பதை உணர்ந்த போது உதயணனின் உடல் நடுங்கியது. நல்லவேளையாக யட்சி தேவதை தன்னைக் காப்பாற்றியதை அறிந்த அவன் ''மிக்க நன்றி யட்சரே, சரியான நேரத்தில் என்னைக் காப்பாற்றினீர்கள்'' என்று சொல்லிவிட்டு ''அந்த மிருகம் ஏன் அதே இடத்தில் இருக்கிறது? ஏன் முன்னேறவில்லை?'' என்று கேட்டான்.

''என் அலைகள் வியாபித்திருக்கும் இடத்திற்கு என் அனுமதியின்றி யாரும் வரமுடியாது. அதனால் தான் அந்த மிருகம் அலை பிரதேசத்தில் பிரவேசிக்க முடியாமல் திணறிக் கொண்டு நிற்கிறது''

''என் நண்பர் எப்படி வந்தார்கள்?''

''வந்திருந்தால் அந்த கணத்திலேயே பஸ்மமாகி யிருப்பார்கள்''

''பின் எப்படி வந்தார்கள்?''

''அவர்களாக வரவில்லை. யாளிகள் அவர்களைத் தூக்கி இங்கே வீசிவிட்டன''

''யாளிகளா?''

''ஆமாம் சிங்கவடிவமும் தும்பிக்கையும் கொண்ட துஷ்ட மிருகம். மகா விஷ்ணுவின் வாகனங்களில் அவையும் ஒன்று''

அருவம் இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும்போது அங்கிருந்த வினோதமான - பிரம்மாண்டமான மிருகம் காட்டை நோக்கி ஓடிவிட்டது.

''மிருகம் ஓடிவிட்டதே?'' என்றான் உதயணன்.

''வேறென்ன செய்யமுடியும்? இங்கே வந்த மனிதர்களை இந்த மாதிரியான மிருகங்கள் எலும்பைக்கூட விட்டு வைக்காமல் பட்க்ஷணம் செய்து விடுவதால் அவர்கள் தடயமின்றி மறைந்து விடுவார்கள். எனவே இத்தீவைப் பற்றி வெளியே சொல்வதற்கு யாரும் மிஞ்சுவதில்லை. ஆனால் நீங்கள் தீவுக்குள் வந்து இன்னமும் உயிரோடு இருக்கிறீர்கள்''

''அப்படியானால் என் நண்பர்கள் உயிரோடு தான் இருக்கிறார்களா?''

''உறுதியாகச் சொல்லமுடியாது''

''ஐயோ, இதென்ன இப்படிச் சொல்கிறீர்கள். என் நண்பர்கள் இல்லாமல் நான் திரும்ப முடியாது''

''அவர்களுக்காக உன் உயிரை நீ தரமுடியுமா?''

''தருகிறேன். எடுத்துக் கொள்ளுங்கள்''

''அந்த நால்வர் உடலையும் வரிசையாகக் கிடத்து''

அவ்வாறே செய்தான் உதயணன்.

சிறிது நேரம் வரை குரல் வரவில்லை.

''யட்சரே, எங்கே இருக்கிறீர்கள்?'' என்று கேட்டான் உதயணன்.

''பேசாமலிரு. உடல்களை பரிசோதித்துக் கொண்டிருக்கிறேன்'' என்றது குரல்.

''பரிசோதிக்கிறீர்களா? யாரையும் காணோமே?'' என்ற உதயணன் ''நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்?'' என்று கேட்டான்.

''அதோ அந்த முனிவர் உடலில் நாற்பது நாட்களுக்கு முன் வரை இருந்தேன். நான் இறந்து நாற்பது நாட்கள் ஆகின்றன'' என்றது குரல்.

நடுநடுங்கினான் உதயணன்.

◈◈◈

## அத்தியாயம் நாற்பத்தொன்று

# உருவமும் அருவமும்

தன்னிடம் அதுவரை உருவம் இல்லாமல் பேசிக் கொண்டிருந்த நபர் முனிவரது உடலில் நாற்பது நாட்களுக்கு முன் வரை இருந்ததாகவும் செத்துப்போய் நாற்பது நாட்கள் ஆகியிருப்பதாகவும் கூறியதால் தான் பேசிக் கொண்டிருப்பது பேயோடு இருக்குமோ என்று குழம்பிய உதயணன் அச்சத்தால் நடுநடுங்கினான். நண்பர்களில் நிலைமை வேறு நிச்சயமற்ற நிலையில் இருந்ததால் தீவுக்குள் பிரவேசிக்கதான் எடுத்த முடிவு தவறோ என்ற எண்ணமும் அவனுக்கு ஏற்பட்டது.

இதற்கிடையில் அருவமானது ''என்ன சிறுவனே, என்ன ஆயிற்று? பயந்து விட்டாயா? நான் பேயுமல்ல. பிசாசுமல்ல. ஆத்மா'' என்றது.

உதயணன் இருந்த மனநிலையில் அவனுக்கு எதுவும் விளங்கவில்லை.

அருவம் சிரித்தது.

''சிறுவனே, முனிவராய் ஐம்பது வருடகாலம் வாழ்ந்த நான் நாற்பது நாட்களுக்கு முன் இறந்துவிட்டேன். என்

உடலைவிட்டு விட்டு அடுத்தப் பிறவியை எடுப்பதற்காக அருவமாகக் காத்திருக்கிறேன். முனிவனாக இருந்தபோது நான் உண்டாக்கிக் கொண்ட தவ வலிமை தான் என் விருப்பப்படி நான் இருப்பதற்கான சக்தியைத் தந்திருக்கிறது. எனது ஆத்ம அலைகளால் தான் உயிரற்றுப் போன எனது உடல் அழியாமலும் நாற்றமெடுக்காமலும் இருக்கிறது. நீ ஒரு காரியம் செய்வாயா?''

முழுமையான தெளிவை அடையாவிட்டாலும் ஓரளவிற்கு குழப்பம் நீங்கிய உதயணன் ''சொல்லுங்கள்'' என்றான்.

''முனிவர் உடலுக்குக் காரியம் செய்துவிடு'' என்றது அருவம்.

''என்ன செய்யவேண்டும்?''

''உடலை எடுத்து கீழே கிடத்து. அதன் மேலே சருகுகளைப் போடு. அங்கே புகை வந்து கொண்டிருக்கும் இடத்தில் நெருப்பு இருக்கிறது. அதைக் கொண்டு வந்து சருகுகளின் மீது தூவி விடு'' என்றது அருவம்.

''ஐயா, தங்கள் ஆத்ம சக்தியால் இந்த உடலை எரிக்க முடியாதா?'' என்று கேட்டான் உதயணன்.

''சிறுவனே, அடுத்தப் பிறவிக்கான உடலை அடைவதற்காக உருவமற்றவனாக இருக்கும் நான் இக்காரியத்தைச் செய்யக் கூடாது. மனித உடலுக்கு மனிதன்தான் காரியம் செய்யவேண்டும். சீக்கிரமாகச் செய். அப்படியே ஒரு பந்தத்தை நெருப்பிலிருந்து தயார் செய்துகொள். இரவு நேரம் நெருங்குகிறது''

''பந்தத்திற்கான துணி?''

''முனிவரின் ஆடையை எடுத்து மரத்துண்டில் சுற்றிக் கொள். நெருப்பில் காட்டு. பந்தமாக மாறும்''

''உதயணன் மேற்கொண்டு எதுவும் பேசவில்லை. அருவம் செய்யச் சொன்ன காரியங்களைச் செய்து முடித்தான். முனிவரின் உடல் எரிந்து சாம்பலாகிக் கொண்டிருந்தது. அவரது ஆடைகளால் உருவாக்கிய பந்தத்தை தரையில் செருகினான் உதயணன்.

எல்லாவற்றையும் பார்த்த அருவம் ''மிகவும் மகிழ்ச்சி சிறுவனே. உன் பெயர் என்ன சொன்னாய்?'' என்று கேட்டது.

''உதயணன்'' என்று சொன்ன உதயணன் ''ஐயா, என் நண்பர்களின் நிலை என்ன?'' என்று கேட்டான்.

''அவர்களைத் தாக்கிய மிருகங்கள் சாதாரண ரகத்தைச் சேர்ந்தவையல்ல. தெய்வீக மிருகங்கள். அவை தீண்டினால் மானிடர்கள் பிழைப்பது அரிது. ஏறக்குறைய உன் நண்பர்கள் இறந்தது போலத்தான்''

''ஐயா, நீங்களே இப்படிச் சொன்னால் எப்படி?'' என்று முறையிட்டான் உதயணன்.

''என் ஆத்ம பலத்தால் ஏதாவது முடிகிறதா என்று பார்க்கிறேன். ஆனால் நிச்சயமாக எதுவும் சொல்ல முடியாது. அதற்கு முன் நீ எனக்கு சத்தியமொன்று செய்ய வேண்டும்''

''என்ன சத்தியம்?''

''நான் ஏற்கனவே இந்தத் தீவைப்பற்றிச் சொல்லியிருக்கிறேன். இத்தீவு தேவ ரகசியங்கள் அடங்கிய தீவு. இங்கே கண்டதையும் கேள்விப்பட்டதையும் வெளியில் சொல்ல மாட்டேன் என்று சத்தியம் செய்''

''ஐயா, இங்கே இருக்கும் ரகசியங்களை வெளியே சொல்லிவிட்டால் யாரும் இங்கே வராமல் ஒதுங்கி விடுவார்கள் இல்லையா?''

''முட்டாள். மனிதன் லேசுப்பட்டவன் இல்லை. இல்லை என்றாலும் ஆராய்வான். இருக்கிறது என்றாலும் ஆராய்வான். பகுத்தறிவு பெரும்பாலான மனிதர்களுக்கு ஆணவத்தையே தந்திருக்கிறது. அடங்கு என்றால் அடங்க மாட்டான். வேண்டாம் என்றால் வேண்டுமென்பான். அவனை நம்பி ரகசியங்களை வெளியிடுவது தீமையே தரும்.''

''வெளியிட்டால் என்ன ஆகும்?''

''உனக்கு கேடு வந்து சேரும்'' என்று கூறிய அருவம் ''இதுவரை பணிவாக இருந்த நீயே இப்போது ஆணவத்தில்

கேள்விகளைக் கேட்கிறாய். மூச்சுவிட கொஞ்சம் சந்தர்ப்பம் கிடைத்து விட்டால் போதும். ஆணவம் தலைகாட்டிவிடும். உன் நண்பர்களை நான் காப்பாற்றிவிடுவேன் என்ற அசட்டு தைரியம் உனக்கு வந்துவிட்டது'' என்றது.

''அப்படியெல்லாம் இல்லை ஐயா மனதில் தோன்றியதைக் கேட்டேன். தவறாக எண்ணாதீர்கள். இத்தீவு பற்றி எதுவும் சொல்லமாட்டேன். இது சத்தியம். என் நண்பர்களைக் காப்பாற்றுங்கள்''

அருவம் மேற்கொண்டு எதுவும் பேசவில்லை. .இரவு முழுவதும் அந்த நிலை நீடித்தது. அபூர்வமான தீவாக விவரிக்கப்பட்ட அத்தீவில் தன் நண்பர்கள் ஏறக்குறைய சவங்களாக இருந்த நிலையிலும் கண்ணுக்குத் தெரியாமலிருந்த அருவம் எதுவும் பேசாத நிலையிலும் தனியாக இரவு நேரத்தைக் கழிப்பது பெரும் சித்திரவதையாக இருந்தது உதயணனுக்கு. அதேசமயம் தனக்கு அபூர்வ விலங்குகளால் எந்த ஆபத்தும் நிகழாததையும் அதற்குக் காரணம் அந்த அருவத்தின் சக்தியே என்பதையும் உணர்ந்த அவன் ஓரளவிற்கு திருப்தியோடு இருந்தான். தன்னோடு கொண்டு வந்திருந்த உணவைச் சாப்பிட்டு விட்டு இரவு முழுவதும் உறக்கமின்றி விழித்திருந்தான்.

மறுநாள் அவனிடம் அருவம் பேசியது.

''உதயணா, நீயும் உன் நண்பர்களும் யாரைத் தேடி வந்தீர்கள்?''

''மரக்கலத்தலைவனான பாரடைஸ் ஒருவன். மற்றொருவன் ஒரு கொலையாளி. யார் என்பது தெரியவில்லை.

''அவர்கள் உங்கள் மரக்கலத்திலிருந்து கர்ண பத்ர பங்கத்தோடு தப்பிவிட்டார்களா?''

''ஆமாம்''

''எதில் தப்பினார்கள்?''

''படகில் தான் தப்பியிருக்க வேண்டும்''

''தப்பிய அவர்கள் இந்தத் தீவுகள் பக்கம் தான் வந்திருக்க முடியும் என்று எப்படி சொல்கிறாய்?''

''நாகர்மலைத் தீவுகளுக்கு அருகில் பெரிய நாடோ நிலப்பரப்போ இல்லை. அதோடு தப்பியவர்களிடம் இருப்பது படகு. அதை வைத்துக்கொண்டு நீண்டதூரம் பயணம் செய்ய முடியாது. இங்குள்ளத் தீவுகள் ஏதேனும் ஒன்றில் பதுங்கி திட்டமிட வேண்டும்''

''எல்லாமே ஊகத்தின் அடிப்படையில் பேசுகிறாய். இவை பொய்யாகிவிட்டால் என்ன செய்வாய்?''

''இப்போது எதையும் சொல்ல முடியாது ஐயா''

அருவம் சிறிதுநேரம் மௌனமாக இருந்துவிட்டு பிறகு கூறியது.

''உதயணா, உன் கைவசம் உள்ள உணவை உண்டு விடு.''

சற்று தயங்கிய உதயணன் பிறகு எதையோ நினைத்துக் கொண்டவனாய் உணவை எடுத்து உண்டான்.

அதையடுத்து அருவம் கூறிய விஷயம் உதயணனை வியப்படைய வைத்தது.

ஏதோ கேட்க முற்பட்டபோது ''முதலில் நான் சொன்னதைச் செய்'' என்றது அருவம்.

உதயணன் தடாகத்தின் அருகே சென்று அங்கே இருந்த நீலநிற மூலிகைச் செடிகளிலிருந்து இலைகளைப் பறித்து தடாகத்தின் கரையிலேயே வைத்து அரைத்து நெல்லிக்காய் அளவிற்கான உருண்டையை தயார் செய்துகொண்டு வந்தான்.

''அதை அப்படியே விழுங்கிவிடு'' என்றது உருவம்.

உதயணன் அதை விழுங்கியதும் ''படுத்துக்கொள். உறக்கம் தானாக வரும்'' என்றது உருவம்.

தூங்கி எழுந்த உதயணன் அலறினான் கண் தெரியாமல் போனதால்.

''ஐயா, இதென்ன என் கண்களுக்கு பார்வையில்லையே? யாரையும் பார்க்க முடியவில்லையே! மூலிகை உருண்டையைச்

சாப்பிடச் சொன்னீர்களே - இதற்காகத்தானா?'' என்று மிரண்டுபோய் கேட்கவும் செய்தான்.

அருவம் சிரித்தது.

''நணபர்களுக்காக உயிரையே தருவதாக சொன்ன நீ கண்பார்வை இழந்ததற்கே அலறினால் எப்படி?'' என்று கேட்டது.

''அப்படியானால் கண்பார்வை போனது போனது தானா?'' என்று கேட்டான் உதயணன்.

''மனிதனுக்கு புலன்கள் லேசில் அடங்குவதில்லை. அதனால் உண்டாகும் சேதாரங்கள் அதிகம். உன் கண் பார்வையை தற்காலிகமாகத்தான் கட்டியிருக்கிறேன்''

''நான் உணவைச் சேகரிப்பது எப்படி? இருந்ததையெல்லாம் உண்ண வைத்து விட்டீர்களே?''

''நண்பர்களுக்காகப் பட்டினி கிடக்கக் கூடாதா?''

''எத்தனை நாட்கள் பட்டினி கிடப்பது?''

''சாகும் வரை இரு''

''ஐயா...''

''கவலைப்படாதே. நீ உண்ட மூலிகையின் பெயர் பின்னமூலம். இதைச் சாப்பிட்டால் நாற்பது நாட்களுக்கு பசியிருக்காது. ஆத்மசாதகர்கள் சாதகம் செய்யும்போது பசித் தொல்லையிலிருந்து விடுபட இதை உண்பார்கள்''

தனக்குப் பார்வை கிடைப்பதும் தன் நண்பர்களின் உடல் நிலை சரியாவதும் அந்த அருவத்தின் வசம் தான் இருக்கிறது என்பதை உணர்ந்த உதயணன் மேற்கொண்டு எதுவும் பேச முற்படாமல் அமைதியானான். கண் பார்வையற்ற நிலை இரண்டு நாட்களுக்கு இருக்கலாம் என்பது அவனது ஊகமாக இருந்தது. ஆனால் அவனது ஊகம் பொய்த்தது. மூன்றாவது நாள் நான்காவது நாள் என்று நீடித்தது. பசித்தொல்லை இல்லை யென்றாலும் கண்பார்வையற்ற நிலையில் ஒரே இடத்தில் ஒரு வேலையும் இன்றி இருப்பது சித்திரவதையாக இருந்தது. அதோடு உருவமும் அவனிடம் பேசவில்லை. அவ்வப்போது

ஏதேதோ மிருகங்களின் வினோத சப்தங்கள் கேட்டபடி இருந்தன. சரியாகப் பதிமூன்று நாட்களுக்கு இந்த நிலை நீடித்ததால் பைத்தியம் பிடிக்கும் நிலைமைக்கு வந்து விட்டான் உதயணன். நல்ல வேளையாக பதினான்காவது நாள் உதயணனுக்குக் கண்பார்வை கிடைத்தது. நண்பர்கள் நால்வரும் பூரண குணமாகி எழுந்தார்கள். உதயணனுக்கு மறு ஜன்மமே எடுத்தது போல இருந்தது.

அச்சமயத்தில் பேசமுற்பட்ட அருவம் ''ஒன்றை இழந்தால் தான் மற்றொன்று கிடைக்கும். கண் பார்வையின்றி நீ இத்தனை நாட்களாகச் சித்திரவதைபட்டதால்தான் உன் நண்பர்கள் குணமானார்கள்'' என்று கூறிவிட்டு ''உதயணா, பசியை பொறுக்க நீ உண்ட மூலிகையை உன் நண்பர்களுக்கும் கொடு'' என்றது.

உதயணனும் பின்ன மூலம் என்ற மூலிகையை எடுத்து அரைத்து நண்பர்கள் நால்வருக்கும் கொடுத்தான்.

''நீங்கள் இனி இங்கே இருக்க வேண்டாம். நீங்கள் தேடும் மனிதர்கள் இங்கில்லை. இத்தீவுக்குத் தெற்கே நான்காவதாக இருக்கும் மலர்த்தீவுக்குச் செல்லுங்கள். அங்கே மனிதர்கள் சிலர் இருக்கிறார்கள். அங்கே தேடிப்பாருங்கள்'' என்று சொன்ன அருவம் ''உதயணா, நான் ஆரம்பத்தில் கூறியதை மறந்து விடாதே. இத்தீவில் கண்டது கேட்டது எல்லாவற்றையும் இங்கேயே மறந்துவிடு'' என்றது.

உருவத்திற்கு நன்றி தெரிவித்துவிட்டு தீவின் முகப்பிற்கு வந்த ஐவரும் அங்கே பிணைக்கப்பட்டிருந்த படகை அவிழ்த்துக் கொண்டு பயணப்பட்டார்கள். அங்கேயிருந்து மலர்த்தீவுக்குப் போவதற்குள் இரவு நேரம் ஆகிவிட்டது. காரிருளில் படகை செலுத்திய அவர்களுக்கு மலர் தீவிலிருந்து எழுந்த மலர் மணம் அடையாளம் காட்டியது. தீவின் முகப்பில் சற்று மணல் பரப்பு இருந்ததால் படகை நிறுத்தி கரைக்கு இழுத்துவிட்டு அனைவரும் மணல் பரப்பிலேயே அமர்ந்தார்கள். தீவுக்குள் போகலாமா வேண்டாமா என்று அவர்கள் யோசித்துக் கொண்டிருக்கும் போது தீவுக்குள்ளிருந்து யாரோ வருவது போல் இருக்கவே அதைக் கவனித்தார்கள்.

அவர்கள் கவனித்த திசையில் இரண்டு மனிதர்கள் பேசியபடி வந்து கொண்டிருப்பது தெரியவந்தது. தேய்பிறை காலமாக இருந்ததால் கடற்கரை வெளிச்சமற்று இருந்தது. உள்ளேயிருந்து வந்தவர்களை அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை என்றாலும் அவர்கள் நாகர்மலைத் தீவில் இருந்தவர்களைப் போன்ற காட்டு மிராண்டிகள் அல்ல என்பது தெரிந்தது. அவர்கள் இருவரும் ஆடைகளை அணிந்திருந் தார்கள். கடற்கரைக்கு வந்த அவ்விருவரும் உதயணனையும் அவன் நணபர்களையும் கவனித்தாலும் அவர்களைப் பொருட்படுத்தாமல் ஓரிடத்தில் நின்று வாக்குவாதத்தில் ஈடுபட்டார்கள். அவர்கள் பேசிய மொழி புதியதாக இருந்ததால் உதயணன் குழுவினருக்கு எதுவும் புரியவில்லை. சிறிது நேரத்தில் ஏதோ ஒரு சமரசத்திற்கு வந்தவர்களாய் வாக்கு வாதத்தை முடித்துக்கொண்டு தீவுக்குள் புறப்பட்டுச் சென்றார்கள்.

அவர்களது நடவடிக்கைகளைப் பார்த்துக் கொண்டிருந்த உதயணன் அவர்களைப் பின்பற்றித் தீவுக்குள் செல்ல முற்பட்டான். மற்றவர்களும் அதை ஆமோதித்தார்கள். உடனே அனைவரும் எழுந்து தீவுக்குள் நடக்கலானார்கள். தீவுக்குள்ளே ஒரு சில இடங்களில் பந்தங்கள் எரிந்து கொண்டிருப்பது தெரிந்தது. அந்த பங்தங்களை நோக்கி அவர்கள் சென்றார்கள். தங்களுக்கு முன்னால் புறப்பட்ட இருவர் எங்கே சென்றார்கள் என்பது தெரியாத நிலையில் பந்தங்கள் எரிந்த இடங்களில் போய் பார்த்தார்கள். அங்கே குடில்கள் காணப்பட்டதேயன்றி மனிதர்கள் யாரும் காணப்படவில்லை.

‘குடிசைகள் ஏன் காலியாக இருக்கின்றன? இங்கே இருந்தவர்கள் என்ன ஆனார்கள்?'' என்று தனக்குத்தானே கேட்டுக் கொண்டான் உதயணன். அப்போது அருகாமை யிலிருந்து காட்டுநரி யொன்று அழுவது போல ஊளையிட்டது. அதையடுத்து மனிதன் ஒருவனின் அலறல் சத்தம் கேட்கவே உதயணனும் மற்றவர்களும் திகைத்தார்கள். உதயணன் சிறிதும் தாமதிக்காமல் அங்கிருந்த பந்தத்தைப் பிடுங்கிக் கொண்டு அலறல் சத்தம் எழுந்த திசையை நோக்கி ஓடினான்.

மற்றவர்களும் ஓடினார்கள். அருகில் ஓர் பாழடைந்த கட்டிடம் இருந்ததைக் கண்ட அவர்கள் அதற்குள் சென்று பார்த்தார்கள். அங்கே ரத்த வெள்ளத்தில் கிடந்தான் ஒருவன்.

அவன்-

மரக்கலத் தலைவன் பாரடைஸ்.

◈◈◈

## அத்தியாயம் நாற்பத்து இரண்டு

# வெறியும் வஞ்சமும்

ரத்த வெள்ளத்தில் கிடந்த பாரடைஸைக் கண்டதும் உதயணனும் மற்றவர்களும் மகிழ்ச்சியே அடைந்தார்கள். எதற்காகப் புறப்பட்டார்களோ அந்த இலக்கினை மறுபிறவி எடுத்து அடைந்துவிட்ட மாதிரிஎண்ணிக் கொண்டார்கள். ரத்த வெள்ளத்தில் கிடந்த பாரடைஸின் மார்பில் குறுவாள் ஒன்று ஆழப் பதிந்திருந்தது. அக்காயத்திலிருந்து வழிந்தோடிய ரத்தம் பச்சை ரத்தமாக இருந்ததால் சிலநிமிடங்களுக்கு முன்புதான் அவன் குத்தப்பட்டிருக்க வேண்டும் என்பதை உணர்ந்து கொண்ட உதயணன் பாரடைஸை சற்றே தூக்கிப் பிடித்தபோது அவனது கண்கள் லேசாகத் திறந்தன ''பாரடைஸ்! பாரடைஸ் என்னைப்பார். நான் தான் உதயணன். பேசு பாரடைஸ். உன்னைக் குத்தியவர்கள் யார்?'' என்று கேட்டான் உதயணன்.

பாரடைஸின் கண்கள் லேசாக விரிந்து சுழன்றன. பந்த ஒளியில் உதயணனையும் அசுவநாவிகரையும் அடையாளம் கண்டு கொண்ட அவன் ''இளவரசர் விஜயன் எங்கே?'' என்று கேட்டான்.

''நீ எங்கு கொண்டுபோய் சேர்த்தாயோ அங்கே போய் விட்டார். என்ன ஆனார் என்பது தெரியாது'' என்றான் உதயணன் அவன் மீது குற்றம் சாட்டுவது போல்.

''நான் பெரும் தவறு செய்துவிட்டேன் உதயணா. பெரும் தவறு செய்துவிட்டேன். நல்லவர்களை ஒதுக்கிவிட்டுத்

தீயவர்களோடு கூட்டு வைத்துக் கொண்டதற்கான பலனை இப்போது அடைந்துவிட்டேன்'' என்றான் பாரடைஸ்.

அவன் பேச்சைக் கேட்டு யாரும் அனுதாபம் கொள்ளவில்லை.

''என்ன நடந்தது பாரடைஸ்? இளவரசருக்கு ஏன் துரோகம் செய்தாய்? உன் கூட்டாளி எங்கே?'' என்று கேட்டான் உதயணன்.

''உதயணா, இளவரசர் கொடுத்த ஒரு நகைப் பெட்டியுடன் திருப்தியடைந்து தீவிலேயே இறங்கியிருந்தால் இன்னேரம் வங்க நாட்டிற்கே திரும்பியிருப்பேன். ஆனால் எனக்கு விரித்த பேராசையில் விழுந்த நான் இன்று இந்த நிலையில் கிடக்கிறேன்'' என்றான் பாரடைஸ்.

''உனக்குப் பேராசை வலையை விரித்தவன் யார்?''

''மோனோகாலனையும் அசுவத்தாமரையும் கொன்ற அதே பாதகன்தான் எனக்கு ஆசை காட்டினான். கர்ணபத்ர பங்கப் பெட்டிகள் எல்லாவற்றையும் கவர யோசனை கூறினான். உங்களையெல்லாம் திசை மாற்றிக் கொண்டுபோய் மனிதர்களைத் தின்னும் காட்டுமிராண்டிகள் வாழும் நாகர்மலைத் தீவில் விட்டுவிட யோசனை சொன்னவனும் அவன்தான். அத்தீவில் விட்டு விட்டால் தீவுவாசிகள் உங்களையெல்லாம் தின்று விடுவார்கள் என்றும் நானும் அவனும் தீவுக்கப்பலில் இருக்கும் நகைப் பெட்டிகளோடு படகில் தப்பி மலர்த்தீவுக்கு வந்து விட்டால் இங்கே இருக்கும் சில வணிகத் தரகர்கள் மூலம் சாவகத் தீவிற்குச் சென்று நகைகளை விற்று சரி பாதி பிரித்துக் கொள்ளலாம் என்றான். பேராசையில் நானும் ஒப்புக்கொண்டு அவன் திட்டமிட்டபடி நகைப் பெட்டிகளுடன் இங்கு வந்து சேர்ந்தோம். இங்கே இருந்தத் தரகர்கள் அவனுக்கு உதவவோ ஒத்துழைக்கவோ தயாராக இல்லை. இத்தனை நாட்களும் பலரோடு பேச்சு வார்த்தை நடத்தினான். இன்றுதான் பிரச்சினை தீர்ந்தது போலிருக்கிறது. இன்று காலை என்னிடம் வந்து ''இரண்டு தரகர்கள் ஒப்புக்கொண்டு விட்டார்கள் பாரடைஸ். நகைப் பெட்டிகளுடன் படகில் சென்று தீவுக் கப்பலுடன் வந்த வங்க

தேசத்துக் கப்பலைப் பிடித்து அதன் மூலம் சாவகம் சென்று விடலாம். அங்கே தரகர்கள் நகைகளை விற்றுத் தருவார்கள். தயாராக இருங்கள்'' என்று கூறிவிட்டுச் சென்ற அவன் சற்று முன் இங்கே வந்து சிறிதும் எதிர்பாராத விதத்தில் என்னைக் குத்தித் தள்ளிவிட்டு தரகர்களுடன் போய்விட்டான்'' என்று கூறி முடித்தான் பாரடைஸ்.

''யாரந்தக் கொலையாளி?'' கேட்டான் உதயணன்.

சொன்னான் பாரடைஸ்.

அதிர்ச்சி அடைந்தான் உதயணன். பாரடைஸ் கூறிய கொலையாளியை உதயணனுக்கும் தோழர்களுக்கும் தெரிந்தாலும் அசுவநாவிகருக்குத் தெரியாததால் ''யாரவன்? எந்த நாட்டைச் சேர்ந்தவன்?'' என்று ஆவலோடு உதயணனிடம் கேட்டார். அவனும் கொலையாளி யார் என்பதைக் கூறியபோது அவருக்கும் ஆச்சரியமாகத்தான் இருந்தது.

இதற்கிடையில் பேசமுற்பட்ட பாரடைஸ் ''இளவரசரிடம் நான் மன்னிப்பு கேட்டதாகச் சொல் உதயணா. அந்தக் கொலைகாரப் பாதகனை எப்படியாவது தேடி தண்டிக்கச் சொல். இப்போதே நீங்கள் புறப்பட்டால் அவனைப் பிடிக்கலாம். தாமதிக்காமல் செல்லுங்கள்'' என்றான்.

பாரடைஸ் மரணத்தை நெருங்கிக் கொண்டிருந்தான். அவனைக் காப்பாற்ற முடியும் என்று உதயணனுக்கு நம்பிக்கையில்லை. எனவே அவனை அப்படியே விட்டுவிட்டு சகாக்களுடன் புறப்பட்டு கடற்கரைக்கு வந்து தாமதம் செய்யாமல் படகில் புறப்படவும் செய்தான். அப்போது அசுவநாவிகர் கேட்டார்.

''உதயணா, நாகர்மலைத் தீவுகளை விட்டு வந்து பதினைந்து நாட்களுக்கு மேலாகி விட்டன. இளவரசரும் தோழர்களும் இப்போது உயிரோடு இருப்பார்களா?''

''தீவுவாசிகளின் கணக்குப்படி பௌர்ணமி அன்று நம்மவர்களை பலியிடப் போவதாகக் கூறப்பட்டது எனக்குத் தெரியும். பௌர்ணமி வந்து பத்து நாட்களுக்கு மேலாகி

விட்டன. எனக்கென்னவோ நம்மவர்கள் உயிரோடு இருப்பார்கள் என்று தான் தோன்றுகிறது'' என்றான் உதயணன்.

''எப்படிச் சொல்கிறாய்?''

''என் உள்ளுணர்வு சொல்கிறது. அதுதான் எனக்குத் தெரியும். அதோடு வங்க நாட்டிலேயே வங்க மன்னரின் கண்களில் விரலைவிட்டு ஆட்டியவர் நம் இளவரசர். இத்தீவுவாசிகளிடம் அவ்வளவு சுலபமாக ஏமாற மாட்டார்''

உதயணன் கூறியதைக் கேட்ட அசுவநாவிகருக்கோ நம்பிக்கை வரவில்லை. ''சிகபாகுவைச் சமாளிப்பது வேறு. அநாகரீகமும் முரட்டுத்தனமும் மூடநம்பிக்கையும் கொண்ட தீவுவாசிகளை சமாளிப்பது வேறு'' என்று நினைத்தார் அவர். அதோடு தீவு வாசிகளைச் சமாளிக்கவோ அவர்களை வெற்றி கொள்ளவோ போதுமான அவகாசம் இல்லை என்றும் அவர் எண்ணினார். நாகர்மலைத் தீவை நெருங்கியபோது தீவுக் கப்பல் சாய்ந்து கிடந்ததைக் கண்டபோது தனது எண்ணம் சரியானது என்றே அவருக்குத் தோன்றியது. தீவை நெருங்கியபோது கப்பலைப் பழுதுபார்க்கும் ஆட்கள் அங்கிருந்து விலகி ஓய்வெடுக்கப் போய்விட்டார்களாதலால் கப்பல் அனாதையாக இருந்தது. அதைச்சுட்டிக்காட்டிய அசுவநாவிகர் ''கப்பலின் நிலையைப் பார்த்தாயா உதயணா? தீவுவாசிகள் நம்மவர்களை பலியிட்டுவிட்டு கப்பலையும் கவிழ்த்து விட்டிருக்கிறார்கள்?'' என்றார். உதயணன் அதேசமயம் கடற்கரை பகுதியில் பல கூடாரங்கள் இருந்ததையும் அவற்றின் அருகே பந்தங்கள் எரிந்து கொண்டிருந்ததையும் கண்டான். அவனுக்கு இன்னமும் விஜயனும் தோழர்களும் பத்திரமாக இருப்பதாகவே தோன்றியது. படகை கடற்கரையில் நிறுத்திவிட்டு உள்ளே சென்றான்.

★★★

உதயணன் கூறிய செய்திகளையெல்லாம் கேட்டான் விஜயன். ரகசியத்தீவில் நடந்தவற்றையும் பார்த்தவற்றையும் தன் சத்தியத்தை மீறி உதயணன் கூறியிருந்தாலும் அவையெல்லாம் கூட விஜயனை வியக்கச் செய்யவில்லை.

வங்கதேசத்தின் படைத்தலைவனான ராகுலன் தான் கொலையாளி என்பதை அறிந்தபோதுதான் பெருவியப்பு உண்டாயிற்று அவனிடம் எல்லோரையும் போய் ஓய்வெடுக்கச் சொல்லிவிட்டு தனிமையில் அமர்ந்து ராகுலனைப் பற்றி அசை போடத் தொடங்கினான்.

''ஆகா! ராகுலன் என் நண்பனல்லவா? என் முயற்சிகள் பலவற்றுக்கு உதவியவன் அல்லவா? என் திருமணத்திற்கு வந்திருந்து வாழ்த்தியவன் அல்லவா? அவன் உதவி மட்டும் இல்லாமல் போயிருந்தால் கர்ணபத்ர பங்கத்தைக் களவாடி யிருக்க முடியாதே! அப்படிப்பட்டவன் எப்படி இந்த அளவிற்குத் தீயவனானான்? வெறும் கொலைகாரனாக மட்டுமில்லாமல் மாற்றான் மனைவியிடம் உறவு கொள்ளும் அளவிற்குச் சண்டாளனாக அல்லவா தரமிழந்திருக்கிறான்? நம்ப முடியவில்லையே! இப்படியெல்லாம்கூட நடக்குமா? மாயாவுக்கும் சரி பாரடைஸுக்கும் சரி சபலமும் பேராசையும் இருந்ததைத் தெரிந்துகொண்டு எத்தனைத் தந்திரமாக அவர்களை ஏமாற்றியிருக்கிறான்? தீவுக்கப்பலில் இவன் இருந்து கொண்டு எத்தனைத் தீய செயல்களைச் செய்திருக்கிறான்? நான் எப்படி இவனை அடையாளம் காணாமல் போனேன்? இவன் இப்படியெல்லாம் செய்வான் என்று கனவிலும் எண்ணாததால்தான் அவன் இக்கப்பலில் இருப்பான் என்ற எண்ணமே எழவில்லை. அடப்பாதகா! எல்லாவற்றையும் மன்னித்து விடலாம். என் மனைவியிடம் கள்ளனாக நடந்து கொண்டாயே அதை எப்படி என்னால் மன்னிக்க முடியும்? உனக்குத்தான் அத்தகைய நெஞ்சுரம் எப்படி வந்தது? மாயா கற்பனை உலகை எண்ணி மயங்கியது அவளது பலவீனம்தான் என்றாலும் என் உற்ற நண்பனான நீ அவளுக்கு அறிவுரையல்லவா சொல்லியிருக்க வேண்டும்? அதை விட்டுவிட்டு அவளது பலவீனத்தை அதிகரித்து கீழ்த்தரமாக நடந்து கொண்டிருக்கிறாயே - நீ மனிதன் தானா? அவளைக் கெடுத்தாய். அப்பாவிகளைக் கொன்றாய். பாரடைஸை வலையில் சிக்க வைத்தாய். முடிவில் அவனோடு கர்ணபங்க பத்திரத்தோடு நழுவிவிட்டாய். எப்பேர்பட்ட கயவன் நீ? நம்பிக்கை துரோகத்தைவிட கொடியது வேறு இருக்க முடியுமா?''

இப்படி விஜயனின் எண்ணங்கள் அன்றிரவு முழுவதும் அவனை வியாபித்துக் கொண்டன.

இதே இரவில் டிமார்க்கோவும் லியானாவும் வேறு வேறு மனநிலையில் இருந்தார்கள். பாம்புத்தீவில் தன் வளர்ப்பு மகள் நந்தினியோடு விஜயனையும் ஒருசேர பார்த்துவிட்டு அவனை மிரட்டும் வகையில் பேச்சை ஆரம்பித்ததையும் முடிவில் விஜயன் தன்னை மிரட்டியதையும் எண்ணிப்பார்த்தாள் லியானா. காம மலையான அவள் விஜயனை நந்தினியிடம் தூது அனுப்பியபோது எதையும் அசாதாரணமாக எதிர்பார்க்க வில்லை. விஜயன் தனது பேச்சுத் திறமையால் நந்தினியைத் தன் திட்டத்தை ஒப்புக் கொள்ளும்படிச் செய்து விடுவான் என்று மட்டுமே எதிர்பார்த்திருந்தாள். ஆனால் நந்தினி சம்மதம் தெரிவித்த பிறகும் விஜயன் அவளைப்போய் சந்தித்து வருவதுபற்றி டிமார்க்கோ கடிந்துகொண்ட பிறகு தான் அவளுக்குள் லேசான சந்தேகம் உண்டாயிற்று. ஒருவேளை விஜயன் நந்தினிக்கு காதல் பாடம் சொல்லிக் கொடுக்கிறானோ என்று நினைத்தாள் லியானா. அந்தப் பாடத்தில் அவன் வெற்றி பெற்றுவிட்டால் நந்தினியை மணக்க முற்படுவான் என்பதும் அந்தச் செயல் அவன் தன்னை மணக்கும் செயலுக்கு தடையாக அமைந்துவிடும் என்பதும் அவளுக்குப் புரிந்தது. அது அவளுக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. நந்தினியை விஜயன் காதலிக்கிறானா என்பதை அறிந்து கொள்ள பாம்புத் தீவுக்குச் சென்றாள். அங்கே இருவரையும் பார்த்தபோது அவளது சந்தேகம் வலுப் பெற்று கோபத்தை உண்டாக்கியது. விஜயனை மிரட்டிப் பார்த்தாள். அவனோ அவளைவிட ஒருபடி மேலே சென்று தன்னை மிரட்டவோ அடிமையாகவோ எண்ண முற்பட்டால் அவளை மணக்க முடியாது என்றும் அவளது கொலைத் திட்டத்தைப்பற்றி தீவுவாசிகளிடம் சொல்லி அவளை அழித்து விடுவதாக மிரட்டினான். அவனது பேச்சு ஆபத்தான பாதையில் நுழைந்ததால் மேற்கொண்டு எதையும் பேசாமல் வெளியேறினாள். அவன் தன்னை மணக்காமல் போனால்கூட பரவாயில்லை என்று நினைத்த அவள் தன் திட்டம்பற்றி தீவுவாசிகளிடம் கூறிவிட்டால் தீவு மக்கள் தன்னைக் கொல்லாமல் விடமாட்டார்கள் என்றும் நினைத்தாள்.

விஜயனைப்பற்றி தீவுவாசிகளிடம் நல்லவிதமாகக் கூறி வந்தாள் லியானா. விஜயனும் தீவுக்கப்பலில் இருந்து கொண்டு வந்த ஆடைகளை தீவுவாசிகளுக்கு கொடுத்து அவர்களையெல்லாம் ஆடை தரிக்க வைத்ததோடு அவர்களது அன்புக்குப் பாத்திரமானான். இந்த நிலையில் அவனது பேச்சு எடுபடும் என்பதையும் தன்னைப் போட்டுக் கொடுத்தால் தீவுவாசிகள் அதை நம்புவார்கள் என்பதையும் முடிவில் தனது அழிவில் தான் அதுமுடியும் என்பதையும் உணர்ந்தாள். இந்த இக்கெட்டை எப்படி சீர்செய்யலாம் என்று இரவெல்லாம் யோசித்தாள்.

டிமார்க்கோவும் அதே இரவில் யோசனையில் ஆழ்ந்தான். விஜயனும் நந்தினியும் காதலிக்கக் கூடும் என்ற சந்தேகம் அவனுக்கும் எழவே செய்தது. ஆனால் லியானாவைப் போல் கவலைப்பட வேண்டிய அவசியம் அவனுக்கு வரவில்லை. மாறாக மகிழ்ச்சியே கொண்டான். நந்தினி விஜயனைக் காதலித்தாலும் காதலிக்காவிட்டாலும் விஜயன் சாகப் போவது உறுதி என்று நினைத்த காரணத்தால் அவன் கவலைப் படவில்லை. ஒருவேளை விஜயனை மணக்க விரும்பும் லியானா அவனைக் காப்பாற்றி விட்டால் அவன் நந்தினியோடு போய்விடுவான் என்றும் லியானா வேறுவழி இல்லாமல் தன்னிடம் தான் இருக்க வேண்டி வரும் என்றும் நினைத்து மகிழ்ச்சியாகவே இருந்தான்.

விடிவதற்கு இருநாழிகை இருக்கும்போது அவனைத்தேடி வந்த லியானா ''அன்பே, இந்த உடை எனக்கு அழகாக இருக்கிறதா?'' என்று கொஞ்சும் குரலில் கேட்டாள்.

அவளது குரலில் திடீரென அன்பு வாடை வீசுவதின் காரணம் தெரியாததால் சற்றே தடுமாறிய டிமார்க்கோ ''விஜயன் தந்த உடையல்லவா? நன்றாகத்தான் இருக்கும்'' என்றான் அவளைப் பல்லைப் பிடித்துப் பார்ப்பதுபோல்.

''அன்பே, உங்கள் பதில் என்னை வாட்டுகிறது'' என்றாள் வருத்தமான குரலில்.

டிமார்க்கோ அசராமல் ''உண்மையைத்தானே நான் சொன்னேன் லியானா? ஏன் வருத்தப்படுகிறாய்? நீ என்னைப்

புறக்கணித்து வருவதும் விஜயனை விரும்புவதும் உண்மைதானே? அப்படியிருக்கும்போது அவன் தந்த உடை உனக்குப் பிடிக்காமலா இருக்கும்?'' என்று கேட்டான்.

லியானா தான் அணிந்திருந்த உடைகளையெல்லாம் கழற்றி எறிந்துவிட்டு டிமார்க்கோவிடம் பாய்ந்து வந்து அவனைக் கட்டிப்பிடித்து உதடுகளைக் கடித்து உணர்வுகளைத் தூண்டினாள். அவளது திடீர் அணைப்பால் உடல் சூடேறிய நிலையில் டிமார்க்கோ பெரு வியப்படைந்தான். தான் பெரிதும் விரும்பும் லியானா இப்படித் திடீரென விஜயனின் ஆடைகளைக் கழற்றிப் போட்டுவிட்டு தன்னை வந்து முரட்டுத்தனமாக அணைத்தது அவனுக்குப் பெருமகிழ்ச்சியைத் தந்தது. அருமையான வாய்ப்பு தானாக வந்து சேர்ந்ததாகக் கருதிய அவன் அதை எந்த காரணத்தாலும் நழுவிப் போய்விட விரும்பாததால் அவளைப் புரட்டிப் போட்டான். அந்நிலையில் இருவருக்குமே காமக் கண்கள் திறந்து கொண்டதால் சொர்க்கத்திற்குச் செல்லும் கதவுகளைத் திறந்து கொண்டார்கள். வேறு வேறு காரணங்களால் இணைந்தாலும் அவர்களுக்கு உண்டான வெறி ஒரே மாதிரியாக இருந்ததால் காம அணைகளை உடைத்துக்கொண்டு சல்லாபித்தார்கள். ஒருவரையொருவர் வெற்றி கொள்ளவேண்டும் என்ற வேகம் இருவருக்குமே இருந்ததால் மிருகங்களே வெட்கப்படும் அளவிற்கு காமச் செயல்களில் ஈடுபட்டார்கள். விடிவதற்கு முன்னால் இருந்த அந்த இரண்டு நாழிகைப் பொழுதை துளியும் வீணாக்காமல் ஒருவரை ஒருவர் அள்ளியள்ளிப் பருகினார்கள். பொழுது விடிவதைக் கண்டபோது அவர்களுக்கு வெறுப்பாக இருந்தது. அவர்களது உல்லாசத்திற்கு பகல் இரவென்ற வித்தியாசம் கிடையாது என்றாலும் இரவு நேர உறவுகள் அதிகமாய் இனித்த காரணத்தால் விடிவை அவர்கள் விரும்பவில்லை.

ஒருவாறாகச் செயல்களை நிறுத்திக்கொண்டு ''இது என்ன புதுவேகம்? புது தாகம்? புது ராகம்?'' என்று கேட்டான் டிமார்க்கோ.

''ஏன் பிடிக்கவில்லையா?'' - கிறக்கத்துடன் கேட்டாள் லியானா.

''எனக்கு எப்போதும் பிடித்திருக்கிறது. உனக்குத்தான் அப்படியில்லை. விஜயனின் மீது புதுமோகம் உண்டாகி யிருக்கிறது''

''உண்டானது உண்மைதான். ஆனால்...''

''என்ன ஆனால்?''

''என் விருப்பத்தை அந்தத் துரோகி மதிக்கவில்லை''

''எப்படிச் சொல்கிறாய்?''

''அவன் நந்தினியைக் காதலிக்கிறான்''

''அந்தச் சந்தேகம் எனக்கு வந்ததால்தான் உன்னிடம் கேட்டேன். நீ கோபித்துக் கொண்டாய்''

''அது தவறு அன்பே. அவனைப் பழிவாங்க வேண்டும்?''

''அதற்குத்தான் நான் திட்டமிட்டேன். அவனும் ஒப்புக் கொண்டிருக்கிறானே?''

''என்ன திட்டம்?''

''பௌர்ணமியன்று என் வாளால் சாக ஒப்புக் கொண்டிருக்கிறான்''

''என்னிடம் என்ன ஒப்புக் கொண்டிருக்கிறான் தெரியுமா?''

''என்ன?''

''அதே பௌர்ணமியன்று என் வாளால் உங்களைச் சாகடிக்க ஒப்புக் கொண்டிருக்கிறான்''

''இருவரையுமே ஏமாற்ற நினைக்கிறான். துரோகி''

''துரோகியைப் பழிவாங்க வேண்டும்''

''நாமிருவர் சேர்ந்தால் அவன் பழிவாங்கப்படுவது நிச்சயம் தானே? இருவருமாக அவனை வெட்டுவோம்''

''தீவுவாசிகள் அவன் பக்கமாகச் சாய்ந்து வருகிறார்கள். ஆகவே அவனை வெட்டுவது கொஞ்சம் கஷ்டம். அவன் உயிரோடு இருக்கவேண்டும்''

''ஏன்?''

''அவனை மணந்து ராஜாவாக்க நினைத்தேன். அதற்கு அவன் தகுதியில்லாதவனாகி விட்டான்''

''அதனால்''

''அவனை உயிரோடு வைத்து என் அடிமையாக்குவேன். என் இஷ்டப்படி அவனைச் செயல்பட வைப்பேன்''

''எப்படி?''

''ஒரு திட்டம் இருக்கிறது''

''சொல்''

சொன்னாள் அவள்.

திகைத்தான் டிமார்க்கோ.

◈◈◈

## அத்தியாயம் நாற்பத்து மூன்று

# விஜயனின் பேச்சு

வியானாவும் டிமார்க்கோவும் விஜயனுக்கு ஒரு முடிவுகட்டிய அதே இரவில் அவ்விருவரையும் ஒழித்துக்கட்ட முடிவு செய்திருந்த விஜயன் பொழுது விடிந்ததும் தனஞ்செயன் உட்பட ஐந்து உபதலைவர்கள் அசுவநாவிகர், டெமிட்ரியஸ் மற்றும் உதயணன் ஆகிய எட்டு பேரையும் தன் கூடாரத்தில் கூட்டி அனைவரையும் தன் உபதலைவர்களாக நியமித்தான்.

பிறகு பேசமுற்பட்டு ''இப்போது நம்மவர்கள் மொத்தம் 821 பேர் இருக்கிறோம். இதில் நாம் ஒன்பது பேர் போக மீதி உள்ள 812 பேர்களில் எனது நண்பர்கள் 649 பேர். அடிமைகள் 149 பேர் பணியாளர்கள் 14 பேர். நானும் உபதலைவன் தனஞ்செயனும் கப்பலை இயக்கும் பொறுப்பை வகிப்போம். அடிமைகளும் பணியாளர்களுமாய் உள்ள 163 பேர்கள் உதயணனின் கட்டுப்பாட்டில் இருப்பார்கள். மீதமுள்ளது நான்கு உபதலைவர்கள், அசுவநாவிகர் மற்றும் டெமிட்ரியஸ். இந்த ஆறு உபதலைவர்களின் கட்டுப்பாட்டில் 649 நண்பர்கள்

இருப்பார்கள். உபதலைவன் விகர்ணன் கட்டுப்பாட்டில் 108 பேர் நரசிம்மன் கட்டுப்பாட்டில் 108 பேர், விதுரன் கட்டுப்பாட்டில் 108 பேர், பகிரதன் கட்டுப்பாட்டில் 108 பேர், அசுவநாவிகர் கட்டுப்பாட்டில் 108 பேர் மற்றும் டெமிட்ரியஸ் கட்டுப்பாட்டில் 109 பேர் இருப்பார்கள். யார் யார் கட்டுப்பாட்டில் எந்தெந்த நண்பர்கள் இருப்பார்கள் என்ற பெயர்களை பிறகு சொல்கிறேன். இது நமது முதல் ஏற்பாடு'' என்றான்.

இதைக்கேட்டு உதயணன் லேசாகச் சிரிக்கவே ''ஏன் சிரிக்கிறாய் உதயணா?'' என்று கேட்டான் விஜயன்.

''நாம் எல்லோரும் பலியாகப் போகும் நிலையில் நீங்கள் இந்த ஏற்பாடுகளைச் செய்தது எனக்குச் சிரிப்பைத் தந்துவிட்டது. இங்கிருந்து நாம் தப்பிய பிறகல்லவா இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்க வேண்டும்?'' என்று கேட்டான் உதயணன்.

''உண்மைதான். நாம் இங்கேயிருந்து பலியாகாமல் தப்புவதற்கு உங்களில் யாராவது திட்டம் தீட்டி வைத்திருக்கிறீர்களா?'' என்று கேட்டான் விஜயன் இயல்பான மற்றும் சுமூகமான குரலில்.

உபதலைவர்கள் எட்டு பேரும் மௌனமாக இருந்தார்கள்.

''உங்களைத்தான் நம்பியிருக்கிறோம்'' என்றான் தனஞ்ஜெயன்.

''உனக்கு ஏதாவது தோன்றுகிறதா உதயணா?'' என்று கேட்டான் விஜயன்.

''தீவுவாசிகளில் பெரும்பாலானவர்கள் தங்களை ஆதரிப்பதாகக் கேள்விப்பட்டேன். அவர்களை இத்தீவுத் தலைவனுக்கு எதிராகத் திருப்பினால் போதுமல்லவா?''

''இத்தீவுவாசிகளை தலைவனுக்கு எதிராகத் திருப்பலாம். டிமார்க்கோவுக்கு பதிலாக என்னைத் தலைவனாக ஏற்கவும் அவர்களைச் சம்மதிக்க வைக்கலாம். ஆனால் பலியிடும் செயலில் இருந்து அவர்களை மாற்றுவது லேசான காரியமல்ல. தலைவனை இழக்கவோ மாற்றவோ அவர்கள் தயார். ஆனால்

நரபலியை இழக்க அவர்கள் தயாராக இல்லை. மனித இறைச்சியை உண்டு நீண்ட காலம் ஆகிவிட்டதால் நம்மை பலியிட்டுச்சாப்பிட அவர்கள் ஆவலாக இருக்கிறார்கள். நானே தலைவனாக ஆனாலும் நான் ஒருவன் வேண்டுமானால் தப்ப முடியுமே தவிர அவர்களது ஆவலைத் தடுக்க என்னால் முடியாது''

''வேறு வழி?''

''என்னைவிட, இத்தீவின் தலைவனைவிட, அவனது மனைவி லியானாவைவிட அதிகமாக இத்தீவு வாசிகள் மதித்து வணங்கும் தேவதை ஒன்றிருக்கிறது. தங்கள் தலைவனாக யாரை வேண்டுமானாலும் ஏற்கும் தீவுவாசிகள் இந்த தேவதையைத் தவிர வேறு யாரையும் அந்தத் அந்தஸ்தில் அமர்த்த விரும்பமாட்டார்கள். அந்த தேவதையின் பெயர் நாக நந்தினி''

''யார்? அந்தப் பாம்புப் பெண்ணா?'' என்றான் தனஞ்ஜெயன்.

''ஆம். உன்னைக் காப்பாற்றிய அந்தப் பாம்புத்தீவில் வாழும் நாக நந்தினிதான் இத்தீவுவாசிகள் வணங்கும் தேவதை அதிஷ்டவசமாக அத்தேவதை என் பக்கமாக இருக்கிறது. அதன் மூலம் இந்த பலியை தடுத்துவிட முடியும் என்று நான் நம்புகிறேன். நான் பாம்புத் தீவுக்குச் சென்று அவளை இங்கே அழைத்து வரப்போகிறேன். பௌர்ணமிக்கு இன்னும் சரியாக பத்து நாட்கள் இருக்கின்றன. இன்னும் இரண்டொரு நாட்களில் தீவுக்கப்பலை பழுதுபார்க்கும் வேலையை முடித்து கப்பலை நிமிர்த்த வேண்டும். கடற்கரையில் உள்ள பொருட்கள் மட்டுமின்றி டிமார்க்கோ தயார் செய்யும் வேல்கள், ஈட்டிகள், வாட்கள் ஆகியவற்றையும் கப்பலில் சேர்க்க வேண்டும். பௌர்ணமியன்று நமது செயல்கள் யாவும் வெற்றி பெற்று கப்பல் புறப்பட வேண்டும்''

விஜயன் கூறியதை பிரமிப்புடன் பார்த்துக் கொண்டிருந் தார்கள் உபதலைவர்கள். விஜயன் கூறியபடி அனைத்துச் செயல்களும் வெற்றிகரமாக முடியும் என்ற நம்பிக்கை அவர்களுக்கு இல்லையென்றாலும் விஜயன் மீது மட்டும் பிரத்யேகமான நம்பிக்கை இருந்தது.

''கர்ணபத்ர பங்கப் பெட்டிகளோடு மலர்த் தீவிலிருந்து சென்றுவிட்ட ராகுலன் அநேகமாக நமது வங்கக் கப்பலைப் பிடித்திருப்பான். நகைகளை விற்க சாவகத்திற்கு புறப்பட்டிருப்பான். அவனை என்ன செய்யப் போகிறீர்கள்?'' என்று கேட்டான் உதயணன்.

''அதுபற்றி பௌர்ணமிக்குப் பிறகு பார்க்கலாம்'' என்றான் விஜயன்.

அத்துடன் பேச்சு நின்றது. விஜயன் மரக்கலத்தைப் பழுதுபார்க்கும் பகுதிக்குச் செல்லும் முன் ஒவ்வொரு உபதலைவனின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டியவர்களின் பெயர்களைச் சொல்லி அவர்களைக் குறித்துக் கொள்ளும்படிச் சொன்னான். மரக்கலத்தில் இருந்த எல்லோரது பெயரையும் அவர் கூறியதைக் கண்ட உபதலைவர்கள் அசந்து போனார்கள். அதுபற்றி அவனிடம் வினவியபோது ''எல்லாம் பெரியவர் அசுவத்தாமரிடம் கேட்டுத் தெரிந்து கொண்டதுதான். அசுவத்தாமரிடம் மரக்கலத்தில் இருப்போரின் எண்ணிக்கையை மட்டும் தான் தினமும் பதிய வைத்துக் கொள்ளும்படிச் சொன்னேன். அவரோ தனது சொந்த முயற்சியில் அனைவரைப் பற்றிய தகவல்களையும் சேகரித்து பதிய வைத்துக் கொண்டு என்னிடம் பட்டியலாக கொடுத்துவிட்டார். ஜாதகம் ஒன்றுதான் இல்லையே தவிர இந்த மரக்கலத்தைச் சேர்ந்தவர்கள் எந்தெந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் என்ற விவரங்களையெல்லாம் குறித்திருக்கிறார். அவை யாவும் எனக்குள் பதிவாகிவிட்டன. அந்த அடிப்படையில்தான் என் தோழர்களில் தமிழ்நாட்டைச் சேர்ந்த தொண்ணூற்று நான்கு பேர்களையும் உபதலைவன் நரசிம்மனின் கட்டுப்பாட்டில் மொத்தமாகச் சேர்ந்திருக்கிறேன். சந்தேகமிருந்தால் விசாரித்துப் பார்த்துக் கொள்ளுங்கள்'' என்று கூறிவிட்டு மரக்கலப் பகுதிக்குச் சென்றான் விஜயன்.

தீவுக்கப்பலின் இடதுபுற அடிப்பாகம் ஏற்கனவே சுத்தம் செய்யப்பட்டு தற்போது வலதுபுற அடிப்பாகம் சுத்தம் செய்யப்பட்டு வந்ததையும் அப்பணியும் முடியும் தருவாயில் இருந்ததையும் கண்ட விஜயன் தீவுவாசிகளையும் மற்றவர்களையும் கூடவே இருந்து ஊக்கப்படுத்தினான். பகல்

நேரத்தில் அவர்களோடு அமர்ந்து உணவுண்டான். உணவுக்குப் பிறகு வழக்கமாக ஓய்வெடுப்பதை விட்டுவிட்டு மரக்கலப் பகுதிக்குச் சென்றான். தனஞ்ஜெயனை கூடவே வைத்துக் கொண்டு மரக்கலத்தின் அடிப்பாகத்தில் இருந்த இரும்புச் சலாகைகளையும் முடிந்தவரை சரிபார்த்தான்.

இப்படி விஜயன் ஓய்வெடுக்காமல் பணியாளர்களின் கூடவே இருந்து வேலைகளைத் துரிதப்படுத்துவதை டிமார்க்கோ கவனிக்கவே செய்தான். ஒரு வகையில் அது விஜயன் கூறியதிட்டம் வெற்றி பெறுவதற்கு அத்தாட்சியாக விளங்கினாலும் ஏதோ இனம் புரியாத சந்தேகம் அவனுக்குள் எழவே செய்தது. லியானோ அவனைப் பற்றிக் கூறிய பின்பு இச்சந்தேகம் அவனிடம் வலுவடைந்தது. எனவே விஜயனின் வாயைக் கிளர முற்பட்டு ''என்ன விஜயரே, வேலைகள் ரொம்பவும் சுறுசுறுப்பாக நடைபெறுவது போலிருக்கிறதே?'' என்று கேட்டான்.

விஜயன் அசரவில்லை. ''விருப்பமில்லையென்றால் சொல். சுறுசுறுப்பைக் குறைத்து விடுகிறேன்'' என்றான்.

டிமார்க்கோவுக்கு உடனடியாக என்ன சொல்வது என்று விளங்கவில்லை.

சிறிது நேரத்திற்குப் பிறகு ''என் விருப்பம் என்ன இருக்கிறது? எல்லாம் உங்கள் திட்டம் தானே?'' என்றான்.

''என் திட்டம் தான். ஆனால் எனக்காக அல்ல. உனக்காக. உன் வளமான எதிர்காலத்திற்காக. அது மட்டுமல்ல''

''வேறென்ன?''

''பௌர்ணமிக்குப் பத்து நாட்கள்தான் இருக்கின்றன. அதற்குள் வேலைகள் முடிய வேண்டுமல்லவா? பணிகள் முடியவில்லையென்று பலியை இன்னொரு மாதம் தள்ளிப் போட முடியாதல்லவா?''

''விஜயன் உண்மையைச் சொல்கிறானா அல்லது தன் உத்தேசத்தைச் சொல்கிறானா என்பது டிமார்க்கோவிற்கு விளங்கவில்லை. புரியாமலேயே ''ஆமாமாம்'' - என்றான் ஏதோ குழப்பத்துடன்.

அன்றிரவு பணிகள் தொடர்ந்தன. தீபங்களை ஏற்றி வைத்துக் கொண்டு வேலைகளைச் செய்தார்கள் தீவுவாசிகள். நள்ளிரவுக்குச் சற்றுமுன் வேலைகளை நிறுத்திய விஜயன் அனைவரையும் ஓய்வெடுக்கச் சொன்னான். பலர் அலுப்பின் காரணமாக சுருண்டு படுத்தார்கள். பலர் கடற்கரையில் கும்பல் கும்பலாக அமர்ந்து ஏதேதோ பேசியும் விளையாடியும் பொழுதைக் கழித்தார்கள். டிமார்க்கோ கூடாரத்தில் தங்காமல் தன் இருப்பிடத்திற்குச் சென்று லியானாவைக் கட்டித் தழுவினான். அவனுக்காகக் காத்திருந்த அவளும் அவனது எழுச்சிகளுக்கு இரைபோட்டு விட்டு அவனோடு மலைபக்கமாக இருட்டிலேயே புறப்பட்டுச் சென்றாள்.

கடற்கரையில் இருந்த விஜயன் தீவுவாசிகளுடன் இருந்தபடி நந்தினியைப் பற்றி பேச்சு கொடுத்தான்.

''தீவின் தேவதையை நீங்களெல்லாம் பார்த்திருக்கிறீர்களா? எப்படி இருப்பாள் தேவதை?''

''பௌர்ணமி நாட்களில் இங்கே தேவதை வருவாள். பார்த்திருக்கிறோம். அழகென்றால் அத்தனை அழகு. அதுபோன்ற அழகு எங்கேயும் இல்லை''

''அவளோடு நீங்கள் பேசுவீர்களா?''

''பேச ஆசைதான். ஆனால் பேசவிட மாட்டார்கள்''

''யார்?''

''டிமார்க்கோவும் லியானாவும் தான்''

''வேறு என்ன செய்வீர்கள்?''

''கைகளை ஆட்டுவோம். கூச்சல் போடுவோம் தேவதையும் கைகளை ஆட்டி சிரிப்பாள். நாங்கள் கிறுகிறுத்துப் போவோம்''

''அந்த தேவதையை நீங்கள் மதிக்கிறீர்களா?''

''அதுதான் எங்கள் தெய்வம். அது தான் இந்தத் தீவையே காக்கிறது''

''அந்த தேவதையை லியானாவின் வளர்ப்பு மகள் என்று சொல்கிறார்களே?''

''லியானாவுக்கு மட்டுமில்ல. எங்களுக்கும்கூட அது மகளைப் போலத்தான்''

''விரைவிலேயே அது இந்தத் தீவை விட்டுப் போய்விடும் என்கிறார்களே?''

''ஒருக்காலம் இருக்காது. எங்களைவிட்டு அது போகவே போகாது. யார் சொன்னது அப்படி?''

''நீங்கள் நம்புவதாக இருந்தால் சொல்கிறேன்''

''சொல்லுங்கள்''

''என்னிடம் தான் தேவதை அவ்வாறு சொன்னாள்''

''உங்களிடமா? எப்படி?''

''லியானா என்னைப் பாம்புத் தீவுக்கு அனுப்பினாள். அங்கே உங்கள் தேவதையைக் கண்டேன். அவள் பெயர் நாகநந்தினி.

விஜயன் இவ்வாறு கூறியதும் தீவுவாசிகள் அந்தப் பெயரைச் சொல்லிச் சொல்லி குதூகலப்பட்டார்கள்.

''தேவதை உங்களிடம் பேசினாளா?''

''ஆமாம். இந்தத் தீவைவிட்டு விரைவிலேயே போய்விடுவதாகச் சொன்னாள்''

''காரணம்''

''உங்களையெல்லாம் பிடிக்கவில்லையாம்''

''பொய். அப்படியெல்லாம் இருக்காது. நாங்கள் அதன்மீது எவ்வளவு ஆசை வைத்திருக்கிறோம் என்பது அதற்குத் தெரியும்''

''நானேகூட இதை அவளிடம் எடுத்துச் சொன்னேன். ஆசை மட்டும் இருந்தால் என்ன இரக்கம் இல்லையே என்று கேட்டாள் தேவதை''

''நீங்கள் சொல்வது புரியவில்லை''

''புரியாமல் போக என்ன இருக்கிறது? நீங்கள் என்ன செய்து வருகிறீர்கள் என்று யோசித்துப் பாருங்கள். இங்கே வருகிற

அப்பாவி மனிதர்களை ஈவு இரக்கமின்றி பலியிட்டு அவர்களது மாமிசங்களை உண்கிறீர்கள். இது தேவதைக்குப் பிடிக்க வில்லை''

''தேவதையின் சம்மதத்துடன் தான் செய்கிறோம்.''

''தேவதைக்கு இதில் சம்மந்தம் இல்லையாம். டிமார்க்கோவும் லியானாவும் கட்டாயப்படுத்துவதால் தான் அதற்குச் சம்மதிக்கிறாளாம். அது மட்டுமல்ல''

''வேறென்ன?''

''போன பௌர்ணமியின்போது சந்திரன் வந்து தேவதையோடு பேசி இந்தப் பலிகளை கண்டித்ததாம். மனிதர்கள் மனிதர்களை உண்பது மகா கொடுமை என்றும் அதற்குச் சம்மதம் தெரிவிப்பதும் மகாபாவம் என்று கூறியதாம். அது மட்டுமல்ல''

''வேறென்ன?''

''இந்தத் தீவில் இனிமேல் பலி நடந்தால் நான் தீவுப் பக்கம் வரமாட்டேன் என்று சந்திரன் கூறி விட்டதாம். சந்திரன் வராமல் போனால் சூரியனும் வராது. காற்றும் வராது. கடல் பொங்கும். தீவு அழிந்துவிடும்''

''எல்லாம் பொய். நாங்கள் நம்பமாட்டோம்''

''நீங்கள் நம்பாவிட்டால் எனக்கென்ன? வருகிற பௌணர்ணமியன்றி பலி நடந்ததும் தேவதை தீவை விட்டுப் போய்விடும். இது உண்மை''

''இதை டிமார்க்கோவிடம் தெரிவித்தீர்களா?''

''நீங்களாவது பரவாயில்லை. டிமார்க்கோ மோசமானவன். வஞ்சகன். தீவுப் பெண்களையே கெடுக்கும் காமாந்தகன். அவனிடம் எதற்காக நான் சொல்லவேண்டும்? நாளைக்கு தேவதையே இத்தீவுக்கு வந்து உண்மையைச் சொல்வாள். அதற்குப் பிறகு என்ன செய்ய விரும்புகிறீர்களோ அதைச் செய்யுங்கள்''

இப்படிக் கூறிவிட்டு அங்கிருந்து எழுந்து சென்ற விஜயன் நாக நந்தினியைச் சந்திப்பதற்காக தெற்கு கடற்கரைக்குச் சென்றான். கடலில் நீந்தியே மறுகரைக்குச் சென்றான். அங்கே படகு ஒன்று கட்டிப்போடப் பட்டிருந்தது. தீவுக்கு யாரோ வந்திருக்கிறார்கள் என்பதை உணர்ந்து கொண்டு கரைக்கு வந்து குடிலை நோக்கிச் சென்றான். குடிலுக்கு அருகாமையில் தீவுவாசிகள் இருவர் பந்தங்களை ஏந்திக்கொண்டு காவலுக்கு நின்று கொண்டிருந்தார்கள். எனவே அவர்களைக் கடந்து செல்லாமல் அப்புறமாக நகர்ந்து வேறு பாதை வழியாக குடிலுக்கு அந்த பக்கத்திற்கு வந்தான். தீவுவாசிகளின் பந்தம் அவ்வளவு தூரத்திற்கு வெளிச்சத்தை அளிக்காததால் இருட்டிலேயே பதுங்கியபடி குடிலின் அருகே வந்தான். உள்ளேயிருந்து நந்தினி பேசும் குரலும் அவளுக்கு எதிராக டிமார்க்கோவும் லியானாவும் பேசும் குரலும் கேட்டது.

அவர்களது பேச்சைக் கேட்டான்.

அதிச்சியடைந்தான்.

◈◈◈

## அத்தியாயம் நாற்பத்து நான்கு

# நந்தினி எங்கே?

''நான் சொல்வதைக் கேள். வீணாகப் பிடிவாதம் பிடிக்காதே நந்தினி'' என்றாள் லியானா.

''நான் பிடிவாதம் பிடிப்பதில் தவறு இல்லை அம்மா. அது ஏன் உனக்குப் பிடிக்கவில்லை? நான் இந்த் தீவுக்கு வந்தது இங்கேயே தனிமரமாக இருந்து வாடிப் போவதற்குத்தானா?'' என்று கேட்டாள் நந்தினி.

''அப்படியெல்லாம் நீயாக எண்ணிக் கொள்ளாதே மகளே. உனக்கு எப்போது திருமணம் செய்யவேண்டும் என்று எங்களுக்குத் தெரியும். அப்போது விமரிசையாக நாங்களே

செய்து வைப்போம். உன்னைத் தனிமரமாக இருக்க விடமாட்டோம்'' என்றான் டிமார்க்கோ.

''நீங்கள் சொல்வது வேடிக்கையாக இருக்கிறது. நான் விரும்பும் மனிதர் இங்கேயே இருக்கும்போது அவரைத் திருமணம் செய்து வைக்காமல் பிறகு எப்போதோ யாருடனோ செய்து வைப்பதாகச் சொல்கிறீர்களே அது ஏன்?''

''விஜயன் நல்லவனல்ல. பொல்லாதவன். சூழ்ச்சிக்காரன். உன்னை மணக்க ஏற்றவனல்ல'' என்று சொன்னாள் லியானா.

''அப்படிப்பட்ட மனிதரை நீ மணக்க விரும்பினாயே அம்மா அது எப்படி?''

''அவனை மணக்க நான் விரும்பினேனா? இது என்ன வார்த்தை? அந்த வஞ்சகனை நான் ஏன் மணக்க வேண்டும்?'' சீறினாள் லியானா.

''அதற்காகத்தானே அம்மா அவரைத் தூது விட்டாய் என் சம்மதத்தைப் பெறத்துடித்தாய்?''

''பைத்தியம் - அவனை அனுப்பியது பலியை தள்ளி வைக்கத்தான். அவன் வேறு ஏதேதோ கூறி உன்னைக் குழப்பியிருக்கிறான்''

''அவரை விடுங்கள். நீயே வந்து என்னிடம் சம்மதம் கேட்டாயே அதுவுமா பொய்?''

லியானா பெரிதும் தடுமாறவே டிமார்க்கோ குறுக்கிட்டு ''மகளே, அவனை நல்லவன் என்று நம்பி லியானா சற்று அவசரப்பட்டு விட்டாள். அவ்வளவுதான். மற்றபடி அந்த வஞ்சகன் மீது அவளுக்கு எந்தவிதமான ஒட்டும் உறவும் கிடையாது'' என்றான்.

''அவர் எப்படி திடீரென பொல்லாதவரானார்? வஞ்சகனானார்?''

''அதெல்லாம் பெரியகதை நந்தினி. உனக்குத் தெரியாமல் இருப்பதே நல்லது'' என்றாள் லியானா.

''தெரியாமல் எப்படி அவரை வஞ்சகர் என்று ஒப்புக் கொள்வது?''

''மகளே, அவன் லியானாவை வைத்து என்னைக் கொல்லத் திட்டம் தீட்டினான்'' என்றான் டிமார்க்கோ.

''நீங்கள் கூடத்தான் அவரைக் கொல்ல திட்டம் தீட்டினீர்கள்''

நந்தினியின் பேச்சு தங்கள் சாயத்தை வெளுக்கச் செய்வதை டிமார்க்கோவும் லியானாவும் உணர்ந்தார்கள். பேச்சு ரொம்பவும் ரசாபாசமாக மாறுவதை நந்தினியும் உணர்ந்தாள். எனவே சுமுகமாகப் பேச முற்பட்டு ''நான் அவரிடம் நன்கு பழகியிருக்கிறேன் அம்மா. அவரும் தன்னைப்பற்றிய எல்லா உண்மைகளையும் சொல்லியிருக்கிறார். அவர் மிகவும் நல்லவர் அம்மா. அவரை மணக்க நான் கொடுத்து வைத்திருக்க வேண்டும். நாங்கள் இருவரும் மணப்பதால் யாருக்கென்ன பிரச்சினை'' நாங்கள் இங்கிருந்து எங்காவது சென்று மணந்து கொள்கிறோம். போதுமா?'' என்று சொன்னாள்.

நந்தினி தங்கள் பேச்சை கேட்கமாட்டாள் என்பது இருவருக்கும் புரிந்துவிட்டது. இருவருமே விஜயனைப் பழிவாங்க வேண்டும் என்ற காரணத்தால் தான் அதில் ஒரு அங்கமாக நந்தினியின் காதலை அறுத்துவிட முயன்றார்கள். அவன் மட்டும் நந்தினியை மணந்து விட்டால் தீவுவாசிகளை தன் பக்கம் வளைத்துப் போட்டுவிடுவான் என்றும் தன்னையும் டிமார்க்கோவையும் சீந்துவதற்கு ஆளிருக்காது என்றும் கருதிய காரணத்தால்தான் காதலை அறுக்க முனைப்பாக முயன்றார்கள். அது வெற்றியடையாமல் போகவே நந்தினியிடம் பாசமாகப் பேசுவதுபோல் பேச முற்பட்ட லியானா, ''பெற்றால் தான் தாய் என்றில்லை. வளர்ப்பவளும் தாய்தான். அந்தவிதத்தில் உண்மையான தாய்ப்பாசம் காரணமாகத்தான் உன்னை இந்த அளவிற்கு வற்புறுத்தினேன் நந்தினி. உலகமறியாத பெண்ணாயிற்றே என்பதால் தான் உன்னை எச்சரித்தேன். நீயோ கேட்பதாக இல்லை. இனி உன்னைக் கட்டாயப்படுத்த நாங்கள் விரும்பவில்லை. உன் இஷ்டம் போலவே அவனை மணந்துகொள். நாங்கள் வருகிறோம்'' என்று கூறிவிட்டு டிமார்க்கோவுடன் வெளியேறினாள்.

அவ்விருவரும் சென்ற சிறிதுநேரம் கழித்து உள்ளே நுழைந்த விஜயனைக் கண்டதும் ஓடோடி வந்து மார்பில் சாய்ந்து கண்ணீரைப் பெருக்கினாள் நந்தினி.

''அழாதே நந்தினி. உன் வளர்ப்பு பெற்றோர் கூறியதை யெல்லாம் நான் கேட்டுக்கொண்டுதான் இருந்தேன். அவர்களுக்குப் பிடிகொடுக்காமல் பேசிய நீ இப்படி அழலாமா?'' என்று கேட்டான் விஜயன்.

''நம்மை ஏன் பிரிக்கப் பார்க்கிறார்கள்? நம்மால் யாருக்கென்ன நஷ்டம்?'' என்று விம்மியபடி கேட்டாள் நந்தினி.

''முதல் காரணம் லியானாவின் துராசை. ஒழுக்கக்கேடு. உன்னை நான் மணந்து கொண்டால் அவளை மணக்கமாட்டேன் என்ற பண்பாடற்ற எண்ணத்தால் நம்மைப் பிரிக்கப் பார்க்கிறாள். உன்னை இத்தீவின் தேவதை என்று சொல்லி ஆதாயம் தேடும் அவர்களுக்கு நீ என்னை மணந்து கொண்டால் ஆதாயங்கள் போய்விடும் என்பது இரண்டாவது காரணம்'' என்றான் விஜயன்.

அவள் சற்றே தேறியவளாய் அங்கே இருந்த மஞ்சத்தில் அமர்ந்து கொண்டு அவனையும் அமரச் சொன்னாள்.

''உங்களை வஞ்சகர், சூழ்ச்சிக்காரர் என்றெல்லாம் சொல்கிறார்களே அது ஏன்?'' என்று கேட்டாள் அகன்ற கண்களுடன்.

''என்னைப் பிடிக்காமல் போனால் நீயும் இதுபோன்ற பட்டங்களை எனக்குச் சூட்டுவாய். அது இயல்பு. உண்மையிலேயே வஞ்சக எண்ணங்களோடு அவர்கள்தான் செயல்படுகிறார்கள் என்பதை அவர்களது திட்டங்களே சொல்லும். நான் சூழ்ச்சி செய்வது உண்மை. அது யாரையும் கொல்வதற்காக அல்ல. என்னவர்களை பலியிலிருந்து காப்பாற்றத்தான். என் லட்சியத்தைப்பற்றி உனக்கு ஏற்கனவே கூறியிருக்கிறேன். அதை நிறைவேற்ற புறப்பட்ட நான் என் நண்பர்களோடு இந்த நாகர் மலைத்தீவில் சிக்கிக் கொண்டேன். நானும் நண்பர்களும் இங்கிருந்து தப்ப வேண்டியது அவசியம். அதற்கு டிமார்க்கோவிடமோ தீவுவாசிகளிடமோ பேச்சு

வார்த்தை நடத்த முடியுமா? நரமாமிசம் உண்பதில் வெறியர்களாக இருக்கும் இவர்களிடம் சூழ்ச்சி செய்யாமல் வேறு என்ன செய்வது சொல். சற்று முன்புகூட தீவுவாசிகளிடம் உன்னைப் பற்றிப் பேசினேன். உன்னை தேவதையாக எண்ணி வணங்கும் அவர்களிடம் நீ கூறியதாகப் பொய்யைச் சொன்னேன். நீ நரபலியிடுவதை விரும்பவில்லை என்றும் அதனால் தீவைவிட்டுப் போய்விடப் போகிறாய் என்றும் பொய் சொன்னேன்? ஏன்? எங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காக மட்டுமல்ல. நாகர் மலைத்தீவில் இனி நரபலி நடக்கக் கூடாது என்பதற்காகவும் தான். உன் அந்தஸ்தை டிமார்க்கோ - லியானா பயன்படுத்துவதற்கும் நான் பயன்படுத்துவதற்கும் வித்தியாசம் இருப்பதை உணர்ந்தாயா?''

''என்னைப் பற்றிச் சொன்னதையெல்லாம் தீவுவாசிகள் நம்பினார்களா?'' குழந்தை குதூகலத்துடன் கேட்டாள் நந்தினி.

''தீவுவாசிகள் நல்லவர்கள்தான் நந்தினி. அவர்களிடம் அதீத நம்பிக்கைகள் இருக்கின்றன. அவற்றைப் பயன்படுத்தி நல்வழிப்படுத்த முயன்றால் முடியும். டிமார்க்கோவைப் போன்றவர்கள் அப்படிச் செய்யாமல் வெறியர்களாகவும் காட்டுமிராண்டிகளாகவுமே வைத்திருக்க முயல்கிறார்கள். ஆரம்பத்தில் இத்தீவுவாசிகளின் காட்டுமிராண்டித் தனங்களுக்குச் செவிசாய்த்த டிமார்க்கோ பிறகு அதிலேயே சுகம் கண்ட காரணத்தால் அவர்களை காட்டுமிராண்டிகளாகவே வைத்திருக்க விரும்பி செயல்பட்டு விட்டான். நான் அவர்களை நல்வழிபடுத்த முயன்றேன். உன் அந்தஸ்தைப் பயன்படுத்தி பொய் சொன்னேன். முழுமையாக நம்பவில்லைதான். நாளை உன்னையே தீவுக்கு வரச்சொல்லி உன் வாயாலேயே சொல்ல வைப்பதாகச் சொல்லியிருக்கிறேன். நீ மட்டும் அங்கு வந்து நான் சொன்ன மாதிரி சொன்னாயானால் நிச்சயம் நம்புவார்கள். இனி நீ இங்கு இருக்கவேண்டிய அவசியம் இல்லை. இப்போதே புறப்படு போகலாம்''

''இல்லை இல்லை. நாளை போகலாம்''

''ஏன்?''

''தீவை விட்டுச் செல்வதென்பது பெரிய விஷயம் அல்லவா? அதற்கு பாம்புகளின் சம்மதத்தை பெற வேண்டாமா?''

''நீயும் உன் பாம்புகளும்! போ. நந்தினி''

''இதென்ன நீங்களே இப்படிப் பேசுகிறீர்கள்? பாம்புகள் உங்களைக் காப்பாற்றியதையும் உங்களை நல்லவர் என்று எனக்கு உணர்த்தியதையும் மறந்து விட்டீர்களா? நீங்கள் என்னைச் சந்திக்க வந்ததிலிருந்து பாம்புகள் இக்குடிலை விட்டு வெளியேறி நமக்குத் தொல்லைதராமல் ஒத்துழைப்பதை கவனிக்கவில்லையா? இவற்றுக்கு நீங்கள் நன்றி தெரிவிக்கும் முறை இதுதானா?''

''தவறாக நினைக்காதே நந்தினி. உன்னை இனியும் தனியே விட்டு விட்டுப் போக எனக்கு மனம் வரவில்லை'' என்று கூறி அவளது உதடுகளை லேசாகத் தடவினான் விஜயன்.

அந்த லேசான ஸ்பரிசம் அவளுக்கு ரம்மியமாக இருந்தது. உணர்ச்சிகள் தூண்டப்படவே கண்களை மூடினாள். தற்போது தனது உதடுகளால் அவளது உதடுகளைத் தொட்டான் விஜயன். அவள் லேசாகக் கண்களைத் திறந்தாள். அக்கண்களில் ஏக்கம் தெரிந்ததைக் கண்டான் விஜயன். அவளது உதடுகள் துடிப்பதாகவும் உணர்ந்தான். லேசாக அவளைத் தன் பக்கமாக இழுத்த அவன் தனது உதடுகளால் அவளது உதடுகளைக் கவ்வினான். அப்போதுதான் அவளது உதடுகள் எத்தனை மென்மையானவை என்பது அவனுக்குத் தெரிந்தது. தன் மனைவி மாயாவின் உதடுகளில் உணர்ந்தறியாத மென்மையையும் வழுவழுப்பையும் நந்தினியின் உதடுகளில் இருந்ததை உணர்ந்த அவன் ஒருவித வேகத்துடன் தன் உதடுகளை அழுத்தினான். அவளது அமுத உதடுகளைத் தன் உதடுகளால் அழுத்தியபோது அவளது உடல் சூடாவதையும் அதற்கேற்ப தனது உடலில் உணர்ச்சிகள் பெருக்கெடுப்பதையும் அறிந்த அவன் தனது உதடுகளால் அவளது பழச்சுளைபோன்ற உதடுகளைக் கடித்தான். உதடுகளை மீறி அவளது முத்துப் பற்கள் இரண்டைத் தொடவும் செய்தான். அவளது கைகள் அவனது முதுகில் படர்ந்தன. அவன் அவளை தனக்காக நன்றாக

இழுத்துத் தழுவிக்கொண்டு அவளது காதுகளுக்கு அருகில் உதடுகளைக் கொண்டுபோய் முத்திரையிட்டான். ''நந்தினி'' என்று லேசாக முணுமுணுத்தான்.

உணர்ச்சிக் கடலில் மூழ்கிய அவள் ''என்ன?'' என்றாள் மெதுவாக.

''நீ அமுதத்தில் உருவானவளா?'' என்று கேட்டு உதடுகளை அவளது கழுத்திற்கு நகர்த்தினான்.

''ஏன்?'' - என்று ஏதோ கேட்டாள் அவள்.

''என் உதடு தொடும் இடமெல்லாம் இனிக்கிறது நந்தினி. என்னைச் சொக்க வைக்கிறது'' என்றான் விஜயன்.

''எனக்கும்தான்'' - என்றாள் நந்தினி மயக்கம் போன்ற நிலையில்.

''நம்மைப்போய் பிரிக்க நினைக்கிறார்களே, முட்டாள்கள்?''

''பிரிக்க நினைப்பவர்களுக்கு காதலைப்பற்றித் தெரியாதல்லவா?''

''காதல் மட்டுமல்ல. இந்தத் தீவுவாசிகளுக்கு நுட்பமான விஷயங்கள் எதுவுமே தெரியவில்லை நந்தினி. மனிதர்கள்தான் தேவர்களுக்கு அடுத்தபடியாக அழகானவர்கள் என்று சொல்கிறார்கள். அந்த அழகை உணர முற்படாமல் உண்ண முற்படும் இத்தீவுக்காரர்கள் மிருகங்களைவிட மோசமானவர்கள்'' என்று சொன்ன விஜயன் ''இப்படியே நாம் தொடர்ந்தால் உணர்ச்சிகளுக்கு இரையாகி நம்மை இழந்து விடுவோம் நந்தினி. அது சரியல்ல. இப்போது நான் கிளம்பிச் செல்கிறேன். நாளை மாலைக்குள் திரும்பி வருகிறேன். அதற்குள் நீ உன் அருமைப் பாம்புகளின் சம்மதத்தைப் பெற்றுவை'' என்று கூறிவிட்டு வெளியேறினான்.

மறுநாள் காலை மரக்கலத்தைப் பழுது பார்க்கும் வேலை முடிந்து கடலில் இழுக்கும் பணி தொடங்கியது. விஜயனின் தோழர்களும் ஆயிரத்திற்கும் மேற்பட்டத் தீவுவாசிகளுமாகச் சேர்ந்து கயிறுகளைக் கட்டி கப்பலை நிறுத்த பெரும் பாடு

பட்டார்கள். மரக்கலமானது தீவுக் கப்பல் என்ற விதத்தில் மிகப்பெரியதாக இருந்ததால் அதைச்சாய்ப்பதும் நிமிர்த்துவதும் மலையைப் புரட்டுவதுபோல் பிரம்மப் பிரயத்தனமாக இருந்தது. ஒரு வழியாக நண்பகல் நேரத்தில் மரக்கலம் நிமிர்த்தப்பட்டு கடல் பகுதியை நோக்கி இழுக்கப்பட்டது. அதை அடுத்து மதிய உணவு வேளை வந்ததும் அனைவரையும் வாயாறப் பாராட்டினான் விஜயன். பிறகு உபதலைவர்களை அழைத்து படகுகள் மூலம் கடற்கரையில் இருக்கும் சரக்குகளை துரிதமாக கப்பலுக்குள் இறக்குமாறு பணித்தான். அதோடு கடந்த சில நாட்களாகப் புதுப்பித்து வந்த ஆயுதங்களையும் புதியதாக செய்யப்பட்ட ஆயுதங்களையும்கூட கப்பலுக்கு மாற்றும்படி கூறினான் விஜயன். இப்பணிகள் நடந்து கொண்டிருந்தபோது டிமார்க்கோ அப்பகுதியில் தலை காட்டவே இல்லை.

அன்று மாலை விஜயன் ஒரு படகையும் இரண்டு தீவுவாசிகளையும் அழைத்துக் கொண்டு பாம்புத் தீவிற்குச் சென்றான். பாம்புத் தீவிலிருந்து நாகர்மலைத் தீவுக்கு நந்தினி வந்து விட்டால் இறுதிகட்ட நடவடிக்கை எடுத்து விடலாம் என்று தீர்மானித்துக் கொண்ட விஜயனுக்கு பாம்புத் தீவில் ஏமாற்றமே மிஞ்சியது. குடிலுக்குள் நந்தினியைக் காணவில்லை. குடில்கூட சேதப்படுத்தப்பட்டிருந்தது. நந்தினி அமரும் மஞ்சத்தில் பெரிய பாம்பொன்று வெட்டப்பட்டு ரத்த வெள்ளத்தில் கிடந்தது. ஏதோ விபரீதம் நடந்து விட்டதை உணர்ந்த விஜயன் நந்தினி என்ற பெயரை உரக்கக் கூவியபடி தீவுமுழுவதும் சுற்றி அலைந்தான். நந்தினி அங்கே இருப்பதற்கான தடயம் எதுவும் இல்லை.

நேராகக் கடற்கரைக்கு வந்து படகில் ஏறி நாகர்மலைத் தீவுக்கு வந்தான். அப்போது இரவு நேரமாகியிருந்தது. அங்கிருந்து நேராக லியானாவின் இருப்பிடத்திற்குச் சென்றான் விஜயன். அவளது இருப்பிடமான குகைக்குள் சென்றபோது அவளும் டிமார்க்கோவும் சரச சல்லாபத்தில் சிக்கிக் கிடந்ததற்கான அடையாளங்கள் சிணுங்கல்கள் மூலமாகவும், கொஞ்சல்கள் மூலமாகவும், முனகல்கள் மூலமாகவும்,

வெட்கங்கெட்ட பேச்சுக்கள் மூலமாகவும் விஜயனுக்குத் தெரிந்தன. ஆனாலும் அதைப் பொருட்படுத்தாமல் ''லியானா! லியானா!'' என்று பெரியதாக குரல் கொடுத்தான். குரலிலிருந்து தன்னை அழைப்பது விஜயன் தான் என்பதை அறிந்து கொண்ட லியானா டிமார்க்கோவின் பிடியிலிருந்து விடுவித்துக் கொண்டு தழை ஆடைகளை மேலும் கீழுமாய் கட்டிக்கொண்டு குகையின் வாசலுக்கு வந்து ''நீயா? என்ன விஷயம் விஜயா?'' என்று சாதாரணமாகவே கேட்டாள்.

கடும் கோபத்தில் இருந்த விஜயன் ''லியானா நந்தினி எங்கே?'' என்று கேட்டான் ஒருவித வேகத்துடன்.

''உன் காதலியைப்பற்றி என்னிடம் எதற்காகக் கேட்கிறாய் விஜயா?'' என்று கேட்டான் லியானா.

''நந்தினியை பாம்புத்தீவில் காணவில்லை அது மட்டுமல்ல''

''வேறென்ன?''

''அவளது குடில் நாசப்படுத்தப்பட்டிருக்கிறது''

''யார் நாசப்படுத்தியது?''

''இது நான் கேட்க வேண்டிய கேள்வி''

''விஜயா, நந்தினி என் மகள். பல ஆண்டுகளாக எங்கள் பொறுப்பில் இருப்பவள். எங்கள் கண் போன்றவள். நீயோ இடையில் வந்தவன். வேற்று நாட்டவன். ஒன்றுமறியாத அவளை காதல் என்ற பெயரில் மிரட்டி வருபவன். உன்னால் தான் அவளுக்கு ஆபத்து வந்திருக்க வேண்டும். உண்மையைச் சொல். எங்கே எங்கள் அன்பு மகள் நந்தினி? அவளை என்ன செய்தாய்? சொல் விஜயா சொல்''

லியானாவின் பேச்சைக்கேட்டு ஸ்தம்பித்துப்போய் நின்றான் விஜயன்.

◈◈◈

## அத்தியாயம் நாற்பத்தைந்து

# விஜயனின் எச்சரிக்கை

இதே சமயத்தில் அங்கு வந்து சேர்ந்த டிமார்க்கோ ''என்ன லியானா, என்ன விஷயம்? விஜயபாகு வந்திருக்கிறாரே என்ன விசேஷம்?'' என்று விஷமம் தொனிக்கும் குரலில் வினவினாள்.

''பாம்புத் தீவுக்குப் போனாராம். நந்தினியைக் காணவில்லையாம். நம்மிடம் வந்து விசாரிக்கிறார்'' என்றாள் லியானா.

''என்ன நந்தினியைக் காணவில்லையா? இதோ பார் விஜயபாகு, நந்தினி விஷயத்தில் விளையாடாதே. அவள் எங்கள் மகள் மட்டுமல்ல இத்தீவின் தேவதை. அவளுக்கு ஏதாவது நேர்ந்தால் இத்தீவு மக்கள் பௌர்ணமி வரையில் காத்திருக்க மாட்டார்கள். உடனடியாக உங்களையெல்லாம் மரம் செடிகளைப் போல வெட்டியெறிந்து விடுவார்கள்'' என்றான் டிமார்க்கோ மரியாதையைக் கைவிட்டு.

ஆரம்பத்தில் லியானாவின் பேச்சில் ஸ்தம்பித்துப் போன விஜயன் தற்போது கொஞ்சம் சுதாரித்துக் கொண்டான். இருவருமாகச் சேர்ந்து கொண்டு புதிய அபாயத்திற்கு பாதையைப் போடுகிறார்கள் என்பதைத் தெரிந்து கொண்ட அவன் இனி என்ன செய்யவேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டவனாய் அவ்விருவரையும் பார்த்து ''டிமார்க்கோ லியானா, உங்கள் அர்த்தமற்ற மிரட்டல்களையும் கபட நாடகங்களையும் கேட்டு அசந்து போகிறவனோ அச்சப் படுபவனோ நானல்ல. நானும் நந்தினியும் ஒருவரையொருவர் விரும்புகிறோம். இதில் ஒளிவு மறைவு எதுவும் இல்லை. இந்த உறவைத் தடுக்கும் உரிமை யாருக்கும் கிடையாது. இரண்டு நாட்கள் உங்களுக்கு அவகாசம் தருகிறேன். அதற்குள் நந்தினியை என்னிடம் ஒப்படைத்து விடுங்கள். இல்லை

யென்றால் விஜயனின் மறுபக்கத்தை நீங்கள் காண்பீர்கள்'' என்று கூறிவிட்டு பதிலை எதிர்பார்க்காமல் நடந்து சென்றான் விஜயன்.

அங்கிருந்து கடற்கரை கூடாரப் பகுதிக்குச் சென்றபோது தீவுவாசிகளும் மற்றவர்களும் தங்கள் பணிகளை முடித்துக் கொண்டு இரவு உணவை உண்டு கொண்டிருந்தார்கள். அவர்களோடு போய் அமர்ந்து கொண்டாலும் விஜயன் உண்ண முற்படவில்லை. பரிமாற வந்தவனிடம் வேண்டாம் என்று கூறி திருப்பியனுப்பி விட்டான். தீவுவாசிகளோ பசியின் காரணமாகவும் வேலையினால் உண்டான களைப்பு காரணமாகவும் பறிமாறப்பட்ட உணவை அசுரத்தனமாக உண்ண முற்பட்டதால் விஜயனை கவனிக்கவில்லை. சிறிது நேரம் கழித்து அவனைக் கண்ட தீவுவாசிகள் சிலர் ''நீங்கள் உண்ணவில்லையா?'' என்று கேட்டார்கள்.

''வேண்டாம். நீங்கள் உண்ணுங்கள்'' என்று சொல்லிவிட்டு ஏதோ யோசனையில் இறங்க முற்பட்டபோது ''ஏன் வேண்டாமென்று சொல்கிறீர்கள்?'' என்று சிலர் கேட்டார்கள் வாயில் கடித்துக் கொண்டிருந்த எலும்பை கையில் எடுத்தபடி.

''கவலை வந்தால் பசி வராது. அதனால்தான் நான் உண்ணவில்லை?'' என்றான் விஜயன்.

அடுத்த மூன்றாவது நாள் பௌர்ணமி தினமாதலால் அன்று நடக்கவிருக்கும் பலியை எண்ணி ஒருவேளை விஜயன் கவலைப்படுகிறானோ என்று நினைத்த தீவுவாசிகள் சிலர் ''எதற்காக கவலை? ஒருவேளை பலியைப் பற்றி நினைத்துக் கொண்டீர்களா?'' என்று கேட்டார்கள்.

''அதைப்பற்றி நினைக்க என்ன இருக்கிறது அதுதான் முடிவான விஷயமாயிற்றே! என் கவலை எங்களைப் பற்றியல்ல. உங்களைப்பற்றி. உங்கள் தீவைப் பற்றிதான்''

''எங்களுக்கென்ன வந்து விட்டது?''

''கேடு வந்து விட்டது. எந்த மாதிரியான விபரீதம் நடக்குமோ தெரியவில்லை. ஆகவேதான் கவலைப் படுகிறேன்''

''நீங்கள் சொல்வது எனக்குப் புரியவில்லை''

''உங்கள் தேவதை இன்று உங்களுக்கு முன்னால் வரும் என்று சொன்னேனே, மறந்து விட்டீர்களா?''

''இல்லை. இல்லை. மறக்கவில்லை. தேவதை இப்போது இங்கே வரப்போகிறதா?''

''இல்லை''

''ஏன்?''

''தேவதையை அழைத்து வருவதற்காகத்தான் பாம்புத் தீவிற்கு நான் சென்றேன். ஆனால் தேவதையை அங்கே காணவில்லை.

''காணவில்லையா?''

''அதுமட்டுமல்ல. அவள் இருந்த குடில் நாசப்படுத்தப் பட்டிருக்கிறது''

''ஐயோ''

''அதுமட்டுமல்ல. அவளைக் காக்கும் பாம்பு ஒன்று வெட்டப்பட்டிருக்கிறது''

''உண்மையாகவா?''

''ஆம். உங்களைக் காக்கும் தேவதைக்கு ஏதோ நேர்ந்திருக்கிறது. இந்த நிலை உங்களுக்கும் உங்கள் தீவிற்கும் நல்லது என்று நினைக்கிறீர்களா?''

''தேவதைக்கு என்னாயிற்று?''

''உங்கள் தலைவன் டிமார்க்கோவும் லியானாவும் தான் தேவதையை எங்கோ மறைத்து வைத்திருக்கிறார்கள். கேட்டால் உண்மையைச் சொல்ல மறுக்கிறார்கள்?''

''ஏன் மறுக்க வேண்டும்? இத்தனைக்கும் தேவதை அவர்களது வளர்ப்பு மகள் தானே?''

''உங்கள் எல்லோருக்கும் கூட வளர்ப்பு மகள்தான் என்று சொன்னீர்கள். அதை நான் மறந்து விடவில்லை. நீங்களெல்லாம் இதே தீவில் கண்மூடித்தனமாக வாழ்ந்து

கொண்டிருப்பதால் வெளி உலகத்தைப் பற்றி உங்களுக்கு எதுவும் தெரியவில்லை. ஆதாயம் என்று ஒன்று வரும்போது உறவுகள் அர்த்தமற்றதாகப் போய்விடும்''

''நீங்கள் சொல்வது விளங்கவில்லை''

''தீவுவாசிகளே, இங்கே ஏதோ ஒரு பயங்கரமான சூழ்ச்சி நடைபெறுகிறது. அதை நடத்துவது டிமார்க்கோவும் லியானாவும்தான். அநேகமாக அது ஆதாயத்தைக் கருதி செய்யப்படுவதாகவே நினைக்கிறேன்''

''என்ன ஆதாயம்?''

''பொது நீதியை உடைக்கப் பார்க்கிறாள் லியானா''

''பொது நீதியா?''

''இங்கே வந்து சிக்கியவர்கள் பலியிடப்பட வேண்டும் என்பது தானே பொது நீதி?''

''ஆமாம்''

''அதில் பாரபட்சம் உண்டா?''

''கிடையாது''

''எங்களில் சிலரை உயிரோடு வைத்திருக்க விரும்புகிறாள் லியானா''

''அது முடியாத காரியம்''

''முடியாது என்று லியானாவுக்குத் தெரியும். ஆனால் முடிக்க வேண்டும் என்று தீர்மானித்திருக்கிறாள் அவள். அதற்கு உதவத்தான் உங்கள் தேவதையை மறைத்து வைத்துக் கொண்டு நாடகமாடுகிறாள். இதன் விளைவு என்ன தெரியுமா?''

''என்ன?''

''எதிர்பாராத கோரங்கள் நடக்கும். தேவதையைக் காணாமல் சந்திரன் கோபப்படுவான். இத்தீவிற்கு இன்னல்களைத் தருவான். பலபேர் இங்கே சாவார்கள். அநேகமாக பௌர்ணமியன்று பெரும் சேதம் நடக்கப் போகிறது. அதைத் தடுப்பது உங்கள் கைகளில்தான் இருக்கிறது. டிமார்க்கோவிடம் போய் தேவதை எங்கே இருக்கிறாள்

என்பதைக் கேளுங்கள். அவளை உங்களுக்கு முன்னால் கொண்டு வந்து நிறுத்தும்படி கேளுங்கள்'' என்று கூறிய விஜயன் அங்கிருந்து புறப்படுவதற்கு முன் ''ஒன்றை மட்டும் நன்றாகத் தெரிந்து கொள்ளுங்கள். தேவதைக்கு ஏதாவது நடந்தால் நான் பேசாமல் இருக்கமாட்டேன். உங்கள் அனைவரையும் ஒருவர் விடாமல் அழித்தே தீருவேன்'' என்று கூறிவிட்டுப் புறப்பட்டான்.

விஜயன் கூறியதைக் கேட்டு தீவுவாசிகள் சிலநிமிடங்கள் வரை பிரமை தட்டியவர்களாய் நின்றார்கள். பிறகு பலவாறு கூச்சலிட்டபடி டிமார்க்கோவின் இருப்பிடம் நோக்கிச் சென்றார்கள்.

அவர்கள் சென்றபின் உபதலைவர்களையெல்லாம் அழைத்தான் விஜயன்.

''சரக்குகள் எல்லாம் கப்பலுக்குப் போய் விட்டதா?'' என்று கேட்டான்.

''நாளை பகலுக்குள் முடிந்துவிடும்''

''ஆயுதங்கள் மற்றும் எரிநட்சத்திர மூட்டைகள் கப்பலுக்கு வந்து விட்டதா?''

''வந்து விட்டன''

''அநேகமாக தீவுவாசிகள் நாளைக்கு உங்களுக்கு உதவ முன் வருவார்கள் என்று சொல்ல முடியாது. ஆகவே நீங்கள் தான் மீதிப் பணிகளை முடிக்க வேண்டும்''

''ஒன்றும் சிரமமில்லை ஐயா. முடிந்தால் இன்று இரவே கூட மிச்ச சரக்குகளை கப்பலில் ஏற்றிவிடுவோம்.

''அது நல்லது'' என்று கூறிய விஜயன் டெமிட்ரியஸையும் அசுவநாவிகரையும் அழைத்து ''பௌர்ணமிக்குள் இங்கே என்ன வேண்டுமானாலும் நடக்கலாம். எதற்காகவும் கவலைப்பட வேண்டாம். பௌர்ணமி வரை தீவுக்கப்பலை காப்பாற்ற வேண்டியது உங்கள் இருவரது பொறுப்பு. உங்களுடன் என் தோழர்கள் முன்னூறு பேரை வைத்துக் கொள்ளுங்கள். மாலுமிகளும் கப்பலில் இருக்கட்டும். எல்லோரும் வாளை

கையோடு வைத்திருங்கள். இனி தீவுவாசி யாராக இருந்தாலும் கப்பலுக்குள் அனுமதிக்காதீர்கள். உங்களை மீற முற்படுபவர்களை கைது செய்து கப்பலிலேயே பிணைத்து வைத்திருங்கள்'' என்று கூறிவிட்டு மற்ற உபதளபதிகளைப் பார்த்து ''ஒவ்வொருவரும் தங்கள் கட்டுப்பாட்டில் இருப்பவர்களை அவ்வப்போது சரிபார்த்துக் கொள்ளுங்கள். டிமார்க்கோவோ அவனது மனைவியோ என்னைப்பற்றி விசாரிக்க வந்தால் எதுவும் தெரியாது என்று கூறிவிடுங்கள். யாருக்கும் பயப்படவேண்டாம். நாளையிலிருந்து கடற்கரையிலேயே வாள் பயிற்சி செய்யுங்கள்'' என்றான்.

பிறகு தனஞ்ஜெயனையும் உதயணனையும் அழைத்துக் கொண்டு தீவுக்குள் சென்றான்.

''பந்தத்தைக் கொளுத்தி வரட்டுமா?'' என்று கேட்டான் தனஞ்ஜெயன்.

''பந்தத்தை எடுத்துக் கொள்ளுங்கள். ஆனால் கொளுத்த வேண்டாம். வளர்பிறைச் சந்திரனின் வெளிச்சம் நமக்குப் போதும்'' என்றான் விஜயன்.

அவர்கள் புறப்பட்டபோது நள்ளிரவு நேரமாகி விட்டதால் அமைதியே நிலவியது. அவ்வப்போது காட்டு விலங்குகளின் உறுமல்களும் நரிகளின் ஊளைச் சத்தமும் விட்டுவிட்டு ஒலித்து இரவின் பயங்கரத்தை நினைவூட்டின. தீவுவாசிகளிடம் நாக நந்தினி காணாமல் போனதால் தீவுக்கு உபவாதங்கள் நிகழும் என்று அவர்களை பயமுறுத்தி வைப்பதற்காக விஜயன் கூறியிருந்தாலும் அவனுக்குள்ளேயும் அத்தகைய சந்தேகம் இருக்கவே செய்தது. நாகநந்தினியின் கடந்த காலத்தில் பல வினோதங்கள் நடந்திருந்ததை அவளே கூறியிருந்தாளாதலால் அவளுக்கு ஏதேனும் நேர்ந்தால் மோசமான விளைவுகள் உண்டாக வாய்ப்பிருப்பதாக அவன் நினைத்தான்.

''நாம் இப்போது எங்கே போகிறோம்?'' என்று கேட்டான் உதயணன்.

''நாக நந்தினியைத்தேடிப் பிடிக்க வேண்டும் உதயணா. அல்லது அவளது நிலை என்ன என்பதை அறியவேண்டும்.

அவளை நான் அழைத்து வரவில்லை. அதேசமயம் லியானாவும் டிமார்க்கோவும் அவளை அழைத்துவரவோ அல்லது தூக்கி வரவோ வாய்ப்பிருக்கிறது. அவளை வைத்துக் கொண்டு எதையோ செய்ய முற்படுகிறார்கள் என்று தெரிகிறதே தவிர அது என்ன என்பதை ஊகிக்க முடியவில்லை'' என்றான் விஜயன்.

''நாக நந்தினி டிமார்க்கோவின் குகையில் இருக்கமாட்டாள் என்று தோன்றுகிறது'' என்றான் தனஞ்ஜெயன்.

''நானும் அப்படித்தான் நினைக்கிறேன். இதுவரை நாம் மலையின் கிழக்குப் பக்கத்திற்குப் போகவில்லை. அங்கே எங்காவது நாகநந்தினி அடைத்து வைக்கப்பட்டிருக்கலாம். எனவே அந்தப் பகுதிக்குப் போய் பார்க்கலாம்'' என்றான் விஜயன்.

அதேசமயத்தில் தீவுவாசிகள் டிமார்க்கோவின் குகை வாசலுக்குச் சென்று கூச்சலிட்டார்கள்.

கூச்சலைக் கேட்டு வெளியே வந்த டிமார்க்கோவும் லியானாவும் அங்கே தீவுவாசிகள் ஒட்டுமொத்தமாக கூடியிருந்ததைக் கண்டு சற்றே திடுக்கிட்டார்கள். அதேசமயம் திகைப்பை மறைத்துக் கொண்டு ''என்ன விசேஷம்? எதற்காக இத்தனை பேரும் இங்கே வந்து நிற்கிறீர்கள் இந்த நேரத்தில்?'' என்று சத்தமாகக் கேட்டாள் லியானா.

''தேவதை எங்கே?'' என்று பலகுரல்கள் எழுந்தன தீவுவாசிகளிடமிருந்து.

''தேவதையா? யாரைக் கேட்கிறீர்கள்?'' என்று அதே குரலில் கேட்டாள் லியானா.

''உங்களுக்குத் தெரியாதா யாரென்று? உங்கள் வளர்ப்பு மகள் - எங்கள் தேவதை எங்கே?'' என்று கேட்டார்கள் தீவுவாசிகள்.

''அவளைப்பற்றி எங்களிடம் ஏன் கேட்கிறீர்கள்?''

''பாம்புத் தீவில் அவள் இல்லையாம்''

''அங்கில்லை என்றால் என்னை எதற்காகக் கேட்கிறீர்கள்?''

''நீங்கள்தான் அவளை மறைத்து வைத்திருக்கிறீர்கள்?''

''அவள் எங்கள் மகள். அவளை ஏன் நாங்கள் மறைத்து வைக்க வேண்டும்?''

''அதைப்பற்றி நீங்கள் தான் கூறவேண்டும்''

''உளராதீர்கள்? உங்களுக்குகெல்லாம் பைத்தியமா பிடித்திருக்கிறது? யார் உங்களையெல்லாம் தூண்டிவிட்டது?''

''விஜயபாகு தான் சொன்னார்''

''நம்மிடம் பலியாகப் போகும் மனிதன் சொன்னதை நம்பியா வந்து விட்டீர்கள்? எங்களைவிட அவன் மீது உங்களுக்கு நம்பிக்கை வந்துவிட்டதா?''

''லியானா, அவரைப்பற்றி உயர்வாகச் சொன்னவள் நீதான். டிமார்க்கோவைவிட எல்லாவிதத்திலும் சிறந்தவர் அவர் என்று கூறியதும் நீ தான். இப்போது வேறுமாதிரி சொல்கிறாயே?''

தீவுவாசிகள் வகையாகக் கேட்டுவிடவே நாக்கைக் கடித்துக் கொண்டாள் லியானா.

அப்போது டிமார்க்கோ குறுக்கிட்டு ''தீவுவாசிகளே, வீணாகக் குழம்பாதீர்கள். அதோடு லியானாவின் தோஷம் இன்று உக்கிரமாகி இருக்கிறது. அதைப் போக்கடிக்க விசேஷ சடங்கைச் செய்ய மாந்தரீகர் இப்போது இங்கே வரவிருக்கிறார். அவர் வரும் நேரத்தில் நீங்கள் இங்கே இருப்பது ஆபத்தானது. மாந்தரீகரின் கண்கள் பிசாசுக் கண்கள். உங்கள்மீது பட்டால் உங்களுக்குப் பார்வை போய்விடும். ஆகவே நீங்கள் இப்போது கலைந்து செல்லுங்கள். எல்லாவற்றையும் நாளை பார்த்துக் கொள்ளலாம்'' என்றான்.

தீவுவாசிகள் சிறிதுநேரம் வரை அங்கே இருந்துவிட்டு முணுமுணுத்தபடி கலைந்து சென்றார்கள்.

அவர்கள் போனபின் டிமார்க்கோ லியானாவைக் கடிந்து கொண்டான்.

''உன் முட்டாள்தனம் எப்படி வேலை செய்கிறது பார்த்தாயா? என்மீதுள்ள வெறுப்பால் அந்நியனைப் போய்

சிறந்தவனாகத் தீவுவாசிகளிடம் அவசரப்பட்டு நீ கூறி வைத்தது எவ்வளவு ஆபத்தாகத் திரும்புகிறது என்பதை உணர்ந்து கொண்டாயா? தீவுவாசிகள் ரொம்பவும் தேறிவிட்டார்கள். விஜயனும் நம்மை முந்திக்கொண்டு அவர்களுக்கு கொம்பு சீவிவிட்டான். அவர்களுக்குச் சரியான சமாதானம் கூறாவிட்டால் நம் கதி அதோ கதியாகிவிடும்''

இவ்வாறு கூறிய டிமார்க்கோ ''சரி சரி. நீ போய் மாந்தரீகனை பார்த்துவிட்டு வா'' என்றான்.

லியானா மறுமொழி எதுவும் சொல்லாமல் புறப்பட்டாள். பழகிய இடமாதலால் தங்கு தடையின்றி செல்ல முடிந்தது அவளால்.

மலையின் கிழக்குப் பகுதியின் உச்சிக்கு அவள் சென்றபோது தனக்கு முன்னால் விஜயனும் அவனது சகாக்கள் இருவரும் சென்று கொண்டிருப்பதைப் பார்த்தாள்.

என்ன செய்வதென்று தெரியாமல் அவள் விழித்தபோது அவளுக்குப் பின்னாலிருந்த ஓர் உருவம் அவளது வாயைப் பொத்தி தனக்காக இழுத்தது. அதிர்ச்சியில் மயங்கிப் போனாள். அவளைத் தூக்கித் தோளில் போட்டுக்கொண்டு நடந்தது அந்த உருவம்!

◈◈◈

## அத்தியாயம் நாற்பத்து ஆறு

# பிலாரி

லியானாவைத் தூக்கித் தோளில் போட்டுக் கொண்டு நடந்த உருவம் சிறிது தூரம் சென்றபின் எதிர்ப்பட்ட பாறையொன்றின் மீது லியானாவை இறக்கி வைத்துவிட்டு பாரத்தைத் தூக்கிய சுமை போவதற்காக மூச்செறிந்தபடி சிறிது நேரம் அமர்ந்தது. களைப்பு நீங்கியதும் எழுந்து கொண்ட அவ்வுருவம் மீண்டும் லியானாவைத் தூக்கித் தோளில் போட்டுக் கொள்ள முயன்றபோது ஒரு நிமிஷம் அவளது உடலை நோக்கியது. நிலவொளியில் பட்டவர்த்தனமாகத் தெரிந்த லியானாவின்

செழிப்பான அங்கங்களைக் கண்டதும் அதன் மனத்தில் சபலம் உண்டாயிற்று. தன்னுடைய கோர முகத்திற்கு எவ்வளவு செலவு செய்தாலும் ஒரு பெண்கூட தனக்கு இணங்கமாட்டாள் என்ற உண்மை அதை தகிக்க வைத்தது. அதிலும் லியானாவைப் போன்ற வாளிப்பான கறுப்பழகியை அனுபவிக்க இந்த ஜென்மத்தில் வேறு வாய்ப்பு கிடைக்காது என்பதையும் உணர்ந்த அவ்வுருவம் தனது தோளில் தொங்கிய மண்டையோட்டு மாலையைக் கழற்றி வைத்தது. அந்த மாலையோடு மாலைகளாக அணிந்திருந்த பல்வேறு மணி மற்றும் மரக்கொட்டை அணிகளையும் கழற்றியது. தனது இடையில் கட்டியிருந்த மரப்பட்டையைக் கழற்றி அதில் செருகியிருந்த பல்வேறு குப்பிகளில் ஒன்றை எடுத்து அதை லியானாவின் மூக்கின் அருகே வைத்தது. குப்பியில் இருந்த மயக்கத் துளிகளின் நெடி அவளது நாசிக்குள் சில நிமிடங்களுக்குச் சென்றது. பிறகு குப்பியைக் கீழே வைத்துவிட்டு லியானாவை விழுங்கிவிடுவது போல் பார்த்தது. உடலுக்குள் ரத்தம் சூடேறுவதை உணர்ந்த அவ்வுருவம் லியானாவை எடுத்து ஆரத்தழுவியது. அவளை இச்சிக்கும் வாய்ப்பு அதுவே முதலும் கடைசியும்என்று உணர்ந்த அவ்வுருவம் அடுத்த அரை நாழிகை நேரத்திற்கு அவளைத் தன் இரையாக்கி மகிழ்ந்தது. ஒருவாறு திருப்தியடைந்த உருவம் தனது ஆடை அணிகலன்களை அணிந்து கொண்டது. லியானாவைத் தூக்கித் தோளில் போட்டுக் கொண்டு அவளது குகையை நோக்கிச் சென்றது.

லியானாவை தோளில் தூக்கி வந்த கோலத்தைக் கண்டதும் டிமார்க்கோ பதறிப்போனான். எந்த மாந்தரீகனைச் சந்திக்கப் போனாளோ, அவனது தோளில் நினைவற்ற நிலையில் வந்து சேர்ந்த லியானாவைக் கண்டு குழம்பிய டிமார்க்கோ, ''பிலாரி, என்ன ஆயிற்று? லியானா ஏன் மயங்கிக் கிடக்கிறாள்?'' என்று அவசரமான குரலில் கேட்டான்.

பிலாரி என்று அழைக்கப்பட்ட அந்த மாந்தரீகன் லியானாவை கீழே இறக்கிப் பாறைக் கட்டிலில் படுக்க வைத்துவிட்டு ''நான் மட்டும் பார்க்காமல் போயிருந்தால் லியானா இறந்து போயிருப்பாள்'' என்றான் தனது கோரமான முகத்தை மேலும் கோரமாக்கிக் கொண்டு.

மகா அருவறுப்பான அவனது தோற்றத்தைக் கண்டு சகிக்க முடியாத டிமார்க்கோ ''உன்னைப் பார்க்கத்தான் லியானா வந்தாள். நான் தான் அனுப்பினேன்'' என்றான்.

''அதற்காக அகாலத்திலா வருவது?'' என்று கேட்டான் பிலாரி.

''நீ இருப்பது ரகசிய இடம். உன்னைப் பார்க்க பட்டப் பகலிலா வரமுடியும்?''

''டிமார்க்கோ! நமது ரகசிய இடங்கள் எல்லாம் அந்நியர்களால் ஜல்லடை போடப்படுகிறது. தெரியுமா உனக்கு?''

''என்ன சொல்கிறாய்?''

''அந்நியர்கள் மலை உச்சிக்கு வந்து விட்டார்கள்''

''யார்? விஜயபாகுவா?''

''அப்படித்தான் இருக்கவேண்டும். சற்று முன்பு அவர்களிடம் சிக்கவிருந்தாள் லியானா. நான் சரியான நேரத்தில் இவளைப் பார்த்ததால் அந்நியர்கள் கண்களில் படாமல் மயக்கத் துளியால் மயக்கமடைய வைத்து ஜாக்கிரதையாக இங்கே கொண்டு வந்தேன்'' என்று கூறிய பிலாரி ''எதற்காக இவளை அகால வேளையில் என்னிடம் அனுப்பினாய்?'' என்று கேட்டான்.

''ஏற்கனவே நாம்பேசிய விஷயம் தான்''

''அதில் இன்னும் பேசுவதற்கு என்ன இருக்கிறது? நான் தான் முடிவை சொல்லிவிட்டேனே!''

''முடிவை வேறு மாதிரி மாற்ற முடியாதா?''

''என்னிடம் விளையாட விரும்பாதே டிமார்க்கோ. அது ஆபத்து''

''பிலாரி, நீ யாருடன் பேசுகிறாய் என்பதை மறந்துவிடாதே''

''நானும் இதையேதான் உன்னிடமும் சொல்லிக் கொள்கிறேன். நான் கூறிய முடிவுதான் நிரந்தரமானத் தீர்வைக்

கொடுக்கும். நன்றாக யோசித்துத்தான் இந்த முடிவை தீர்மானித்தேன் நான். இதில் நான் பின்வாங்க முடியாது. நீயும் அப்படியே இருப்பது நல்லது''

''அந்த விஜயன் தீவுவாசிகளை எங்களுக்கு எதிராகத் திருப்பி விட்டான். இன்று நள்ளிரவு அத்தனை பேரும் இங்கே கூடிவிட்டார்கள்''

''பிரச்சினை பெரிதாக மாறுவதற்குள் நான் கூறியதை நிறைவேற்றி விடுவதே நல்லது. இல்லையென்றால் தீவுவாசிகள் உனக்கு எதிரிகளாகி விடுவார்கள்''

''நீ கூறியதை இப்போது நிறைவேற்றினால் தீவுவாசிகள் சும்மா இருப்பார்களா?''

''பழியை நீ அந்நியனின் மீது சாமர்த்தியமாகத் திருப்பினால் அவர்களும் அவன்மீது திரும்புவார்கள். அவனையும் அவனைச் சேர்ந்தவர்களையும் அவர்களே வேலை தீர்த்து விடுவார்கள்''

டிமார்க்கோ சிறிதுநேரம் வரை யோசித்துவிட்டு ''சடங்கை எப்போது முடிக்கப் போகிறாய்?'' என்று கேட்டான்.

''நாளை முழுவதும் வேள்வி நடக்கும். நாளை மறுநாள் சடங்கு முடிவடையும்''

''எல்லாவற்றையும் நீயே முடித்துவிடு. எங்களால் வரவோ அந்த கோரத்தைக் காணவோ முடியாது'' என்று கூறிய டிமார்க்கோ குகைக்குள் சென்று முத்துமாலைகள் இரண்டைக் கொண்டு வந்து பிலாரியிடம் கொடுத்தான்.

லியானாவை அனுபவித்த இன்ப நேரத்தை எண்ணிக் கொண்ட மாந்தரீகன் முத்து மாலையை வாங்கிக்கொண்டு ''கரும்பு தின்றதுக்கு கூலி'' என்று உள்ளுக்குள் குதூகலமாகச் சொல்லிக்கொண்டு குகையை விட்டுப் புறப்பட்டான்.

அதேசமயம் டிமார்க்கோவின் இருப்பிடத்தைவிட்டு கடற்கரைக்கு வந்த தீவுவாசிகள் தங்கள் தேவதைக்கு என்னாகியிருக்கும் என்று பலவாறு பேசிக் கொண்டார்கள். விஜயனின் எச்சரிக்கை ஒருபுறம் அவர்களைப் பீதியடைய வைத்தது என்றால் டிமார்க்கோ-லியானா ஆகியவர்களின் பேச்சு

மறுபுறம் குழப்பத்தை உண்டாக்கியது. ஒரு கட்டத்தில் யார் பேச்சை நம்புவது என்ற குழப்பமும் உண்டாயிற்று அவர்களிடம். சிலர் விஜயனை ஆதரித்துப் பேசினார்கள். சிலர் டிமார்க்கோவை ஆதரித்துப் பேசினார்கள். முடிவில் பொழுது விடிந்ததும் டிமார்க்கோவை சந்தித்து தேவதையின் இருப்பிடத்தை அறிந்து அவளைக் காணவேண்டும் என்று முடிவு கட்டினார்கள்.

தீவுவாசிகள் இவ்வாறு சார்ச்சையில் ஈடுபட்டிருந்தபோது அதே கடற்கரையில் கூடியிருந்த விஜயனின் தோழர்கள் அதைக் கவனித்தாலும் அச்சர்ச்சையில் யாரும் குறுக்கிட முற்பட வில்லை. எல்லோரும் தீவுவாசிகளால் ஏதாவது பிரச்சினை ஏற்பட்டால் அவர்களை சகட்டுமேனிக்கு வெட்டித் தள்ளுவதற்கு ஏதுவாக இடையில் வாளைச் செருகியிருந்தார்கள். இந்நிலையில் தீவுவாசிகளில் ஒருவன் ''ஐயோ'' என்று அலறும் சத்தம் கேட்டது. தோழர்கள் அவர்களது திசைப் பக்கம் உற்று நோக்கினார்கள். தீவுவாசிகளிடையே பரபரப்பு ஏற்பட்டது. ''பாம்பு! பாம்பு'' என்று சிலர் கூச்சலிட்டார்கள். நீண்ட நீளம் கொண்ட பாம்பு ஒன்று ஊர்ந்து சென்றது. நல்ல வேளையாக அது யாரையும் தீண்டவில்லை யென்றாலும் பீதியடைந்து போன பொல்லாத தீவுவாசிகள் பெரிய கற்களை எடுத்துப் போட்டு அப்பாம்பைக் கொன்றார்கள்.

அச்சமயத்தில் சில தோழர்களுடன் அங்கு வந்த உபதலைவன் நரசிம்மன் ''என்ன நடந்தது இங்கே? எதற்காகப் பரபரப்பு?'' என்று வினவினான்.

தீவுவாசிகள் செத்துக்கிடந்த பாம்பைக் காட்டி ஏதோ சொன்னார்கள்.

''இந்தப் பாம்பு யாரையாவது கடித்ததா?'' என்று கேட்டான் நரசிம்மன்.

''இல்லை'' என்றான் தீவுவாசி ஒருவன்.

''பிறகு எதற்காக இந்தப் பாம்பைக் கொன்றீர்கள்?''

''உயிரோடு விட்டால் அது கடித்துவிடும்''

''இறப்பதற்கு முன்னால் அது உயிரோடுதானே உங்களுக்கு அருகில் வந்தது? அப்போது ஏன் கடிக்கவில்லை?''

தீவுவாசிகள் அதற்கு உடனடியாக பதில் கூறவில்லை.

உபதலைவன் நரசிம்மனே தொடர்ந்து ''உங்களுக்கு உங்கள் தேவதையைப் பற்றியோ பாம்புத் தீவைப் பற்றியோ என்ன தெரியும்?'' என்று கேட்டான்.

''நாங்கள் அங்கு போனதில்லை. தேவதையுடன் பேசியதுமில்லை''

''பல ஆண்டுகளாக இங்கிருக்கும் நீங்கள் பாம்புத் தீவை எட்டிப் பார்க்கவில்லை. தேவதையுடன் ஒரு வார்த்தையும் பேசியதில்லை. ஆனால் ஒருமாதத்திற்கு முன்னால் வந்த எங்கள் தலைவர் விஜயபாகு பாம்புத் தீவிற்குப் பலமுறை போய் வந்து விட்டார். தேவதையைப் பார்த்துப் பேசி பழகியும் இருக்கிறார்''

''அதனால் என்ன?''

''உங்கள் தேவதையைப்பற்றி நன்கு அறிந்திருக்கிறார். எப்படி தேவதை உங்களுக்கு மகளாக பாவிக்கப்படுகிறாளோ அதுபோல தான் அந்த தேவதை பாம்புத் தீவில் இருக்கும் பாம்புகளை தன் குழந்தைகளாக பாவிக்கிறாள். பாம்புகள் அவள் மீது தவழ்ந்து விளையாடுகின்றன. அவளைக் கடிப்பதில்லை. பாதுகாக்கின்றன. அவை தன்னை கடிக்கும் என்ற பயம் தேவதைக்கு கிடையாது. அந்த தேவதையின் பாம்புகளில் ஒன்றுதான் இங்கே வந்திருக்கிறது. நீங்கள் நேசிக்கும் தேவதையின் குழந்தைகளில் ஒன்றுதான் இந்தப் பாம்பு. இதை நீங்கள் கொன்றது தேவதைக்குச் செய்த தீங்கு''

''அதெப்படி? தேவதையின் பாம்புதான் இது என்று எப்படிச் சொல்கிறீர்கள்?''

''இது கூடவா புரியவில்லை? உங்களுடைய இந்தத் தீவில் எல்லாவிதமான விலங்குகளும் இருக்கின்றன. நீங்கள் தினமும் வேட்டையாடி உண்ணுகிறீர்கள். இந்த அடர்ந்த காட்டுப் பகுதியில் எங்காவது பாம்பை நீங்கள் பார்த்ததுண்டா? பாம்பு கடித்து யாராவது செத்ததுண்டா? இல்லை. அதற்குக் காரண்ம் இத்தீவில் பாம்புகள் கிடையாது. எல்லா பாம்புகளும் பாம்புத்

தீவில் சேர்ந்து தேவதையோடு உறாவாடுகின்றன. அந்த தேவதை பாம்புத் தீவில் காணாமல் போனதால் அவளைத்தேடி முதன் முதலாக இத்தீவிற்கு பாம்பு ஒன்று விஜயம் செய்திருக்கிறது. உங்களில் யாரையும் அது கடிக்கவில்லை. நீங்களோ கண்மூடித்தனமாக அதைக்கொன்று அபவாதத்திற்கு ஆளாகி விட்டீர்கள்''

''பாம்பின் இயல்பு கடிப்பது. அது கடிக்காது என்று எப்படி கொல்லாமல் விடமுடியும்?''

''விலங்குகளைப் பற்றி நீங்கள் தெரிந்துகொண்ட லட்சணம் இவ்வளவுதான். புலி, சிங்கம் போன்ற மாமிசப் பட்ஷிணிகள் கூட பசியெடுக்கும்போதுதான் பிற விலங்குகளை வேட்டையாட முயல்கின்றன. பொதுவாகவே தங்கள் வழியில் பிறர் குறுக்கிடாதவரை எந்த விலங்குமே ஆபத்தை உண்டாக்குவதில்லை. பாம்பும் அப்படித்தான். அதன் இயல்பு கடிப்பதல்ல. ஆபத்து என்பது பொதுவானது. அது எப்போது வேண்டுமானாலும் வரும். எப்படி வேண்டுமானாலும் வரும். அதற்காக பயந்துகொண்டு கண்ணில்பட்ட விலங்குகளைக் கொன்றுவிடுவது முட்டாள்தனமானது. பாம்புகள் இத்தீவுக்கு மேலும் மேலும் வரலாம். தேவதையைப்பற்றிய நிலை தெரியாதவரை என்ன நடக்கும் என்று சொல்லமுடியாது. ஆகவே பாம்புகளைக் கண்டால் யாரும் கொல்லவேண்டாம். இதை எங்கள் தலைவர் சார்பில் எச்சரிக்கையாகவே கூறிக் கொள்கிறேன். இனி உங்கள் பொறுப்பு'' என்று கூறிவிட்டு தோழர்களுடன் தன் இருப்பிடத்திற்குத் திரும்பினான் உபதலைவன் நரசிம்மன்.

அவன் கூறியது குறித்து கசமுசவென்று பேசிக் கொண்டார்கள் தீவுவாசிகள். அதீத மூடநம்பிக்கையில் ஊறிப்போன அவர்களுக்கு மேன்மேலும் பீதி அதிகரித்தது. பாம்புகளைக் கொல்லவேண்டாம் என்று அவர்கள் நினைத்தாலும் பாம்புகள் மீதிருந்த பயத்தால் கொல்லாமல் இருக்கவும் மனம் வரவில்லை. நல்ல வேளையாக விடியும் வரை வேறெந்தப் பாம்பும் அங்கு விஜயம் செய்யாததால் அரை நிம்மதியோடு இரவைக் கழித்தார்கள்.

★★★

பொழுது விடிந்ததும் கண்விழித்த லியானாவைக் கண்டபடித் திட்டித் தீர்த்தான் டிமார்க்கோ. மாந்தரீகனைத் தேடிப்போன அவளை விஜயனிடம் சிக்காமல் மாந்தரீகனே காப்பாற்றி இருப்பிடத்திற்குக் கொண்டு வந்ததை எடுத்துச் சொன்ன டிமார்க்கோ ''எல்லாவற்றுக்கும் நீதான் காரணம். உன் சுயநலமும் வஞ்சகமும்தான் நம்மை இந்த நிலைமைக்கு இழுத்து வந்துவிட்டன. நீ மட்டும் உன் குறுக்கு புத்தியைக் காட்டாமல் இருந்தால் போன பௌர்ணமி அன்றே பலியை முடித்து இன்னேரம் எல்லோரையும் ஆனந்தமாக உண்டிருக்கலாம். உன் விபரீத ஆசையால் பலி தள்ளிப் போயிற்று. விஜயனின் மதிப்பு அதிகமாயிற்று. அவனுக்கும் நந்தினிக்கும் காதல் உண்டாகியது. நம்மை மிரட்டும் நிலைக்கு அவன் வந்துவிட்டான். நந்தினியும் அவனோடு சேர்ந்து விட்டாள். அவளது காதலை அழிக்க நம்மால் முடியவில்லை. காதலை அழிக்காவிட்டால் நம்பிழைப்பு போய்விடும். ஆகவே அவளை அழைத்து வந்துவிட்டோம். மாந்தரீகனோ தான் சொன்னதைச் செய்தால் தான் நிரந்தரத் தீர்வு ஏற்படும் என்று சொல்கிறான். எளிமையாக நடக்கக்கூடிய ஒரு விஷயத்தை எவ்வளவு சிக்கலாக ஆக்கிவிட்டாய் பார். இன்னும் சிறிதுநேரம் போனால் தீவுவாசிகள் வந்து விடுவார்கள். என்ன செய்வதாக உத்தேசம்?'' என்று என்றுமில்லாத கோபத்துடன் எரிந்து விழுந்தான் டிமார்க்கோ.

சாதாரணமாக அவனை அவ்வளவாகப் பொருட்படுத் தாதவளான லியானா அவனது பேச்சில் இருந்த உண்மைகளை உணர்ந்தாளாதலால் குற்ற உணர்வுடன் மௌனமாக இருந்தாள். இந்நிலையில் தீவுவாசிகள் எல்லோரும் வந்து குழுமியிருப்பதாகவும் இருவரையும் சந்திக்கத் துடிப்பதாகவும் டிமார்க்கோவிற்குச் செய்தி வந்தது.

''என்ன செய்யப் போகிறாய் டிமார்க்கோ?'' என்று கவலையுடன் கேட்டாள் லியானா.

''செய்வதையெல்லாம் செய்துவிட்டு இப்போது என்னைக் கேள்'' என்று கோபித்துக் கொண்ட டிமார்க்கோ அவளது காதில் ஏதோ கூறிவிட்டு தீவுவாசிகளைச் சந்திக்கச் சென்றான்.

அவனைக் கண்டதும் ஆர்ப்பாட்டம் செய்யும் பாவனையில் எழுந்தார்கள் தீவுவாசிகள். அவர்களையெல்லாம் கையமர்த்திய டிமார்க்கோ ஆசனத்தில் அமர்ந்தான்.

சிறிதுநேரம் வரை தேவதை எங்கே என்று கேட்டபடி கூச்சலிட்டார்கள் தீவுவாசிகள். அதைக் கண்டு கோபம் பெருக்கெடுத்த டிமார்க்கோ ''நீங்களெல்லாம் மௌனமாக இருக்கப் போகிறீர்களா இல்லையா? அடங்க மாட்டீர்களானால் எல்லோரையும் வெட்டச் சொல்வேன்'' என்று கர்ஜித்தான்.

அவனது கர்ஜனையைக் கேட்டு தீவுவாசிகள் அஞ்சவில்லை என்றாலும் என்னதான் சொல்கிறான் பார்ப்போம் என்று சற்றே அமைதியானார்கள்.

நின்றுகொண்டே பேசத் தொடங்கிய டிமார்க்கோ, ''தீவுவாசிகளே, ஒரு மாதத்திற்குப் முன்னால் இதே இடத்தில் தான் நாம் கூடினோம். நீங்கள்தான் விஜயனையும் அவனது தோழர்களையும் அழைத்து வந்தீர்கள். வழக்கப்படிதான் நாம் நடந்துகொண்டோம். இத்தீவுக்கு வருபவர்களை பௌர்ணமி யன்று பலியிட்டு உண்பதுதான் நம் வழக்கம். பௌர்ணமிக்கு ஐந்து நாட்கள் இருந்ததால் அவர்கள் காத்துக் கொண்டிருக்க வேண்டியதாயிற்று. ஆனால் இந்த ஐந்து நாட்களுக்குள் அந்த அயோக்கியனான விஜயன் நல்லவனைப் போல நடித்து எங்களை ஏமாற்றினான். லியானாவைக் கெடுத்தான். எதிர்பாராத இந்த வஞ்சகச் செயலால் அதிர்ச்சியடைந்த லியானா நோய்வாய்ப்பட்டாள். அதேசமயம் மாந்தரீகன் லியானாவுக்கு தோஷம் வந்து விட்டதாகவும் அது நீக்கப்பட்டால் தான் பலி சம்பவம் நடைபெறமுடியும் என்று கூறிவிட்டான். ஆகவேதான் பலி அடுத்த பௌர்ணமிக்குத் தள்ளிப்போட வேண்டியதாயிற்று. இந்த கால இடைவெளியில் விஜயன் செய்த வினைகள் கொஞ்ச நஞ்சமல்ல. உங்களைப் பயன்படுத்திக் கொண்டு அவனது மரக்கலத்தைப் பழுது பார்த்துக் கொண்டான். அதேசமயம் பாம்புத் தீவுக்குச் சென்று உங்கள் தேவதையை மிரட்டியிருக்கிறான். அவள் இதை எங்களிடம் சொல்லி அழுதாள். தன்னைத் துராக்கிருதமாகத் தூக்கிச்சென்று கப்பலில் ஏற்றி வேறு நாட்டிற்குப் போய்விடுவது தான் விஜயனின்

திட்டம். அதன்படி நமது அருமை மகளை பாம்புத் தீவிலிருந்து கவர்ந்துகொண்டு வந்து இத்தீவிலேயே எங்கோ மறைத்து வைத்து விட்டான். இவ்வளவையும் செய்துவிட்டு பழியை எங்கள் மீது போட்டுவிட்டு உங்களிடம் ஏதேதோ சொல்லி குழப்பியிருக்கிறான். நீங்களும் அவனை நம்பிக் குழம்பி விட்டீர்கள்'' என்றான்.

அப்போது நான்கு தீவுவாசிகள் மூங்கில் தட்டியொன்றில் படுத்த நிலையில் லியானாவைக் கொண்டு வந்து மேடையில் வைத்தார்கள்.

அதைச் சுட்டிக்காட்டிய டிமார்க்கோ ''உங்கள் லியானவைப் பார்த்தீர்களா? தனது அருமை மகள் காணாமல் போன துயரத்தால் நேற்றிரவு விஷம் குடித்துவிட்டாள் லியானா. இவளை உயிர்ப்பிக்க வைத்தியர்கள் படாதபாடுபட வேண்டியதாயிற்று. இன்னும் மயக்கத்தில்தான் இருக்கிறாள். இவள் கண்திறக்க வேண்டுமென்றால் தேவதை நமக்குக் கிடைக்க வேண்டும். ஆனால் தேவதையோ விஜயனின் வசம் இருக்கிறாள். அவன் அவளை கடத்துவதற்கு முன் நாம் மீட்டாக வேண்டும். எனவே காலம் தாழ்த்தாமல் நீங்கள் எல்லோரும் தீவு முழுவதும் சல்லடை போட்டுத் தேடுங்கள் தேவதையை. தேவதை கிடைத்ததும் விஜயனையும் அவன் தோழர்களையும் உடனடியாக பலியிட்டு விடலாம்'' என்றான்.

தீவுவாசிகளுக்கு குழப்பம்தான் அதிகரித்ததே தவிர தெளிவு ஏற்படவில்லை. இருந்தாலும் டிமார்க்கோ பேசியவிதமும் லியானா இருந்த நிலையும் அவர்களைச் சற்றே அசத்தியது. எனவே அவனது வேண்டுகோளுக்கு இணங்கி தேவதையைத் தேடப் புறப்படலானார்கள்.

அதைக்கண்ட டிமார்க்கோ பெருமூச்சுவிட்டு ''விஜயபாகு! என்னிடமா உன் சாமர்த்தியத்தைக் காட்டுகிறாய்? உன் திட்டமெல்லாம் குலையும்படி உன்னையும் உன் ஆட்களையும் துண்டுதுண்டாக வெட்டிக் காட்டுகிறேன் பார்'' என்று கறுவிக் கொண்டான்.

◈◈◈

## அத்தியாயம் நாற்பத்து ஏழு

# விஜயனின் அதிர்ச்சி

நாகநந்தினியைத்தேடி விஜயனும் மற்ற இருவரும் மலையின் மீது ஏறிச் சென்றபோது லியானாவையோ அவளை மாந்தரீகன் பிலாரி தூக்கிச் சென்றதை கவனிக்கவில்லை. செங்குத்தான அந்த மலையின் உச்சியை அடைந்தபோது அங்கே ஒரு பாறையின் மீது மூன்று பேர் அமர்ந்திருந்ததைக் கண்டார்கள். அவர்கள் தீவுவாசிகள் தான் என்பதை நிலவொளியில் அவர்கள் தெரிந்து கொண்டாலும் எதற்காக அமர்ந்திருக்கிறார்கள் என்பதை அறிய முடியவில்லை. எனவே அருகில் சென்று ''யார் நீங்கள்? இந்த உச்சியில் ஏன் அமர்ந்திருக்கிறீர்கள் அதுவும் இந்த நேரத்தில்?'' என்று கேட்டான் விஜயன்.

அந்த மூவர் விஜயனின் கேள்விக்குப் பதில் கூறாமல் ''நீங்களெல்லாம் யார்? ஏன் இங்கே வந்தீர்கள்?'' என்று எதிர்கேள்வி எழுப்பவே விஜயன் சடாரென்று அவர்களில் ஒருவனைதூக்கி தலைக்கு மேலே உயர்த்தி தூர எறிந்தான். இந்த அதிரடித் தாக்குதலை மற்ற இருவர் சிறிதும் எதிர்பார்க்க வில்லை. ஒழுங்காக பதில் சொல்லாவிட்டால் தங்கள் கதியும் அதோ கதியாகிவிடும் என்பதை கணநேரத்தில் உணர்ந்த அவர்கள் ''ஐயா, நாங்கள் இத்தீவின் காவலர்கள். ''இங்கே இருந்தபடி தீவையும் கடலையும் கண்காணிப்பது எங்கள் பணி. தீவிலோ அல்லது கடலிலோ ஏதாவது மாற்றங்கள் நேர்ந்தால் அதைத் தீவில் உள்ள தலைவனுக்குத் தெரிவிப்போம்'' என்றான் ஒருவன்.

''எப்படித் தெரிவிப்பீர்கள்?'' என்று கேட்டான் விஜயன்.

''பகல் நேரமாக இருந்தால் சிவப்புக்கொடிகளை நட்டு வைப்போம். இரவு நேரமாக இருந்தால் விளக்கைக் கொளுத்தி வைப்போம்''

''உங்கள் அடையாளங்களைத் தீவில் இருப்பவர்கள் எங்கே இருந்தால் காணமுடியும்?''

''பொதுவாக கடற்கரையில் நான்குபேர் அடங்கிய காவல் குழு ஒன்று இருக்கும். அவர்களால் பார்க்க முடியும். டிமார்க்கோவின் இருப்பிடத்திற்கு அப்பால் ஒரு பாறை மேடை இருக்கிறது. அங்கே இரண்டு பேர் இருப்பார்கள். அவர்களாலும் பார்க்க முடியும்''

''இங்கே இருக்கும் உங்களால் தீவின் எல்லா பகுதிகளையும் பார்க்க முடியுமா?''

''எல்லா பகுதிகளையும் பார்க்க முடியாது. மலைக்கு தள்ளியிருக்கும் தீவின் மேற்குப் பகுதியைப் பார்க்க முடியும். மற்றபடி கடலை நாற்புரத்திலும் பார்க்கலாம்''

''சமீபத்தில் நீங்கள் எதையாவது பார்த்து அடையாளம் காட்டியதுண்டா?''

''ஒரு மாதத்திற்கு முன்பு பெருங்கப்பலொன்று தீவின் வடதிசையில் கடலில் வந்து கொண்டிருந்ததைக் கண்டு கடற்கரைக்கும் தீவின் தலைவருக்கும் அடையாளம் காட்டினோம்''

''வேறு எந்தச் சந்தர்ப்பத்திலாவது காட்டியிருக்கிறீர்களா?''

'கொஞ்ச நாட்களுக்கு முன்னால் தீவின் மேற்குப் பகுதியில் ஐந்து அந்நியர்கள் உலவியதைப் பார்த்து அடையாளம் காட்டினோம். அதை யாரும் அறிந்து கொள்ளாததால் இரவிலும் அடையாளம் காட்டினோம்''

விஜயன் உதயணனைப் பார்த்து ''உங்கள் விஷயத்தைத் தான் சொல்கிறார்கள்'' என்றான்.

தலையாட்டினான் உதயணன்.

''இந்த மலைப்பகுதியில் வேறு யார் இருக்கிறார்கள்?'' என்று கேட்டான் விஜயன்.

''யாருமில்லை''

''யாரோ ஒரு யட்சிணி இருப்பதாகச் சொன்னார்களே?''

''கேள்விப்பட்டிருக்கிறோம். மற்றபடி வேறு எந்த விவரமும் எங்களுக்குத் தெரியாது.''

''மாந்தரீகன் யாராவது இருக்கிறானா?''

''ஆமாம். அவன் பெயர் பிலாரி''

''அவன் எங்கே இருக்கிறான்?''

''தெரியாது ஐயா''

''இந்த வார்த்தையை இனிமேலும் நீ உச்சரித்தால் உங்கள் உயிர் போய்விடும்''

''நாங்கள் உண்மையைத்தான் சொல்கிறோம். பிலாரி எப்போதாவது தான் தீவுக்கு வருவான். அதுவும் தீவின் தலைவர் கூப்பிட்டால் வருவான். அவனை நிறைய பேர் பார்த்ததில்லை''

''நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?''

''ஒரே ஒருமுறை பார்த்திருக்கிறோம். அவனை ஒரு முறை பார்த்தவர்கள் மறுதடவை பார்க்கமாட்டார்கள்''

''ஏன்?''

''அவன் மகா கோரமானவன்''

''அவன் இத்தீவுக்குள் தானே இருக்க முடியும்?''

''ஆமாம்''

''இந்த மலைப்பக்கம்தான் அவன் இருப்பதாக கேள்விப்பட்டோம். உங்களுக்குத் தெரியாதென்றால் எப்படி?''

''தெரியாததால் தான் சொல்கிறோம். அவன் அவ்வப்போது தீ வளர்த்து ஏதேதோ செய்வான். அத்தீக்குண்டங்களைத்தான் பார்த்திருக்கிறோம்''

''நல்லது. அவற்றை எங்களுக்கு காட்டுங்கள்''

''இங்கே காவல் புரியவேண்டுமே?''

''அதற்கு அவசியமில்லை. புறப்படுங்கள்'' என்று சொன்ன விஜயன் ''நீங்கள் இருவரும் சாப்பிட்டீர்களா?'' என்று

கேட்டதும் ''சாப்பிட்டு விட்டோம். உணவு சரியான நேரத்திற்கு கீழே இருந்து வந்துவிடும்'' என்றார்கள் தீவுவாசிகள்.

அதற்குப் பிறகு அங்குயாரும் பேசவில்லை. தீவுவாசிகள் வழிகாட்ட அவர்களைத் தொடர்ந்தார்கள் விஜயனும் உபதலைவர்களும், ஏறக்குறைய மலையின் கிழக்கு அடிவாரத்திற்கு அருகே வந்து சேர்ந்தார்கள் அவர்கள். அங்கே பர்ணசாலையைப் போன்ற அமைப்பில் மூங்கில்களாலும் காட்டு மரங்களாலும் வேயப்பட்ட பெரியதொரு குடிசை கண்ணில் பட்டது. அருகில் சென்று பார்த்தபோது அக்குடிசை நீண்ட நாட்களாக பராமரிக்கப் படாததற்கு அத்தாட்சியாக மேற்கூரை பல இடங்களில் பிய்ந்து கிடந்தது. அதேசமயம் அந்த இடம் புழக்கத்தில் இருந்து வருகிறது என்பதற்கு அத்தாட்சியாக உள்ளே ஐந்து தீக்குண்டங்கள் இருந்தன. அவற்றில் ஒருத் தீக்குண்டத்தில் நீறு பூத்த நெருப்பு இருந்ததைக் கண்ட விஜயன் தன் உபதலைவர்களுக்குச் சுட்டிக்காட்டி ''இன்று மாலையோ இரவிலோ இந்தத் தீக்குண்டம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அதற்கு அத்தாட்சிதான் இந்த நெருப்பு. அருகிலேயே ரத்தக் கறைகளும் காணப்படுவதைப் பாருங்கள். எதையோ காவு கொடுத்திருக்கிறார்கள்'' என்று கூறிவிட்டு தீவுவாசிகளைப் பார்த்து கேட்டான்.

''கவனித்தீர்களா இதை?''

''பார்த்தோம்''

''இங்கே நடக்கும் சடங்குகளை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?''

''பௌர்ணமியில் நடக்கும் பலிக்கு பூர்வாங்கமாக சில சடங்குகள் நடப்பதாகக் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் பார்த்ததில்லை.''

அக்குடிசைக்கு அருகில் குடியிருக்கும் படியான குடில்கள் எதுவும் காணப்படவில்லை. அத்தீவிலேயே டிமார்க்கோவின் குகையைத் தவிர குடியிருப்பு குடிசைகளோ கட்டிடங்களோ இல்லாமலிருந்ததை ஏற்கனவே கவனித்திருந்த விஜயன் தீவுவாசிகள் அனைவருமே திறந்தவெளியில் தான் வாழ்க்கை

நடத்துகிறார்கள் என்பதை உணர்ந்தான். தன் மக்களுக்கு அடிப்படை வசதிகளை அமைத்துத் தரவேண்டிய பொறுப்பைக் கூட உணராமல் சுகபோக வாழ்க்கையை நடத்திவந்த டிமார்க்கோவை எண்ணிப் பார்த்தபோது ''இவனும் ஒரு சிகபாகுதான்'' என்று கருதி அவனை வெறுத்தான் விஜயன். அந்த வகையில் மாந்தரீகன் பிலாரிக்கும் குடியிருக்க குடில் எதுவும் இருக்காது என்று நினைத்து அங்கேயே காத்திருப்பது என்று முடிவு செய்தான் விஜயன். ஆனால் இரவு முழுவதும் விழித்திருந்தும் பயனில்லாமல் போயிற்று. யாரும் அக்குடிலுக்கு வரவில்லை. பொழுது விடிந்தது தீவுவாசிகள் மூவரையும் அருகில் இருந்த நீரோடையொன்றுக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கேயே அனைவரும் களைப்பாறி நீராடினார்கள். தீவுவாசிகள் கொண்டு வந்து கொடுத்த பழங்களை உண்டார்கள். சிறிது நேரம் கழித்து குடிலுக்கு வந்தபோது தீக்குண்டம் பெரிதாக எரிவதையும் அதற்கு முன்னால் கோர மனிதனொருவன் அமர்ந்து கண்களை மூடிக்கொண்டு ஏதோ முணுமுணுப்பதையும் கண்ட விஜயன் தீவுவாசிகளைப் பார்த்து ''இவன்தான் மாந்தரீகனா?'' என்று கேட்டதும் ''அப்படித்தான் தெரிகிறது'' என்றார்கள் தீவுவாசிகள்.

''நீங்கள் எல்லோரும் மறைந்திருங்கள் இதோ நான் வந்து விடுகிறேன்'' என்று சொல்லிவிட்டு மாந்தரீகனின் பின்புறமாகச் சென்று மறைந்து கொண்ட விஜயன் தன்குரலைச் சற்றே மாற்றிக் கொண்டு ''பிலாரி! பிலாரி'' என்று குரல் கொடுத்தான்.

குரலைக் கேட்டதுமே கண்விழித்த மாந்தரீகன் சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு யாரும் காணாததால் மீண்டும் கண்களை மூடினான். கண்களை மூடியதும் ''பிலாரி! பிலாரி'' என்று மீண்டும் குரல் ஒலிக்கவே சற்றே திகைப்பும் வியப்பும் அடைந்த அவன் ''யாரது? யட்சிணியா பேசுவது?'' என்று கேட்டுக் கொண்டே எழுந்தான்.

அஃவன் பாலிமொழியிலேயே பேசியதைக் கேட்டுத்திருப்தி யடைந்த விஜயன் ''என்ன செய்கிறாய் பிலாரி?'' என்று கேட்டான்.

''தாயே! தங்களுக்குத் தெரியாததா? என்றான் பிலாரி.

''தெரியாததால் தான் கேட்கிறேன்'' என்றான் விஜயன்.

''நாளை மறுநாள் பௌர்ணமியல்லவா தாயே? அன்றைக்குப் பலிகொடுக்கவேண்டுமல்லவா? அதற்கான பூர்வாங்கம் தானே இது?'' என்றான் பிலாரி.

''யாரைப் பலிகொடுக்கப் போகிறாய்?''

''அந்நியர்களைத்தான் தாயே?''

''அதற்கு உங்கள் தேவதை சம்மதித்து விட்டாளா?''

''ஆம். தாயே''

''இப்போது அவள் எங்கே?''

''எனக்கென்ன தெரியும் தாயே?''

''பிலாரி''

''தாயே''

''நான் இதுவரை பேசியிருக்கிறேனா?''

''இல்லை''

''இன்று மட்டும் ஏன் பேசுகிறேன்?''

''தெரியவில்லை தாயே''

''இங்கே ஏதோ தவறு நடக்கிறது. நீயும் அதில் சம்மந்தப் பட்டிருக்கிறாய்''

''நானா தாயே! இல்லை''

''பொய்கள் என்னிடம் அணுகாது. உண்மையைச் சொல். தேவதையை எங்கடே ஒளித்து வைத்திருகிறீர்கள். அவளை என்ன நோக்கத்திற்காக ஒளித்து வைத்திருக்கிறீர்கள்?''

''டிமார்க்கோ தான்...''

''பிலாரி, தேவதைக்குக் கேடு நேர்ந்தால் உன் தலை வெடித்துச் சிதறும். இத்தீவு பூகம்பத்தால் அழிந்து கடலில் மூழ்கும்''

''வேண்டாம் தாயே. வேண்டாம்''

''தேவதை எங்கிருக்கிறாள் சொல்''

பிலாரி பதில் கூறமுற்பட்டபோது மறைவில் இருந்த தீவுவாசிகள் தும்மியதால் சடாரென அப்பக்கம் திரும்பிய பிலாரி ''யாரது?'' என்றான். மறுகணம் அவனது மூளையில் ஏதோ பொறி தட்டவே கீழேயிருந்த ஒரு சட்டியிலிருந்த பொடியை தீக்குண்டத்தில் கவிழ்த்தான். அதிலிருந்து கரும்புகை உண்டாகி பரவியது. பிலாரி அங்கேயிருந்து தப்பி ஓடினான்.

சரியான நேரத்தில் காரியம் கெட்டுவிட்டதால் ஏமாற்ற மடைந்த விஜயன் பிலாரியைத் தொடர முடியாமல் கரும் புகையினால் தடுமாறினான். அவனைச் சேர்ந்தவர்களுக்கும் கண்களில் எரிச்சல் உண்டாகவே கண்களைக் கசக்கியபடி நின்றார்கள். புகையானது சிறிதுநேரத்தில் விலகி விட்டாலும் பிலாரி தப்பியோடிய மார்க்கத்தை அவர்களால் அறியமுடியவில்லை. பிலாரியின் பேச்சிலிருந்து நாகநந்தினி ஏதோ ஓரிடத்தில் மறைத்து வைக்கப்பட்டிருப்பது உறுதிப்பட்டது. ஆனாலும் அதன் காரணமும் அவளது இருப்பிடமும் அறிய முடியாமல் போனதால் சற்று அசதியடைந்தான் விஜயன். அவனது மனதில் ஏதேதோ எண்ணங்கள் ஓடின.

தீவுவாசிகளிடம் தீக்குண்டத்தையும் குடிலையும் இடித்துவிடும்படிச் சொன்னான் விஜயன். பிறகு அவர்களை அழைத்துக் கொண்டு மலையின் பல்வேறு இடங்களுக்கும் அலைந்ததில் மாலைப்பொழுதாகிவிட்டது. அந்நிலையில் தீவுவாசிகளுக்கு விடைகொடுத்தான் விஜயன். அவர்களோ அவனை விட்டுப்போக மறுத்தார்கள். ஏனென்று கேட்டான் விஜயன். அதற்கு அவர்கள் விஜயனைப் பிடித்துப் போய் விட்டதாகவும் அவனுடனேயே இருந்து விடுவதாகவும் கூறினார்கள். விஜயனும் சம்மதித்தான்.

தீவுவாசிகள் விஜயனின் மனநிலையை உணர்ந்து கொண்டு ''ஐயா, தேவதையின் இருப்பிடத்தை நீங்கள் கண்டுபிடிக்க வேண்டுமென்றால் மலையில் இப்படியெல்லாம் அலைந்து கொண்டிருக்க வேண்டாம். இந்த மலையில் ரகசிய இடங்கள் பல இருப்பதாகக் கேள்விப்பட்டிருக்கிறோம். அங்கே ஏதாவது ஓரிடத்தில் தேவதை இருக்கலாம். இடம் தெரியாமல்

அதைத்தேடி அலைய முடியாது. டிமார்க்கோவையும் லியானாவையும் பிணைக்கைதியாகப் பிடித்துக்கொண்டு மிரட்டினால்தான் பலன் கிடைக்கும்'' என்றார்கள்.

விஜயன் சற்று யோசித்துவிட்டு தீவுவாசிகளிடம் சொன்னான்: ''நீங்கள் என்னிடம் விசுவாசமாக இருப்பது உண்மையென்றால் ஒரு வேலை செய்யுங்கள். இருவரும் டிமார்க்கோவின் இருப்பிடத்திற்குச் சென்று உங்களில் ஒருவரை நான் கொன்று விட்டதாகச் சொல்லி அவனோடு இருங்கள். நீங்கள் இத்தீவுவாசிகளாதலால் உங்கள்மீது அவனுக்குச் சந்தேகம் வராது. அவனருகில் இருந்து கொண்டு தேவதையின் இருப்பிடம் பற்றி தெரிய நேரிட்டால் உடனடியாக எங்களிடம் வந்து சொல்லுங்கள். அங்கு நடக்கும் சம்பவங்களைப் பற்றியும் அறிந்து வந்து சொல்லுங்கள்'' என்றான்.

''நீங்கள் எங்கே இருப்பீர்கள்?''

''அநேகமாக இந்த மலைப்பகுதியில்தான் இருப்போம்''

தீவுவாசிகள் இருவரும் விடைபெற்றுக் கொண்டு போனார்கள்.

அன்று இரவு முழுவதும் மலைப்பகுதியிலேயே விஜயனும் இரு உபதலைவர்களும் காலத்தைக் கழித்தார்கள்.

மறுநாள் காலை அசாதாரணமாக விட்டுவிட்டு மழைபெய்தது. விஜயன் ஏதோ ஒருவித தீர்மானத்துடன் மலையின் மேற்குப்புறமாக இறங்கி டிமார்க்கோவின் குகை இருந்த பகுதிக்குப் பின்புறமாக வந்து சேர்ந்தான். அப்பகுதியில் அடர்ந்த புதர்கள் வளர்ந்திருந்தன. அவற்றை நீக்கியபடி மூவரும் உள்ளே நடந்தார்கள். திடீரென ஓரிடத்தில் ஏதோ பேச்சுக்குரல் கேட்கவே மூவரும் சற்று பதுங்கி குரல் வந்த திசையை நோக்கினார்கள்.

அவர்கள் கேட்ட குரல் மாந்தரீகன் பிலாரியினுடையதுதான் என்பது தெரிந்தது. யாரோ ஒரு பெண்ணுடன் பிலாரி சல்லாபம் செய்ய முயல்வது அவனது பேச்சுக்களிலிருந்து அவர்களால் உணரமுடிந்தது.

அப்பேச்சிற்கிடையில் பிலாரி வெளியிட்ட ஒரு தகவல் மூவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியது.

விஜயனோ பேரதிர்ச்சியடைந்தான்.

◈◈◈

## அத்தியாயம் நாற்பத்து எட்டு

# பலியும் பழியும்

''என்னைவிடு மந்திரவாதி. உன் இம்சை தாங்க முடியவில்லை''

''இது உனக்கு இம்சையாக இருக்கிறதா? இன்பமாக இல்லையா?''

''அதற்காக இப்படியா?''

''ரொம்பவும் அலட்டிக் கொள்ளாதே. பார்வையில்லாத உன்னை எவன் சீந்தத் தயாராக இருக்கிறான்?''

''நீ மட்டும் என்ன ரொம்பவும் அழகனோ?''

''அது எப்படி உனக்குத் தெரியும்?''

''உன்னைப் பார்த்தவர்கள் என்னிடம் சொல்ல மாட்டார்களா?''

''அதெல்லாம் பொய் பெண்ணே. நம்பாதே. நான் அழகன் தான். அதோடு?''

''அதோடு என்ன?''

''லியானாவை உனக்குத் தெரியுமா?''

''நம் தலைவிதானே?''

''ஆமாம். அவள் என்னைக் காதலிக்கிறாள். நான் அகோரமாக இருந்தால் விரும்புவாளா?''

''உளராதே மந்திரவாதி''

''சத்தியம் வேண்டுமானாலும் செய்கிறேன். நேற்று நானும் அவளும் உடலால் இணைந்து விட்டோம்''

''உண்மையாகவா?''

''சத்தியமாக''

''தீவுத் தலைவருக்கு இது தெரியுமா?''

''தெரிந்தால் என்ன செய்துவிடுவான்?''

''உன் தலையைச் சீவி விடுவார்''

''அவனால் எதுவும் செய்ய முடியாது. அவன் குடுமி என் கையில் இருக்கிறது''

''அவருக்கு ஏது குடுமி?''

''முண்டமே. நான் கூறியது குடுமியைப் பற்றியல்ல. என்னிடம் அவன் வாலாட்ட முடியாது என்று சொல்கிறேன்''

''அப்படியென்ன உயர்ந்து விட்டாய் நீ?''

''பெண்ணே, இத்தீவிற்கு வந்துள்ள அந்நியர்களை சென்ற பௌர்ணமி அன்றே பலியிட்டிருக்க வேண்டும். ஏதோ குளறுபடிகளைச் செய்வதற்காக என்னைக் கருவியாகப் பயன்படுத்தி பலியை ஒரு மாதத்திற்குத் தள்ளி வைத்து விட்டான். அவன் எதிர்பார்த்தது நடைபெறவில்லை போலிருக் கிறது. அதோடு அவன் எதிர்பாராதது ஏதோ நடந்திருக்க வேண்டும். ஆகவே தீவின் தேவதையை கடத்திவிட்டான்.''

''ஐயோ. அது பாவமாயிற்றே?''

''பாவமாவது புண்ணியமாவது! அவள் தேவதையல்ல. சாதாரணமானப் பெண். நாககன்னிகை. அவ்வளவுதான்''

''என்ன ஆனாள் தேவதை?''

''டிமார்க்கோவின் பிச்சனையும் தீரவேண்டும். என்னுடைய நீண்ட நாள் கனவும் பலிக்கவேண்டும்''

''அதனால் என்ன செய்தாய்?''

''எனது பரிகார ஹோமத்திற்கு சுத்தமான கன்னிப் பெண் தேவைப்பட்டது. டிமார்க்கோவுக்கும் சேர்த்து பரிகாரம் செய்கிற மாதிரி அவளை பலியிட்டேன்''

''தேவதையையா?''

''ஆமாம்''

மாந்தரீகன் குருட்டுப் பெண்ணிடம் இவ்வாறு கூறியதைக் கேட்டதும் விஜயனும் அவன்கூட இருந்தவர்களும் பதறிப் போனார்கள். மின்னல் வேகத்தில் பாய்ந்து வந்து மாந்தரீகனை வளைத்துப் பிடித்தார்கள்.

''யார் நீங்கள்? எதற்காக என்னைப் பிடிக்கிறீர்கள்?'' என்று கேட்டான் பிலாரி.

''தேவதை எங்கே?'' உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு கேட்டான் விஜயன்.

''தேவதையா? யாரது?''

''பிலாரி. நீ இதுவரைப் பேசியதைக் கேட்டுவிட்டுத் தான் வருகிறோம். உண்மையைச் சொல்'' - என்று கடுமையாகக் கேட்டான் விஜயன்.

''அவளை பலிகொடுத்து விட்டோம்''

''எங்கே பலியிட்டாய்? எப்போது பலியிட்டாய்? எதற்காகப் பலியிட்டாய்?''

''தான் தப்ப முடியாது என்பதைச் சந்தேகமில்லாமல் தெரிந்து கொண்ட பிலாரி ''நான் பதில் சொல்கிறேன். அதற்கு முன் நீங்களெல்லாம் யாரென்று சொல்லுங்கள். விஜயன் என்பது யார்?'' என்று கேட்டான்.

''நான் தான்''

''நீங்கள் நாகநந்தினியை விரும்பினீர்களா?''

''ஆமாம்''

''அவளை மணந்துகொண்டு வேற்று நாட்டிற்குப் போக விருந்தீர்களா?''

''ஆமாம்''

''அப்படிப்போய் விட்டால் தேவதை இல்லாமல் பிழைப்பை நடத்த முடியாது என்று நினைத்தான் டிமார்க்கோ. அவளை வேறெந்த நாட்டிற்கோ அனுப்பிவிட விரும்பி என்னிடம் அபிப்பிராயத்தைக் கேட்டான். எனக்கோ நான் செய்ய வேண்டிய மகா யாகத்திற்கு மிகவும் சுத்தமான கன்னிப்

பெண் ஒருத்தி தேவையாக இருந்தது. அத்தகுதி நாகநந்தினிக்கு இருந்தது. எனவே இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள நினைத்து தேவதையை பலியிட்டால்தான் நிரந்தரத் தீர்வு வரும் என்று டிமார்க்கோவிடம் பீதியை உண்டாக்கினேன். அவனும் சம்மதித்தான். நானும் அவளை பலியிட்டு விட்டேன்''

''யாகத்தில் போட்டு விட்டாயா?''

''இல்லை. பலிபீடத்தில் வெட்டி ரத்தத்தை மட்டும் யாகத்தில் இட்டேன்''

''எங்கே பலியிட்டாய்? நேற்றிரவு நீ யாகம் செய்த இடத்தில் எதுவும் நடக்கவில்லையே''

''முதலில் அங்குதான் பலியிடுவதாக இருந்தேன். நேற்றிரவு அங்கே இடைஞ்சல் உண்டாகி விட்டதால் வேறு இடத்தில் இன்று அதிகாலை பலியிட்டேன்''

''எங்கே அந்த இடம்?''

''காட்டுகிறேன் வாருங்கள்''

பிலாரி மூவரையும் தனது யாகசாலைக்கு அழைத்துப்போய் காட்டினான்.

''எங்கே தேவதையின் பிரேதம்?'' கேட்டான் விஜயன்.

''இதோ இந்த பலிபீடத்தில்தான் பலியிட்டேன். இங்கே தான் பிரேதம் கிடந்தது''

''எப்படி மறைந்தது?''

''தெரியவில்லை''

நாகநந்தினியின் உடல் காணப்படா விட்டாலும் அவளது ரத்தக் கறைகள் பல இடங்களில் காணப்பட்டன. அவளது ஆடையின் ஒரு பகுதியும் யாகசாலையின் ஓரமாக காணப்பட்டது. விஜயனுக்கு நாகநந்தினி பலியானதில் சந்தேகம் வரவில்லை.

பிலாரியைப் பார்த்து ''அற்ப மனிதனே! உன் அற்ப ஆசைகளுக்கும் கனவுகளுக்கும் இந்த அப்பாவி பெண்தானா கிடைத்தாள்? அவள் இங்கே யாருக்கு என்ன தீங்கு செய்தாள்?

இத்தீவு மக்கள் தெய்வமாய் கருதிய அபூர்வமான அவளைப்போய் ஆடுமாடுகளைப் போல் பலியிட்டு விட்டாயே! நீயும் ஒரு மனிதனா?'' என்று கூறிய விஜயன் ஓரிரு நிமிடங்கள் வரை அந்த அபலைப் பெண்ணுக்கு அஞ்சலி செலுத்துவது போல மௌனமாக இருந்தான். இனி என்ன நடக்கும் என்பது அவனுக்குத் ஓரளவிற்கு ஊகிக்க முடிந்ததாக இருந்தது. உபதலைவர்களிடம் ஏதோ கூறிவிட்டு டிமார்க்கோவின் இருப்பிடத்தை நோக்கிச் சென்றான்.

அங்கே அவன் சென்றபோது அவன் எதிர்பார்த்த மாதரியே தீவுவாசிகள் அனைவரும் டிமார்க்கோவின் குகைக்கு முன்னால் கூடியிருந்தார்கள். அவனைப் பார்த்ததும் ''அதோ! அதோ'' என்றார்கள் பரபரப்புடன். லியானாவும் டிமார்க்கோவும் அவனைப் பார்த்துவிட்டு ''கொலைகாரன். விடாதீர்கள். பிடியுங்கள்'' என்று பெருங்குரலில் கூறினார்கள். தீவுவாசிகள் அவனை நோக்கி வந்ததைக் கண்டதும் ''நில்லுங்கள். யாரும் அருகே வரவேண்டாம்'' என்று எச்சரித்தான் விஜயன். அவனது எச்சரிக்கையை மீறி தீவுவாசிகள் முன்னேறியபோது விஜயன் வாளை உருவி அவர்கள் மீது ஆக்ரோஷமாக வீசியதுமே இருவரது தலைகள் வெட்டுண்டு கீழே விழுந்தன. அத்திடீர் கோரத்தால் தீவுவாசிகள் திகைப்படைந்து நின்றார்கள்.

''இந்த வாளின்மீது ஆணை. இதற்கு மேலும் யாராவது முன்னேறினால் இதே கதிதான் கிடைக்கும்'' என்றான் ரத்தக் கறைபடிந்த வாளை உயர்த்தியபடி.

தீவுவாசிகள் விஜயனைப் பார்த்து ''எங்கள் தேவதையைக் கொன்றது நீ'' என்றார்கள் கோஷமாக.

''எங்கே உங்கள் தேவதை?''- என்று கேட்டான் விஜயன். தீவுவாசிகள் வழியை விட்டார்கள்.

குகை வாசலில் மேடையொன்று அமைக்கப்பட்டு அங்கே நாகநந்தினியின் உடலும் தலையும் வைக்கப்பட்டிருந்தது.

கபடமற்ற நாகநந்தினியின் முகம் வெட்டுண்ட நிலையிலும் அழகாகவே இருந்தது. தூங்கும்போது துண்டாகிப் போனது போல் காணப்பட்டது அவளது தலை.

விஜயனுக்கு அவனையும் அறியாமல் கண்கள் கலங்கின.

''நந்தினி. இந்தக் காட்டுமிராண்டிகள் உன்னையும் பலி கொண்டு விட்டார்களா? இத்தீவில் பலியை நிறுத்துவதற்கு உன்னைப் பயன்படுத்த நினைத்தேனே, இப்பாவிகள் உன்னையே பலிவாங்கி விட்டார்களா? வளர்ப்பு மகள் என்றும் தேவதை என்றும் சொல்லிக்கொண்டு உன்னைப்போய் பலியிட்ட இவர்களிடம் இத்தனை காலமாக எப்படியிருந்தாய் நந்தினி? அபலைப் பெண்ணான உன்னைக் காப்பாற்ற முடியாததற்காக நான் வெட்கப்படுகிறேன் நந்தினி. என்னை மன்னித்துவிடு'' என்று கலங்கிய கண்களுடன் சொன்னான் விஜயன்.

டிமார்க்கோ அவனை மேலே பேசவிடவில்லை. ''கொலைகாரன். நாடகமாடுகிறான். விடாதீர்கள். கொல்லுங்கள். வெட்டுங்கள்'' என்றான்.

தீவுவாசிகளோ அமைதியாக இருந்தார்கள்.

''அவர்களை ஏன் தூண்டுகிறாய் டிமார்க்கோ? என்னை வெட்டுவதற்கு உனக்குக் கை இல்லையா? வெட்ட வேண்டியது தானே?'' என்று கேட்டான் விஜயன்.

அதேசமயம் அவனது தோழர்கள் நாநூறு பேர் தீவுவாசிகளை விலக்கிக் கொண்டு விஜயனுக்கு அருகே வந்து நின்றார்கள்.

''துரோகியே! விஜயபாகு, அநியாயமாக எங்கள் வளர்ப்பு மகளைக் கொன்று விட்டாயே? எங்கள் தீவைக் காக்கும் தெய்வத்தை அழித்துவிட்டாயே! உன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள இந்த ஈனமான வழிதானா உனக்குக் கிடைத்தது?'' என்று ஏதோ பேசவேண்டும் என்பது போல் பேசினான் டிமார்க்கோ.

விஜயனோ தீவுமக்களைப் பார்த்து ''தீவுவாசிகளே! இந்த அயோக்கியன் பேசுவதை கவனித்தீர்களா? ஒரு மாதத்திற்கு முன்னால் திசை மாறி வந்த எங்களை மடக்கி உங்கள் வழக்கப்படி பௌர்ணமியன்று பலியிட முடிவு செய்தீர்கள். அப்படிச் செய்திருந்தால் உங்கள் தேவதை இன்று அநியாயமாக பலியாகி இருக்கமாட்டாள். இதற்கு யார் காரணம்?

டிமார்க்கோவும் லியானாவும்தான். லியானாவின் மீதிருந்த கண்மூடித்தனமான காமத்தால் பலியைத் தள்ளிப்போட்டான் டிமார்க்கோ. அதேசமயம் என்மீது கொண்ட துராசை காரணமாக டிமார்க்கோவையே வெட்டிச் சாய்ப்பதற்கு திட்டமிட்டாள் லியானா. இந்த நிலையில்தான் நான் உங்கள் தேவதையைக் கண்டேன். அவளது வரலாற்றை அறிந்தேன். தமிழகத்தில் நாகர் குல விளக்காகப் பிறந்த அப்பைங்கொடி நாகரீகம் அறிந்தவளாய் இருந்ததால் அவளைக் கொண்டு இத்தீவில் நடைபெறும் நரபலி என்னும் அநாகரீகத்தை அடியோடு அகற்றவும் நாங்கள் இத்தீவை விட்டு வெளியேறி நாகதீபத்திற்குச் செல்லவும் விரும்பினேன். ஆனால் சுயநலம் பிடித்த டிமார்க்கோவும் லியானாவும் இதை விரும்பவும் இல்லை. ஆதரிக்கவும் இல்லை. என்னை அழிக்கத் திராணியில்லாத உங்கள் தலைவன் மந்திரவாதியுடன் சூழ்ச்சி செய்து ஏதுமறியாத நாகர்குலக் கொழுந்தை உங்களது பிரியமான தேவதையை இரக்கமில்லாமல் பலியிட்டு விட்டு பழியை என்மீது போட்டு என்னைக் கொல்ல உங்களைத் தூண்டுகிறான்'' என்றான்.

''பொய். பொய். எல்லாமே பொய். இவனை நம்பாதீர்கள்'' என்று அலறினான் டிமார்க்கோ.

அப்போது விஜயன் அருகில் இருந்த தோழர்களிடம் ஏதோ சொன்னதும் அவர்கள் போய் மந்திரவாதி பிலாரியைப் பிடித்து வந்தார்கள். அவனது கண்ணும், கைகளும், கால்களும் கட்டப்பட்டிருந்தன.

''பிலாரி, நடந்த உண்மையைச் சொல்'' என்றான் விஜயன்.

பிலாரிக்குத் தனது நிர்க்கதி நன்றாகப் புரிந்ததால் நடந்தவைகளை நடந்தபடியே கூறினான். அவன் பேசி முடித்ததும் அவனது கண்கட்டை அவிழ்த்தான் விஜயன்.

தனக்கு முன்னால் தீவே திரண்டிருந்ததைக் கண்ட பிலாரியின் பிதுங்கிய கண்கள் மேலும் பிதுங்கியது. அச்சமயத்தில் டிமார்க்கோ திடீரென தனது இரண்டு குறுவாட்களை அவன் முதுகில் எறிந்து விடவே நஞ்சு தோய்ந்த அக்குறுவாட்களின் முனை பிலாரியின் உடலில் தைத்ததுமே அவனைச் சாய்த்துப் பிணமாக்கின.

அதே நேரத்தில் டிமார்க்கோவிற்கும் லியானாவிற்கும் பின்னால் தோன்றியது ஒரு பாம்பு. இமைக்கும் நேரத்தில் இருவரது தோள்களையும் மாறி மாறி அது தீண்டியதும் இருவரும் துள்ளியபடியே எழுந்து தரையிலே பிணமாக விழுந்தார்கள். அவர்கள் மீது படமெடுத்தபடி காட்சியளித்தது பாம்பு. அது நந்தினிக்குப் பரிச்சயமான தக்ஷகனாகத்தான் இருக்க வேண்டும் என்று கருதிய விஜயன் ''தீவு மக்களே, உங்கள் தேவதையின் மரணத்திற்குக் காரணமான மகா பாவிகளை அவளது பாம்பே தண்டித்துவிட்டது. இது உங்களுக்கொரு பாடம். இன்றிலிருந்து நீங்களெல்லாம் நல்லவர்களாகவும் புதியவர்களாகவும் மாறுவதாக உறுதியெடுத்துக் கொள்ளுங்கள். இல்லையென்றால் பாம்புகள் உங்கள் தீவிற்குப் படையெடுத்து அனைவரையும் அழிக்கும். இன்றோடு இத்தீவில் மனிதர்களை பலியிடும் கோரம் நிற்கவேண்டும். உங்களுக்குள் நல்லவன் ஒருவனைத் தலைவனாகத் தேர்ந்தெடுத்துக்கொள்ளுங்கள். உங்களுக்கென்று குடியிருப்புகளைக் கட்டுங்கள். காட்டு மரங்களைக் கொண்டு படகுகள் தயாரிக்க முற்படுங்கள். இத்தீவுப் பக்கம் வருகிறவர்களை வரவேற்று உபசரியுங்கள். அவர்களுக்குப் படகுகளை விற்பனை செய்யுங்கள். அதைக் கொண்டு கட்டுமானப் பொருட்களை வாங்கி நாகர்மலைத் தீவில் நகரம் ஒன்றை உருவாக்குங்கள். நல் வாழ்விற்கு வழி செய்து கொள்ளுங்கள். நாளைய பௌர்ணமி பலியிடும் நாளல்ல. புத்துணர்வு பெறும் நாள். எல்லோரும் விழாவாகக் கொண்டாடுங்கள்'' என்றான்.

தீவுமக்களிடம் எந்தவிதமான சலசலப்பும் இல்லை.

மறுநாள் பௌர்ணமியன்று விஜயனே அவர்களில் ஒருவனைத் தலைவனாக நியமித்தான். விழாவிற்கும் ஏற்பாடு செய்து அவர்களோடு சேர்ந்து கொண்டாடினான். விழா முடிந்தபின் அனைவரிடமும் விடைபெற்றுக் கொண்டு தோழர்களுடன் படகில் ஏறி தீவுக்கப்பலுக்கு வந்து சேர்ந்தான். நங்கூரம் எடுக்கப்பட்டு மரக்கலம் நகர்ந்தது. தீவுமக்கள் கடற்கரையில் கூடி கைகளை ஆட்டினார்கள். பூரண சந்திரனும் வானத்தில் தோன்றி அவர்களுக்கு விடை கொடுத்தது.

◈◈◈